# பெறுமதிகளினால் தூண்டுதலளிக்கப்பட்டு...
# நோக்கத்தினால் உந்துதலளிக்கப்பட்டு...
# தொழிநுட்பத்தினால் வடிவமைக்கப்பட்டோம்

**தேசிய சேமிப்பு வங்கி**

**ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2021**



NSB

# பெறுமதிகளினால் தூண்டுதலளிக்கப்பட்டு...
# நோக்கத்தினால் உந்துதலளிக்கப்பட்டு...
# தொழிநுட்பத்தினால் வடிவமைக்கப்பட்டோம்

பூகோள மற்றும் உள்நாட்டு “தலையங்கங்களின்” மத்தியில், 2021 ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கியினைப் பொறுத்தவரையில் அதன் நிதி மூலதன உருவாக்க அடிப்படைக்கான ஒரு ஸ்திரமான ஆண்டாகக் காணப்பட்டது. வங்கி தனது 50 ஆவது நிதித் தொழிற்பாட்டு ஆண்டினை அடைகின்ற இந்தக் காலகட்டத்தில் கிடைக்கப் பெற்றிருக்கின்ற இத்தகைய பெறுபேறுகள் இதுவரை காலங்களிலும் எமது பெறுபேறுகள் மற்றும் அடைவுகள் ஆகியவை தொடர்பான நிலைமாறாத தன்மையினை வெளிப்படுத்துகின்ற ஒரு அடையாளமாகக் காணப்படுகின்றது.

நாம் எமது “அடுத்த ஐம்பது” நிலைப்பாட்டினை நோக்கி நகர்கின்ற இந்தக் கட்டத்தில் வங்கியின் கட்டமைப்பு மற்றும் நிலைத்த தன்மை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சிறப்பானதாக நிலைமாறி இருக்கின்றது. நாம் நாட்டில் ஒரு பாரிய வாடிக்கையாளர் தளத்தினை கொண்டிருக்கின்றோம். வங்கியில் பணிபுரியும் 4,500 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் நிமிர்ந்து நிற்பதற்கான தமது இயலுமை மற்றும் ஆர்வத்தினை தனித்தன்மை மிக்க வகையில் விரிவுபடுத்தி இருக்கின்றார்கள். பெருந்தொற்று நோய்ப் பரவல் காலத்தில் அவர்கள் சேவையாற்றிய விதம் மெச்சத்தக்க வகையில் வேறு எதனுடனும் ஒப்பிட முடியாதவாறு மிகவும் விதிவிலக்கான வகையில் அமைந்து இருந்தது.

வங்கியின் நிதி, வாடிக்கையாளர் மற்றும் ஊழிய மூலதனம் ஆகியன எம்மை தொழிற்துறையின் தலைமையில் நிலைநிறுத்தி இருக்கின்றன. எமது தொழிநுட்ப மூலதனத்தில் ஒரு ஸ்திரமான மற்றும் முக்கிய முதலீடுகளை பல ஆண்டு காலமாக நாம் மேற்கொண்டு இருக்கின்ற பாதையில், அனைத்து விடயங்களிலும் எமது பலத்தினை கட்டியெழுப்புவதற்காக, 2021 ஆம் ஆண்டு முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை கண்ணுற்றோம்.

அந்த வகையில், தேசிய சேமிப்பு வங்கி கொண்டாடுகின்ற வெற்றியானது, கடந்த 50 ஆண்டுகளின் பெறுபேறுகளுக்காக மாத்திரமன்றி இனிவரும் காலங்களுக்கான தயார்நிலைக்கும் உரியதாகும்.

NSB

# உள்ளடக்கம்

எமது ஒருங்கிணைந்த அறிக்கை பற்றி – **3**

## 7-178

ஒருங்கிணைந்த அறிக்கை

## 7

### முன்னுரை

தேசிய சேமிப்பு வங்கி ஒரே பார்வையில் – **8**

மைற்கற்கள் – **10**

உற்பத்திகள் மற்றும் சேவைகள் – **11**

முக்கிய தரவுகள் – **12**

தலைவரின் செய்தி – **14**

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு – **18**

## 23

### எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி – **24**

தொழிற்பாட்டு சூழல் – **26**

இடர்களும் வாய்ப்புக்களும் – **38**

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு – **50**

ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு – **67**

பொருண்மிய விடயங்கள் – **76**

## 95

### முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு

நிதியியல் மூலதனம் – **96**

வணிக வரிசைகளின் மீளாய்வு – **114**

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் – **120**

புலமைசார் மூலதனம் – **128**

மனித மூலதனம் – **136**

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் – **154**

இயற்கை மூலதனம் – **170**

நிறுவன ஆளுகைக் கூற்று – **177**

இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான கூற்று – **178**

## 177

### நிறுவன ஆளுகைக் கூற்று

## 178

### இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான கூற்று

## 179-492

தொகுப்பு

## 179

### ஆளுகை

பணிப்பாளர் சபை - **180**

கூட்டாண்மை முகாமைத்துவம் – **184**

நிறைவேற்று முகாமைத்துவம் – **185**

பிரதான முகாமையாளர்கள் – **187**

கூட்டாண்மை ஆளுகை – **188**

சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை – **203**

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை – **206**

சபை நியமனக் குழுவின் அறிக்கை – **208**

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை – **210**

இடர் மீளாய்வு – **212**

## 241

### நிதியியல் அறிக்கைகள்

நிதியியல் நாட்காட்டி 2021 – **242**

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை – **243**

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று – **249**

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று – **251**

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம் – **253**

பொது முகாமையாளர்/பிரதரம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று – **254**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – **256**

நிதியியல் கூற்றுகளின் உள்ளடக்கம் – **259**

வருமானக் கூற்று – **260**

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று – **261**

நிதியியல் நிலைக் கூற்று – **262**

பங்குரிமைமூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று – **264**

காசுப் பாய்ச்சல் கூற்று – **268**

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – **270**

## 421

### பிற்சேர்க்கைத் தகவல்

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு – **422**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம் – **442**

இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்பட்ட ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் – **447**

2016 இன் 1ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைகளின் III ஆம் அட்டவணைக்கு அமைய பாசல் III வெளிப்படுத்தல்கள் – **454**

உள்நாட்டில் – முறையியல்ரீதியாக முக்கியத்துவம்வாய்நத வங்கி மதிப்பீட்டுச் செயன்முறை – 2021 – **467**

உலகளாவிய அறிக்கையிடல் முன்முனைவுகளின் (GRI) உள்ளடக்கச் சுட்டெண் – **469**

Independent Assurance Report – **473**

ஐ. அ. டொலர்களில் வருமானக் கூற்று – **476**

ஐ. அ. டொலர்களில் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று – **477**

ஐ. அ. டொலர்களில் நிதியியல் நிலைக்கூற்று – **478**

புள்ளிவிபரக் குறிகாட்டிகள் 2012 – 2021 – **479**

வைப்புப் பகுப்பாய்வு – **480**

தொடர்புடைய வங்கிகள் – **481**

பரிமாற்று இல்லங்கள் – **481**

யூரோ கிரோ உறுப்பினர்கள் – **482**

நிதியியல் மற்றும் வங்கியியல் அருஞ்சொற்கள் விளக்கத் தொகுப்பு – **483**

கூட்டாண்மை தகவல்கள் – **488**

# எமது ஒருங்கிணைந்த அறிக்கை பற்றி

GRI 102-2

தேசிய சேமிப்பு வங்கி (NSB) அதன் ஏழாவது ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையை 2021 நாட்காட்டி ஆண்டிற்காக வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது. எம்மைச் சூழவுள்ள பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் மத்தியில் வங்கியின் தந்திரோபாயம் மற்றும் நிதிப் பெறுபேறுகள் பற்றிய விரிவான விளக்கத்தினை இந்த அறிக்கை வழங்குகிறது. இற்றைநாள் வரையான எமது தந்திரோபாய முன்னேற்றக் கட்டம் மற்றும் தற்போதைய நிலையைத் தாண்டி நாம் தொடர்புபட்ட நிலையில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதை உறுதிசெய்யும் வகையில் எமது வணிகத்தை எவ்வாறு மாற்றியமைக்கிறோம் என்பதையும், அதன்மூலம் பெறுமதியைத் தொடர்ந்தும் வழங்குவதையும், நாம் தொழிற்படும் சமூகங்களின் நன்மைக்கான சக்தியாக தொடர்ந்தும் நிலைத்து இருப்பது தொடர்பாகவும் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை நமக்கு வழங்குகிறது.

## இந்த அறிக்கையை வாசிக்கும் முறை

வங்கியின் தந்திரோபாயம், மூலதன முகாமை, இடர் முகாமை மற்றும் ஆளுகைப் பொறிமுறைகள் பற்றிய விரிவான நுண்ணறிவை இந்த அறிக்கை வழங்குகின்றது. இது மேலும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலப் பரப்பில் அக்கறையுள்ள தரப்பினர்களுக்கான பெறுமதி உருவாக்க செயன்முறையை ஆராய்வதுடன், தொடர்ந்து வங்கியின் தொழிற்பாடுகள், அடைவுகள், தந்திரோபாய நோக்கங்களை நிறைவேற்றுதல், உற்பத்தித் தொகுப்பு விரிவாக்கம், சமுதாயப் பங்களிப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவற்றையும் விளக்குகிறது. அத்துடன், இது வங்கியின் கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர் முகாமை நடைமுறைகள் மற்றும் முழுமையான குறிப்புக்களுடனான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஆகியவை தொடர்பான மதிப்பாய்வையும் உள்ளடக்குகின்றது. இந்தி நிதிக் கூற்றுக்கள் மீளாய்வுக்கு உட்படும் ஆண்டின் போதான வங்கி மற்றும் குழுவின் நிதிப் பெறுபேறுகள் மற்றும் 31 டிசம்பர் 2021 அன்று உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அவற்றுடன் இணைந்த துணைத் தகவல்களையும் வெளிப்படுத்துகின்றது.

## அறிக்கையினை விளங்கிக் கொள்வதற்கான குறியீடுகள்

இந்த அறிக்கை முழுவதும், பிரிவுகளுக்கு இடையே உள்ள இடைத் தொடர்பைக் காட்டுவதற்கு, வாசித்து அறிதலை எளிதாக்குவதற்கு மற்றும் எமது ஒருங்கிணைந்த சிந்தனையை வெளிக்காட்டுவதற்கு, முடிந்தவரை அதிகப்படியான உரை உள்ளடக்கத்தைக் குறைப்பதற்குமென குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறிக்கை முழுவதும் பயன்படுத்தப்படும் பிரதான குறியீடுகள் மூலதனங்கள், அக்கறையுள்ள தரப்பினர், தந்திரோபாய முன்னுரிமைகள் மற்றும் பொருண்மைமிக்க விடயங்களைக் குறிக்கின்றன. இவை தொடர்பான சுட்டிகள் பக்கம் 6 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பரப்பு மற்றும் எல்லை

### எமது அறிக்கையிடல் எல்லை GRI 102-10, 45, 46, 48, 49, 50, 51 AND 52

எமது அறிக்கையிடல் எல்லை தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனங்களான - வரையறுத்த தேசேவ நிதிய முகாமைக் கம்பனி (NSB Fund Management Company Ltd) மற்றும் வரையறுத்த இலங்கை சேமிப்பு வங்கி (Sri Lanka Savings Bank Ltd) ஆகியவற்றை உள்ளடக்கும். “வங்கி” எனக் குறிப்பிடும் இடத்தில் அது வங்கியைத் தனியாகவும், “குழு” எனக் குறிப்பிடும் இடத்தில் அது முழுமையான குழுவையும் குறிப்பிடும் வகையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. 2014 சட்டகத்திற்கு இணங்க, வங்கி மற்றும் குழு இரண்டினதும் சூழலில் முக்கிய நிதிசார் அம்சங்கள் விபரிக்கப்பட்டுள்ள அதேவேளை, வேறுவிதமாகக் கூறப்படாவிடாத சந்தர்ப்பங்களில் நிதிசாராத அம்சங்கள் வங்கியின் சூழலில் மாத்திரமே விபரிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை நிதிசார் மற்றும் நிலைபேறானதன்மை அறிக்கையிடலுக்கான ஆண்டு அறிக்கையிடல் சுற்றோட்டத்துடன் இணக்கமான முறையில் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31, 2021 வரையிலான 12 மாத காலப்பகுதியை உள்ளடக்கி இருப்பதுடன், இத் திகதிக்கு அப்பாற்பட்ட, 24 மார்ச் 2022 வரையிலான சபையின் ஒப்புதல் திகதி வரையிலான நிகழ்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நோக்கம் மற்றும் எல்லைகள் தொடர்புபட்ட அம்சங்களின் அடிப்படையில் முன்னைய அறிக்கையிடல் காலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லாத போதிலும், மீள வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்கூறப்பட்ட எந்தவொரு ஒப்பீட்டுத் தகவலும் தொடர்புடைய பிரிவுகளில் வெளிப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது.

நிதி அறிக்கையிடலுக்கு மேலதிகமாக, நிதியல்லாத பெறுபேறு, வாய்ப்புகள், அக்கறையுள்ள தரப்பினர் தொடர்பான இடர்கள் அல்லது விளைவுகள், தந்திரோபாயம், வணிக மாதிரி, தொழிற்பாட்டு சூழல், பொருண்மைமிக்க இடர்கள், அக்கறையுள்ள தரப்பினர் நாட்டங்கள், பெறுபேறு மற்றும் ஆளுகை பற்றிய தகவல்களையும் அறிக்கை உள்ளடக்கியது. குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அளவில் மதிப்பை உருவாக்குவதற்கான வங்கியின் இயற்திறன் மீதான தாக்கத்தின் அடிப்படையில், பக்கங்கள் 76 முதல் 93 வரையான “பொருண்மை மிக்க விடயங்கள்” மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு உள்ளது. மேலும், இது கொவிட்-19 மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை மனதில் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வங்கியின் குறுகிய, நடுத்தர (இரண்டு முதல் மூன்று ஆண்டுகள்) மற்றும் நீண்ட கால (ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதி) இலக்குகளுக்கான வங்கியின் தந்திரோபாயம் மற்றும் நிதி மற்றும் நிதி அல்லாத இலக்குகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் 2021 ஆம் ஆண்டில் வங்கியின் தந்திரோபாயத்தை உள்ளடக்கியுள்ளது.

### ஒருங்கிணைந்த அறிக்கை எல்லை

- வருடாந்த நிதி அறிக்கைகள்
- கூட்டாண்மை ஆளுகை அறிக்கை
- ஊதிய அறிக்கை
- இடர் மற்றும் மூலதன முகாமை அறிக்கை

### நிலைபேறானதன்மை அறிக்கையிடல் எல்லை - அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்

இந்த அறிக்கை பின்வரும் தகவல் தேவைப்பாடுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- நீண்ட கால முதலீட்டாளர்கள் - பங்குதாரர்கள்
- பிணை முதலீட்டாளர்கள்
- வருங்கால முதலீட்டாளர்கள்
- ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்குவிதியாளர்கள் மற்றும் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பிற முக்கிய அக்கறையுள்ள தரப்பினர்

## எமது அறிக்கையிடல் மற்றும் இணக்கப்பாட்டு சட்டகம்

GRI 102-12, 54

- இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்
- சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஆளுகைக்குழு (IIRC) சட்டகம் (www.theiirc.org)
- பூகோள அறிக்கையிடல் முன்முயற்சி (GRI) நிலைபேறானதன்மை அறிக்கையிடல் வழிகாட்டுதல்கள் நியமங்கள் - GRI நியமங்கள் (www.globalreporting.org)
- இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் கோவை
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) – ஐ.நாவின் 17 இலட்சிய “பூகோள இலக்குகள்” முன்முயற்சி
- 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
- இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (IRD) ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் பணிப்புரைகள்.

அறிக்கையில் உள்ள அனைத்து நிதித் தகவல்களும் பிரயோகிக்கத்தக்க அனைத்து சட்டங்கள், ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் நியமங்களுக்கு இணங்கி இருப்பதுடன், பக்கம் 241 இல் ஆரம்பிக்கும் “நிதி அறிக்கைகள்” பகுதியின் கீழ் வழங்கப்பட்ட பல அறிக்கைகள் மற்றும் அறிக்கைகளில் இவை பரிசீலனை செய்யப்படலாம்.

### ஒருங்கிணைந்த சிந்தனை

தந்திரோபாய முகாமை மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகள் மூலம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் அனைத்து அக்கறையுள்ள தரப்பினருக்கும் நிலைபேறான பெறுமதியை உருவாக்கும் எமது நோக்கில் அக மற்றும் புற இயக்கிகள், அவற்றின் இடைத் தொடர்புகள் மற்றும் வர்த்தக விட்டுக் கொடுத்தல்களை நாம் ஆய்வு செய்கின்றோம். எமது அணுகுமுறையானது ஒருங்கிணைந்த சிந்தனை, நமது வணிகத்தை பாதிக்கத்தக்க எமது தந்திரோபாய அமுலாக்கம் அல்லது பெறுமதி உருவாக்கத்தின் மீது தாக்கம் செலுத்தத்தக்க விடயங்களான வளர்ந்து வரும் போக்குகள், நாம் பயன்படுத்தும் மூலதனம் அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்க மூலதனம் அல்லது தந்திரோபாயத் தெரிவுகளின் மீதான உள்ளார்ந்த சாத்தியமான விட்டுக்கொடுப்புக்கள் ஆகியவற்றினால் எமது அணுகுமுறை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நாம் உருவாக்கும், பேணும், அழிக்கும் பெறுமதியைப் பிரதிபலிக்கும் வகையில், வெளிப்படைத்தன்மையுடன் நாம் அறிக்கையிட முயற்சி செய்கிறோம். இந்த மூலக்கூறுகள் எவ்வாறு இடைத்தொடர்புபட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்வதன் மூலம், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அளவுகளுக்கு எமது அனைத்து அக்கறையுள்ள தரப்பினருக்கும் நிலைபேறான பெறுமதியை வழங்குவதற்கு எங்களால் சிறப்பாக இயலத்தக்கதாக உள்ளது. அத்தியாவசியமான முறையில், ஒருங்கிணைந்த சிந்தனை என்பது நமது மூலதன முகாமையை தந்திரோபாயத் தெரிவாக மாற்றும் அடித்தளமாக இருக்க, இது வங்கியின் அனைத்து அக்கறைதாரர்களுக்கும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கான நிலைபேறான பெறுமதியை உருவாக்க அனுமதிப்பதன் மூலம், ஈற்றில் முழுமையான செயன்முறையும் ஒன்றுக்கொன்று சார்ந்ததாகவும் பூரணமானதாகவும் காணப்படும்.

**ஒருங்கிணைந்த சிந்தனை** நமது பெறுமதியை இயக்குகிறது

**எமது தொழிற்பாட்டு சூழலை நாம் மதிப்பிடுகிறோம்**

**தொழிற்பாட்டு சூழல்** பக்கம் 26

கொவிட்-19, புவிசார் அரசியல் நிகழ்வுகள், நாம் செயற்படும் இடத்திலிருந்து எழும் சமூக-பொருளாதார சவால்கள் மற்றும் வளர்ந்து வரும் மற்றும் தற்போதுள்ள பரந்த போக்குகள் போன்ற உலகளாவிய போக்குகள் மற்றும் சிக்கல் நிலைமைகள் எமது பெறுமதி உருவாக்க செயன்முறையைத் தெரிவிக்கும் சூழலைத் தீர்மானிக்கின்றன.

**அக்கறையுள்ள தரப்பினர் உறவுமுறைகள்** பக்கம் 67

அக்கறையுள்ள தரப்பினருடனான எமது உறவுமுறைகளின் தரம் நமது நோக்கத்தை நிறைவேற்றும் இயலுமையைப் பாதிக்கிறது. எனவே தகவலறிந்த மதிப்பீட்டைச் செய்வதற்காகப் பல்வேறு வழிமுறைகள் மூலம் எமது உறவுமுறைகளின் தரத்தை நாம் அளவிடுகிறோம்.

**இடர்கள் மற்றும் வாய்ப்புகள்** பக்கம் 38

எங்கள் வணிக மாதிரியானது முதன்மை தொழிற்பாட்டு சூழல், அக்கறையுள்ள தரப்பினருடனான உறவுமுறைகள் மற்றும் வளச் சார்பு ஆகியன உள்ளடங்கலான எமது பெறுமதியை உருவாக்கும் திறனைப் பாதிக்கும் பல காரணிகளை நாம் பகுப்பாய்வு செய்கின்ற முதன்மையான ஆழ்ந்த மற்றும் நெருங்கிய ஆய்வுப் பார்வையின் அடிப்படையிலானதாகும். இந்தப் பிரபஞ்சத்தில் இருந்து, நாம் பெற்றுக்கொள்ளும் இடர்கள் மற்றும் வாய்ப்புகளை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பதிவுசெய்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான (UN SDGs) எமது அர்ப்பணிப்பின் மூலம் பரந்த சமூக மற்றும் சுற்றுச்சூழல் பெறுமதியினை வழங்குவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.




**இப் பகுதிகள் பயன்படுத்தும் அல்லது பாதிக்கும் ஆறு மூலதனங்கள்**



### எமது பொருண்மைமிக்க விடயங்களை நாம் கருத்தில் எடுக்கின்றோம் GRI 102-46

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலப் பரப்பிற்கு பெறுமதியை உருவாக்கும் அல்லது பேணும் எமது இயலுமையைக் கணிசமாகப் பாதிக்கும் அல்லது பெறுமதி இழப்புக்குக் கணிசமாக வழிவகுக்கும் விடயங்களைக் கண்டறிவதற்கான ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை நாம் மேற்கொள்கின்றோம். இந்த விடயங்கள் இடர்களை முகாமை செய்வதற்கும் வாய்ப்புகளை உச்சப்படுத்துவதற்குமான எமது தந்திரோபாயங்களைத் தெரிவிக்கின்றன.

### எமது ஆறு மூலதனங்கள் மூலமாக எமது பொருண்மைமிக்க விடயங்களுக்குத் துலங்கல் அளிக்கும் முறை

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு பக்கம் 50

### நாம் தந்திரோபாயத்தினை வணிக மாதிரியினுள் ஒருங்கிணைக்கின்றோம்

பக்கம் 24

**எமது வணிக மாதிரி**

எமது வணிக மாதிரி எமது வளங்கள் மற்றும் உறவுமுறைகளை பொறுப்புணர்வு மிக்க வகையில் எமது அனைத்து அக்கறையுள்ள தரப்பினருக்கும் சிறந்த வெளியீட்டைத் தரத்தக்க வகையில், நேர்க்கணிய வெளியீடுகளை உருவாக்கும் வகையில் மற்றும் எதிர்க்கணிய விளைவுகளை இழிவளவாக்கும் வகையில் முகாமை செய்ய வசதியளிக்கிறது.

பக்கம் 52

**எமது நிலைபேறான தந்திரோபாயம்**

தெளிவாக வரையறுக்கப்பட்டு, மேலும் எமது தந்திரோபாயத்தினுள் ஒன்றிணைக்கப்பட்ட எமது தூரநோக்குடன், நீண்டகால வலுவுள்ள வகையிலான விளைவுகளுடன் கூடிய தந்திரோபாயத் தெரிவுகளை நாம் மேற்கொள்கின்றோம். எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகாலப் பரப்பில் நிலைபேறான பெறுமதியை வழங்கத்தக்க வகையில் ஒரு ஒருங்கிணைந்த தீர்மானம் மேற்கொள்ளல் அணுகுமுறைக்கு வசதியளிக்கத்தக்க நான்கு குறிக்கோள்களை நாம் அடையாளம் கண்டு இருக்கின்றோம்.

## கண்ணோட்டம்

கண்ணோட்டத்தகவல் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்கிறது: எமது தந்திரோபாயத்தைப் பின்பற்றுவதில் என்ன சவால்கள், வாய்ப்புகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை நாம் சந்திக்க நேரிடும், மேலும் எமது வணிக மாதிரி மற்றும் எதிர்கால செயற்திறனுக்கான சாத்தியமான தாக்கங்கள் எவை.

கொவிட்-19 காரணமான நிச்சயமற்ற தொழிற்பாட்டு சூழல் மற்றும் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக, சாத்தியமான நிச்சயமற்ற தன்மைகளையும் பொருத்தமானவிடத்து எமது பதிலிறுத்தலையும் நாம் முன்னிலைப்படுத்தியுள்ளோம்.

கண்ணோட்டத் தகவல் இந்த அறிக்கை முழுவதும், குறிப்பாக பின்வரும் பிரிவுகளில் காணப்படத்தக்கதாக இருக்கும்:


- தொழிற்பாட்டு சூழல் — பக்கம் 26 முதல் 37 வரை
- இடர் மற்றும் வாய்ப்புகள் — பக்கம் 38 முதல் 49 வரை
- தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு — பக்கம் 50 முதல் 66 வரை
- ஆறு மூலதனங்கள் — பக்கம் 96 முதல் 176 வரை


## வெளிவாரி உறுதிப்படுத்தல்

இந்த அறிக்கையை உருவாக்கும் போது அனைத்து ஒழுங்குவிதிமுறை மற்றும் சட்டரீதியான தேவைப்பாடுகள் இணங்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ள, அதேவேளையில் Messrs KPMG Sri Lanka நிறுவனம் நிலைபேறான தன்மை அறிக்கையிடல் மீதான உறுதிப்பாட்டை வழங்கி உள்ளது.

## முன்னோக்கிய அறிக்கைகள்

இந்த அறிக்கையில் தேசிய சேமிப்பு வங்கியின் எதிர்கால செயற்திறன் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான முன்னோக்கு அறிக்கைகள் உள்ளடங்கி உள்ளன. இந்த அறிக்கைகள் இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போதிலான எமது சுயதீர்ப்புகள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே வேளையில், பல வளர்ந்து வரும் இடர்கள், நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் பிற முக்கிய காரணிகள் எமது எதிர்பார்ப்புகளிலிருந்து பெறுபேறுகளை மாற்றியமைக்கலாம். எமது வணிகம் மற்றும் நிதி செயற்திறனைப் பாதகமான வகையில் பாதிக்கத்தக்க காரணிகள் இதில் அடங்கும்.

## தொடர்பாடக்கூடிய பிடிஎவ் (PDF)

இந்த தொடர்பாடக்கூடிய அறிக்கையானது, இலங்கை நிறுவன அறிக்கையிடல் பரப்பில் முதலாவது வகையாகும். பொருடக்கங்களிடையே மேம்படுத்தப்பட்ட நகர்வு மற்றும் குறுக்கு உசாத்துணைகளுக்கான இணைப்புக்கள், அறிக்கையின் ஊடாக வாசிப்பாளரை பல்வேறு பயணங்களை மேற்கொள்ள அனுமதிக்கின்றது. இறுதியில், வங்கியின் அக்கறைதாரர்களுக்கான வசதியையும் அனுபவத்தையும் முன்னுரிமையளித்து வங்கியினால் மேற்கொள்ளப்படும் பரந்த முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

## விளக்கம் கோரல்கள் GRI 102-53

இந்த அறிக்கை குறித்த உங்கள் கருத்துரைகள் மற்றும் விளக்கம் கோரல்கள் மிகவும் வரவேற்கத்தக்கவையாக இருப்பதுடன், அவை பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படலாம்:


சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்,
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு,
தேசிய சேமிப்பு வங்கி,
இலக்கம் 255, காலி வீதி, கொழும்பு 3.
sdgm.op@nsb.lk

## வாசித்து அறிதல் குறியீடுகளின் சுட்டி

### மூலதனங்கள்

நிதிசார்
மனித
புலமைசார்
உற்பத்தி
சமூக மற்றும் உறவுமுறை
இயற்கை

### அக்கறையுள்ள தரப்பினர்

பங்குதாரர் அல்லது முதலீட்டாளர்
வாடிக்கையாளர்
ஊழியர்
ஒழுங்கு விதிமுறையாளர் மற்றும் அரச அமைப்புக்கள்
வணிகப் பங்காளர்கள்
சமூகம் மற்றும் சுற்றுச் சூழல்

### குறுங்கால மற்றும் நடுத்தரகால தந்திரோபாயங்கள்

வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்வாக்கல்
ஊழியர் ஈடுபாட்டை உச்சமாக்கல்
இயற்கை வளர்ச்சியை ஊக்குவித்தல்
இடர் கலாச்சாரத்தை மீள்வலியுறுத்தல்
உதாரணம் மூலம் தலைமை வகித்தல்
எண்ணியலாக்கத்தை ஆர்முடுக்கல்

### நீண்டகாலத் தந்திரோபாயங்கள்

வாடிக்கையாளரால் இயக்கப்பட்ட
ஆளுகையின் மேன்மை
பலம் மற்றும் நிலைபேறான தன்மை
நிலைமாற்றத் தலைவர்

### பொருண்மைமிக்க விடயங்கள்

பொருளாதார சிதைவு
நிதிசார் நிலைபேறான தன்மை
சந்தைத் தளம்பலை முகாமை செய்தல்
வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம்
வணிக மற்றும் தொழிற்பாட்டு மீளெழுச்சி
புதிய வழக்கத்துக்கு ஈடு கொடுத்தல்
எண்ணியல் நிலைமாற்றம்
புத்தாக்கம் மற்றும் விரைவுத் தன்மை
திறன்கள் மற்றும் ஆற்றல்கள்
ஊழியர் பெறுமதி மையப்படுத்தல்
சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு
சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறை இணக்கப்பாடு
நிதிசார் குற்றங்கள்
சுற்றுச்சூழல் மீளெழுச்சி

### ஏனையவை

பக்க உசாத்துணை

# 7

# முன்னுரை


தேசிய சேமிப்பு வங்கி ஒரே பார்வையில் – **8**
மைற்கற்கள் – **10**
உற்பத்திகள் மற்றும் சேவைகள் – **11**
முக்கிய தரவுகள் – **12**
தலைவரின் செய்தி – **14**
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு – **18**

# தேசிய சேமிப்பு வங்கி ஒரே பார்வையில்

GRI 102-7

நாட்டிலுள்ள நான்கு பாரம்பரிய சேமிப்பு அமைப்புகளை ஒரே அமைப்பாக ஒன்றிணைக்கும் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1972 இல் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி, அதன் முன்னோடியான 1832 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியிலிருந்து (CBS) ஒரு நூற்றாண்டு பழமையான சேமிப்புப் பாரம்பரியத்தைப் பெற்ற வளமான வரலாற்றைப் பெருமைப்படுத்துகிறது. தேசிய சேமிப்பு வங்கி 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கீழ் இலங்கையின் அனைத்து வர்க்க, இன மற்றும் பாலினப் பிரிவுகளிடையிலும் சேமிப்புக் கலாச்சாரத்தை வளர்க்கும் நோக்கத்துடன் உரிமம் பெற்ற விசேட வங்கி (LSB) அந்தஸ்து வழங்கப்பட்டது. நாட்டிலேயே மிகவும் உள்ளடக்கமான வங்கி என்ற கூற்றை ஆதரிக்கும் வகையில் தற்போது வங்கி 21.8 மில்லியன் கணக்குகளைக் கொண்டு இருக்கின்றது.

**எமது தூரநோக்கு –** சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தீர்வுகளுக்கான மிகவும் நிலையான மற்றும் விரும்பத்தக்க தெரிவாதல்

**எமது இலட்சிய நோக்கு –** அக்கறையுள்ள தரப்பினரது அனைத்து எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் அதேவேளையில், எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளைப் பெருக்க முழு அளவிலான நிதித் தீர்வுகளை வழங்குதல்

**எமது பெறுமதிகள் –** எமது அன்றாட வணிகத்தில் விரைவாகவும் புதுமையாகவும் பதிலிறுப்பதுடன், ஒருமைப்பாடு மற்றும் பரஸ்பர மரியாதையுடன் செயற்படல்.

## தேசிய சேமிப்பு வங்கிக் குழுமம்

உரு 1

தொழிற்படும் கம்பனிகள்

- தேசிய சேமிப்பு வங்கி (NSB National Savings Bank)
- வரையறுத்த தேசேவ நிதி முகாமைக் கம்பனி (NSB Fund Management)
- வரையறுத்த இலங்கை சேமிப்பு வங்கி (SLS Bank Sri Lanka Savings Bank)

தொழிற்படும் கூறுகள்

வணிக வரிசைகள்

**சில்லறை வங்கியியல்**
- தனிப்பட்ட வங்கியியல் (வைப்புத் திரட்டுதல், சில்லறைக் கடன் வழங்குதல், வங்கி உத்தரவாதம், அட்டைத் தீர்வுகள் மற்றும் பரிவர்த்தனை வங்கியியல் உள்ளிட்ட முழு அளவிலான சேவைகள்)

**கூட்டு வணிக நிதியியல்**
- நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சேய் நிறுவனங்களுக்கு நேரடிக் கடன் வழங்கல்
- நிதி வசதிகளை கட்டமைத்தல் (வாடிக்கையாளர்களுக்கான பெறுதியியல் சாதனங்கள்)
- கடன் வழங்குபவர்கள் மற்றும் கடன் பெறுபவர்களிடையே தீர்வு மற்றும் பரிவர்த்தனைகளை ஒருங்கிணைக்கும் திரட்டு வசதிகளுக்கான முகவர் வகிபாகம்
- நம்பிக்கைச் சான்றிதழ்கள், தனிப்பட்ட நிலைப்படுத்தல், மற்றும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்தல்
- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதில் முன்னணி துறைசார் நிபுணத்துவம்
- கடன் பத்திரங்களை வழங்குதல்

**சர்வதேச நிதியியல்**
- USD, EUR, GBP, AUD, SGD மற்றும் JPY இல் வெளிநாட்டு நாணய வைப்பு (சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு)
- உள்நோக்கிய மற்றும் வெளிச்செல்லல் பண மாற்றல்கள்
- அந்நிய நாணயப் பரிமாற்றம்
- இறக்குமதிக் கடன் கடிதம் வழங்குதல்
- இறக்குமதிப் பட்டியல்களைக் கையாளுதல்
- கப்பல் மற்றும் விமான சரக்கு உத்தரவாதங்களை வழங்குதல்

**திறைசேரி மற்றும் இடைநிலை**
- அரச பத்திரங்கள், பங்குகள் மற்றும் அந்நிய நாணய, மறுகொள்வனவு ஒப்பந்தக் கடன்கள் மற்றும் தலைகீழ் மறு கொள்வனவு ஒப்பந்தக் கடன் ஆகியவற்றில் முதலீடு

**(NSB Fund Management)**
- முதன்மை சந்தை நடவடிக்கைகள்
- இரண்டாம் நிலை சந்தை நடவடிக்கைகள்
- மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்கு (Lanka Settle)
- மத்திய வங்கியுடனான பிணையக் (Lanka Security)
- கூட்டாண்மை கடன் பத்திரங்களுக்கான பத்திரங்கள்
- SWIFT இணைப்பு
- முதலீட்டுத் தொகுப்பு
- காசு முகாமை

**(SLS Bank)**
- வைப்புத் திரட்டல்
- சில்லறைக் கடன்
- கூட்டுவணிகக் கடன்
- குத்தகை
- நுண் நிதியியல்
- அடகு

தொழிநுட்பம் மற்றும் தொழிற்பாடுகள் உள்ளடங்கலான கூட்டாண்மை சேவைகள்

## நாம் எவ்வாறு வேறுபடுகின்றோம்?

- ஒரு முற்போக்கான கூட்டாண்மைக் கலாச்சாரத்தால் ஆதரவளிக்கப்பட்ட வலுவான நோக்கமுள்ள வணிகம் **சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கான மிக நம்பகமான மற்றும் விரும்பத்தக்க தெரிவு**
- 60% வைப்புக்களை விசேட உயர்ரக அரச பிணையங்களில் முதலீடு செய்யும் சட்டத் தேவைப்பாடு **நாட்டின் முதன்மையான சேமிப்பு வங்கி**
- தெரிவு செய்யப்பட்ட உருவாக்கம் தோற்றம் மற்றும் பொருத்தமான இடர் முகாமை **தொழிற்துறை சராசரியுடன் ஒப்பிடுகையில் குறைவான தொழிற்படாக் கடன் விகிதம்**
- அனைத்து வைப்புகள் மற்றும் அவற்றின் வட்டி மீது 100% அரச உத்தரவாதம் உள்ள ஒரே வங்கி **நாட்டின் பாதுகாப்பான வங்கி**
- 21.8 மில்லியன் கணக்குகளுக்கு சேவை செய்கிறது **மக்களின் தெரிவு**
- பொதுத் திறைசேரிக்கு வரிகள், விதிப்பனவுகள், கட்டணங்கள் மற்றும் பங்கு இலாபத்தின் மூலம் பங்களிப்பு செய்கின்றது. **தேசிய பொருளாதாரத்திற்கான ஸ்திரமான ஆதரவு**
- அரசின் நீண்டகால அபிவிருத்தி மற்றும் சமூக-பொருளாதார செயற்றிட்டங்களுக்கு நிதியீட்டம் செய்கிறது. **தேசத்தைக் கட்டியெழுப்புதல்**
- சமூகத்தில் நேர்க்கணிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வணிகத்தை நடத்துகிறது **நெறிமுறைசார் மற்றும் தார்மீக வங்கி நடைமுறைகள்**
- அனுபவமிக்க முகாமையுடன் இணைந்த **நல்லாட்சி நிலையான நிறுவனக் கட்டமைப்பு**

உரு 2

**நிகர வட்டி வருமானம்**




**நிகர வட்டி எல்லை**




**வரிக்கு முன் இலாபம்**




**மொத்த சொத்துக்கள்**




**வாடிக்கையாளர் வைப்புக்கள்**




**கடன்கள் மற்றும் முற்பணங்கள்**




**மொத்த தொழிற்படாக் கடன் விகிதம்**




**உரிமையாண்மை மீதான திரும்பல்**




**சொத்துக்கள் மீதான திரும்பல்**




**நிதியியல் வரிகள் தவிர்ந்த வருமானத்துக்கான கிரயம்**




**பாசல் III – மொத்த மூலதனம் (குறைந்தபட்சம் 12%)**




**அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு**



# மைற்கற்கள்



**1972**

ஒரு நாடாளுமன்றச் சட்டம், நாட்டில் உள்ள நான்கு பாரம்பரிய சேமிப்பு அமைப்புகளை ஒன்றிணைத்து தேசிய சேமிப்பு வங்கி எனப்படும் ஒரு நிறுவனமாக மாற்றியது.

**1979**

சீட்டிழுப்புடன் கூடிய சேமிப்புச் சான்றிதழின் அறிமுகம்

**1981**

கிராமப்புற மக்களை சென்றடைய கைத்தொலைபேசி வங்கியியல் அலகை செயற்படுத்தியது தேசிய சேமிப்பு வங்கி

**1994**

முதலாவது தன்னியக்கக் கூற்றுப் பொறி நிறுவப்பட்டது

**1995**

வணிகப் பன்முகப்படுத்தலுக்கு வசதியளிக்கும் வகையில் தே.சே.வ சட்டம் திருத்தப்பட்டது

**1998**

ஹப்பன் புஞ்சி ஹப்பன் திட்டம் அறிமுகம்.

**1999**

தேசேவ நிட்டம்புவவில் தனது 100வது கிளைக்கான கதவுகளைத் திறந்தது.

இத்துரு மித்துரு திட்டம் அறிமுகம்.

**2000**

தேசிய சேமிப்பு வங்கியின் சேய் நிறுவனமான தேசேவ நிதி முகாமைக் கம்பனி உருவாக்கப்பட்டது.

**2002**

ஸ்த்ரீ திட்டத்தின் அறிமுகம்

**2003**

பிட்ச் ரேடிங் லங்கா லிமிடட் நிறுவனத்திடமிருந்து AAA (LKR) தரப்படுத்தலைப் பெறும் இலங்கையின் முதலாவது வங்கியாக தே.சே.வ. சாதனை.

**2004**

சர்வதேச வங்கியியல் தொழிற்பாடுகள் அங்குரார்ப்பணம்.

**2008**

24x7 NSB அழைப்பு நிலையம் உருவாக்கம்.

**2011**

தே.சே.வ. தனது 200வது கிளைக்கான கதவுகளை மதவாச்சியில் திறந்து வைத்தது.

**2012**

தே.சே.வ அதன் 40வது ஆண்டுநிறைவைக் கொண்டாடியது.

**2013**

இலங்கையின் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ. 750 மில்லியனான தனியொரு பாரிய சிரேஷ்ட பத்திரம் வழங்கப்பட்டது.

**2014**

“புத்தி” உயர் கல்வி நெறிகளுக்கான தனிநபர் கடன்திட்டம் ஆரம்பம்.

ஐ.அ.டொ 250 மில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பத்திரங்கள் வழங்கல்.

**2016**

250வது கிளை கோப்பாயில் திறக்கப்பட்டது.

குலோபல் பைனான்ஸ் நிறுவனம் தே.சே. வங்கியினை “இலங்கையின் அதிக பாதுகாப்பான வங்கி” எனத் தரப்படுத்தியது.

**2017**

ஒரு திரில்லியன் சொத்துத் தளத்தைக் கொண்ட முதலாவது விசேட உரிமம் பெற்ற வங்கி என்னும் ஸ்தானத்தை அடைந்தது.

**2018**

ஐ.அ.டொ. 750 மில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பத்திரங்களை வெற்றிகரமாக மீட்பு செய்தது.

முதலாவது வெளிநாட்டு நாணய நீண்டகாலக் கடன் வழங்கல்.

**2019**

PCI-DSS தரச் சான்றிதழைப் பெற்ற இலங்கையின் முதலாவது அரச வங்கியானது.

ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கி தே.சே. வங்கியின் முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமானது.

ரூபா 1 திரில்லியன் வைப்புத் தளத்தைக் கடந்தது.

ஐ.அ.டொ. 250 மில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பத்திரங்களை வெற்றிகரமாக மீட்பு செய்தது.

**2020**

தே.சே.வ அதன் 200 வது கிளையினை மதவாச்சியில் ஆரம்பித்தது

கலப்பின கடன் சாதனங்கள் வெளியீடு (நிரந்தர கடன் பத்திரம்)

**2021**

NSB Pay கைத்தொலைபேசி செயலி அறிமுகம்

# உற்பத்திகள் மற்றும் சேவைகள்

GRI 102-2

### சேமிப்பு வைப்பு

- சாதாரண சேமிப்பு
- சிறுவர் சேமிப்பு – கிரிகெட்டி ஹபன், புஞ்சி ஹபன், ஹபன் சிறுவர் சேமிப்புக் கணக்கு
- பதின் சேமிப்பு – நியோ சேமிப்புக் கணக்கு
- இளைஞர் சேமிப்பு – I'M சேமிப்புக் கணக்கு
- மகளிர் சேமிப்பு – ஸ்த்ரீ சேமிப்புக் கணக்கு
- விசேட சேமிப்பு – ஹப்பி சேமிப்புக் கணக்கு, ஸ்மைல் சேமிப்புக் கணக்கு

### சேமிப்பு/இளைப்பாற்றுகைத் திட்டங்கள்

- NSB பென்சன் பிளஸ்
- ஐந்தாண்டு சேமிப்பு
- ரியாலிட்டி சேமிப்புத் திட்டம்
- பிரார்த்தனா
- பிரார்த்தனா பிளஸ்
- சவிபல சேமிப்பு

### கால வைப்புக்கள்

- வழக்கமான வைப்பு – நிலையான வைப்பு
- மூத்த பிரஜைகள் வைப்புக்கள் – கௌரவ நிலையான வைப்புக் கணக்கு, மூத்த பிரஜைகள் விசேட நிலையான வைப்பு

### வெளிநாட்டு நாணயத் திட்டங்கள்

- தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (PFCA)
- வணிக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (BFCA)
- உள்முக முதலீட்டுக் கணக்குகள் (IIA)
- வெளிநாட்டு நாணய கால வைப்புக்கள்
- விசேட வைப்புக் கணக்கு (SDA)
- பண மாற்றுகை வணிகம்

### சில்லறைக் கடன் திட்டங்கள்

- வீடு, அசையாச் சொத்துக் கடன்கள் – அரச ஊழியர்களுக்கான கீ தொர, அலங்கார வீட்டுக்கடன்

### தனிப்பட்ட கடன்கள்

- NSB தனிநபர் கடன்
- புத்தி கடன்
- விசேட ஓய்வூதியக் கடன்
- சாரிகா கடன்
- சுற்றுச்சூழல் கடன்
- வாகனக் கடன்
- NSB விங்ஸ்
- வைப்புகளுக்கு எதிரான கடன்கள் – விரைவுக் கடன்கள்

### அட்டை சேவைகள்

- Shopping + ஏடிஎம் அட்டைகள்
- NSB ஈஸி அட்டைகள்

### கூட்டுவணிக கடன் வழங்கல்

### பிற சேவைகள்

- பணம் அனுப்புதல் – NSB U-Trust
- POS சாதன அடிப்படையிலான சேமிப்புத் திரட்டல் – NSB ரீச்
- வர்த்தக நிதியியல்
- உத்தரவாதங்கள்
- நிலையியற் கட்டளை
- நேரடி வரவு வசதி
- பாதுகாப்பு வைப்புப் பெட்டகம்
- பின்னுரித்து நியமனம்
- பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவுகள்
- குறுஞ் செய்தி முறைமை வங்கி

### எண்ணியல், மின்னியல் வங்கியியல்

- இணைய வங்கி
- விரைவுத் துலங்கல் குறியீட்டு வங்கியியல்

### பாடசாலைகளிலான சேகரிப்பு மையங்கள்

### வாடிக்கையாளர் தொடர்பு மையம் - NSB அழைப்பு மையம்

### திறைசேரி

திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், மறுகொள்வனவு ஒப்பந்தங்கள், தலைகீழ் மறுகொள்வனவு ஒப்பந்தங்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள், அதேநாள் மற்றும் முன்னோக்கி நாணயப் பரிமாற்ற ஒப்பந்தங்கள்.

உற்பத்தி மற்றும் சேவைகள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு ஸ்கேன் செய்யவும்

# முக்கிய தரவுகள்

GRI 102-7

| 31 டிசம்பர் அன்று உள்ளவாறு | வங்கி 2021 | வங்கி 2020 | வங்கி மாற்ற % | குழு 2021 | குழு 2020 | குழு மாற்ற % |
|---|---|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான பெறுபேறுகள் (ரூபா. பில்லியன்)** | | | | | | |
| மொத்த வருமானம் | **134.94** | 127.55 | 5.80 | **136.06** | 130.04 | 4.63 |
| நிதி பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரிக்கு முந்தைய இலாபம் | **34.54** | 19.43 | 77.77 | **34.66** | 20.80 | 66.64 |
| வரிக்கு முன் இலாபம் (PBT) | **28.38** | 15.64 | 81.41 | **28.42** | 16.79 | 69.29 |
| வருமான வரிச் செலவுகள் | **6.26** | 5.54 | 13.10 | **6.29** | 5.97 | 5.43 |
| வரிக்குப் பின்னான இலாபம் (PAT) | **22.12** | 10.11 | 118.83 | **22.13** | 10.82 | 104.52 |
| **ஆண்டு இறுதியில் உள்ளவாறான நிலைமை (ரூபா. பில்லியன்)** | | | | | | |
| பங்குதாரர்களின் நிதி (மொத்த உரிமையாண்மை) | **76.01** | 54.41 | 39.69 | **81.45** | 59.97 | 35.83 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற வைப்புக்கள்/பிற வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | **1,428.47** | 1,237.12 | 15.47 | **1,426.72** | 1,237.67 | 15.28 |
| நிதிச் சொத்துக்கள் - சேத இழப்பிட்ட பெறுமதியில்: கடன் மற்றும் பிற சாதனங்கள் | **935.35** | 754.23 | 24.01 | **940.54** | 758.59 | 23.98 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் | **538.94** | 516.80 | 4.29 | **538.60** | 517.83 | 4.01 |
| மொத்த சொத்துக்கள் | **1,579.10** | 1,363.81 | 15.79 | **1,605.81** | 1,383.22 | 16.09 |
| **சாதாரண பங்கு ஒன்றுக்கான தகவல் (ரூபா)** | | | | | | |
| உழைப்பு (அடிப்படை) | **23.53** | 10.75 | 118.83 | **23.54** | 11.51 | 104.52 |
| உழைப்பு (நீர்க்கப்பட்ட) | **23.53** | 10.75 | 118.83 | **23.54** | 11.51 | 104.52 |
| நிகர சொத்து மதிப்பு | **80.86** | 57.89 | 39.69 | **86.65** | 63.79 | 35.83 |
| விகிதங்கள் | 2021 | 2020 | மாற்றம் (அடிப்படைப் புள்ளிகள்) | 2021 | 2020 | மாற்றம் (அடிப்படைப் புள்ளிகள்) |
| நிகர வட்டி எல்லை (NIM) (%) | **3.71** | 2.77 | 95 | **3.73** | 2.83 | 90 |
| சராசரி பங்குதாரர்களின் நிதிகளின் மீதான திரும்பல் (ROE) (%) | **33.92** | 20.15 | 1,377 | **31.30** | 19.79 | 1,151 |
| சராசரி சொத்துகளின் மீதான திரும்பல் (ROA) (%) | **1.93** | 1.24 | 69 | **1.90** | 1.31 | 59 |
| உழைப்பின் மீதான ஆண்டுசார் வளர்ச்சி (%) | **118.83** | 58.40 | 6,043 | **104.52** | 24.20 | 8,032 |
| **ஒழுங்குவிதமுறை திரவத்தன்மை விகிதங்கள்** (%) | | | | | | |
| சட்டநியதித் திரவச் சொத்துக்கள் – குறைந்தபட்ச தேவை 20% | **59.63** | 69.10 | (947) | **N/A** | N/A | – |
| ரூபா - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2021 - 100%, 2020 - 90%) | **240.84** | 311.02 | (7,018) | **N/A** | N/A | – |
| அனைத்து நாணயம் - குறைந்தபட்சத் தேவை (2021 - 100%, 2020 - 90%) | **240.43** | 307.22 | (6,679) | **N/A** | N/A | – |
| நிகர நிலைத்த நிதியிடல் விகிதம் - குறைந்தபட்ச தேவை (2021 - 100%, 2020 - 90%) | **160.78** | 168.54 | (776) | **N/A** | N/A | – |
| **ஒழுங்குவிதிமுறை மூலதனத் தேவைப்பாடு: பாசல் III** | | | | | | |
| அடுக்கு 1 – குறைந்தபட்ச தேவை (8%) | **18.60** | 13.65 | 495 | **19.94** | 15.57 | 437 |
| மொத்த மூலதனம் – குறைந்தபட்சத் தேவை (12%) | **20.83** | 16.45 | 438 | **21.98** | 18.30 | 368 |
| முடுக்கி விகிதம் – குறைந்தபட்ச தேவை (3%) | **8.93** | 6.64 | 229 | **9.02** | 7.21 | 181 |

## நிதி இலக்குகள் மற்றும் சாதனைகள் - வங்கி

| நிதிசார் குறிகாட்டி | இலக்கு | அடைவு 2021 | அடைவு 2020 | அடைவு 2019 | அடைவு 2018 | அடைவு 2017 |
|---|---|---|---|---|---|---|
| நிகர வட்டி எல்லை (NIM) (%) | 3.27 | **3.71** | 2.77 | 2.63 | 2.43 | 2.61 |
| சராசரி சொத்துகளின் மீதான திரும்பல் (ROA) (%) | 1.50 | **1.93** | 1.24 | 0.95 | 0.78 | 1.47 |
| சராசரி பங்குதாரர்களின் நிதிகளின் மீதான வருவாய் (ROE) (%) | 27.32 | **33.92** | 20.15 | 14.25 | 10.95 | 27.24 |
| வருமானத்தின் மீதான வளர்ச்சி (%) | 1.89 | **5.80** | 4.61 | 8.96 | 3.62 | 23.57 |
| ஆண்டிற்கான இலாபத்தின் மீதான வளர்ச்சி (PAT) (%) | 53.29 | **118.83** | 58.40 | 41.80 | (53.68) | 2.30 |
| மொத்த சொத்துக்களின் மீதான வளர்ச்சி (%) | 13.71 | **15.79** | 17.78 | 11.68 | 2.56 | 10.89 |
| **மூலதனத் தேவைகள்: பாசல்** III | | | | | | |
| அடுக்கு - 1 – குறைந்தபட்ச தேவைப்பாடு (8%) | 8% க்கு மேல் | **18.60** | 13.65 | 13.49 | 13.08 | 11.93 |
| மொத்த மூலதனம் - குறைந்தபட்ச தேவைப்பாடு (12%) | 12% க்கு மேல் | **20.83** | 16.45 | 15.82 | 15.90 | 15.31 |

## எமது பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக நோக்கு

### பொருளாதாரம்

வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி
**ரூபா 76.8 பில்லியன்**
(2020 - 87.6 பில்லியன்)

**ரூபா 834.1 பில்லியன்**
அரச பிணைத் தொகுப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது
(2020 - ரூபா. 740.8 பில்)

**ரூபா 251.7 பில்லியன்**
கடன்கள் வழங்கப்பட்டன
(2020 - ரூபா 202.1 பில்லியன்)

**ரூபா 3,500 மில்லியன்**
பங்குதாரருக்கு பங்கு இலாபங்களாக செலுத்தப் பட்டது
(2020 – ரூ. 1,000 மில்.)

நேர் மற்றும் நேரில் வரிகளாக செலுத்தப்பட்டது
**ரூபா 12.4 பில்லியன்**
(2020 - ரூபா 9.3 பில்லியன்)

### சுற்றுச்சூழல்

**ரூபா 3.80 மில்லியன்**
பெறுமதியான 9 சுற்றுச்சூழல் கடன்கள் வழங்கப்பட்டன
(2020 - ரூபா 5.41 மில்லியன் பெறுமதியான 8 சுற்றுச்சூழல் கடன்கள் வழங்கப்பட்டன)

**277,328 கிலோவாட்**
2021 இல் சூரிய சக்தி உருவாக்கப் பட்டது
(2020 - 119,696 கிலோவாட்)

**33,539 ஜிகாஜூல்**
சக்தி நுகரப்பட்டது
(2020 – 31,823 ஜிகாஜூல்)

**3,070 கிலோகிராம்**
பயன்படுத்திய கடதாசி மீள் சுழற்சி செய்யப்பட்டது
(2020 – 1,159 கிலோகிராம்)

**88,986 கன மீட்டர்**
நீர் நுகரப்பட்டது
(2020 – 105,515 கன மீட்டர்)



### சமூகம்

**ரூபா 13 பில்லியன் எமது 4,616**
ஊழியர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது
(2020 - ரூபா 10 பில்லியன் 4,641 ஊழியர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது)

**ரூபா 11 மில்லியன்** திறன் விருத்தியின் மீது முதலீடு செய்யப்பட்டது
(2020 – 8.8 மில்.)

மொத்த ஊழியரில்
**55%** ஆனவர்கள் பெண்கள்
(2020 – 54%)

**98.6%**
தக்கவைத்திருத்தல் விகிதம்
(2020 – 98.8%)

**ரூபா 1,306.1 மில்லியன்** எமது 351 வழங்குனர்களிடம் இருந்து மேற்கொண்ட கொள்வனவுகளுக்காக செலவிடப்பட்டது
(2020 - ரூபா 2,159.1 மில்லியன் எமது 351 வழங்குனர்களிடம் இருந்து மேற்கொண்ட கொள்வனவுகளுக்காக செலவிடப்பட்டது)

**261** கிளைகள்
(2020 – 259)

தானியக்க இயந்திரம்/காசு மீள் சுழற்சி இயந்திரம்
292 + 92 = **384**
(2020 – 289 + 72 = 361)

**4,064**
பிரதம மற்றும் உப தபால் நிலையங்கள்
(2020 – 4,063)

**36** புதிய வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன
(2020 – 9)

# தலைவரின் செய்தி

GRI 102-14

வலுவாக நிலைநிறுத்தும் எமது திறனின் ஒரு பகுதி எமது வர்த்தகக நாமத்தின் விம்பத்திலும் அதன் விளைவாக ஏற்பட்ட வர்த்தக நாமத்தின் விசுவாசத்திலும் பலமாக இணைந்து காணப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டில் நாம் உருவாக்கப் பட்டதிலிருந்து, இலங்கை மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளுடன் வலுவான சேமிப்புக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு முயற்சித்து, தேசிய சேமிப்பு வங்கியின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் விழுமியங்களை நாங்கள் நிலைநாட்டி வருகிறோம்.



முடிவடைந்த ஆண்டு ஒரு சவாலான ஆண்டாக இருந்த போதிலும் தேசிய சேமிப்பு வங்கியின் உறுதிப்பாட்டுக்கும் துணிச்சலுக்கும் கடந்த ஆண்டு ஒரு சான்றாக இருந்து இருப்பதால், இந்தச் செய்தி எழுதப்பட்டிருப்பதையிட்டு மிகுந்த பெருமிதமாக உள்ளது. மிகப் பெரிய உரிமம் பெற்ற விசேட வங்கியாக (LSB) இருப்பதுடன், இலங்கையில் சேமிப்புத் துறையின் முன்னோடி என்ற வகையில், எமது நோக்கமானது முன்னெப்போதையும் விட கடந்த ஆண்டில் காணப்பட்டது போல் மிகவும் பொருத்தப்பாடானதாக இருந்து இருக்கவில்லை. வாடிக்கையாளர்கள் மற்றும் அக்கறையுள்ள தரப்பினர் மீதான எமது பொறுப்பை ஆழமாகப் புரிந்துகொண்டு, தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாங்கள் போதிய ஆதரவினை அளித்து, அவர்களின் வணிகங்கள் மற்றும் தனிப்பட்ட நிதி நிலைத்திருப்பதை உறுதி செய்திருக்கின்றோம். இந்தப் பொறுப்பு எமது அனைத்துத் தீர்மானங்களையும் வழிநடாத்தி இருப்பதுடன், எமது வாடிக்கையாளர்கள், அக்கறையுள்ள தரப்பினர், இலங்கையின் பொருளாதாரம் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நிலையான பெறுமதியாக மாற்றப்படத்தக்க வகையில் நாம் ஒரு நிலையான பெறுபேற்றுத் தடத்தினைப் பேணி, ஒரு உறுதியான வணிக அடித்தளத்தைப் பராமரித்து உள்ளதோடு ஒரு அசைக்க முடியாத வர்த்தக நாம நற்பெயரினையும் தொடர்ந்தும் வைத்திருக்கின்றோம்.

## 2021 இல் முன்வைக்கப்பட்ட சவால்கள்

தொற்றுநோய் மற்றும் அதன் பின்னரான பொருளாதார விளைவுகளால் வேகமாக மாறிவரும் தன்மையைக் கருத்திற் கொண்டு உலகளாவிய பொருளாதாரச் சூழல் சுவாரஸ்யமானதாகவும் அதேவேளை சவாலானதாகவும் உள்ளது. 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது, பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான பின்பற்றுகை மற்றும் தொற்றுநோய் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் பல நாடுகளில் தொடர்ச்சியான கொள்கை ஆதரவைப் பிரதிபலிக்கின்ற வகையில் முதல் காலாண்டிற்கான உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எதிர்பார்த்ததை விட வலுவாக இருக்கும் என்னும் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக பரந்த அளவில் காணப்பட்டது. இருப்பினும், இரண்டாவது காலாண்டில் பல வளரமுக சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் (EMDEs), அதிகரித்த கொவிட்-19 தொற்று விகிதங்கள் மற்றும் வழங்கல் தடைகள் காரணமாக பலவீனமான வேகத்தைக் கண்டது. எனவே, தொடர்ச்சியான கொவிட்-19 பரம்பல்கள், குறைவடைந்த நிதிசார் ஆதரவு மற்றும் அதிகரித்த வழங்கல் தடைகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில். உலகளாவிய வளர்ச்சி 2022 இல் மிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய் பாரிய பொருளாதார நிலைமையானது, இலங்கைப் பொருளாதாரமும் கொவிட்-19 ஏற்படுத்திய அதிர்வலைகளை உணர்ந்துள்ளதுடன், அதன்பின் ஏற்பட்ட சமூக பொருளாதார தாக்கங்கள் காரணமாக வங்கித்துறையும் ஒரு சவாலான ஆண்டைச் சந்திக்க வேண்டியிருந்தது. கொவிட்-19 எமது தொழிற்பாட்டுப் பரப்பின் ஒரு தவிர்க்க முடியாத பகுதியாக மாறியுள்ளதுடன், சமூக பொருளாதார மட்டங்களில் சிறந்த தடுப்பூசிக் கொள்கைகள் மற்றும் சீராக்கல் திட்டங்கள் பொருளாதாரத்தை படிப்படியாக புதுப்பிக்கத் தொடங்கியுள்ளதுடன், கொள்கை நிச்சயமற்ற தன்மைகளுடன் இணைந்த இறையாண்மைத் தரக் குறைப்புக்களும் அந்த வளர்ச்சியைப் பாதித்து உள்ளன. குறிப்பிடும் படியான வலுவான தடுப்பூசி செயற்றிட்டத்தால் ஓரளவுக்கு ஆதரவு வழங்கப்பட்ட வகையில், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பிரகாரம் இலங்கையின் பொருளாதாரம் 3.7% ஆல் வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் கொள்கை விகிதங்கள் 0.5% இனால் மாத்திரமே அதிகரித்து இருந்தாலும், இடர்மிக்க பொருளாதார நெருக்கடியால் தூண்டப்பட்ட அடிப்படைப் பொருட்களின் பற்றாக்குறையின் காரணமாக உயர்ந்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் 2022 ஏப்ரல் மாத காலத்தில் 700 அடிப்படைப் புள்ளிகள் அதிகரிப்புடன் 2022 ஆம் ஆண்டில் 850 அடிப்படைப் புள்ளிகள் அதிகரித்துள்ளது. இது டொலர் வருமானத்தைக் கொண்ட நிறுவனங்களை முதலீட்டிற்காக டொலர்களை நாட்டிற்கு கொண்டு வர ஊக்குவிக்கும் அதே வேளையில் உள்நாட்டு மக்களுக்கு இலங்கை ரூபாய் உண்டியல்கள், முறிகள் அல்லது வைப்புகளில் முதலீடு செய்வதற்கான ஊக்கத்தை அளிப்பதனால், இந்த நடவடிக்கை வங்கித் துறைக்கு நம்பிக்கை தருகிறது, அவ் வகையில் ரூபாயின் பெறுமதி இழப்பு, கடன் மீள் செலுத்துகையால் ஏற்பட்ட அந்நியச் செலாவணி கையிருப்பு சரிவு மற்றும் அந்நியச் செலாவணி உள்வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவை தொழிற்துறைக்கு சிரமத்தை ஏற்படுத்தியிருக்கும் அதே வேளையில், இந்தத் தடைகளிலிருந்து வெளிவருவதற்கான பாதையும் அமைக்கப்பட்டு வருகின்றது.

மிகவும் சவாலான இந்தச் சூழலில், எமது தற்போதைய சூழலைத் தாண்டி, எதிர்காலத்தில் நாம் இருக்க விரும்பும் இடத்தை இலக்காகக் கொண்டு, எமது வங்கியின் மீளெழுச்சி மற்றும் நிலைத்த தன்மையைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான கடினமான தீர்மானங்களைத் தொடர்ந்தும் நாம் மேற்கொண்டோம். எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் மற்றும் தீர்வுகளைக் கொண்டு வரும் இந்தத் திறமைதான் தேசிய சேமிப்பு வங்கியினை ஒரு வெற்றிகரமான நிறுவனமாக மாற்றியுள்ளது.

## எமது நிதிச் செயற்பாட்டின் சுருக்கம்

வட்டி வருமானம், வரிக்கு முன்னான இலாபம், உரிமையாண்மை மீதான திரும்பல் (ROE), மொத்த சொத்துக்கள், உரிமையாண்மை மற்றும் கடன் சாதனங்களின் மொத்த முதலீட்டுத் தொகுப்பு மற்றும் மொத்தப் பங்குதாரர்களின் உரிமை ஆகியவற்றில் வளர்ச்சியைக் கண்டிருக்கிறோம். இந்த இலாபங்கள் அரசாங்கத்திற்கான வரிகள், விதிப்பனவுகள் மற்றும் பங்கு இலாபங்கள் மூலம் பொருளாதாரத்தில் மீளவும் முதலீடு செய்யப்பட்டன. எந்த நிதி நிறுவனத்திலும் இருப்பது போல், ஒரு சில பகுதிகளில் பின்னடைவுகளையும் நாம் எதிர்கொண்டோம்.

மேற்கூறிய பேரினப் பொருளாதார சூழலின் அடிப்படையில், திருத்தப்பட்ட குறைந்தபட்ச சட்டநியதித் தேவைப்பாடான 12.0% ஐ விட அதிகமாக இருக்கத்தக்க 20.83% என்ற வலுவான மூலதன நிலையைப் பேணிக் கொண்டு தேசிய சேமிப்பு வங்கி 2021 ஆம் ஆண்டிற்கான நிலையான நிதி செயற்திறனை முன்னிலைப் படுத்துகிறது. 4.47% என்னும் தொழிற்துறை அளவு மட்டத்துடன் ஒப்பிடும்போது 2.97% என்ற விகிதத்தில் அமைந்த, தொழிற்துறையின் மிகக் குறைந்த தொழிற்படாக் கடன் விகிதங்களைக் கொண்டிருப்பதில் நாங்கள் பெருமை கொள்வதுடன் இரண்டாவது அதிகபட்ச வைப்புத் திரட்டல் தொகையான ரூபா 192.6 பில்லியன் வைப்புத் தளத்தை 15.5% இனால் விஸ்தரித்து டிசம்பர் 2021 நிலவரப்படி ரூபா 1.4 திரில்லியானக அதிகரித்துள்ளோம்.

எனினும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேசிய சேமிப்பு வங்கி தொடர்ந்தும் வலுவாக இருந்து வந்துள்ளதுடன், மேலும் தொற்றுநோய்களின் உச்சக் கட்டத்திலும் கூட எங்கள் கிளைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு இடையூறு இல்லாத சேவையினை வழங்கியிருந்தமையானது இதற்கான எமது அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது. வங்கி அனைத்து நிதிசார்

இடர்நிலைகளையும் முகம் கொடுத்து தொடர்ந்தும் எமது வாடிக்கையாளர் தளத்திற்கு நிலையான சேமிப்புத் தெரிவாக இருக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் உறுதியாக நிற்கிறோம்.

## ஒரு நம்பகமான வர்த்தக நாமம்

வலுவாக நிலைநிறுத்தும் எமது இயலுமையின் ஒரு பகுதி எமது வர்த்தக நாம விம்பத்திலும் அதன் விளைவாக உருவான வர்த்தக நாம விசுவாசத்திலும் தங்கியுள்ளது. 1972 இல் நாம் உருவாக்கப் பட்டதிலிருந்து, இலங்கை மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளுடன் வலுவான சேமிப்புக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு முயற்சித்து, தேசிய சேமிப்பு வங்கியின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் விழுமியங்களை நாங்கள் நிலைநாட்டி வருகிறோம். இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 100% வெளிப்படையான உத்தரவாதத்தின் அடிப்படையில், ICRA லங்கா அமைப்பானது தேசிய சேமிப்பு வங்கிக்கு AAA கடன்திறன் மதிப்பீட்டுடன் இலங்கையின் மிகப் பெரிய மற்றும் பாதுகாப்பான விசேட உரிமம் பெற்ற வங்கி என்னும் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

2021 இன் முடியில், ரூபா.31 பில்லியன் பெறுமதியான இலங்கையின் 5 ஆவது பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமம் என்கின்ற எமது நிலைப்பாட்டுடன், எமது வர்த்தக நாமம் நாட்டில் மிகவும் நம்பகமான வர்த்தக நாமங்களில் ஒன்றாகும் என எம்மால் பாதுகாப்பாகச் சொல்ல முடியும். இலங்கையின் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் நாங்கள் பொருத்தமானவர்களாகவும் அணுகக்கூடியவர்களாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக நாங்கள் காலப்போக்கில் வளர்ச்சியடைந்துள்ளதுடன், மேலும் வங்கியின் மீதான தொடர்ச்சியான நம்பிக்கையை ஆதரிக்கும் புதிய தலைமுறை அக்கறை தாரர்களைப் பயன்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

## அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களுக்குமான நிலைபேறான விளைவுகளிலான கவனம்

நிலைபேறான தன்மை என்பது நமது அனைத்து முயற்சிகளுக்கும் மையமாகக் காணப்படுவதுடன், எமது தொடர்ச்சியான நிலைத்திருத்தலுக்கு முக்கியமானதாக இருக்கின்றது. ஒரு நிதி நிறுவனம் எனும் நமது நிலைப்பாட்டின் காரணமாக நிதிசார் நிலைபேறான தன்மையில் நாம் ஈடுபடும் அதே வேளையில், நமது சமூக மற்றும் சுற்றுச்சூழல் செயற்திறன் நிலையானதாக, நிலைபேறானதாக மற்றும் நமது அக்கறையுள்ள தரப்பினரது நலன்களை சமநிலைப்படுத்தும் விளைவுகளை வழங்குவதற்கு முக்கியமானதாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் இனங்காண்கின்றோம்.

நிதி சார்ந்து, எமது வலுவான மூலதன நிலைப்பாடு மற்றும் சிறப்பான தொழிற்பாட்டு செயற்திறனுடன் இணைந்த வகையில் எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு நன்மைகளை வழங்கியதுடன், பங்குதாரர்களுக்கான வங்கியின் பங்கு இலாபத் தொகை ரூபா 3.5 பில்லியனாக இவ் வருடத்தில் காணப்பட்டு இருந்தது. சிறந்த வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்கும் அதே வேளையில், முக்கிய வங்கி வணிக வளர்ச்சியில் வலுவான கவனத்தை செலுத்துவதன் மூலம், வங்கி நிதியாண்டிற்கான அதன் செயற்திறனை உயர்வாக நிறைவடைந்தது.

சமூக பொருளாதார ரீதியாக, கொவிட்-19 தொடர்பான அனைத்து இடர்பாடுகளுக்கும் முகம் கொடுக்க வங்கி அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதுடன், வாடிக்கையாளர் தேவைகளுக்கு விரைவாகவும் திறமையாகவும் பதிலிறுத்து, பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக அரசின் ஊக்குவிப்பு முயற்சிகளை வழங்குவதிலும் முன்னின்று செயற்பட்டது. தொற்றுநோய் தொடர்ந்தும் தீவிரமடைந்ததால், வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான ஆதரவை வழங்குவதற்கு மேலாக, வீடமைப்பு, தனிநபர் மற்றும் வணிகக் கடன்களுக்கான கொடுப்பனவுகளை வங்கி தொடர்ந்தும் ஒத்தி வைத்தது. இது தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் இரு சாராருக்கும் நிதிசார்ந்த அழுத்தத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் குறைக்க உதவியதுடன், இது எமது வாடிக்கையாளர் தளத்தின் இழப்பினால் குறுகிய கால ஆதாயங்களை உழைப்பதற்கு மாறாக நீண்ட கால நிலைபேறான தன்மைக்கான எமது உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.

கொவிட்-19 ஆதரவுக்கு அப்பால், தேசிய சேமிப்பு வங்கி சமூகங்களை உருவாக்குவதிலும் சுற்றுச்சூழலை வங்கியின் நிறுவனக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக வளர்ப்பதிலும் உறுதியாக நம்புவதன் மூலம் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான அதன் உறுதிப்பாட்டில் மிகவும் ஸ்திரமாக உள்ளது. சமூகங்களைக் கட்டியெழுப்புவதற்கு, நிலையான கல்வி மற்றும் உட்கட்டமைப்பை வலுவாக்கும் நேரடி முதலீடுகளை நாங்கள் தொடர்ந்தும் மேற்கொள்வதுடன், இலங்கையர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான எமது முன்முயற்சிகளில் நிதி உள்ளடக்கத்தை நடைமுறைப்படுத்துவது எமது அமைப்பின் ஆணைக்கு முக்கியமானதாக உள்ளது. பசுமை எண்ணக்கருவைக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் வீட்டுத் திட்டங்களுக்கான குறைந்த கிரய நிதியீட்டம் மற்றும் வீட்டுக் கடன்களை வழங்குவதன் மூலம் நிலையான மற்றும் ஆற்றல் திறன் வாய்ந்த தீர்வுகளில் முதலீடு செய்வதில் சில்லறை வாடிக்கையாளர்களில் செல்வாக்கு செலுத்துவதை இலக்காகக் கொண்ட சுற்றுச்சூழல் சிநேகமான உற்பத்திகள் மற்றும் சேவைகளினை வழங்குவதில் சுற்றுச் சூழலுக்கான எமது அர்ப்பணிப்பு தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. குறைந்த காபன் செறிவான பொருளாதாரத்திற்கு எம்மை நகர்த்துவதற்கு சுற்றுச் சூழல் மனப்பான்மை கொண்ட வணிகக் கடன்கள் போன்ற நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

## நிலைபேறான எதிர்காலத்திற்கான எண்ணியல் மயமாக்கல்

முடக்கம், சமூக விலகல் மற்றும் சுகாதார கரிசனைகள் ஆகியன எண்ணியல் மயமாக்க வங்கியியல் தளங்களை நாடுவதில் பல எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களில் தாக்கம் செலுத்தியுள்ளதால், கொவிட்-19 எமது வாடிக்கையாளர்கள் எண்ணியல் மயத் தளங்களுக்கு மாறுவதில் கிட்டத்தட்ட ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கண்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாதவாறு, வாடிக்கையாளர்கள் இணையம் மற்றும் கைத்தொலைபேசி வங்கியியலை தினசரி செயற்பாடுகளில் ஒருங்கிணைக்க விரும்புகின்றனர். இதுபோன்ற அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி, எண்ணியல் தொழிற்பாட்டை செயற்படுத்தி, வாடிக்கையாளர்களை பாதுகாப்பான தடையற்ற எண்ணியலாக்கத் தளங்களுக்கு மாற்றியுள்ளோம். எண்ணியலாக்க சந்தைகளில் எங்களின் இருப்பை வலியுறுத்தும் ஒரு மையப் புள்ளியாக எமது வர்த்தக நாமத்தை வைத்துக் கொண்டு, பௌதீக மற்றும் எண்ணியல் முறைமையை இணைக்கும் ஒரு கலப்பின உயர் தரம் மிக்க எதிர்கால வங்கியாக எம்மை எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு அடையாளப்படுத்துகிறோம்.

எண்ணியல் மயமாக்கலை நோக்கிய இந்த உந்துதல், எமது மைய வங்கியியல் தீர்வு, திறைசேரி முகாமைத் தீர்வு மற்றும் மனித வள முகாமை முறைமை ஆகியவற்றுடன், வங்கியினுள்ளே கிரயக் குறைவான அதே சமயம் உகந்த செயன்முறைகளை செயற்படுத்துவதன் மூலம் நிறுவனத்திலேயே வினைத்திறன் மேம்பாட்டைக் கருத்தில் கொள்கிறது. வங்கிக்கு உள்ளேயும் வெளியேயுமான இந்த இரண்டு எண்ணியலாக்க தூண்டுதல்களும் வலுவான இணையப் பாதுகாப்பு முறைமைகளில் முதலீடு செய்வதன் மூலம், தரவைக் கண்காணித்து மற்றும் பாதுகாத்து, அனைத்து

அக்கறையுள்ள தரப்பினருக்கும் அனைத்து வங்கித் தளங்களிலும் மிக உயர்ந்த பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட தன்மையினை வழங்குகிறது. இது தொடர்பிலான எமது அனைத்து முயற்சிகளும் பாதுகாப்பான நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் நோக்கத்துடன் கொண்டு நடத்தப்பட்டு, வங்கி என்ற வகையில் நமது பொறுப்பை நிலை நிறுத்துகிறது.

**நிலைபேறான தன்மை**

நிலைபேறான தன்மை என்பது ஒரு நிதி நிறுவனமாக நமது தொடர்ச்சியான நீண்டகால இருப்பை தீர்மானிப்பதனால், எமது அனைத்து முயற்சிகளுக்குமான மையப் பகுதியில் உள்ளது. மேலதிக விபரங்கள்: பக்கங்கள் 52 முதல் 55 வரை.

## ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

ஏனைய காரணிகளுக்கிடையே சவாலான தொழிற்பாட்டுச் சூழலுக்கு மத்தியில் செயற்றிறன் மிக்க இடர் முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்கான சிறந்த நடைமுறை ஆகியவற்றின் மீது வங்கியானது அதன் ஆரோக்கியமான செயற்பாட்டிற்கு பொறுப்பாக உள்ளது. அனைத்து முக்கிய தீர்மானங்களையும் மேற்பார்வையிடும் மற்றும் வங்கிக்கு நிலையான தலைமைத்துவத்தை வழங்கும் திறமையான மற்றும் தீர்க்கமான ஆளுகைக் குழுவைக் கொண்டிருப்பதையிட்டு நாம் மிக அதிர்ஸ்டமானவர்களாக உணர்கிறோம். வங்கி அதன் தீர்மானங்களுக்கு மத்தியில் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யும் எச்சரிக்கையான மற்றும் ஆர்வமுள்ள இடர் முகாமை செயன்முறைகளால் ஆதரவு வழங்கப்படுகின்றன.

**ஆளுகை**

பொறுப்பான மற்றும் தீர்க்கமான ஆளுகை, திறமையான தலைவர்களின் ஆதரவினைக் கொண்டு மிகுந்த தன்னம்பிக்கையுடன் தீர்மானங்களை மேற்கொள்ள வங்கிக்கு உதவுகிறது. மேலதிக விபரங்களுக்கு, பக்கங்கள் 188 முதல் 202 வரை.

**இடர் மதிப்பாய்வு**

எச்சரிக்கையான இடர் முகாமையானது வணிகத்தின் வெற்றிக்காக முறையாகக் கருதப்படும் இடர்களை எதிர்கொள்ளும் போது பாதுகாப்பான சூழலில் வங்கியை நிலை நிறுத்துகிறது. மேலதிக விபரங்களுக்கு, பக்கங்கள் 212 முதல் 239 வரை.

## எதிர்காலம் நோக்கிய பார்வை

தேசிய சேமிப்பு வங்கி அதன் தந்திரோபாயத்தை மேம்படுத்தி, அதன் வர்த்தக நாமத்தை உருவாக்கி, சமூகத்தின் சமூக பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் எண்ணியலாக்க நகர்வுகளை, தற்போதைய மற்றும் எதிர்கால அடிப்படையில் பிரதிபலிக்கும் வகையில் அதன் முக்கிய பெறுமதிகளைப் பேணிவரும் ஒரு ஆற்றல்மிக்க நிதி நிறுவனம் என்பது தெளிவாகிறது.

இந்த ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட எமது எண்ணியல் செயற்பாடுகளானவை தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப தனிப் பயனாக்கப்படுவதற்கு வழி வகுக்கும் அதே நேரத்தில் சுற்றுச் சூழலுக்கு உகந்ததாகவும் நிலையானதாகவும் இருப்பதை நிரூபிக்கும் வகையிலான எமது எண்ணியலாக்க தொழிற்பாட்டு இயக்கத்தில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கையின் பொருளாதாரத்திற்கான ஆதரவை வழங்குவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளதுடன், நீண்டகால பொருளாதார மீளெழுச்சிக்குப் பங்களிக்கும் தந்திரோபாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். ஒரு அரசு வங்கியாக, தேசத்திற்குச் சேவை செய்வதை நமது கடமையாக மட்டும் பார்க்காமல், நமது பாக்கியமாகவும் நோக்குகின்றோம்.

## ஏற்புரை

இந்தப் பகுதி எனது செய்தியில் இறுதியாக இருந்தாலும், அது நிச்சயமாக எந்த வகையிலும் முக்கியத்துவம் குறைவானதாக இல்லை. தேசிய சேமிப்பு வங்கியானது அதன் நபர்களாலேயே கட்டமைக்கப்பட்டதாக இருப்பதுடன், எமது நிறுவனத்தில் உள்ள ஏராளமான பங்களிப்பாளர்களுக்கு எனது நன்றியும் பாராட்டுதல்களும் தெரிவிக்கப்படுகிறது. பணிப்பாளர்கள் குழுவில் உள்ள எனது சகாக்கள் இந்த சோதனை மிக்க ஆண்டில் சிறந்த ஆலோசனைகளையும் அசைக்க முடியாத ஆதரவையும் வழங்கியுள்ள அதேவேளை தேசிய சேமிப்பு வங்கி முழுவதுமான கூட்டாண்மை முகாமைக் குழு மற்றும் ஊழியர்கள் சிறப்பாக அனைத்துத் தீர்மானங்களையும் அயராது செயற்படுத்தியுள்ளனர். இந்த முயற்சிகள் எமது விசுவாசம் மிக்க வாடிக்கையாளர் தளத்தால் உறுதியாக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து வங்கியின் தொடர்ச்சியான ஸ்திரத்தன்மையை உறுதி செய்துள்ளனர். தேசிய அளவில், மாண்புமிகு பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் அளித்த நம்பிக்கை மற்றும் ஆதரவை நான் பாராட்டுவதுடன், இந்த நன்றிகள் மேலும் திறைசேரியின் செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், மேற்கண்ட நிறுவனங்களில் உள்ள அனைத்து அதிகாரிகள், சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கும் தெரிவிக்கப்படுகின்றன. வங்கியின் நாடளாவிய ரீதியிலான தொழிற்பாடுகளில் முக்கிய ஆதரவை வழங்கிய தபால் மா அதிபர் மற்றும் தபால் திணைக்கள அதிகாரிகளுக்கும் நான் நன்றியுள்ளவளாக இருக்கின்றேன்.

எமது வருங்கால தலைமுறைகளுக்கு நமது தேசத்தின் நலன்களைப் பாதுகாக்கத்தக்க வகையில் நாம், ஒன்றாக எப்பொழுதும் ஒரு வலுவான மற்றும் நெகிழ்திறன் மிக்க சக்தியாக இருப்போம்,



**திருமதி கேசிலா ஜெயவர்தன**
24 மார்ச் 2022

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

GRI 102-14



இந்த ஆண்டு எமது ஆரோக்கியமான நிதிச் செயற்திறனில் எமது அடித்தளம் புள்ளிவிவர ரீதியாக தெளிவாகத் தெரிகிறது. எமது வட்டி வருமானம் 7.3% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூபா 131.4 பில்லியனாக வளர்ச்சியடைய, வரிக்கு முன்பான இலாபம் ரூபா 28.4 பில்லியன் ஆக உயர்வடைந்து 81.4% வளர்ச்சியைக் காட்டுகிறது.

இந்த ஆண்டு, குறிப்பாக வங்கி எதிர்கொள்ள வேண்டியிருந்த சவாலான பேரினப் பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு, தேசிய சேமிப்பு வங்கியின் செயற்திறனில் தலைவரின் பெருமையைப் பகிர்ந்து கொள்கிறேன். தொற்றுநோயின் தொடர்ச்சியான விளைவுகள் மெதுவான பொருளாதார வளர்ச்சியியை மந்தமடையச் செய்ததுடன், இறையாண்மைத் தரக்குறைப்பு மற்றும் நிச்சயமற்ற கொள்கை தன்மைகளால் மேலும் பாதிப்படைந்தது. இவற்றுடன் ரூபாயின் மதிப்பில் ஏற்பட்ட சரிவு, கடனைத் திருப்பிச் செலுத்துவதன் பின்னணியில் வெளிநாட்டு நாணயக் கையிருப்பில் ஏற்பட்ட நிலையான வீழ்ச்சி மற்றும் குறைந்த சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் குறைவான வெளிநாட்டு நாணய அனுப்புகை காரணமான குறைந்த நாணய உள்வருகை ஆகியவை மேலும் இத் தாக்கத்துடன் சேர்க்கப்பட்டன.

எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கி 2020 இல் இணக்கமான நாணயக் கொள்கையைப் பின்பற்றியதைத் தொடர்ந்து 2021 இல் அளவுசார்ந்த இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்த வகையிலான ஆதரவுடன் வங்கித் துறை இந்த இடர்பாட்டுக்கு வலுவாகப் பதிலளித்தது. 2021 இல் ஏற்பட்ட கொள்கை வட்டி வீதங்களிலான சிறிய மேல்நோக்கிய 0.5% அதிகரிப்புடன் 2022 ஜனவரி மாதத்திலான 50 அடிப்படைப் புள்ளிகள் மற்றும் மார்ச் 2022 இல் 100 அடிப்படைப் புள்ளிகளின் அதிகரிப்பானது, வட்டி விகிதங்கள் மேலும் முன்னேறுவதற்கான தலையீடு இருப்பதைச் சுட்டிக்காட்டியதுடன், 2022 ஏப்ரலில் மத்திய வங்கி மிகச் சடுதியாக உயரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கில் 700 அடிப்படைப் புள்ளிகளால் நிர்ணயித்தபோது, அது பயன்மிக்க நகர்வாக அமைந்தது. இது நாட்டிற்கு மீண்டும் முதலீடுகளை ஊக்குவிப்பதுடன், மேலும் தேவையான வெளிநாட்டு நாணய உள்வரவுகளை கொண்டு வரும் என்பதனால் இது ஒரு பயன்மிக்க நகர்வாக அமைந்தது. இந்த நடவடிக்கை சரியான திசையில் ஒரு நம்பிக்கையான படியாகும். வெறும் பொருளாதார நோக்கிற்கு அப்பால், இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு திட்டங்களுக்கு அர்ப்பணிப்புடன் இருப்பதை சர்வதேச சமூகத்திற்கு சமிக்ஞை செய்வதுடன், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் ஈடுபாட்டையும் காட்டியது.

இவை அனைத்தினூடாகவும், தேசிய சேமிப்பு வங்கி இலங்கையின் பாதுகாப்பான வங்கி என்ற தனது பொறுப்பை உறுதியாகக் கடைப்பிடித்து, அதன் அனைத்து சென்மதித் தொகைகளையும் செலுத்தி, தனது வாடிக்கையாளர்களுக்குமான மீதிகளையும் செலுத்தித் தீர்த்தது. கடினமான சூழ்நிலையில் உறுதியாக நிற்கும் இந்தத் திறன் வங்கிக்கு எச்சரிக்கை மிக்க தந்திரோபாயம் மற்றும் இடரினை அமைத்து, அதன் மூலம் உறுதியான அடித்தளத்தை உறுதி செய்யும் உறுதியான பணியாளர்கள் மற்றும் பொறுப்பு மிக்க ஆளுகையின் காரணமாகவே ஏற்பட்டதாகும்.

தேசிய சேமிப்பு வங்கியில், நாங்கள் ஒரு ஒருங்கிணைந்த சிந்தனை அணுகுமுறையை மேற்கொண்டு, இது பரந்த பேரினப் பொருளாதாரக் காரணிகளை எமது தொழிற்பாடுகளின் உள்முக சூழலுடன் கவனமாக சமநிலைப்படுத்துவதுடன், மூலதன உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளானவை வங்கி, அக்கறையுள்ள தரப்பினர் மற்றும் பரந்த சமுதாயத்திற்கான பெறுமதியை உருவாக்குவதை உறுதிசெய்கிறது.

## நிதிசார் செயற்திறன்

இந்த ஆண்டில் எமது ஆரோக்கியமான நிதிச் செயற்திறனில் எமது அடித்தளம் புள்ளிவிபர ரீதியாக தெளிவாகத் தெரிகிறது. எமது வட்டி வருமானம் 7.3% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூபா 131.4 பில்லியனாக அதிகரித்து இருப்பதுடன், வரிக்கு முன் இலாபம் ரூ. 28.4 பில்லியனாக 81.4% வளர்ச்சியைக் காட்டுகிறது. ஆண்டு முடிவில், உரிமையாண்மை மீதான திரும்பல் (ROE) 33.92% ஆக மேம்பட்ட, அதே சமயம் சொத்துத் தளம் 15.8% ஆல் அதிகரித்து ரூ. 1.6 திரில்லியனாக உயர்வடைந்ததுடன், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மொத்த சொத்துக்களில் 34.1% ஆகக் காணப்பட்டது. வங்கியின் உரிமையாண்மை மற்றும் கடன் சாதனங்களின் மொத்த முதலீட்டுத் தொகுப்பு 33.3% வளர்ச்சியைக் கண்டிருக்க, மொத்த பங்குதாரர்களின் உரிமையாண்மை ரூபா 76.0 பில்லியனாகவும், இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்கள் 13.3% அதிகரித்து ரூபா 350.4 பில்லியனாகவும் உயர்வடைந்தது. வருமான அடிப்படையிலான வளர்ச்சியின் காரணமாக வங்கியின் வருமானத்திற்கான கிரய விகிதம் (வரிகள் நீங்கலாக) 33.3% இல் நிறைவடைந்தது. இது தவிரவும், எம்மால் ரூபா 7 பில்லியன் நிதியீட்டம் இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிதியுதவியினால் திரட்டப்பட்டது.

12.0% என்னும் சட்டநியதித் தேவைப்பாட்டை விட மேம்பட்டதாக, 20.83% என்ற எமது வலுவான மூலதன நிலை ஒரு முக்கிய அங்கமாகும். இது தேசிய சேமிப்பு வங்கியில் பாதுகாப்புக்கு நாம் அளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. 4.47% என்னும் தொழிற்துறை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2.97% என்ற தொழில்துறையின் மிகக் குறைவான தொழிற்படாக் கடன் விகிதத்தைக் கொண்டுள்ள பெருமையை நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு எமது வைப்புத் திரட்டல் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் வங்கித்துறை வரலாற்றில் இரண்டாவது உயர்வான பெறுமதியான ரூபா 192.6 பில்லியன் பெறுமதியான இந்த ஆண்டின் மொத்த வைப்பாக்கம் வைப்புத் தளத்தில் 15.5% விஸ்தரிப்பை ஏற்படுத்தி 2021 டிசம்பர் இறுதியில் ரூபா 1.4 திரில்லியன் பெறுமதியை அடைந்தது.

தேசிய சேமிப்பு வங்கி வரிகள் மற்றும் விதிப்பனவுகள் மூலம் அரசாங்கத்திற்கு பங்களிப்பு செய்து, அதன் மூலம் இலங்கை பொருளாதாரத்திற்கு ஆதரவு நல்கியது. இந்த ஆண்டில், வரிகள் மூலம் நாட்டிற்கான வங்கியின் பங்களிப்பு ரூபா 12.4 பில்லியன் ஆகவும் பங்கு இலாபம் ரூபா 3.5 பில்லியன் ஆகவும் காணப்பட்டு உள்ளது.

அனைத்தையும் கருத்தில் கொள்ளும் போது, 2021 ஆம் ஆண்டு நிலைபேறான வளர்ச்சியுடன் ஆண்டை நிறைவு செய்யும் வங்கியின் சிறந்த நிதிச் செயற்திறனைக் கண்டுள்ளது.

**நிதி மூலதனம்**

எமது நிதி மூலதனத்தின் முகாமை முக்கிய கவனத்தில் எடுக்கப்பட்டு, தேசிய சேமிப்பு வங்கியில் ஓர் வலுவான நிதி நிலையை உறுதி செய்ய நாங்கள் முயற்சி செய்கிறோம். மேலதிக விபரங்களுக்கு, பக்கங்கள் 96 முதல் 113 வரை.

**வணிக வரிசைகள் மதிப்பாய்வு**

தொழிற்பாடுகளில் பெறுமதியை மேம்படுத்தும் நன்கு சிந்திக்கப்பட்ட வணிக வரிசைகளால் ஆதரிக்கப்படும் முக்கிய தொழிற்பாட்டுப் பிரிவுகளை வங்கி மேற்பார்வை செய்கின்றது. விபரங்களுக்கு, பக்கங்கள் 114 முதல் 119 வரை.

## கொவிட்-19 ஆதரவு

வங்கி என்ற வகையில் எமது செயற்திறன், குறிப்பாக கொவிட்-19 காலத்தில், எமது வாடிக்கையாளர்களை ஆதரிப்பதாக மாற்றம் பெற்றுள்ளது. கொவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட வணிகத்திற்கு மேம்பட்ட

கடன் பாய்ச்சல்கள் மூலம் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கான அவசரத் தேவையை இத்தொற்றுநோய் நிலைமை உருவாக்கியுள்ளது. பதில் விளைவாக, மத்திய வங்கி “சௌபாக்யா” கோவிட்-19 மறுமலர்ச்சி வசதி மற்றும் கடன் தாமதக் கொடுப்பனவுத் திட்டம் உள்ளிட்ட பரந்த அடிப்படையிலான ஊக்குவித்தல் பொதிகளை அறிமுகப்படுத்தியது. இந்தத் தேவைகளுக்கு இணங்க, குறித்த திட்டங்களை மறுத்த வாடிக்கையாளர்களைத் தவிர அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வங்கி, கடன் தாமதக் கொடுப்பனவு வசதி மற்றும் தவணை ஒத்திவைப்பு ஆகியவற்றை வழங்கியுள்ளது. 90% ஆன சில்லறைக் கடன் தொகுப்புக்களிற்கு 7.0% சலுகை விகிதத்தில் கடன் தயவு வழங்கப்பட்டதுடன், பொதுவாக இரண்டு முதல் ஆறு மாதங்கள் வரை மாறுபடும் வகையில் வழங்கப்பட்ட அனைத்து கடன் தயவு காலங்களும் ஜுன் 2022 இல் முடிவடையும். அனைத்து தவணைகளும் இறுதியாகக் கடன் செலுத்தித் தீர்க்கப்படும் வரை ஒத்திவைக்கப்பட்டதுடன் கடன் காலம் மற்றும் நிவாரணம் கோரிய வாடிக்கையாளர்களுக்கு தற்போதுள்ள கடன்களுக்கு 10% வரை வட்டி விகிதம் குறைக்கப்பட்டது.

2021 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட சலுகைக் கடன் திட்டங்களை நிறைவு செய்யும் வகையில், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நாணயச் சபையானது, உரிமம் பெற்ற வங்கிகளில் இருந்து சம்பளம் பெறும் ஊழியர்களால் பெறப்படும் ஈட்டு அடிப்படையிலான வீட்டுக் கடன்களுக்கான அதிகபட்ச வட்டி விகிதத்தை அறிமுகப்படுத்தியது. இது இலங்கையில் வீட்டு உரிமையை அதிகரிப்பதுடன் உள்நாட்டு கட்டுமானத் துறை மற்றும் அதன் வழங்கல் சங்கிலிகளுக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கிறது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில், பொது மற்றும் தனியார் துறையில் நிரந்தர ஊழியர்களுக்கான சிறப்பு வீட்டுக் கடன் திட்டத்தை வங்கி அறிமுகப்படுத்தியதன் மூலம் வங்கியின் வாடிக்கையாளர் தளத்துக்கு மேலும் ஆதரவு வழங்குகிறது.

**வாடிக்கையாளர்கள்**

நம் வாடிக்கையாளர்கள் தேசிய சேமிப்பு வங்கியில் பெறுமதி மிக்கவர்களாகவும் நன்கு கவனிக்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட பரந்த அளவிலான உற்பத்திகள் மற்றும் சேவைகளை நாம் வழங்குகிறோம். மேலதிக விபரங்களுக்கு, பக்கங்கள் 157 முதல் 163 வரை “சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்” மற்றும் “வாடிக்கையாளர் மூலதனம்” ஆகிய பகுதிகளைப் பார்வையிடுக.

## எமது தந்திரோபாய முன்னுரிமைகளிலான முன்னேற்ற நகர்வு

தேசிய சேமிப்பு வங்கியில், நிலைபேறான தன்மை என்பது வெறும் எண்ணக்கருவாக மட்டுமன்றி, மாறாக நமது தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பெறுமதி உருவாக்க செயன்முறையைப் பாதிக்கும் ஒரு தந்திரோபாய முன்னுரிமையாகும். ஒவ்வொரு தனியான தந்திரோபாயமும் தொடர்புடைய நிலைபேறான தன்மை இலக்குகளுடன் மதிப்பீடு செய்யப்படுவதை நாங்கள் உறுதி செய்வதன் மூலம் எமது தொழிற்பாடுகளை சர்வதேச நியமங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணக்கமாக வைத்திருக்கிறோம்.

நிதியைப் பொறுத்தவரை, பொறுப்பான வணிக நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக சுற்றுச் சூழல் சிநேக வணிகங்களுக்கு சுற்றுச் சூழல் கடன்களை வழங்குவதன் மூலம் நிலைபேறான நிதிக்கான எமது உறுதிப்பாட்டை நாம் அதிகரித்துள்ளோம். எமது சுற்றுச் சூழல் கடனாக ரூபா 3.8 மில்லியன் இந்த ஆண்டின் போது வழங்கப்பட்டது.

அனைவருக்கும் வினைத்திறனான மற்றும் நிலைபேறான வங்கிச் சேவையை வழங்கும் நோக்கில் எமது எண்ணியலாக்க முன்முயற்சிகள் எமது வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களை இலக்காகக் கொண்டுள்ளன. மைய வங்கியியல் தீர்வானது 2022 இல் தொழிற்படும் என்று எதிர்பார்க்கப்படும் எண்ணியலாக்க முதலீடுகளில் ஒன்றாகும். தன்னியக்க மற்றும் நெறிப்படுத்தப்பட்ட பின்-அலுவலக செயன்முறைகளையும் உள்ளடக்கிய வினைத்திறனான செயன்முறைகளை வழங்கும் சக்திவாய்ந்த முன்-அந்த எண்ணியலாக்கத் தளங்களுடன் தேசிய சேமிப்பு வங்கி இணைக்கப்படும்.

தொற்றுநோய்க்கு மத்தியிலும் வங்கியின் மைய வங்கியியல் திட்டக் குழு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இருந்ததுடன், மேலும் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கிளை மற்றும் தலைமை அலுவலக ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் 261 கிளைகள், 292 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் 92 பணச் சுற்றோட்டப் பொறிகள் கொண்ட எமது வலையமைப்பின் மூலம் சேமிப்பை எளிதாக்கும் நோக்கில் எண்ணியலாக்க உட்கட்டமைப்பை விரிவுபடுத்தியுள்ளோம். இது ஐ.ஓ.எஸ் (iOS), ஆன்ட்ரோய்டு (Android) மற்றும் ஹுவாய் (Huawei) போன்ற பயன்பாட்டு தளங்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள எமது “NSB Pay" செயலி மூலம் மேலும் ஆதரவு அளிக்கப்படுகிறது. எண்ணியலாக்க உட்கட்டமைப்பை அதிகரிப்பதற்கும், நிலைபேறான வங்கிச் சேவையை நோக்கிய வழிமுறைகளை அதிகரிப்பதற்கும் நாங்கள் அர்ப்பணிப்பான வகையில் கடமைப்பட்டுள்ளோம்.

**தந்திரோபாயம்**

எமது தந்திரோபாய நிலைப்படுத்தல், விவேகமான இடர் மதிப்பீட்டிற்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டு, அதன் மூலம் வங்கிக்கான மிக உயர்ந்த பாதுகாப்பை உறுதி செய்கிறது. மேலும் விபரங்களுக்கு, பக்கங்கள் 54 முதல் 66 வரையான பகுதிகளைப் பார்வையிடுக.

## பிரிவுசார் செயற்திறன்

வங்கியின் முக்கிய நாடிகளின் நான்கு பிரிவுகளும் - சில்லறை வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், சர்வதேச வங்கியியல் மற்றும் திறைசேரி- இந்த ஆண்டு நிலையான செயற்திறனைக் காட்டுகின்றன.

**சில்லறை வங்கியியலின்** கடன்களிலான அதிகரிப்பு மற்றும் அட்டைகளிலான கட்டண அடிப்படையிலான வருமானம் காரணமாக 2021 இல் 32.5% வளர்ச்சியினை பதிவு செய்து ரூபா 17.4 பில்லியன் பெறுமதியுடன் அமைந்த சில்லறை வங்கியியல் பிரிவே இந்த ஆண்டிலும் மிகவும் இலாபம் மிக்க பிரிவாகத் தொடர்ந்தும் தடம் பதித்துள்ளது. வங்கி வைப்புகளிலிருந்து எதிர்மறையான வருமானம் மற்றும் பணவீக்க உயர்வு காரணமாக உயர்ந்த வாழ்க்கைச் செலவுகள் காரணமாக, இந்த ஆண்டில் திரட்டப்பட்ட வைப்புத்தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.3% வீழ்ச்சி அடைந்து ரூபா. 192.6 பில்லியனாக குறைவடைந்துள்ளது.

**எமது கூட்டாண்மை வங்கியியல்** பிரிவு சக்தி வளம், பயன்பாட்டு சேவைகள், உட்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க சக்தி, பசுமை வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் போன்ற வளர்ச்சி ஆற்றல் மிக்க துறைகளில் கவனம் செலுத்துகிறது. இந்த நலன்களுக்கு ஏற்ப, நாம் ரூபா 28.5 பில்லியன் பெறுமதியான கடன்களை முறையே தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 14.1 பில்லியன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 13.2 பில்லியன் ஆக வழங்கியுள்ளது. குருநாகலில் ஒரு தொழிநுட்ப பூங்காவை உருவாக்குவதற்காக டெக்னோ பார்க் அபிவிருத்திக் கம்பனிக்கு ரூபா 750 மில்லியனையும் கடனாக வழங்கியுள்ளோம். மேற்கூறிய அனைத்தின் மத்தியிலும் தேசிய சேமிப்பு வங்கியின் கூட்டாண்மை வங்கியியல் 1.1% என்னும் மிகக் குறைந்த தொழிற்படாக் கடன் விகிதத்தைப் பேணியது.

**எமது சர்வதேச வங்கியியல் பிரிவின்** தொழிற்பாடுகளைப் பேண நாங்கள் முயற்சி செய்தாலும், 2021 இல் வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புத் தளத்தில் தேக்கம் ஏற்பட்டதால் தூண்டுதல் இல்லாத துறைகளில் இதுவும் ஒன்றாக அமைந்து, 2020இல் பதிவாகியிருந்த ரூபா 3.3 பில்லியன் திரட்டலுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் ரூபா 16.4 மில்லியன் மாத்திரமே திரட்டப்பட்டது. வங்கி வழிகள் மூலம் நாட்டிற்குள் வரும் அந்நியச் செலாவணியின் அளவு குறைவடைந்து போனதாலும், இலங்கை ரூபாயின் மீள்மதிப்பீட்டிற்குப் பிறகும், 2021 இல் வங்கி வழிகள் ஊடாக பணியாளர்கள் அனுப்பும் பணமும் 10 வருடங்களில் இல்லாத அளவுக்குக் குறைவடைந்தமையுமே இதற்குக் காரணமாகும். இதற்கு மத்தியிலும், வங்கியானது கடந்த ஆண்டு இதே காலத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 56.2 பில்லியன் தொகைக்கு எதிராக 2021 இல் ரூபா 57.1 பில்லியன் பண மாற்றலைப் பெற்றுக் கொண்டதன் மூலம் வங்கி தனது மீளெழுச்சிக்கான ஆற்றலைக் காட்டியது. இதன் விளைவாக, பண மாற்றலின் சந்தைப் பங்கு 2020 டிசம்பரில் காணப்பட்ட 4.24% இல் இருந்து 2021 டிசம்பரில் 5.25% ஆக அதிகரித்துள்ளது.

தொழிற்துறையின் போக்கைப் பிரதிபலிக்கும் வகையில், சந்தையில் டொலர்களின் பற்றாக்குறை, அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி மற்றும் வாடிக்கையாளர்கள் வர்த்தகத் தொழிலை நடத்துவதைத் தடுக்கும் தொடர்ச்சியான முடக்கங்கள் போன்ற சூழ்நிலைகள் வர்த்தக நிதியீட்டங்கள் வணிகத்தை பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியமை காரணமாக வங்கியின் வர்த்தக நிதியீட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அடுத்து வரும் ஆண்டிற்கான எமது கவனம் முக்கிய வளர்ச்சியினை உந்தும் சந்தைகளில் பயன்படுத்தப்படாத சந்தைத் துண்டங்களை ஊடுருவி சந்தைப் பங்கை அதிகரிப்பதில் அதிக நாட்டம் கொன்கின்றது.

வங்கியின் திறைசேரிப் பிரிவு முக்கியமாக நிகர வட்டி வருமானத்திலான கணிசமான அதிகரிப்பு காரணமாக 2021 இல் வங்கியின் நிகர தொழிற்பாட்டு வருமானத்தில் 51.6% குறிப்பிடத்தக்க பங்களிப்பைத் தொடர்ந்தும் அளித்தது. 2021 இல் நிலவிய சந்தை ஏற்ற இறக்கங்கள், வங்கியின் திரவத்தன்மை நிலைகளை நிர்வகித்தல் மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முதிர்வு இணக்கமின்மைகளைக் கண்காணிப்பதில் **திறைசேரிப் பிரிவின்** வகிபாகத்தின் முக்கியத்துவத்தை அதிகரித்தது. இப்பிரிவு திரவத்தன்மை பாதுகாப்பு மட்டங்களை வலுப்படுத்தி, குறைந்த கிரயத்தில் வெற்றிகரமாக நிதி திரட்டியதுடன் அரச பிணையங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான நீண்ட கால முதலீடுகளையும் மேற்பார்வை செய்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், அரச பிணையத் தொகுப்பு ரூபா 834.1 பில்லியனாக இருக்க, உரிமையாண்மைத் தொகுப்பு சந்தை விலைமாற்றங்களிலேற்பட்ட இலாபமான ரூபா 427.4 மில்லியன் அடைந்து ஆண்டு இறுதியில் ரூபா 5.2 பில்லியன் பெறுமதியுள்ள தொகுப்புடன் நிறைவு செய்து ஒரு வலுவான செயற்திறனைப் பதிவு செய்தது.

## இடர் முகாமை மற்றும் ஆளுகை

தேசிய சேமிப்பு வங்கி அதன் சிறந்த இடர் முகாமை மற்றும் பொறுப்பு மிக்க ஆளுகை காரணமாக நிலையான வங்கியாகத் தொடர்ந்தும் காணப்படுகிறது. நீண்ட கால ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கும் விதத்தில் வங்கி இடரினை சமநிலைப்படுத்தியதால், கடன் தயவு மற்றும் அதன் விளைவான கால நீடிப்புகள் தொடர்பான சூழலில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2021 ஆம் ஆண்டில் சொத்துத் தரத்தை நிர்வகித்தல் ஒரு முக்கிய முன்னுரிமையாக இருந்ததுடன் சமீபத்தில் வெளியிடப்பட்ட தகவலின் படியாக, வங்கித் துறையில் அதன் சக அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த தொழிற்படாக் கடன் விகிதங்களில் ஒன்றை வங்கி பதிவு செய்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, வங்கியின் இடர் முகாமைத் தந்திரோபாயம், வங்கியின் பாதுகாப்பை உறுதி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இடர்களை சபைக் குழு அமைத்துள்ளதால், இது தீவிர நுண்ணறிவுகளுக்கு வலுவான ஆதரவாக இருந்தது. நிச்சயமற்ற சந்தை நிலைமைகள் காரணமாக, பொறுப்பான இடர் தாங்குதிறன் எல்லைக்கு ஏற்ப வங்கி அதன் இடர் எதிர்நோக்கல் வெளிப்பாடுகளைக் குறைத்ததுடன் அனைத்துத் தீர்மானங்களுமே தொழிற்பாட்டு சூழல் நிலைமைகளுக்கு இணக்கமாக இருப்பதை உறுதி செய்கிறது.

## எமது மக்களை ஈடுபடுத்துதல்

எமது மக்களே தேசிய சேமிப்பு வங்கியில் எமது மிகச்சிறந்த சொத்தாக இருப்பதுடன், மேலும் இலக்கு வைக்கப்பட்ட பயிற்சியளித்தல், ஆதரவான பணியிடங்கள் மற்றும் கவர்ச்சிகரமான ஊதியம் ஆகியவற்றின் மூலம் எமது பணியாளர்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள திறனை மேம்படுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தேசிய சேமிப்பு வங்கியின் தொலைநோக்குப் பார்வையால் எமது ஊழியர்கள் உற்சாகமடைந்து அதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கி வலுவான பெருமை மற்றும் விசுவாசத்தை கண்கூடாகக் காண வேண்டும் என்பது எனது தனிப்பட்ட விருப்பமாகும். எனவே, வங்கியின் தந்திரோபாய இலக்குகள், ஒரு தொழிற்துறையாக அதன் பரிணாமம் மற்றும் எண்ணியல் மயமாக்கப்பட்ட பணியிடங்களில் முதலீடு ஆகியவை நேரடியாக ஊழியர்களின் திறன்களுடன் இணைக்கப்படுவதை உறுதிசெய்து அதன் மூலம் அதன் மக்களுடன் இணக்கமான ஒரு அமைப்பை உருவாக்குகிறோம்.

இந்த நோக்கத்திற்காக, எமது பழைய, அனுபவம் வாய்ந்த திறமையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதில் நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம், அத்துடன் இந்த ஆண்டு ஓய்வுபெறும் வயது 62 ஆக நீட்டிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் மிலேனியல் சந்ததியில் முதலீடு செய்வதன் மூலம் வங்கி தற்போதைய போக்குகளுடன் புதுப்பித்த நிலையில் இருக்கும். இந்த இரு அடுக்கு அணுகுமுறையின் அடிப்படையில், வரும் ஆண்டில் கணிசமான பெறுபேறுகளை அடையும் ஒரு சமநிலையான ஊழியப் படையைத் தொடர்ந்தும் தேசிய சேமிப்பு வங்கி பராமரிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

## எமது நிலைபேறான பெறுமதி உருவாக்கம் பற்றிய கண்ணோட்டம்

வங்கி தனது வணிகத்தை நடத்துவதற்கு நிலையான அடித்தளத்தை கொண்டிருப்பதை உறுதி செய்வதற்காக, எமது மூலதனத் தளத்தைத் தொடர்ந்து பலப்படுத்துவோம். நிதி ரீதியாக, பாதீடு மற்றும் தந்திரோபாய வணிகத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளை அடைவதற்கான முயற்சியுடன் கடுமையான கிரய முகாமையினைத் தொடரும் அதே நேரத்தில் நமது இயற்கை மூலதனத்தைப் பாதுகாக்கும் வகையில் நிலைபேறான உற்பத்திகள் மற்றும் சேவைகளையும் உருவாக்குவோம். எமது பெறுமதி உருவாக்கத்தை மேலும் வழிநடத்தும் நிலைபேறான தன்மையுடன்,

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் மீது தொடர்ந்தும் முதலீடு செய்வதன் மூலம் எமது வங்கி செயன்முறைகள் மிகவும் வினைத்திறனான எண்ணியலாக்கத் தளங்களில் மேம்படுத்தப்படக் கூடியதாக இருப்பதுடன், மேலும் மேம்பட்ட அறிவுசார் திறன்கள் மற்றும் எண்ணியல் மயமாக்கப்பட்ட முறைமைக்கான மாற்றத்தை ஆதரிக்கின்றன. தேசிய சேமிப்பு வங்கியின் பெறுமதி உருவாக்க முறைமை எமது அக்கறையுள்ள தரப்பினருக்கான பயன்மீது கவனத்தைக் கொண்டிருப்பதனால், இவை அனைத்திலும் நமது மக்களும் நமது சமூக உறவுகளும் முக்கிய இடத்தை வகிப்பர்.

சுருக்கமாக, தேசிய சேமிப்பு வங்கி அதன் அனைத்து மூலதனங்களிலிருந்தும் பெறுமதியை இயக்கும் ஒரு ஒருங்கிணைந்த அமைப்பாகத் தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். எமது வணிகத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் இணைத்து வலுவான நிறுவனத்தை உருவாக்குவதற்கான இந்தத் திறன், வரவிருக்கும் மிகவும் சவாலான காலங்களில் உறுதியாக நிற்க உதவும் என்று நான் நம்புகிறேன். எப்பொழுதும் போல், இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் ஒருமுறை புத்துயிர் பெறுவதையும், செழிப்புடன் இருப்பதையும் உறுதி செய்வதற்காக அரசாங்கம் மற்றும் ஒழுங்கு விதிமுறையாளர்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவோம்.

## ஏற்புரை

இந்த சவாலான ஆண்டின் மத்தியிலும் தேசிய சேமிப்பு வங்கிக்கு உதவிய ஏராளமான நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு முறையாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வது எனது கடமையும் கௌரவமும் ஆகும். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எமது வாடிக்கையாளர்களின் அசைக்க முடியாத விசுவாசத்திற்காக எனது நன்றியைத் தெரிவிப்பதில் ஆரம்பிக்க விரும்புகிறேன். இலங்கையின் பாதுகாப்பான வங்கியாக தேசிய சேமிப்பு வங்கியின் நிலையை தொடர்ந்து பேணுவதற்கு எமது திறமையின் மீதான உங்கள் நம்பிக்கையே காரணமாகும்.

பணிப்பாளர் சபை, முகாமைக் குழு மற்றும் வங்கி ஊழியர்கள் அனைவரும் ஒரு பொதுவான இலக்கை அடைய தந்திரோபாயங்களை உருவாக்கி, அதைச் செயற்படுத்திய துணிச்சலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டில் நாம் கண்ட பெறுபேறு எமது குழு முயற்சிதான் என்று என்னால் உறுதியாகக் கூறுகின்றேன்.

எமக்கு ஆதரவாக இருந்த அனைத்து அரசாங்க அமைப்புகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், உங்கள் ஆதரவின்றி வங்கியினால் இந்த வெற்றியினை அடைந்திருக்க முடியாது. மாண்புமிகு பிரதமர், நிதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரது குழுவினர், ஏனைய ஒழுங்குவிதிமுறை அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அவர்களது குழுக்கள் மற்றும் தபால் மா அதிபர் மற்றும் தபால் திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளும் ஆண்டு முழுவதும் எங்களுக்கு அரச ஆதரவை வழங்கியுள்ளனர்.

வங்கியினுள்ளும் மற்றும் பரந்த அரச அமைப்புகளுடனுமான தொடர்ச்சியான குழு முயற்சியானது தேசிய சேமிப்பு வங்கி எந்தவொரு நெருக்கடியிலும் உறுதியாக இருப்பதையும், இப்போதும் எதிர்காலத்திலும், அனைத்து இலங்கையர்களும் நம்பியிருக்கும் வங்கியாகத் தொடர்வதை உறுதிப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.



**எம். பி. ஏ. டபிள்யூ. பீரிஸ்**
24 மார்ச் 2022

23

# → எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி – **24**
தொழிற்பாட்டு சூழல் – **26**
இடர்களும் வாய்ப்புக்களும் – **38**
தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு – **50**
ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு – **67**
பொருண்மிய விடயங்கள் – **76**

தொழிற்பாட்டுச் சூழல் பக்கங்கள் 26இலிருந்து 37

நிச்சயமற்ற பூகோள அரசியல் மற்றும் சமூக பொருளாதார சூழல்

**அக்கறையுள்ள தரப்பினர்**

**உள்ளீடுகள்**




**நிதி மூலதனம்**

ஓர் திடமான மூலதனத் தளம் மற்றும் வைப்புக்களை ஏற்கும் மற்றும் கடன்களை வழங்கும் தொழிற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கும் சமப்படுத்தப்பட்ட நிதியிடல் சேர்க்கை

- ரூபா. 7.7 பில். காசு மற்றும் காசுக்கு சமமானவை
- ரூபா. 76 பில் பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்
- ரூபா. 1.4 திரில்லியன் வாடிக்கையாளர் வைப்புக்கள்
- ரூபா. 52.9 பில். நீண்ட மற்றும் குறுங்கால கடன்படுகைகள்

**உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்**

உற்பத்தி மற்றும் உற்பத்திகளின் விநியோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பௌதீக மற்றும் தொழிநுட்பம் உள்ளடங்கலான உட்கட்டமைப்பு

- ரூபா. 15.0 பில். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- ரூபா. 1.3 பில். மூலதனச் செலவுகள்
- பௌதீக தொடுகைப் புள்ளிகள்
- மெய்நிகர் தொடுகைப் புள்ளிகள்/எண்ணியல் வழிகள்
- எண்ணியல் உட்கட்டமைப்பு மீதான முதலீடு

**மனித மூலதனம்**

அர்ப்பணிப்பு மிக்க, வணிக தொழிற்பாடுகள் மீது ஈடுபாடு உடைய மற்றும் உயர் செயற்றிறனுடைய ஊழியர் அணிகள்

- பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி
- சாதகமான வேலைச் சூழ்நிலை
- திடமான தொழில் உறவுமுறைகளை உருவாக்குதல்
- முக்கிய திறன்களை விருத்தி செய்தல் மற்றும் பிற்தொடர்ச்சி திட்டமிடுதல்
- செயற்றிறன் மற்றும் திறமையை முகாமை செய்தல்
- சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அறிமுகப்படுத்துதல்

**சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்**

சமுதாயம் உட்பட பல்வேறு வகையான அக்கறையுள்ள தரப்பினர்களுடனான ஒத்துழைப்பு மிக்க உறவுமுறை

- நீண்டகால வாடிக்கையாளர் உறவுமுறை
- கட்டமைக்கப்பட்ட ஊழியர் ஈடுபாடு
- அரசு மற்றும் ஒழுங்குபடுத்துனர்களுடனான சாதகமான உறவுநிலை
- ஊடகம் மற்றும் சமூகத்துடனான ஈடுபாடு
- வணிகப் பங்காளர்கள் மற்றும் வழங்குநர்களுடன் கூட்டாகச் செயற்படுதல்
- பல்வேறுபட்ட நடவடிக்கைகளினூடாக சமூக ஈடுபாடு

**புலமைசார் மூலதனம்**

மொத்த மூலதனத்தின் கட்புலனாக சொத்துகளுக்கு உச்சமாக விளங்குவதுடன் வங்கியின் உள்ளார்ந்த இயலுமை மற்றும் பரந்த அறிவைக் கொண்டிருத்தல்

- ஒருங்கிணைக்கப்பட்ட வியாபார தந்திரோபாயம்
- சிறந்த ஆளுகை நடைமுறை
- தந்திரோபாய நிர்ணயம் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளை நிறைவேற்றுவதில் விரைவான அணுகுமுறை
- தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்தை பயன்படுத்துதல்
- கூட்டாண்மைக் கலாச்சாரம்

**இயற்கை மூலதனம்**

சக்தி, நீர் மற்றும் கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளடங்கலான சூழலியல் முறைமை மற்றும் இயற்கை மூலதனத்தின் எமது இருப்பு

- நீர், காற்று, நிலம் மற்றும் தாதுக்கள் போன்ற வரையறுக்கப்பட்ட வளங்களில் தங்கியிருத்தல்
- உயிர் பல்வகைத்தன்மை மற்றும் சூழலியல் முறைமை

மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள்

பிரசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021 →

கொவிட் 19 ன் சமூக பொருளாதார தாக்கங்கள்

அதிகரித்த ஒழுங்குமுறை நுண்ணாய்வு

தகர்க்கின்ற தொழிநுட்பங்கள் மற்றும் போட்டித்தன்மை




### வெளியீடுகள்

**உற்பத்திகள்**
( பக்கம் 11)

**i. வைப்புக்கள்**
(15.5% வருடாந்த வளர்ச்சி)
சேமிப்பு வைப்புக்கள்
தவணை வைப்புக்கள்

**ii. கடன் வழங்கல் உற்பத்திகள்**
(17.8% வருடாந்த வளர்ச்சி)

**சில்லறை கடன் வழங்கல்**
தனிப்பட்ட கடன்கள்
வீடமைப்புக் கடன்கள்
அடகு முற்பணங்கள்
வாகனக் கடன்கள்
வைப்புகளுக்கு எதிரான கடன்கள்

**கூட்டாண்மைக் கடன்வழங்கல்**
நிதி நிறுவனங்களுக்கான நேரடிக் கடன் வழங்கல்
கடன் ஒருங்கிணைப்பு
செயற்றிட்டக் கடன் வழங்கல்
கொவிட்-19 ஆதரவுக் கடன் வழங்கல்

**சேவைகள்**
(பக்கம் 11)
உள்முக மற்றும் வெளிநோக்கிய மாற்றல்கள்
வர்த்தக நிதி

**பெறுமதி கூட்டிய சேவைகள்**
அட்டைச் சேவைகள்
பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவுகள்
"NSB Pay" செயலி

**சூழலியல் நிலைபேறுதன்மை**
(பக்கம் 469 இலிருந்து 472வரை)

மூலப்பிரமாணங்களுக்கு அமைவான GRI உள்ளடக்கச் சுட்டி

| வெளிவரு விளைவுகள் | உருவாக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட நிலைத்திருக்கும் பெறுமதி | | நிலைபேற்று அபிவிருத்தி இலக்குகள் மீதான தாக்கம் |
|---|---|---|---|
| • ரூ 28.4 பில்லியன் வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்<br>• ரூ 22.1 பில்லியன் வரிக்குப் பின் இலாபம்<br>• ரூபா 13.7 பில்லியன் நிறுத்திவைத்த உழைப்பு<br>• ரூபா 834.1 பில்லியன் அரச பிணையங்களின் தொகுதி<br>• ரூபா 3.5 பில்லியன் பங்கு இலாப செலுத்தல்<br>• ரூபா 16.5 பில்லியன் அரசாங்கத்திற்கான பங்களிப்பு | பின்வருவனவற்றுக்கான நிதியியல் வருமானங்கள்:<br>• வங்கி<br>• பங்குதாரர்கள்<br>• மூலதன வழங்குநர்கள் | பின்வருவனவற்றுக்கு உருவாக்கப்பட்ட பொருளியல் பெறுமதி:<br>• பரந்துபட்ட அக்கறைதாரர்கள்<br>• இலங்கை பொருளாதாரம் | 8, 9, 10 |
| • 27,204 புதிய இணைய வங்கி வாடிக்கையாளர்கள்<br>• 261 கிளை வலையமைப்பு<br>• 292 தானியங்கு கூற்று இயந்திரங்கள்<br>• 92 காசு மீள்சுழற்சி இயந்திரங்கள்<br>• 4,064 தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள்<br>• தகவல் தொடர்பாடல் மற்றும் தொழினுட்ப முறைமைகள், எண்ணியல் தளங்கள், மற்றும் க்ளவுட் சேவைகள் | • சுயசேவை வழிகளினூடாக பெறுமதி முன்மொழிவுகள்<br>• பெறுமதிச் சங்கிலி முழுவதும் எண்ணியல் நிலைமாற்றம்<br>• வியாபாரத் தொடர்ச்சி<br>• எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பின் நம்பகத்தன்மை | • தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் மேம்பட்ட செயற்றிறன்<br>• வாடிக்கையாளர் தேவைகளை வசதியான வங்கியியல் சேவைகளினூடாக நிதியியல் பொருட்கள் சேவைகளை அணுகுதலை மேம்படுத்தல் | 7, 10, 11, 12, 13 |
| • 140 தொழில்தகைமை திறன் வாய்ந்த ஊழியர்கள்<br>• 98.6% உயர் தக்கவைத்தல் வீதம்<br>• 4,616 ஊக்குவிக்கப்பட்ட மற்றும் ஈடுபாடு கொண்ட ஊழியர்கள்<br>• 42,553 பயற்சி மணித்தியாலங்கள்<br>• 99.7% பிரசவ விடுமுறையின் பின் திரும்பல்<br>• 54% பெண் ஊழியர்கள் (மொத்தம்) | ஊக்குவிக்கப்பட்ட மற்றும் ஈடுபாடு கொண்ட ஊழியர்களாவர்:<br>• எமது வணிக செயலாற்றுகையை வெற்றிகரமாக இயக்குவதற்கு, எமது வாடிக்கையாளர்களை புரிந்து கொள்ளல் மற்றும் சேவை வழங்குவதற்கான எமது இயலுமையை மேம்படுத்துதல்.<br>• எமது நிறுவனம் இலக்குகளை அடைந்து கொள்ளுதல் மற்றும் எமது அக்கறைதாரர்களுக்கான பெறுமதியை உருவாக்குவதற்கான எமது தந்திரோபாயங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தல். | • எதிர்பாரத நிகழ்வுகள் இடம்பெறும், மாறிவரும் மற்றும் எதிர்வு கூறமுடியாததான சூழலின் அழுத்தங்களின் கீழ் பெறுமதியை உருவாக்குதல்.<br>• இலங்கையர்களுக்கான நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்பை உருவாக்குதல். | 1, 2, 4, 5, 8, 10 |
| • 21.8 மில்லியன் வாடிக்கையாளர் கணக்குகள்<br>• 100% உள்நாட்டு வேலைவாய்ப்பு<br>• ரூபா 16.5 பில்லியன் அரசாங்கத்திற்கான பங்களிப்பு<br>• தொழிலாளர் சங்கங்களுடனான கூட்டுபேரம் பேசல் உடன்படிக்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியமை | • சமூகத்தின் அனுமதியைப் பேணுதல்.<br>• நிதி உள்ளடக்கம்.<br>• நீதி, வெளிப்படைத்தன்மை மற்றும் விழுமிய முகாமைத்துவ முறைமை.<br>• நிதி மற்றும் நடுநிலையான கேள்விச் செயன்முறை. | • வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சேவை விநியோகம் தொடர்பில் வாடிக்கையாளர் எதிர்பார்ப்பை விட அதிகமாக வழங்குதல். | 1, 3, 4, 9, 10, 11, 12 |
| • PCI DSS இணக்கப்பாட்டை அடைந்து கொண்ட ஒரேயொரு அரச வங்கி<br>• சர்வதேச நியமங்கள் மற்றும் அடுத்த தலைமுறை அம்சங்களுக்கு இணக்கமான முறையில் இடர் நிகழ்வுத் துலங்கல் இயலுமைகளைப் பேணும் வகையில் தகவல் பாதுகாப்பு பிரிவு மற்றும் ஒரு மூன்றாம் தரப்பு நிர்வாகத்தின் கீழ், 24/7 பாதுகாப்பு செயற்பாட்டு மையம் (SOC)<br>• இலங்கை மத்திய வங்கியின் "தொழிநுட்ப இடர் மீளெழுச்சிக்கான வழிகாட்டல்" முன்விபரணத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான அனைத்து பெறுபேற்று இலக்குகளையும் எட்டியுள்ளது<br>• கைத் தொலைபேசி செயலி<br>• ஒரு முன்னணி வழங்குநரால் மனித வள தகவல் முறைமை அமுலாக்கப் பட்டது<br>• விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் | • வலுவான வர்த்தகநாம நிலை.<br>• தொடர்ச்சியாக AAA கடன் தரப்படுத்தலை பேணுதல்.<br>• வைப்புக்களுக்கும் அவற்றின் மீதான வட்டிக்கும் 100% அரசாங்க உத்தரவாதம்.<br>• பரந்துபட்ட தனித்துவமான பொருட்கள் மற்றும் சேவைகள். | • நிதி உள்ளடக்கம் | 8, 9, 10, 16 |
| • 33,539 புது சக்தி நுகர்வு<br>• 88,986 கன மீட்டர் நீர் நுகர்வு<br>• ரூபா 3.8 மில் சுற்றுச் சூழல் கடன்கள் வழங்கப்பட்டது<br>• 42 கிளைகள் / வலயங்கள் சூரிய சக்திக்கு மாற்றப்பட்டன | • குறைந்த காபன் வழித்தடம் கொண்ட வணிகத் தொழிற்பாடுகள்.<br>• நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைய இலங்கை அரசுக்கு ஆதரவளித்தல்.<br>• பொறுப்புணர்வுடனான நுகர்வு மற்றும் கடன் வழங்கல். | • பசுமை மற்றும் சக்தி வினைத்திறன் தொடர்பில் முன்னெடுப்புக்கள்<br>• விரைவான எண்ணியாக்கம். | 6, 7, 11, 12, 13 |

மக்கள் தொகைசார் கட்டமைப்பில் மாற்றங்கள்

காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறுதன்மை

## எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க வியாபார மாதிரி





# தொழிற்பாட்டு சூழல்

### பூகோளப் பொருளாதாரம்

#### பூகோள பொருளாதார பூகோள வளர்ச்சி

ஜனவரி 2022 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் (WEO) படி, உலகளாவிய வளர்ச்சி 2021 இல் 5.9% இலிருந்து தொடர்ச்சியான கோவிட்-19 பரம்பல்கள், குறைவடைந்த நிதிசார் ஆதரவு மற்றும் நீடித்த வழங்கல் சங்கிலித் தடைகளின் விளைவாக 2022 இல் 4.4% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகளாவிய பொருளியல் கண்ணோட்டத்தினால் (WEO) அக்டோபர் 2021 கணிக்கப்பட்டதை விட 2022 இல் அரை சதவீதம் குறைவாக இருப்பதுடன், அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரண்டு பெரிய பொருளாதாரங்களில் கணிக்கப்பட்ட முக்கிய தரவுகளைப் பிரதிபலிக்கின்றது. மேலும், 2023ல் உலகளாவிய வளர்ச்சி 3.8% ஆக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரைபடம் 1

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி




A – பூகோளப் பொருளாதாரம்
B – மேம்பட்ட பொருளாதாரங்கள்
C – ஐக்கிய அமெரிக்கா
D – ஐரோப்பிய பிராந்தியம்
E – உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முக பொருளாதாரங்கள்
F – உருவாகும் மற்றும் வளர்முக ஆசியா
G – சீனா
H – இந்தியா

மூலம்: உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் இற்றைப்படுத்தல் - ஜனவரி 2022, சர்வதேச நாணய நிதியம்

#### உலகப் பொருளாதாரம் - பிராந்திய வாய்ப்புகள்

ஐக்கிய **அமெரிக்காவில்** மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020 இல் காணப்பட்ட 3.4% சுருக்கத்திற்குப் பிறகு 2021 இல் 5.5% ஆக அதிகரித்தது. இருப்பினும், தற்போதைய வழங்கல் சங்கிலி சீர்குலைவுகள் மற்றும் சில பிராந்தியங்களில் கோவிட்-19 இன் தொடர்ச்சியான பரவல் ஆகியவற்றுக்கு மத்தியில் கோடையில் பொருளாதார மீட்சியின் வேகம் குறைவடைந்தது. பொருளாதார மீள் கட்டுமான நிதிக் கொள்கைப் பொதியை அடிப்படையிலிருந்து நீக்குதல், பணவசதியை முன்கூட்டியே திரும்பப் பெறுதல் மற்றும் தொடர் விநியோகப் பற்றாக்குறை போன்றவற்றின் அடிப்படையில் திருத்தப்பட்ட அனுமானத்தின் அடிப்படையில் மேலும் 1.2% கீழ்நோக்கிய திருத்தம் பிரயோகிக்கப்பட்டது.

தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை விட வேலை வாய்ப்புகள் மிகக் குறைவாக இருந்தாலும், 2021 டிசம்பரில் வேலையின்மை விகிதம் முன்னைய ஆண்டில் 6.7% ஆக இருந்து ஊழியச் சந்தைகள் தொடர்ந்து மேம்பட்டு வரும் வேளையில் 3.9% ஆக வீழ்ச்சியடைந்து உள்ளது. 2021 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் பொருட்களுக்கான நுகர்வோர் செலவினம் உயர்ந்த மட்டத்தில் இருந்து குறைந்துள்ளது, ஆனால் செலவுகள் வணிகப் பொருட்களில் இருந்து விலகி ஓய்வு மற்றும் சுற்றுலாத் துறைசார் சேவைகளை நோக்கித் திரும்புவதால் சேவைகள் மீதான செலவு அதிகரித்துள்ளது.

வைரஸ் அச்சுறுத்தல் தொடர்ந்து குறைந்து வருவதால், வழக்கத்துக்கு மாறான அரசாங்க வருமான மாற்றல்கள் காரணமாக, வீட்டுத் துறையின் செலவினங்களில் மேலும் மீட்பிற்கு வழிவகுக்கும் வகையில் கணிசமான சேமிப்புத் திரட்டப்பட்டுள்ளது. பொருளாதாரம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதால் நுகர்வோர் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளது. உயர்ந்த வணிக உள்ளீட்டுச் செலவுகள் மற்றும் வீட்டுத் துறையின் கேள்வியில் எதிர்பார்க்கப்படும் மேலதிக வளர்ச்சி ஆகியவை, பணவீக்க வளர்ச்சியானது, தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளுக்கு மேல் எதிர்பார்த்ததை விட நீண்ட காலத்திற்கு நீடிக்கும் இடரை அதிகரிக்கிறது. சமஸ்டி ஒதுக்கங்கள் (Federal Reserve) பொருளாதார மந்தநிலை முழுமையாக உள்வாங்கப்பட்டு ஊழிய சந்தை மீண்டு வரும் வரை அசாதாரண கொள்கை ஆதரவைப் பேண உறுதி பூண்டுள்ளது. 2022 நாட்காட்டி ஆண்டில் வட்டி விகிதங்களை உயர்த்துவதற்கான செயன்முறையை மத்திய வங்கி ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பாவில், 2020 ஆம் ஆண்டில் 6.5% வீழ்ச்சியைத் தொடர்ந்து, உறுப்பு நாடுகளில் உள்ள பெரும்பாலான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நீக்கப்பட்டதன் மத்தியில், மொத்த உள்நாட்டு உற்பத்தி 2021 இல் 5.2% உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவில், பூச்சிய சகிப்புத்தன்மை மிக்க கொவிட்-19 கொள்கை மற்றும் ஆதன சொத்து விருத்தியாளர்களுக்கு இடையிலான அபரிதமான நிதிசார் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் விளைந்த கட்டுமானத் துறையில் ஏற்பட்ட இடர்பாடுகள் ஒரு பரந்துபட்ட அளவிலான மெதுவான நகர்வுக்கு ஆரம்ப குறிகாட்டியாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கும் மேலாக, அதன் தனியார்துறை நுகர்வானது நகர்வுக்கான வரையறைகள் மற்றும் நிர்மாணத் துறையில் வேலைவாய்ப்பு தொடர்பாக இழக்கப்பட்டுவரும் வாய்ப்புகள் ஆகியவற்றின் காரணமாக எதிர்பார்த்ததை விட குறைந்ததாக இருக்கும் என எதிர்வு கூறப்படுகிறது. இந்த காரணிகளுடன், ஆதன சொத்துத் முறையில் குறைந்து செல்லும் முதலீடும், 2022 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்த்த வளர்ச்சியை 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பூகோள வளர்ச்சியை 0.8% ஆக குறைத்து, 4.8% ஆக சீனாவை மாற்றியுள்ளது.

பிராந்திய ரீதியாக, கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் தவிர, 2022-23 இல் பெரும்பாலான வளர்முக சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள் (EMDE) பிராந்தியங்களின் வளர்ச்சி, தொற்றுநோய்க்கு முந்தைய தசாப்தத்தில் காணப்பட்ட சராசரி விகிதங்களுக்குத் திரும்பும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வருடாந்த வெளியீடு அனைத்து EMDE பிராந்தியங்களிலும் தொற்றுநோய்க்கு முந்தைய போக்கைக் காட்டிலும் குறைவாகவே எதிர்வு கூறப்பட்டுள்ளது, இது பிராந்தியங்கள் முழுவதும் மற்றும் பகுதிகளுக்குள் சீரற்ற மீட்சியின் வேகத்தை சுட்டிக் காட்டும் வகையில், காணப்படும் இடைவெளி இல்லாதுபோகும் என்று கணிக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள எதிர்பார்ப்புடன் முரண்பாடான எதிர்வுகூறலாகக் காணப்படுகிறது.

தலா நபர் அடிப்படையில், சுற்றுலா சார்ந்த தீவுப் பொருளாதாரங்கள் போன்ற 2020 ஆம் ஆண்டில் ஆழமான வீழ்ச்சியினை அனுபவித்த பொருளாதாரங்களை மீட்சியானது பெரும்பாலும் பின்னோக்கி விட்டுச் செல்லும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது. ஜனவரி 2022 பூகோள பொருளாதார வாய்ப்புகள் முற்துணிவதன் படியாக, கிழக்கு ஆசியா, பசிபிக், லத்தீன் அமெரிக்கா, கரீபியன், மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும் உப-சஹாரா ஆப்பிரிக்க பிராந்தியங்கள் மற்றும் ஐந்தில் இரண்டு பங்கு பொருளாதாரங்களில் பாதி அல்லது அதற்கு மேற்பட்ட பொருளாதாரங்களின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவு 2023 ஆண்டளவில் 2019 இன் தலா தேசிய உள்நாட்டு உற்பத்தியிலும் குறைவாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

### பூகோளப் பொருளாதாரம் - கண்ணோட்டம்

தொற்றுநோய் அதன் மூன்றாவது ஆண்டிலும் தொடர்வதால், பயனுறுதி மிக்க பூகோள சுகாதார தந்திரோபாயம் அவசியமாகும். மேலும் கொவிட்-19 இன் மாறுபாடுகளின் ஆபத்தைக் குறைக்க தடுப்பூசிகளின் உற்பத்தி, சிறந்த விநியோக முறைகள் மற்றும் நியாயமான பகிர்வு முறை ஆகியவை உலகிற்குத் தேவையான உள்ளன. காலநிலை மாற்றம் தொடர்ந்து உலகப் பொருளாதாரத்திற்கு பெரும் அபாயங்களை ஏற்படுத்துவதுடன், அதன் மீட்சி மற்றும் 2021 முழுவதும் வெள்ளம், வரட்சி மற்றும் காட்டுத் தீ போன்றவற்றின் தொடர்ச்சித் தன்மையும் அதிகரிக்கும் ஆபத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அபிவிருத்தி அடைந்த மற்றும் வளர்முக நாடுகளில் உள்ள பொருளாதாரங்கள், உலகளாவிய வழங்கல் சங்கிலியில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும் பெரிய இயற்கை பேரழிவுகளின் சாத்தியக்கூறுகளால் அச்சுறுத்தப்படுகின்றன. குறைந்த வருமானம் மற்றும் குறைந்த தடுப்பூசி வளமுள்ள நாடுகள் இதன் தாக்கத்தைப் பாரிய அளவில் எதிர்கொள்ளும்.

உக்ரேனில் நடந்து கொண்டிருக்கும் போரின் தாக்கம் மற்றைய நாடுகளிலும் உலகப் பொருளாதாரம் மற்றும் நிதிச் சந்தைகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் பிற நாடுகளால் ரஸ்யா மீது விதிக்கப்பட்ட இது தொடர்பான பொருளாதாரத் தடைகள் ஏற்கனவே அதிகரித்துப் போயுள்ள விலைமட்டங்களின் அழுத்தங்களுக்கு மேலதிகமாக பணவீக்கம் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் ஆகிய இரண்டிற்கும் பாதகமான அதிர்வினை உருவாக்கும். கனிய எண்ணெய், எரிவாயு மற்றும் மூலப் பொருட்கள் போன்ற பொருட்களின் விலைகளில் இந்தப் போர் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும். உலகப் பொருளாதாரம் தொற்று நோயிலிருந்து மீண்டு வருகையில், இந்த நெருக்கடியானது கொள்கைப் பரப்பை மேலும் சிக்கலாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இலங்கைப் பொருளாதாரம் - மேற்தளப் பார்வை

இலங்கைப் பொருளாதாரம் 2020 இல் 3.6% சுருக்கத்தில் இருந்து மீண்டு 2021 இல் 3.7% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பதிவு செய்தது. பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சிக்கு மத்தியில் 2021 இன் முதலாம் காலாண்டு மற்றும் இரண்டாம் காலாண்டு ஆகியவற்றின் போது முறையே 4.2% மற்றும் 12.4% பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது. இருப்பினும், கொவிட்-19 இன் மூன்றாவது அலை அதிகரித்து வரும் உள்ளீட்டு விலைகளுடன் இணைந்த வகையில் வளர்ச்சி வேகத்தைக் குறைத்து மூன்றாம் காலாண்டில் 1.5% சுருக்கத்தினை விளைவாகக் காட்டியது. தொற்றுநோயால் ஏற்படுத்தப்பட்ட முடக்கங்கள் நீக்கப்பட்டமை மற்றும் விரைவான தடுப்பூசி ஏற்றல் செயற்றிட்டம் ஆகியவற்றின் வெளிப்பாடாக பொருளாதார நடவடிக்கைகள் ஊக்கமடைந்து 2021 இன் நான்காம் காலாண்டில் 1.8% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை ஏற்படுத்தியது.

இரசாயன உர இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஏற்பட்ட வழங்கல் தட்டுப்பாடு காரணமாக விவசாயத் துறையானது நான்காம் காலாண்டில் சுருக்கமடைந்து இருக்கலாம். கொள்வனவு முகாமையாளர்கள் குறியீட்டின் (PMI) தொடர்ச்சியான வளர்ச்சியானது, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், துறைமுக நெருக்கடிகள், மூலப் பொருள் தட்டுப்பாடுகள் மற்றும் நாணயக் கடிதங்களைத் திறப்பதில் உள்ள இடர்பாடுகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் உயர்ந்த தொழிற்துறை செயல்பாடுகளை பிரதிபலிக்கிறது. குறைந்த பாதிப்புக்குள்ளான சேவைத் துறை பரந்த அளவில் சீராக இருந்திருப்பதாக உணரப்படுகிறது.

### இலங்கைப் பொருளாதாரம் - புறநோக்கு

முடக்கங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் பாரியளவிலான கவலைகளை உருவாக்கும் பிற விளைவுகள் ஆகியவற்றின் காரணமாக, இலங்கை தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இது ஏற்கனவே இருக்கும் பொருளாதார சவால்களுக்கு குறிப்பிடத்தக்க சிரமங்களை ஏற்படுத்தியதுடன், அதிக வெளிநாட்டுக் கடன் மற்றும் பாதீட்டுப் பற்றாக்குறை ஆகிய முக்கியமான கருதுபொருட்களில் கடுமையான இடர்பாடுகளை உருவாக்கின. இதன் விளைவுகள் ஏற்கனவே சவாலான தளத்தில் இருப்பதுடன் தற்போதுள்ள அடிப்படைகள் குறுகிய கால மாற்றத்திற்கு போதுமான ஆதரவை வழங்காது இருப்பதன் காரணமாக இதன் தாக்கங்கள் நடுத்தர காலம் வரை உணரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொவிட்-19 இன் ஓமிக்ரோன் மாறுபாட்டில் ஏற்பட்ட பின்னடைவு, வலுவான தடுப்பூசி ஏற்றல், சுற்றுலாத் துறையின் புத்துயிர்ப்பு போன்றவற்றால் பொருளாதார வளர்ச்சி பல முக்கிய காரணிகளால் இயக்கப்படும். உணவு, எரிபொருள் மற்றும் பொருட்களின் விலை உயர்வு, அதிகரித்த இறக்குமதி விலைகள், வழங்கல் சங்கிலி இடையூறுகள், அந்நியச் செலாவணி அழுத்தத்திலிருந்து உருவாகும் பற்றாக்குறை, கேள்விப் பக்க அழுத்தங்கள், நாணய மாற்று வீதத் தேய்வு ஆகியன 2022ல் பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கும். அதிகரித்த பணவீக்கத்துடன், அடிப்படையான பேரினப் பொருளாதாரப் பலவீனங்கள், தொற்றுநோயின் நீடித்த தாக்கங்கள், சக்தி வளப் பற்றாக்குறை, பாரிய வெளிவாரி நிதியீட்டத் தேவைப்பாடுகள் மற்றும் பிற புற அதிர்ச்சிகள் ஆகியவை பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு எதிர்மறையான இடர்களை ஏற்படுத்துகின்றன. 2022 ஆம் ஆண்டில் உயர்ந்து நிற்கும் சவாலான பேரினப் பொருளாதார நிலைமைகள் ஆண்டு முழுவதும் பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் அதே வேளையில், வெளிநாட்டு நிதி நாட்டிற்கு வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டால் நிலைமை மேம்பட வாய்ப்புக்கள் உண்டு.

உக்ரைனில் இடம்பெறும் சமீபத்திய போர் வழங்கல் சங்கிலித் தடங்கல்கள் மற்றும் பொருட்களின் விலை உயர்வு, அத்துடன் உள்நாட்டளவில், குறிப்பாக மின்சாரம் மற்றும் விநியோகத் தடைகள் போன்றவற்றில் மேலும் சவால்களை உருவாக்கும். இந்த இடையூறுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வது, தடையற்ற உள்நாட்டு உற்பத்தியைத் தொடர்வதையும், ஏற்றுமதியில் வேகத்தை அதிகரிப்பதையும் உறுதி செய்வதோடு, நன்கு இலக்கு வைக்கப்பட்ட அபிவிருத்திக் வளர்ச்சிக் கொள்கைகள் மூலம் உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முயற்சிகளையும் உறுதி செய்ய வேண்டும். ரஸ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்குமான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகள், மொத்த ஏற்றுமதியில் 1.4% க்கு சமமாக இருந்ததுடன் முக்கிய ஏற்றுமதியான தேயிலை, இலங்கையில் இருந்து இந்த இரண்டு நாடுகளுக்கும் இலங்கையின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 10.2% ஆகும். இலங்கையின் மொத்த இறக்குமதியில் ரஸ்யா மற்றும் உக்ரேனில் இருந்தான மொத்த இறக்குமதிகள் 1.4% ஆகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வருடாந்த முதன்மையான பொருளாதார வெளியீடு, இலங்கையின் பொருளாதாரம் அதிக கடன், குறைந்த வெளிநாட்டு நாணய இருப்புக்கள் மற்றும் பணவீக்க அழுத்தங்களால் எழும் பெரும் பொருளாதார சவால்களுடன் சிக்கியுள்ள நிலையில், கொரோனா வைரஸ் நோய் (கொவிட்-19) தொற்று நோயிலிருந்து ஒரு முடக்கப்பட்ட மீட்சியை எதிர்வு கூறுகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2022 இல் 2.4% ஆக குறையும் எனவும் 2023 இல் 2.5% ஆக சிறிதளவு மேம்படும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.

## தொழிற்பாட்டு சூழல்

### வங்கித் தொழிற் துறை இலாபத்தன்மை

வங்கித் துறையின் நிகர வட்டி வருமானம் 2020 இன் ரூபா 427.2 பில்லியன் வருமானத்துடன் ஒப்பிடும் போது 28.5% அதிகரித்து, ரூபா 548.9 பில்லியனைப் பதிவு செய்தது. 2021 இன் போது 3.2% என்னும் சிறிய அதிகரிப்பினால் ரூபா 1,198.3 பில்லியனாக வட்டி வருமானத்தில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்ட போதும், இது முக்கியமாக வட்டி செலவினங்களில் ஏற்பட்ட 11.5% வீழ்ச்சியினால் ரூபா 649.3 பில்லியனாகக் காணப்பட்ட கணிசமான குறைவினால் ஏற்பட்டதாகும். நிகர வட்டி எல்லை (NIM) 2020 இல் 3.1% இலிருந்து 2021 இறுதியில் 3.4% ஆக மேம்பட்டது. வட்டி அல்லாத வருமானமும் 2020 தொடர்புடைய காலப்பகுதியில் ரூபா 141.9 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 இல் 17.4% அதிகரித்து ரூபா 166.6 பில்லியனை அடைந்தது. இதற்குப் பெரும்பாலும் பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சி மற்றும் அந்நிய செலாவணி வருமானத்தில் ஏற்பட்ட 47.1% அதிகரிப்பு ஆகியனவே காரணமாகும். 2020 இல் 51.8% ஆகக் காணப்பட்ட வினைத்திறன் வீதம் 2021 இல் 48.1% ஆக உயர்ந்தமை எண்ணியலாக்கத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட வினைத்திறனைப் பிரதிபலிக்கிறது.

குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட கட்டண வருமானம் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் ஆகியவற்றால் தூண்டப்பட்ட குறைந்த வட்டி செலவினங்களால் வங்கித் துறை கவர்ச்சிகரமான இலாபத்தைப் பதிவு செய்தது. 2021 ஆம் ஆண்டிற்கான வரிக்குப் பின்னான இலாபம் கணிசமாக 46.0% என்னும் அளவினால் அதிகரித்து 2020 இல் ரூபா 198.4 பில்லியனில் இருந்து ரூபா 135.9 பில்லியனாக வளர்ச்சி அடைந்தது. வங்கித் துறையின் இலாபத்தின் எழுச்சியானது சொத்துகளின் மீதான திரும்பல் (ROA) மற்றும் உரிமையாண்மை மீதான திரும்பல் (ROE) ஆகியவற்றில் பிரதிபலிக்கப்படுகிறது. வங்கித் துறையின் சொத்துக்களின் மீதான திரும்பல் (வரிக்குப் பின்) 2020 இல் 1.0% இல் இருந்து 2021 இல் 1.2% ஆக மேம்பட்டு இருக்க, உரிமையாண்மை மீதான திரும்பல் 2020 இல் 11.4% இலிருந்து 2021 இல் 14.5% ஆக மேம்பட்டது.

#### நிதி நிலைமை

2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடி, வங்கித் துறையானது 24 உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (LCB) மற்றும் 6 உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (LSB) ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. வங்கித் துறையின் மொத்த சொத்துத் தளம் 2020 இன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 14.7 திரில்லியனில் இருந்து 15.4% வளர்ச்சியைப் பதிவு செய்து 2021 இன் இறுதியில் ரூபா 16.9 திரில்லியனாக அறிக்கையிடப்பட்டுள்ளது. சொத்து வளர்ச்சி முக்கியமாக கடன்கள் மற்றும் முன்பணங்களுடன் முதலீடுகளின் விரிவாக்கத்தால் உந்தப்பட்டு இருந்தது.

வங்கித் துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறைந்த வட்டி வீதத்தின் செல்வாக்கினால் ஆதரவளிக்கப்பட்ட வகையில் 2020 இன் தொடர்புடைய காலத்திற்கு பதிவு செய்யப்பட்ட ரூ. 9.0 பில்லியன் பெறுமதியில் இருந்து 15.3% அதிகரித்து ரூபா 10.5 பில்லியன் என 2021 பதிவு செய்யப்பட்டது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் கடன் தரம் குறித்து வங்கிகள் எடுத்துள்ள விவேகமான அணுகுமுறையின் காரணமாக, மொத்தத் தொழிற்படாக் கடன்கள் (NPL) விகிதம் 2020 டிசம்பரில் 4.9% இலிருந்து 2021 இல் 4.5% ஆக ஓரளவு மேம்பட்டது. எவ்வாறாயினும், "இழப்பு" என்னும் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தொழிற்படாக் கடன்களின் (72.9%) அதிகரித்த பங்கின் காரணமாக, முந்தைய ஒப்பிடக்கூடிய காலகட்டத்தில் காணப்பட்ட 51.7% க்கு எதிராக டிசம்பர் 2021 நிலவரப்படி நிகர தொழிற்படாக் கடன்களுக்கான விசேட ஒதுக்கீடு 64.0% ஆக அதிகரித்துள்ளமை கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மொத்த சொத்துக்களில் 74.9% ஆக இருந்த வங்கித் துறையின் மொத்த வைப்புத்தொகை 2021 ஆம் ஆண்டில் 13.7% வளர்ச்சியைப் பதிவு செய்து டிசம்பர் 2020 இல் பதிவுசெய்யப்பட்ட ரூபா 11.1 திரில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 இல் ரூபா 12.7 திரில்லியனாக உயர்வடைந்தது. மொத்த வைப்புத்தொகையின் விகிதமாகக் கடன்கள், கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் பதிவாகியிருந்த 81.6% உடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 82.7% ஆக உயர்வடைந்துள்ளது.

#### ஸ்திரத்தன்மை

உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான (D-SIB) மூலதனப் பாதுகாப்பு எல்லையை (CCB) 100 அடிப்படைப் புள்ளிகள் வரையும் D-SIB அல்லாத வங்கிகளுக்கு 50 அடிப்படைப் புள்ளிகளாலும் தளர்வு வழங்கப்பட்ட சூழலிலும் சவாலான பேரினப் பொருளாதாரச் சூழல் நிலைமைகளின் மத்தியிலும், வங்கித் துறையானது ஒழுங்குமுறை குறைந்தபட்சத் தேவைப்பாட்டை விட அதிகமாக இருந்த ஆரோக்கியமான மூலதனப் போதுகை அளவு விகிதங்களால் (CAR) மீளெழுச்சித் தன்மையுடன் காணப்பட்டிருந்தது. வங்கித் துறையின் மூலதனப் பாதுகாப்பு எல்லையை உள்ளடக்கிய மொத்த மூலதனப் போதுகை விகிதம் மற்றும் மட்டம் 1 மூலதன விகிதம் 2020 இல் முறையே 16.55% மற்றும் 13.15% ஆகக் காணப்பட்டு இருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் சிறிய அதிகரிப்புடன் இது முறையே 16.51% மற்றும் 13.04% ஆக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் வங்கித் துறை ஆரோக்கியமான திரவத்தன்மை நிலைகளுடன் தொடர்ந்ததுடன் திரவத்தன்மை இடருக்கு எதிராக அதிக மீளெழுச்சித் தன்மையை வெளிப்படுத்தியது. வங்கித் துறையின் உள்நாட்டு வங்கி அலகுகளின் (DBU) வைப்பு மற்றும் கடன்களுக்கு எதிரான திரவ சொத்துக்களின் போதுமான அளவை அளவிடும் சட்டப்பூர்வ திரவ சொத்து விகிதம் (SLAR) 33.8% ஆகும், இது ஒழுங்குமுறை குறைந்தபட்சத்தை விட அதிகமாகக் காணப்பட்டது.

வங்கித் தொழில் மற்றும் அதன் கண்ணோட்டத்தைப் பாதிக்கும் காரணிகள் இந்த அறிக்கையின் பக்கம் 38 முதல் 49 வரை உள்ள "இடர்கள் மற்றும் வாய்ப்புகள்" பிரிவின் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தொழிற்துறைக்கு எதிராக வங்கியின் பெறுபேறுகள் பக்கம் 96 முதல் 113 வரை நிதி மூலதனத்தின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### இலங்கைப் பொருளாதாரம் மற்றும் வங்கித் துறையில் குறிப்பிட்ட பாரிய பொருளாதார விருத்திகள் மற்றும் தொடர்புடைய தாக்கங்கள்

எதிர்பார்த்ததை விட குறைவான பொருளாதார வளர்ச்சியானது மக்களின் நுகர்வு, முதலீடு மற்றும் கொள்வனவு ஆற்றல் ஆகியவற்றைக் குறைத்து, அதன் விளைவாக குறைவான கடன் மற்றும் வைப்பு வளர்ச்சி ஏற்படுகிறது.

தொழிற்துறைசார் கண்ணோட்டம் பல எதிர்மறையான காரணிகளைக் கொண்டிருந்தாலும், தடுப்பூசித் திட்டம் மற்றும் சுற்றுலா போன்ற நெருக்கடியான துறைகளின் மீட்சியின் ஆதரவுடன் பொருளாதார நிலைமைகள் மேல்நோக்கிச் செல்லும் என்று நம்பப்படுகிறது. மேலும், வங்கிகளின் எண்ணியல் மயமாக்கல் முயற்சிகள் மற்றும் இணையவழித் தளங்களைக் கையாள்வதில் வாடிக்கையாளர்களின் அதிகரித்த விழிப்புணர்வுடன், அதிக வாடிக்கையாளர் தளத்தின் ஆதரவுடன், முன்னோக்கிச் செல்லும் வருமானத்திற்கான செலவு விகிதத்துக்கு உதவும்.

## பணவீக்கம்

### பூகோள சூழ்நிலை

ஐக்கிய அமெரிக்காவில், நுகர்வோர் விலைச் சுட்டி (CPI) 7.0% அளவில் ஏற்கனவே 40 ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாதவாறு மிக உயர்வாக உள்ளது. மையத் தனிநபர் நுகர்வுச் செலவின (PCE) விலைச் சுட்டி – நாட்டின் முக்கிய பணவீக்க அளவீடு நவம்பரில் 4.7% ஐ எட்டியது, இது 1989 க்குப் பின்னான மிக உயர்வான பெறுமதியாக உள்ளது. மேலும் இந்த காலாண்டில் சராசரியாக 4.9% இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கனடாவில் பணவீக்கம் டிசம்பரில் 30 வருட உயர்வான 4.8% வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, அதே சமயம் பிரிட்டனில் பணவீக்கம் டிசம்பரில் 30 வருடத்தின் அதிகபட்சமாக எதிர்பார்க்கப்பட்டதை விட வேகமாக உயர்ந்துள்ளது. வட்டி விகிதங்கள் இன்னும் 0.0-0.25% இல் இருந்தாலும், பணவீக்கம் ஏற்கனவே கணிசமாக உயர்ந்துள்ளது. மேலும் இது ஒரு பொதுவான பிரச்சனையாகும், இதனை உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான மத்திய வங்கிகள் ஐக்கிய அமெரிக்க சமஸ்டி இராச்சியத்துடன் இணைந்து கட்டுப்படுத்தப் போராடி வருகின்றன.

மற்றொரு பெரிய பணவீக்க இயக்கியான உலகளாவிய மசகு எண்ணெய் விலை, பிந்தைய தொற்றுநோய் மீட்பு மற்றும் குறுகிய கால விநியோக இடையூறுகள், குறைந்த இருப்பு மட்டங்கள் ஆகியவற்றால் வலுவான தேவைக்கு மத்தியில் தொடர்ந்து உயர்ந்தது. 2021 ஆம் ஆண்டில் எண்ணெய் விலை 50% உயர்ந்ததுடன் இறுக்கமான உற்பத்தித் திறன் மற்றும் அதிகரித்து வரும் கேள்வி காரணமாக இது ஐஅடொ 100 அளவை நோக்கி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிற முக்கிய பண்டங்களுடன் ஒப்பிடும்போது, 2021 ஆம் ஆண்டில் சக்தி வளம் தொடர்பான பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்து, 2021 இல் மிக உயர்வாகக் காணப்பட்டன. கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து உலகப் பொருளாதார மீட்சியின் ஆரம்ப கட்டத்திலிருந்து அதிகரித்த கேள்வியால் விலை உயர்வுகள் பெரிதும் உந்தப்பட்டன.

மேலும், விவசாயம் மற்றும் நேரடிகையிருப்புடன் தொடர்புடைய பொருட்களின் விலைகள் இதே போன்ற தொழிற்பாட்டுக் காரணிகள் காரணமாக 2021 இல் 23%க்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டதுடன், மேலும் முக்கிய பொருளாதாரங்கள் மீண்டும் திறக்கப்படுதல் மற்றும் ரஸ்ய - உக்ரைன் போரால் ஏற்பட்ட குறுகிய காலம் முதல் நடுத்தர கால வழங்கல் தடைகள் ஆகியவற்றின் காரணமாக 2022 இல் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இலங்கை சூழ்நிலை மீதான தாக்கம்

சமீபத்திய மாதங்களில், இலங்கை கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI) மூலம் அளவிடப்படும் பிரதான பணவீக்கம், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 4-6% ஐத் தாண்டி துரிதப்படுத்தப்பட்டது.

குறைந்த வட்டி விகிதங்கள், இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நிதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பணவீக்க விகிதங்கள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கின. கூடுதலாக, அதிகரித்து வரும் உணவு விலைகள் மற்றும் வழங்கல் இடையூறுகள் காரணமாக உயர்ந்து வரும் உலகளாவிய எண்ணெய் விலைகள், அதிகரித்த கேள்வுக் கட்டணங்களுடன் இணைந்து 2021 இன் முதல் அரையாண்டின் போது செலவுத் தூண்டல் பணவீக்கத்திற்கு வழிவகுத்தது. 2021 இன் இரண்டாவது அரையாண்டில், இரசாயன உரங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தி உணவுப் பொருட்களின் விலை உயர்விற்கு வழிவகுத்தது. மேலும், அதிகரித்து வரும் உலகளாவிய எண்ணெய் விலைகள் எரிபொருள் விலைகளை உயர்த்துவதற்கு வழிவகுத்து, விளைவு மற்றைய பொருட்களுக்கும் பரவியதன் விளைவாக டிசம்பர் 2021 இல் 12.1% (CCPI) செங்குத்தான பணவீக்கம் ஏற்பட்டது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 டிசம்பரில் உணவுப் பணவீக்கம் முன்னைய மாதத்தின் 17.5%

வரைபடம் 2

**இலங்கை சூழ்நிலை மீதான தாக்கம்**




Source: Department of Census and Statistics

உடன் ஒப்பிடுகையில் 22.1% ஆக அதிகரித்துள்ளது. உணவு அல்லாத பொருட்களுக்கான பணவீக்கமும் அதே காலப்பகுதியில் இருந்த 6.4% உடன் ஒப்பிடும்போது 7.5% ஆக அதிகரித்துள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் உலகளாவிய பொருட்களின் விலைகள், குறிப்பாக எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக வழங்கல் பற்றாக்குறை உள்ளிட்ட பல காரணிகளால் பணவீக்க அழுத்தம் தொடர்ந்து அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. மேலும், தொற்றுநோய்க்கு பிந்தைய காலகட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளின் ஊக்கம் மற்றும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு ஆகியவற்றுடன், இது இனிவரும் காலத்தில் கேள்வியை உயர்த்த வாய்ப்புள்ளது.

## பணவீக்கம் (தொடர்)

### வங்கித் துறை மீதான தாக்கம் மற்றும் தொடர்புபட்ட விருத்திகள்

பணவீக்கம் பொதுமக்களின் கொள்வனவு சக்தி, பொது ஊதியம் மற்றும் வங்கித் துறையின் ஒட்டுமொத்த செலவுகளைப் பாதிக்கிறது. இந்தக் காரணிகள் சேமிப்பு மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் குறைந்த இயல்திறன் கொண்டவை. தங்கத்தின் விலை அதிகரிப்பு அடகு வைப்புத் துறையை விரிவுபடுத்தியதுடன் அடகு வணிகத்தின் மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிக்க, அதே நேரத்தில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட மாற்றங்கள் போக்குவரத்து செலவுகளைப் பாதித்தன. மேலும், நடைமுறையில் உள்ள பணவீக்க வீதம் இலங்கை மத்திய வங்கி மேற்கொள்ளும் பணவியல் கொள்கை முடிவுகளை பெருமளவில் தீர்மானிக்க, இதன் மூலம் வங்கித் துறையை நேரடியாகப் பாதிக்கிறது. வட்டி வீதம் அதிகரிக்கும் போது, ஏதேனும் நிதி முதிர்ச்சியின்மை காணப்பட்டால், வைப்புக்களினது விலை கடன் திரட்டை விட முன்னதாக உயர்த்தப்படுகையில், இது நிகர வட்டி எல்லை சுருக்கமடைய வழிவகுக்கும்.

## வட்டி வீதங்கள்

### பூகோள நிலவரம்

**வட்டி வீத உயர்வு**

2021 டிசம்பரில் ஏறக்குறைய 40 ஆண்டுகால உச்சத்தை எட்டிய பொங்கியெழும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்க கூட்டமைப்பு ஒதுக்கு பணவியல் கொள்கையை கடுமையாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அமெரிக்க கூட்டமைப்பு வங்கி வட்டி விகிதங்களை மார்ச் 2022 இல் தொடங்கி 25 அடிப்படை புள்ளிகளால் உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 105 அடிப்படைப் புள்ளி வீத உயர்வுகள் 2022 இறுதிக்குள் நிர்ணயம் செய்யப்படும். ஐக்கிய இராச்சியத்தில், இங்கிலாந்து வங்கி 2021 நாட்காட்டி ஆண்டு முடிவதற்குள் வட்டி விகிதங்களை உயர்த்தத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் ஐரோப்பிய மத்திய வங்கி (ECB) 2022 வரை கொள்கை விகிதங்களை வைத்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், உலகளாவிய பணவீக்கம் தொடர்பில் அதிகரித்து வரும் கவலைகளுக்கு மத்தியில், சீனா உலகளாவிய நாணயக் கொள்கையின் எதிர்த்திசைத் திருப்பத்தை எதிர்த்து இருப்பதுடன், பணவியல் கொள்கை முடிவுகளில் ஒன்றாக வேலை செய்ய முக்கிய நாடுகளை வலியுறுத்தியது. அத்துடன், சீனாவின் மக்கள் சீன வங்கி ஒரு வருட கடன் முதன்மை வீதத்தை 10 அடிப்படை புள்ளிகளால் 3.8% இலிருந்து 3.7% ஆக குறைத்துள்ளது.

**நிதிச் சந்தைகள்**

அரச பிணைப் பத்திர விளைவுத் தொகைகள் குறைவாக இருக்க, 2021 நாட்காட்டியின் பிற்பகுதியில் உலகப் பொருளாதார மீட்சி தொடர்வதால், பணவீக்க விகிதங்கள் அதிகரித்துள்ளன. நேர்க்கணியப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் ஆதரவுடன் பங்குச் சந்தைகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதுடன், மேலும் மசகு எண்ணெய் உட்பட சில மூலப் பொருட்களின் விலைகள் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை விட அதிகமாக அதிகரித்துள்ளன, இது மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் மற்றும் அதிகரித்து வரும் கேள்வியைப் பிரதிபலிக்கிறது. உலகளாவிய நிலையான வருமான முதலீட்டாளர்கள் பல தசாப்த கால உயர் பணவீக்க விகிதங்களை எதிர்த்துப் போராடுவதற்காக உலகின் முன்னணி மத்திய வங்கிகளிடமிருந்து விகித உயர்வு குறித்த எதிர்பார்ப்புகளை எழுப்பியுள்ளனர்.

### இலங்கை சூழ்நிலை மீதான தாக்கம்

**பணவியல் கொள்கையை இறுக்கமாக்குவதன் தாக்கம்**

உலகச் சந்தைகளில் நாணயக் கொள்கையை இறுக்குவது, மூலதன வெளியேற்றம் அதிகரித்து இலங்கை மீது அழுத்தத்தை அதிகரிக்கும். இதன் விளைவாக, அதிகரித்து வரும் வட்டி வீதமும் கடன் வாங்கும் செலவை அதிகரிக்கச் செய்யும், மேலும் இலங்கை தற்போதைய கடன் பெறும் பாதையைத் தொடர்ந்தால், செலவு கணிசமான அளவில் அதிகமாக இருக்கும். கீழே சில முக்கிய கணிப்புகள் தரப்படுகின்றன:

- பணவீக்கம், பணப் பெறுமதியிழப்பு காரணமாக அதிகரித்த எரிபொருள் செலவுகள் மற்றும் மூலப்பொருள் செலவுகள் ஆகியவற்றின் விளைவாக, பணவீக்கம் உயர, அதன் விளைவாக உணவுப் பற்றாக்குறை அதிகரிக்கும்.
- உலகளாவிய சூழலின் காரணமாக உள்நாட்டு வட்டி விகிதங்கள் உச்ச நிலைகளுக்கு அதிகரிக்க, கேள்வி-நிரம்பல் இணக்கமின்மை மற்றும் விலை உயர்வுகளின் விளைவாக உயர்ந்த பணவீக்க நிலைகளை எதிர்கொள்ளும்.
- சர்வதேச சந்தைகளில் கடன் வாங்குவதற்கான அதிக செலவு மற்றும் சவாலின் காரணமாக, உள்நாட்டுக் கடன்படுகையின் அதிகரித்த விகிதம் அரச செலவினத் தேவையை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, தனியார் துறையின் கடன் கிடைப்பனவுத் தன்மை குறைய, நெரிசல் விளைவு ஏற்படக்கூடுவதனால் உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் நுகர்வு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## வட்டி வீதங்கள் (தொடர்)

### இலங்கை சூழ்நிலை மீதான தாக்கம்

- பணப் பெறுமதித் தேய்வு தொடரும். அத்தியாவசிய இறக்குமதிகள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவை மையமாக இருப்பதால், நாட்டின் கையிருப்பு நாணயத்தைப் பாதுகாக்க போதுமான பாதுகாப்பு மட்டத்தை வழங்காது, அதன் விளைவாக நாணயத்தின் பெறுமதி மேலும் குறைவடையும்.

**கடன் வளர்ச்சி**

நவம்பர் 2021 நிலவரப்படி, குறைந்த வட்டிச் சூழல் மற்றும் அடகு வைப்பு மற்றும் வீட்டுக் கடன் வசதிகளுக்கான கேள்வி அதிகரித்ததன் மத்தியில் தனியார்துறைக் கடன் வளர்ச்சி 12% ஆண்டின் இற்றை வரையான வளர்ச்சியைப் பதிவு செய்தது. எவ்வாறாயினும், பணவீக்க அழுத்தங்கள் மற்றும் நிதிச் செலவுகளுக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டில் நாணயக் கொள்கை இறுக்கம் மூலம் விலை ஸ்திரத்தன்மையைக் கொண்டுவர மத்திய வங்கி கட்டாயப்படுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, நிகர வட்டி எல்லைகள் (NIM) 2022 இல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**அரச பிணையங்களின் விளைவு**

அரச பிணைப் பத்திரங்களின் விளைவு, தளம்பல்களுக்கு மத்தியிலும், அவற்றின் மேல்நோக்கிய வேகத்தைத் தொடர்ந்தது. நிலையற்ற தன்மை முதன்மை வணிகர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கும் அதே வேளையில், விலை உறுதியற்ற தன்மையை எதிர்த்துப் போராட இலங்கை மத்திய வங்கி அதன் பணவியல் கொள்கையை இறுக்குவதால், விகிதங்கள் தொடர்ந்தும் உயரும்.

அரச பிணைப் பத்திரங்களின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை விளைவுகள் மேல்நோக்கி சீராக்கப்பட்ட, அதே சமயம் ஒட்டுமொத்த சந்தை நடவடிக்கைகள் முற்றிலும் ஸ்தம்பிதமடைந்தன. 31 மார்ச் 2022 நிலவரப்படி 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கத்தக்க விளைவு விகிதங்கள் முறையே 12.92%, 12.25% மற்றும் 12.28% ஆக அதிகரித்துள்ளன.

### வங்கித் துறை மீதான தாக்கம் மற்றும் தொடர்புபட்ட விருத்திகள்

**மத்திய வங்கியின் பணவியல் கொள்கை**

மத்திய வங்கியானது ஆகஸ்ட் 2021 இல் மாத்திரம் ஒரே ஒரு உயர்வுடன் 2021 ஆம் ஆண்டின் பெரும்பகுதிக்கு இணக்கமான பணவியல் கொள்கையை ஏற்றுக் கொண்டு பேணியது. இலங்கை மத்திய வங்கி நிலைத்த வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலைத்த கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) ஆகியவற்றை 50 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்ததுடன், சட்டப்படி ஒதுக்கு வீதம் 200 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கி தொடர்ந்து கொள்கை விகிதங்களை அதே மட்டத்தில் வைத்திருந்ததன் மூலம் பொருளாதார விரிவாக்கம் மற்றும் தனியார் கடன் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியது. எவ்வாறாயினும், நாணய சபை ஜனவரி 2022 இல் கொள்கை விகிதங்களை 50 அடிப்படைப் புள்ளிகளாலும், மார்ச் 2022 இல் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் அதிகரித்து, நிதிக் கொள்கை மதிப்பாய்வில் கேள்வி அழுத்தங்களைக் குறைப்பதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் உயர்த்தியது. உலகப் பொருளாதாரங்களால் எடுக்கப்பட்ட இறுக்கமான பணவியல் கொள்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து விலை ஸ்திரத்தன்மையை மீட்டெ டுக்க, 2022 ஆம் ஆண்டிற்கான மேலும் கட்டண உயர்வுகள் அட்டைகளில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வைப்பு மற்றும் கடன் விகிதங்கள்**

சமீபத்திய வட்டி விகித உயர்வைத் தொடர்ந்து, நிதி நிறுவனங்கள், வாடிக்கையாளர்களின் வைப்பு விகிதங்களுக்கு கொள்கை விகிதங்களை விரைவாக நிறைவேற்றி, சேமிப்பை ஊக்குவிக்கும் அதே வேளையில், அதிகப்படியான நுகர்வுகளை மட்டுப்படுத்த வேண்டும் என்று மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. எனவே, பண இறுக்கம் மற்றும் பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியில் கடன் விகிதங்கள் மேலும் அதிகரிக்கும் அதே நேரத்தில் சராசரி எடையுள்ள வைப்பு விகிதம் (AWDR) அதிகரிக்கும். இருப்பினும், வைப்பு வீதங்கள் தாமதமான விளைவுடன் மெதுவான வேகத்தில் உயரும்.

வரைபடம் 3

**வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள்**



## வட்டி வீதங்கள் (தொடர்)

### வங்கித் தொழிற்துறை மீதான தாக்கம் மற்றும் அது தொடர்பான விருத்திகள்

**சந்தையில் எதிர்க்கணிய திரவத்தன்மை**

மார்ச் 2022 நிலவரப்படி, இலங்கையின் திடீர் திரவத்தன்மைப் பற்றாக்குறை ரூபா 600.0 பில்லியன் வீச்சில் இருப்பதுடன், வங்கிகள் திரவத்தன்மைத் தேவைப்பாட்டுக்கு மேலதிகமாக வைத்திருக்கும் இலங்கை மத்திய வங்கியின் சட்ட நியதிப்படியான ஒதுக்கு வீதத்தின் அதிகரிப்பைத் தொடர்ந்தும் அவ்வாறே வைத்திருக்கிறது. இதன் கருத்து, தினசரி திரவத்தன்மைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, வங்கிகள் மத்திய வங்கியின் நிலையான கடன் வசதி முறைமையிலிருந்து கடன் வாங்குவதில் பெரிதும் நம்பியிருந்திருக்க வேண்டும் என்பதாகும். பணவியல் கொள்கையை கடுமையாக்கியதன் விளைவாக கடன் விகிதங்கள் மேல்நோக்கி சீராக்கப்பட்டாலும், இது மெதுவாக இருந்த வைப்புக்களுக்கான வட்டி விகிதங்களை ஈடு செய்யாதிருக்க, இதன் மூலம் புழக்கத்தில் உள்ள அதிகப்படியான பணத் தொகையை வங்கிகளில் வைப்புக்களாக உள்ளிளுத்துக் கொள்ள போதுமானதாக இல்லை. ஏப்ரல் 2022 பணவியல் கொள்கை நடவடிக்கைகள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் அதிக வைப்புத்தொகை மற்றும் அதிகரித்த திரவத் தன்மையை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

**முதலீடுகள் மற்றும் அரச பிணைப் பத்திரங்களிலிருந்து உருவாகும் வருமானம்**

அரச பிணைப் பத்திரங்களுக்கான சந்தையில் நிலவும் திரவத்தன்மை மற்றும் வட்டி வீதங்கள் நிலையான வருமானப் பத்திரங்களின் மீதான வள ஒதுக்கீடு/ முதலீடுகளை பாதிக்கிறது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் வீதங்களின் அதிகரிப்பு, அரச பிணைப் பத்திரங்களின் வர்த்தகத் தொகுப்பு மற்றும் நிதியியல் சாதனங்களின் தன்மை மற்றும் அந்தப் பிணைப் பத்திரங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடு, இடர் எடையளித்த சொத்துக்கள், மூலதனப் போதுகை அளவு மற்றும் நிலையான நிதியீட்ட நிலைமை ஆகியவற்றை எந்த அளவிற்கு நிர்ணயிக்கிறது என்பதன் மூலம் சந்தையில் குறிக்கப்பட்ட நட்டங்களை உயர்த்தும்.

## நிதி/பாதீட்டுப் பற்றாக்குறை

### பூகோள சூழ்நிலை

**உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களின் பாதீட்டுக் கொள்கை சவால்கள்**

தொற்றுநோயின் ஆரம்பத்தில் இருந்து செயற்படுத்தப்பட்ட நிதி ஆதரவுப் பொதிகள் உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களில் 2019 மொத்த உள்நாட்டு உற்பத்தி மீது சராசரியாக 6.8% மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் (LICs) 2019 மொத்த உள்நாட்டு உற்பத்தி மீது 3.5% ஆக உள்ளது. இது மேம்பட்ட பொருளாதாரப் பொதிகளில் முறையே கால்வாசி மற்றும் எட்டில் ஒரு பங்கிற்கும் குறைவானதாகும். பல சந்தர்ப்பங்களில், 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் செலவினங்கள் ஆதரவை நோக்கி அரசாங்கங்களால் மீள் முன்னுரிமை அளிக்கப்பட்டதால், இந்த தொகுப்புகள் பெரும்பாலும் பிற செலவினங்களின் குறைப்புக்கள் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டன.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி ஆதரவுப் பொதிகள் பெருமளவில் மீளப் பெறப்பட்ட நிலையில், எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் நிதிச் சீராக்கலின் வேகம் படிப்படியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், நிதிக் கொள்கையை இறுக்குவதன் மூலம் உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களின் பங்கு 2021 இல் 60% இலிருந்து 2022-23இல் 80% க்கும் அதிகமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஆதரவு முயற்சிகள் இருந்த போதிலும், உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களின் அரச கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதங்கள் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளுக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படவில்லை, மாறாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 66% வரை தொடர்ந்து உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இலங்கை சூழ்நிலை மீதான தாக்கங்கள்

2021 இன் 9 மாதங்களின் போது, பாதீட்டுப் பற்றாக்குறை 2020 இன் 9 ஆம் மாதங்களுக்கான ரூபா 1,153.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது தொடர்ந்தும் ரூபா 1,328.2 பில்லியனாக அதிகரித்து காணப்பட்டது. தொற்றுநோய், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக் குறைப்புக்கள், மானியங்கள் மற்றும் மாற்றல்கள், ஊதியங்கள் மற்றும் வட்டி செலுத்துதலுக்கான செலவினங்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக அரசாங்க வருவாய்கள் குறைவாகச் தொழிற்படுவதால் பற்றாக்குறையின் விரிவாக்கம் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11%) ஏற்பட்டது. மேலும், கொவிட்-19இன் பரவலை முகாமை செய்வதற்கான சுகாதார வசதிகளுக்கு அதிக செலவு ஏற்பட்டது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வரி நடவடிக்கைகள் மற்றும் வசூலிப்பு முறைகள் அதிக வரி வருவாயை ஏற்படுத்தும் அதே வேளையில், அதிக சம்பளம் மற்றும் மானிய ஒதுக்கீட்டில் தொடர்ச்சியான செலவுகள் தொடர்ந்து அதிகரிக்கும்.

2021 நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.1% ஆக இருக்கும் என்று அரசாங்கம் கணித்துள்ளது. இது ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட மிக அதிகமாகும். 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதிப் பற்றாக்குறையை 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8% ஆகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், இலட்சிய வருவாய் இலக்குகள் மற்றும் சம்பள அதிகரிப்பு, வட்டி கொடுப்பனவுகள் மற்றும் வைரஸ் தடுப்புக்கான எதிர்பாராத செலவினங்கள் ஆகியவற்றின் காரணமாக தொடர்ச்சியான செலவினங்களின் அதிகரிப்புக்கான சாத்தியக்கூறுகள் இரட்டிப்பாகி 2022இலும் இரட்டைத் தானப் பணவீக்கத்துக்கு வழிவகுக்கும். புதிய மிகை வரி, சமூகப் பாதுகாப்பு வரி, அறிமுகப்படுத்தப் படக்கூடிய விசேட பொருட்கள் சேவைகள் மீதான வரி மற்றும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்த்த வரி அதிகரிப்பு ஆகியவை வருமான சேகரிப்பை வலுப்படுத்தும். அதிகரித்த அரசாங்க செலவினங்களின் பெருக்கி விளைவு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியை வலுப்படுத்த உதவும்.

## நிதி/பாதீட்டுப் பற்றாக்குறை (தொடர்)

### வங்கித் தொழிற் துறை மீதான தாக்கம் மற்றும் அது தொடர்பான விருத்திகள்

**வரிகளின் தாக்கம்**

2022 பாதீட்டு முன்மொழிவுகளால் மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளில் வங்கித் துறையும் ஒன்றாகும். 2020/21 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு ரூபா 2 பில்லியனுக்கு மேற்பட்ட வரிவிதி வருமானத்தைப் பதிவு செய்த நிறுவனங்களுக்கு மிகை வரி விதிக்க அரசு முன்வந்துள்ளது. எனவே, பெரும்பாலான வங்கிகள் அவற்றின் மிகை இலாபத்தின் அடிப்படையில் கூடுதலான வரிக்கு பொறுப்பாகும். ஆண்டுப் புரள்வு ரூபா 120 மில்லியனுக்கு மேல் உள்ள நிறுவனங்கள் 2.5% சமூகப் பங்களிப்பு வரியை செலுத்த வேண்டும் என்னும் சட்டத் தேவைப்பாடு வழங்கப்பட்ட குறைந்தபட்ச எல்லைக்கு அமைய அனைத்து வங்கிகளுக்கும் ஏப்ரல் 1, 2022 முதல் நடைமுறைக்கு வரும், மேலும், நிதிச் சேவைகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரிகள் 2022 இல் 15% இலிருந்து 18% ஆக அதிகரிக்கப்படும் (இது வாடிக்கையாளர்கள் மீது சுமத்தப்பட முடியாது).

**அரசின் நிவாரணப் பொதிகள்**

நாட்டில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவின் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஜனவரி 4, 2022 அன்று ரூபா 229 பில்லியன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4%) தொகையினை பொருளாதார நிவாரணப் பொதியாக அரசு அறிவித்துள்ளது. அறிவிக்கப்பட்ட சில முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- அரச துறை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு மாத உதவித்தொகை ரூபா 5,000
- தற்போது ரூ. மாதம் 3,500 பெறும் சமுர்த்தி பயனாளிகளுக்கு மேலதிக மாதாந்த கொடுப்பனவு ரூபா 1,000
- வரவிருக்கும் பெரும்போகப் பருவத்தில் அறுவடையில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் விவசாயிகளுக்கு இழப்பீடாக கிலோ ஒன்றுக்கு ரூபா 25.
- அனைத்து அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளின் இறக்குமதி மீதான வரிகளை நீக்குதல்

முக்கியமாக குறைந்த வருமானம் பெறுபவர்களை இலக்காகக் கொண்ட நிவாரணப் பொதியின் வெளியீடு நுகர்வோருக்கு ஒரு நேரக் கணியமான நகர்வாகும். எவ்வாறாயினும், பொருளாதாரத்தில் தற்போதைய பணவீக்க அளவுகள் மிக அதிகமாகக் காணப்படுகிறது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியால் அளவிடப்பட்ட ஆண்டுகளுக்கு இடையிலான ஒப்பீட்டு உணவுப் பணவீக்கம் டிசம்பர் 2021 இல் 22.1% என்னும் பெறுமதியை அடைந்தது.

2022 ஆம் ஆண்டில் பணவீக்க அளவுகள் அதிகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன், பொருளாதாரப் பொதியின் பலன் நுகர்வோருக்கு தற்காலிக நன்மையாக இருக்கக் கூடும், அத்துடன் மேலும் 2022 வரை நுகர்வோரது செலவிடத்தக்க வருமான அளவுகளில் அழுத்தம் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கடன் தாமதங்களை நீக்குதல்**

மேலும், தகுதியுள்ள கடன் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தாமதக் காலம் சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகளைத் தவிர்ந்தவர்களுக்கு 31 மார்ச் 2022 முதல் நீக்கப்பட, அவர்களுக்கான கடன் தாமதக் காலம் ஜுன் 30, 2022 முதல் நீக்கப்படும். தாமதக் காலத்தை நீக்குவது சொத்து மற்றும் உழைப்பின் தரத்தின் மீதான கூடுதல் அழுத்தமாக இருக்கலாம். எவ்வாறாயினும், தடுப்பூசிக்குப் பிந்தைய துறைகளின் ஆரம்ப ஏற்பாடுகள் மற்றும் மீட்பு ஆகியவை பாதிப்பைக் குறைக்க உதவும்.

## வெளிவாரி விருத்திகள்

### பூகோள சூழ்நிலை

**நாணய மாற்று வீத உயர்வுடன் வலுவடையும் அமெரிக்க டொலர்**

அமெரிக்க கூட்டமைப்பின் இறுக்கமான திட்டங்களின் விருத்தியுடன் முக்கிய நாணயங்களுக்கு எதிராக அமெரிக்க டொலர் தொடர்ந்தும் வலுவடைந்ததுடன், மார்ச் முதல், 2022 ஆம் ஆண்டில் பரவலாக எதிர்பார்க்கப்படும் மூன்று வட்டி உயர்வுகளுக்கு சந்தை தயாராக உள்ளது.

மேலும், அமெரிக்க திறைசேரி வருமானங்களின் சமீபத்திய அதிகரிப்புடன் அமெரிக்க டொலரும் அதிகரித்தது. 10 ஆண்டு பிணைப்பத்திரம் தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து காணப்பட்டிராத வகையில் 1.89%ஐ எட்டிய அதே வேளையில் 2 ஆண்டுப் பத்திரங்கள் 1.076%ஆக வர்த்தகம் செய்யப்படுகின்றன. அதிக விகிதங்களின் அதிகரித்த எதிர்பார்ப்புகள் பங்குச் சந்தை வேகத்தில் அழுத்தத்தை உருவாக்குவதுடன் தற்போது அதி உயர் மட்டங்களில் காணப்படும் உலகளாவிய பங்குச் சுட்டிகள் இதற்கு தயாராகி வருகின்றன.

## வெளிவாரி விருத்திகள் (தொடர்)

### இலங்கையின் சூழ்நிலை மீதான தாக்கங்கள்

இலங்கை இறக்குமதியைச் சார்ந்திருக்கும் அதே வேளையில் நாணயத்தைப் பாதுகாக்க மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய இருப்புகளைக் கொண்டுள்ளமையால் குறிப்பாக, வெளிநாட்டுத் துறையின் நிலை முக்கியக் கவலையாக உள்ளது, இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது அதிகரித்துள்ள போதிலும் கூட சில அத்தியாவசியமற்ற பொருட்கள் தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ளன. மிதமான நெகிழ்வுத் தன்மையை அனுமதிக்கும் சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்துடன் ஏற்றுமதிகள் வேகத்தை கண்டுள்ளன.

இறக்குமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயத்திற்கான தடை செய்யப்பட்ட அணுகல் மற்றும் செயற்கையாகக் கட்டுப்படுத்தப்பட்ட நாணய மாற்று விகிதமானது கட்டுப்பாடற்ற மாற்றுச் சந்தைகளில் பரவலான விளைவை ஏற்படுத்தியுள்ளதன் விளைவாக விகிதங்கள் உயர்வடைகின்றன. இந்த கொள்கை முடிவு முக்கிய அந்நிய செலாவணி பங்களிப்பாளராக உள்ள இலங்கைக்கான பணம் அனுப்புதல்களில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் தனிநபர்கள் உத்தியோகபூர்வ நாணய மாற்று வீதத்தில் மாற்றுவதற்குப் பதிலாக வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்க முடிவு செய்தனர்.

**வெளிவாரி வர்த்தகம்**

கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகப்படியான பங்களிப்புடன், அனைத்துப் பிரதான வகைகளினதும் உழைப்புக்களில் ஓர் அதிகரிப்புடன் டிசம்பர் 2021 இல் வர்த்தகப் பொருள் ஏற்றுமதியின் வருவாய் ஆண்டுசார் அடிப்படையில் 19.9% வளர்ச்சியடைந்து 1,156 மில்லியன் டொலர்களாகக் காணப்பட்டு இருந்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) 2021 இன் இறுதிக்குள் வர்த்தகப் பொருள் ஏற்றுமதி மூலம் 12.5 பில்லியன் டொலர்களை அடைய இலக்கு வைத்துள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி சபை தற்போது தேசிய ஏற்றுமதித் தந்திரோபாயத்தை (NES) புதிய விருத்திகளுடன் இணைந்து மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. உலகப் பொருளாதாரம் புதிய இயல்பு நிலைக்குத் தகவமைத்துக் கொள்வதால், வர்த்தகப் பொருள் ஏற்றுமதி வேகம் அதிகரிக்கும். நாணயப் பெறுமதித் தேய்வு இலங்கைப் பொருட்களின் மீதான கவர்ச்சிக்கு உதவும். இருப்பினும், உள்ளீடுகளில் உள்ள வரையறைகள் முடிவுப் பொருட்களில் குறுகிய கால தாக்கங்களை ஏற்படுத்தலாம். ஏற்றுமதியில் இருந்து அதிக பங்களிப்புடன், அனைத்து முக்கிய வகைகளிலும் வருவாய் அதிகரிப்பால் இயக்கப்படுகிறது.

**வரைபடம் 4**

**ஏற்றுமதிப் பெறுபேறுகள் (ஜனவரி-டிசம்பர்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வர்த்தகப் பற்றாக்குறை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை**

வர்த்தகக் கணக்கில் பற்றாக்குறையானது 2020 டிசம்பரில் காணப்பட்ட 562 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் இதுவரை இல்லாத அதிகபட்சமாக டிசம்பர் 2021 இல் 1,085 அமெரிக்க டொலர்களாக விரிவடைந்தது. ஏற்றுமதியில் இருந்து தொடர்ந்து ஏழாவது மாதமாக 1.0 பில்லியனைத் தாண்டிய அதிக வருவாய் இருந்த போதிலும், இறக்குமதிகள் அதிக அளவில் உயர்ந்து, இதுவரை இல்லாத அளவுக்கு மாதாந்த இறக்குமதிச் செலவைப் பதிவு செய்தது. டிசம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகை வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்த அதே நேரத்தில், தொழிலாளர்களின் பணப் பரிமாற்றங்கள் பணம் அனுப்பியதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்கத் திட்டம் மற்றும் பருவகால அதிகரிப்பு ஆகியவற்றின் பிரதிபலிப்பாக முன்னைய மாதத்தை விட டிசம்பர் 2021 இல் வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**வரைபடம் 5**

**வர்த்தகப் பற்றாக்குறை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வெளிவாரி விருத்திகள் (தொடர்)

### இலங்கையின் சூழ்நிலை மீதான தாக்கங்கள்

**உத்தியோகபூர்வ இருப்புக்கள்**

தலையீடுகளைத் தடை செய்வதற்கான தொடர்ச்சியான திரவத்தன்மை உட்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு தொடர்ந்து 2021 இன் கடைசி காலாண்டில் சரிந்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆறு மாத முன்னேற்றப் பாதை வரைபடத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, ஒதுக்குகளை அதிகரிக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டின் இறுதியில், சீனாவில் இருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை பரஸ்பர மாற்று மூலம் மத்திய வங்கி கையிருப்பு நிலையை 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்த முடிந்தது. 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் 2022 இல் மீள் செலுத்துகைத் தேவைப்பாடு காரணமாக இருப்புக்கள் தொடர்ந்து அழுத்தத்தில் இருக்கும். இருப்பினும், கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் மற்றும் இருதரப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதை இலங்கை மத்திய வங்கி உறுதி செய்துள்ளது.

### இலங்கையின் சூழ்நிலை மீதான தாக்கங்கள்

**வெளிநாட்டுப் பண மாற்றுகை**

ஏப்ரல் 2020 இல் ஒரு கூர்மையான சுருக்கத்திலிருந்து மீண்டு, தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் 2021 இன் முதல் ஐந்து மாதங்களில் சுருங்கி வரும் கையிருப்புகளை மீட்டெடுக்கும் வகையில் ஒரு நிலையான வளர்ச்சியைக் காட்டியது. இருப்பினும், தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் குறிப்பிடத்தக்க சரிவைப் பதிவு செய்தது, அதிக மாற்று வீதத்தைப் பெறுவதற்கு முறைசாரா வழிகளைப் பயன்படுத்தியதமை இதற்கான காரணமாக இருக்கலாம். இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டிற்கான பண மாற்றுகை 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வீழ்ச்சியைப் பதிவு செய்து ஆண்டுசார் ஒப்பீட்டில் 23% ஆல் குறைந்து (2020 இல் 7.1 பில்லின் டொலர்களில் இருந்து) 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியினால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அந்நிய செலாவணி சந்தையில் அதிகரித்து வரும் விலை ஏற்றத்தாழ்வு தொடரலாம். உத்தியோகபூர்வ வழிமுறைகள் மூலம் மாற்றுவதன் மூலம் ஏப்ரல் 2022 இறுதி வரை தொடரவுள்ள ஒரு டொலருக்கு ரூபா 10 மேலதிகத் தொகை வழங்கப்பட்டாலும் பொருளாதாரம் இன்னும் நேர்க் கணிய விளைவுகளைக் காணவில்லை.

**டொலர் வருமானத்தை ஈர்ப்பதற்கான இலங்கை மத்திய வங்கியின் புதிய கொள்கை நடவடிக்கைகளாவன:**

- எரிபொருள் கொள்வனவுக்கான அத்தியாவசிய இறக்குமதிப் பட்டியல்களின் நிதியிடலை உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அவற்றின் அந்நியச் செலாவணி வரவுக்கு ஏற்ப விகிதாசாரமாகப் பகிர்தல்.
- இலங்கைக்கு வெளியில் வசிக்கும் நபர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக அனைத்து பதிவு செய்யப்பட்ட சுற்றுலா நிறுவனங்களும் அன்னிய செலாவணியை மட்டுமே ஏற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது.
- அமெரிக்க டாலர் தொழிலாளர்களின் பண மாற்றலுக்காக "உள்நாட்டுத் தொழிலாளர்களின் பணம் அனுப்பும் ஊக்கத் திட்டத்தின்" கீழ் வழங்கப்படும் ரூபா 2 க்கு மேலதிகமாக ரூபா 8 ஊக்கத்தொகை கூடுதலாக 30 ஏப்ரல் 2022 வரை செலுத்தப்படும். (ரூபா 2 அரசாங்கத்தால் வழங்கப்பட, ரூபா 8 இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுகிறது).
- 1 பிப்ரவரி 2022 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பிற முறையான வழிமுறைகளில் ரூபாய் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பும் போது செலுத்தும் பரிவர்த்தனை செலவை ஒரு பரிவர்த்தனைக்கு ரூபா 1,000 என்ற வகையில் மீளளித்தல். (இந்த ஊக்கத்தொகை இலங்கை மத்திய வங்கியினால் நிதியளிக்கப்படும்).
- புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டு நாணய வைப்பு மற்றும் ரூபா வடிவிலான வைப்புக்களுக்கு உயர் வட்டி வீதத்தை அறிமுகப்படுத்துதல்

**நாணயப் பெறுமதித் தேய்வு**

அதன் நிதிகளை ஓரளவு வெளிநாட்டு வரவுகளுக்கு மத்தியில் வலுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் சீனா மற்றும் இந்தியாவிடமிருந்து கடன் வரிசைகளை நாடியமையுடன் மோசமான பொருளாதார நிலைமை காரணமாக மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு டிசம்பர் 2021 இறுதியில் 3.1 பில்லியன் டொலர்களிலிருந்து குறைவடைந்து 2.3 பில்லியன் டொலர்களாக பிப்ரவரி 2022 இல் காணப்பட்டது.

அதிகரித்து வரும் இறக்குமதிக் கட்டணங்கள் மற்றும் விரிவடையும் வர்த்தகப் பற்றாக்குறைக்கு மத்தியில், நாட்டிற்குள் நிதி வரவழைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அதே வேளையில், வெளிநாட்டு கையிருப்புகளைப் பாதுகாக்க வட்டி உயர்வுகளின் தேவையினால், மார்ச் 2022 வரை மத்திய வங்கியின் 150 அடிப்படைப் புள்ளி உயர்வுகளுக்கு வழிவகுத்தது. ரூபாவின் மதிப்பு 40%க்கும் அதிகமாக குறைந்துள்ளதுடன், மத்திய வங்கியின் சுயாதீன மிதப்பினை அனுமதிக்கும் முடிவின் காரணமாக அதிகாரப்பூர்வமற்ற வர்த்தக தளங்கள் மிகவும் பலவீனமான விகிதத்தைக் குறிப்பிட்டாலும், மார்ச் 31, 2022 இல் குறியீட்டு அமெரிக்க டொலர் - ரூபா விகிதம் ரூ. 299 ஆகக் காணப்பட்டது.

**அட்டவணை 2** வர்த்தகப் பற்றாக்குறை (மில்லியன் டொலர்)

| | ஜன. | பெப். | மார்ச். | ஏப். | மே. | ஜூன். | ஜூலை | ஆகஸ். | செப். | ஒக்டோ. | நவம் | டிசம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020 | 730 | 574 | 549 | 840 | 407 | 161 | 209 | 342 | 525 | 509 | 600 | 562 |
| **2021** | **655** | **572** | **832** | **889** | **716** | **652** | **607** | **586** | **495** | **495** | **553** | **1,085** |

## கடன்

### உலகளாவிய சூழ்நிலை

**உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களில் அதிகரித்த கடன்**

உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களில் அதிகரித்த கடன்

"நிதி மற்றும் பாதீட்டுப் பற்றாக்குறைகள்" பிரிவில் விவாதிக்கப்பட்டதைப் போல, அரசு ஆதரவு நிவாரணப் பொதிகள் இருந்த போதிலும், உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களின் அரசாங்க கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதங்கள் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. மாறாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 66% ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீரழிந்து வரும் கடன் மாறிகள், நிதிப் பற்றாக்குறையில் தொடர்ச்சியான வருவாய் இழப்புகளின் தாக்கத்தை பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. 2023 ஆம் ஆண்டிற்குள், 55%க்கும் அதிகமான உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களில் வருவாய் 2019 ஆம் ஆண்டின் பெறுமதிகளிலும் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களின் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% நிலையாக இருக்கும், இது 2019 சராசரியை விட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5% குறைவாகும். மேலும், உயர்ந்த குறுகிய கால வெளிவாரிக் கடனுடன் உருவாகும் சந்தைகள் மற்றும் வளர்முகப் பொருளாதாரங்களின் இறுக்கமான நிதி நிலைமைகள், கடன் பரிமாற்றம் மற்றும் நாணய இணக்கமின்மை அபாயங்கள் ஆகியவற்றின் பொருண்மையாக்கலைத் தூண்டலாம், வரலாற்று ரீதியாக பெரிய நிதிச் செலவுகளை ஏற்படுத்திய நிகழத்தக்க பொறுப்புகளை ஏற்பிசைவு செய்யப்படுவதன் மூலம் நிதி நிலைக்கூற்றை மேலும் சிரமப்படுத்தலாம்.

### இலங்கையின் சூழ்நிலை மீதான தாக்கங்கள்

**வெளிவாரிக் கடன் சவால்கள்**

தொற்றுநோயால் மோசமாக்கப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு வீழ்ச்சியின் காரணமாக இலங்கை திரவத்தன்மை நெருக்கடியை எதிர்கொள்கிறது, இது கடன் கடமைகளை திருப்பிச் செலுத்தும் திறன் குறித்து சந்தேகத்தை எழுப்பியுள்ளது. கூடுதலாக, மாற்று விகிதங்களின் தொடர்ச்சியான தேய்வு, வட்டி மற்றும் தவணைக் கட்டணங்களின் உயர்வுக்கு வழிவகுத்தது. பல பொருளாதார நிபுணர்கள் மற்றும் கொள்கை ஆய்வாளர்கள் இலங்கை எதிர்கால கடன் பொறுப்புகளை நிர்வகிப்பதற்கு சர்வதேச நாணய நிதியப் பிணை எடுப்புப் பொதியில் ஈடுபட வேண்டியிருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், மத்திய வங்கி சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை, அதே நேரத்தில் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றுடன் நாட்டின் வெளிநாட்டுக் கடன் சவால்களை நிர்வகிப்பதற்கு அரசாங்கத்திற்கு இடையேயான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இலங்கை மத்திய வங்கி 18 ஜனவரி 2022 அன்று முதிர்ச்சியடைந்த 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை திருப்பிச் செலுத்தியுள்ளது. அதே நேரத்தில் 1 பில்லியன் டொலர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திகதியாக 25 ஜுலை 2022 இருப்பதுடன், 6.9 பில்லியன் டொலர்கள் பெறுமதியான, மேற்கூறிய சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள் (ISB) செலுத்துதல்கள் உட்பட, மொத்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொறுப்பு இந்த ஆண்டு நிலுவையில் உள்ளது. நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, மொத்தக் கடன் பகுதியானது, அடுத்த காலத்தில் அதிகமாகவே தொடர்ந்து இருக்கும், இதில் பெரும் பகுதி உள்நாட்டு மூலங்கள் மூலம் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், மேலும், அரசாங்கம் இருதரப்புக் கடன் வரிசைகளுக்குச் சென்றால் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு மேலும் அதிகரிக்கும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான சராசரி கடன் திருப்பிச் செலுத்துதல் ஆண்டுக்கு 4.5 பில்லியன் டொலர்களாக உள்ளது. ஆண்டுக்கு. (மூலம்: இலங்கை மத்திய வங்கி).

வரைபு 6

**இலங்கையின் பொதுப் படுகடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக**




(f) Fitch இனால் எதிர்வுகூறப்பட்டவாறு

## கடன் (தொடர்)

### வங்கித் தொழிற் துறை மீதான தாக்கம் மற்றும் அது தொடர்பான விருத்திகள்

**கடன்தீர் ஆற்றல் தரக் குறைப்பு**

பலவீனமான பேரினப் பொருளியல் அடிப்படைகள், சுருங்கும் வெளிநாட்டு இருப்புக்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய தெளிவின்மை ஆகியவற்றின் பின்னணியில் சர்வதேச தரமதிப்பீட்டு முகவர் நிலையங்கள் இலங்கையை தொடர்ந்து தரமிறக்கி வருகின்றன. எனவே, வங்கிகளின் சர்வதேச வங்கி அலகுகள் கடன் கடிதங்களைத் திறப்பதிலும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளைக் கையாள்வதிலும் சிரமங்களைக் கண்டுள்ளன. சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள் (ISBs) மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் (SLDBs) ஆகியவற்றுக்கு வங்கிகளின் வெளிப்படுதன்மையைக் கருத்தில் கொண்டு, ஒரு கட்டுப்பாடு இத்துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். எவ்வாறாயினும், குறுகிய கால நிதி ஏற்பாடுகளுடன் (குறிப்பாக சீனா மற்றும் இந்தியாவுடன்) அரசாங்கம் அதன் கறைபடாத கடன் பதிவைத் தொடரும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும், ஒரு கட்டமைக்கப்பட்ட நாணய வடிவில் இலங்கைக்கு பணத்தை மாற்றுவதற்கு முறைசாரா வழிகளை வெளிநாட்டவர்கள் பயன்படுத்தி வருவது வங்கித் தொழிற் துறைக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

**சர்வதேச நாணய நிதிய பிணை எடுப்பு**

தற்போது நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை சமாளிப்பதற்கான நிலையான தீர்வொன்றை உருவாக்குவதற்கு மத்திய வங்கியும் அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) நெருக்கமாகச் செயற்படத் தொடங்கவுள்ளது. இணைப்பு நிதியுதவிகளைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆர்வமுள்ள கட்சிகளுடன் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3

| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 (f) |
|---|---|---|---|---|---|---|---|
| பொதுப்படுகடன் மொ.உ.உ.யின் வீதமாக | 79.0 | 77.9 | 84.2 | 86.8 | 101 | 102.8 | 110.0 |

# இடர்களும் வாய்ப்புக்களும்

GRI 102-11

## எமது செயற்பாட்டுப் பின்னணி

கொவிட் 19 தொற்று, புவிசார் அரசியல் நிகழ்வுகள், எமது செயற்படும் தளங்களிலிருந்து உருவாகின்ற சமூக பொருளாதார சவால்கள் போன்ற உலகளாவிய போக்குகள் மற்றும் சிக்கல்கள் மற்றும் புதிதாக தோன்றுகின்ற மற்றும் ஏற்கனவே உள்ள பாரிய தாக்கத்தைச் செலுத்துகின்ற போக்குகள், எமது பெறுமதிசேர் உருவாக்கச் செயன்முறையில் தாக்கத்தைச் செலுத்தும் சூழலைத் தீர்மானிக்கின்றன.

அவ்வாறு உலகளாவிய மகா இயக்கிகளான பாரிய தாக்கத்தைச் செலுத்துகின்ற ஏழு போக்குகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இவை எமது வர்த்தகத்தை நிலைமாற்றக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளதோடு எமது பொருள் சார்ந்த விடயங்களை வகைப்படுத்தும் பரந்த கருப்பொருட்களாக மாறுகின்றன.

1. நிச்சயமற்ற பூகோள அரசியல் மற்றும் சமூக பொருளாதார சூழல்
2. அதிகரித்த ஒழுங்குமுறை நுண்ணாய்வு
3. தகர்க்கின்ற தொழிநுட்பங்கள் மற்றும் போட்டித்தன்மை
4. மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள்
5. மக்கள் தொகைசார் கட்டமைப்பில் மாற்றங்கள்
6. காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறுதன்மை
7. கொவிட் 19 ன் சமூக பொருளாதார தாக்கங்கள்

எமது செயற்பாட்டின் சூழல் பற்றிய பகுப்பாய்வின் ஊடாக இடர் மதிப்பீட்டு செயன்முறைக்கான எமது மேலிருந்து கீழான அணுகுமுறையின் அடிப்படையில் வருடம் தோறும் புதுப்பிக்கப்பட்ட முக்கிய இடர்கள் மற்றும் வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டோம். பின்வரும் வரைபடமானது அபாய நிலையின் அடிப்படையில் மேலே அடையாளங்காணப்பட்ட பாரிய ஏழு போக்குகளின் மதிப்பீட்டின் கண்ணோட்டத்தை வழங்குகிறது. கடன், சந்தை, செயல்பாட்டு மற்றும் பணப்புழக்க அபாயங்கள் போன்ற பிரதான அபாயங்களும் ஏனைய மேற்கூறிய பாரிய போக்குகளிலிருந்து எழும் நற்பெயர் மற்றும் மூலோபாய அபாயங்கள் அத்தோடு அவ் அபாயங்களுடன் வங்கியின் நிலை பற்றிய விரிவான இடர் மதிப்பீடு 212–239 பக்கங்களில் இடர் மீளாய்வு அறிக்கையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிந்தனை**

எமது மூலோபாயங்களை வெளிப்படுத்தும் செயன்முறையில், பங்குதாரர்களின் நேரடி நலன்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில், நாம் வாய்ப்புக்களுக்கும் அதனுடன் தொடர்புபட்ட இடர்களுக்கும் பதிலளிக்கின்றோம். இடர்களை தீர்மானிக்கும் போது எமது செயற்படும் பிண்ணனியை கவனமாக பரிசீலிக்கின்றோம், எமது மூலோபாய முன்னுரிமைகளின் தாக்கங்களை மதிப்பிடுகிறோம், எமது மூலோபாயங்கள் எவ்வாறு செயல்திறனுடன் பதிலளிக்கமுடியும் என்பதையும் நோக்குகிறோம். எம்மைப் பாதிக்கும் அனைத்து மூலதனங்களினூடும் இடர் பற்றிய எமது பரிசீலனை சமநிலையில் உள்ளது.

### ஐந்து வருடகால எல்லை

நடப்பதற்கான நிகழ்தகவு (columns); தே.சே.வங்கியில் தாக்கம் (rows)

| | அரிதானது | சாத்தியமற்றது | நடுத்தரமானது | ஏறக்குறைய சாத்தியம் | நிச்சயம் |
|---|---|---|---|---|---|
| முக்கியமற்றது | | | | | |
| சிறியது | | | 7 | | |
| நடுத்தரமானது | | | | 6 | 4 |
| முக்கியமானது | | | | 2 | |
| தீவிரமானது | | | | | 1 |

### குளைந லநயச வஅைந ழசணைழ

நடப்பதற்கான நிகழ்தகவு (columns); தே.சே.வங்கியில் தாக்கம் (rows)

| | அரிதானது | சாத்தியமற்றது | நடுத்தரமானது | ஏறக்குறைய சாத்தியம் | நிச்சயம் |
|---|---|---|---|---|---|
| முக்கியமற்றது | | | | | |
| சிறியது | | | 7 | | |
| நடுத்தரமானது | | | | 6 | 2, 4, 5 |
| முக்கியமானது | | | | | |
| தீவிரமானது | | | | 1 | |

● உயர்ந்தது ● உருவாகின்றது ● நிலையானது ● குறைந்தது

| பாரிய போக்குகளின் தரவரிசை | இடர்நிலை 2021 | இடர்நிலை 2020 |
|---|---|---|
| நிச்சயமற்ற பூகோள அரசியல் மற்றும் சமூக பொருளாதார சூழல் | **1** | 2 |
| அதிகரித்த ஒழுங்குமுறை நுண்ணாய்வு | **3** | 3 |
| தகர்க்கின்ற தொழிநுட்பங்கள் மற்றும் போட்டித்தன்மை | **4** | 4 |
| மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள | **5** | 5 |
| மக்கள் தொகைசார் கட்டமைப்பில் மாற்றங்கள் | **7** | 6 |
| காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறுதன்மை | **6** | 7 |
| கொவிட் 19 ன் சமூக பொருளாதார தாக்கங்கள | **2** | 1 |

## 1. நிச்சயமற்ற பூகோள அரசியல் மற்றும் சமூக பொருளாதார சூழல்

### எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள்

பாரிய பொருளாதாரச் சூழலானது எமது வணிகத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் எமது சந்தை அர்ப்பணிப்புக்களை அடைவதற்கும் தாக்கம் செலுத்துகின்றது. அரசியல் சூழலானது எமது செயற்பாட்டுச் சூழலில் தாக்கம் செலுத்துகின்றது.

**போக்கு**

- சந்தையின் தீவிர உறுதியற்ற தன்மையும் அதிகரித்த புவிசார் அரசியல் பதட்டங்களும் உலகமயமாக்கத்திலிருந்து விடுபடுவதற்கும் பாதுகாப்புவாத நடத்தையை நோக்கிய மேலும் உத்வேகத்தை சேர்த்தது
- இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை சீரழிவு, முக்கிய சமூக பிரச்சனைகள், அதிகரித்த பணவீக்கம் மற்றும் கொள்கை உறுதியற்ற தன்மையையும் அதிகரித்தது
- குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, குறைவடையும் வெளிநாட்டு இருப்புக்கள், பணப்புழக்க பற்றாக்குறை மற்றும் அதிகரித்த பணவீக்கம் போன்ற நிதி மாறுபாடுகளின் அதிகரித்த உறுதியற்றதன்மை
- அதிக அரசாங்கக் கடன் மற்றும் கொவிட் 19 தொடர்பான விரிவாக்க நிதி மற்றும் பணவியல் கொள்கைகள் காரணமாக உயர்வடைந்த பாரிய நிதி அபாயங்கள்
- கொள்கை மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மையால் அதிகரித்த மந்த பொருளாதார மீட்சி காரணமாக தணிந்த வணிகச் செயற்பாடுகள் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை

**வாய்ப்புக்கள்**

- வணிக மாதிரிகளை மறுகட்டமைத்தல் மற்றும் வருவாய் ஆதாரங்களை வேறுபடுத்துதல்
- பொருத்தமான மற்றும் வினைத்திறனுள்ள இடர் மாதிரிகளை பயன்படுத்துதல்
- புதிய வியாபார முயற்சிகளுக்கு ஆதரவளிக்க கடன் தீர்வுகளை உருவாக்குதல்
- வாடிக்கையாளர் நிதி மேலாண்மை மற்றும் சூழலியல் மாற்றங்களுக்கு ஆதரவை விரிவுபடுத்தல்

**இடர்கள் / சவால்கள்**

- புவியியல் முழுதும் உலகளாவிய விநியோக சங்கிலிகள் மற்றும் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட இடையூறுகள் இதன் விளைவாக நோய்ப்பரவல் மற்றும் மாறுபட்டுக் கொண்டிருக்கும் புவிசார் அரசியல் சூழல் உலக வளமை மற்றும் ஒன்றிணைவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன
- சொத்துக்கள் மதிப்பீடுகளின் திடீர் இயக்கங்களில் வங்கி நிதிநிலைமைக் குறிப்புகளின் வெளிப்பாடு
- பாரிய பொருளாதார உறுதியற்ற தன்மையானது விலையுயர்ந்த நிதி அணுகலை உருவாக்கியதன் காரணமாக இலங்கையின் இறையாண்மை தரமிறக்கப்பட்டுள்ளது

**எமது மூலோபாய வெளியீடுகள்**

- பொருளாதார சவால்கள் வினைத்திறனாக நிர்வகிக்கப்பட்டன என்பதை உறுதிசெய்யும் பிரதான சுட்டிகளை கண்காணித்தல்
- உலகளாவிய பிராந்திய உள்ளூர் அபிவிருத்திகளை தொடர் மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் உருவாகின்ற அபாயங்களைக் கண்டறிந்து குறைக்கவும் வாய்ப்புக்களை மூலதனமாக்குகின்ற அபாய உத்திகளையும் தன்மைகளையும் கண்காணித்தலும் முகாமை செய்தலும்
- நோய்ப்பரவலிலிருந்து பொருளாதாரம் மீட்சியுறுவதால், வணிக வாய்ப்புக்களுக்கான புதிய சந்தைகளையும் வாய்ப்புக்களையும் உருவாக்குதல்
- நுகர்வோர் விளைவுகள் மற்றும் வினைத்திறனான மூலதனம் மற்றும் வள ஒதுக்கீடுகளை மேம்படுத்துவதற்கான பிரதான வங்கிச் சேவைகளில் எமது கவனத்தைப் பேணுதல்

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

2020 உடன் ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

**பாதிக்கப்பட்ட மூலதனங்கள**

**குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள**

**பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்**

### ஆளுகையின் செயல்பாடுகள்

சபையானது நோய்ப்பரவலின் தாக்கத்தையும் அதனுடன் தொடர்பான முடக்கத்தையும் அதாவது வணிகத்தில் ஈடுபடும் எமது இயல்பும் குறிப்பாக கடனுடன் தொடர்புபட்ட இடர்களும் எமது வாடிக்கையாளர்கள் கடனை மீள்செலுத்தும் தன்மையையும் உன்னிப்பாக கண்காணிக்கிறது. பொருளாதாரப் பாதிப்பைக் குறிப்பிடுவதற்கு மீளாய்வு செய்யப்பட்ட வணிக மூலோபாயத்திட்டங்களையும் அதன் பின்னரான திருத்தங்களையும் சபை ஒப்புதல் அளித்தது.

அதிகரித்த அறிக்கைகளின் எண்ணிக்கையானது சபை ஒருங்கிணைந்த நஇடர் முகாமைக்குழு (BIRMC) முக்கிய மற்றும் பிரதான இடர் பகுதிகளை முழுமையாக மதிப்பிடுவதற்கு அனுமதியளித்தது. மேலும் செயற்பாட்டு இழப்புக்கள் மற்றும் மோசடி ஆபத்துக்கள் இரண்டும் அதேபோல் முகாமை நடவடிக்கைகள் மற்றும் இவ் இடர்களால் பாரிய பொருளாதார நிபந்தனைகளில் ஏற்பட்ட தாக்கத்தை உன்னிப்பாக கண்காணிப்பதற்கு அதனுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வங்கி நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட முகாமை அனுமானங்கள், மதிப்பீட்டு முறைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன சபைக் கணக்காய்வுக் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டது.

### கண்ணோட்டம்

2022ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை பணவீக்கம் பாதிக்கும். ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான சவால்களை உருவாக்கும். மிகவும் பலவீனமான பொருளாதார குறிகாட்டிகள் 2022 ல் பணவியல் கொள்கைகளை மேலும் இறுக்கமாக்குவதற்கு நாணயநிதியத்தை நிர்ப்பந்திக்கலாம். பணவியல் கொள்கை உயர்வு, எதிர்மறை பணப்புழக்கம் மற்றும் தனியார்துறை கடனுக்கான அதிகரித்த தேவை ஆகியவற்றுக்கு மத்தியில் 2021ன் இரண்டாம் பகுதியில் சராசரி நிறையளிக்கப்பட்ட முதன்மை வீதம் (AWPR) உயர்வைக் கண்டது. சராசரி நிறையளிக்கப்பட்ட முதன்மை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இதே வேகத்தில் தொடரலாம்.

இலங்கையின் குறைந்த வெளிநாட்டு இருப்புநிலை, நாணயத் தேய்மானம், அதிக வெளிநாட்டு நாணயக் கடனை திருப்பி செலுத்துதல், மற்றும் தற்போதைய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் இறக்குமதி அதிகரிப்பு என்பன பிரதான விடயங்களாகும்.

இலங்கையின் கடன் தரமதிப்பீடு குறைக்கப்பட்டமை வெளியக நிதிகளைத் திரட்டுவதை மிகவும் சவாலானதாக மாற்றியுள்ளது. இது மேலதிக அந்நிய கையிருப்பு குறைவடைவதற்கு பற்றாக்குறையை வழிவகுக்கும். 2019ன் வரிக்குறைப்புக்களைத் தொடர்ந்து அரசாங்க செலவினங்களைச் சமாளிக்க வரிவருவாய் போதுமானதாக இல்லை. மேலும் நோய்பரவலைத் தொடர்ந்து உள்நாட்டுச் செலவுகள் அதிகரித்தன. இது 2022 வரை தொடரும் இரட்டை இலக்க கணக்குப் பாதீட்டு பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

மேலும் குறைவடையும் நாணய வரவுகளால் மேலதிக சவால்கள் உருவாகலாம். அரசாங்கத்தின் மீள்செலுத்தும் திட்டம் தெளிவற்ற அதிக ஆபத்துள்ள சூழலை உருவாக்குவதாக இருக்கிறது. எனினும் இலங்கை ரூபாவை சுதந்திரமாக மிதக்கவிடுதல் தொடர்பான அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் ஆகியவை இலங்கையின் பொருளாதாரத்திற்கு சாதகமான விளைவை உருவாக்கும். கணிசமான நிகர வெளிநாட்டு வரவு மற்றும் வெளித்துறையில் மேம்பாடுகள் மற்றும் மதிப்பீட்டுக் கண்ணோட்டத்தில் மேம்படுத்தல் ஆகியவை பொருளாதார மீட்சிக்கு துணை புரியும்.

## 2. அதிகரித்த ஒழுங்குமுறை நுண்ணாய்வு

### எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள

பாசல் சீர்திருத்தங்கள், கணக்கியல் நியமங்களை மாற்றியமைத்தல், நாணய மற்றும் நிதிக் கொள்ளைகளில் மாற்றங்கள், நிதிக்குற்றங்கள் குறித்த விதிமுறைகள், வளர்ந்துவரும் தனியுரிமை, இணைய பாதுகாப்பு மற்றும் நடத்தை தொடர்பான சட்டங்கள், உள்ளிட்ட வளர்ந்துவரும் ஒழுங்குமுறை மற்றும் அறிக்கையிடல் பரப்பு எங்கள் வணிக மாதிரியை பாதிப்பதுடன் இணக்கமின்மை இடருக்கு வழிவகுக்கும். ஒழுங்குமுறை மாற்றங்கள் வட்டி விகிதங்கள் மற்றும் வரிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும் இறுதியில் வங்கியின் இலாபத்தை பாதிக்கும். அரசாங்க கொள்கைகளில் மாற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை மற்றும் சமூக பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைப்பு வணிக மாதிரியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

| போக்கு | வாய்ப்புக்கள் | இடர்கள் /சவால்கள் | எமது மூலோபாய வெளியீடுகள் |
|---|---|---|---|
| • பாரிய பொருளாதார சூழலில் ஏற்பட்ட அதிகரித்த அழுத்தம் காரணமாக கட்டுப்பாட்டாளர்கள் நிதித்துறையின் ஸ்திரத்தன்மை, லாபம் மற்றும் வலுவான வங்கிக்கட்டமைப்பை உறுதி செய்ய விதிமுறைகளை உருவாக்கலும் மீளமைத்தலும்<br>• ஒழுங்கமைக்கும் அதிகாரங்களின் பன்முகத்தன்மையும் உறுதியான விவேகமான விதிமுறைகளும் | வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு உறுதியான ஆதரவு வழங்கல்<br>வங்கியின் ஆளுகைச் செயற்பாடுகள் மற்றும் நன்னெறிக் கட்டமைப்பில் தொடர்ச்சியான முன்னேற்றம் | ஒழுங்காற்றும் எதிர்பார்ப்புக்களில் எழும் சவால்கள் மற்றும் மாற்றமடையும் சமூக தரநிலைகளும் எதிர்பார்ப்புக்களும் | • கட்டுப்பாட்டாளர்கள், அரசாங்கம் மற்றும் பரிந்துரைக் குழுக்களுடன் ஒத்துழைத்துச் செயல்படல |

| போக்கு | வாய்ப்புக்கள் | இடர்கள் /சவால்கள் | எமது மூலோபாய வெளியீடுகள் |
|---|---|---|---|
| • வாடிக்கையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் வலுவான பாதுகாப்பு<br>• பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பவற்றை எதிர்கொள்ள ஒழுங்கமைத்தல்<br>• வெளிப்படைத்தன்மையின் தேவைப்பாடு<br>• காலநிலை மற்றும் சூழலிய, சமூக மற்றும் ஆளுகை (ESG) அபாயங்களை ஒன்றிணைத்தல் | புதிய அபாயங்கள் பற்றிய தொடர்ச்சியான முகாமை மற்றும் நுகர்வோர் பற்றிய மேலதிக தெளிவு | காலநிலை மற்றும் சூழலிய, சமூக மற்றும் ஆளுகை அர்ப்பணிப்புகளை அடைய தவறியமை அதனுடன் தொடர்புடைய எதிர்பார்ப்புக்கள், வாடிக்கையாளர் மற்றும் சமூக பாதிப்புக்கு வழிவகுப்பதுடன் பங்குதாரர் பெறுமதியும் குறைதல்<br>அதிக மூலதன தேவைப்பாடுகள் மற்றும் கடுமையான பணப்புழக்க முகாமைத்துவம்<br>அதிகரித்த ஒழுங்கு-முறைகள், இணக்கப்-பாட்டிற்கான கேள்வியை அதிகரித்ததுடன் வங்கியியல் செலவுகளையும் அதிகரித்தல்<br>புதிய, குறைவாக ஒழுங்கமைக்கப்-பட்டவர்களுடன் சிதைவடைந்த போட்டி | • சூழலிய, சமூக மற்றும் ஆளுகை கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை வலுப்படுத்தலும் வினைத்திறனான அமுலாக்கத்தை உறுதிசெய்தலும் மற்றும் எமது முன்னேற்றங்களை வெளிப்படையாக தெரியப்படுத்தல்<br>• ஒழுங்குமுறைத்திட்டங்கள் எமது மூலோபாயத் திட்டங்களில் காரணியாக இருந்து அமுல்படுத்தப்படும்<br>• நிதித்துறையின் நிலைத்தன்மையை பலப்படுத்த கட்டுப்பாட்டாளர்களுடனும் கொள்கை வகுப்பாளர்களுடனும் தொடர்ச்சியாக ஈடுபடல் |

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

உடன் 2020 ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

**பாதிக்கப்பட்ட மூலதனங்கள்**

**குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள்**

**பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்**

## ஆளுகையின் செயல்பாடுகள்

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக்குழு (BIRMC) மற்றும் சபைக் கணக்காய்வுக் குழு ஆகியவை அந்தந்த ஆணைகளுக்குள் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் ஒழுங்குமுறை மாற்றங்களைக் கண்காணிக்கின்றன. 2021 மதிப்பாய்வுகளில் வங்கியின் கடன் தரம், சட்டபூர்வ மற்றும் பொருளாதார மூலதன கலவைகள், ஒழுங்குமுறைத் தேவைகள், அழுத்த சூழ்நிலைகள், பாசல் III திருத்தங்கள் (இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்களை நிர்ணயம் செய்வதற்கான விதிகளை மீளாய்தல்), மற்றும் வட்டிவிகித சீர்திருத்தங்கள் என்பனவும் ஏனையவையும் உள்ளடக்கப்படுகின்றன.

### கண்ணோட்டம்

2022ல் ஒரு புதிய வங்கிச்சட்டம் இயற்றப்படும். அதில் வங்கிகளுக்கான விதிமுறைகளை விரிவுபடுத்தவதற்கான ஏற்பாடுகள் காணப்படும். மத்தியவங்கி நெருக்கடி தயார்நிலை மற்றும் வங்கிகளின் பின்புலத்தை வலுப்படுத்த பல விதிமுறைகளையும் அறிமுகப்படுத்தும்.

சர்வதேச நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப தகவல் தொழிநுட்பம் மற்றும் வங்கிகளின் பாதுகாப்பு தொடர்பாக ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும். முன்மொழியப்பட்ட விதிமுறைகள் வங்கிகளை தங்கள் தகவல் முறைமைகள் மற்றும் தொடர்புடைய தொழிநுட்ப தளங்களை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் ஊக்குவிக்கும் மேலும் மேம்படுத்தப்பட்ட இடர் முகாமையை செயற்படுத்தும்.

## 3. தகர்த்தெறியும் தொழிநுட்பங்கள் மற்றும் போட்டித்தன்மை

**எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள்**

வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளர் தொடுபுள்ளிகள், சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல், மற்றும் கொடுப்பனவு முறைத் தெரிவுகள் போன்ற பாரம்பரிய வங்கியியலின் தடைகளை சமாளிக்கும் திறனை எண்ணியல் தொழிநுட்பம் கொண்டுள்ளது. தொழிநுட்பத்தின் அதிவேக முன்னேற்றம், மற்றும் கடுமையான போட்டியுடன் தொழிற்பாட்டு இடர்நிலைகளையும் அதிகரிக்கும் அதேவேளை எமது வாடிக்கையாளர்களுக்கு பொருந்தக்கூடிய எமது திறனையும் தொழிற்துறையில் எங்கள் போட்டித்தன்மையையும் பாதிக்கிறது.

| போக்கு | வாய்ப்புக்கள் | இடர்கள் /சவால்கள் | எமது மூலோபாய வெளியீடுகள் |
|---|---|---|---|
| • நிலையான புதிய தொழிநுட்பங்களான மொபைல் தொழிநுட்பம், FinTech தொழிநுட்பம், பிளாக் செயின் தொழிநுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பாரம்பரிய வங்கி அமைப்புக்களை சவால்விடும் ரோபோடிக்ஸ்<br>• புதுமையான தொழிநுட்பத்துடன் கூடிய பாரம்பரியமற்ற பங்கேற்பாளர்களின் வருகையும் பரந்தளவிலான நிதி பொருட்களையும் சேவைகளையும் வழங்குகின்ற வணிக மாதிரிகளும்<br>• பெறுமதிசேர் சங்கிலியில் அதிகரித்து வரும் பங்கேற்பாளர்கள் | எமது செயற்பாடுகளை முன்னேற்றுவதானது அளப்பரிய வாடிக்கையாளர் அனுபவத்தை எமக்கு வழங்க அனுமதிக்கும்<br>விரிவான நாடளாவிய அடைவைக் கொண்ட உண்மையிலேயே பல்சேவைகளை உள்ளடக்கிய வங்கியாக திகழல்<br>புதுமைகளை துரிதப்படுத்துவதுடன் வங்கியின் இயக்கத்தையும் அதிகரித்தல்<br>தன்னியக்கமும் சிக்கலானவற்றில் அதிக கவனமும், பெறுமதிசேர் பரிவர்த்தனைகளும் நீண்டகால செலவைக் குறைக்கும் | தொழிநுட்பமானது உட்நுழைவதற்கான தடைகளை அகற்றுவதுடன் நிதி சேவைகளில் அதிக போட்டியை உருவாக்கல்<br>தனிப்பட்ட தரவு, இணையப் பாதுகாப்பு, மோசடி அபாயங்கள், நிதி சார்ந்த குற்றங்கள் போன்றவற்றின் பாதுகாப்பு<br>அதிகரித்த போட்டித்தன்மையும் செலவீனங்களும் இலாபத்தையும் சந்தைப் பங்கினையும் குறைத்தல்<br>பிரிவினைகளும் குறுக்கு விற்பனைக்கான வரையறுக்கப்பட்ட சலுகைகளும் வாய்ப்புக்களும்<br>தகவல் தொழிநுட்பத்தில் இயக்கம் மற்றும் நிலைமாற்றம் சார்ந்த சவால்கள் | • உட்கட்டமைப்பையும் தொழிநுட்பத்தையும் மேம்படுத்துவதன் ஊடாக பொருத்தமானதாகவும் புதியவர்களிடமிருந்து போட்டிகளை முகம் கொடுக்கவும் இயலும்<br>• தொழிநுட்ப தளங்களில் தொடர்ச்சியான முதலீடும் செயன்முறைகளையும் கட்டுப்பாடுகளையும் மேம்படுத்தலும் FinTech உடன் ஒன்றிணைவதும் உன்னிப்பான கண்காணிப்பும்<br>• இணைய அபாயங்களை தடுக்கவும் நிர்வகிக்கவும் உன்னிப்பான கண்காணித்தலும் பொருத்தமான கட்டுப்பாடுகளை நிறுவுதல்<br>• எண்ணியல் பயனர் நட்புடைய எமது விரிவான பல்சேவை விநியோக இணைப்புக்கள் ஊடாக சாத்தியமான வாடிக்கையாளர்களை சரியான நேரத்தில் அணுகல் |

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

உடன் 2020 ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

**பாதிக்கப்பட்ட மூலதனங்கள்**

**குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள்**

**பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்**

### ஆளுகையின் செயல்பாடுகள்

கொவிட்19 வணிகம் சார்பான எமது அணுகுமுறையை மாற்றியமைத்தது. எமது பொருத்தப்பாட்டை பேண எமது மூலோபாய கவனத்தையும் செயல்படுத்தும் திறனையும் கூர்மைப்படுத்தியது. தகவல் பாதுகாப்பு மேம்பாடு உள்ளிட்ட எண்ணியல் மாற்றம் மற்றும் முக்கிய வங்கிச் செயலாக்கங்கள் தொடர்பான பெரும்பாலான திட்டங்கள் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றன. 2021இல் தேவைப்பட்ட வணிகம் மற்றும் எண்ணியல் மயமாக்கலின் ஆழமான ஒருங்கிணைப்பு தொழிற்துறையில் தேவையான மாற்றத்தின் வேகத்தை அடைய புதிய திறன்களை ஊக்குவிப்பதை கவனம் செலுத்தி எண்ணியல் மயமாக்கலை அதிகரித்தலில் சபை கவனம் செலுத்தியது. அதிகரித்த இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நடவடிக்கைகளை செயல்படுத்த நிர்வாகம் மேற்பார்வை வழங்கியது.

### கண்ணோட்டம்

பொருளாதார மந்தநிலை இருந்தாலும் கொவிட் 19 இயக்க கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து தூண்டப்பட்ட எண்ணியல் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளின் அதிகரித்த கேள்வியானது தகவல் தொடர்பு தொழிநுட்பத்தை விரிவாக்க தொடர்ந்து எதிர்பார்க்கிறோம். வசதியான எங்கேயும் எப்போதும் வங்கிச்சேவைகள் ஸ்மாட் மொபைல் சாதனங்களின் ஆழமான ஊடுருவல் எளிய தரவுக்கான அணுகல் என்பவற்றால் ஏற்படும் கேள்வியினால் எண்ணியலை உட்சேர்த்து விருத்தி செய்வதை நாம் எதிர்பார்க்கிறோம்.

எண்ணியல் உருமாற்ற உத்தி உருவாகும் அச்சுறுத்தல்கள் மற்றும் காரணிகளை கருத்திற்கொண்டுள்ளது.

சரியான சமநிலையுடன் வினைத்திறனான அமைப்புக்கள், பொருத்தமான திறன்கள் மூலமாக திட்டமிடப்பட்டு செலவுசெய்யப்பட்ட மற்றும் வணிக நன்மைகளுடன் தொடர்பான எண்ணியல் மூலதனம் என்பவற்றுடன் நாம் சீரமைக்க வேண்டும். தொழிநுட்ப முன்னேற்றங்கள் மற்றும் புவிசார் அரசியல் அபிவிருத்திகளுடன் இணைய ஆபத்துக்கள் தொடர்ந்து உருவாகி வருகின்றன.

## 4. மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள்

### எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள்

மாற்றமடைந்துவரும் எதிர்பார்ப்புக்கள் மற்றும் அதிகரித்த போட்டித்தன்மை வாடிக்கையாளருடன் தொடர்புபட்டதாக இருக்க வங்கிகளுக்கு சவால்களை உருவாக்கும் லாபத்தை மேம்படுத்துவதற்கும் நீண்டகால மதிப்பை இயக்குவதற்கும் வாடிக்கையாளரை மையப்படுத்திய கலாசாரத்தை உருவாக்குவது முக்கியமானது.

**போக்கு**

- பொருத்தமான, தனிப்பயனாக்கப்பட்ட, செயலூக்கமான அணுகுமுறை ஒன்றின் அதிகரித்த தேவை
- விரைவான, எளிய, அனைத்தும் உள்ளடக்கிய இலவசமான சேவைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது
- தனிப்பட்ட தரவை பயன்படுத்தவும் பாதுகாப்பிற்குமான தேவை
- வியாபாரக்குறியை மீறிய அதிகரித்த நுகர்வோர் சக்தி

**வாய்ப்புக்கள்**

- வாடிக்கையாளர் ஆதரவுக்கான வலுவூட்டப்பட்ட குழுவினரோடு அனைத்தையும் உள்ளடக்கிய வங்கியாக நிலைநிறுத்தல்
- நிபுணத்துவம் மற்றும் மற்றும் வணிகப் பிரிவுகளின் பன்முகத்தன்மை
- வாடிக்கையாளரின் ஒவ்வொரு வாழ்க்கைக் கட்டங்களிலிலும் வங்கி அல்லாத சேவைகள் உட்பட ஒரு முழுமையான தீர்வை வழங்க மேம்படல்
- வலுவான நெறிமுறை கலாசாரத்தையும் தரவு பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவதற்கு வினைத்திறனான தகவல் தொழிநுட்ப அமைப்புக்களை பயன்படுத்தல்

**இடர்கள் / சவால்கள்**

- குறைவான கிளை வர்த்தகம்
- மாற்றங்களில் வாடிக்கையாளர் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் திறன்
- அதிகரித்த இணைய தாக்குதல்கள், ஊழல் மற்றும் மோசடி முயற்சிகள்

**எமது மூலோபாய வெளியீடுகள்**

- இணைய பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான மற்றும் நம்பகமான வங்கிச் சேவைகளுக்கான வாடிக்கையாளர் தேவையை பூர்த்தி செய்தல்
- வினைத்திறனான அணுகக்கூடிய வங்கிச் சேவையை வழங்கக்கூடிய புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட எண்ணியல் சேவை, தயாரிப்பு மற்றும் செயன்முறைகளை விரிவாக்கல்

| போக்கு | வாய்ப்புக்கள் | இடர்கள் /சவால்கள் | எமது மூலோபாய வெளியீடுகள் |
|---|---|---|---|
| • அதிக வாடிக்கையாளர்கள் எண்ணியல் வடிவங்களுக்கு மாறியுள்ளதால் நெருங்கிய வாடிக்கையாளர் ஆதரவு தேவை<br>• கொள்வனவு சக்தி, உடனிணைப்பு, பாதுகாப்பு (குறிப்பாக தரவு பாதுகாப்பு) என்பவற்றிற்காக வங்கிகளிடமிருந்து பாரிய அர்ப்பணிப்பு எதிர்பார்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை | புதிய தொழிநுட்பங்களையும் செயற்கை நுண்ணறிவையும் பயன்படுத்தி மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கல்<br>வேறுபட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்கல் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் உறவைப் பேணுவதன் மூலம் வாடிக்கையாளரை தக்க வைத்தல் | குறைந்த மாறுதல் செலவு காரணமாக எண்ணியல் முறையில் இயக்கப்படும் போட்டியாளர்களால் அதிகரித்த போட்டித்தன்மை<br>விலை அழுத்தத்தை அதிகரிக்கின்ற புதிய கட்டண மாதிரிகள் | |

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

உடன் 2020 ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

**பாதிக்கப்பட்ட மூலதனங்கள்**



**குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள்**



**பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்**



## ஆளுகையின் செயல்பாடுகள்

புதிய இயல்பில் வாடிக்கையாளரின் எண்ணியல் இசைவின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையை சபை அனுமானித்தது. அரசுக்கு சொந்தமான நிறுவனமாதலால் வாடிக்கையாளரின் வங்கித்தீர்மானங்கள் என வரும் போது தீர்க்கமான காரணிகளாக சமூக ஆதரவை விரிவுபடுத்துதல், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல் என்பவற்றை சபை வலியுறுத்துகிறது. அரசாங்கத்தின் தூண்டுதல் நடவடிக்கைகளை மாற்றுதல், சகிப்புத்தன்மையை அளித்தல், நிவாரண முயற்சிகளுக்கு நன்கொடையளித்தல் மூலம் நெருக்கடி ஊடாக தனது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவு வழங்கி வங்கி முன்னணியில் இருந்தது. நிர்வாகம் வங்கியின் நற்பெயர் இடரை பாதுகாப்பதில் தீவிர விழிப்புணர்வில் இருந்தது.

## கண்ணோட்டம்

வேறுபட்ட வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களுடனும் மேம்பட்ட தொழிநுட்ப தழுவல்களுடனும் வங்கியின் எதிர்காலமானது மாற்றமடையும். மாறும் வணிகச் சூழலில் வெற்றி பெற எண்ணியல் மாற்றமானது முக்கிய கட்டாயமாகும். தொழிநுட்பம் வணிக வளர்ச்சியின் உந்துசக்தியாகவும் பரந்த அளவிலான சேவைகளை வழங்குவதில் மையமாகவும் தொடரும். நுகர்வோருக்கு வெற்றிகரமாக சேவை செய்ய எண்ணியலும் மனிதவலுவும் வெற்றிகரமாக ஒருங்கிணைப்பதுடன் வங்கியின் இயக்கமும் வேண்டும். வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய வாடிக்கையாளருக்காக வடிவமைக்கப்பட்ட சேவைகளை வழங்குவதோடு தயாரிப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்த எண்ணியல் தளங்களையும் தரவுகளையும் பயன்படுத்த வேண்டும்.

## 5. குடியியல்சார் கட்டமைப்பில் மாற்றங்கள்

### எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள்

சமூகத்தின் மக்கள்தொகை சேமிப்பு, முதலீடுகள் மற்றும் கடன் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் சேவை வழங்களில் நீண்டகால தாக்கங்களை உருவாக்குகிறது. மக்கள் தொகை கட்டமைப்பு, மற்றும் நடத்தை மாற்றங்கள் உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் விநியோக முறைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பெறுமதி முன்மொழிவுகளின் தன்மையைப் பாதிக்கின்றன. நாங்கள் உள்நாட்டு சமூகங்களிலிருந்து திறன்களை நியமிக்கிறோம். எனவே மக்கள்தொகை எமது பெறுமதி உருவாக்கம் மற்றும் வணிக வளர்ச்சியைப் பாதிக்கிறது. சமுதாயத்தின் போக்குகள் எங்கள் வங்கியின் சமூக பொருத்தத்தை தீர்மானிப்பதுடன் திறமைகளை ஈர்க்கவும் தக்கவைக்கவும் தவறினால் எமது அடுத்தடுத்த திட்டமிடல் மற்றும் விரிவாக்கல் திட்டமிடலுக்கு இடையூறு ஏற்படுத்தும்.

#### போக்கு

- வயதான மக்கள் தொகை அதிகரிப்பு, அதிகரித்த தங்கிவாழ்தல், குடும்ப மாதிரிகளின் பல்வகைத்தன்மை, வேலைவாய்ப்பு வடிவங்கள்
- உழைப்பாளர் வர்க்கத்தில் அதிகரித்த மில்லினியல்கள் மற்றும் Z தலைமுறையினர் எண்ணிக்கை
- நகர்ப்புறங்களில் குவிந்துள்ள வேலைவாய்ப்புக்கள்
- திறனாய்வுத் திறன்களின் பற்றாக்குறை மற்றும் திறமையானவர்களை தெரிவு செய்வதிலுள்ள சவால்கள்
- நடுத்தர வர்க்கத்தினரிடையே கொள்வனவுச் சக்தி இழப்பு மற்றும் சமூக சமத்துவமின்மை

#### வாய்ப்புக்கள்

- உலகளாவிய வங்கி மாதிரியை மீள் வலியுறுத்தல், நீண்ட காலமாக வாடிக்கையாளரின் கருத்துக்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் கவனம் செலுத்துதல்
- வாடிக்கையாளரின் புரிதலை மேம்படுத்தி அவர்களுக்கு சிறந்த ஆதரவை அளித்தல்
- தே சே வங்கியின் அடையாளத்தை கட்டியெழுப்புவதற்கான திறன்களை விருத்தி செய்தலும் முதலீடுகளைத் தக்க வைத்தலும் தேசத்தை மேம்படுத்தலும்
- பல்வகைமைப்பட்ட வாடிக்கையாளர்களை தொடுபுள்ளிகள் ஊடாக இணைத்து நாடளாவிய தழுவல்
- வங்கித்துறை, சமூக மற்றும் தொழில் முனைவோர் அணுகக்கூடிய தன்மையை விருத்தி செய்தல்

#### இடர்கள் /சவால்கள்

- சுற்றுச்சூழல் மற்றும் சமூக அம்சங்கள் தொடர்பான வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை அடையாளப்படுத்துவதை மேம்படுத்த வேண்டும்
- குறிப்பிட்ட பிரதேசங்களில் வங்கி எல்லைகளில் சரிவு
- கல்வி, திறன் சார்ந்தவர்களின் அதிகரித்த இடப்பெயர்வு புதிய மற்றும் வளர்ந்துவரும் திறனாளர்களை தக்கவைத்து கொள்ளவும் தெரிவு செய்யவும் சவாலானதாகவும் பெருஞ் செலவாகவும் இருத்தல்
- இடர் மதிப்பீட்டு மாதிரிகளை மீளமைப்பதும் வாடிக்கையாளர்களின் விருப்பத் தேர்வுகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தலும்

#### எமது மூலோபாய வெளியீடுகள்

- தொடர்ச்சியான பெறுமதிசார் தயாரிப்பு அடைவுகளோடும் விரிவான விநியோக வழிகளூடும் அவர்களின் ஒவ்வொரு வாழ்க்கை கட்டங்களின் தேவைகளையும் வெவ்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளையும் பூர்த்தி செய்தல்
- இளைய தலைமுறையினரின் கணிசமான அளவு சந்தைப் பங்கைக் கைப்பற்ற புதுமையான தயாரிப்புக்களை உருவாக்குதலும் வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதலும்
- இளைய உழைக்கும் மக்களுக்கு நிதித்திட்டத்தை உருவாக்கும் தயாரிப்புக்களுக்கும் ஓய்வூதியத் திட்டங்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் வழங்குவதை விரிவாக்குதல்
- பணியாளர் நல்வாழ்வை ஊக்குவிக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்
- ஊழியர்களின் திறன்களை மீளவும் உயர்த்தவும் திறன் அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ நிகழ்ச்சிகளுக்கு தொடர்ச்சியாக முதலிடுதலும் எதிர்காலத்திற்கு ஏற்ற பணியாளர்களை உருவாக்குதலும்

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

உடன் 2020 ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

#### பாதிக்கப்பட்ட மூலதனங்கள்

#### குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள்

#### பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்

### ஆளுகையின் செயல்பாடுகள்

சபையானது மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளையும் வினைத்திறனான தீர்வுகளை வழங்க முன்வைக்கவும் உரிய பரிசீலனையைத் தந்துள்ளது. சபை தொடர்வு திட்டங்களுக்கும் மனிதமூலதன மாற்றங்களை வழங்கும் முயற்சிகளுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

### கண்ணோட்டம்

அதிகரித்துவரும் வயதான மக்கள் தொகையுடன் இலங்கை மக்கள்தொகை மாற்றத்தின் மேம்பட்ட கட்டத்தை எட்டியுள்ளது. இது சேவை வழங்கல், ஓய்வூதியம், வேலை வாய்ப்பு மற்றும் பொதுநிதி என்பவற்றுக்கு நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2050 ஆண்டளவில் முதியவர்களின் வீதம் 23% ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது இளைஞர் சனத்தொகையின் 17% ஐ விட அதிகமாகும்.

பொருளாதார வளர்ச்சியில் சனத்தொகை ஏற்படும் தாக்கம் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதில் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான தொழிலாளர் பங்களிப்பு விகிதங்களிலுள்ள இடைவெளியைக் குறைப்பது முக்கியம்.

தொழிலாளர் சந்தைகளில் பெண்கள் நுழைவதை வளர்க்கும் கொள்ளைகளை வைத்திருப்பது முக்கியம். கல்வி அடைவில் அதிகரிப்பானது, இளையவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் பங்கேற்பு விகிதங்களை உயர்த்தலாம் என்பதுடன் அதிக உற்பத்தித் துறைகளை நோக்கி உழைப்பை மறுஒதுக்கீடு செய்வது உற்பத்தித்திறன் ஆதாயங்களுக்கு வழிவகுக்கும்.

---

## 6. காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறுதன்மை

### எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள்

காலநிலை மாற்றமானது சமூகங்களின் நிலைபேறுதன்மைக்கு குறிப்பாக கடன் சார்ந்த இடர்களில் கடுமையான சவால்களை ஏற்படுத்துகிறது. வங்கிகள் தமது தயாரிப்புகளை வழங்குவதில் முதலீட்டு தீர்மானங்களில் பற்றாக்குறை வளங்களை பயன்படுத்துவதில் சமூக மற்றும் சூழல் ரீதியாக பொறுப்பு வகிக்கின்றனர். இதனால் ஐக்கிய நாடுகளின் நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளுடன் (UN SDGs) நிலைபேறு வணிக நடைமுறைகளை இசைவாக்குவதற்கு அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விதிமுறைகளைக் கடைபிடிப்பதில் பாரிய தேவை உள்ளது. இவற்றுக்கு இணங்க தவறும் பட்சத்தில் பங்காளர் நம்பிக்கையில் பாதிப்பும் நற்பெயருக்கு ஆபத்தும் ஏற்படும். காலநிலை மாற்றம், பற்றாக்குறை வளங்கள், சுற்றுச் சூழல் அமைப்புக்களின் பாதுகாப்பு, சமத்துவமின்மை மற்றும் மனித உரிமைகள் என்பவற்றிற்கு தீர்வுகளைக் கண்டறிதல் வணிக தேவை ஆகிவிட்டது. ஆதலால் எமது பெறுமதிசேர் உருவாக்க மாதிரிகளுக்கு சமூக மற்றும் சுற்றுச்சூழல் விடயங்களை ஒன்றிணைக்கிறோம். குறைந்த காபன் பொருளாதார மாற்றத்திற்கு நாம் முக்கிய பங்கு வகிக்கிறோம்.

| போக்கு | வாய்ப்புக்கள் | இடர்கள் / சவால்கள் | எமது மூலோபாய வெளியீடுகள் |
|---|---|---|---|
| • காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் பல்லுயிர்வகைமையைப் பாதுகாக்கவும் உலகளாவிய அர்ப்பணிப்பு<br>• சக்தி மாற்றம் மற்றும் பல்லுயிர்வகைமை பாதுகாத்தல் பற்றிய ஒழுங்குமுறையான கட்டுப்பாடுகளை வலுவூட்டல்<br>• காலநிலை அனர்த்தம் தொடர்பான வளர்ந்துவரும் விழிப்புணர்வு | நிறுவன வாடிக்கையாளர்கள், பெரு நிறுவனங்கள், குறைந்த காபன் பொருளாதாரத்தை உள்வாங்கக்கூடிய சிறிய வியாபாரங்கள் என்பவற்றை ஆதரிக்க தீர்வுகளுக்கு நிதியுதவியும் முதலீட்டு அபிவிருத்தியும்<br>பாரிஸ் ஒப்பந்தத்துடனும் சுற்றுச்சூழல் நிலைபேறுதன்மைக்கு ஆதரவளிக்கவும் பசுமைப் பொருளாதாரத்தை உள்வாங்குவதற்கு நுகர்வோரைச் செயல்படுத்த தயாரிப்புக்களும் சேவைகளும்<br>புதிய பொருளாதார மாதிரிகளை ஆதரிக்க நிதி கண்டறிதல் (குறிப்பாக நிலையான விவசாயம்) | காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய மாறுதல் அபாயங்களில் ஒழுங்குமுறையான அரசியல் சமூக கவனத்தை அதிகரித்தல்<br>காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட வணிக மற்றும் சில்லறை விற்பனை வாடிக்கையாளருக்கு கடனுடன் தொடர்புடைய சாத்தியமான நிதி அபாயங்கள்<br>வாடிக்கையாளர்களுக்கு அல்லது வங்கிக்கு காலநிலை மாற்ற விளைவுகளுடன் தொடர்பான செலவுகள் அதிகரிப்பு மற்றும் பொருளாதார இழப்புக்கள்<br>குறைந்த காபன் மாறுதல் பொருளாதாரத்தின் இயல்பு மற்றும் காலத்தின் மீது நிச்சயமற்ற தன்மை | • பொருத்தமான நிதி தீர்வுகளை உருவாக்குவதன் மூலம் குறைந்த காபன் பொருளாதாரத்திற்கும் நிலையான எதிர்காலத்திற்கும் உதவி சார்ந்த தீர்வுகளை ஆதரித்தல்<br>• காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய அபாயங்களையும் வாய்ப்புக்களையும் நிர்வகிக்க எமது கொள்கைகள், செயன்முறைகள், தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை வலுப்படுத்துதல்<br>• இலங்கையால் இணங்கப்பட்ட சர்வதேச ரீதியாக ஒப்புக் கொள்ளப்பட்ட நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளை ஆதரிக்க பசுமை பொருளாதாரத்-திற்கான ஒழுங்குமுறையான மாற்றத்திற்கு அரசாங்கத்துடன் ஈடுபடுதல் |

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

உடன் 2020 ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

**பாதிக்கப்பட்ட மூலதனங்கள்**

**குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள்**

**பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்**

### ஆளுகையின் செயல்பாடுகள்

சபை 2018 ல் சூழல் மற்றும் சமூக இடர் முகாமைக் கட்டமைப்பில் நிலைபேறுதன்மையான கொள்ளைகளுக்கும் சுற்றுச்சூழல் நிலைபேறுதன்மை உயர்விற்கும் ஒப்புதல் அளித்தது. அதே ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஐக்கிய நாடுகளின் நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளுக்கு ஆதரவளிக்க நடவடிக்கைகளை அமுல்படுத்த சபை அனுமதியளித்தது. நிலைபேறுதன்மை இடர்களின் தாக்கத்தை கண்காணிக்கவும் பெறுமதிசேர் உருவாக்கச் செயன்முறையில் ஏற்படும் எவ்வித பாதகமான தாக்கத்தைக் குறைக்க ஒவ்வொரு முயற்சி எடுக்கவும் தொடர்ந்து செயல்படும்.

### கண்ணோட்டம்

காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை மீள்தன்மையை முக்கிய கொள்கை அமுல்படுத்தல் கட்டமைப்புக்களுடன் ஒருங்கிணைத்தலின் முக்கியத்துவத்தின் புரிதலுடன் நிதிஅமைப்பின் நிலைபேறுதன்மையை வினைத்திறனுடனும் வெற்றிகரமாகவும் பாதுகாக்க இலங்கை மத்திய வங்கி நிதிநிலைபேறுதன்மைக்கான வரைபடத்தை அறிமுகப்படுத்தியது. இது இலங்கையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள காலநிலை மீள்தன்மை திட்டங்களுக்கு நிதிவழங்கி ஊக்கிவிக்க நிதிஅமைப்பை ஊக்குவிக்கின்றது.

இந்த வரையடம் நிதி கட்டுப்பாட்டாளர்களுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அவர்களால் நிதியளிக்கப்பட்ட அவர்களின் சூழல் சமூக ஆளுகை இடர்களுடன் தொடர்புடைய திட்டங்களுக்கு பரந்த பார்வையை வழங்குகின்றது. இது பசுமை, காலநிலை நட்பு மற்றும் சமூகங்களை உள்வாங்கிய வணிகங்களுக்கு ஆதரவளிக்க ஊக்குவிக்கின்றது. இந்த வரைபடம் நிதித்துறை மீள்தன்மை கூடிய நிலைபேறு பசுமை பொருளாதாரத்திற்கு பங்களிப்பை அதிகரிக்க முயற்சிக்கிறது.

---

## 7. கொவிட் 19ன் சமூக பொருளாதார தாக்கங்கள்

### எமது நிலைபேறுதன்மையுள்ள பெறுமதிசேர் உருவாக்கத்திலுள்ள தாக்கங்கள்

உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்த நிலையிலும் பல வணிகங்கள் மூடப்பட்ட நிலையிலும் தனிநபர்கள் சிறிய நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் பொருளாதார மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை அச்சுறுத்தும் பணப்புழக்க நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்றனர். நலிவுற்ற அமைப்புக்களுக்கு ஆதரவளிக்க தற்காலிக விதிவிலக்குகள் அத்துடன் மூலதன மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவ ஆதரவுகள் இலங்கை மத்திய வங்கியால் பணப்புழக்கத்தின் முன்நிகழ்ந்திராத கேள்வியை சந்திக்க மேலதிக வளங்களை ஒதுக்குவதற்கு வங்கிகளால் இயலக்கூடியதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

**போக்கு**

- உலகளாவிய நோய்பரவலானது, சமூக பொருளாதார நிலைமைகளில் உறுதியற்ற தன்மையையும் நிச்சயமற்ற சிக்கலான தெளிவற்ற தன்மையையும் துரிதப்படுத்துகிறது
- அதிக வேலைவாய்ப்பின்மை நிலைகளையும் குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் கொண்டிருக்கிறது
- அதிக இடமளிக்கக்கூடிய பணவியல் கொள்கைகளுடனான குறைந்த வட்டிவீதத்தைக் கொண்ட ஒரு நிலைத்தன்மை

**வாய்ப்புக்கள்**

- வங்கிகள் பாதிக்கப்பட்ட துறைகளையும் மாற்றங்களையும் ஆதரித்தல்
- எண்ணியல் மயமாக்கலை நோக்கிய போக்கு அதிகரித்தல்
- நன்கு மூலதனமாக்கப்பட்ட நிலையை பேணல்

**இடர்கள் /சவால்கள்**

- அதிகரித்த கடன் தவறுதல் இயல்பு நிலைகளுக்கான இடர். மேலும், அதிகரித்த வேலைவாய்ப்பின்மை, வறுமை மற்றும் சமத்துவமின்மையால் ஏற்பட்ட அரசியல் முனைவாக்கம்
- பல வாடிக்கையாளர்கள் தொடர்ந்தும் நிதிரீதியாக பாதிக்கப்படுவதுடன் புதிய இயல்புநிலைக்கு மாற்றமடைதல்
- தொடர்ச்சியாக வீட்டிலிருந்து வேலை செய்வதிலுள்ள கட்டுப்பாடுகளும் ஊழியர்கள் கலப்பு வேலை மாதிரிகளுக்கு நகர்வதாலும் ஏற்பட்ட மாற்றமடைந்த வேலை முன்மொழிவு

**எமது மூலோபாய வெளியீடுகள்**

- நிதி ஆதரவு மற்றும் தகவல்களை விரிவாக்கி வாடிக்கையாளர் தேவைகளை நிறைவேற்றல்
- எமது வாடிக்கையாளர்கள் சவால்களை முறியடிக்க அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயல்படுதல்
- எமது ஊழியர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்

| போக்கு | வாய்ப்புக்கள் | இடர்கள் /சவால்கள் | எமது மூலோபாய வெளியீடுகள் |
|---|---|---|---|
| • வணிக நடவடிக்கைகள், பணப்புழக்கம், மூலதன நிலைகள் மற்றும் அபாய முகாமைத்துவம் பற்றிய வலுவான ஒழுங்குமுறை கவனம் செலுத்தலும் வங்கித்துறையின் ஆளுகைச் செயற்பாடுகள் | செயற்பாட்டு நிலைமைகள், போட்டித்தன்மை மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய அறிவாற்றலை வளர்த்துக் கொண்டு வினைத்திறனான இடர் மேலாண்மை | நிதி மோசடியால் அதிகரிக்கப்பட்ட எதிர்மறை பொருளாதார தாக்கங்கள் | • எமது வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் சமூகம் மீண்டு வரும் காலத்திற்குள் நுழைய ஆதரவளித்தல் |

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

வாய்ப்புக்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகால அதிகரிப்பு

இடர்களில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகால அதிகரிப்பு

உடன் 2020 ஒப்பிடும் போது அதே நிலையில் உள்ளது

### ஏனைய பாரிய போக்குகளில் கொவிட் 19ன் தாக்கங்கள்

கொவிட் 19 ஒரு தனி பாரிய போக்காக இருந்தாலும் இது மற்ற பாரிய போக்குகளில் அதன இயக்கம் மற்றும் செயல்பாடுகளில் பல தாக்கங்களைச் செலுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:

| பாரிய போக்கு | கொவிட் 19ன் தாக்கம் |
|---|---|
| நிச்சயமற்ற பூகோள அரசியல் மற்றும் சமூக பொருளாதார சூழல் | • நல்ல மூலதன நிலையைப் பேணல்<br>• நிலையான நிதி வருவாய்<br>• வினைத்திறனான இடர் மேலாண்மை<br>• மூலோபாய முதலீடுகளை நிர்வகிக்கும் போது செயல்திறனை மேம்படுத்துதல |
| அதிகரித்த ஒழுங்குமுறை நுண்ணாய்வு | • பாரிய பொருளாதார சூழலில் ஏற்பட்ட அதிகரித்த அழுத்தம் காரணமாக வலுவான மற்றும் நிலையான வங்கிக் கட்டமைப்பை உறுதி செய்வதற்கான கடுமையான விதிமுறைகள்<br>• வணிக நடவடிக்கைகளில் நோய்பரவலின் தாக்கம் சார்பாக கவனம் செலுத்தும் கட்டுப்பாட்டாளர்களின் நிலையான ஈடுபாடு |
| தகர்க்கின்ற தொழிநுட்பங்கள் மற்றும் போட்டித்தன்மை | • துரிதப்படுத்தப்பட்ட எண்ணியல் மயமாக்கல் மற்றும் முதல் எண்ணியல் வங்கிமுறைமை<br>• நிதி மோசடியால் அதிகரிக்கப்படும் எதிர்மறை பொருளாதார தாக்கங்கள் |
| மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள் | • பணமில்லா கொடுப்பனவுகளுக்கு அதிக உத்வேகம்<br>• பல்வகைமைப்பட்ட வாடிக்கையாளர் பிரிவுகளில் தொலைதூர சேவைகளுக்கான அதிகரித்த தேவை<br>• இணையப் பாதுகாப்பின் அதிகரித்த தேவைகள் |
| மக்கள் தொகைசார் கட்டமைப்பில் மாற்றங்கள் | • ஊழியர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், தொழிலாளர்கள் மற்றும் பாரிய பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன<br>• நுகர்வு முறைகளில் மாற்றங்கள் |
| காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறுதன்மை | • கொவிட் 19 ஏற்கனவே இருக்கும் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை மோசமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது<br>• நாட்டில் அதிகரித்த அரசியல் ஸ்திரத்தன்மை<br>• மேற்கூறிய அனைத்தும் தொடர்ந்தும் காலநிலை தொடர்பான அதிர்ச்சிகளால் மேலும் பாதிப்படையும் |

**பாதிக்கப்பட்ட மூலதனங்கள்**



**குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரை பாதிக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள்**



**பாதிக்கப்பட்ட பொருண்மிய விடயங்கள்**



### ஆளுகையின் செயல்பாடுகள்

வினைத்திறன் மற்றும் மீள்தன்மைக்கான அதன் இயக்க மாதிரியை மாற்றியமைப்பதன் மூலம் நோய்பரவல் தாக்கங்களிலிருந்து வாடிக்கையாளர் மீட்பை நோக்கிய வங்கியின் தொடர் ஆதரவை சபை உறுதிப்படுத்தியது. பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் பிரிவிற்கு போதுமான கவனம் செலுத்தும் போதும் பரந்த பொருளாதார மாற்றங்களைப் பிரதிபலிக்கும் இடர் மேலாண்மை வரம்புகளுக்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன. வங்கி, வணிகங்கள் நீண்டகாலம் நீடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் தனிநபர்கள் ஆன எதிர்விளைவுகளும் உடனடி தொழிற்பாடா கடன் மீதிகளையும் குறிப்பிட, சபை மேற்பார்வை வழங்கப்பட்டது. நீண்டகால நோக்கை எடுத்துக்கொண்டு விநியோக வழிகளின் வினைத்திறன், தயாரிப்புக்களின் பொருத்தப்பாடு, பணிபுரிவதற்கான புதியவழிகளுடன் இசைதல் மூலம் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தல் மற்றும் மிக மீள்தன்மை மற்றும் இயங்குதிறனுடன் கூடிய நிறுவனத்தை கட்டியெழுப்புவதன் மூலமும் வங்கியின் இயலுமையை சபை மதிப்பிடும்.

**கண்ணோட்டம்**

கொவிட் 19ற்கான சிகிச்சைகளுக்கான அதிக அணுகுதலுடன் தடுப்பூசிகளின் விநியோகமும் எடுத்துக்கொள்ளுதலின் விளைவாக குறைந்த தொற்றலும் இறப்புவீதமும் காணப்பட்டது. 2022ன் தீவிர போட்டியாளராக ஒமிக்ரோனின் தோற்றுதலுடன் உலக சனத்தொகை மத்தியில் சீரற்ற தடுப்பூசிகளின் பரவலானது, கொவிட் 19ன் நிலையைத் தொடர்ந்தும் தீவிரமானதாக நிலைப்படுத்தியிருக்கிறது. அதுபோல சில வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் விருத்தியடைந்துவரும் பொருளாதாரம் 2022ல் IMF ஆல் தடுப்பூசிகளுக்கான நிர்ணயிக்கப்ட்டஇலக்கை அடையமுடியா-திருப்பதுடன், 2023ல் போதுமான பரந்த எல்லையை அடையக்கூடியதாக இருக்கும். இது நிலையான பொருளாதார மீட்பில் தாக்கம் செலுத்தும்.

## தொழிற்துறைக் கவர்ச்சி மற்றும் போட்டித்திறன்

இலங்கையின் வங்கித்துறையில் ஒரு முக்கிய போட்டியாளராக எங்கள் சந்தை நிலையைத் தக்க வைத்துக் கொள்ள மைக்கேல் போட்டர் உருவாக்கிய ஐந்து சக்திகள் பகுப்பாய்வை நடத்தினோம். இது எங்கள் தொழில் சூழலுக்கு குறிப்பிடத்தக்க வெளிப்புற காரணிகளைப் புரிந்து கொள்ளவும், வங்கியின் பொருண்மை மிக்க சிக்கல்களை அடையாளம் காணவும், எங்கள் தந்திரோபாய முன்னுரிமைகளை வகுக்கவும் உதவுகிறது. இந்த கரிசனைகளை தந்திரோபாய ரீதியாக நிவர்த்தி செய்வதற்கான எங்கள் திறன் வங்கியின் பிற்பலத்தைப் பாதிக்கிறது. வங்கித் தொழில் சூழலில் ஐந்து சக்திகளின் தாக்கம் பின்வருமாறு:

**01 புதிய நுழைவர்களின் அச்சுறுத்தல்**

- அதிக மூலதனத்தேவை ஒரு வங்கியை கூட்டிணைப்பதற்கான வங்கித் தொழிலுக்கான உரிமம் பெறுவதில் ஒரு சவாலாக உள்ளது
- பாசல் III தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிக முதலீடுகள் தேவைப்படும்
- மக்கள், தகவல் தொழிநுட்பம் மற்றும் விநியோக வழிமுறைகளிலான அதிக மூலதன முதலீடுகளுக்கான தேவை
- ஒழுங்குமுறை மற்றும் இணக்க அம்சங்களில் தேவைப்பாடுகளின் அதிகரிப்பு

- புதிய வணிகங்கள்
- புதிய விதிமுறைகள் மற்றும் இணக்கப்பாட்டுத் தேவைகள்

**02 வாடிக்கையாளர்களின் பேரம் பேசும் பலம்**

- தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் உயர்தரமான சேவைகளுக்கான வாடிக்கையாளர்-களிடமிருந்து அதிகரிக்கும் கேள்வி
- சந்தையில் ஒத்த உற்பத்திகள் மற்றும் சேவைகளின் கிடைப்பனவுத் தன்மை
- வாடிக்கையாளர்கள் அதிக செலவுகளைச் செய்யாமல் போட்டியாளர்களுக்கு மற்றும் மாற்று நபர்களுக்கு மாற வேண்டும்
- புதிய தலைமுறை வாடிக்கையாளர்களுக்கு வாடிக்கையாளர் விசுவாசம் காணப்படாமை
- அதிக நிகர மதிப்புள்ள வாடிக்கையாளர்-களுக்கு குறைந்த கட்டணங்களுக்கு பேரம் பேசும் திறனுள்ளது

- தற்போதைய மற்றும் வருங்கால வாடிக்கையாளர்கள்

**03 வழங்குனர்களது பேரம் பேசும் பலம்**

- அதிக வருமானம் மற்றும் குறைந்த இடர்களுக்கான வைப்பாளர்களிடமிருந்தான கேள்வி
- எண்ணியல் சேவைகளின் வழங்குனர்கள் மீது அதிகளவில் தங்கியிருத்தல்
- தொழிற்சங்கங்கள் மூலம் ஊழியர்களின் அதிக பேரம் பேசும் சக்தி
- எழுதுபொருள் வழங்குனர்கள், புற வழங்கல் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் போன்ற பிற வழங்குனர்கள் மீதான குறைந்தளவில் தங்கியிருத்தல்

- பௌதீக வள மற்றும் சேவை வழங்குனர்
- ஊழியர்கள்

- வங்கியில்லா நிதி நிறுவனங்கள்
- கொடுப்பனவு வசதி வழங்குனர்கள்




**04 சந்தையிலுள்ள போட்டியாளர்களின் அச்சுறுத்தல்**

- தொழிற்துறையில் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் (26 உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (உ.வ. வங்கிகள்) மற்றும் 6 உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (உ.சி.வ வங்கிகள்)
- வாடிக்கையாளர்களின் குறைந்த மாறுதல் செலவு மற்றும் ஒத்த தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் காரணமாக நிறுவனங்களிடையே கடுமையான போட்டி

**05 பதிலீட்டுப்பொருட்களின் அச்சுறுத்தல்**

- தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் திறமையான கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்கும் பிற கொடுப்பனவு சேவை வழங்குனர்களிடமிருந்து அதிகரிக்கும் அச்சுறுத்தல் (நிதித் தொழிநுட்ப நிறுவனங்கள்)
- விலை, தரம் மற்றும் ஏனைய அம்சங்களில் எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் குறைவான கிரயத்தில் ஒத்த தயாரிப்புக்களின் கிடைக்கும் தன்மை
- வைப்பாளர்கள் மற்றும் கடன் வழங்குனர்கள் விலை மாற்றங்களுக்கு அதிக உணர்திறன் கொண்டவர்கள்

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

வலுவான பெறுமதிகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட, எங்கள் தந்திரோபாயம் நமது ஆழ்ந்த புரிதலை பிரதிபலிக்க, தொழிற்பாட்டுச் சூழல் மற்றும் ஆளுகை மற்றும் இடர் முகாமைத் திறன்களை மேம்படுத்துவதற்கு உதவும், அதே நேரத்தில் எங்கள் அக்கறையுள்ள தரப்பினர் அனைவருக்கும் நிலைபேறான விளைவுகளை நாம் வழங்குகிறோம்.

## ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறை

எங்கள் தந்திரோபாயம் நாம் யார், நமது திறன்கள், தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகள், நமது அக்கறையுள்ள தரப்பினர், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் மற்றும் நமது தொழிற்பாட்டுச் சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த சிந்தனை அணுகுமுறை மூலம் பெறப்பட்டது. எங்கள் ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடலின் ஒரு முக்கியப் பகுதியானது, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அளவில் பெறுமதியை உருவாக்கும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் தாக்கம் செலுத்தும் எங்கள் வங்கியின் திறனைப் பாதிக்கும் ஆறு மூலதனங்களில் சாத்தியமான பதில்களுக்கு இடையிலான இணைப்பு, ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தல் மற்றும் வர்த்தக விட்டுக்கொடுத்தல்களைக் கருத்தில் கொள்வது ஆகும். எங்களின் ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையானது தந்திரோபாய விருத்தியை இயக்குவதுடன், குறுகிய மற்றும் நீண்ட கால எல்லை முழுவதும் செயற்படுத்தப்படுகிறது.

எங்கள் ஒருங்கிணைந்த தந்திரோபாய திட்டமிடல் செயன்முறை பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

- தந்திரோபாய உருவாக்கம்
- தந்திரோபாய செயற்படுத்தல் மற்றும் வள ஒதுக்கீடு
- கண்காணித்தல் கட்டம்

## தந்திரோபாய உருவாக்கம்

வங்கியின் தந்திரோபாயங்கள் அதன் தொலைநோக்கு, பணி மற்றும் பெறுமதிகளுடன் தெளிவாக இணைக்கப்பட்டுள்ளன. வாய்ப்புகள், சவால்கள் மற்றும் வரலாற்று அனுபவங்களைக் கருத்திலெடுக்கும் பொருத்தமான காரணியாக இருக்கும் அதே வேளையில், உருவாக்கச் செயன்முறை வெளிப்புற மற்றும் உள்ளக வணிக சூழல்கள் இரண்டையும் அறிந்து கொள்கிறது.

எங்கள் தந்திரோபாய திட்டமிடல் செயன்முறையின் ஒரு பகுதியாக, வெளிப்புற சூழலின் போக்குகளைப் புரிந்து, இந்த போக்குகள் வங்கித் துறையில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதைப் விளங்கிக் கொள்கிறோம். எங்களின் வணிக மாதிரி மற்றும் செயற்பாட்டுச் சூழலின் மதிப்பீடு மற்றும் செயலூக்கமுள்ள அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாடு ஆகியவை பெறுமதியைச் சேர்க்கும் அல்லது குறைக்கும் பொருண்மை மிக்க சிக்கல்கள் மற்றும் அம்சங்களை வடிவமைத்துள்ளது. இந்த அம்சங்களும், பொருண்மிய விடயங்களில் ஏற்படும் இடர்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவை குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கான எங்கள் தந்திரோபாயத்தைத் தெரிவிக்கின்றன.

## தந்திரோபாய செயற்படுத்தல் மற்றும் வள ஒதுக்கீடு

எங்கள் திட்டமிடல் செயல்முறையானது, எங்கள் தந்திரோபாயம் மற்றும் முக்கிய வளங்கள் எங்கள் நிதி மற்றும் செயல்படுத்தல் திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்கின்றன. எதிர்கால வளர்ச்சி மற்றும் பொறுப்பான இடர் முகாமை ஆகியவற்றுக்கு இடையே சமநிலையான அணுகுமுறையை உறுதி செய்வதற்காக, சாத்தியமான வாய்ப்புகள் எங்கள் இடர் தாங்கு திறன் கட்டமைப்பிற்குள் மதிப்பிடப்படுகின்றன.

இந்த செயன்முறையின் மூலம் அடையாளம் காணப்பட்ட நீண்ட கால தந்திரோபாய திட்டங்கள் முதலில் இயக்குநர்கள் சபையால் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, அதன் பிறகு செயற்படுத்துவதற்கான நீண்ட கால திட்டமிடல் செயற்பாட்டில் சேர்க்கப்படும். எங்களின் குறுகிய கால தந்திரோபாயங்கள் மற்றும் இலக்குகள் எங்கள் நீண்ட கால தந்திரோபாய இலக்குகளுடன் இணைக்கப்பட்டு வங்கி முழுவதும் செயற்படுத்தப்படுகின்றன. ஒட்டுமொத்த தந்திரோபாயங்கள் மற்றும் திட்டங்கள் தனித்தனி பிரிவுகள்/திணைக்களங்களுக்கு வெளியிடப்படுவதுடன், தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் இலக்குகள் ஊழியர்களின் முக்கிய பெறுபேற்றுப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

எங்கள் தந்திரோபாய வணிகத் திட்டமிடல் கட்டமைப்பானது, எங்களின் கூறப்பட்ட தந்திரோபாய நோக்கங்களை அடைவதற்குத் தேவையான வளங்களை (தகவல் தொழிநுட்ப, மனித வள, நிதிசார்) அடையாளம் காண உதவுகிறது. வளங்களின் இருப்பு மற்றும் இந்த வளங்கள் எங்களின் நடுத்தர கால செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படுவதனை எங்கள் செயற்பாட்டுக் குழுக்கள் உறுதி செய்வதில் தகுந்த நடவடிக்கை எடுக்கின்றன, இது தேவையான திறன்கள் மற்றும் எங்கள் இலட்சியங்களை அடைய மேற்கொள்ளப்படும் கவனம் செலுத்தும் முயற்சிகளை கோடிட்டுக் காட்டுகிறது. வளங்களின் கிடைப்பனவுத் தன்மை மற்றும் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில், மாற்ற முயற்சிகள் மற்றும் புதிய திட்டங்களுக்கு மீண்டும் முன்னுரிமை அளிக்கும் சில வர்த்தக பரிமாற்றங்கள் செய்யப்படுகின்றன.

## கண்காணிப்பு கட்டம்

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு சுறுசுறுப்புடன் பதிலளிக்க, வங்கியை செயற்படுத்த, தந்திரோபாயங்கள் மற்றும் செயற்திட்டங்களின் முன்னேற்றம் அவ்வப்போது பல்வேறு அறிக்கைகள் மூலம் கண்காணிக்கப்பட்டு, முகாமைக் குழு மற்றும் சபையினால் வரையறுக்கப்பட்ட இடைவெளியில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. அடையப்பட்ட முன்னேற்றத்திற்கு எதிராக நமது தந்திரோபாய முன்முயற்சிகளின் வலிமையை அடையாளம் காணவும், சோதிக்கவும், மேலும் சாத்தியமான எதிர்கால சூழ்நிலைகளை சோதிக்கவும் இந்த செயன்முறை உதவுகிறது.

மாதாந்தப் பாதீடுகளை முகாமைத் தகவல் முறைமை முகப்புத் தளங்கள் மூலம், பாதீட்டு மற்றும் வரலாற்று செயற்திறனுடன் ஒப்பிடும் போது, எங்கள் மாதாந்த செயற்திறனை மதிப்பாய்வு செய்கிறோம். காலாண்டு அடிப்படையில், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் முக்கிய திட்டங்களின் நிலை ஆகியவற்றிற்கு எதிராக எங்கள் தந்திரோபாய செயற்திறனை நாங்கள் கண்காணிக்கிறோம். மேலும், அவசியமாகக் கருதப்படும் போது, செயற் திட்ட மதிப்பாய்வின் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ள தந்திரோபாயக் கண்ணோட்டத்தில் ஏதேனும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு அவற்றை நாங்கள் திருத்துவோம்.

எங்கள் செயற்திறனை மதிப்பாய்வு செய்வதற்காக சமநிலைப் பெறுபேற்று அட்டையின் அடிப்படையில் எங்களது நிதி மற்றும் நிதி அல்லாத குறிகாட்டிகள்

மற்றும் அளவிடக்கூடிய மற்றும் பண்பு வகை சார்ந்த காரணிகளை உள்ளடக்கிய முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை வரையறுத்துள்ளோம். இந்த தொடர்ச்சியான கண்காணிப்பு செயன்முறைகள், செயற்பாட்டுச் சிக்கல்களை மேற்பார்வையிடவும், சந்தைப் போக்குகளை மதிப்பாய்வு செய்யவும், வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைத் தெரிந்துகொள்ளவும், வணிக முடிவுகள் மற்றும் முதன்மையான முன்னுரிமைகளை பகுப்பாய்வு செய்யவும், அதேசமயத்தில் எங்களின் தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரியை பொருத்தமான மற்றும் போட்டித்தன்மையுடன் மேம்படுத்தவும் உதவுகிறது.



## மிகவும் நிலைபேறான வங்கியை உருவாக்குதல்

ஒரு வங்கியாக, எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகங்களுக்கு சிறந்த எதிர்காலம் இருப்பதை உறுதி செய்வதே எங்கள் மிகப்பெரிய விருப்பமாக உள்ளது. இந்த நோக்கத்திற்காகவே, எங்கள் அக்கறையுள்ள தரப்பினருக்கு பயனளிக்கும் அதே நேரத்தில் எங்கள் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், சமூகம் மற்றும் பூமிக்கும் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பெறுமதியை அடைய நாங்கள் முயற்சி செய்கிறோம். ஒரு முன்னணி அரச வங்கியான நாங்கள் இலங்கைப் பொருளாதாரத்தின் மையத்தில் அமைந்து வலுவான சமூக மற்றும் சுற்றாடல் மாற்றங்களை உருவாக்கும் அதிகார நிலையில் உள்ளோம், எங்களுடைய பரவலான அணுகல் மற்றும் அதிகாரத்துடன் நிலையான நிறுவனங்களை ஆதரிப்பதில் முன்னணியில் நிற்கிறோம். இந்த பொறுப்பு நிலைகள் நமது வலுவான நெறிமுறைசார் பெறுமதிகள், முறைமைகள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றால் மேலும் பூர்த்தி செய்யப்படுவதுடன், இது நமது இலட்சியத்தை தார்மீக நிலைப்பாட்டுடன் உறுதி செய்கிறது. நிலையான வங்கிச் சேவையை உருவாக்குவதற்கும், எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான சூழலை மேம்படுத்துவதற்கும் எங்களின் உறுதிப்பாட்டை ஆதரிக்க மேற்கூறிய அனைத்து அம்சங்களும் ஒன்றிணைந்து உள்ளன.

### எங்கள் நிலைபேறான வணிக மாதிரி

தே.சே.வங்கியின் நிலையான வணிக மாதிரியானது ஒருங்கிணைந்த சிந்தனையின் அடிப்படையில் நன்கு சிந்திக்கப்பட்ட செயன்முறைகளின் தொகுப்பாகும். இந்த மாதிரியானது தே.சே.வ தூரநோக்கு, பணிக் கூற்று மற்றும் பெறுமதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வங்கியின் பெறுமதி உருவாக்கும் செயன்முறையை சிறந்த ஆளுகை மற்றும் வலுவான நெறிமுறைகளின் ஆதரவுடன் வழங்குகிறது. இந்த மாதிரியானது சமூகபொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களைக் கவனத்திலெடுப்பதோடு, ஒட்டுமொத்த செயற்பாட்டில் இவற்றைக் கருத்திலெடுக்கின்றது. அனைத்து வங்கி நடவடிக்கைகளும் நிலையான சமூக மற்றும் கூட்டு வணிகப் பெறுமதியை உருவாக்கும் எங்கள் முக்கிய நோக்கத்தை நோக்கியே உள்ளன. இந்த நோக்கத்திற்காக, வங்கி, எங்கள் அக்கறையுள்ள தரப்பினர் மற்றும் நாம் வாழும் சமூகத்திற்கான எங்கள் அனைத்து முயற்சிகளுக்கும் பெறுமதி சேர்க்க எங்கள் முக்கிய பலம், திறமை மற்றும் வளங்களைப் பயன்படுத்துகிறோம். சவால்களை முன்னறிவிக்கும் நமது திறன் மற்றும் வாய்ப்புகள் தங்களை முன்வைக்கும் போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் ஆகியவற்றின் காரணமாக இலங்கையின் சேமிப்பு ஜாம்பவானாகத் திகழ்கிறோம். அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களுடனும் எங்கள் புகழ்பெற்ற தொடர்பாடல் இயலுமை மூலம் இந்த வெற்றிப் பாதை மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், இது அவர்களின் தேவைகள் மற்றும் கரிசனைகள் பற்றிய ஆழமான புரிதலுடன் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எங்களுக்கு உதவுகிறது. மேலே உள்ள அனைத்தையும் ஒருங்கிணைக்க, உள்ளக ஈடுபாடு மற்றும் நிலையான தந்திரோபாயத்தின் வளர்ச்சி ஆகியவற்றில் கவனத்தை வேண்டி நிற்கும் மிக முக்கியமான சிக்கல்களைத் தீர்மானிக்க தே.சே.வ பொருண்மைமிக்க மதிப்பீட்டையும் மேற்கொள்கின்றது.

தே.சே.வங்கியின் நிலைபேறான பெறுமதி உருவாக்க வணிக மாதிரி பக்கங்கள் 24 மற்றும் 25இல்.

### வணிகத் தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக நிலைபேறான தந்திரோபாயம்

நிலைபேறான தன்மையை வெற்றியின் முக்கிய அங்கமாக நாங்கள் கருதுவதுடன், கூட்டு வணிகத் தந்திரோபாயம், நிதிசார் தீர்மானங்கள் மற்றும் உற்பத்தி/ சேவை வரையறை ஆகியவை நிலைபேறான தன்மை கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது.

உரு 6



எங்கள் தந்திரோபாயத்தில் நிலைத்தன்மை ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தை பின்வரும் அம்சங்கள் எடுத்துக்காட்டுகின்றன:

உரு 7




தே.சே.வ மிதமான இடர் பரப்பைக் கொண்டிருப்பதில் பெருமிதம் கொள்வதுடன் இலாபத் தன்மை மிக்க, நன்றாக மூலதனமிடப்பெற்ற வங்கியாக அதன் நிலையைத் தொடரவும் உறுதியாக உள்ளது. வலுவான மூலதனம் மற்றும் திரவத் தன்மை இடையகங்கள் நிதி ஸ்திரத்தன்மையை பராமரிக்க இன்றியமையாதவை என்பதால், நமது திடமான மூலதனம் மற்றும் திரவத் தன்மை நிலையைத் தொடர்வதும், அக்கறையுள்ள தரப்பினருக்காக சுத்தமான மற்றும் வலுவான நிதி நிலையைப் பராமரிப்பதும் முக்கியமானது. வங்கியின் நிலைபேறான தன்மைக் கொள்கைகள், வங்கியின் வணிக மாதிரியில் நிலைபேறான தன்மையின் கருத்தை தடையின்றி ஒருங்கிணைக்க அனுமதிப்பதன் மூலம் அவை ஒன்றாகச் செயற்படுவதை உறுதி செய்கிறது. சுற்றுச்சூழல் கொள்கை, மனித உரிமைக் கொள்கை, கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) கொள்கை, மற்றும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் இடர் முகாமை (ESRM) கொள்கை ஆகியவை எங்கள் நிலைபேறான தன்மைக் கட்டமைப்பை மேம்படுத்தும், அதே நேரத்தில் விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட திட்டங்கள், எங்கள் நிலைபேறான தன்மை கட்டமைப்பை ஊழியர்கள் மற்றும் நிறுவன நிர்வாகத்தில் வேரூன்றச் செய்யும் முக்கிய வழிகளாகும். மேலே உள்ளவற்றைத் தவிர, எங்களிடம் உள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பின்பற்றும் வகையில், சமூக மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களுக்கான எங்கள் அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், எங்கள் வணிக வரிசைகளில் பல முன்முயற்சிகளைச் செயற்படுத்தினோம்.

மேலே விபரிக்கப்பட்ட முன்முயற்சிகளின் மேலதிக விவரங்களுக்கு பக்கங்கள் 154 முதல் 178 வரை பார்வையிடவும்.

## நிலைபேறான தன்மை ஆளுகை

வெற்றிக்காக வங்கியை நிலைநிறுத்தும்போது, நாம் இடர்களை உன்னிப்பாக எடைபோட வேண்டி இருப்பதுடன், வங்கிக்கான நீண்டகால பெறுமதியை உயர்த்துவதற்கு எங்கள் பலதரப்பட்ட அக்கறையுள்ள தரப்பினரின் நலன்களை சமநிலைப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த வழியைத் தீர்மானிக்க வேண்டும். அத்தகைய முடிவுகளின் எடையைக் கருத்தில் கொண்டு, வங்கியின் பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் (ESE) இடர்கள் மற்றும் தாக்கங்களின் முகாமையும் மேற்பார்வையும் சபையினால் பகிரப்படுகிறது. வங்கியின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையானது, இவை சமநிலைப்படுத்தப்பட்ட பெறுபேற்று அட்டையில் இணைக்கப்பட்டு, பின்னர் வங்கி ஊழியர்களின் செயற்திறன் அளவீடு வரை நகர்வதனால் இந்த ESG விடயங்களை உட்பொதித்து, பெறுமதியை உருவாக்குவதற்கான அனைத்து விடயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, வங்கியின் தந்திரோபாயத்தை செயற்படுத்துதல், பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு சபையினால் ஒப்படைக்கப்பட, அவர் கூட்டாண்மை முகாமைக் குழுவிற்கு தலைமை தாங்குவதுடன், வங்கியின் அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொறுப்பை வகிக்கிறார்.

இத் தந்திரோபாயங்களை செயற்படுத்துவது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறான தன்மைக் குழுவால் (CSRSC) கண்காணிக்கப்பட, அவர்கள் சபை மற்றும் பிற அக்கறையுள்ள தரப்பினர்களுடன் தொடர்ந்து உரையாடலைப் பேணுவர்.

## நிலைபேறான தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பு

பகிரப்பட்ட பெறுமதியை உருவாக்குவது எங்கள் தந்திரோபாயத்திற்கு முக்கியமானதாக இருப்பதுடன், உள்ளடக்கமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் நிலைபேறான முறையில் நிதிசார் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும். நாங்கள் பொறுப்பாக உள்ளோம்.

நியாயமான போட்டி, சுகாதாரம், கல்வி மற்றும் சமூகத்தை உருவாக்கும் அனைத்து முக்கிய சமூகபொருளாதார காரணிகள் என்று வரும்போது சமமான வாய்ப்பை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

எங்கள் நோக்கத்துடன் இயங்கும் நிறுவன கட்டமைப்பின் அடிப்படையில், எங்கள் செயல்பாடுகளின் நிலைபேறான தன்மை, நாங்கள் பணிபுரியும் சமூகங்களை நேரடியாகப் பாதிக்கிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். எனவே, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பொருளாதார

மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களில் எண்ணற்ற பெறுமதி உருவாக்க முயற்சிகளை ஒன்றிணைக்க எங்கள் தந்திரோபாய நிலையைப் பயன்படுத்துகிறோம்.

நிலைபேறான தன்மைக்கான எங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறை பின்வரும் கொள்கைகளை உள்ளடக்கியது:

- பன்முகத்தன்மை, அக்கறைதாரர் ஈடுபாடு மற்றும் தந்திரோபாய கூட்டாண்மை
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக அக்கறைகளை உள்ளடக்கிய பொருத்தமான இடர் முகாமை
- உயர் நெறிமுறை நடத்தை, பொறுப்பான கூட்டு வணிகக் ஆளுகை மற்றும் வெளிப்படையான தொடர்பாடல்
- எங்கள் வலையமைப்புக்களுக்கு உயர் ஆற்றல் மிக்க தீர்வுகளை வழங்க எண்ணியல் மயமாக்கல் மற்றும் புத்தாக்கங்களிலான முதலீடு
- முழுமையான சமூக மற்றும் வணிக தாக்கங்களை உருவாக்குதல்



**தூண் 1** — நிலைபேறான சமுதாயங்களை உருவாக்குதல்

**தூண் 2** — உள்ளடக்கமான நிதியியலுக்கு ஆதரவு அளித்தல்

**தூண் 3** — சுற்றுச் சூழல் சார்ந்த நிலைபேறான தன்மை

## தூண் 1

### நிலையான சமுதாயங்களை உருவாக்குதல்

சமூகங்கள் பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பின் முக்கியமான பகுதியாகும். மிகவும் துடிப்பான, வளமான எதிர்காலத்தை உருவாக்க பின்வருமாறு நாங்கள் உதவுகிறோம்:

- உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை ஆதரித்தல் - பக்கம் 115 இல் "கூட்டு வணிக வங்கி".

  பொருளாதார அபிவிருத்தியை எளிதாக்கும் அபிவிருத்தி திட்டங்கள், உள்நாட்டு சமூகங்களை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

  அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல். போக்குவரத்து, நீர், தொலைத்தொடர்பு மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாங்கள் முதலீடு செய்கிறோம்.

- அக்கறையுள்ள தரப்பினர்களுடன் திறந்த உரையாடல் - "வாடிக்கையாளர் கரிசனங்களைத் தீர்ப்பது" பக்கம் 162 இல், மற்றும் பக்கம் 151 இல் "வினைத்திறன் மிக்க வகையில் தொடர்பு கொள்ளல்".

  வெறும் இணக்கத்திற்கு அப்பால் சென்று, எங்கள் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கு, எங்கள் அக்கறையுள்ள தரப்பினர் அனைவருடனும் திறந்த உரையாடலைப் பேணுகிறோம்.

- வலுவான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் - "வலுவான முறைமைகள் மற்றும் செயன்முறைகள்" பக்கம் 133 இனைப் பார்க்கவும்.

  நிதி முறைமை மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல், எங்கள் வலுவான முறைமை மற்றும் மோசடியைத் தடுக்கும் கட்டுப்பாடுகள் மூலம் நிதி, ஊழல், மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் அமைப்புகளுக்கு நிதியிடலைத் தடுத்தல்

- சமமான வேலை வாய்ப்புகள் - "பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு" பக்கம் 146 இல்.

  பாகுபாடு இல்லாத வேலைவாய்ப்பை வழங்குதல், அதற்கு பதிலாக, நியாயமான ஊழியர் நடைமுறைகள் மற்றும் ஊழியர் நல்வாழ்வு ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.

- கூட்டாண்மை சமூகப் பொறுப்பு திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல் - "வளர்ந்து வரும் சமூகங்களை உருவாக்குதல்" பக்கம் 167.

  குழந்தைகள் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்கு உதவும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

## தூண் 2

### உள்ளடக்கமான நிதியிடலை ஆதரித்தல்

தேசத்தில் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை எளிதாக்க நிதி உள்ளடக்கத்தை நாங்கள் பின்வருமாறு ஊக்குவிக்கிறோம்:

- கிரய வினைத்திறன் மிக்க முன்மொழிவுகளை வழங்குதல் - பக்கம் 158 இல் "குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான நிதி வசதிகள்", பக்கம் 124 இல் "எங்கள் எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல்" மற்றும் "எங்கள் அணுகலை அதிகரித்தல்".

  எமது நுழைவு நிலை வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களுக்கு புதுமையான, பொருத்தமான மற்றும் செலவு குறைந்த முன்மொழிவுகளை வழங்குதல்.

- அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட கடன் திட்டங்களை ஆதரித்தல் – பக்கம் 158 இல் "கொவிட்-19 இன் போது வாடிக்கையாளர்களுக்கான ஆதரவுகள்", பக்கம் 158 இல் "வீடு என்று அழைக்கும் இடம்" மற்றும் "புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான பாராட்டு".

அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட கடன் திட்டங்களை நாங்கள் நேரடியாக பரிந்துரைக்கிறோம். சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

- பக்கம் 163 இல் பொறுப்புணர்வு மிக்க கொள்வனவு
- நிதியியல் கல்வியறிவு, உள்ளடக்கிய அணுகல் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிக் கல்வி மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நிதிச் சேவைகளுக்கான அணுகலைச் செயல்படுத்துதல் - பக்கம் 168 இல் "நிதிச் சேர்க்கைக்கான முன்னுரிமை" மற்றும் பக்கம் 124 இல் "எங்கள் எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல்"
- தன்னிறைவு பெற்ற சமூகங்களை ஊக்குவித்தல் - பக்கம் 173 இல் "ஒரு நிலைபேறான உலகிற்கு பங்களிப்பு செய்தல்"

  சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் தன்னிறைவு பெற்ற சமூகங்களை மேம்படுத்துதல் நடுத்தர தொழில்முனைவோர்
- பக்கம் 175 இல் நிலைபேறான நிதியிடல்.

### தூண் 3

### சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மை

நாம் செயற்படும் சமூகங்களுக்கு நிலையான எதிர்காலத்திற்கு பங்களிப்பதற்காக சாதகமான மற்றும் முற்போக்கான காலநிலை தொடர்பான முன்முயற்சிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கையில் நிலையான சுற்றுச்சூழல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் காலநிலை மாற்ற அபாயத்தைக் குறைப்பதற்கும் உதவுவோம். இதில் பின்வருவன உள்ளடங்கும்:

- புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தை உருவாக்கும் திட்டங்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் நிதியளித்தல் - பக்கம் 175 இல் "நிலைபேறான நிதியிடல்".

  புதுப்பிக்கத்தக்க சத்கி வளத்தை உருவாக்கும் திட்டங்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் நிதியளித்தல், மற்றும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பசுமை உற்பத்திகள் மற்றும் சேவைகள். இலங்கை மின்சார சபையுடன் (CEB) நெருக்கமாக ஒத்துழைப்பதன் மூலம் சூரிய சக்தி திட்டங்களுக்கு ஆதரவளிப்பதே எமது முக்கிய கவனம்.
- மூலதன ஒதுக்கீட்டுத் தீர்மானங்களுக்கான மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்களைப் பயன்படுத்துதல் - பக்கம் 175 இல் "சுற்றுச்சூழல், சமூக மற்றும் இடர் முகாமை (ESRM) கட்டமைப்பு"

  மூலதன ஒதுக்கீட்டிற்கு காலநிலை மாற்றம், நேர்மறையான தாக்கத்தை உள்ளடக்கிய முடிவுகள், மற்றும் நமது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைப் பொறுப்புகள் போன்ற மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்களைப் பயன்படுத்துதல்
- சக்தி வினைத்திறனாக இருத்தல் - "பொறுப்புணர்வு மிக்க நுகர்வு", பக்கம் 174 இல்

  தே.சே. வங்கிக்கு சொந்தமான கட்டடங்களில் சூரிய சக்தி கலங்களை நிறுவுவதன் மூலம் வள வினைத்திறன் கொண்டதாக இருத்தல்.

### ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) 25 செப்டம்பர் 2015 அன்று ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 17 நிலையான வளர்ச்சி இலக்குகளின் தொகுப்பு ஆகும். இலக்குகள் 2030 ஆம் ஆண்டளவில் வறுமையை ஒழிக்க, சமத்துவமின்மை மற்றும் அநீதிக்கு எதிராக போராடவும் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடவும் முயற்சி செய்கின்றன. இந்த இலக்குகள் வளர்ச்சியின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களை ஒருங்கிணைக்கிறது, அதே நேரத்தில் நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான இயற்கை வளங்களின் முகாமைக்கு முன்னுரிமை அளிக்கிறது.

UNSDG க்கான எங்கள் பங்களிப்பு இவ் அறிக்கை முழுவதும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

### எதிர்கால கண்ணோட்டம்

நாங்கள் எங்கள் வணிகத்தை நிலையான முறையில் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம், மேலும் நிலையான வணிக மாதிரியானது வரைவிலக்கணத்தின் படி செயற்பாட்டில் உள்ளது என்று நாங்கள் நம்புகிறோம், எனவே எங்கள் தந்திரோபாய முன்னுரிமைகளில் உறுதியான நோக்கினை வைத்து மேம்படுத்துவதற்கான வழிகளை நாங்கள் தொடர்ந்து ஆராய்வோம்.

நிலைபேறான தன்மை மற்றும் மீளச்சீரமைத்தலுக்கான எங்கள் அணுகுமுறையை நாங்கள் தொடர்ந்து வளர்த்து வருகிறோம். எங்கள் அறிக்கையிடலில், இந்த ஆண்டு எங்கள் அக்கறையுள்ள தரப்பினர் குறிப்பாக பொருத்தமானதாகக் கருதும் செயற்பாடுகளில் இன்னும் வலுவாக கவனம் செலுத்துகிறோம். முன்னோக்கிச் செல்லும்போது, முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPI) மற்றும் வங்கி முழுவதும் நிலையான முயற்சிகளை இயக்க இலக்குகளை அமைக்க விரும்புகிறோம். மேலும், உருவாக்கப்பட்ட கூட்டாண்மை சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறான தன்மைக் குழு (CSRS), வங்கியின் நிலைபேறான தன்மை செயற்திறனைக் கண்காணிப்பதில் தீவிர ஈடுபாட்டை எடுப்பதுடன், வங்கியின் பொருண்மை மிக்க மதிப்பீட்டிற்கு பங்களிக்கும் பொருண்மை மிக்க பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் (ESG) விடயங்களில் சபைக்கு ஆலோசனை வழங்கும்.

SDGகள் 2030 ஆம் ஆண்டிற்குள் சந்திக்க வேண்டிய பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முன்னுரிமைகள் குறித்த உலகளாவிய ஒப்பந்தத்தை வழங்குகின்றன. அவை வணிக கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அடையாளம் காண சக்திவாய்ந்த பார்வையை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன, மேலும் அவை எங்கள் நோக்கத்தில் "சிறந்தவற்றை" வரையறுக்கின்றன. எனவே, எங்களின் நிலையான வளர்ச்சி முயற்சிகளுக்கு வழிகாட்டும் வகையில், பெரும்பாலான பொருள்களில் கவனம் செலுத்துவதற்கான அணுகுமுறையை நாங்கள் மீளச் சீரமைத்துள்ளோம். எனவே, SDG களில் எங்கள் பங்களிப்பை அளவிடுவதற்கு இலட்சியமான புதிய இலக்குகளை அமைப்போம்.

3 GOOD HEALTH AND WELL-BEING | 4 QUALITY EDUCATION | 6 CLEAN WATER AND SANITATION | 7 AFFORDABLE AND CLEAN ENERGY

## SWOT பகுப்பாய்வு

ஒரு SWOT பகுப்பாய்வு எங்களின் தந்திரோபாயத்தை உருவாக்குதல் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளை செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக நடத்தப்பட்டது. இது நமது உள்ளக பலம் மற்றும் பலவீனங்கள் மற்றும் வெளிப்புற சூழலில் உள்ள வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது.

### பலங்கள்

- வைப்புத்தொகை மற்றும் வட்டி செலுத்துதல் ஆகியவை அரசாங்கத்தால் முழுமையாக உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன
- 189 வருடங்களின் வங்கிப் பாரம்பரியம்
- 100% அரசுக்கு சொந்தமான வங்கி
- வலுவான வர்த்தக நாமம் - இலங்கையில் 5வது மிகவும் பெறுமதியான வர்த்தக நாமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது
- தீவு முழுவதும் 4,000 சேவை மையங்களைத் தாண்டிய விரிவான வாடிக்கையாளர் வருகை
- அதிக தக்கவைப்பு விகிதத்துடன் வலுவான ஊழியர் விசுவாசம்
- இக்ரா லங்கா லிமிட்டட் (ICRA Lanka Ltd) இன் AAA கடன் மதிப்பீடு.
- உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு நிதியளிப்பதிலும் சுத்தமான எரிசக்தி நிதியளிப்பதிலும் நிபுணத்துவம்
- தொழிற்துறை சராசரியுடன் ஒப்பிடும்போது குறைந்த தொழிற்படாக் கடன் விகிதம்

### பலவீனங்கள்

- தே.சே.வங்கி சட்டத்தின் மூலம் வணிக விரிவாக்கத்திற்கு விதிக்கப்பட்ட வரம்புகள் (நுண்நிதி, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைத் துறைக்கான கடன்)
- அரச பத்திரங்களில் 60% வைப்புத் தொகையை முதலீடு செய்ய வேண்டிய கட்டாயத் தேவைப்பாடு
- அதிகாரவியல் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள்
- முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட முறைமைசாராத் தன்மையில்லாமை நெகிழ்வுத்தன்மையைக் குறைக்கிறது
- கடுமையான நடைமுறைகள், புதிய தொழிநுட்பங்களை ஏற்றுக்கொள்வதை மெதுவாக்குகிறது
- முதன்மையான நிதி மூலமாகத் தவணை வைப்பு காணப்படல்
- கட்டணம் மற்றும் தரகு அடிப்படையிலான வருமானத்தை உருவாக்குவதற்கான வரையறைகள்
- பழமைவாத இடர் கலாச்சாரம் மற்றும் வணிகக் கொள்கை

### வாய்ப்புகளை அதிகரிக்க பலங்களைப் பயன்படுத்துதல்

- விசேட அறிவைப் பயன்படுத்தி நாட்டின் உட்கட்டமைப்புத் தேவைகளைப் பயன்படுத்தல்
- ஊக்குவிப்பு மற்றும் திறமையை வளர்ப்பதன் மூலம் சேவையின் சிறப்பை மேம்படுத்துதல்
- பரந்த அளவிலான அணுகல் புள்ளிகளின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் கடன் வாய்ப்புகளிலிருந்து பெறப்படும் வருவாய் மற்றும் லாபத்தை அதிகரித்தல்
- பசுமைப் பொருளாதாரம் தொடர்பான கடன் உற்பத்திகளை வழங்குதல் மற்றும் சுத்தமான எரிசக்தி நிதியளிப்பில் விசேட திறன்களைப் பயன்படுத்துதல்

### வாய்ப்புகளைப் பயன்படுத்தி பலவீனங்களை எதிர்கொள்ளுதல்

- சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு கடன் வழங்குவதை அதிகரித்தல் மற்றும் எங்கள் வாடிக்கையாளர் தளத்தை அதிகரிக்கவும் மற்றும் வருவாய் ஈட்டத்தை அதிகரித்தல்
- வினைத்திறன், உற்பத்தித்திறனை அதிகரிக்க மற்றும் பிழைகளை குறைக்க தொழிநுட்பத்தை பின்பற்றல்
- கடன் வழங்கல் சேர்க்கையை வளர்க்கும் போது குறைந்த தொழிற்படாக் கடன் விகிதத்தை பராமரிக்க இடர் உணர்வு கலாச்சாரத்தை பின்பற்றல்
- சேமிப்பு வைப்புகளை அதிகரிக்க செயன்முறைகளை தன்னியக்கமாக்கல்
- பணம் அனுப்புகை சந்தையில் ஊடுருவி, கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரித்தல்

**வாய்ப்புகள்**

- இலங்கையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை நிறைவேற்றுவதில் தே.சே.வங்கியின் பங்கு
- UNSDGகளுக்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு
- பருவநிலை மாற்றம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நகரும் கவனம்
- நுகர்வோர் மற்றும் கடன் கலாச்சாரத்தை அதிகரித்தல்
- சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அதன் முக்கியத்துவத்தை அதிகரித்தல்
- வங்கித்துறையில் மாறும் தொழிநுட்ப முன்னேற்றங்கள்
- அந்நிய செலாவணி அனுப்புதலுக்கான வளர்ந்து வரும் சந்தை

**அச்சுறுத்தல்கள்**

- தொற்றுநோயால் தூண்டப்பட்ட நிச்சயமற்ற தன்மைகள், பலவீனமான பேரினப் பொருளாதாரம் மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மை
- வணிக வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத போட்டியாளர்களிடமிருந்து கடுமையான போட்டி
- வங்கி மற்றும் நிதிச் சேவைத் துறையில் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பைக் கடுமையாக்குதல்
- பாரம்பரிய வணிக மாதிரிகளுக்கு சவால் விடும் தகர்க்கும்/சீர்குலைக்கும் தொழில்நுட்பங்கள்
- வாடிக்கையாளர் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளில் மாறும் மாற்றங்கள்
- கடன் தரப்படுத்தல் வீழ்ச்சி

**பலங்களை மேம்படுத்துவதன் மூலம் அச்சுறுத்தல்களைக் குறைத்தல்**

- எங்கள் உற்பத்திகளை வேறுபடுத்த, எங்கள் 100% அரச உத்தரவாதம், வர்த்தக நாமம் மற்றும் தனித்துவமான அந்தஸ்தை மூலதனமாக்குதல்
- எங்கள் வாடிக்கையாளர் தொடுபுள்ளிகளை விரிவுபடுத்தி, எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பைப் பயன்படுத்தி எங்கள் வாடிக்கையாளர் தளத்தை வளர்த்தல்
- எங்கள் பரந்த அணுகல் வழிமுறைகள் மூலம் ஒரு விதிவிலக்கான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்
- புதிய இயல்புநிலைக்கு மாற்றமடைதல்

**பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது**

- எங்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த எங்கள் அமைப்புகளையும் செயல்முறைகளையும் மிகவும் சுறுசுறுப்பாக மாற்றுதல்
- தகவல் தொழினுட்பம் மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற எதிர்கால வங்கிக்குத் தேவையான திறன்களுடன் புதிய திறமைகளைப் பெறுதல்
- குறைந்த கிரய வைப்புத்தொகை, நீண்ட கால வைப்புத்தொகை மற்றும் நீண்ட கால கடன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துதல்

## தந்திரோபாய வரைபடம்

### நீண்ட காலத் தந்திரோபாயங்கள்

**வாடிக்கையாளர் மையப்படுத்தல்**

தே.சே.வங்கியில் நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களை எங்கள் செயற்பாடுகளுக்கு மையமாகப் பார்க்கிறோம், மேலும் வாடிக்கையாளர்களின் தீர்மானங்கள் ஒரு வங்கியாக எங்களின் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்றன. “மக்களின் வங்கித் தெரிவு” என்ற நிலையை அடைவதற்கான எங்கள் இலக்கில், அனைத்து வாடிக்கையாளர் தொடர்புகளிலும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவமே எங்களின் முதன்மையான முன்னுரிமையாக உள்ளது. வாடிக்கையாளர்களின் தேவைகள்தான் எங்களின் வள ஒதுக்கீடு தந்திரோபாயத்தை வழிநடத்துகிறது, மேலும் எங்கள் வாடிக்கையாளர்களைப் பாராட்டும், வாடிக்கையாளர் உறவுகளை வளர்க்கும் மற்றும் அவர்களுக்கான எங்கள் உறுதிப்பாட்டை நிலைநிறுத்தும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கியாக நாங்கள் தொடர்ந்து இருப்போம்.

**ஆளுகை மேன்மை**

தே.சே.வங்கியானது கூட்டாண்மை ஆளுகையில் நிறுவனத்தில் மிக உயர்ந்த தரத்தை பராமரிக்க அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், இடர் முகாமை மற்றும் இணங்கியொழுகுவதற்கான பணி கலாச்சாரத்தை வளர்க்க விரும்புகிறது

தே.சே.வங்கியின் வணிக செயன்முறைகள் மற்றும் ஆளுகைச் சோதனைகள் பயனுறுதி மிக்க, வேகமான, வீரியம் மிக்கதாக மற்றும் சர்வதேசச் சிறந்த நடைமுறைகளுக்கு இணக்கமானவையாக இருப்பதை உறுதி செய்வதன் மூலம், தே.சே.வங்கிக்கு தந்திரோபாய மற்றும் போட்டித்தன்மையில் வேறுபாட்டை வழங்க, ஆளுகை மேன்மையை மேம்படுத்தும் கருவியாகப் பயன்படுத்துகிறோம்.

**நிலையான வளர்ச்சி**

தே.சே.வங்கியில், சக்திவாய்ந்த, ஆனால் நிலைபேறான மற்றும் சமநிலையான வளர்ச்சிக்காக நாங்கள் முயற்சிக்கின்றோம். இதை அடைய, நம்பகமான, போட்டித்தன்மை வாய்ந்த, இலாபத் தன்மை மிக்க மற்றும் பொறுப்பான பெறுமதியை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளோம். எனவே, நிதித் தீர்வை வலுப்படுத்துதல், நமது மூலதன நிலையை ஒருங்கிணைத்தல், வருவாய் வழிகளைப் பெருக்குதல், புதுமைகளை அதிகரித்தல் மற்றும் நிலைத்தன்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீண்ட கால மதிப்பை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்.



**வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துதல்**

- தொலைதூர மற்றும் எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்துதல்
- கிளைகளை நிதி ஆலோசனை மையங்களாக மாற்றுதல்
- வாடிக்கையாளர் பயணத்தின் பிரிவு மற்றும் பகுப்பாய்வு
- செயன்முறைகள் மற்றும் கட்டமைப்புகளை எளிமையாக்குதல்
- வாடிக்கையாளர் தரவு பாதுகாப்பு

**ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்**

- சுறுசுறுப்பான வேலை முறையைப் பயன்படுத்தி குழுக்களை அதிகரித்தல்
- புதுமைக்கு வெகுமதி அளித்தல் மற்றும் ஊக்குவித்தல்
- தொழில்முறை திறன்களை வளர்த்தல்
- தகுதி மற்றும் பன்முகத்தன்மையின் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்
- அதிகாரமளித்தலின் அடிப்படையில் முகாமை மாதிரியை ஊக்குவித்தல்
- பன்முகத்தன்மை, சம வாய்ப்புகள் மற்றும் வேலை-வாழ்க்கை சமநிலை

**இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்**

- ஊழியர் நடத்தை மற்றும் பெறுமதிகள் மீது வலுவான கவனம்
- நிதிக் குற்றம் மற்றும் இணைய அபாயங்களைக் குறைப்பதற்கான திறன்களை மேம்படுத்துதல்
- இணக்கப்பாடின்மையில் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை
- வெளிப்படைத்தன்மை கலாச்சாரத்தை ஊக்குவித்தல்

**இயற்கை வளர்ச்சியை ஊக்குவித்தல்**

- சந்தைப் பங்கை அதிகரித்தல்
- வாடிக்கையாளர் கையகப்படுத்தல் மற்றும் தக்கவைத்தல்
- முக்கிய பகுதிகளில் நிலையான வளர்ச்சி
- மூலதனச் செலவைக் காட்டிலும் இலாபத் தன்மையை அதிகரித்தல்
- ஐந்தொகைக் குறிப்பின் தரத்தை மேம்படுத்துதல், சொத்து-பொறுப்பு பொருந்தாத தன்மையைக் குறைத்தல்

### குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்

**நிலைமாற்றும் தலைமைத்துவம்**

இலங்கையின் அரசுக்குச் சொந்தமான முதன்மையான விசேட வங்கி என்ற வகையில் எங்களுடைய நிலையில், முன்மாதிரியாக வழிநடத்தும் அதே வேளையில், ஒரு முன்மாதிரியான தலைவராக நாங்கள் பெருமை கொள்கிறோம். செயற்பாட்டின் சிறப்பம்சம், நிதி உள்ளடக்கம், வாடிக்கையாளர் சேவை கட்டளைகள், வணிக நெறிமுறைகள் மற்றும் பணியிட ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கான தரங்களை நாங்கள் அமைத்துள்ளோம். எமது சேவைகள் மூலம் இலங்கை மக்கள் தொடர்ந்து தமது வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் காண்கின்றனர். அனைத்து வணிக செயல்முறைகள் மற்றும் விநியோக வழிகளில் புதுமையை ஊக்குவிக்க நாங்கள் முயற்சி செய்கிறோம், மக்கள் அதிகபட்ச பலன்களைப் பெறுவதை உறுதி செய்வதற்காக வளர்ந்து வரும் வாய்ப்புகளை தொடர்ந்து பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

**எண்ணியல் மயமாக்கலை துரிதப்படுத்துதல்**

- எண்ணியல் தீர்வுகளை திறம்பட வழங்குதல்
- வாடிக்கையாளர் எண்ணியல் அனுபவத்தை மேம்படுத்துதல்
- செயன்முறை மற்றும் முறைமைகளை எளிதாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்
- செயற்பாட்டு மேன்மையை அடைதல்
- எண்ணியல் பாதுகாப்பை வலுப்படுத்துதல்
- முழு வங்கிக்கும் பெருந் தரவுகளின் திறனைப் பயன்படுத்துதல்

**உதாரணம் மூலம் தலைமை வகித்தல்**

- நிதி சேர்க்கைக்கான அர்ப்பணிப்பு
- பொறுப்பு மற்றும் நிலையான நிதியுதவியை ஊக்குவித்தல்
- "பசுமை" வணிகத்தை ஊக்குவித்தல்
- சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல் (சுற்றுச்சூழலுக்கு உகந்த முயற்சிகள் மூலம் கார்பன் தடத்தைக் குறைத்தல்)
- அர்த்தமுள்ள சமூக ஈடுபாடு

**தந்திரோபாய செயற்படுத்துநர்**

தொழிநுட்பம்

இடர் முகாமை

தலைமைத்துவம் மற்றும் ஆளுகை

மக்கள் மற்றும் கலாச்சாரம்

புத்தாக்கம்

செயன்முறை

**2021இற்கான தந்திரோபாயங்களின் வெளிவருவிளைவுகள்**

- 21.8 மில்லியன் கணக்குகள்
- ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப முறைமைகள்
- ஆரோக்கியமான ஐந்தொகை, வருமான/இலாப வளர்ச்சி
- மேம்படுத்தப்பட்ட எல்லை மற்றும் மூலதன வளர்ச்சி
- மிகக் குறைந்த தொழிற்படாக் கடன் விகிதங்கள்
- அதிக ஊழியர் தக்கவைப்பு
- அரச பத்திரங்களில் 2வது பெரிய முதலீட்டாளர்

## எமது குறுங் காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்

எங்கள் எண்ணியல் திறன்களை வலுப்படுத்தி, வாடிக்கையாளர் அனுபவங்களை மாற்றுவதற்கும், முற்றிலும் மாறுபட்ட உலகத்திற்கான செயற்பாட்டுத் திறனை இயக்குவதற்கும் எங்கள் வணிகத்தை ஒருங்கிணைத்து வருவதால், “எண்ணியலாக்கத்தை முடுக்கிவிடுதல்” என்ற நோக்கத்தையும் சேர்த்துள்ளோம். மற்றைய அனைத்து குறுகிய மற்றும் நடுத்தர காலத் தந்திரோபாய நோக்கங்களும் மாறாமல் இருக்கும் அதே வேளையில், அதை செயற்படுத்துவதை விரைவுபடுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

### வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துதல்

**அது ஏன் மிகவும் முக்கியமானது**

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவது எங்களின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் எண்ணத்துடன் பல வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல வழிமுறை அணுகுமுறையை நாங்கள் மேற்கொள்கிறோம். ஒரு வாடிக்கையாளர் எங்கள் வர்த்தக நாமத்துடன் ஈடுபடும் போதெல்லாம், ஒப்பிட முடியாத வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் போது, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழிமுறைகளுக்கு இடையே மாற்றம் தடையின்றி எளிதாக்கப்படுவதுடன், நாம் நமது பௌதீக தொடு புள்ளிகளை தக்கவைத்து மேம்படுத்துகிறோம்.

**தொடர்புடைய பொருண்மை மிக்க விடயங்கள்**

**ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனங்கள்**

**வள ஒதுக்கீடு**

தொழிநுட்பம், மக்கள், செயன்முறைகள்/உட்கட்டமைப்பு, உற்பத்திகள் மற்றும் சேவை முன்மொழிவுகளில் எங்களின் முதலீடுகள் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் வேறுபட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் முயற்சிகளுக்கு அடிகோலுகிறது.

**எங்கள் நீண்ட கால நோக்கங்களுக்கான பங்களிப்பு**

எங்கள் வாடிக்கையாளர்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைப் புரிந்துகொள்வது அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திற்கும் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்க உதவுகிறது. வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவத்தை மேம்படுத்துதல் என்பது “வாடிக்கையாளர் மையமாக” இருக்கும் எங்கள் நீண்ட கால தந்திரோபாய நோக்கத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது.

**முதன்மை ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துவதற்கு, புதுமையாக இருக்க வேண்டும், எண்ணியல் உட்கட்டமைப்பில் முதலீடு செய்ய வேண்டும், எங்கள் மக்களை மேம்படுத்த வேண்டும், வணிக கூட்டாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டும், இவை அனைத்தும் எங்கள் நீண்டகால நிலைபேறான தன்மையை பலப்படுத்துகின்றன.

4 QUALITY EDUCATION; 7 AFFORDABLE AND CLEAN ENERGY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

**வர்த்தக சமரசங்கள்**

- வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் செயற்பாட்டுத் திறன்களை மேம்படுத்த எண்ணியல் மயமாக்கலை அதிகரிக்க மேலதிகத் தகவல் தொழிநுட்ப வளர்ச்சி தேவைப்படுகிறது. இது ஒரு நிலையான மற்றும் பாதுகாப்பான தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பை உறுதி செய்வதற்காக பராமரிப்பு செலவை அதிகரிக்க வழிவகுத்ததுடன் எங்கள் தகவல் தொழிநுட்ப சொத்துக்களின் தேய்மானம் மற்றும் சேத இழப்பை அதிகரித்துள்ளது.
- புதுமையான, அணுகக்கூடிய மற்றும் குறைந்த கிரயத்தில் எண்ணியல் முறையில் செயற்படுத்தப்பட்ட தீர்வுகளை உருவாக்குவது வாடிக்கையாளர் தனியுரிமை மற்றும் தனிப்பட்ட தகவலின் பாதுகாப்பை மனதில் கொள்ள வேண்டும், அதே நேரத்தில் இது இணைய பாதுகாப்பு அபாயத்தைக் குறைக்கிறது.

### ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்

**அது ஏன் மிகவும் முக்கியமானது**

சிறந்த வாடிக்கையாளர் விளைவுகளையும் அனுபவங்களையும் வழங்குவதற்கு நாங்கள் எங்கள் மக்களைச் சார்ந்துள்ளோம். எங்கள் வணிகத்தை திறம்பட நடத்துவதற்கும், எங்கள் அக்கறையுள்ள தரப்பினருக்கு பெறுமதியை உருவாக்குவதற்கும் சரியான திறன்களைக் கொண்ட ஈடுபாடுள்ள மற்றும் ஊக்கமளிக்கும் பணியாளர்களின் குழுவை உருவாக்குவது அவசியம். எனவே, பாதுகாப்பான மற்றும் பலனளிக்கும் சூழலை உருவாக்குவதன் மூலம் சரியான நபர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் நாங்கள் உறுதியாக உள்ளோம். மிகவும் திறமையான, ஊக்கமளிக்கும், நல்ல தகவல் தொடர்பு திறன் கொண்ட, ஏற்றுக்கொள்ளக்கூடிய, பொறுப்பான, மற்றும் முன்மாதிரியாக இருக்கும் ஈடுபாடுள்ள பணியாளர்களின் குழுவை வளர்ப்பதில் நாங்கள் நோக்கமாக உள்ளோம்.

**தொடர்புடைய பொருண்மை மிக்க விடயங்கள்**

**ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனங்கள்**

**வள ஒதுக்கீடு**

நிதி மூலதனம், மனித மூலதனம் மற்றும் நேரத்தை முதலீடு செய்வது எங்கள் ஊழியர்களின் பயிற்சி மற்றும் ஈடுபாடு முயற்சிகளில் பணியாளர்களின் உற்பத்தித்திறன், பங்களிப்பு மற்றும் ஈடுபாடு மட்டுமல்ல, எங்கள் வர்த்தக நாமம் மற்றும் நற்பெயரையும் ஊக்குவிக்கிறது.

### எங்கள் நீண்ட கால நோக்கங்களுக்கான பங்களிப்பு

எங்களின் எதிர்கால தரவு சார்ந்த வணிக மாதிரியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், வளமான மற்றும் சமத்துவமான சமுதாயத்திற்கான எங்கள் நீண்டகால இலக்குகளை பிரதிபலிக்கும் பணியாளர்களை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நாங்கள் எங்கள் ஊழியர்களின் மேம்பாட்டில் முதலீடு செய்கிறோம், தொடர்புடைய கொள்கைகளைச் செயற்படுத்துகிறோம் மற்றும் எங்கள் ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியை ஆதரிக்க ஆரோக்கிய திட்டங்களை வைத்திருக்கிறோம்.

### முதன்மை ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

எங்களின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் பெறுமதியான திறன்கள், பயிற்சி மற்றும் அனுபவத்தைப் பெறுவது வங்கியின் நீண்ட கால நிலைபேறான தன்மையை வலுப்படுத்துகிறது.



### வர்த்தக சமரசங்கள்

- பயிற்சி மற்றும் மேம்பாடு மற்றும் பணியாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துதல், சரியான திறமைகளை ஈர்த்தல் மற்றும் நமது தந்திரோபாய நோக்கங்களை அடைவதற்கு அவசியமான பற்றாக்குறை அல்லது வளர்ந்து வரும் முக்கிய திறன்களை வளர்த்து தக்கவைத்துக்கொள்வதில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்யப்பட வேண்டும்.
- எண்ணியல் மயமாக்கல் - இது நமது எதிர்கால போட்டித்தன்மைக்கு முக்கியமானது - நாம் வணிகத்தை நடத்தும் விதத்தை மாற்றும். நமது எதிர்காலத் திறன் தேவைகளில் ஏற்படும் மாற்றங்கள் வணிக மற்றும் சமூகக் கருத்தாய்வுகள் இரண்டையும் சமநிலைப்படுத்துவதன் மூலம் பொறுப்பான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

## இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்

### அது ஏன் மிகவும் முக்கியமானது

தொடர்ந்து உருவாகி வரும் வர்த்தகப் பரப்பில் எழும் பல இடர்களை திறம்பட எதிர்நோக்கி நிர்வகிப்பதற்கு ஆரோக்கியமான இடர் கலாச்சாரத்தை உருவாக்க நாங்கள் முயற்சி செய்கிறோம். கிடைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் நாங்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். அபாயங்களை விவேகத்துடன் நிர்வகிப்பதற்கு எங்களின் வலுவான வணிக மாதிரியுடன் எங்களது உத்திகள் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்தவும் சீரமைக்கவும் பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகள், நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் முழுமையாக இணங்குவதன் மூலம் நெறிமுறையுடன் செயல்படுவதற்கும் ஆரோக்கியமான இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துவதற்கும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம், மேலும் எங்கள் ஆபத்து திறன்களை வலுப்படுத்த புதிய தொழிநுட்பங்களை ஏற்றுக்கொள்கிறோம்.

### தொடர்புடைய பொருண்மை மிக்க விடயங்கள்



### ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனங்கள்



### வள ஒதுக்கீடு

அனைத்து வகையான முறைகேடுகள் மற்றும் நிதிக் குற்றங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான வலுவான நெறிமுறைகள் மற்றும் செயன்முறைகளை உருவாக்க, மக்கள், செயன்முறைகள் மற்றும் முறைமைகளில் நாங்கள் முதலீடு செய்கிறோம். இந்த முதலீடு இடர்களைக் குறைத்தோடு, இது நமது போட்டியாளர்களின் இடர் கலாச்சாரங்களுடன் ஒப்பிடும் போது வாடிக்கையாளர் உறவுகளில் வேறுபடும் காரணியாகும்.

### எங்கள் நீண்ட கால நோக்கங்களுக்கான பங்களிப்பு

“ஆளுகையில் சிறந்து விளங்குதல்” என்ற எங்களின் நீண்டகால நோக்கத்தை அடைய, பெறுமதியினால் தூண்டப்பட்ட கலாச்சாரம் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பினால் ஆதரிக்கப்படும் மரியாதைக்குரிய மற்றும் நெறிமுறை வர்த்தக நாம உத்தரவாதத்துடன் இடர் கலாச்சாரத்தை நிறுவ நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

### முதன்மை ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

இணக்கப்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகளை உறுதி செய்வதற்காக எங்களின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் சரிசெய்தல் நிதிச் சூழல் அமைப்பில் நிலையான, பாதுகாப்பான மற்றும் வலுவான நிறுவனமாக இருக்க நம்மைத் தூண்டுகிறது.



### வர்த்தக சமரசங்கள்

- எங்கள் கடன் வெளிப்பாடுகளை நிர்வகிக்கும் போது, வாடிக்கையாளர் வளர்ச்சி மற்றும் நமது வருவாய் ஈட்டும் திறனைத் தடுக்கும், சமூக மற்றும் பொருளாதார அம்சங்களைக் கருத்தில் கொண்டு, நமது இடர் இயல்திறனை/விருப்பத்தை இறுக்கமாக்க வேண்டும்.
- தொடர்ந்து உருவாகி வரும் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் தேவைகள் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை விரைவான மற்றும் வசதியான முறையில் பூர்த்தி செய்யும் திறனைக் குறைக்கிறது.
- புதிய ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குதல்
- இணக்கப்பாட்டிற்கான செலவுகளை மேற்கொள்வதுடன், தொழிநுட்ப அடிப்படையிலான இடர் தீர்வுகளை நிறுவ வேண்டும், எங்கள் ஊழியர்களுக்கு விரிவான பயிற்சி அளிக்க வேண்டும், மேலும் நம்பகமான நிறுவனமாக நமது நற்பெயரைப் பாதுகாக்க வணிக அமைப்புகளைப் பின்பற்ற வேண்டும்.

## இயற்கை வளர்ச்சியை ஊக்குவித்தல்

### அது ஏன் மிகவும் முக்கியமானது

எமது ஆரம்பம் முதல், இலங்கையில் சேமிப்புக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான எமது கட்டளையை அடைவதற்காக எமது அமைப்புகள், செயற்பாடுகள் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளை நாங்கள் வழிநடத்தியுள்ளோம். எமது 49 வருட செயற்பாடுகளில், அனைத்து இலங்கையர்களாலும் நம்பப்படும் ஒரு நிறுவனமாக நாங்கள் மாறியுள்ளோம். நிதி ஸ்திரத்தன்மை மற்றும் இயற்கை வளர்ச்சியை அடைய நாங்கள் எங்கள் முறைமைகளையும் செயன்முறைகளையும் பயன்படுத்துகிறோம்.

வங்கி அளவிலான, பல வழிமுறை முயற்சிகள், வாடிக்கையாளர் அனுபவத்தையும் பணியாளர் ஈடுபாட்டையும் மேம்படுத்துவதிலலும், முகாமை வளர்ச்சி மற்றும் எங்கள் அக்கறையுள்ள தரப்பினருக்கு நிலையான வருமானத்தை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறோம், அதே நேரத்தில் விவேகமான இடர் நேர்வையும் கடைப்பிடிக்கிறோம்.

### தொடர்புடைய பொருண்மை மிக்க விடயங்கள்



### ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனங்கள்



### வள ஒதுக்கீடு

சிறந்த சந்தை வாய்ப்புகள் இருப்பதாக நாங்கள் நம்பும் இடத்திற்கு நிதி, மனித மற்றும் உற்பத்தி மூலதனத்தை நாங்கள் ஒதுக்குகிறோம். புதிய வருமான வழிகள் பொருத்தமானதாக இருப்பதையும், நிலைபேறான தன்மையைப் பாதுகாப்பதையும் உறுதிசெய்ய, விவேகமான இடர் அணுகுமுறையுடன் இது மேற்கொள்ளப் படுகிறது.

### எங்கள் நீண்ட கால நோக்கங்களுக்கான பங்களிப்பு

நமது நீண்ட கால தந்திரோபாய நோக்கமான “வலிமை மற்றும் நிலைபேறான தன்மை” நமது பூமி மற்றும் சமூகத்தின் நல்வாழ்வை நம்பியுள்ளது. எனவே, நமது மூலதன ஒதுக்கீடு முடிவுகள் நமது முதலீட்டின் நீண்டகால விளைவுகளை கருத்தில் கொள்ள வேண்டும். சாத்தியமான இடங்களில், புதுமையான வளர்ச்சித் தீர்வுகளைக் கருத்தில் கொண்டு, எங்கள் கட்டிடங்களை பசுமையாக்குவதற்கும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளைச் செயல்படுத்துவதற்கும் முதலீடு செய்கிறோம்.

### முதன்மை ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நமது நீண்ட கால வெற்றியானது, நாம் செயற்படும் சமூகங்களுக்குப் பயனுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதன் மூலம் சமுதாயத்திற்கான பெறுமதியை உருவாக்கும் திறனைப் பொறுத்தது ஆகும்.



### வர்த்தக சமரசங்கள்

- சொத்து வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கு தேவையான மூலதனத்தை ஈர்ப்பதற்காக, வைப்பாளர்கள் உட்பட, எங்கள் அக்கறையுள்ள தரப்பினர் மற்றும் கடன் வழங்குநர்களுக்கு பொருத்தமான வருமான வீதத்தை வழங்க வேண்டும். எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளை தொடர்ச்சியாகவும் நிலையானதாகவும் பூர்த்தி செய்வதன் மூலம் எங்களின் வருமானத்தை அதிகரிக்க இது வேண்டிநிற்கின்றது.

## உதாரணம் மூலம் தலைமை வகித்தல்

### அது ஏன் மிகவும் முக்கியமானது

சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளும் தீர்வுகளுக்கு பங்களிப்பதன் மூலம் வங்கியின் நேர்க் கணிய தாக்கத்தை பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். வணிக நடவடிக்கைகளின் ஒவ்வொரு பகுதியிலும் நாங்கள் நிலைத்தன்மையை ஒருங்கிணைக்கிறோம் மற்றும் UNSDG களை அடைவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் மீதான நமது தாக்கத்தை நாங்கள் அறிந்திருக்கிறோம். மற்றும் பொறுப்பான மற்றும் நிலையான வணிக நடைமுறைகளில் ஈடுபடுவதன் மூலம் சமூக பெறுமதியை உருவாக்க உறுதிபூண்டுள்ளோம். ஆழ்ந்த சமூக வேர்களைக் கொண்ட ஒரு அரசு அமைப்பாக, தே.சே.வங்கி ஒரு முன்மாதிரியான பெருநிறுவன குடிமகன் என்ற நற்பெயரைக் கொண்டு முன்னோடியாகத் திகழ்கிறோம்.

### தொடர்புடைய பொருண்மை மிக்க விடயங்கள்



### ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனங்கள்



### வள ஒதுக்கீடு

எங்கள் ஆறு மூலதனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளைத் தொடர கணினிகள் மற்றும் செயன்முறைகளில் கணிசமான அளவு நிதி, மக்கள் மற்றும் நேரத்தை நாங்கள் ஒதுக்குகிறோம். 2021 இல், நமது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) உறுதிப்பாட்டை ஆழமாக்குவதில் நாங்கள் முதலீடு செய்தோம்.

### எங்கள் நீண்ட கால நோக்கங்களுக்கான பங்களிப்பு

நமது வெற்றி நமது சமூகத்தைப் பொறுத்தது. தே.சே. வங்கி மற்றும் எங்கள் அக்கறையுள்ள தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்ட மற்றும் பரஸ்பர நன்மைகளை உருவாக்கும் இலக்கு முன்முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம், எங்கள் செயல்பாடுகளின் நீண்டகால மீளெழுச்சியை நாங்கள் உறுதிசெய்கிறோம். நமது சவாலான சமூக-பொருளாதார சூழலில், நிலையான வளர்ச்சியை அடைவது உலகளாவிய முன்னுரிமை மட்டுமல்ல, ”நிலைமாற்றும் தலைமைத்துவம்” என்ற எங்கள் நீண்டகால நோக்கத்தை ஆதரிக்கும் வணிக கட்டாயமாகும்.

### முதன்மை ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

வங்கியானது சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் சமூகங்களை அதன் நுகர்வினால் நேரடியாக பாதிப்பதோடு மறைமுகமாக வங்கியின் நிதி இடைநிலை (கடன் வழங்குதல் மற்றும் முதலீட்டு நடைமுறைகள்) எனும் வகிபாகத்தின் மூலமும் செல்வாக்குச் செலுத்துகிறது. நாட்டின் ஆரோக்கியம் மற்றும் ஸ்திரத்தன்மை, நாட்டின் மீது நேர்க் கணியத் தாக்கம் கொண்ட SDG களை அடைவதற்கான துணை முயற்சிகளும் நீண்ட காலத்திற்கு நிலையான வளர்ச்சியை அடைவதற்கான நமது திறனை பாதிக்கிறது.



### வர்த்தக சமரசங்கள்

- கணிசமான முதலீடுகளுடன் முறைமைகள் மற்றும் செயன்முறைகளை செயற்படுத்துதல் மற்றும் திறனை மேம்படுத்துதல், பொறுப்புடன் செயற்பட மற்றும் நிலைபேறான தன்மையைப் பேணுதல்.
- கடனளிப்பதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களை ஆதரித்தல், அதே நேரத்தில் கடன் தவறுகை இடரை நிர்வகித்தல்.
- காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட துறைகளில் கடன்களை மறுகட்டமைப்பது வாடிக்கையாளரின் வணிகத்தின் நம்பகத்தன்மையை பாதிக்கிறது.

## எண்ணியல் மயமாக்கலை துரிதப்படுத்துதல்

### அது ஏன் மிகவும் முக்கியமானது

எண்ணியல் கண்டுபிடிப்புகள் நமக்கு குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வாய்ப்புகள் இரண்டையும் வழங்குகின்றன. வாடிக்கையாளர் அனுபவத்தையும் திருப்தியையும் மேம்படுத்தவும், வங்கித் தொழிலுக்கு அப்பாற்பட்ட புதிய வருமான வழிகளைக் கண்டறியவும், செலவுகளைக் குறைக்கவும் எண்ணியல் கண்டுபிடிப்புகளை வழங்குவதையும், அதிக அளவிலான எண்ணியல் சேவைக்கான உந்துதலையும் துரிதப்படுத்துகிறோம். கொவிட்-19 தொற்றுநோயின் நடத்தை விளைவுகள் எண்ணியலாக்கப் பின்பற்றுகையின் அளவை அதிகரிக்கவும், அதிக அளவிலான நெகிழ்வான பணி நடைமுறைகளை ஊக்குவிக்கவும் வாய்ப்புள்ளது. எனவே, புதுமை, சீர்குலைவு மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவற்றில் வங்கியில் முதன்மையான முன்னுரிமை வழங்கப்பட்டு எங்கள் கவனம் உள்ளது.

### தொடர்புடைய பொருண்மை மிக்க விடயங்கள்



### ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனங்கள்



### வள ஒதுக்கீடு

சமீபத்திய ஆண்டுகளில், தொழில்நுட்பம், அமைப்புகள் மற்றும் மனித மூலதனம் தொடர்பான உருமாற்ற முயற்சிகளில் அதிக முதலீடுகளைச் செய்யத் தொடங்கியுள்ளோம். வங்கியை முழுவதுமாக எண்ணியல் மயமாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் நாங்கள் கூட்டாக இணைந்து செயற்படுகிறோம்.

### எங்கள் நீண்ட கால நோக்கங்களுக்கான பங்களிப்பு

கொவிட்-19 காரணமாக எண்ணியல் மயமாக்கல், உலகளாவிய இணைப்பு மற்றும் ஜனநாயக மயமாக்கப்பட்ட கணினி போன்ற நீண்ட கால தொழில்துறை போக்குகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எண்ணியல் மயமாக்கப்பட்ட நிறுவனமாக இருப்பது இதற்கு முன்பை விட எப்போதும் மிகவும் பொருத்தமானதாக இருந்ததில்லை, மேலும் தே.சே.வங்கி எண்ணியல் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கான வாய்ப்புகளைத் தொடர்ச்சியாக முயற்சிக்கிறது, இது "நிலையான வளர்ச்சியின்" கீழ் எங்களின் அனைத்து நீண்ட கால தந்திரோபாய நோக்கங்களையும் அடைய உதவும்.

### முதன்மை ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

எண்ணியல் மயமாக்கலால் துரிதப்படுத்தப்பட்ட நிதி உள்ளடக்கமானது பரிவர்த்தனைகளை மிகவும் திறமையாகவும், வெளிப்படையாகவும், பாதுகாப்பாகவும் மாற்றுவதற்கு முக்கியமாகும். இது வறுமையை குறைக்கும் அதே வேளையில் சேமிப்பு மற்றும் வணிக வாய்ப்புகளை விரிவுபடுத்தும்.



### வர்த்தக சமரசங்கள்

- நிதிச் சேவைகளை வழங்குவது தொடர்ந்து எண்ணியல் இடைமுகங்களை நோக்கி நகர்கிறது, மேலும் இது நேரடியாக எங்கள் கிளைகள் மற்றும் பணியாளர்களை பாதிக்கிறது.
- இதையொட்டி, இது வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தும் நன்மையைக் கொண்டுள்ளது.
- இருப்பினும், இது நமது மனித மூலதனத் தேவைகளைக் குறைத்து, நமது கிளைகளை மறுசீரமைக்கிறது.
- ஒழுங்குமுறை மாற்றங்கள், புதுமை மற்றும் நவீனமயமாக்கல் மற்றும் இணைய பின்னடைவு ஆகியவற்றை உள்ளடக்கிய தகவல் மற்றும் தொழிநுட்பத்தில் முதலீடு செய்வதன் மூலம் எழும் செலவு செயல்திறன் மூலம் ஓரளவு ஈடுசெய்யப்படுகிறது.

## எமது தந்திரோபாய பெறுபேற்று அட்டை

| | | | |
|---|---|---|---|
| அடையப்பட்டவை | ✓ | பகுதியளவில் அடையப்பட்டவை | ⊗ |
| அடையப்படாதவை | ✓ | கொவிட்-19 காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவை அல்லது பாதிக்கப்பட்டவை | ⏸ |

| தந்திரோபாய குறிக்கோள்கள் | 2021 க்கான முன்னுரிமைகள் | முக்கிய வெளிப்பாடுகள் | நிலைமை | உண்மையான அடைவு 2021 | 2020 | 2019 | குறிப்புக்கள் | எதிர்கால முன்னுரிமைகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாடிக்கையாளர் அனுபவத்தை உச்சப்படுத்தல் | அணுகை மற்றும் வசதித் தன்மையை அதிகரித்தல் | இலக்கு வைக்கப்பட்ட இடங்களில் புதிய கிளைகளைத் திறத்தல் | ⏸ | 2 | 3 | 1 | | • வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் மற்றும் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப எங்கள் உற்பத்திகள், சேவைகள் மற்றும் வழிமுறைகளை தொடர்ந்து மேம்படுத்தல்<br>• நமது தடத்தை வலுப்படுத்த அஞ்சல் வலையமைப்பை பயன்படுத்தல்<br>• கிளைகளில் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த முயலுதல்<br>• சுய சேவை வழிமுறைகளை இயக்குதல் மற்றும் வாடிக்கையாளர்களின் காத்திருப்பு நேரத்தைக் குறைத்தல் | வாடிக்கையாளர் தளத்தை அதிகரித்தல்<br>விநியோக வழிமுறைகளை அதிகரித்தல் |
| | சுய சேவை வழிமுறைகளை இயக்குதல் மற்றும் வாடிக்கையாளர்களின் காத்திருப்பு நேரத்தைக் குறைத்தல் | அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் பண மறுசுழற்சி இயந்திரங்களை இயக்குதல் | ⏸ | 1 | – | – | | | |
| | | கிளைகளில் பண மறுசுழற்சி இயந்திரங்களை பொருத்துதல் | ✓ | 19 | 27 | 24 | | | |
| | | அதிக வாடிக்கையாளர்களை இணைய வங்கியியல் நோக்கி கவர்தல் | ✓ | 112,531 | 85,327 | 18,298 | | | |
| | உற்பத்தி விருத்தி | சிறுவர்களுக்கான புதிய உற்பத்திகளை விருத்தி செய்தல் | ⊗<br>⏸ | – | – | – | | | |
| | வாடிக்கையாளர் ஈடுபாடு, விழிப்புணர்வு, ஒருங்கிணைவு மற்றும் விசுவாசத்தை அதிகரித்தல் | இலங்கையின் வர்த்தக நாம வரிசைப்படுத்தல் | ✓ | 5 | 6 | 5 | | | |
| இயற்கை வளர்ச்சியை ஊக்கப்படுத்தல் | மைய நடவடிக்கைகளில் வளர்ச்சி | தொழிற் துறையுடன் ஒப்பிடுகையில் வைப்புக்களிலான வளர்ச்சி (%)<br>தே.சே.வங்கி<br>தொழிற்துறை | ✓ | <br>15.5<br>13.7 | <br>21.7<br>21.6 | <br>21.1<br>7.9 | | • பல்வேறு எண்ணியல் மயமாக்கல் முயற்சிகள் மூலம் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்<br>• கட்டண அடிப்படையிலான வருமானத்தை மேம்படுத்த புதிய வழிகளை ஆராய்தல்<br>• ஐந்தொகைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தந்திரோபாயம் அல்லாத சொத்துக்களை குறைத்தல்<br>• நிதிச் செலவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல்<br>• சந்தைப் பங்கை மேம்படுத்துதல்<br>• மூலதனச் செலவைக் காட்டிலும் இலாபத்தை அதிகரிப்பது<br>• பின்-அலுவலக செயன்முறைகளின் செயற்திறனை மேம்படுத்துதல் | • நிலையான நிதி வருவாயை உருவாக்குதல்<br>• நிலையான மூலதனத் தளத்தை உருவாக்குதல்<br>• பங்கு இலாபத் தொகையை அறிவிப்பதைத் தொடர்தல் |
| | | தொழிற் துறையுடன் ஒப்பிடுகையில் வைப்புக்களிலான வளர்ச்சி (%)<br>தே.சே.வங்கி<br>தொழிற்துறை | ✓ | <br>17.7<br>13.5 | <br>13.7<br>12.7 | <br>7.5<br>5.0 | | | |
| | வைப்புச் சந்தைப் பங்கில் ஏற்படும் வீழ்ச்சியைக் குறைத்தல் | சந்தைப் பங்கைத் தக்க வைத்தல் அல்லது அதிகரித்தல் | ✓ | 11.0 | 10.8 | 10.7 | | | |
| | பங்குதாரருக்கான பெறுமதியை அதிகரித்தல் | நடுத்தரளவு கால எல்லைக்கான உரிமையாண்மை மீதான 10% முதலை 15% ஆக அதிகரிப்பதன் மூலம் பங்குதாரர் உழைப்பை அதிகரித்தல் | ✓ | 33.9 | 20.1 | 14.3 | | | |
| | கிரயங்களை பயனுறுதி மிக்க வகையில் முகாமை செய்தல் | வருமானத்துக்கான கிரய விகிதம் (%) | ✓ | 33.3 | 39.3 | 49.6 | | | |
| | உழைப்புத் தளம்பல்களை குறைத்தல் மற்றும் வட்டி வருமானத்தில் தங்கியிருத்தல் | கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரித்தல் (%) | ✓ | 12.6 | 11.5 | 25.5 | | | |

| தந்திரோபாய குறிக்கோள்கள் | 2021 க்கான முன்னுரிமைகள் | முக்கிய வெளிப்பாடுகள் | நிலைமை | உண்மையான அடைவு 2021 | 2020 | 2019 | குறிப்புக்கள் | எதிர்கால முன்னுரிமைகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணியல் மயமாக்கலை துரிதப்படுத்தல் | தகவல் தொழிநுட்ப செயற்றிட்டங்களை கொண்டு நடாத்துதல் | கைத் தொலைபேசிக் கொடுப்பனவு தீர்வைச் செயற்படுத்தல் | ✓ | ✓ | – | – | | • வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல், தனியுரிமை, ஆனால் இணையப் பாதுகாப்பு இடரை சமரசம் செய்யாமல் புதுமையான, அணுகக்கூடிய மற்றும் கிரயம் குறைந்த எண்ணியல் முறையில் செயற்படுத்தப்பட்ட தீர்வுகளை உருவாக்குதல் • தொலைதூர மற்றும் எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்தல் | திருப்தி மிக்க வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத்தை அதிகரித்தல் ஊழியர் வினைத்திறனை அதிகரித்தல் |
| | | மைய வங்கி முறைமையை தனிப்பயனாக்கம் மற்றும் சோதனை செய்தல் | ✓ ⏸ | – | – | – | | | |
| | | எண்ணியல் மூலதனத்தில் முதலீடு செய்தல் (ரூபா மில்லியன்) | ✓ | 534.8 | 539.1 | – | 2022 இல் நடைமுறைப்படுத்தப்படும். | | |
| | | மனித வள முகாமை முறைமையை நடைமுறைப்படுத்தல் | ✓ ⏸ | – | – | – | ஊழியர்களிடையில் கொவிட்-19 பரம்பல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளால் நடைமுறைப்படுத்த முடியவில்லை | | |
| ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்தல் | ஊழியர் பெறுமதி முன்னோட்டத்தை அதிகரித்தல் | ஊழியர் மிது செலவிடல் (ரூபா பில்லியன்) | ✓ | 13.0 | 10.0 | 10.2 | | • வேலை-வாழ்க்கை சமநிலையுடன் ஊழியரின் மகிழ்ச்சி மற்றும் வேலையில் விசுவாசத்தை மேம்படுத்தல் • ஊழியர் மேம்பாடு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி நேர்க் கணிய கலாச்சாரத்தை உருவாக்கல் • மின்னியல் முறைக் கற்றல் கலாச்சாரத்தை உருவாக்குதல் • எண்ணியல் மாற்றம் நோக்கி முகாமையை மாற்றுதல் • உயர்தர வாடிக்கையாளர் சேவை மற்றும் ஊழியர் மேம்பாட்டிற்கான பயிற்சி • தேர்வு மற்றும் உள்ளக பதவி உயர்வு செயன்முறைகளில் தொழின்முறை மேம்பாடு மற்றும் தகுதி அடிப்படையிலான அளவுகோல்களை ஊக்குவித்தல் | உயர்ந்தளவில் ஊக்குவிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் குறைந்த ஊழியப் புரள்வு |
| | | ஊழியர் தன்னார்வ புரள்வு (%) | ✓ | 0.18 | 0.23 | 0.28 | | | |
| | | ஒன்றியப்படுத்தப்பட்ட சம்பள அதிகரிப்பு (%) | ✓ | 17 | 22 | 22 | | | |
| | | அனைத்து மட்டங்களிலும் நிரந்தர ஊழியர்களிடையில் பாலின சமத்துவம் | ✓ | 5:5 | 5:5 | 5:5 | | | |
| | | உற்பத்தித் திறன் மற்றும் ஊக்குவிப்பை மேம்படுத்த இலக்கு அடிப்படையிலான பெறுபேற்று மதிப்பீட்டு முறைமையை அறிமுகம் செய்தல் | ✗ | – | – | – | 2022 இல் நடைமுறைப்படுத்தப்படும். | | |
| | கற்றல் மற்றும் விருத்தி | பயிற்சி மற்றும் விருத்தி மீதான செலவீடு (ரூபா மில்லியன்) | ✓ | 11.0 | 8.8 | 39.4 | | | |
| | | நிகழ்நிலை பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | ✓ | 145 | 17 | 9 | | | |
| | | மைய வங்கியியல் தீர்வு நடைமுறைப்படுத்தலுடன், மாற்ற முகாமை தொடர்பிலான பயிற்சி | ✓ | 157 | 4 | – | | | |

பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021 →

| தந்திரோபாய குறிக்கோள்கள் | 2021 க்கான முன்னுரிமைகள் | முக்கிய வெளிப்பாடுகள் | நிலைமை | உண்மையான அடைவு 2021 | உண்மையான அடைவு 2020 | உண்மையான அடைவு 2019 | குறிப்புக்கள் | எதிர்கால முன்னுரிமைகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இடர் கலாச்சாரத்தை மீள வலியுறுத்துதல் | பலமான மூலதனப் போதுகை மட்டங்களை நிலைப்படுத்தல் | மூலதனப் போதுமை விகிதம் – மட்டம் 1 பாசல் III இணக்கப்பாடு (%) | ✓ | 18.6 | 13.6 | 13.5 | | ● விவேகமான மற்றும் ஒழுக்கமான முறையில் வணிக வளர்ச்சியை எளிதாக்குவதற்கு வலுவான மூலதனப் போதுமான அளவுகளை நிலைநிறுத்துதல்.<br>● சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வணிக நடவடிக்கைகளில் அவற்றை ஒருங்கிணைத்தல்.<br>● முறைகேடுகளைத் தடுப்பதிலும் கண்டறிவதிலும் எண்ணியல் திறன்களைப் பயன்படுத்துதல்<br>● இணையவழிப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கான முறைமைகள், செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் வலிமையைப் பராமரித்தல்.<br>● ஒழுக்கமான கடன் இடர் முகாமை மூலம் வலுவான சொத்து தரத்தை நிலைநிறுத்தல | ● நிலைபேறான மூலதன முகாமை<br>● விவேகமான இடர் முகாமை மற்றும் பூச்சிய இணக்கமின்மை |
| | | மொத்த மூலதன விகிதங்கள் பாசல் III இணக்கப்பாடு (%) | ✓ | 20.8 | 16.4 | 15.8 | | | |
| | கடன் இடரினை விவேகமாக நிர்வகித்தல் | தொழிற்படாக் கடன் விகிதம் (%) | ✓ | 2.97 | 2.79 | 1.57 | தொழிற்துறை சராசரி 4.5% க்கு குறைவாக உள்ளது | | |
| | இணையவழிப் பாதுகாப்பு | வங்கியில் இருந்து 24/7 பாதுகாப்புத் தொழிற்பாட்டு மையத்தை நடாத்துதல் | ✓ | ✓ | – | – | | | |
| | | 2019 இல் பெறப்பட்ட PCIDSS சான்றுப்படுத்தலைப் பேணுதல் | ✓ | ✓ | – | – | | | |
| | | ISO 27001 சான்றுப்படுத்தலைப் பெறுதல் | ✓ | ✓ | – | – | | | |
| | இணக்கமின்மைக்கு பூச்சிய சகிப்புத்தன்மை | ஒழுங்கு விதிமுறை தண்டங்கள் அல்லது அபராதங்கள் | ✓ | 0 | 0 | 0 | | | |

| தந்திரோபாய குறிக்கோள்கள் | 2021 க்கான முன்னுரிமைகள் | முக்கிய வெளிப்பாடுகள் | நிலைமை | உண்மையான அடைவு 2021 | உண்மையான அடைவு 2020 | உண்மையான அடைவு 2019 | குறிப்புக்கள் | எதிர்கால முன்னுரிமைகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உதாரணம் மூலம் தலைமை வகித்தல் | எமது சகல வணிகத் தொழிற்பாடுகளிலும் சுற்றுச் சூழல் தடத்தை குறைத்தல் | சக்தி நுகர்வு (GJ) | ⊗ | 33,539 | 31,823 | 35,696 | | ● நிதிச் சேவைகள், கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற சமூக சவால்களை எதிர்கொள்ளல்<br>● சமூக வளர்ச்சியில் தந்திரோபாய கூட்டாண்மைகளுக்கு நிதியளித்தல்<br>● நமது கடன் வழங்கும் நடைமுறைகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களை நிர்வகித்தல்<br>● நமது சுற்றுச்சூழல் தடத்தை நிர்வகித்தல்<br>● நிதி உள்ளடக்கத்திற்கான அர்ப்பணிப்பு | ● நாம் தொழிற்படும் சமூகத்துக்குப் பங்களிப்பு செய்தல்<br>● எமது காபன் தடத்தைக் குறைத்தல் |
| | | நீர் நுகர்வு (m3) | ✓ | 88,986 | 105,515 | 79,368 | | | |
| | | மீள் சுழற்சிக்கு உட்பட்ட காகிதம் (kg) | ✓ | 3,070 | 1,159 | 3,000 | | | |
| | உள்நாட்டு சமுதாயங்களை மேம்படுத்தல் மற்றும் சமுதாயத்தை கட்டியெழுப்பும் முன்முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல் | உள்நாட்டு வழங்குனர்களிடம் இருந்தான உள்நாட்டுக் கொள்வனவுகளுக்கு செலவிடப்பட்ட விகிதாசாரம் (%) | ✓ | 100% | 100% | 100% | | | |
| | பொருளாதார ரீதியான ஆதரவு | செலுத்திய நேர் மற்றும் நேரில் வரிகள் (ரூபா பில்லியன்) | ✓ | 12.4 | 9.3 | 9.3 | | | |
| | | செலுத்திய பங்கு இலாபம் (ரூபா பில்லியன்) | ✓ | 3.5 | 1.0 | 2.0 | | | |
| | குறைந்த காபன் பொருளாதாரத்துக்கு ஆதரவு வழங்குதல் | வழங்கப்பட்ட சுற்றுச் சூழல் கடன்களின் எண்ணிக்கை | ✓ | 9 | 8 | 222 | | | |

# ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு

GRI 102-40, 42, 43 and 44

பங்கீடுபாட்டாளர்களின் ஈடுபாடு ஒரு வெற்றிகரமான வணிக நடவடிக்கைக்கு அடிப்படையானதாக விளங்குகிறது. முனைப்பான அக்கறைதாரர் ஈடுபாட்டின் ஊடாக தேசிய சேமிப்பு வங்கிக்கும் எமது சமூகத்திற்குமான பெறுமதியினை உருவாக்குவதே எமது இலக்காகும். வலுவான மற்றும் ஆக்கபூர்வமான அக்கறைதாரர் தொடர்புகள், நம்பிக்கை, கௌரவம், வெளிப்படைத்தன்மை, ஆக்கபூர்வமான ஈடுபாடு, மற்றும் நெறிமுறை மிக்க வியாபார நடைமுறைகள் போன்றவற்றின் மீதே கட்டியெழுப்பப்படுகின்றன.

எமது உறுதியான அக்கறைதாரர் ஈடுபாட்டுச் செயன்முறையானது எமது பெறுமதி உருவாக்கச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையிலும் ஒருங்கிணைக்கப்படுகின்றது. நாங்கள் பெறுமதியை உருவாக்கும் செயற்பாட்டில் ஒரு வாடிக்கையாளர் மைய மற்றும் அக்கறைதாரர் உள்ளிட்ட அணுகுமுறை ஒன்றினை பொருந்திக் கொள்கின்றோம். எமது அக்கறைதாரர் ஈடுபாட்டு வேலைச்சட்டமானது அக்கறைதாரர்களை இனங்காணல், அவர்களுடன் பணியாற்றுதல், அவர்களது சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளல், வங்கிக்கான விடயம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணல் போன்றவற்றுடன் ஈடுபடுவதோடு, தேசிய சேமிப்பு வங்கியின் மூலோபாய மற்றும் இயக்கப்பாட்டு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை சீரமைக்கின்றது.

அர்த்தபூர்வமான கலந்துரையாடல் மூலம், நாங்கள் அவர்களது தேவைகள் மற்றும் அக்கறை மிக்க விடயங்களை சிறப்பாக புரிந்து கொண்டு அவற்றுக்குத் தீர்வு வழங்குகின்ற அதேவேளை, உருவாக்கப்பட்ட பெறுமதிகளின் பகிர்வினையும் நாம் சமநிலைப்படுத்துகின்றோம். அவர்களில் அனேகமானவர்களுக்கு முக்கியமாக விளங்குகின்ற விடயங்களையும் எமது வணிக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டதாக விளங்குகின்ற விடயங்களையும் ஆழமாகப் புரிந்துகொள்வதன் மூலம் நாங்கள் இதனை மேற்கொண்டு வருகின்றோம். இந்த அணுகுமுறையானது பொருளாதார, சூழலியல் மற்றும் சமூகம் சார்ந்த பெறுமதியினை, எமக்கு மாத்திரமல்லாது எமது அக்கறைதாரர்களுக்குமாக உருவாக்கி அதனைப் பாதுகாப்பதற்கான எமது வங்கியின் திறமை மீதான ஒரு நேரடியான அல்லது மறைமுகமான தாக்கத்தைக் கொண்ட விடயங்களை இனங்காண்பதற்கு எம்மை இயலச் செய்துள்ளது. எமது அக்கறைதாரர்களின் பின்னூட்டலானது எமது மூலோபாயத்தை கட்டியெழுப்புவதற்கு உதவுவதோடு, இது எமது அக்கறைதாரர்களுக்கு உறுதியான பெறுமதியை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பினைத் தெளிவாக கோடிட்டுக் காட்டுகிறது.

நாங்கள் எமது அக்கறைதாரர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னூட்டல்களின் அடிப்படையில் எமது வணிக மாதிரியையும் ஒருங்கிணைந்த மூலோபாயத் திட்டமிடல் செயன்முறைகளையும் தொடர்ந்தும் மேம்படுத்தி வருவதனால், இத்தகைய வினைத்திறன் மிக்க அக்கறைதாரர் ஈடுபாடானது எதிர்காலத் தயார்நிலைக்கு எங்களைக் கட்டாயப்படுத்துகிறது.

## எமது ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாட்டுச் செயன்முறை

எமது அக்கறைதாரர் ஈடுபாட்டுச் செயன்முறையானது பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது:

1. அனைத்து அக்கறைதாரர்களையும் இனங்காணல்
2. பிரதான அக்கறைதாரர்களை முன்னுரிமைப்படுத்தல்
3. ஈடுபாட்டு முறையினை வரையறை செய்தல் மற்றும் அக்கறைதாரர் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை இனங்காணல்
4. அக்கறைதாரர் தொடர்புகளை கண்காணிப்பதற்கும் மதிப்பிடுவதற்குமான கருவி ஒன்றினை தாபித்தல்

## 1. அனைத்துப் அக்கறைதாரர்களையும் இனங்காணல்

ஒரு பரந்துபட்ட அக்கறைதாரர்களை நாங்கள் கொண்டுள்ளோம். இவர்களில் எங்களால் பாதிக்கப்படக் கூடியவர்களும் மற்றும் பதிலுக்கு எம்மைப் பாதிக்கின்றவர்களும் உள்ளனர். எங்களுடைய செயற்பாடுகள், உற்பத்திகள் மற்றும் சேவைகள் மூலம் கணிசமான அளவு பாதிக்கப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களை நாங்கள் வரையறை செய்கின்றோம். இதனால் இவர்களது இலக்குப் பார்வைகளும் செயற்பாடுகளும் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் மற்றும் எமது மூலோபாய இலக்குகளை எதிர்கொள்வதற்குமான எமது திறமைகள் மீது ஒரு வலுவான விளைவினைக் கொண்டுள்ளன.

எமது இயக்கப்பாடுகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்துகின்ற பின்வரும் அக்கறைதாரர்களை நாம் இனங்கண்டுள்ளோம். அத்துடன் இந்தக் குழுக்களுடன் நட்பு நேயத் தொடர்புகளைக் கட்டியெழுப்பி அதனைப் பேணுவதற்கும் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறோம்.

- பங்குதாரர்/முதலீட்டாளர்
- வாடிக்கையாளர்
- ஊழியர்கள்
- ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள்
- வணிகப் பங்காளர்கள்
- சமூகம் மற்றும் அது சார்ந்த சூழல்

## 2. பிரதான அக்கறைதாரர்களை முன்னுரிமைப்படுத்தல்

அக்கறைதாரர்களின் அக்கறை மிக்க விடங்களைத் தீர்த்து வைப்பதில் எமது செயற்பாடுகள் எவ்வாறு அவற்றின் மீது தாக்கம் செலுத்துகின்றது மற்றும் எமது மூலோபாயம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது என்பதன் அடிப்படையில், நாங்கள் இலக்குப்படுத்தப்பட்ட ஈடுபாட்டிற்கான அக்கறைதாரர்களை இனங்கண்டு அவர்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம். தேசிய சேமிப்பு வங்கி தொடர்பில் அக்கறைதாரர்களும் மற்றும் அக்கறைதாரர்கள் தொடர்பில் வங்கியும் கொண்டுள்ள குறிப்பிடத்தக்க தாக்கம் பற்றிக் கருத்திற்கொண்டு, அவற்றை இனங்கண்டு அவற்றை வினைத்திறன் மிக்க முறையில் தொடர்பினை மேற்கொள்வது இன்றியமையாத விடயமாகும். எமது முக்கிய அக்கறைதாரர்களுடனான தொடர்புறுகையானது அவர்களது அக்கறை மிக்க விடயங்களை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு உதவுவதோடு, உருவாக்கப்பட்ட பெறுமதியின் பகிர்வினை சமநிலைப்படுத்துகிறது.

எமது நிறுவனத்தில் அக்கறையினைக் கொண்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக பின்வரும் மூலப்பிரமானங்களை நாம் கையாளுகின்றோம்:

- வங்கி நீடித்து நிலைத்து நிற்பதற்கு அவசியமானவர்கள்
- சம்பந்தப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புகளுடன் சம்பந்தப்பட்டவர்கள்
- வங்கியின் நடத்தை மீது செல்வாக்குச் செலுத்தும் வகையில் நியாயமான அல்லது சட்ட ரீதியான திறனைக் கொண்ட நபர்கள்
- தமது சொந்த அபிப்பிராயத்தின் மூலம் தீர்மானம் எடுக்காதிருக்கக் கூடிய ஏனையோருக்கு தீர்மானங்களை எட்டுவதற்கு உடந்தையாக இருப்பதில் செல்வாக்குச் செலுத்தும் நபர்கள்
- வங்கியுடன் மிகவும் முக்கியமான தொடர்பினைக் கொண்டவர்கள்

எங்களது முக்கிய அக்கறைதாரர்கள், வங்கியுடன் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தின் அளவு மற்றும் எமது இயக்கப்பாடுகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான அவர்கள் கொண்டுள்ள ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் பின்வரும் அமைவுரு தொடர்பில் அவர்களைப் பொருந்தச் செய்வதன் மூலம் இனங்காணப்படுகின்றார்கள். ஏனெனில், நாம் அக்கறைதாரர்களின் தேவைகள், ஆர்வங்கள், மற்றும் எதிர்பார்ப்புக்கள் போன்றன மாறும் தன்மை கொண்டமையினால் இவை காலத்திற்குக் காலம் மாறக் கூடியது என்ற காரணத்தினால் இந்த வருடாந்த தரப்படுத்தலானது இன்றியமையாததாக விளங்குகின்றது.

அக்கறைதாரர் செல்வாக்கு (அதிகம் ↑ / குறைவு ↓) — அக்கறைதாரர் விருப்பம் (குறைவு ← / அதிகம் →)

**சீராக்கம் மிக்க ஈடுபாடு-திருப்திகரமாகப் பேணல்**
- அரசாங்கம் மற்றும் ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள்
- வழங்குனர்கள்

**உயர் ஈடுபாடு – பிரதான ஈடுபாட்டாளர்கள்**
- வாடிக்கையாளர்கள்
- பங்குதாரர்கள்
- ஊழியர்கள்

**குறைவான ஈடுபாடு – குறைந்தபட்ச முயற்சி/கண்காணிப்பு**
- சமூகமும் அது சார்ந்த சூழலும்

**நடுத்தர ஈடுபாடு – தவலை வழங்கிக் கொண்டிருத்தல்**

## எமது அக்கறைதாரர் இலக்குகள்

| பங்குதாரர்/ முதலீட்டாளர் | வாடிக்கையாளர் | ஊழியர் | ஒழுங்குறுத்துகை மற்றும் அரசாங்க நிறுவனங்கள் | வியாபாரப் பங்காளர்கள் | சமூகமும் அது சார்ந்த சூழலும் |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானங்களில் நிலையான வளர்ச்சி | வேறுபட்ட மற்றும் சம்பந்தப்பட்ட நிதிசார் தீர்வுகளை வழங்குவோர் | விருப்பமான தொழில்வழங்குனர் | சட்டத்தை மதிக்கும் கூட்டாண்மைப் பிரஜை | விருப்பமான வியாபாரப் பங்காளர் | பொறுப்புமிக்க கூட்டாண்மை பிரஜை |

பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை

### 3. ஈடுபாட்டு முறையினை வரையறை செய்தல் அக்கறைதாரர் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை இனங்காணல்

அக்கறைதாரர்களைத் தரப்படுத்தல் மற்றும் அவர்களை முன்னுரிமைப்படுத்தல் பற்றிய செயற்பாடானது பொருத்தமான முறையியல்கள், மட்டங்கள், செயல் மாதிரிகள், மற்றும் ஈடுபாட்டுத் தடவைகள் போன்றன உள்ளடங்கலாக பொருத்தமான ஈடுபாட்டினைத் திட்டமிடுவதற்கு வங்கியை இயலச் செய்கின்றது.

நாங்கள் எமது அக்கறைதாரர் குழுக்களைத் தொடர்ந்தும் இணைப்பில் பேணி வரும் வகையில் பல முறைசார்ந்த பொறிமுறைகளைப் பராமரித்து வருகிறோம். எமது உள்ளக மற்றும் வெளியக அக்கறைதாரர்களுடனான தொடர்ச்சியான மற்றும் முறைமையியல் சார்ந்த உரையாடலானது, முக்கிய பிரச்சினைகளை உறுதி செய்து கொள்வதில் இன்றியமையாத விடயமாக விளங்குகின்றது. எங்களது அக்கறைதாரர்களுடனான நீண்டகால மற்றும் பரஸ்பர அனுகூலம் மிக்க தொடர்புகளைக் கட்டியெழுப்பி அதனைத் தொடர்ந்தும் பேணும் நோக்கில் நாங்கள் ஆக்கபூர்வமான, தொடர்ச்சியான மற்றும் விரிவான அக்கறைதாரர் கலந்துரையாடலில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகிறோம். எமது அக்கறைதாரர்களுடனான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்காக பல்வேறு தொடர்பாடல் மாதிரிகள் காணப்படுகின்றன. இவற்றில் நேரடியான கலந்துரையாடல்கள், மாநாடுகள், மற்றும் சமூக ஊடக முறையியல்கள் போன்றன உள்ளடங்குகின்றன. இவர்களுடைய பின்னூட்டல்கள் அவர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அக்கறை மிக்க விடயங்கள் தொடர்பில் புரிந்துகொள்வதற்கு உதவுவதோடு, அதன் மூலம் பெறுமதி உருவாக்கத்திற்கான வினைத்திறன் மிக்க மூலோபாயங்களை விருத்தி செய்வதற்கு அவை எம்மை இயலச் செய்கின்றன.

### 4. அக்கறைதார் தொடர்புகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

அக்கறைதாரர்களின் தொடர்புகளை உரிய முறையில் மதிப்பிடுவதானது முக்கியமான விடயம் ஒன்றாகும் என்பதோடு, இது வளங்களை முன்னுரிமைப்படுத்துவதற்கு தேசிய சேமிப்பு வங்கிக்கு உதவுகிறது. இந்தச் செயன்முறையானது நாங்கள் ஒரு நீடுறுதி மிக்க தன்மையில் எங்களுடைய பொதுவான இலக்குகளை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு வழியமைக்கிறது.

பெறுமதி உருவாக்கம் மற்றும் தொடர்பின் தரம் போன்றவற்றுடன் தொடர்புடைய பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் ஊடான தொடர்புகள் மற்றும் அக்கறைதாரர் ஈடுபாடுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்கு முன்னோக்கியதொரு பிரதான மைய அவதான நடவடிக்கை உதவவுள்ளது. இது குழுக்களுக்கிடையே துல்லியமாகவும் தொடர்ச்சியாகவும் அளவிடுவதை நாம் உறுதிப்படுத்தவுள்ளோம். நாங்கள் 2021 ஆம் நிதி ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியைப் பாதித்த முக்கியமான அக்கறைதாரர் அக்கறைகள் தொடர்பில் அறிக்கை செய்கிறோம்.

**அக்கறைதாரர்களுக்காக நாம் உருவாக்குகின்ற பெறுமதி மற்றும் அவர்களுடனான எமது ஈடுபாடு**

பின்வரும் அட்டவணையானது, எங்களுடைய ஈடுபாட்டின் அடிப்படையில் பெறுமதியை உருவாக்குவதற்கான எமது இயலுமை, பெறுமதி உருவாக்கத்திற்கான அவர்களது பங்களிப்பு, அவர்களுடனான எமது ஈடுபாட்டு முறையியல்கள் மற்றும் அவர்களது முக்கிய நலன்கள், அக்கறைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றன மீதான ஒரு சாத்தியம் மிக்க தாக்கத்தைக் கொண்ட அக்கறைதாரர் குழுக்களை சுட்டிக்காட்டுகிறது.

பின்வருன, எங்களுக்கும் எங்களது பிரதான அக்கறைதாரர் குழுக்களுக்கும் இடையிலான உறவின் தரம் பற்றிய மதிப்பாய்வு ஒன்றினை காட்டுகிறது. இது மேற்படி உறவுகளின் தரம் பற்றிய எமது உள்ளக மதிப்பாய்வினைப் பிரதிபலிக்கின்றது.

★ குறைவான தொடர்பு

★★ தொடர்பு தாபிக்கப்பட்டது, இருப்பினும் தொடர்பின் தரத்தினை மேம்படுத்துவதற்கு மேலும் பணியாற்ற வேண்டும்.

★★★ தொடர்பு தாபிக்கப்பட்டது, இது ஒரு பெறுமதி உருவாக்கும் தொடர்பு, இருப்பினும் மேலும் மேம்பாட்டிற்கான வாய்ப்புண்டு.

★★★★ சிறந்த தரம், மேம்பாட்டிற்கான வாய்ப்புடைய பரஸ்பர அனுகூலத் தொடர்பு.

★★★★★ பரஸ்பர அனுகூலத்திற்கான வலுவான தொடர்பு.

முன்னைய ஆண்டிலிருந்து மேம்பட்டுள்ளது

முன்னைய ஆண்டிலிருந்து வீழ்ச்சி கண்டுள்ளது

முன்னைய ஆண்டிலிருந்து மாற்றம் இல்லை

## பங்குதாரர்கள்/முதலீட்டாளர்கள்

**ஆக்கக் கூறு**

- தனி பங்குதாரர்: இலங்கை அரசாங்கம்
- பிணை உடையவர்கள்

**நாங்கள் வெற்றியை அளவிடும் விதம்**

- உரிமம் மீதான திரும்பல்
- வருமான வளர்ச்சி

**பகிரப்பட்ட பெறுமதி**

- பங்குதாரருக்குரிய ரூ. 22.1 பில். இலாபம்.
- 3.71% நிகர வட்டி எல்லை
- பிணை உடையவர்களுக்கு செலுத்தப்பட்ட ரூ. 3.7 பில். வட்டி.

**பங்குதாரர்கள்/முதலீட்டாளர்கள் தே.சே.வங்கிக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

எமது பங்குதாரர்களும் முதலீட்டாளர்களும் நீண்ட கால வளர்ச்சிக்கும் மற்றும் பெறுமதி உருவாக்கம் பற்றிய அவர்களது எதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்வதிலும் நிதி மூலதனத்தினை வழங்குவதோடு, நாங்கள் எமது வங்கியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்றோம். இதுவே எமது மூலதனத்திற்கு வலுச் சேர்க்கின்றது.

**நலன்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்**

- முதலீடு மீதான நீண்ட கால நீடுறுதி மிக்க திரும்பல்.
- நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மை
- சிறந்த இடர் முகாமைத்துவம் மற்றும் கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- தெளிவான மூலோபாய பணிப்புரை மற்றும் நிறைவேற்றம்
- எமது மூலோபாயத்தை நிறைவேற்றுவதிலான உறுதித்தன்மை
- மூலோபாயக் குறிக்கோள்களுக்கு ஏற்ற சரியான வள ஒதுக்கீடு
- கொவிட்-19 தாக்கத்தின் விளைவினால் ஏற்பட்ட நிதி சார்ந்த மற்றும் வியாபாரம் சார்ந்த செயலாற்றுகை.

**நாங்கள் ஈடுபடும் விதம்**

- நிதி அமைச்சு மற்றும் ஏனைய முதலீட்டாளர்களின் பிரதிநிதிகளுடனான பிரத்தியேகச் சந்திப்புகள்.
- எமது கூட்டாண்மை இணையத்தளமானது ஒரு பிரதான தகவல் தளமாக விளங்குகிறது.
- வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுக்கள்.
- வருடாந்த அறிக்கைகள் ஊடாக நீண்ட கால மைய அவதான விடயங்கள் மற்றும் மூலோபாயம் பற்றிய தொடர்பாடல்
- கைத்தொழில் மற்றும் முதலீட்டாளர் மாநாடுகளில் பங்கேற்றல்.

**பொருண்மிய விடயங்கள்**

**பங்குதாரர்களுக்கு/முதலீட்டாளர்களுக்கு தே.சே.வங்கியானது பெறுமதியை உருவாக்கும் விதம்**

- தேசிய சேமிப்பு வங்கியானது பங்கிலாபம், பிணைகள் மீதான மூலதனம் மற்றும் வட்டி செலுத்தல்கள், மற்றும் கடன்கள் மீதான வட்டி செலுத்தல்கள் போன்றவற்றின் ஊடாக வழங்குனர்களின் முதலீடுகளுக்கு ஒரு நிலையான திரும்பலை வழங்குகிறது.
- கொவிட்-19 ஆனது பொருளாதாரத்தை நலிவடையச் செய்துள்ளதோடு நிச்சயமின்மையினையும் அதிகரித்துள்ளது. அந்த வகையில், நாங்கள் சேவை அணுகல், கடன்தீர் இசைவு, கடன் நிவாரணத் திட்டங்கள் போன்றவற்றின் பிரகாரம், வாடிக்கையார் தேவைப்பாடுகள் உரிய வேளையில் நிறைவுசெய்யப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் நிதி அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடனான ஈடுபாடுகளை நாங்கள் அதிகரித்துள்ளோம்.
- ஒரு பாதுகாப்பான மற்றும் உறுதியான வங்கியியல் முறைமை, மற்றும் எதிர்மறையான இடருக்கு எதிரான பாதுகாப்பு போன்றவற்றுக்கு பங்களிப்புச் செய்யும் ஒரு உறுதியான ஐந்தொகைக் குறிப்பினை பேணுதல்.

**உசாத்துணை**

பார்க்க: நிதிசார் மூலதனம் பக்கம் 96-113

**சம்பந்தப்பட்ட மூலதனம்**

**தேசிய சேமிப்பு வங்கியின் விரும்பிய விளைவுகள்**

- பங்கு மூலதன உட்செலுத்துகை
- கடன் சந்தைகளுக்கான அணுகல்
- முதலீட்டாளர் நம்பிக்கை
- நேர்மறையான கடன் தரப்படுத்தல்

**தொடர்பின் தரம்**

★★★★ ⊖

**நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான இணைப்பு**

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION
17 PARTNERSHIPS FOR THE GOALS
8 DECENT WORK AND ECONOMIC GROWTH

## வாடிக்கையாளர்கள்

**ஆக்கக் கூறு**

- தனி நபர்கள்
- நிறுவனங்கள்
- கூட்டாண்மைகள்

**நாங்கள் வெற்றியை அளவிடும் விதம்**

- சந்தைப் பகிர்வு
- முறைப்பாட்டு முகாமைத்துவம்
- வாடிக்கையாளர் தளம்

**பகிரப்பட்ட பெறுமதி**

- 21.8 மில். வாடிக்கையாளர் கணக்குகள்
- பண வைப்பாளர்களுக்கு ரூ. 76.8 பில் வட்டி செலுத்தப்பட்டது.
- இணைய வங்கியில் 32% வளர்ச்சி.

**வாடிக்கையாளர்கள் தே.சே. வங்கிக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- வாடிக்கையாளர்களே எமது இருப்புக்கு அடிநாதமாக விளங்குவதோடு, எமது நிறுவனத்தின் புகழுக்கும் வர்த்தகச் சின்னத்திற்கும் அவர்களே உந்து சக்தியாக திகழ்கின்றனர்.
- அவர்களே எமது பொருட்கள் மற்றும் சேவைகளை நுகர்வதோடு, அதன் மூலம் நாங்கள் வருமானத்தினை ஈட்டுகின்றோம்.
- வாடிக்கையாளர் தேவைப்பாடுகள் புதிய போக்குகளின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவை அபிவிருத்திக்கு வழிகாட்டுகின்றன.

**நலன்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்**

- பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையிடல்
- பெறுமதி கூடிய பொருட்கள் மற்றும் சேவைகள்
- மலிவான மற்றும் மிகவும் வசதிமிக்க வங்கியியல் சேவைகள்
- வங்கியியல் அனுபவங்கள் மற்றும் சேவை நம்பிக்கையினை மேம்படுத்தல்.
- தாமதங்கள், தவறுகள் மற்றும் செயலாக்கச் சிரமங்களை குறைத்தல்.
- முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் துரிதமான தீர்வு.
- தமது பணம் மற்றும் முதலீடுகளுக்கான பாதுகாப்பு
- மோசடிக்கு எதிரான நடவடிக்கை மற்றும் பிரத்தியேகத் தரவுகள் குறித்தான பாதுகாப்பு.
- பதிலளிப்பு மிக்க வங்கியியல் சேவைகள் மற்றும் தீர்வுகள்.
- கொவிட்-19 கடன் சலுகை மற்றும் கடன் நிவாரணத் திட்டங்கள்.
- இடையறா சேவை மற்றும் முடக்கக் காலப்பகுதியில் அணுகல் வசதி
- கொவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக நிறுவனத்தின் வளாகத்தில் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை ஏற்பாடுகள்.

**நாங்கள் ஈடுபடும் விதம்**

- கிளை மற்றும் பிரதேச அலுவலகங்கள் ஊடாக பிரத்தியேக ஊடாட்டம்.
- இயக்கப்பாடு சார்ந்த பிரச்சினைகள் மின்னஞ்சல், கூட்டாண்மை, இணையத்தளம் மற்றும் தொலைபேசி போன்ற பல்வேறு வழிவகைகள் மூலம் தொடர்பாடல் செய்யப்பட்டன.
- வாடிக்கையாளர் திருப்தி பற்றிய தரப்படுத்தல்கள் ஆய்வுகள் மூலம் பெறப்பட்டன.
- பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் ஊக்குவிப்பு மிக்க பிரச்சார நடவடிக்கைகள், கூட்டாண்மை இணையத்தளம், வெகுசன ஊடகம் மற்றும் சமூக ஊடகம் போன்றன ஊடாக பரப்புரை செய்யப்பட்டன.
- ஏனைய தொடர்பால் வழிமுறைகள்:
  - தொ.பே. அழைப்பு நிலையங்கள்
  - கூட்டாண்மை நிகழ்வுகள்

**பொருண்மிய விடயங்கள்**

**தே.சே.வங்கியானது வாடிக்கையாளர்களுக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- திரும்பல்களை அதிகரிக்கின்ற அதேவேளை, வைப்புக்கள் மற்றும் முதலீடுகளை பாதுகாத்தல்.
- விளைவுத்திறன் மிக்க வழிமுறைகளை ஆரம்பித்தல் மற்றும் செலவு-வினைத்திறன் மிக்க மற்றும் வசதியான வங்கியியல் தெரிவுகளை வழங்கல்.
- எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை உணர்ந்து, பிரத்தியேக மற்றும் விரிவான நிதி சார்ந்த தீர்வுகளை வழங்கல்.
- ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த வாடிக்கையாளர் அனுபவங்களை ஒவ்வொரு வேளையிலும் வழங்கும் நோக்கில் எமது மக்களை தயார்படுத்தி அவர்களை வலுவூட்டுதல்.
- பாதுகாப்பினை மையமாகக் கொண்டு டிஜிடல் மயம் மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளை அதிகரித்தல்.
- இணையப் பாதுகாப்பு சார்ந்த அச்சுறுத்தல்களுக்கு முன்கூட்டிய பதிலளித்தல் மற்றும் வாடிக்கையாளர் தனியுரிமை பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப முறைமைகள் தொடர்பில் அதன் உறுதித்தன்மை, பாதுகாப்பு மற்றும் துரித கதி என்பவற்றைப் பேணுதல்.
- எமது பொருட்கள், விநியோக வழிமுறைகள் மற்றும் சந்தைகள் போன்றவற்றின் ஊடாக நிதி சேகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தல்.
- செயன்முறை பற்றிய வினைத்திறன் மற்றும் தானியக்கம் என்பவற்றை அதிகரித்தல்.
- எமது தொடர்பு நிலையங்களின் திறனை அதிகரித்தல் மற்றும் பல்வழிமுறை வினியோகத்தினை வலுப்படுத்தல்.

**உசாத்துணை**

பார்க்க:
நேர்மையான வாடிக்கையாளர் தளத்தைக் கட்டியெழுப்பல் - பக்கம் 157
எமது அடைவினை பெருக்கிக் கொள்ளல் - பக்கம் 124
எமது டிஜிடல் முன்னெடுப்புக்களை விரிவாக்கம் செய்தல் - பக்கம் 124
எமது இயக்கப்பாட்டுச் செயன்முறைகளை மேம்படுத்தல். பக்கம்-125

**சம்பந்தப்பட்ட மூலதனம்**

**தேசிய சேமிப்பு வங்கியின் விருப்பமான விளைவுகள்**

- வாடிக்கையாளர் நிதித் தீர்வுகளை/ வாடிக்கையாளர்களுக்கான வினைத்திறன் மிக்க நிதித் தீர்வுகளை நிறைவேற்றுதல்.
- சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்கல்
- வாடிக்கையாளர்களைக் கையகப்படுத்தல் மற்றும் தக்கவைத்துக் கொள்ளல்.
- சந்தைப் பங்கினை அதிகரித்தல்.

**தொடர்பின் தரம்**

**நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான இணைப்பு**

13 CLIMATE ACTION | 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH | 17 PARTNERSHIPS FOR THE GOALS

## ஊழியர்கள்

### ஆக்கக் கூறு

- நிரந்தர ஊழியர்கள்
- ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்
- வெளியகத் தரப்புப் பணியாளர்கள்
- வர்த்தக சங்கங்கள்

### நாங்கள் வெற்றியை அளவிடும் விதம்

- தக்கவைப்பு வீதம்
- ஊழியர் ஈடுபாடு

### பகிரப்பட்ட பெறுமதி

- ஊதியம் மற்றும் நன்மைகளுக்கு ரூ.1 3 பில். செலுத்தப்பட்டது.
- ஆண்கள் 45% பெண்கள் 55%
- சரியான நடத்தைகளைப் பொருந்திக் கொண்டு எமது கலாசாரத்தை மேம்படுத்தல்.
- 42,553 மணித்தியால பயிற்சியளித்தல்கள்.

### ஊழியர்கள் தே.சே.வங்கிக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்

- எமது ஊழியர்கள் எமது நாளாந்த வணிகச் செயற்பாடுகளை இயக்கிச் செல்வதன் மூலம் வங்கியின் மூலோபாயத்தை அடைவதற்கு வசதி அளிக்கின்றனர்.
- எமது ஊழியர்கள் எமது வர்த்தகச் சின்னத்தின் வளர்ச்சிக்கும் மற்றும் உயர் தரமான சேவையை தொடர்ச்சியாக வழங்குவதற்குமான அத்திவாரமாகத் திகழ்கின்றனர்.

### நலன்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்

- கொவிட்-19 காலப் பகுதியின் போதான விடயங்கள்:
  - சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கியம்
  - சுழற்சிமுறைப் பணி மற்றும் வீட்டில் இருந்து பணியாற்றல்.
  - வேலைக்குச் செல்லல் வேலையிலிருந்து திரும்புதல்.
  - ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் பதவியுயர்வுகள் முடக்கம்.
  - தரவு அணுகல்
  - வியாபார நீடுறுதித் தன்மை
  - போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள்
- நியாயமான மற்றும் சந்தை - சார் ஊதியம்
- செயலாற்றுகைக்கான அங்கீகாரமும் வெகுமதியும்
- தொழில் மற்றும் பிரத்தியேக அபிவிருத்தி வாய்ப்பு
- பல தளங்களிலான இரு-வழிமுறைத் தொடர்பாடலுக்கான தேவை
- பணி பற்றிய பாதுகாப்பு
- சுயாதீன கூட்டான பேரம் பேசுகை
- கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றியதொரு தொடர்பு
- பாரபட்சமற்ற, நேர்மறையான மற்றும் பாதுகாப்பான பணிக்குரிய சூழல்.

### நாங்கள் ஈடுபடும் விதம்

- ஊழியர்களுக்கும் முகாமையாளருக்கும் இடையிலான பிரத்தியேக ஈடுபாடு
- உள்ளக இணையம் மற்றும் சுற்றுநிருபம்
- காலாண்டு உள்ளக செய்திப் பத்திரிகை
- பணியாாட்தொகுதிக் கூட்டங்கள்
- செயலாற்றுகை மீளாய்வுகள் மற்றும் நேர்காணல்கள்
- நலன்சார் நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள்
- அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகச் சங்க பங்களிப்புகள்.
- ஊழியர் குறைகளை கையாளும் பொறிமுறை

### பொருண்மிய விடயங்கள்

### தே.சே.வங்கியானது ஊழியர்களுக்கு பெறுமதியை உருவாக்கும் விதம்

- கொவிட்-19 காலப்பகுதியின் பொழுது:
  - ஊழியர்கள் ஊக்குவிக்கப்பட்டு ஈடுபாட்டில் தொடர்ந்தும் இருக்கும் வகையில் மின்னஞ்சல், உள்ளக இணையம் ஊடான மற்றும் முகாமையாளுடனான தொடர்பாடல் அதிகரிக்கப்பட்டமை.
  - பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும உடல் நலம் போன்றன தொடர்பிலான விழிப்புணர்வூட்டல் பிரச்சாரங்களை அதிகரித்தமை.
  - வீட்டிலிருந்து பணியாற்றல், பணம் செய்தல், பாதிக்கப்படக் கூடிய ஊழியர்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் இயக்கப்பாடு சார்ந்த மாற்றங்கள், கொள்கைகள் மற்றும் நெறிமுறைகள் போன்றன தொடர்பாடல் செய்யப்பட்டதோடு, சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் வகையிலும் தொடர்பாடல் பேணப்பட்டன.
  - அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/நடவடிக்கைகள் போன்றன தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கான அறிவுறுத்தல்கள்/பணிப்புரைகள் வழங்கப்பட்டன.
- ஒன்றிணைந்த பேச்சுவார்த்தைக்கு இணங்கிய சிறந்த ஊதியம்
- வங்கியின் கலாசாரம் மற்றும் வணிகத்துடன் பரிச்சயம் பெறும் வகையில் புதிய ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன.
- உள்ளக வளர்ச்சியைப் பேணும் வகையிலும் அதனை ஊக்குவிக்கும் வகையிலும் ஊழியர்களின் திறமைகள் மற்றும் திறனாற்றல்களை மேம்படுத்துவதற்கான ஆதரவும் ஊக்குவிப்பும்.
- எதிர்காலத் தேவைக்கும் மற்றும் ஊழியர் அபிவிருத்திக்குமான திறன் கட்டியெழுப்புகை குறித்தான கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கல்.
- தொழிலில் உள்ள போதும் ஓய்வு பெற்ற போதும் நிதி, பௌதீக மற்றும் உளவளம் சார்ந்த ஆதரவுகளை வழங்குவதன் மூலம் நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்.
- அனைத்துச் சட்டங்களுக்கும் மற்றும் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான விதிமுறைகளுக்கும் இணங்கியொழுகி அதனைப் பொருந்திக் கொள்ளல்.
- பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வின் மூலம் பிரச்சினைகள் மனக் குறைகள் அல்லது முரண்பாடுகளை தீர்த்து வைத்தல்.

### உசாத்துணை

பார்க்க:
மனித மூலதனம்
பக்கம்-136-153

### சம்பந்தப்பட்ட மூலதனம்

### தேசிய சேமிப்பு வங்கியின் விரும்பிய விளைவுகள்

- கவர்ச்சியான மற்றும் தக்கவைத்துக் கொள்ளும் திறமை.
- புத்தாக்கம் மிக்க மற்றும் அர்ப்பணிப்பு மிக்க ஊழியப்படை
- விளைவுத்திறன், வினைத்திறன் மற்றும் திறமையான ஊழியப்படை
- நன்னடத்தை மற்றும் தொழில்வன்மையினைப் பேணுதல்.

### தொடர்பின் தரம்

### நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான இணைப்பு

முகவுரை
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
ஆளுகை
நிதியியல் அறிக்கைகள்
பிறசேர்க்கைத் தகவல்
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021

## ஒழுங்குறுத்துகை நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும்

**ஆக்கக் கூறு**

- இலங்கை மத்திய வங்கி
- நிதி அமைச்சு
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
- உள்நாட்டு அரசிறைத் திணைக்களம்
- ஏனைய அரசாங்க மற்றும் தொழில்வாண்மை நிறுவனங்கள்

**நாங்கள் வெற்றியை அளவிடும் விதம்**

- ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை மாற்றம் போன்றவற்றுடன் பயனுறுதி மிக்க இணக்கப்பாடு.
- உறுதியான மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்கள்
- ஒழுங்குறுத்துகை திரும்பல்கள் மீதான பின்னூட்டல் மற்றும் மேற்பார்வைகள்

**பகிரப்பட்ட பெறுமதி**

- அரசாங்கத்திற்கு ரூ. 3.5 பில். பங்கிலாபம் செலுத்தப்பட்டது.
- அரசாங்கத்திற்கு ரூ. 12.4 பில். வரி செலுத்தப்பட்டது.
- இணைக்கப்பாடின்மைக்கான பூச்சிய சகிப்புத் தன்மை.

**ஒழுங்குறுத்துகை மற்றும் அரசாங்க நிறுவனங்கள் தே.சே.வங்கிக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- ஒழுங்குறுத்துகை நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும் வணிகத்தை முன்னெடுப்பதற்கான செலவு மற்றும் முதலீட்டில் நியாயமான திரும்பலைப் பெற்றுக் கொள்வதற்கான எமது இயலுமை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கொள்கைகள், சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றை வெளியிடுகின்றது.
- இந் நிறுவனங்கள் சட்டவாக்கங்களுக்கும் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணக்கமுறாமைக்காக விதிக்கப்படும் அபராதங்கள் ஊடாக அபராதங்கள் விதிப்பதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றன.
- முதலீட்டாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் நம்பிக்கையூட்டும் ஒழுங்குறுத்துகை மற்றும் வெளிப்படைத் தன்மை வேலைச்சட்டகம் ஒன்றினை இவை வழங்குகின்றன.

**நலன்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்**

- சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கும் இசைவுறுதல்.
- வேலை உருவாக்கம் மற்றும் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகள்.
- சேவையின் தரம், செலவுகள், மற்றும் தனியுரிமை போன்றன மீதான வாடிக்கையாளர் நலன்களைப் பாதுகாத்தல்.
- தேசிய வரி அடிப்படை/வருமானத்திற்கு நீடித்த பங்களிப்பினை வழங்குதல்.
- வரி சம்பந்தமான விடயங்களுக்கு உரிய வேளையின் போதான தீர்வு.
- நிதியிடல் ஊடாக உள்நாட்டு உட்கட்டமைப்பிற்கு பங்களிப்புச் செய்தல்.
- கைத்தொழில் மற்றும் ஒழுங்குறுத்துகை சார் பணிக் குழுக்களில் முனைப்புடன் பங்கேற்று அவற்றுக்குப் பங்களிப்புச் செய்தல்.
- கொவிட்-19 முடக்க காலத்தின் பொழுதும் பொதுமக்களுக்கானதொரு அத்தியவசியச் சேவையான எமது வங்கிச் சேவையினை இடையறாது வழங்கல்.
- பொருளாதாரத்திற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் வங்கியியல் வணிகத்தின் ஊடாக, மக்களுக்கு அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட கொவிட்-19 நிவாரணப் பொதிகள் மற்றும் நிதி ஊக்குவிப்பு குறித்தான அனுகூலங்களுக்கு வழியமைத்தல்.

**நாங்கள் ஈடுபடும் விதம்**

- சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சுற்றுநிருபங்கள் மற்றும் பணிப்புரைகள் போன்றவற்றுக்கு இணக்கமுறுதல்.
- அரசாங்க மற்றும் ஒறுங்குறுத்துகை நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பிரத்தியேக சந்திப்பு மற்றும் ஈடுபடல்கள்
- வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுகள்
- கைத்தொழில் மற்றும் பொது கருத்துக் களமன்றங்களில் பங்கேற்றல்.
- ஒழுங்குறுத்துகை மற்றும் அரசாங்க நிறுவனங்கள் மேற்கொள்ளும் நியாயாதிக்க சோதனைகளுக்கு பதிலளித்தல்.
- வரைவு ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பில் ஈடுபடல்.
- பல்வேறு சமூக நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றல்.

**பொருண்மிய விடயங்கள்**



**தே.சே.வங்கியானது ஒழுங்குறுத்துகை மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் மூலம் வேண்டப்பட்டவாறாக அரசாங்க பிணைகளிலான முதலீடானது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான பொருளாதாரத் தேவைகளுக்கு நிதியிடுவதற்கு ஆதரவளிக்கின்றது.
- பங்கிலாபம், வரி, திறைசேரிக் கட்டணங்கள், மற்றும் விசேட அறவீடுகள் போன்ற நிதிப் பங்களிப்புகள் மூலம் அரசாங்க வரவுசெலத்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல்.
- வங்கியியல் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான (உதா: நிதிச் சேர்க்கை, டிஜிடல் சேர்க்கை, பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பங்களிப்பினை அதிகரித்தல்) அணுகல் ஊடாக "சுபீட்சத்திற்கான எதிர்காலம்" எனும் அரசாங்கத்தின் சமூக மற்றும் பொருளாதார ஆணைக்கு பங்களிப்புச் செய்தல்.
- உள்நாட்டு பொருட்கொள்வனவு மற்றும் தொழில்வாய்ப்புகளுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, கூட்டாண்மை சமூக பதிலளிப்பு முன்நகர்வுகளுக்கு பெறுமதி சேர்த்தல்.
- நீடுறுதி மிக்க வங்கியியல் நடைமுறைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இணக்கப்பாடுகளைப் பொருந்திக் கொள்வதன் மூலம் பாதுகாப்பான மற்றும் நிலையான வங்கியியல் முறைமை ஒன்றினை இயலச் செய்தல்.
- கொவிட்-19 காலப் பகுதியின் பொழுது மக்களுக்கு அத்தியாவசிய வங்கியியல் சேவைகளை பெற்றுக் கொடுத்ததோடு, அரசாங்கத்தின் நிவாரணப் பொதிகளுக்கான அணுகலும் வழங்கப்பட்ட அதேவேளை, கொவிட்-19 அரசாங்க நிதிக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டது.

**உசாத்துணை**

பார்க்க:
ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டினை வலுப்படுத்தல் பக்கம்-165-166

கொவிட்-19 காலப் பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவுகள்.
பக்கம் - 158

**சம்பந்தப்பட்ட மூலதனம்**

**தேசிய சேமிப்பு வங்கியின் விரும்பிய விளைவுகள்**

- வங்கியியல் வணிகத்தை ஊக்குவிக்கின்ற நியாயமான ஒழுங்குறுத்துகை அல்லது கொள்கைகள்.

**தொடர்பின் தரம்**

★★★★ ⊖

**நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான இணைப்பு**

16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS · 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION · 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES · 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE · 8 DECENT WORK AND ECONOMIC GROWTH · 17 PARTNERSHIPS FOR THE GOALS

# வணிகப் பங்காளர்கள்

**ஆக்கக் கூறு**

- விநியோகஸ்தர்கள்
- பயன்பாட்டுச் சேவை வழங்குனர்
- ஏனைய சேவை வழங்குனர்
- பரிமாற்ற இல்லங்கள்
- பொருத்தமான ஏற்ற வங்கிகள்

**நாங்கள் வெற்றியை அளவிடும் விதம்**

- தொடர்புறலிலான தரம்
- வணிகக் கூட்டாளர்களுடனான ஈடுபாடு.

**பகிரப்பட்ட பெறுமதி**

- உள்நாட்டு பொருள் கொள்வனவிற்கு ரூ. 1.3 பில். செலவிடப்பட்டது.
- தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனரின் பொருட்கொள்வனவிற்கு ரூபா 0.5 பில்.

**வணிகப் பங்காளர்கள் தே.சே. வங்கிக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- நாங்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு உயர் தரமான சேவைகளை வழங்கும் நோக்கில் எமது விநியோகஸ்தர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களுடன் பெறுமதி சேர்க்கும் கூட்டாளித்துவத்தினை உருவாக்குகின்ற அதேவேளை, அதற்குப் பதிலாக அவர்கள் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை எதிர்கொள்வதற்கான எமது இயலுமை மீது விளைவினை ஏற்படுத்துகின்றனர்.
- ஏற்புடையவிடத்து பயிற்சிகளும் மற்றும் ஆதரவுகளும் வழங்கப்படுகின்றன.

**நலன்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்**

- உரிய வேளையின் போதான கொடுப்பனவும் நியாயமான விதிமுறைகளும்
- பொருட்கொள்முதல் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை
- உடன்படிக்கையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இசைவுறுதல்.
- உள்நாட்டு பொருட்கொள்வனவிற்கு ஆதரவளித்தல்.

**நாங்கள் ஈடுபடும் விதம்**

- வாய்ப்புமிக்க/புதிய விநியோகஸ்தர் அறிமுகம்.
- முக்கிய விநியோகஸ்தருடான் ஒழுங்குமுறையான நேரடி தொடர்பாடலைப் பேணுதல்.
- கேள்வுமனுக் கோரல் நடைமுறை
- சேவை மட்ட உடன்படிக்கை மற்றும் சேவை விநியோகம்.
- வணிக/கைத்தொழில் கருத்து மன்றங்கள்
- நடைமுறை கள விஜயங்கள்
- சந்திப்புகளும் மற்றும் விளக்க முறைச் சமாப்பணங்களும்.
- வருடாந்த அறிக்கைகள்
- கூட்டாண்மை இணையத்தளம்
- பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான பயிற்சி அமர்வுகள்.

**பொருண்மிய விடயங்கள்**

**தே.சே.வங்கியானது வணிகப் பங்காளர்களுக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- வங்கிக்கான தமது பொருட்கள் மற்றும் சேவைகள் ஊடாக வருமானத்தை உருவாக்குதல்.
- தேசிய சேமிப்பு வங்கியானது பொருட்கள் சந்தையில் கிடைக்கக் கூடியவாறானதொரு தளத்தினை வழங்குவதோடு, வங்கியுடனான கூட்டுறவின் மூலம் அவர்களது வர்த்தகச் சின்னம் வலுவூட்டப்படுகிறது.
- தேசிய சேமிப்பு வங்கியானது உள்நாட்டு வணிகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் நியாயமான நிபந்தனைகளின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்கிறது.
- சாத்தியமான குறைந்தபட்ச நேர காலத்தினுள் ஒப்பந்தத்தினை வழங்குவதோடு, உரிய நேரத்தின் போதான கொடுப்பனவுகளையும் உறுதிப்படுத்துகிறது.

**உசாத்துணை**

பார்க்க: வணிகப் பங்காளர்களுடன் உறுதியான தொடர்பினைக் கட்டியெழுப்புதல்.

பக்கம் - 163- 165

**சம்பந்தப்பட்ட மூலதனம்**

**தேசிய சேமிப்பு வங்கியின் விரும்பத்தகு விளைவுகள்**

- உள்நாட்டு பொருட்கொள்முதல், தொழில்வாய்ப்பு, மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை உயர்த்துதல் போன்றவற்றுக்கு ஆதரவளித்தல்.

**தொடர்பின் தரம்**

★★★★

**நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான இணைப்பு**

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION · 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE · 8 DECENT WORK AND ECONOMIC GROWTH · 17 PARTNERSHIPS FOR THE GOALS

## சமூகமும் அது சார்ந்த சூழலும்

**ஆக்கக் கூறு**

- இலங்கைப் பிரஜைகள்
- சுற்றாடல்
- ஊடகம்
- கருத்து உருவாக்கவாளர்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள்.

**நாங்கள் வெற்றியை அளவிடும் விதம்**

- நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய பங்களிப்புகள் உள்ளடங்கலான அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலமாக நாட்டின் வளர்ச்சி மற்றும் நீடுறுதித் தன்மை போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட பங்களிப்புகள்.
- சுற்றாடல் சார் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் நீடுறுதி மிக்க நிதி
- வளப் பயன்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவம்

**பகிரப்பட்ட பெறுமதி**

- நீர் பயன்பாட்டில் 16,529 கன மீட்டர் நீரை மீதம்பிடித்தல்.
- 277,328 கி.வாட் மின்சார உற்பத்தி.

**சமூகமும் அது சார்ந்த சுற்றாடலும் தே.சே.வங்கிக்கான பெறுமதியை உருவாக்கும் விதம்**

- எமது சமுதாய அங்கீகாரத்தினை எமது சமூகங்கள் செயற்படுத்தி வருகின்ற அதேவேளை, நாங்கள் இயங்குகின்ற சமூக- பொருளாதாரச் சுற்றாடலுக்குப் பங்களிப்புச் செய்வதற்கானதொரு பொறுப்பினை நாங்கள் கொண்டுள்ளோம்.
- ஊடகம், கருத்து உருவாக்கவாளர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் மற்றும் கருத்து மன்றங்கள் எமது இயக்கங்களில் தாக்கம் செலுத்தக் கூடும்.

**நலன்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்**

- வழங்கத்தகு பொருட்கள் மற்றும் சேவைகள்
- வங்கியில் சேவைகள் மற்றும் நிதிச் சேவைகள் மற்றும் தகவலுக்கான அணுகல்.
- நிதி சார்ந்த ஆதரவு
- தொழில் உருவாக்கம் மற்றும் வியாபார வாய்ப்புக்கள்
- வங்கி மற்றும் வணிகம் குறித்தான நீடுறுதித் தன்மை
- பூகோள மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகள் குறித்தான நடவடிக்கைகள்
- செயலாற்றுகை மற்றும் ஆளுகை பற்றிய வெளிப்படைத்தன்மை.
- பொறுப்புவாய்ந்த முதலீடுகள் மற்றும் வங்கியியல்.
- கொவிட்-19 தொற்று நோய்க் காலத்தின் போது நிதி சார்ந்த உதவிகள் மற்றும் தொடர் சேவைகளை வழங்கல்.

**நாங்கள் ஈடுபடும் விதம்**

- கல்வி, சுகாதாரம், காபன் வாயு அற்ற பொருளாதார நடவடிக்கை, மற்றும் நிதிச் சேர்க்கை போன்றன சம்பந்தமான கருத்திட்டங்களில் சமுதாய ஈடுபாடு.
- கூட்டாண்மை இணையத்தளம்
- சமூக ஊடகங்கள்
- விளம்பரங்கள், நேர்காணல்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் அறிவித்தல்கள்.
- வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்.

**பொருண்மிய விடயங்கள்**

**தே.சே.வங்கியானது சமூகம் மற்றும் அது சார்ந்த சூழலுக்கு பெறுமதியை உருவாக்கும் விதம்**

- நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளின் பிரகாரம் எமது கடனளிப்பு மற்றும் பரிமாற்ற நடவடிக்கைகள் ஊடாக பொருளாதார மற்றும் சமூக விடயங்களை நேர்மறையான முறையில் நிலைமாறுதல் நோக்கி பங்களிப்புச் செய்தல்.
- சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் சார்ந்த அம்சங்களைக் கருத்திற் கொண்டும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இசைவுற்றும் பொறுப்புவாய்ந்த முறையில் இயக்கப்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்.
- கல்வி, திறன் அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் நலனோம்புகை போன்ற விடயங்களை குறைவான காபன் வாயு மைய பொருளாதார நடவடிக்கைகளை நோக்கியதாக சம்பந்தப்பட்ட தெரிவுடைய அனுசரணைகள் மீதும் அவதானம் செலுத்தி பல்வேறு கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- கொவிட்-9 நோய்த் தொற்றானது எமது கூடடாண்மை சமூகப் பொறுப்பு வாய்ந்த கருத்திட்டங்களை நிறுத்தியதோடு, நாங்கள் அவற்றுக்கு புத்துயிரூட்டக் கூடிய வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறோம்.

**உசாத்துணை**

பார்க்க:

வெற்றிகரமான சமுதாயங்களைக் கட்டியெழுப்புதல். பக்கம் 167-168

மிகவும் நீடுறுதிமிக்க வங்கி ஒன்றினைக் கட்டியெழுப்புதல்.

பக்கம் 52-55

**சம்பந்தப்பட்ட மூலதனம்**

**தேசிய சேமிப்பு வங்கியின் விரும்பத்தகு விளைவுகள்**

- சிறந்த கூட்டுறவுப் பிரஜைக்கான நிலை
- இளைஞர் மற்றும் யுவதிகளை வலுவூட்டல்
- சமூகங்களுடனான பங்காளித்துவம்

**தொடர்பின் தரம்**

★★★

**நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான இணைப்பு**



# பொருண்மை மிக்க விடயங்கள்

GRI 103-1, 2 and 3

பொருண்மிய மதிப்பீட்டு செயல்முறையானது ஒருங்கிணைந்த சிந்தனையில் நமது ஒரு முக்கிய அம்சமாகும். இது எமது வணிகம் மற்றும் அக்கறைதாரர்களின் மதிப்புருவாக்கத்தில் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்கிறது.

காலப்போக்கில் எங்கள் அக்கறைதாரர்களுக்கான மதிப்புருவாக்கும் திறனை கணிசமாக பாதிக்கும் காரணிகளாக எங்கள் பொருள் கருப்பொருள்களை வரையறுக்கிறோம். குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால அளவில் மதிப்புருவாக்க திறனை பாதிக்கும் விடயங்களை கண்டறிய ஒருங்கிணைந்த சிந்தனை அணுகுமுறையை நாம் பயன்படுத்துகிறோம். இந்த விடயங்கள் இடர்களை நிர்வகிப்பதற்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கவுமான எங்கள் உத்திகளை அறிவிக்கின்றன. ஒட்டுமொத்தமாக இவை ஏழு கருப்பொருட்களாக தொகுக்கப்பட்டுள்ளன. அவை எமது தொழிற்பாட்டுச் சூழலில் பக்கம் 38 - 49 லுள்ள பிரிவில் இடர்கள் மற்றும் வாய்ப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளம் காணப்பட்ட பாரிய போக்குகளாக கருதப்படுகிறது. வங்கியின் மூலோபாயத்துடன் பொருண்மிய தலைப்புக்களை அடையாளம் கண்டு ஒருங்கிணைக்கும் செயல்முறைகளை நாங்கள் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம்.

விடய கருப்பொருள்களை தீர்மானிக்கும் செயல்முறை கீழே அமைக்கப்பட்டுள்ளது:

**உள்ளீடுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நமது மதிப்புருவாக்கத்தில் தொழிற்பாட்டுச் சூழலின் தாக்கம் பற்றிய ஆய்வு (பக்கம் 26-37: எமது இயங்குகிற சூழல்) | எமது அக்கறைதாரர்களின் நலன்கள் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களின் மதிப்பாய்வு (பக்கம் 67-75: பங்குதாரர் ஈடுபாடு). | மூலோபாய நோக்கங்களை அடைவதற்கான வங்கியின் திறனுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடர்களின் மதிப்பாய்வு (பக்கம் 38-49: இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்) (பக்கம் 212-239: இடர் ஆய்வு) | சபை மற்றும் துணைக்குழுக்களின் முக்கியமுடிவுகளின் ஆய்வு (பக்கம் 201-211: நிர்வாக துணைக்குழு அறிக்கைகள்) | பிற உள்ளீடுகள்<br>ஊடக விமர்சனங்கள்<br>சக ஊழியர்களின் ஆய்வுகள்<br>வெளியக/ஆய்வு வெளியீடுகள் |

**இனங்காணுதல்**

ஒருங்கிணைந்த சிந்தனையை பயன்படுத்தும் முறையான மற்றும் தொடர்ச்சியான உள் செயல்முறைகளின் அடிப்படையில் எமது பொருண்மிய அம்சங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. தொழிற்பாட்டு சூழலை கருத்திற்கொண்டு எமது வணிகச் சூழலை பகுப்பாய்வு செய்ய விரிவான ஆய்வு நடத்தப்படுகிறது. எமது வளங்கள், உள் அறிக்கைகள், அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் உள்ளீடுகள் மற்றும் எமது அக்கறைதாரர்களிடமிருந்து பின்னூட்டல்கள் (உள்ளக மற்றும் வெளியக). நிதி, நற்பெயர், செயல்பாடு, சுற்றுச்சூழல், சமூகம், மூலோபாயம் அல்லது சட்டமியற்றும் முக்கியமான விடயங்கள் இந்த செயன்முறையின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

**முன்னுரிமைப்படுத்தல்**

இந்தப் பகுப்பாய்வின் முடிவுகளைப் பயன்படுத்துதல் மற்றும் பொருண்மிய வரைபடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, அடையாளம் காணப்பட்ட இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள், எமது மூலோபாயத்தை செயல்படுத்துவதற்கும் எமது அக்கறைதாரர்களுக்கு குறுகிய, நடுத்தர, நீண்ட காலத்திற்கு நிலையான மதிப்பை உருவாக்குவதற்கும் மிகவும் முக்கியமான விடயங்களுக்கு நாம் முன்னுரிமையளிக்கிறோம்.

எமது பொருள் விடயத்திற்கு நாம் எவ்வாறு முன்னுரிமையளிக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள பொருண்மிய வரைபடத்தை பார்க்கவும்.

**ஒருங்கிணைத்தல்**

மூலோபாய நோக்கங்களுக்கான எமது ஒருங்கிணைந்த அணுகுமுறையை வழிநடத்தும் ஆறு மூலோபாய முன்னுரிமைகளில் சூழல்சார்மயமாக்குவதன் மூலம் பொருண்மிய விடயங்கள் எமது மூலோபாயத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் எமது ஆறு மூலதனங்களுக்கு இடையேயான வர்த்தக விட்டுக்கொடுத்தல்களின் மதிப்பீட்டின் மூலம் எமது முடிவெடுக்கும் மற்றும் மதிப்பு உருவாக்கும் செயன்முறைகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவற்றின் தாக்கத்தை மதிப்பீடு செய்து மதிப்புருவாக்கத்தில் ஏற்படும் இடையூறுகளை தணிக்க பொருத்தமான உத்திகளை வகுத்து அதிக மதிப்பை உருவாக்கும் காரணிகளை மூலதனமாக்குவதன் மூலம் நாம் பதிலளித்தோம்.

**மதிப்பிடுதல்**

மூலோபாய நோக்கங்களை வழங்க அடையாளம் காணப்பட்ட முக்கிய செயல்திறன் பகுதிகள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் ஆகியவற்றை பயன்படுத்தி உத்திக்கு எதிராக எமது செயல்திறனை கண்காணிக்கிறோம்.

மேலும் எமது மூலோபாயத்தின் பொருத்தத்தை உறுதி செய்வதற்காக எமது வருடாந்த மூலோபாய திட்டமிடல் பட்டறையில் விடயங்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

## பொருண்மிய வரைச்சட்டம்

அக்கறைதாரர்களின் பரிசீலனை நிலை, எமது வணிகத்தின் நம்பகத்தன்மை மீதான தாக்கத்தின் அளவு, அக்கறைதாரர்களினூடான உறவு மற்றும் தலைப்பு எல்லை அடிப்படையில் அடையாளங்காணப்பட்ட இடர்கள் பொருண்மிய வரைச்சட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. பொருளியல் அடிப்படையில் எமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்கள் மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**கொவிட் 19 நோய்ப்பரவல் புதிய பொருள் தலைப்புக்களை முன்வைத்தது - பொருளாதார சிதைவு, எமது மக்களின் பாதுகாப்பு, எமது தொழிற்பாடுகளின் மீளெழுச்சி, எமது நிதிநிலைமைக்கூற்றின் வலிமை, புதிய வழக்கத்திற்கு ஈடு கொடுத்தல் மற்றும் வாடிக்கையாளர் மற்றும் சமூகத்தின் நிதிசார் பாதுகாப்பு**

எனவே, நோய்ப்பரவலின் தாக்கத்தை கருத்திற்கொண்டு தற்போதைய நிலையை பிரதிபலிக்கும் வகையில் 2020ஆம் ஆண்டில் எமது பொருண்மிய மதிப்பீட்டைப் புதுப்பித்தோம். அதன்படி 15 புதிய பொருண்மிய சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டன. அவை எமது செயற்பாடுகளை பாதிக்கக்கூடியவை மற்றும் எமது அக்கறைதாரர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கொவிட் 19 நிலைமை உள்நாட்டிலும் உலக அளவிலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தாலும் புதிய சவால்கள் மற்றும் இடர்கள் குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கு தோன்றுகிறது. சபையும் முகாமையும் தொடர்ந்து நிலைமையை தீவிரமாக கண்காணித்து எமது நிதிப் பலத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் எமது வாடிக்கையாளருக்கும் சமூகத்திற்கும் இந்த முன்னிகழ்வில்லாத காலங்களில் ஆதரவளிப்பதை உறுதிப்படுத்தவும் எமது பின்னூட்டலையும் மாற்றியமைக்கிறது.

தொழிற்பாட்டுச் சூழலின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஏழு பாரிய போக்குகளின் கீழ் எமது பொருண்மிய விடயங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. GRI 102-47

| ஒரு நிச்சயமற்ற புவிசார் அரசியல் மற்றும் சமூக பொருளாதார சூழல் | கொவிட் 19ன் சமூக பொருளாதார தாக்கங்கள் | தகர்க்கும் தொழிநுட்பங்களும் போட்டித்தன்மையும் | மேம்படும் வாடிக்கையாளர் தேவைகள் | குடியியல் கட்டமைப்பு மாற்றங்கள் | அதிகரித்த ஒழுங்குமுறையான நுண்ணாய்வு | காலநிலை மாற்றம் |
|---|---|---|---|---|---|---|
| பொருளாதார சிதைவு | வணிக மற்றும் தொழிற்பாட்டு மீளெழுச்சி | இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு | இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு | திறன்கள் மற்றும் ஆற்றல்கள் | நிதிசார் குற்றங்கள் | சுற்றுச்சூழல் மீளெழுச்சி |
| நிதிசார் நிலைபேறான தன்மை | சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | எண்ணியல் நிலைமாற்றம் | எண்ணியல் நிலைமாற்றம் | ஊழியர் பெறுமதி மையப்படுத்தல் | சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறை இணக்கப்பாடு | |
| சந்தைத் தளம்பலை முகாமை செய்தல் | புதிய வழக்கத்துக்கு ஈடு கொடுத்தல் | வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம் | வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம் | | | |
| | | | புத்தாக்கம் மற்றும் விரைவுத் தன்மை | | | |

இந்த பொருண்மிய சிக்கல்கள் மூன்று முக்கிய பிரிவுகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.

### மூலோபாய வேறுபாடுகள்

இவை தே.சே.வங்கியின் மூலோபாயத்திற்கு குறிப்பிடத்தக்க மதிப்பை உருவாக்கும் பொருண்மை சார்ந்த விடயங்களாகும். மேலும் அக்கறைதாரர்களுக்கான மதிப்பை உருவாக்குவதற்கான மிக உயர்ந்த ஆற்றலைக் கொண்டுள்ளன.

### அடிப்படை மதிப்பை உருவாக்குபவர்கள்

இந்த ஆதரவு மதிப்பு உருவாக்கம் மற்றும் தே.சே.வங்கியின் மூலோபாயத்தை செயல்படுத்தல்

### பிற மதிப்பை உருவாக்கும் பொருண்மிய விடயங்கள்

இவை தே.சே.வங்கியின் மதிப்பை உருவாக்க உதவுகின்றன. ஆனால் வங்கியின் மதிப்புருவாக்கத்தில் அவற்றின் தாக்கம் குறைவாகவே உள்ளது.

நாம் விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து கீழே உள்ள பொருண்மிய வரைபடத்தில் அவற்றை திட்டமிட்டுள்ளோம்:




சபையும் குழுக்களும் தங்கள் முயற்சிகளில் கவனம் செலுத்தும் பொருண்மிய தலைப்புக்களிலுள்ள குறிப்பிட்ட இடர்கள் மற்றும் வாய்ப்புக்களை பின்வரும் பகுதி விபரிக்கிறது. எமது அக்கறைதாரர்களுக்கான மதிப்பை உருவாக்கும் அல்லது குறுகிய நடுத்தர நீண்ட காலத்திற்கு எமது மூலோபாயத்தை வழங்குவதற்கான எமது திறனை பாதிக்கும் தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் இடர்களின் கலவை இதில் அடங்கும்.

இடர் பிரிவுகள்: நிதி, மூலோபாயம், செயல்பாடு, கடன், சந்தை, திரவத்தன்மை, நற்பெயர்

காலவரைபு: ஒவ்வொரு முக்கிய வெளிப்புற காரணிக்கும் அது வங்கியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் கால வரைபை நாம் குறிப்பிடுகிறோம். இந்த ஒருங்கிணைந்த அறிக்கைக்கு குறுகிய காலமானது அடுத்த நிதியாண்டு (டிசம்பர் 31, 2022 உடன் முடிவடைகிறது) நடுத்தர காலம் டிசம்பர் 31, 2024 வரையான காலம். நீண்ட காலம் டிசம்பர் 31, 2024 மற்றும் அதற்கு பின்னரான காலத்தைக் குறிக்கிறது.

ஆண்டாண்டுக்கான இயக்கம்: அதிகரித்த உருவாகின்ற நிலையான குறைந்த

பொருண்மியம் சார்ந்த விடயங்கள் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூக அம்சங்களின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன/வகைப்படுத்தப்பட்டுள்ளன

இவ் அம்சங்கள் 79இலிருந்து 93 வரையான பக்கங்களிலுள்ள தலையங்கங்களை வரையறுக்கின்றது.

## பொருளாதாரம்

## பொருளாதார சிதைவு

**சூழலமைவு/விபரணம்**

கொவிட்-19 தொழிற்பாட்டு சூழலை கணிசமாக மாற்றுகிறது, போக்குகளை துரிதப்படுத்துகிறது மற்றும் கட்டமைப்பு சிக்கல்களை முன்னிலைப்படுத்துகிறதோடு புவிசார் அரசியல் மற்றும் தொடர்புடைய தளம்பல் தன்மை, நிச்சயமற்ற தன்மை, சிக்கலான தன்மை மற்றும் தெளிவின்மை ஆகியவை சாத்தியமான சமூக பொருளாதார இடையூறுகளை உருவாக்குகிறது.

**ஏன் அது பொருண்மியமானது?**

எந்தவொரு பெரிய பொருளாதார சிதைவும் எங்கள் சேவைகளுக்கான தேவையைக் குறைக்கலாம், எமது வாடிக்கையாளரின் செலவிடும் வலுவைக் குறைக்கலாம் மற்றும் எமது இலாபத்தையும் பணப்புழக்கத்தையும் பாதிக்கலாம்.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

கொவிட்-19 ஆல் தூண்டப்பட்ட குறைந்த பொருளாதார வளர்ச்சி, உயர் வேலையின்மை நிலைகள், நாணய தளம்பல், அதிகரிக்கும் பணப்புழக்க அழுத்தம், அதிகரிக்கும் சமூக அமைதியின்மை, அதிக நிர்வாகச் செலவுகள், பணவீக்கம் மற்றும் பலவீனமான பாரிய பொருளாதார அடிப்படைகள் போன்ற காரணிகள் விருத்தி மற்றும் முதலீட்டைத் தடுத்தல், இவை கடன் வழங்குவதற்கான தேவையைக் குறைக்கலாம், வணிகம் செய்வதற்கான செலவை அதிகரிக்கலாம், மற்றும் வாடிக்கையாளரின் இயல்புநிலையை குறைக்கலாம்.

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- பொருளாதாரம், குறித்த பிரிவு, பிரதேச மற்றும் உலக அரசியல் நிகழ்வுகள் உட்பட உள்ளூர் மற்றும் உலக நிலைமைகளைக் கண்காணித்தல்
- நிதி இடர் முகாமைச் சட்டகத்தினூடாக நிதி இடர்களைக் குறைக்க வழிகாட்டல்களை வழங்கல்
- நிறுவன திட்டமிடல் மற்றும் வரவு செலவுத்திட்ட செயற்பாடுகள் மூலோபாயங்களை மாற்றியமைக்கவும் மூலதனத்தை மீள்முன்னுரிமைப்படுத்தவும் நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது
- தற்போதைய நிலைமைகளுடனும் சாத்திய நிலைமைகளை தழுவவும் மையத்தை நிலைப்படுத்தல்
- தற்போதைய நிலையை திட்டமிடுவதன் மூலம் ஆதரவுடன் மூலோபாய இலக்குகளுடன் கூடிய கவனமான மற்றும் தெரிவு செய்யப்பட்ட முதலீடுகள்
- பன்வகைத்தன்மையையும் சந்தை விரிவாக்கத்தையும் தூண்ட வணிக விருத்தி மூலோபாயங்களை உருவாக்கல்
- நீண்டகால நிதிசந்தை அணுகலில்லாமல் செயல்பட போதுமான பணப்புழக்க இடையகங்களை பராமரித்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| அதிகரித்த | நிதி, சந்தை, தொழிற்பாடு | குறுகிய - நடுத்தர கால எல்லை | |

| பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள் | தொடர்புடைய அக்கறைதாரர்கள் | தொடர்புடைய GRI மற்றும் எல்லை | பாதிக்கப்பட்ட SDGs |
|---|---|---|---|
| | | • 201 - பொருளாதார நிகழ்வு - உள்ளேயும் வெளியேயும்<br>• 203 - மறைமுக கொருளாதார தாக்கம் - வெளியே | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH, 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE, 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES |

**பொருளாதாரம்**

## நிதிசார் நிலைபேறான தன்மை

**சூழலமைவு/விபரணம்**

எமது நிதிவலிமையை பாதுகாத்தல் மற்றும் பொருளாதார மற்றும் நிதிக்குழப்பத்தின் போது எதிர் சுழற்சி பாத்திரத்தை வகித்தல்

**ஏன் அது பொருண்மியமானது?**

தடையற்ற சேவை, விவேகமான இடர் மேலாண்மை, மற்றும் உறுதியான மூலதனத் தளத்தை பராமரிப்பதன் மூலம் எமது போட்டித்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை பாதுகாக்கிறது. நிதி நிலைத்தன்மை கடன் செலவைக் குறைக்கவும் எமது வாடிக்கையாளர்களுக்கு தாங்கத்தகுந்த நிதி வழங்கலை நீடிக்கவும் உதவுகிறது.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

- உலகளவிலும் உள்நாட்டிலும் எதிர்பார்த்ததை விட குறைந்த பொருளாதார வளர்ச்சி
- எதிர்பார்த்ததை விட குறைந்த சந்தை வளர்ச்சி காரணமாக வருவாய் ஈட்டுவதில் தாக்கம்
- கொவிட்-19 காரணமாக ஏற்பட்ட இடையூறுகள்
- வாடிக்கையாளர் இயல்புநிலை மற்றும் சலுகைகள் நீட்டிப்பு காரணமாக உயர்ந்த கடன் வெளிப்பாடு
- வருவாய் பல்வகைப்படுத்தல் மற்றும் மறுநிதியளிப்பு மீதான வரம்புகள்
- கடன் மதிப்பீட்டின் தரமிறக்கம் மற்றும் கடன் நிதியளிப்பில் அதன் தாக்கம்

**எமது எதிர்கொள்ளல்/அனுகுமுறை**

- ஒரு பாதுகாப்பான மூலதன போதுமை நிலையை பேணல்
- நிலையான செலவு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
- கடுமையான வரவு செலவுத்திட்டம், முன்கணிப்பு மற்றும் காட்சி பகுப்பாய்வு செயன்முறைகள்
- பாதுகாப்பான தொகுப்பு பல்வகைப்படுத்தல் மூலம் வருவாய் வழிகளை பல்வகைப்படுத்தல்
- அனைத்து முதலீடுகளுக்கும் கடன் இடர் மதிப்பீடு மற்றும் உரிய விழிப்புக்கவனச் செயன்முறை
- வருவாய் உற்பத்தி பற்றாக்குறை இடைவெளியை குறைக்க புதிய வணிக மேம்பாட்டு முயற்சிகள்
- கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் மேலாண்மை மற்றும் அதிக கடன் அபாய வெளிப்பாடு உள்ள வாடிக்கையாளர்களை நெருக்கமாக கண்காணித்தல் உட்பட தொடர்ச்சியான செயற்பாட்டு மூலதன மேலாண்மை

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| ▲ | நிதி, சந்தை, கடன், | குறுகிய - நடுத்தர கால எல்லை | |

| பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள் | தொடர்புடைய அக்கறைதாரர்கள் | தொடர்புடைய GRI மற்றும் எல்லை | பாதிக்கப்பட்ட SDGs |
|---|---|---|---|
| | | • 201 - பொருளாதார நிகழ்வு - உள்ளேயும் வெளியேயும் | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION |

பொருளாதாரம்

## சந்தைத் தளம்பலை முகாமை செய்தல்

**சூழலமைவு/விபரணம்**

நோய்பரவல் அதனுடன் தொடர்புபட்ட பொருளாதார முடக்கம் உட்பட முன்னிகழாத உலக நிகழ்வுகள் காலத்தோடு சொத்து விலையிடலையும் மாற்றியது (பணப்பரிமாற்று வீதங்கள், வட்டி வீதம், சொத்து மற்றும் மூலதனங்கள்)

**ஏன் அது பொருண்மியமானது?**

- நிதி நிலையற்ற தன்மையானது கடனுக்கான தேவையை பாதிக்கிறது. சாத்தியமான கடன் தவறுகை அதிகரிக்கிறது மற்றும் மூலதனத்தின் இருப்பு மற்றும் செலவை அதிகரிக்கிறது. இருப்பினும் அரசாங்கம், வங்கிகள் மூலம் ஆதரவு நடவடிக்கைகளை வழங்கியது
- இந்த காரணிகள் திட்டமிடப்பட்ட வளர்ச்சி மற்றும் பணப்புழக்க நிலைகளை அடைவதற்கான நமது திறனை தடுக்கலாம் மற்றும் சொத்து மதிப்புகளை குறைக்கலாம்
- நிலைச் சொத்து விலைகளின் சரிவு காரணமாக ஆதன அடிப்படையிலான பிணையங்களின் தொகுதி பாதிக்கப்பட்டுள்ளது
- செலாவணி விகிதங்களில் ஏற்ற இறக்கத்தால் ஏற்படும் அந்நிய செலாவணி ஆபத்து

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

சொத்து விலைகளின் அதிகரித்த ஏற்ற இறக்கம் மறு விலையிடல் அபாயத்தின் காரணமாக சொத்துக்களின் சம்பாதிக்கும் திறனை பாதிக்கும். மறுநிதியளிப்பு அபாயத்துடன் பங்குதுறை, நிலையான வருமான துறை, பணச் சந்தை துறை ஆகியவற்றின் முதலீடுகளின் மதிப்பு குறைந்துள்ளது (எங்கள் முதலீடுகளில் 60% அரச பிணையங்களிலுள்ளது).

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- நமது நிதிநிலைகூற்றை வலுப்படுத்தல்
- மூலதன மறுசுழற்சி, குறைத்தல், மற்றும் நிதி ஆதாரங்களின் பல்வகைப்படுத்தல் மூலம் விவேகமான பணப்புழக்க மேலாண்மை
- வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுதல் மற்றும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை வழங்குதல்
- சீரான முறையமைப்பை பராமரித்தல்

| **ஆண்டாண்டுக்கான இயக்கம்** | **இடர் வகை** | **கால எல்லை** | **பாதிக்கப்பட்ட முதலீடுகள்** |
|---|---|---|---|
| | நிதி, சந்தை, கடன், திரவநிலை | குறுகிய - நடுத்தர கால எல்லை | |

| **பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்** | **தொடர்புடைய அக்கறைதாரர்கள்** | **தொடர்புடைய GRI மற்றும் எல்லை** | **பாதிக்கப்பட்ட SDGs** |
|---|---|---|---|
| | | • 201 - பொருளாதார நிகழ்வு - உள்ளே | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 10 REDUCED INEQUALITIES; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION |

சமூகம்

## வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம்

### சூழலமைவு/பின்னணி

புதுமையான மற்றும் பயனுள்ள வாடிக்கையாளர் தீர்வுகள் மற்றும் வணிக நெறிமுறைகளுக்கு வலுவான அர்ப்பணிப்புடன் உயர்ந்த சேவை தரம் ஆகியவற்றை உள்ளடக்கிய தனித்துவமான வாடிக்கையாளர் மதிப்பு முன்மொழிவை வழங்கலானது வாடிக்கையாளர் திருப்தி மற்றும் வங்கி மீதான நம்பிக்கையை அதிகரிக்கும்

### ஏன் அது பொருண்மியமானது?

ஒரு சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவது நம்பிக்கையை வளர்ப்பதற்கும் நிதி வலிமை மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் அவசியம். மோசமான வாடிக்கையாளர் சேவை மற்றும் திறன் கட்டுப்பாடுகள் வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் வணிக இழப்பிற்கு வழிவகுக்கும். புதுமையான மற்றும் செலவு குறைந்த தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதன் மூலம் பொருத்தப்பாடாக இருப்பது வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் உள்வாங்குவதற்கும் அவசியம்.

### அதிகரிப்புக்கான காரணங்கள்

- மாற்றுத் தொடர்புச் சேவைகள் அல்லது வெவ்வேறு இணைப்புக்களை வழங்கும் பல்வேறு தொழிநுட்ப தளங்களிலிருந்து அதிகரித்த போட்டி
- நோய்பரவல் மற்றும் கடன் தரப்படுத்தல் குறைப்பு காரணமாக வாடிக்கையாளர்களுக்கு நிதிக்கட்டுப்பாடுகள்
- கொவிட் 19 காரணமாக ஏற்படும் தொழிற்பாட்டு கட்டுப்பாடுகள்
- வாடிக்கையாளர் தேவைகளை மேம்படுத்தல்

### எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை

- தனிப்பட்ட விரைவான எளிய முறையில் சிறந்த தொழிநுட்பத்தையும் மனித தொடர்பாடலையும் இணைப்பதன் மூலம் ஈடுபாட்டுடனான வாடிக்கையாளர் அனுபவத்தை தரல்
- சந்தை தலைமைத்துவத்தை அடைதல் மற்றும் வடிவமைக்கப்பட்ட வாடிக்கையாளர் வகைகளை வழங்குவதற்கு வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் நடத்தை போக்குகளில் முக்கிய விடயங்களை தயாரித்தல்
- குறைந்த சூழல் பாதிப்புடன் எண்ணியல் சமூகத்தை உள்வாங்க இயலுகின்ற புதுமையான தயாரிப்பு சேவைகளை வழங்குவதன் ஊடாக போட்டித்தன்மையான வேறுபாடுகளை கவனம் செலுத்துவதன் மூலம் நோக்கம் நிறைந்த கலாசாரத்தை வடிவமைத்தல்
- எண்ணியல் வழிமுறைகள், திறமையான மூலதன ஒதுக்கீடு, புதுமையாக வடிவமைக்கப்பட்ட வாடிக்கையாளர் தனிப்படுத்தல், புதிய பங்குடைமையூடாக போட்டித்தன்மையான விலையிடல் என்பவற்றில் முதலீடுகளை அதிகரித்தல்
- புதுமையான பெறுமதி மையப்படுத்தல் மூலம் வாடிக்கையாளர் உறவுகளை ஆழப்படுத்துதல்
- மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்திற்காக எண்ணியல் நிலைமாற்றத்தை வழங்குதல் மற்றும் அதிகரித்தலை எளிதாக்க மூலோபாய கவனமெடுத்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| | தொழிற்பாட்டு, மூலோபாயம், நற்பெயர் | • குறுகிய - நீண்ட கால எல்லை | |

| பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள் | தொடர்புடைய பங்குதாரர்கள் | தொடர்புடைய GRI மற்றும் எல்லை | பாதிக்கப்பட்ட SDGs |
|---|---|---|---|
| | | • 416 - வாடிக்கையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - வெளியே<br>• 417 - சந்தைப்படுத்தல் மற்றும் பெயரிடல் - வெளியே | 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE<br>17 PARTNERSHIPS FOR THE GOALS |

சமூகம்

## வணிக மற்றும் தொழிற்பாட்டு மீளெழுச்சி

**சூழலமைவு/விபரணம்**

அமைப்புக்கள் மற்றும் செயல்திறனின் மீளெழுச்சி மூலமும் முன்னிகழாத நிகழ்வுகள் மூலமும் வணிக செயற்பாடுகளை தொடர்வதன் மூலமும் வேகமாக மாறிவரும் சூழலுக்கேற்ப தழுவும் எமது திறன்கள்

**ஏன் அது பொருண்மியமானது?**

இடையூறு இல்லாத வாடிக்கையாளர் சேவையை நீட்டிக்கவும், சமூக நம்பிக்கையை நிலைநிறுத்தவும், எமது நற்பெயரைப் பேணவும் எமது செயற்பாடுகளின் தொடர்ச்சியும் மீளெழுச்சியும் மிக முக்கியம். தொழிற்பாட்டு மீளெழுச்சி என்பது எமது மூலோபாய இலக்குகளில் உட்பொதிந்துள்ளதுடன் அதிகரித்துவரும் சிக்கலான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வணிக மாதிரிகளில் இருந்து வெளிப்படும் செயல்பாட்டு மற்றும் நிதி இடர்களை எதிர்நோக்குவதற்கும் வழிநடத்துவதற்கும் பயன்படுகிறது.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

ஊழியர்களின் பாதுகாப்பை பாதிக்கக்கூடிய செயல்பாடுகளை சீர்குலைத்து உற்பத்தித்திறனை குறைக்கக்கூடிய கொவிட்19 கொத்தணிகள் தொற்றியதன் காரணமாக எமது செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படக்கூடிய இடர்கள் தற்போது அதிகரித்துள்ளது. உலகளாவிய விநியோக சங்கிலிகளின் ஸ்திரத்தன்மை மற்றும் அவற்றின் தாக்கங்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளின் அதிகரித்த நிகழ்வுதன்மை ஆகியவற்றில் நிச்சயமற்ற தன்மை உள்ளது

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- தற்செயல் நிகழ்வுகளின் திட்டமிடல் மூலம் எமது அமைப்புக்களின் மீளெழுச்சியை கண்காணித்தல்
- தகவல் மையத்தை இயக்குதல், எமது வலையமைப்பை நவீனமயமாக்கல், மற்றும் எமது தொழிநுட்ப உட்கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் மீளெழுச்சியை மேம்படுத்தல்
- வங்கி முழுவதும் உள்ள இடர்களை திறம்பட குறைப்பதை உறுதிசெய்வதற்காக எமது அக்கறைதாரர்களின் ஈடுபாட்டில் அதிக விரைவுத்தன்மை மற்றும் சீரமைப்பை இயக்குதல்
- எமது ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை பாதுகாக்க தேவையான பாதுகாப்பு நெறிமுறைகளை செயல்படுத்துதல் மற்றும் எமது ஊழியர்களுக்கு திறமையான தொலைநிலை பணி ஏற்பாடுகளை எளிதாக்குதல்

**ஆண்டாண்டுக்கான இயக்கம்**

**இடர் வகை**

தொழிற்பாட்டு, மூலோபாயம், நற்பெயா

**கால எல்லை**

குறுகிய - நீண்ட கால எல்லை

**பாதிக்கப்பட்ட முதலீடுகள்**

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய பங்குதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 403 - தொழல்ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - உள்ளே
- 418 - வாடிக்கையாளர் தனியுரிமை - உள்ளே

**பாதிக்கப்பட்ட SDGs**



சமூகம்

## பொருளாதார சிதைவு



**சூழலமைவு/விபரணம்**

கொவிட் 19 நோய்பரவலை தொடர்ந்து மாறிய வணிகச் சூழலுக்கு ஏற்றவாறு எமது செயல்பாடுகள், கலாசாரம் மற்றும் மூலோபாயச் செயற்பாடுகளை மாற்றியமைத்தல்.

**ஏன் அது பொருண்மியமானது?**

நோய்பரவல் எமது வங்கி, ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பரவலான தாக்கங்களைத் தொடர்கிறது, இது எமது வணிக மாதிரி, நிர்வாக அமைப்பு மற்றும் நிதி நம்பகத்தன்மைக்கு முன்னிகழாத சவால்களை உருவாக்குகிறது. நோய்பரவல் புதிய வழக்கத்திற்கு எமது மாற்றத்தை துரிதப்படுத்தியுள்ளது மற்றும் தொடர்ந்து கவனம் செலுத்தவேண்டிய முன்பே இருக்கும் சவால்கள் மற்றும் பாதிப்புக்களை கூர்மைப்படுத்தியுள்ளது.

**திருப்திக்கான காரணங்கள்**

- வணிக இடையூறுகளுக்கு மத்தியில் வழக்க நிலைக்கு திரும்புதல்
- புதிய செயற்பாடுகள் மற்றும் தொலைதூர வேலை ஏற்பாடுகள் உருவாகல்

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- எமது மூலோபாயம், மதிப்பை பாதுகாத்தல் மற்றும் உருவாக்கம் ஆகியவற்றில் நோய்பரவலின் நடுத்தர மற்றும் நீண்டகால விளைவுகளை மறு மதிப்பீடு செய்தல்
- ஒரு புதிய தொலைநிலை வேலை முறையை தொடர்ச்சியாக தழுவல்
- வங்கி முழுவதும் நிறுவப்பட்ட புதிய தகவல் தொடர்பு நெறிமுறைகளை ஒருங்கிணைத்தல்
- எமது ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த தேவையான பாதுகாப்பு நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளல்
- சூழ்நிலை திட்டமிடல், போக்கு பகுப்பாய்வு மற்றும் வணிக தொடர்ச்சி மதிப்பீடுகள் (மேலும் விபரங்களுக்கு பக்கம் 112-140) மூலம் வங்கியின் மீள்எழுச்சியை வலுப்படுத்த செயல்பாட்டு நடைமுறைகளை செம்மைப்படுத்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| ⊖ | தொழிற்பாட்டு, மூலோபாயம் | குறுகிய - நடுத்தர கால எல்லை |  |

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**



**தொடர்புடைய அக்கறைதாரர்கள்**



**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 403 -தொழில்ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - உள்ளே
- 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே
- 418 - வாடிக்கையாளர் தனியுரிமை - உள்ளே

**பாதிக்கப்பட்ட SDGs**



சமூகம்

## எண்ணியல் நிலைமாற்றம்

### சூழலமைவு/விபரணம்

வாடிக்கையாளர்களின் வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும், எமது செயல்முறைகளை மாற்றியமைப்பதன் மூலமும், எமது ஊழியர்களின் எண்ணியல் திறன்களை மேம்படுத்துவதன் மூலமும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க எண்ணியல் மயமாக்கலில் முதலீடு செய்தல், மேலும் வளர்ந்துவரும் தொழிநுட்பங்கள் வங்கி அல்லாத புதிய நிறுவனங்கள் வங்கிகளுடன் நேரடியாக போட்டியிட உதவல்.

### ஏன் அது பொருண்மியமானது?

- வளர்ந்துவரும் தொழிநுட்பங்களை ஏற்றுக் கொள்வது, நிலையான வளர்ச்சியை வழங்கவும், சேவை தரத்தை மேம்படுத்தவும், எமது ஊழியர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், மற்றும் புத்தாக்க கலாசாரத்தை வளர்க்கவும் உதவுகிறது
- ஈர்க்கவும் தக்கவைக்கவும் கடினமானவும் இருக்கும் அர்ப்பணிப்பு மற்றும் அதிக திறன் கொண்ட திறமைகள் எண்ணிய மற்றும் தானியக்க மயமாக்கத்திற்கும் தேவை
- புதிய தொழிநுட்பங்களை ஏற்றுக்கொள்வது வித்தியாசமானதாக இருந்தபோதிலும் எண்ணியல் நிலைமாற்றத்தில் ஏற்படும் தோல்வியினால் வணிக இழப்பு, அதிக வரவுசெலவுத்திட்டம், மோசமான வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நற்பெயருக்கு சேதம் ஏற்படலாம். இது வங்கியின் நிதி செயல்திறனை மோசமாக பாதிக்கும்

### அதிகரிப்புக்கான காரணங்கள்

- வழக்கற்றுப்போன தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு மற்றும் தொழிநுட்பம் (போதாத வலையமைப்பு இணைப்பு)
- இணைய பாதுகாப்பு மற்றும் பிந்திய நான்காவது கைத்தொழில் புரட்சியை தழுவல்
- நிதிக்கட்டுப்பாடுகள்
- முக்கிய வணிகச் செயன்முறைகளில் தன்னியமயமாக்குதலின் தாமதம்
- எண்ணியல் தீர்வுகளின் தாமத வணிகமயமாக்கல்
- தொலைதூர வேலை ஏற்பாடுகள் மற்றும் எண்ணியல் வங்கித் தீர்வுகளின் அதிகரித்த தேவைகள்

### எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை

- வங்கியின் முக்கிய மூலோபாய தூண் எண்ணியல் நிலைமாற்றத்தை துரிதப்படுத்தல். தொழிநுட்பத்தில் தொடர்ந்து முதலிடுவதன் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த எண்ணியல் வங்கி அனுபவங்களை வழங்க முயற்சி செய்கிறோம்
- பல எண்ணியல் வழிகளில் தடையின்றி வடிவமைக்கப்பட்ட வங்கி தீர்வுகளை வழங்க தரவு பகுப்பாய்வுகளை பயன்படுத்தல்
- வாடிக்கையாளர்களுக்கு எண்ணியல் தீர்வுகளை வழங்க நிலையான மற்றும் சிறந்த எண்ணியல் உட்கட்டமைப்பை உருவாக்குதல். எமது எண்ணியல் தளங்களில் வாடிக்கையாளர் சேர்க்கையில் குறிப்பிட்ட அதிகரிப்புள்ளது
- எண்ணியல் வணிகங்களில் எமது முதலீடுகள் எமது முக்கிய மைய உற்பத்தி வழங்கல்களை அதிகரிக்கின்றன
- இடர்கள் மற்றும் செலவுகளைக் குறைக்கவும் முறைமை கிடைப்பனவு மற்றும் மீளெழுச்சியை மேம்படுத்தவும் எமது அமைப்புக்களை நவீனப்படுத்தவும் எளிமைப்படுத்தவும் மற்றும் எமது முழுமையான செயல்முறையை எண்ணியல் மயமாக்கல்
- எமது எண்ணியல் செயல்பாடுகளின் பாதுகாப்பு மற்றும் அதை உறுதிப்படுத்த தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச தரங்களை கடைப்பிடித்தல்
- வளர்ந்துவரும் தொழிநுட்பங்களை கண்காணித்தல், எமது தொழிநுட்ப தலைமையைப் பராமரிக்க புதிய புதுமையான விடயங்களை ஏற்றுக் கொள்வதை ஆய்வு செய்தல் மற்றும் சோதனை செய்தல்
- புதிய அச்சுறுத்தல்களை தணிக்க எமது திட்டங்களின் வாழ்நாள் முழுதும் நோக்கங்கள் மற்றும் முக்கிய செயற்திறன் சுட்டி (KPI) இலக்குகளிற்கு எதிராக எமது திட்டங்களை கண்காணித்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| ⌃ | தொழிற்பாட்டு, மூலோபாயம், நற்பெயர் | குறுகிய - நடுத்தர கால எல்லை | |

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய அக்கறைதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 401 - வேலைவாய்ப்பு - உள்ளே
- 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே
- 413 - உள்ளக சமூகங்கள் - வெளியே
- 418 - வாடிக்கையாளர் தனியுரிமை - உள்ளே

**பாதிக்கப்பட்ட SDGs**

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE
11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES
13 CLIMATE ACTION
17 PARTNERSHIPS FOR THE GOALS

**சமூகம்**

## புத்தாக்கம் மற்றும் விரைவுத்தன்மை

**சூழலமைவு/விபரணம்**

வினைத்திறனை மேம்படுத்தவும் மாற்றத்திற்கு தழுவவும் புதிய தயாரிப்புக்கள், சேவைகள் மற்றும் செயற்பாடுகளை எண்ணக்கருவாக்கல், விருத்திசெய்தல் மற்றும் அமுல்படுத்தல்

**ஏன் அது பொருண்மியமானது?**

வாடிக்கையாளர் மையமாகிய தயாரிப்புக்களை செம்மையாக்கவும் தொடர்ச்சியாக உருவாக்கவும் ஒரு நிறுவனமானது அதிவிரைவாக மாறும் தொழிற்பாட்டு பிண்ணனியில் தொடர்புபட்டதாக இருக்கவும் புத்தாக்கம் மற்றும் விரைவுத்தன்மை மிக முக்கியமானதாகும்

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

பாரம்பரிய வணிக மாதிரிகளை சீர்குலைப்பதோடு புதிய சந்தைகளை உருவாக்கும் தகர்க்கும் தொழிநுட்பங்களின் சாத்தியத்தை உடையது. இந்த சூழ்நிலையில் அக்கறைதாரர்களுடைய கேள்வி முரண்பாடாக இருந்த போதிலும், இம்மாற்றங்களுக்கு பதிலிறுக்கும் வகையில் தொழிற்பாட்டு மாதிரியை தழுவுதல், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், தொடர்புடையதாக எம்மை மாற்றவும் அனுமதிக்கிறது.

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- புத்தாக்க கலாசாரத்தை விருத்தி செய்வதன்மூலம் சுயஆய்வுக்குட்படும் அணுகுமுறையை தழுவல்
- எமது அனைத்து தொழிற்பாடுகளுக்கும் உருவாகும் தொழிநுட்பங்களை பயன்படுத்துதல்.
- நிலைத்த புத்தாக்கத்திற்கும் அக்கறைதாரர் ஈடுபடும் வழிகளுக்கும் எமது தொழிற்பாட்டு மாதிரியை மேம்படுத்தல்
- பாரிய தரவுகளை பயன்படுத்தி மாறிவரும் சந்தைகளையும் வாடிக்கையாளர் நடத்தை போக்குகளையும் ஆராய்தல்
- வள மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்த நெகிழ்வான புதிய தீர்வுகளை அமுல்படுத்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| ^ | தொழிற்பாட்டு, மூலோபாயம், நிதி | குறுகிய - நடுத்தர கால எல்லை | |

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய அக்கறைதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 401 - வேலைவாய்ப்பு - உள்ளே
- 413 - உள்ளக சமூகங்கள் - வெளியே
- 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே

**பாதிக்கப்பட்ட SDGs**



சமூகம்

## திறன்கள் மற்றும் ஆற்றல்கள்

**சூழலமைவு/விபரணம்**

புதிய தொழிநுட்பங்களின் தோற்றம், மாறிவரும் பாரிய பொருளாதார நிலைகள், அதிகரித்த ஒழுங்குமுறை நுண்ணாய்வு என்பன புதிய மற்றும் வெவ்வேறு திறன்களைக் கொண்ட அக்கறைதாரர்களுக்கு விநியோகம் செய்வதற்கான ஆழமான வங்கி அனுபவத்துடன் ஊழியர் குழுவைக் கொண்டிருப்பதன் தேவை அதிகரித்துள்ளது.

**ஏன் அது பொருண்மியமானது?**

எமது வெற்றிக்கு எமது மக்கள் முக்கியம், சரியான திறமையை கவரவோ அல்லது தக்கவைக்கவோ நாம் தவறின் எமது நீண்டகால இலக்கின் அடைவுகளுக்கு தடைபடலாம். பாரம்பரியமற்ற போட்டியாளர்கள் இடையே எழும் உன்னிப்பான போட்டித்தன்மை காரணமாக தேவையான திறன்களை கவருவதும் தக்கவைப்பதும் சவாலாக மாறிவருகிறது.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

- தேவையேற்படும் திறன்களை கவரவும் தக்கவைக்கவும் நான்காவது கைத்தொழில் புரட்சி வணிக மாதிரிகளை எதிர்கொள்ள இயலாமையின் இடரும்.
- நீண்டகால வணிக நிலைத்தன்மையில் தாக்கம்
- வணிக தொழிற்பாடுகள் மற்றும் சந்தை வளர்ச்சியில் தாக்கம்
- ஊழியர் பயிற்சி, வேலை ஏற்பாடுகள், உற்பத்தித்திறனில் கொவிட்19ன் தாக்கம்

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- பரந்தபட்டளவில் எம் மக்களை விருத்தி செய்ய குறிப்பிட்ட பயிற்சி நிகழ்வுகள்
- தொழில் வாய்ப்புக்களை வழங்கல், ஊழியர்களின் முயற்சியாண்மை, திறன் மற்றும் குணாதிசயங்களை இனங்காணல் மூலம் ஊழியர் தக்கவைத்தலை விருத்தி செய்தல்
- ஊழியர்களின் இயலுமையை விருத்தி செய்தல், வங்கியினூடாக கலாசார மற்றும் நடத்தை மாற்றங்களுக்கு வழிநடத்த தேவையான திறமைகளையும் நுட்பங்களையும் வைத்திருத்தல்
- எமது மக்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்த மீள்திறன் மற்றும் திறன் மேம்படுத்தல்
- ஊழியர்களின் குறிப்பிட்ட வகிபாகம் மற்றும் தனிநபர் விருத்தி தேவைகளுக்காக பயிற்சி மற்றும் விருத்தி முன்னெடுப்புக்களை ஏற்படுத்தல்
- மெய்நிகர் பயிற்சி மற்றும் கற்றல் தீர்வுகளை தழுவல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| | தொழிற்பாட்டு, மூலோபாயம், நற்பெயர் | குறுகிய - நீண்ட கால எல்லை | |

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய அக்கறைதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 401 -வேலைவாய்ப்பு - உள்ளே
- 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே

**பாதிக்கப்பட்ட SDGs**

4 QUALITY EDUCATION
5 GENDER EQUALITY
8 DECENT WORK AND ECONOMIC GROWTH
11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

சமூகம்

## ஊழியர் பெறுமதி மையப்படுத்தல்

**சூழலமைவு/விபரணம்**

கவர்ச்சிகரமான ஊழியர் மையப்படுத்தலை மேம்படுத்த எமது இயலுமையுடன் கூடிய இடர்கள் உள்ளடங்களாக தற்கால மற்றும் எதிர்கால வணிக தேவைகளுக்காக கவர்ச்சி மற்றும் தக்கவைக்கும் திறன்களை வசதிப்படுத்தல், எமது விழுமியம் மற்றும் நெறிமுறைகளுடன் தொடர்புபட்ட உயர்திறன் கலாசாரத்தை பேணல், உயர் ஊழியர் ஈடுபாடல் மற்றும் உயர் உற்பத்தித்திறனை பேணல், உள்வாங்கலையும் பல்வகைமையையும் உறுதிப்படுத்தல், நிர்வாக மாற்றத்தை முகாமை செய்தல், நல்ல தொழிலாளர் உறவுகளை வழிப்படுத்தல்.

**ஏன் அது பொருண்மியமானது?**

பகிர்ந்தளிக்கும் மதிப்பை உருவாக்கவும் நிறுவன இலக்குகளை அடைய நமது மூலோபாய திட்டங்களை வினைத்திறனாக வெளிப்படுத்த வெற்றிகரமான குழு ஒன்றை உருவாக்குவது முக்கியம்.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

- உள, உடல், ஆத்மீக, அறிவு சார்ந்த மற்றும் நிதி கண்ணோட்டத்திலிருந்து ஊழியர் நல்வாழ்விற்காக முழுமையான அணுகுமுறைக்கு தழுவல் (உளசுகாதார தேவையின் அதிகரிப்பு, நெகிழ்வுதன்மையுள்ள வேலை மாதிரிகள், வேலை-வாழ்க்கை சமநிலை, மனஅழுத்த முகாமையிலிருந்து பாரம்பரியமற்ற நலத்திட்ட வடிவங்கள், மன ஒருங்கமைப்பு அல்லது நிதி சார்ந்த நல்வாழ்வு)
- நோய்பரவலுக்கு பின்னரான புதிய இயல்பில் அதிகரித்த தொலை தூர மற்றும் நெகிழ்வுதன்மையான வேலை ஏற்பாடுகள்
- கலாசார மற்றும் முகாமை மாற்றத்திற்கான தேவை

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- போட்டித்தன்மையான பெறுமதிகள் மற்றும் நன்மைகள் மற்றும் ஊழியர் நல்வாழ்வு திட்டங்கள் வழங்குவது மூலம் எமது பெறுமதி மையப்படுத்தலில் தொடர் முதலிடல்
- உட்சேர்த்தல் மற்றும் பல்வகைமை தொழிலாளர் வளத்தை பேணல்
- ஊழியர் ஈடுபாட்டை தூண்ட எமது ஊதியச்சட்டகத்தை தொடர் மீளாய்வு செய்தல்
- நீண்டகாலத்தில் தேவைப்படும் வளங்கள் மற்றும் திறன்களை மதிப்பிடுவதற்கும் பால்நிலை மற்றும் வயது பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தவும் ஊழியப்படை திட்டமிடல்.
- எமது கலாசாரத்தையும் ஊதியச்சட்டகத்தையும் வலுப்படுத்தல்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட ஊழியர்களுடன் செயல்திறனான ஈடுபாடு

**ஆண்டாண்டுக்கான இயக்கம்**

**இடர் வகை**

தொழிற்பாட்டு, மூலோபாயம்

**கால எல்லை**

குறுகிய - நீண்ட கால எல்லை

**பாதிக்கப்பட்ட முதலீடுகள்**

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய அக்கறைதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 401 - வேலைவாய்ப்பு - உள்ளே
- 413 - உள்ளக சமூகம் - வெளியே
- 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே
- 407 - ஒன்றுகூடல் மற்றும் ஒன்றாக பேரம்பேசல் சுதந்திரம் - உள்ளே
- 405 - பல்வகைமை மற்றும் சமவாய்ப்பு - உள்ளே
- 203 - மறைமுக பொருளாதார தாக்கம் - வெளியே

**பாதிக்கப்பட்ட SDGs**

4 QUALITY EDUCATION
5 GENDER EQUALITY
8 DECENT WORK AND ECONOMIC GROWTH
11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

பிரசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை

சமூகம்

## சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

**சூழலமைவு/விபரணம்**

உடல் உள சமூக நல்வாழ்வை உறுதிப்படுத்த ஊழியர்களுக்கு பாதுகாப்பான சுகாதாரமான தொழில் சூழலை உருவாக்கல்.

**ஏன் அது பொருண்மியமானது?**

- ஊழியர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும், தொழில் திருப்தி மற்றும் உயர் செயற்பாட்டுக்கு ஊழியர்களை ஊக்கப்படுத்தவும் பாதுகாப்பான சுகாதாரமான வேலைத்தளத்தை பேணல் முக்கியம்.
- முக்கியமாக நோய்பரவலை தொடர்ந்து வாடிக்கையாளர் தேவையை பூர்த்தி செய்ய அடிப்படை வங்கிச் சேவைகளைப் பேணல்.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

- பணியாளர்வள கிடைப்பனவு மற்றும் தொழில்திறனில் கொவிட்-19ன் தாக்கம்
- கொவிட்-19 முடக்கம் காரணமாக, சரியான தொலை தொழில் முகாமை மூலோபாயமின்மையினால், தனிமை மற்றும் முன்னிகழாத இடர்களை முகங்கொடுத்த ஊழியர்களின் மீதான தாக்கம்
- நோய்பரவலால் தாக்கமடைந்த மக்கள் பற்றிய தேவையான மதிப்பீடு குறைவு
- தொலை வேலை காரணமாக அதிகரித்த வேலை - வாழ்க்கை சமநிலை மற்றும் மன பதட்டம்

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- எமது மக்களையும் வாடிக்கையாளர்களையும் பாதுகாக்க எமது கிளைகளும் அலுவலகங்களும் பாதுகாப்பு நடைமுறைகளை இணைத்தல்
- செயலாக்கப்பட்ட புதிய பாதுகாப்பு விதிகளும் வேலை ஏற்பாடுகளும்
- கொவிட்-19 தொடர்பான அனைத்து அரச விதிகளுக்கும் இணங்குதல்.
- கிளை உட்கட்டமைப்புக்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த ஒழுங்குபடுத்தல்
- தொழில்முறைகளை மேம்படுத்த முகாமைக்கு வசதிகளை உயர்த்துதல்
- பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் சூழல் ஆளுகைகளை வலுப்படுத்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| ^ | தொழிற்பாட்டு, மூலோபாயம் | குறுகிய - நீண்ட கால எல்லை | |

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய அக்கறைதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே
- 403 - தொழில்ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - உள்ளே

**பாதிக்கப்பட்ட SDGs**

3 GOOD HEALTH AND WELL-BEING

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை

சமூகம்

## இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு

**சூழலமைவு/விபரணம்**

இணைய பாதுகாப்பில் ஏற்படும் மீறல் நமது நற்பெயருக்கும் செயல்பாடுகளை பராமரிக்கும் திறனுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

**ஏன் அது பொருண்மியமானது?**

- அதிகரித்து வரும் கணனி ஊடுருவிகளின் நுட்பங்கள், வங்கிச் சேவைகளை எண்ணியல் மயமாக்கல், மற்றும் வணிக செயல்முறைகளின் தானியங்குமயமாக்கல் ஆகியவை இணைய பாதுகாப்பிற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளன.
- வங்கிச்சேவைகளின் சீர்குலைவு, இணையத் தாக்குதலால் இரகசியத் தரவிழப்பு ஆகியவை வங்கியின் நற்பெயருக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தலாம். இதன் விளைவாக வாடிக்கையாளர் நம்பிக்கை இழப்பு மற்றும் மோசமான ஒழுங்குமுறை விளைவுகளும் ஏற்படலாம்.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

புதிய தொழிநுட்பங்களின் தோற்றம், எண்ணியல் வடிவங்களின் அதிகரித்த பயன்பாடு, தொலைதூர வேலை ஏற்பாடுகள், இணைய தாக்குதலின் நுட்பம் காரணமாக கொவிட்19 ஐத் தொடர்ந்து வங்கியின் தகவல் பாதுகாப்பு ஆபத்து ஏற்பட்டுள்ளது. மேலும் இணைய தாக்குதல்கள் நிதி அமைப்பை சீர்குலைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- எமது பாதுகாப்பு பலப்படுத்தலை தொடர்ந்து கட்டுப்படுத்தல்.
- கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு, பாதுகாப்பு உள்ளமைவு மற்றும் பாதிப்பு மேலாண்மை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துதல்.
- எமது அமைப்பின் மீளெழுச்சியை வலுப்படுத்தவும், இணையத் தாக்குதல்களின் நிகழ்தகவை குறைக்கவும், சமூகத்தில் மோசடி மற்றும் அதன் தாக்கத்தை தணிக்கவும் செயல்படுகிறோம்.
- தகவல்களின் தரம் மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய எங்கள் தரவு மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்தியமை.
- எமது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு, தடுப்பு மற்றும் பாதுகாப்பு சிறந்த நடைமுறைகளை உருவாக்குவது தொடர்கிறது.

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| | தொழிற்பாட்டு, நற்பெயா | குறுகிய - நீண்ட கால எல்லை | |

| பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள் | தொடர்புடைய அக்கறைதாரர்கள் | தொடர்புடைய GRI மற்றும் எல்லை | பாதிக்கப்பட்ட SDGs |
|---|---|---|---|
| | | • 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே<br>• 202 - ஊழல் எதிர்ப்பு - உள்ளேயும் வெளியேயும்<br>• 418 - வாடிக்கையாளர் தனியுரிமை - உள்ளே | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH |

சமூகம்

## சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறை இணக்கப்பாடு

**சூழலமைவு/விபரணம்**

முன்னெப்போதுமில்லாத விகிதத்தில் மாறிவரும் தற்போதைய ஒழுங்குமுறை பரப்பில் தொடர்புடைய மற்றும் புதிதாக உருவாகும் சட்டங்களை தொடர்ந்து வைத்திருப்பது, அதனுடன் தொடர்புடைய இடர்கள் நன்கு புரிந்து கொள்ளப்படுவதையும் வங்கியின் வணிக மாதிரியில் கட்டுப்பாடுகள் உட்பொதிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகிறது.

**ஏன் அது பொருண்மியமானது?**

பல உள்ளூர் மற்றும் சர்வதேச விதிமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய தொழில்விதிமுறைகளுக்கு நாம் இணங்க வேண்டும். சிறந்த நிர்வாகம் மற்றும் இணக்கம் எமது வணிக நற்பெயர் மற்றும் செயல்படுவதற்கான உரிமத்தின் மையமாகும். எவ்வாறாயினும் ஒழுங்குமுறை மற்றும் கொள்கை மேம்பாடுகள் எமது சந்தைகளில் ஒரு சவாலாகவே இருக்கிறது. எனவே ஒழுங்குவிதிமுறை பரப்பு முன்னெப்போதுமில்லாத வேகத்தில் பெருகிய முறையில் கடுமையான தேவைகளுடன் தொடர்ந்து உருவாகி வருகிறது.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

- ஒழுங்குவிதிமுறை சூழலில் விரைவான மாற்றங்கள் செயற்பாட்டு செலவை பாதிக்கின்றன.
- கொவிட்-19 ஐ தொடர்ந்து சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறை இணக்கப்பாட்டு தேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன
- இணங்காமை நிதி மற்றும் நிதி அல்லாத தடைகளுக்கு வழிவகுக்கும். இது தொடர்ந்தியங்கும் விடயமாக எமது நிலைத்தன்மையை பாதிக்கும்.
- பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கத் தவறினால் நற்பெயருக்கு சேதம், நிதி அபராதம் மற்றும் அல்லது செயற்படுவதற்கான எங்கள் உரிமம் இடைநிறுத்தப்படும்.

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- ஒரு வலுவான நிர்வாகச் செயன்முறை மற்றும் வங்கி முழுவதும் ஒழுங்கு விதிமுறை இணக்கத்தின் வலுவான மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்தது
- இணக்கப்பாட்டிற்கான மேற்பார்வை வழங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இடர் மேலாண்மை மற்றும் இணக்கத்துறைகள்
- அரசு மற்றும் ஒழுங்குமுறை கட்டுப்பாட்டாளர்களுடன் செயலூக்கமான உறவுகளைப் பேணல்
- அழைப்பின் மூலம் இணக்கப்பாட்டு மன்றங்களில் பங்கேற்றல்
- நியமிக்கப்பட்ட சட்டக்குழுக்கள் மற்றும் வலுவான இணக்கக்கட்டமைப்பு
- இணங்குதல் மற்றும் நெறிமுறைக் கலாசாரத்தின் பகுதிகள் குறித்து ஊழியர்களுக்கு கற்பிப்பதற்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- கொவிட்-19 தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிமுறைகள் இணக்கப்பாடு தேவைகளை தொடர்ந்து கண்காணித்தல்

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
| ▲ | தொழிற்பாட்டு, நற்பெயர் | குறுகிய - நீண்ட கால எல்லை | |

| பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள் | தொடர்புடைய அக்கறைதாரர்கள் | தொடர்புடைய GRI மற்றும் எல்லை | பாதிக்கப்பட்ட SDGs |
|---|---|---|---|
| | | • 404 - பயிற்சி மற்றும் அறிவூட்டல் - உள்ளே | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS |

**பொருளாதாரம்**

## நிதிசார் குற்றங்கள்

### சூழலமைவு/விபரணம்

நிதிசார் குற்றங்களை எதிர்த்தல் (லஞ்சம், ஊழல், மோசடி, பணமோசடி எதிர்ப்பு, தீவிரவாதத்திற்கு நிதியுதவி) மற்றும் நிதி அமைப்பின் நியாயத்தன்மையை பாதுகாதுகாத்தலில் வங்கிகள் முக்கிய பங்குகள் வகிக்கின்றன.

### ஏன் அது பொருண்மியமானது?

நிதிக்குற்றங்களை கண்டறிய அல்லது தடுக்கத் தவறினால் அது எமது வாடிக்கையாளர் அல்லது சமூகத்தின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் அதே நேரத்தில் பொருள் அபராதம், தண்டப்பணம் விதிக்கப்படும். நிதி உதவி கிடைப்பதாலும் இலகுவில் தாக்கமடையக்கூடிய பிரிவுகள் மற்றும் வணிகங்களின் அதிகரிப்பாலும் நிதிசார் குற்றங்களின் ஆபத்து அதிகரித்துள்ளன.

### அதிகரிப்புக்கான காரணங்கள்

- தொழிற்பாடு மேம்பாடுகளில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள்
- எண்ணியல் குற்றங்கள்

### எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை

- விரிவான நிதிசார் குற்றக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.
- மேம்படுத்தப்பட்ட பரிவர்த்தனை கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் நிதிக்குற்றங்களைக் கண்டறியும் செயல்முறைகள் உட்பட புதிய தொழிநுட்பத்தில் முதலீடு.
- முக்கிய அமைப்புக்கள் மூலம் வாடிக்கையாளர் தரவு ஒருமைப்பாட்டை மேம்படுத்த செயல்முறைகளை நிறுவுதல்.
- லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் தரநிலைகளின் திருத்தம், புதிய நுட்பங்களை உருவாக்குதலும் அமுல்படுத்தலும்.
- சிறப்பு நிதிசார் குற்ற இணைக்கக்குழுவை மேம்படுத்தியது மற்றும் நிதிசார் குற்றங்கள் தொடர்பான கல்வி மற்றும் பணியாளர் பயிற்சியை வலுப்படுத்தியது.

| ஆண்டாண்டுக்கான இயக்கம் | இடர் வகை | கால எல்லை | பாதிக்கப்பட்ட முதலீடுகள் |
|---|---|---|---|
|  | தொழிற்பாட்டு, நற்பெயர் சந்தை | குறுகிய - நீண்ட கால எல்லை |  |

| பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள் | தொடர்புடைய பங்குதாரர்கள் | தொடர்புடைய GRI மற்றும் எல்லை | பாதிக்கப்பட்ட SDGs |
|---|---|---|---|
|  |  | • 205 - ஊழல் எதிர்ப்பு - உள்ளேயும் வெளியே<br>• 206 - போட்டித் தன்மைக்கு எதிரான நடத்தை - உள்ளேயும் வெளியே |  |

சுற்றுச்சூழல்

## சுற்றுச்சூழல் மீள்தன்மை

**சூழலமைவு/விபரணம்**

சுற்றுச்சூழல் இடையூறுகளை தடுப்பதன் மூலமும் நீண்டகால நிலைபேறான மதிப்புருவாக்கத்தை உறுதி செய்வதற்காக எமது கோளை பாதுகாப்பதன் மூலமும் குறைந்த காபன் பொருளாதாரத்தை நோக்கிய பங்களிப்பு.

**ஏன் அது பொருண்மியமானது?**

கோளைப் பாதுகாத்தலும் எமது அன்றாட நடவடிக்கைகளில் அக்கறைதாரர்களுக்கு சாதகமான நீண்டகால விளைவுகளை உருவாக்குவது வங்கியின் நீண்டகால நிலைத்தன்மைக்கு இன்றியமையாததாகும். காலநிலை மாற்றத்தின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மற்றும் நீடித்த தாக்கங்கள் நமது சுற்றுச்சூழல் மீதான பாதிப்பைக் குறைப்பதற்கும் நமது எதிர்கால தொழிற்பாட்டு மாதிரியின் பொருத்தத்தை உறுதி செய்வதற்கும் அழுத்தம் கொடுக்கிறது. ஏனெனில் வாடிக்கையாளர்கள் தங்கள் காபன் தாக்கத்தை குறைப்பதை நோக்கி நகர்கின்றனர்.

**அதிகரிப்புக்கான காரணங்கள்**

சுற்றுச்சூழல் சவால்கள், உடைமைகளுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிப்பதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கும் எமது வணிகத்திற்கும் நிதி அபாயங்களை ஏற்படுத்துகின்றன. பிணையங்கள் அல்லது முதலீடுகள் உட்பட வங்கியின் சொத்துக்கள் பௌதீகரீதியான சேதம் அல்லது கொள்கை அல்லது சமூக எதிர்பார்ப்புக்களுடன் இணங்காததன் காரணமாக பாதிக்கப்படலாம். குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாறுவது வங்கிக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்குகிறது.

**எமது எதிர்கொள்ளல்/அணுகுமுறை**

- சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைச் சிக்கல்களை கருத்திற்கொண்டு கொள்கைக் கட்டமைப்பை செயற்படுத்தியது
- எமது உரிய விழிப்புக் கவனச் செயன்முறைகளை வலுப்படுத்தல், எமது தயாரிப்பு வகைகளை மதிப்பிடல், குறைந்த காபன் பொருளாதார மாற்றத்தை ஆதரிக்க உள்ளக மற்றும் வாடிக்கையாளர் இயலுமையை கட்டியெழுப்பல் மூலம் காலநிலை மாற்றத்திற்கு மூலோபாய எதிர்கொள்ளலை உருவாக்குதல்
- பசுமைத் தொழிநுட்பத்தில் முதலிட வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் கருத்துக்களை புரிந்து கொள்வதற்கான தொடர்ச்சியான ஈடுபாடு
- நீர், வலு மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் எமது வளங்களின் விவேகமான முகாமைத்துவம்
- அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலைத்தன்மை மேம்பாட்டு இலக்குகளுடன் நமது நோக்கங்களை சீரமைத்தல்

**ஆண்டாண்டுக்கான இயக்கம்**

**இடர் வகை**

மூலோபாய, தொழிற்பாட்டு, நற்பெயர்

**கால எல்லை**

குறுகிய - நீண்ட கால எல்லை

**பாதிக்கப்பட்ட முதலீடுகள்**

**பாதிக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர கால மூலோபாய முன்னுரிமைகள்**

**தொடர்புடைய பங்குதாரர்கள்**

**தொடர்புடைய GRI மற்றும் எல்லை**

- 302 - வலு - உள்ளேயும் வெளியேயும்
- 303 - நீர் - உள்ளேயும் வெளியேயும்
- 203 - மறைமுக பொருளாதார தாக்கங்கள் - வெளியே

**பாதிக்கப்பட்ட SDGs**

6 CLEAN WATER AND SANITATION
7 AFFORDABLE AND CLEAN ENERGY
12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION
13 CLIMATE ACTION
14 LIFE BELOW WATER
15 LIFE ON LAND
17 PARTNERSHIPS FOR THE GOALS

# → முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு


நிதியியல் மூலதனம் – **96**

வணிக வரிசைகளின் மீளாய்வு – **114**

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் – **120**

புலமைசார் மூலதனம் – **128**

மனித மூலதனம் – **136**

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் – **154**

இயற்கை மூலதனம் – **170**

நிறுவன ஆளுகைக் கூற்று – **177**

இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான கூற்று – **178**

# நிதியியல் மூலதனம்



## இதனுள் உள்ளடங்குபவை எவை

“மூலதனம்” அல்லது “உரிமையாண்மை” என்றும் அறியப்படும், நிதி மூலதனம் என்பது பணம், கடன் மற்றும் பிற வகையான நிதிகளின் அடிப்படையில் அளவிடப்படும் ஒரு வணிகத்தின் செல்வத்தை உருவாக்கும் மற்றும் அக்கறைதாரர்களுக்கு பெறுமதியை உருவாக்கும் ஒரு பொருளாதார வளமாகும்.

## நிதி மூலதனத்தின் மூலம் பெறுமதியை உருவாக்குதல்

### எமது அணுகுமுறை

எங்கள் நிதி மூலதனத்தை நாங்கள் நிர்வகிக்கும் மற்றும் பயன்படுத்தும் விதம், எங்கள் அக்கறையுள்ள தரப்பினருக்கு நிலையான பெறுமதியை திறனுக்கு அடிப்படையானது என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, செலவு குறைந்த, ஆனால் நிலையான மற்றும் பொறுப்பான நிதியுதவியைப் பார்க்கும் நிதிக் கொள்கைகள் எங்கள் வெற்றிக்கு முக்கியமாக இருப்பதால் நாங்கள் அவற்றினால் வழிநடத்தப்படுகிறோம்.

எம்மிடம் பல்வேறு வருமான வழிமுறைகள் காணப்படுவதுடன், இறுக்கமான செலவு முகாமை மற்றும் மேம்படுத்தல்களைப் பின்பற்றி வினைத்திறன் மிக்க கட்டமைக்கப்பட்ட நிதியிடலை நிலை நிறுத்துகிறோம், இடருக்கு சமமான அல்லது அதிகமாக இருக்கும் சொத்து வருமானத்தை இலக்கு வைத்து, கடன் மதிப்பீட்டைப் பராமரிப்பது, இதனுடன் எங்களின் சிறந்த முக்கிய பெறுபேற்றுக் குறிகாட்டிகள் மற்றும் நமது மொத்த மூலதனச் செலவை திறம்பட நிர்வகிக்கும் திறனும் சேர்க்கப்பட்டுள்ளது. இது நமது நிலைத்தன்மை மற்றும் விநியோகிக்கக்கூடிய வருமானம் ஈட்டும் சொத்துத் தளத்தை விரிவுபடுத்தும் திறனுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கிறது.

இந்த செயன்முறைகள் எங்களால் கடன்களை வழங்கவும், எங்கள் திட்டங்களுக்கு நிதியளிக்கவும், உற்பத்தி செய்யப்பட்ட சொத்துக்களை உருவாக்கவும் /பெறவும், பயிற்சி மற்றும் தொழிநுட்பத்தில் முதலீடு செய்யவும் மற்றும் சமூகத்திற்கு திரும்ப வழங்கவும் முடியும் என்பதை உறுதி செய்கிறது.

### முக்கிய உள்ளீடுகள்

- காசு மற்றும் காசுக்கு சமமானவை
- பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்
- வாடிக்கையாளர்களிடம் இருந்தான வைப்புக்கள்
- நீண்ட மற்றும் குறுகிய கால கடன்படுகை

### முக்கிய வெளியீடுகள்

- வரிக்கு முன்னான தொழிற்பாட்டு இலாபம்
- வரிக்குப் பின் இலாபம்
- மூலதனம்
- மூலதன இணைப்பு
- மூலதன முதலீடு
- பங்கு இலாப செலுத்துகை
- அரசாங்கத்திற்கான பங்களிப்பு

### பெறுமதியை மேம்படுத்துவதற்கான தந்திரோபாய முன்னுரிமைகள்

- தந்திரோபாய முன்னுரிமைகளால் தீர்மானிக்கப்படும் நிதிசார் தந்திரோபாயம்
- நிதி முடிவுகளை அளிக்கும் போது சமூக மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை கருத்தில் கொள்ளும் மூலதன முதலீடுகள்
- நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வலிமையை பராமரித்தல்



## தேசிய சேமிப்பு வங்கியில் நிதி மூதனம் என்பதன் கருத்து

தேசிய சேமிப்பு வங்கியில், எங்கள் நிதி மூலதனமானது பொதுத் திறைசேரியினால் (GOSL) பங்களிக்கப்பட்ட பண வளங்கள் மற்றும் எங்கள் வணிகச் செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்படும் நிதிகளால் கட்டமைக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வங்கிக்கு இருக்கும் நீண்ட கால நிதிகளை இது உள்ளடக்கி இருப்பதுடன் உரிமையாண்மை நிதியிடல், நிறுத்தி வைத்த உழைப்புக்கள் மற்றும் தகமை பெறும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் கடன் ஆகியவற்றை உள்ளடக்கும். நமது வங்கிச் செயற்பாடுகளின் அளவு நமது நிதி மூலதனத்தின் அளவைப் பொறுத்தது என்பதால், நமது நிதி மூலதனத்தை முகாமை செய்தலை ஒரு முக்கிய பொறுப்பாகப் பார்க்கிறோம்.

### உருவாக்கப்பட்ட பெறுமதி

பின்வருவனவோருக்கான நிதிசார் வருமானம்:

- வங்கியின் பங்குதாரர் மூலதன வழங்குநர்கள்
- பொருளாதாரப் பெறுமதி உருவாக்கப்பட்டது:
  - பரந்துபட்ட அக்கறையுள்ள தரப்பினர்
  - இலங்கைப் பொருளாதாரம்

### 2021 இன் முக்கிய சவால்கள்

- தனியார் துறைக்கான கடன் வளர்ச்சியில் மந்தநிலை
- பொருளாதார மந்தநிலை
- மூலதனத்தின் மீதான ஒழுங்கு விதிமுறை அழுத்தங்கள்
- அரச பத்திரங்களில் கட்டாய முதலீடு மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்களை வழங்குவதன் மூலம் உருவாக்கப்படும் வருமானத்திற்கு இடையே அதிக விலகல்கள்
- வளர்ந்து வரும் குறைந்த விரய நிதியிடல்
- அதிகரித்த வரிகள்

### 2021 இன் முக்கிய வாய்ப்புக்கள்

**பணக் கொள்கைகள் பின்வருவனவற்றில் இலக்கு வைக்கப்படுகின்றன:**

நிதியிடல் செலவுகளை குறைத்தல்

கடன் வளர்ச்சியைத் தூண்டுதல்

இலாபத் தன்மையை மேம்படுத்துதல்

**பொருண்மை மிக்க விடயங்கள்**

**தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்**

**குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**

## பெறுபேற்று அட்டை

### தந்திரோபாயப் பெறுபேறுகள்

| வட்டிவருமான வளர்ச்சி | வட்டி வருமானம் | வருமான - கிரய விகிதம் |
|---|---|---|
| ↑ 7.3% | ↑ ரூ. 131.4 பில். | ↑ 33.29% |
| 2020 – 3.1% | 2020 – ரூ. 122.5 பில். | 2020 – 39.28% |

### பங்குதாரர்களுக்கான பெறுமதி

| உரிமையாண்மை மீதான திரும்பல் | பங்கு ஒன்றுக்கான பங்கு இலாபம் |
|---|---|
| ↑ 33.92% | ↑ ரூ. 3.72 |
| 2020 – 20.15% | 2020 – ரூ. 1.06 |

### வைப்புக்கள் மற்றும் கடன்களிலான வளர்ச்சி

| கடன்கள் மற்றும் முற்பணங்கள் (நிகர அதிகரிப்பு) | திரட்டப்பட்ட வைப்புக்கள் |
|---|---|
| ↓ ரூ. 22.1 பில். | ↓ ரூ. 192.6 பில். |
| 2020 – ரூ. 62.4 பில். | 2020 – ரூ. 221.9 பில். |

### அதிகரிக்கப்பட்ட இடர்ப் பரப்பு

| ஏற்பாடு உள்ளடக்கல் விகிதம் (மட்டம் 3) | தொழிற்படாக் கடன் விகிதம் |
|---|---|
| ↑ 32% | ↑ 2.97% |
| 2020 – 30.38% | 2020 – 2.79% |

### பலமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை

| மொத்த மூலதன போதுமை விகிதம் | திரவக் காப்பு விகிதம் - அனைத்து நாணயம் |
|---|---|
| ↑ 20.83% | ↓ 240.43% |
| 2020 – 16.45% | 2020 – 307.22% |

## ஏனைய மூலதனங்களுக்கான இணைப்பு

பயிற்சியளித்தல் மற்றும் மேம்பாடுகளில் முதலீடு செய்வது ஊழியர் திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கிறது

வர்த்தக நாம விம்பம் மற்றும் ஊழியர் திறன்களை மேம்படுத்துவதற்கான நிதி முயற்சிகள் வலுவான புலமைசார் மூலதனத்தை உருவாக்குகிறது

கூட்டு வணிக சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளை ஆதரிப்பது வங்கிக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் அதே நேரத்தில் பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வது வலுவான வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குவதுடன் வினைத்திறன் மிக்க வழங்குனர் வலையமைப்புக்களை செயற்படுத்துகிறது.

பேண்தகைமைக்கான முன்முயற்சிகளுக்கு நிதி ரீதியாக ஆதரவளிப்பது வங்கியின் கார்பன் தடத்தைக் குறைக்கிறது

எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்புக்கான முதலீடுகள் வங்கியின் சொத்துத் தளத்தை பலப்படுத்துகிறது

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

சமூகத்தில் பொருளாதார மேம்பாடு மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை கொண்டு வரும் கல்வி மற்றும் சம வாய்ப்புகளை ஊழியர்களுக்கு வழங்க பயிற்சி மற்றும் மேம்பாடுகளில் முதலீடு செய்தல்

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

10 REDUCED INEQUALITIES

எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு ஆகிய இரண்டிற்கும் நிதியளிப்பதன் மூலம் தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் புதுமைகளை ஆதரித்தல்.

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE

## வர்த்தக விட்டுக்கொடுப்புக்கள்

| | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான மூலதன முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| செலவிடப்பட்ட முதலீடு | ✓ | ▲ | ▲ | ⊖ | ⊖ | ✓ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ⊖ | ▲ | ▲ | ⊖ | ▲ | ▲ |
| புதிய உபகரணங்கள் மற்றும் முறைமைகள் | ✓ | ▲ | ▲ | ⊖ | ⊖ | ✓ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ⊖ | ▲ | ▲ | | | |
| எண்ணியல் முயற்சிகளில் பயன்படுத்தப்படும் கழிவு/ இயற்கை வளங்கள் | | | | | | | | | | | | | | | | ✓ | ▲ | ▲ |
| வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சேவை திருப்தி | | | | | | | | | | | | | ⊖ | ▲ | ▲ | | | |
| **ஆளணிசார் செலவுகளின் மீதான முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| செலவிடப்பட்ட முதலீடு | ✓ | ⊖ | ⊖ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | | |
| ஊழியர் திறன் குழு | ✓ | ⊖ | ⊖ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | | |
| ஊழியர் ஈடுபாடு மற்றும் விசுவாசம் | | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| **திறன் மேம்பாட்டின் மீதான முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| செலவிடப்பட்ட முதலீடு | ✓ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | | |
| மனித உற்பத்தித் திறன் | ✓ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | ▲ | ▲ | | | |
| அதிக வலுவளிக்கப்பட்ட மற்றும் வினைத்திறன் மிக்க நபர்கள் | ✓ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | | |
| உற்பத்திகள் மற்றும் சேவைகளில் புதுமை மற்றும் வேலை செய்யும் வழிகள் | ✓ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | ▲ | ▲ | | | |
| **சமூக விருத்தித் திட்டங்களில் முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| செலவிடப்பட்ட முதலீடு | ✓ | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| சமூக வளர்ச்சி மற்றும் நற்பெயர் நன்மதிப்பு | ✓ | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| சுற்றுச்சூழலில் நேர்க்கணியத் தாக்கம் | | | | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ |

கு குறுகிய காலம் ம மத்திய காலம் நீ நீண்ட காலம் ▲ பெறுமதி உயர்வு ✓ பெறுமதிக் குறைவு ⊖ பெறுமதிப் பாதுகாப்பு

## பெறுமதி உருவாக்க இயக்கிகள் (பெ.உ.இ)

உரு 11




## உருவாக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி GRI 201-1

அட்டவணை 5

| | 2021 ரூபா. மில் | 2020 ரூபா. மில் |
|---|---|---|
| **உருவாக்கப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி:** | **134,939** | 127,547 |
| தொழிற்பாட்டு செலவினம் | **10,297** | 10,207 |
| வைப்பாளர்கள் | **76,809** | 87,622 |
| ஊழியர்கள் | **12,970** | 9,967 |
| மூலதன வழங்குனர்கள் | **3,500** | 1,000 |
| அரசு (பங்கு இலாபங்கள் தவிர) | **12,965** | 9,745 |
| **நிறுத்தி வைக்கப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி** | **18,398** | 9,007 |
| **பகிரப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி** | **116,541** | 118,540 |

## சுருக்கமான வருமானக் கூற்று

அட்டவணை 6

| | 2021 ரூபா. மில் | 2020 ரூபா. மில் | 2019 ரூபா. மில் | (2021 எதிர் 2020) ஆண்டுக்காண்டு மாற்ற வீதம் |
|---|---|---|---|---|
| A நிகர வட்டி வருமானம் | **54,629.6** | 34,890.2 | 28,832.0 | 56.6 |
| B நிகர வட்டியல்லா வருமானம் | **3,293.5** | 4,880.5 | 3,067.3 | (32.5) |
| மொத்த தொழிற்பாட்டு வருமானம் | **57,923.1** | 39,770.7 | 31,899.3 | 45.6 |
| C சேத இழப்புக் கட்டணங்கள் | **4,304.4** | 4,873.8 | 565.5 | (11.7) |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | **53,618.6** | 34,896.9 | 31,333.8 | 53.6 |
| D நிகர தொழிற்பாட்டு வருமானம் | **19,074.9** | 15,465.6 | 15,674.9 | 23.3 |
| தொழிற்பாட்டு இலாபம் | **34,543.8** | 19,431.3 | 15,658.9 | 77.8 |
| E நிதிச் சேவைகள் மீதான வரி | **6,162.4** | 3,786.7 | 5,197.2 | 62.7 |
| F வருமான வரிக்கு முன் இலாபம் | **28,381.4** | 15,644.6 | 10,461.6 | 81.4 |
| வருமான வரிச் செலவினம் | **6,261.8** | 5,536.7 | 4,080.5 | 13.1 |
| F ஆண்டுக்கான இலாபம் | **22,119.6** | 10,107.9 | 6,381.2 | 118.8 |

## A. ஸ்திரமான நிகர வட்டி வருமான வளர்ச்சி (பெ.உ.இ 1)

2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 122.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில், வட்டி வருமானம் 7.3% அதிகரித்து ரூபா 131.4 பில்லியனாக 2021 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் கடன்கள் மற்றும் முன்பணங்களின் வட்டி வருமானம் 6.8% இனால் சரிந்த போதிலும், கடன் மற்றும் அரச பத்திரங்கள், கடன் பத்திரங்கள் மற்றும் கூட்டுவணிகக் கடன் சாதனங்கள் போன்ற பிற சாதனங்களின் மீதான முதலீடு 17.0% அதிகரித்தது. வாடிக்கையாளர் வைப்புத் தொகை ஆண்டில் 15.5% அதிகரித்த போதிலும், வட்டிச் செலவுகள் 2020 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 87.6 பில்லியனுக்கு எதிராக 12.3% குறைந்து ரூ. 76.8 பில்லியனாக மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் அறிக்கையிடப்பட்டது. இது முக்கியமாக நிலவிய குறைந்த வட்டி வீத ஒழுங்குமுறை, குறைந்த கடன் அளவுகள் மற்றும் ரூ. 6.0 பில்லியன் கடன் பத்திரத்தின் மீட்பு ஆகியவற்றால் ஏற்பட்டதாகும்.

வட்டி வருமானத்தின் அதிகரிப்பு மற்றும் வட்டிச் செலவினங்களின் குறைப்பு ஆகியவற்றின் விளைவாக நிகரவட்டி வருமானம் 56.6% ஆல் கணிசமாக அதிகரித்தது. 2020 இல் பதிவாகியுள்ள ரூபா. 34.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 இல் ரூபா. 54.6 பில்லியனாக பதிவாகியுள்ளது. ரூபா. 1510.0 பில்லியன் பெறுமதியுடைய வட்டி உழைக்கும் சொத்துக்களில் 15.4% வளர்ச்சி காணப்பட்டமையுடன் நிகரவட்டி வருமானத்திலேற்பட்ட வழக்கத்துக்கு மாறான அதிகரிப்பினால் நிகரவட்டி எல்லையானது (சராசரி மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக நிகரவட்டி வருமானம்) 2020 இல் அறிக்கையிடப்பட்ட 2.77%இற்கு எதிராக 2021 இன் முடிவில் 3.71% ஆக மேம்பட்டிருந்தது.

வரைபு 7

**நிகர வட்டி வருமானம் மற்றும் நிகர வட்டி எல்லை**




### கடன் தமாதக் காலம் மற்றும் ஒத்திவைப்பின் தாக்கம்

சலுகைகளை நிராகரித்த வாடிக்கையாளர்களைத் தவிர மற்ற அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வங்கி கடன் தாமதம் மற்றும் தவணைக் கட்டண ஒத்திவைப்பை வழங்கியது. இக் கடன் தாமதம் பின்வருமாறு வழங்கப்பட்டது:

- 7.0% சலுகை விகிதம்
- தாமதக் காலம் இரண்டு மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை மாறுபடும்
- வாடிக்கையாளர்களிடமிருந்து ஒத்திவைக்கப்பட்ட வட்டி வரவுகள் கடன் காலத்தின் முடிவில் சேகரிக்கப்படும்
- மிகக் குறைந்த சூழ்நிலையில், ஆறு மாதங்களுக்கு மேல் நீட்டிக்கப்பட்டுள்ளது

2020 ஆம் ஆண்டில் ஒப்பந்த விகிதத்தில் வட்டி வசூலிக்கப்பட்டிருந்தால் வங்கிக்கு ரூ. 4.8 பில்லியனை உழைத்திருக்க முடியும், ஆனால் 7% சலுகை வீதத்தில் கடன் தவணையின் முடிவில் வசூல் செய்வதற்கான ஒப்பந்தத்தினால் ரூபா 2.6 பில்லியன் வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் பெறப்பட்டது. அதன்படி, 2020 இல் வங்கி மேலும் வட்டி வருமானத்தின் மீதான நாள் ஒன்றுக்கான நட்டமாக ரூபா 1.4 பில்லியனை சந்தித்தது. மொத்தத்தில், மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கடன் தாமதக் காலம் காரணமாக வங்கி ரூபா 3.6 பில்லியனை மொத்த நட்டமாக ஏற்றுக்கொண்டது.

2021 ஆம் ஆண்டில், வங்கி பிற்போடப்பட்ட நாள் ஒன்றுக்கான நட்டமாகிய ரூபா 1,391 மில்லியனிலிருந்து ரூபா 288.4 மில்லியன் வட்டி வருமானத்தை இனங்கண்டதுடன், 31 டிசம்பர் 2021 நிலவரப்படி பிற்போடப்பட்ட நாள் ஒன்றுக்கான நட்டமாக ரூபா 288.4 மில்லியன் பதிவுசெய்யப்பட்டது. இந்த வேறுபாடு, கால வேறுபாடுகள் மற்றும் வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே பணம் செலுத்தியமை ஆகியவற்றால் ஏற்பட்டதாகும்.

| புறநோக்கு | முக்கிய இடர்கள் |
|---|---|
| பணவீக்க அழுத்தங்களை எதிர்த்துப் போராட மத்திய வங்கி வட்டி வீதங்களை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், வட்டி வருவாயை விட அதிக அளவில் அதிகரித்து வரும் வட்டிச் செலவின் விளைவு காரணமாக நிகர வட்டி எல்லை சுருக்கத்தைக் காணலாம். | வைப்புக்களுடன் ஒப்பிடும்போது குறைந்த வேகத்தில் கடன் மற்றும் அரச பத்திரங்களின் சேர்க்கையை மீள் விலை நிர்ணயம் செய்வதால் வட்டி வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது வட்டிச் செலவு அதிக அளவில் அதிகரிக்கிறது.<br><br>குறைக்கப்பட்ட நிகர வட்டி எல்லையானது ஒட்டுமொத்த மூலதனப் போதுகை விகிதம் மற்றும் முதலீடுகள் மற்றும் விரிவாக்கங்களுக்கான உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மூலதனத்தின் மீது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தலாம். |

## B. வட்டி அல்லாத வருமானத்தில் குறைப்பு (பெ.உ.இ II)

வட்டி அல்லாத வருமானம் என்பது நிகர கட்டணம் மற்றும் தரகு அடிப்படையிலான வருமானம், வர்த்தக நடவடிக்கைகளின் நிகர ஆதாயம் அல்லது இழப்பு, நிதி முதலீடுகளில் நியாயமான மதிப்பு மாற்றங்களால் ஏற்படும் நிகர இலாபம் அல்லது இழப்பு, சொத்து, பொறிகள் விற்பனையால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் போன்ற ஏனைய தொழிற்பாட்டு வருமானம், மாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பங்கு இலாப வருமானம் ஆகியவற்றால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் இழப்புகள் ஆகியன உள்ளடங்கலானதாகும்.

புதிய கடன்களை வழங்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள கடன்களை முன்கூட்டியே தீர்த்து வைப்பதன் விளைவாக, அட்டைகளை வழங்குவதில் விரைவான வளர்ச்சி மற்றும் அட்டைகளைப் பயன்படுத்தும் அதிகரித்த பரிவர்த்தனைகள், நிகர கட்டணம் மற்றும் தரகு அடிப்படையிலான வருமானம் 11.2% உயர்ந்து 2020 இன் ரூபா 2.6 பில்லியனுக்கு எதிராக 2021 இல் ரூபா 2.8 பில்லியனாக அறிக்கையிடப்பட்டது.

மறுபுறம், சந்தையிலேற்பட்ட விலைமாற்றங்களினால் வர்த்தகத் தொகுதியில் இருந்தான இலாபம்/நட்டங்கள், 2020 இல் பதிவாகியிருந்த ரூபா. 1.3 பில்லயன் இலாபத்திற்கெதிராக ரூபா. 96.2 மில்லியன் நட்டத்தினைப் பதிவு செய்தது. இது நிலையான வருமானம் தரும் பிணையங்களின் விலையில் வீழ்ச்சிக்கு வழிவகுத்த வட்டி வீதங்களின் உயர்வினால் அடையப்பட்டது. கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா. 578 மில்லியன் இலாபத்திற்கெதிராக ரூபா. 900 மில்லியன் நட்டத்தினை பதிவு செய்த நிலையான வருமானம் தரும் பிணையங்களே வர்த்தகத் தொகுதியின் நட்டத்திற்கு பாரியளவில் பங்களித்திருந்தது.

அந்நியச் செலாவணியின் மறுமதிப்பீடு மற்றும் பங்கு இலாபத்தொகை வருமானத்தில் ஏற்பட்ட சரிவு ஆகியவை நிகர இதர தொழிற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட 36% சரிவுக்கு முக்கியக் காரணங்களாகும்.

வரைபு 8

**வட்டியல்லா வருமானத்தின் பகுப்பாய்வு**




A தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்

B வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)

C – நிதியியல் சொத்துகளின் இனங்காண-மையிலிருந்து இலாபங்கள்/(நட்டங்கள்)

D – தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

**புறநோக்கு**

பலவீனமான பேரினப் பொருளாதாரக் கண்ணோட்டம் காரணமாக, வட்டி அல்லாத வருமானம் குறைவாகவும் குறைந்த விகிதத்தில் வளரவும் வாய்ப்புள்ளது.

**முக்கிய இடர்கள்**

குறைந்த வணிக நம்பிக்கை, குறைந்த செலவிடத்தக்க வருமானம், நாணய மாற்றுவீதத் தேய்வு, அதிக பணவீக்கம், கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிப்பு, கட்டுமானத் துறையின் வீழ்ச்சி, வட்டி வீத அதிகரிப்பு மற்றும் புதிய கடன்படுகைகளின் தாக்கம், குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆகியன வங்கித் துறையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது

மேலும் விவரங்களுக்கு “தொழிற்பாட்டு சூழல்” பக்கங்கள் 26 முதல் 37 வரை பார்வையிடுக.

## C. குறைவான சேத இழப்பு (பெ.உ.இ III)

கடன் புத்தகத்தின் தரத்தில் உள்ள அழுத்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தொழிற்படா முற்பணங்கள் (மொத்தக் கடன்களுக்கான தொழிற்படா முற்பணங்கள்) விகிதம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 2.79% ஆக இருந்ததுடன், இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 18 அடிப்படைப் புள்ளிகளால் 2.97% ஆக சிதைவடைந்துள்ளது. இது கூட்டுவணிகக் கடன் சேர்க்கையில் தொழிற்படாக் கடன்களின் அதிகரிப்பு போன்ற முக்கிய குறிப்பிடத்தக்க காரணங்களால் ஏற்பட்டது ஆகும். இதற்கிடையில், கடன் ஒப்புதல் செயன்முறை மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் காரணமாக சில்லறைக் கடன் வழங்கும் உற்பத்திகளின் தொழிற்படாக் கடன் விகிதம் குறைந்துள்ளது.

சேத இழப்புக் கட்டணத்தை கணக்கிடும் போது, 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெருநிறுவன மற்றும் சில்லறை கடன் வழங்குதல் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட உயர் ஒதுக்கீட்டை கருத்தில் கொண்டு 2021 இல் வங்கி மிகவும் விவேகமான அணுகுமுறையை பின்பற்றியது. கொவிட்-19 இலிருந்து எழுந்த நிச்சயமற்ற தன்மையினால் தூண்டப்பட்டு கடன் தரத்தில் பாதகமான தாக்கங்கள் எதிர்பார்க்கப்படும் நிலையில் 2019 இல் அறிவிக்கப்பட்ட மதிப்பை விட மொத்த தொழிற்படா சேர்க்கை 101.4% உயர்ந்துள்ளது. எனினும் 2020 இல் அறிக்கையிடப்பட்ட பெறுமதிக்கெதிராக தொழிற்படாக் கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சி ரூபா. 1.75 பில்லியன் (12.4%) ஆக காணப்பட்டமையால், வங்கியானது 2020 இல் அதிகளவில் செய்ததைப் போல. சேதமிழப்புக்கான ஏற்பாட்டை நடப்புக் காலப்பகுதியில் அதிகரித்திருக்க தேவையேற்படவில்லை.

இதன் விளைவாக, ஆண்டுக்கான சேத இழப்புக் கட்டணங்கள் 11.7% குறைந்து கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4.9 பில்லியனுக்கு எதிராக, 2021 இல் ரூபா 4.3 பில்லினாகப் பதிவு செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், வங்கி அங்கீகரிக்கப்பட்ட ரூ. 3 பில்லியனையும் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு எதிராக ரூபா 1.3 பில்லியன் தொகையையும் ஏற்பாடாகப் பதிவு செய்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் நிலவும் மந்தமான பொருளாதார நிலைமைகளின் தாக்கத்தைக் கைப்பற்றுவதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்படுவதை உறுதிசெய்யும் நோக்கில், 2020 இல் 38.6% ஆக இருந்த விசேட மற்றும் பொதுவான ஏற்பாடுகள் உட்பட - ஒதுக்கீட்டு உள்ளடக்கல் விகிதம் 2021 இல் 46.9% ஆக உயர்ந்தது. 2020 இல் அறிக்கையிடப்பட்ட 61.3% இல் இருந்து வங்கித் துறையின் விகிதமானது 75.7%ஆக அதிகரித்துள்ளது. மட்டம் 3 கடன் வெளிப்பாட்டிற்கு எதிரான மட்டம் 3 சேத இழப்புக் கட்டணமாகிய மட்டம் 3 ஏற்பாட்டு உள்ளடக்கல் விகிதம், 2020 ஆம் ஆண்டில் 30.4% இல் இருந்து 32.0% ஆக அதிகரித்துள்ளது.

வரைபு 9

**ஏற்பாடுகள் காப்பு**




**புறநோக்கு**

உலகளாவிய மற்றும் உள்நாட்டு மட்டத்தில் உள்ள பேரினப் பொருளாதார நிலைமைகளை கவனமாக மீளாய்வு செய்த பின்னர் போதுமான ஏற்பாடுகளைச் செய்து, அதன் இலாபத்தன்மையின் மீதான சேத இழப்புக் கட்டணங்களின் தாக்கத்தைக் குறைக்க, வசூலிப்பு மற்றும் மீட்பு செயல்முறைகளில் வங்கி தொடர்ந்து அதிக கவனம் செலுத்தும்.

**முக்கிய இடர்கள்**

சம்பளக் குறைப்பு, வேலையில்லா திண்டாட்டம் மற்றும் சில்லறை விலை அதிகரிப்பு உள்ளிட்ட பொருளாதாரத்தில் நீடித்த கொவிட்-19 இன் தாக்கங்கள் காரணமாக வங்கி வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அழுத்தம் வாடிக்கையாளர்களின் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கடன் வாங்கும் திறன் ஆகியவற்றைக் குறைக்க வழிவகுக்கிறது.

## D. அதிகரித்து வரும் தொழிற்பாட்டுச் செலவுகள் (பெ.உ.இ IV)

பல்வேறு செலவு சேமிப்பு தந்திரோபாயங்கள் மற்றும் முயற்சிகள் இருந்தபோதிலும் ஊழியர்களின் செலவு, தேய்மானம் மற்றும் பணப் பெறுமதி தேய்வு மற்றும் பிற மேந்தலைச் செலவுகள் அடங்கிய தொழிற்பாட்டுச் செலவுகள் 2020 இன் ரூ. 15.5 பில்லியனில் இருந்து 2021 இல் ரூபா 19.1 பில்லியனாக அதிகரித்து 23.3% உயர்வை பிரதிபலிக்கிறது.

ஊழியர் செலவுகள் - தொழிற்பாட்டுச் செலவுகளில் 68.0% - ரூபா. 13.0 பில்லியனாக இச் செலவு 2020 இன் ரூபா 10.0 பில்லியனில் இருந்து 30.1% அதிகரித்துள்ளது. 01 ஜனவரி 2021 முதல் நடைமுறைக்கு வந்த சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த உயர்வு ஏற்பட்டது.

தேய்மானம் மற்றும் கடனழிவுச் செலவுகள் - தொழிற்பாட்டுச் செலவுகளின் 7.3% இனைக் குறிக்கும் இச் செலவு முந்தைய ஆண்டின் ரூ. 1.2 பில்லியனுக்கு எதிராக 11.7% அதிகரித்து 2021 இல் ரூபா 1.4 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. இணையப் பாதுகாப்பை வலுப்படுத்தும் அதே வேளையில் எண்ணியல் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த புதிய தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பில் செய்யப்பட்ட முதலீடுகள் இதற்கு முக்கிய காரணமாகும்.

நிர்வாக மற்றும் ஸ்தாபனச் செலவுகள் மற்றும் பணிப்பாளர்களின் ஊதியம் உள்ளிட்ட பிற தொழிற்பாட்டுச் செலவுகள் 10.8% அதிகரித்து ரூபா 4.7 பில்லியனாக 2021 இன் போது பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், வருமான அடிப்படையிலான வளர்ச்சியின் பின்னணியில், வங்கியின் வருமானத்திற்கான செலவு விகிதம் (வரிகள் நீங்கலாக) 33.3% ஆக நிறைவடைந்தது. இது 2020ஆம் ஆண்டின் 39.3%ஐயும் வங்கித் தொழிற்துறையின் 48.1%ஐ விட குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரைபு 10

வருமானம் மற்றும் செலவின் வளர்ச்சி




**புறநோக்கு**

அதிகரித்து வரும் பணவீக்க சூழ்நிலைகளுக்கு மத்தியில் செலவுகள் இரட்டைத் தானமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. செயன்முறைகள், தன்னியக்கமாக்கல், நிலையான முகாமை நடைமுறைகள் மற்றும் வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் செலவு முகாமையில் வங்கி தனது வலுவான கவனத்தைத் தொடரும்.

**முக்கிய இடர்கள்**

முறைமைகள், தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு மற்றும் எண்ணியல் மயமாக்கல் ஆகியவற்றில் முதலீடுகளை பராமரிக்கும் போது செலவுகளை அடக்குவதை சமநிலைப்படுத்துதல்

## E. வரிகள் மூலமான பங்களிப்பு (பெ.உ.இ V)

இந்த ஆண்டில், வரிகள் மூலம் நாட்டிற்கான வங்கியின் பங்களிப்பு 2020 இன் ரூபா 9.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 12.4 பில்லியனாக உள்ளது. மொத்த வரிகளில் வருமான வரி மற்றும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்த்த வரி (VAT) ஆகியவை அடங்கும். வரி அரிகரிப்புக்கு ஏற்ப, ஆண்டுக்கான வருமான வரி 2020 இன் ரூபா 5.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 13.1% அதிகமாக ரூபா 6.3 பில்லியனாகவும், அதே நேரத்தில் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்த்த வரி (VAT) 2020 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 3.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 62.7% அதிகரித்து ரூபா 6.2 பில்லியனாக மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டிற்கான மொத்த பயனுறுதி மிக்க வரி வீதம் 2020 இல் 35.4% இல் இருந்து 2021 இல் 22.1% ஆகக் குறைந்துள்ளதுடன், வருமான வரி விகிதம் 28% இலிருந்து 24% ஆகக் குறைக்கப்பட்டது மற்றும் முந்தைய ஆண்டுகளில் இருந்து ரூ. 771 மில்லியன் தொகையான மிகை ஒதுக்கீடுகளை (நிகர வடிவில்) மாற்றியமைத்தமை ஆகியன இதற்கான காரணங்களாகும்.

வரைபு 11

இலாபத் தன்மை மீதான வரியின் தாக்கம்




**புறநோக்கு**

பேரினப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் பின்னணியில் வரிச் செலவுகள் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**முக்கிய இடர்கள்**

குறைந்த வணிக நம்பிக்கை, குறைந்த செலவழிப்பு வருமானம், நாணய மாற்று வீத தேய்வு, அதிக பணவீக்கம், வட்டி விகிதங்களின் அதிகரிப்பு ஆகியவை வங்கித் துறையில் ஒட்டுமொத்த பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் விவரங்களுக்கு “தொழிற்பாட்டு சூழல்” பக்கங்கள் 26 முதல் 37 வரை பார்வையிடுக.

## F. இலாபத் தன்மை (பெ.உ.இ VI)

வங்கி 2020இன் ரூபா 15.6 பில்லியனில் இருந்து 81.4% வளர்ச்சியுடன் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் வரிக்கு முன் இலாபம் ரூ. 28.4 பில்லியனைப் பதிவு செய்ததுடன், இதற்கு முக்கியமாக வட்டிச் செலவுகள் குறைவதால் உந்துதல் அளிக்கப்பட்டது. கொவிட்-19 தாக்கத்தின் பின்னணியில் பொருளாதார நடவடிக்கைகளில் 2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 10.1 பில்லியனில் இருந்து, 118.8% வளர்ச்சி கண்டு ரூபா 22.1 பில்லியன் வரிக்கு பின் இலாபத்தைப் பதிவு செய்ததன் மூலம் வங்கி கணிசமான பெறுபேறுகளை அடைந்தது. சாதாரண பங்கு ஒன்றுக்கான வருவாய் 2020 இல் ரூபா 10.75 இல் இருந்து 2021 இல் ரூபா 23.53 ஆக வளர்ச்சி கண்டது.

வங்கியின் செயற்திறனுக்கு ஏற்ப, உரிமையாண்மை மீதான திரும்பல் (ROE) 2020 இன் இறுதியில் 20.15% இலிருந்து 31 டிசம்பர் 2021 நிலவரப்படி 33.92% ஆக மேம்பட்டது. அதே போல், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் சொத்துகளின் மீதான திரும்பல் (ROA) ஒரு வருடத்திற்கு முன்பு 1.24% ஆக இருந்து 2021 ஆண்டில் 1.93% ஆக அதிகரித்துள்ளது.

வங்கியின் நிலையான செயற்பாட்டுச் செயற்திறனுக்கான பொருத்தமான குறிகாட்டியாக வரிக்குப் பின் இலாபத்தை நாங்கள் கருதுகிறோம். கீழே உள்ள வரைபடம் 2021 இன் வருமான செயற்திறனைப் பெறுவதற்கான காரணிகளை சுருக்கமாகக் கூறுகிறது.

வரைபு 12

**பங்கு ஒன்றுக்கான உழைப்பு**




**புறநோக்கு**

அதிக பணவீக்கச் சூழல் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணப் பிரிவின் மிதமான வளர்ச்சிக்கு மத்தியில் தொடர்ந்து இலாபத்தைத் தக்கவைக்க வங்கி பாடுபடும்.

**முக்கிய இடர்கள்**

நியாயமான வட்டி வழங்கலை முகாமை செய்வதன் மூலம் சாதகமான ஆனால் மெதுவான இலாப வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம்.

வரைபு 13

**உழைப்பு மீதான தாக்கங்கள்**




### முற்றடக்க வருமானக் கூற்றிலான மாற்றங்கள்

முற்றடக்க வருமானக் கூற்றின் வருமான அதிகரிப்புக்கு முக்கிய பங்களிப்பு காரணி, வருமான அறிக்கையில் மீள வகைப்படுத்தப்படாத உருப்படிகள் ஆகும். 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிக வீதத்தில் கழிவீடு செய்யப்பட்ட ஊழியர் பணிக்குப் பிந்திய நன்மைகள் மறு மதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூ. 3.3 பில்லியன் இலாபம் ஏற்பட்டது. வரி வீதத்தை 28% இலிருந்து 24% ஆகக் குறைத்ததன் விளைவாக பிற்போடப்பட்ட வரிகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக மீள்மதிப்பீட்டு மிகையில் உண்டான மாற்றத்தினால் ரூபா 371 மில்லியனை (வரி நீங்கலாக) பதிவு செய்தது.

வரைபு 14

**உரிமையாண்மை மீதான திரும்பலின் கட்டமைப்பு நீக்கம்**




அட்டவணை 7

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| நிகர வட்டி வருமானம்/ சராசரி சொத்துக்கள | 2.6% | 2.4% | 2.6% | 2.7% | **3.7%** |
| வட்டி அல்லாத வருமானம்/ சராசரி சொத்துக்கள் | 0.4% | 0.1% | 0.3% | 0.4% | **0.2%** |
| சேத இழப்பு/சராசரி சொத்துக்கள் | -0.1% | -0.1% | -0.1% | -0.4% | **-0.3%** |
| மொத்த தொழிற்பாட்டு செலவினம்/ சராசரி சொத்துக்கள | -1.1% | -1.4% | -1.4% | -1.2% | **-1.3%** |

வரைபு 15

**இலாபத்தன்மை விகிதங்கள்**




## சுருக்கமான நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் அன்று உள்ளவாறு

| | |
|---|---|
| A | **மொத்த சொத்துக்கள்** |
| E | காசு மற்றும் காசுக்கு சமமானவை |
| | வங்கியிலான வைப்புக்கள் |
| C | உய்த்தறி நிதிச் சாதனங்கள் |
| | இலாப நட்டங்கள் மூலமான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் |
| | காலத் தேய்விட்ட கிரயத்திலான சொத்துக்கள் |
| B | கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| C | கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் |
| | ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடாக சீர் மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் |
| | சேய் நிறுவனங்களின் மீதான முதலீடுகள் |
| | ஆதனம், பொறி, உபகரணங்கள் |
| | சொத்துக்களின் பயன்பாட்டு உரிமை |
| | நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் |
| | பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் |
| D | ஏனைய சொத்துக்கள் |
| F | **மொத்தப் பரிப்புக்கள்** |
| G | வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை |
| | காலத் தேய்விட்ட கிரயத்திலான நிதிப் பரிப்புகள் |
| H | வைப்பாளர்களுக்குரிய சென்மதிகள் |
| G | கடன் தருனர்களுக்கான சென்மதிகள் |
| I | குத்தகைப் பரிப்புக்கள் |
| G | வழங்கப்பட்ட கடன் பிணைப்பத்திரங்கள் |
| I | இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் |
| | பிற்போடப்பட்ட வரிப் பரிப்புக்கள் |
| | ஏனைய பரிப்புக்கள் |
| | சேய் உரிமங்களுக்கான சென்மதிகள் |
| J | **மொத்த பங்குதாரர் உரிமையாண்மை** |
| | கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கிய மூலதனம் |
| | சட்ட நியதிப்படியான ஒதுக்கு நிதியம |
| | நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகள் |
| | ஏனைய ஒதுக்கங்கள் |
| | **மொத்த உரிமை மற்றும் பரிப்புக்கள்** |
| I | நிகழத்தக்க பரிப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் |

அட்டவணை 8

| 2021 ரூபா. மில் | 2020 ரூபா. மில் | 2019 ரூபா. மில் | (2021 எதிர் 2020) ஆண்டுக் காண்டு மாற்ற வீதம் |
|---|---|---|---|
| **1,579,097.7** | 1,363,808.4 | 1,157,966.7 | |
| **7,656.0** | 6,492.0 | 5,376.7 | 17.9 |
| **7,120.7** | 13,253.5 | 12,364.5 | (46.3) |
| **–** | 19.9 | 11.6 | (100.0) |
| **19,572.9** | 11,221.7 | 11,459.9 | 74.4 |
| **538,941.8** | 516,795.2 | 454,395.0 | 4.3 |
| **935,350.1** | 754,233.3 | 615,634.3 | 24.0 |
| **13,817.6** | 15,271.8 | 3,478.8 | (9.5) |
| **4,811.0** | 4,811.0 | 4,811.0 | 0.0 |
| **15,045.6** | 15,315.8 | 14,163.5 | (1.8) |
| **1,205.9** | 1,226.2 | 1,073.5 | (1.7) |
| **816.1** | 688.0 | – | 18.6 |
| **1,104.8** | 1,446.2 | – | |
| **33,655.3** | 23,033.8 | 35,197.9 | 46.1 |
| **1,503,085.0** | 1,309,394.5 | 1,113,589.3 | 14.8 |
| **7,686.6** | 12,862.3 | 35,045.3 | (40.2) |
| **1,428,467.4** | 1,237,123.8 | 1,016,574.3 | 15.5 |
| **7,719.5** | 8,159.6 | 21,203.2 | (5.4) |
| **1,292.1** | 1,274.7 | 1,066.9 | 1.4 |
| **37,529.0** | 31,773.8 | 26,691.7 | 18.1 |
| **8,590.6** | 11,600.4 | 6,508.7 | (25.9) |
| **4,596.2** | 612.2 | – | 650.7 |
| **7,200.0** | 5,983.9 | 5,951.5 | 20.3 |
| **3.5** | 3.8 | 0.5 | (6.7) |
| **76,012.8** | 54,413.9 | 44,377.3 | 39.7 |
| **9,400.0** | 9,400.0 | 9,400.0 | 0.0 |
| **5,174.2** | 4,068.3 | 3,562.9 | 27.2 |
| **13,727.8** | 14,399.6 | 4,464.4 | (4.7) |
| **47,710.7** | 26,546.1 | 26,950.0 | 79.7 |
| **1,579,097.7** | 1,363,808.4 | 1,157,966.7 | 15.8 |
| **13,023.2** | 25,787.1 | 10,355.2 | (49.5) |

## A. வலுவான ஐந்தொகை வளர்ச்சி ( பெ.உ.இ VIII)

வங்கியின் சொத்துத் தளம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 1.4 பில்லியனுக்கு எதிராக 15.8% அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1.6 பில்லியனாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஐந்தொகை வளர்ச்சிக்கு 2020 ஆம் ஆண்டில் ரூபா 798.8 பில்லியன் ஆகக் காணப்பட்ட முதலீடுகள் 23.0% அதிகரித்து ரூபா 980.7 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டமை, நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2020 இறுதியில் காணப்பட்ட ரூபா 516.8 பில்லியன் பெறுமதிக்கு ஏதிராக 4.3% விரிவாக்கத்துடன் 2021 இல் ரூபா 538.9 பில்லியனாக பதிவு செய்யப்பட்டமை ஆகியன காரணமாக அமைந்தன.

இந்த ஆண்டில் வங்கி ரூபா 59.4 பில்லியன் மதிப்புள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு (RDA) வழங்கப்பட்ட கடன்களை கடன் சாதனங்களாக மீள வகைப்படுத்தியது. RDA கடன்களை கடன் சாதனங்களாக மீள் வகைப்படுத்தியதைக் கருத்தில் கொள்ளாமல் கடன் மற்றும் முற்பணங்களிலான வளர்ச்சி 2021 இல் ரூபா 538.9 பில்லியனாக 17.8% வளர்ச்சியைப் பதிவு செய்ய, முதலீடுகள் 15.3% அதிகரித்து ரூபா 980.7 பில்லியனாகப் பதியப்பட்டது.

பொறுப்பு அடிப்படையில், வங்கியின் வைப்புத் தளம் முந்தைய ஆண்டின் அடிப்படையான ரூபா 1.2 திரில்லியனை விட 15.5% வளர்ச்சியைக் காட்டி 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1.4 திரில்லியனை அடைந்தது. எவ்வாறாயினும், எமது கடன் பெறுகை தொடர்ந்தும் நிலையான அளவில் ரூபா 52.9 பில்லியனாக 2021 இன் இறுதியில் காணப்பட்டது.

வரைபு 16

**சொத்து வளர்ச்சி**




## B. சவால்களுக்கு மத்தியில் கடன் வழங்கல்களிலான வளர்ச்சி

கடன்கள் மற்றும் முற்பணங்கள் மொத்த சொத்துக்களில் 34.1% ஆக இருப்பதுடன், இதனுள் வீடமைப்புக் கடன்கள் மற்றும் ஆதனக் கடன்கள், தனிநபர் கடன்கள், வாகனக் கடன்கள், கல்விக் கடன்கள், ஒருங்கிணைந்த கடன்கள், வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மற்றும் அடகு முற்பணங்கள், ஊழியர் கடன்கள், அரசுக்கான கடன்கள், மற்றும் தலைகீழ் மறுவிற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அரச பத்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

“கூட்டுவணிகக் கடன்கள்” வகைப்படுத்தலில் இருந்து “கூட்டு வணிகக் கடன் சாதனங்கள்” வகுப்பிற்கு ரூபா 59.4 பில்லியன் மீள் வகைப்படுத்தல் காரணமாக, மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் சேர்க்கை 4.3% ஆக அதிகரித்து ரூபா 538.9 பில்லியனாக டிசம்பர் 2021 நிலவரப்படி, மேலே உள்ள “வலுவான ஐந்தொகை வளர்ச்சி” என்பதன் கீழ் கூறப்பட்ட வாறு முந்தைய பன்னிரண்டு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 516.8 பில்லியன் தொகைக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டது. தனிநபர் நுகர்வு (49.5%), வீடமைப்பு (30.1%), உட்கட்டமைப்பு விருத்தி (11.4%) மற்றும் கூட்டுவணிகக் கடன்கள் (19.9%) ஆகியவை 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த அளவில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சேர்க்கையில் ஆதிக்கம் செலுத்தின.

வங்கியின் மொத்த தொழிற்படாக் கடன் விகிதம் 2020 இன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 2.79% இலிருந்து 2021 இல் 18 அடிப்படைப் புள்ளிகள் அதிகரித்து 2.97% ஆக உயர்ந்துள்ளது, இது சொத்து தரத்தின் சரிவை பிரதிபலிக்கிறது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மட்டம் 2 மற்றும் மட்டம் 3 கடன் முற்பணங்கள் முறையே 10.2% மற்றும் 16.3% அளவில் அதிகரித்துள்ளதுடன், வங்கியின் திரண்ட சேத இழப்பு மூன்று நிலைகளிலும் அதிகரித்துள்ளது, இது விவேகமான ஒதுக்கீட்டைப் பிரதிபலிக்கிறது. மட்டம் 2 மற்றும் மட்டம் 3 கடன்களுக்கு எதிரான சேத இழப்பு முறையே 139.6% மற்றும் 22.5% ஆக மேம்பட்டது. எவ்வாறாயினும், 2021 இன் இறுதியில் தொழிற் துறை சராசரியான 4.47% உடன் ஒப்பிடுகையில் வங்கியின் கடன் தரம் நிலையான முறையில் பராமரிக்கப்பட்டது.

## C. முதலீடுகளுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல் (பெ.உ.இ VII)

வங்கியின் பங்கு மற்றும் கடன் சாதனங்களின் மொத்த முதலீட்டு சேர்க்கை 2020 இல் அறிக்கையிடப்பட்ட

ரூபா 798.8 பில்லியனில் இருந்து 33.3% வளர்ச்சியைக் கண்டு, 2021 இன் இறுதியில் ரூபா 980.7 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. அரச பத்திரங்கள், கூட்டுவணிகக் கடன் சாதனங்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்கள் உள்ளிட்ட கடன் சாதனங்கள் மொத்த சேர்க்கையில் 99.3% ஆகும், மீதமுள்ளவை உரிமையாண்மைப் பிணையங்களை உள்ளடக்கி உள்ளது. வங்கியின் உரிமையாண்மை சேர்க்கை பங்குச் சந்தையில் நிலவிய மேல்நோக்கிய வேகம் காரணமாக 2020 இல் ரூபா 4.2 பில்லியனில் இருந்து 17.5% அதிகரித்து 2021 இன் இறுதியில் ரூபா 5.2 பில்லியனாக அதிகரித்தது.

### உய்த்தறி நிதி சாதனங்கள்

2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள உய்த்தறி நிதிச் சாதனங்களின் மீதி ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 2021 பெப்ரவரி 20 ஆம் திகதியுடன் காலாவதியாகும் உடன்படிக்கையின் படியான ரூ 2.0 பில்லியன் தவணைக் கடனுக்கான வட்டி வீத இடரினை தளம்பல் காப்பு செய்யும் நோக்குடன் DFCC வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறுகை ஒப்பந்தத்தைப் பிரதிபலிக்கிறது.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

முக்கியமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (மோட்டார் வாகனங்கள் தவிர) பிற வகைகளின் கொள்வனவு அதிகரிப்பால், முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 15.3 பில்லியனில் இருந்து 1.8% குறைந்து ரூபா 15.0 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

### பயன்பாட்டு உரிமை சொத்து

2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட SLFRS 16 "குத்தகைகள்" நியமத்தின் படி சில குறுகிய கால குத்தகை சொத்துக்கள் மற்றும் குறைந்த மதிப்புள்ள சொத்துக்கள் தவிர்த்து நிதி நிலைமைக் கூற்றின் மீதான கிட்டத்தட்ட அனைத்து குத்தகை ஒப்பந்தங்களையும் குத்தகைதாரர் ஏற்பிசைவு செய்தல் வேண்டும். LKAS 17இன் படி, நிதிக் குத்தகை (நிதி நிலைமைக் கூற்றில்) மற்றும் செயற்பாட்டு குத்தகை (நிதி நிலைமைக் கூற்றுக்குப் புறம்பாக) இடையே ஒரு வேறுபாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதன்படி, அனைத்து குத்தகை ஒப்பந்தங்களுக்கும் தொடர்புடைய குத்தகைப் பொறுப்பை வங்கி அங்கீகரித்துள்ளதுடன் 31 டிசம்பர் 2021 இல் அதன் நிதி நிலைமைக் கூற்றில் "பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்" ரூபா 1.2 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

### சேய் நிறுவனங்களில் முதலீடு

கையகப்படுத்துதல் அல்லது இணைப்புகள் எதுவும் இல்லாததால், துணை நிறுவனங்களிலான முதலீடு தொடர்ந்தும் ரூபா 4.8 பில்லியனாக 2021 இன் இறுதியில் காணப்பட்டது. இதில் முதலீடு ரூபா 1.7 பில்லியன் வரையறுத்த தே.சே.வங்கி நிதி முகாமைக் கம்பனி மற்றும் ரூபா 3.1 பில்லியன் இலங்கை சேமிப்பு வங்கியில் (SLSB) முழுதாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமாக முதலீடு செய்யப்பட்டது.

## D. ஏனைய சொத்துகளிலான அதிகரிப்பு

பிற சொத்துக்கள் - வருமதிகள், முற்பணக் கொடுப்பனவுகள், திறைசேரியில் இருந்து மூத்த பிரஜைகளுக்கு வட்டி செலுத்துதல் தொடர்பிலான வருமதிகள், திறைசேரிக்கு செலுத்திய முற்பணம் மற்றும் பெறத்தக்க வரிகள் அல்லது நிறுத்தி வைத்த வரி வருமதிகள் உள்ளடங்கலான வட்டி உழைக்காத சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த சொத்துக்களில் 2.1% ஆகக் காணப்பட்டது. 2020 இல் காணப்பட்ட ரூபா 23.0 பில்லியன் பெறுமதியில் இருந்து 46.1% அதிகரித்து 2021 இல் ரூபா 33.7 பில்லியனாக வளர்ச்சியடைந்தமை பிற சொத்துக்களில் 50% ஆகவுள்ள திறைசேரியில் இருந்து பெற வேண்டிய வட்டி வருமதி அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டதாகும்.

## E. காசு மற்றும் காசுக்கு சமமானவை மற்றும் பிற வங்கிகளிலான வைப்புக்களை நிர்வகித்தல்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பதனுள், கையில் உள்ள பணம், வங்கிகளில் உள்ள வைப்புக்கள் மற்றும் அழைப்பு மற்றும் குறுகிய அறிவிப்பில் மீளப்பெறத் தக்கவைகள் ஆகியவை உள்ளடங்கும். வங்கியின் புள்ளிவிவரங்கள் ரூபா 7.7 பில்லியனாக 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 17.9% அதிகரித்துள்ளதால், கையிருப்புப் பணத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. வங்கிகளில் உள்ள வைப்பு என்பது வங்கிகளில் வைக்கப்படும் குறுகிய கால வைப்புக்கள் ஆகும், இது ரூபா 13.3 பில்லியனாக கடந்த ஆண்டு அறிக்கையிடப்பட்ட மீதியில் இருந்து 46.3% குறைந்து ரூபா 7.1 பில்லியனாக 2021 இல் பதிவு செய்யப்பட்டது. காசு மற்றும் காசுக்கு சமமானவை மற்றும் வங்கிகளில் உள்ள வைப்புக்கள் ஆகிய இரண்டும் வங்கியால் அதன் குறுகிய கால கடமைகளுக்குப் பயன்படுத்தப்படுவதுடன், மேலும் அவை எழும் திரவத் தன்மைத் தேவைகளை போதுமான அளவில் பூர்த்தி செய்ய பராமரிக்கப்படுகின்றன.

## F. மொத்தப் பொறுப்புகள்

மொத்தப் பொறுப்புகள் 2020 இன் ரூபா 1.3 திரில்லியனில் இருந்து 14.8% அதிகரித்து ரூபா 1.5 திரில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆல் குறைவடைந்துள்ள ஓய்வூதியக் கடப்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்கள் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் உள்ளடங்கிய வங்கிகளிடம் இருந்தான கடன் பெறுகைகள் குறைவடைந்த போதிலும் வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் மற்றும் வாடிக்கையாளர் வைப்பு அதிகரிப்பால் இது அடையப்பட்டது.

## G. எமது கடன் சுயவிபரங்களை பாதுகாப்பாக நிர்வகித்தல் (பெ.உ.இ IX)

நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள், மறு கொள்வனவு (ரெப்போ) ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்பட்ட பத்திரங்கள் மற்றும் வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் உட்பட வங்கியின் மொத்தக் கடன்கள் ஒரு வருடம் முன்பு பதிவு செய்யப்பட்ட ரூபா 52.8 பிலிலியனில் இருந்து 0.3% அதிகரித்து டிசம்பர் 2021 நிலவரப்படி ரூபா 52.9 பில்லியனாக உயர்வடைந்தது. இது முக்கியமாக வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய மீதிகளின் குறைவு காரணமாக ஏற்பட்டதுடன், நடைமுறையில் உள்ள வட்டி வீத விதிகளை மூலதனமாக்குவதன் மூலம் நீண்ட காலத்திற்கான குறைந்த கிரய நிதி மூலங்களை நோக்கி நகரும் வங்கியின் நோக்கத்துடன் வழங்கப்பட்ட கடன் பத்திரங்களின் அதிகரிப்பு காரணமாகும்.

### வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை

வங்கிகளின் மேலதிகப் பற்று, அழைப்புப் பணக் கடன், வங்கிகளில் கடன் பெறுகை மற்றும் மறு கொள்வனவு ஒப்பந்தங்கள் ஆகியவை 2020 ஆம் ஆண்டின் ரூபா 12.9 பில்லியன் தொகையிலிருந்து 40.2% சரிந்து 2021 இல் ரூபா 7.7 பில்லியனாக குறைந்தது. வெளிநாட்டு நாணயக் கடன்கள் அதிகரித்த போதிலும், மறு கொள்வனவு (ரெப்போ) ஒப்பந்த சேர்க்கையின் கீழ் விற்கப்பட்ட பத்திரங்களில் 92.0% குறைப்பும் இதற்குக் காரணமாகும். இது முக்கியமாக ஆண்டில் நிலவிய அதிகப்படியான பண நிரம்பல் காரணமாகவும், குறைந்த கிரய வைப்புக்களின் அதிகரிப்பின் காரணமாகவும் ஏற்பட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதற்கென இந்தியன் வங்கியிடம் இருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் பெறுகை மூலம் இந்த வருடத்தில் வெளிநாட்டு நாணயக் கடன்கள் 2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 6.2 மில்லியனில் இருந்து 15.3% அதிகரித்து 7.1 மில்லியன் ரூபாவை எட்டியது.

### ஏனைய கடன் தரனர்களுக்கு செலுத்த வேண்டியவை

ஏனைய கடன் தருனர்களுக்கான மீதி என்பது மறு கொள்வனவு ஒப்பந்தக் கடன்களை மட்டுமே கொண்டிருப்பதுடன், "வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை" வகுப்பின் கீழ் ஏற்பிசைவு செய்யப்பட்ட மீதிகளைத் தவிர்த்து இருப்பதால், கடன்கள் கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 8.2 பில்லியனில் இருந்து 5.4% மாத்திரம் குறைந்து ரூபா 7.7 பில்லியனாக 2021 இல் பதிவு செய்யப்பட்டது.

### வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள்

வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள், பிணையற்ற துணைநிலை மீட்கத்தக்க கடன் பத்திரங்கள் மற்றும் பிணையற்ற துணை நிரந்தரக் கடன் பத்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. டிசம்பர் 2021 இறுதியின் வழங்கப்பட்ட கடன் பத்திரங்களின் சேர்க்கை ஒரு வருடத்திற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ரூபா 31.8 பில்லியனில் இருந்து 18.1% அதிகரித்து 2021 முடிவில் ரூபா 37.5 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இம்மீதியானது ரூபா 11.5 பில்லியன் வங்கியின் கடன் வழங்கும் நடவடிக்கைகளை மேம்படுத்த வழங்கப்பட்ட பிணையற்ற கடன் பத்திரங்களின் பெறுமதியாகும். மேலும், கடன் சேர்க்கையில் ரூபா 20.0 பில்லியன் மத்திய வங்கியுடனான USD/LKR மாற்று ஒப்பந்தத்தை விலக்குவதற்கான நிதித் தேவைக்கு பகுதியளவில் நிதியளிக்க 2019 இல் வழங்கப்பட்ட கடன் பத்திரங்களின் மதிப்பு மற்றும் ரூபா 5.0 பில்லியன் மூலதனப் போதுகை விகிதத்தை அதிகரிக்கவும், வங்கியின் சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கு இடையே உள்ள முதிர்ச்சியில் உள்ள பொருத்தமின்மையைக் குறைக்கவும் வங்கியின் அடுக்கு I மூலதனத்தை அதிகரிக்க 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பட்டியலிடப்படாத, பிணையற்ற, துணைநிலை, நிரந்தரமான தரமதிப்பீடு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு ஆகும்.

மேலும், வங்கியின் துணை நிலை மூலதனப் போதுமான விகிதத்தை மேம்படுத்தவும், 2021 இல் முதிர்ச்சியடைந்த வங்கியின் சொத்து மற்றும் பொறுப்பு சேர்க்கைக்கும் இடையே உள்ள பொருத்தமின்மையைக் குறைக்கவும் 2016 இல் வழங்கப்பட்ட மதிப்பிடப்பட்ட, பிணையற்ற, துணைநிலை, மீட்கத்தக்க ரூபா 6.0 பில்லியன் மதிப்புடைய கடனீட்டுப் பத்திரங்கள் 2021 இல் முதிர்ச்சியடைய அவை உரிய முறையில் மீட்கப்பட்டன.

## H. அதிக வைப்புத் திரட்டலை அடைதல்

வங்கி வருடத்தின் போது ரூபா 192.6 பில்லியன் தொகையினை வைப்பாகத் திரட்டியுள்ளது. வங்கியின் வைப்புத் தளம் 2020 இன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 1.2 திரில்லியனில் இருந்து 15.5% அதிகரித்து ரூபா 1.4 திரில்லியனாக டிசம்பர் 2021 இன் இறுதியில் பதிவு செய்யப்பட்டது. இந்த ஆண்டில் குறைந்த வட்டி வீத முறைமை இருந்த போதிலும், பணவீக்க சூழலுக்கு மத்தியில் சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்புத் தொகையின் அடிப்படைகள் 16.3% மற்றும் 15.2% அதிகரித்து ரூபா 325.6 பில்லியன் மற்றும் ரூபா 1.1 திரில்லியனை முறையே டிசம்பர் 2021 இறுதியில் பதிவு செய்தது. அதன்படி, மொத்த வைப்புத் தொகைக்கான சேமிப்பு வைப்புத் தொகை 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 23.0% என்ற அளவில் இருந்ததுடன், மீதமுள்ளவை நிலையான வைப்புத்தொகைகளாகும்.

வரைபு 17

**வைப்புக்களுக்கான கடன்கள்**




வரைபு 18

**வைப்புக்கள் வளர்ச்சி**




## I. ஏனைய பொறுப்புகளிலான அதிகரிப்பு இளைப்பாற்று நன்மைப் பொறுப்புக்கள்

ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 11.6 பில்லியனில் இருந்து 25.9% குறைந்து ரூபா 8.6 பில்லியனாக டிசம்பர் 2021 இன் இறுதியில் பதிவு செய்யப்பட்டது. இது முக்கியமாக 2020 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட அதிக கழிவீட்டு வீதமே காரணமாகும்.

#### குத்தகைப் பொறுப்புக்கள்

2020 ஆம் ஆண்டைப் போலவே, டிசம்பர் 2021 இறுதியில் குத்தகைப் பொறுப்பாக ரூபா 1.3 பில்லியன் ஏற்பிசைவு செய்யப்பட்டது.

#### ஏனைய பொறுப்புகள்

ஏனைய பொறுப்புகள் - கட்டணங்கள், செலவுகள், சம்பளம் தொடர்பான மற்றும் பிற செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலுத்த வேண்டியவைகளை உள்ளடக்கியது - 2020 இல் காணப்பட்ட ரூபா 6.0 பில்லியனில் இருந்து 20.3% அதிகரித்து 2021 இல் ரூபா 7.2 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது.

#### நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்

இந்த ஆண்டில், வங்கி அதன் மொத்த பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்கவைகளில் 2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 25.8 பில்லியனில் இருந்து 49.5% சரிவை பதிவு செய்து ரூபா 13.0 பில்லியனாக 2021 இல் பதிவு செய்யப்பட்டது. இது முக்கியமாக பயன்படுத்தப்படாத கடன் வசதிகளுக்கான கடப்பாடுகள் குறைவடைந்தமையால் ஆகும்.

## J. எங்கள் வலுவான மூலதனம் மற்றும் திரவு மேலாண்மை (பெ.உ.இ X)

### பங்குதாரர்களின் உரிமையாண்மை

மொத்த பங்குதாரர்களின் உரிமையாண்மைப் பெறுமதி முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 54.4 பில்லியனுக்கு எதிராக, 2021ல் ரூபா 76.0 பில்லியனாகக் காணப்பட்டது. இந்த ஆண்டில், ஒரு பங்கின் அடிப்படை வருவாய் 2020 இல் 10.75 இலிருந்து ரூபா 23.53 ஆக வளர்ச்சியடைய, பங்குதாரருக்கான இலாபம் அதிகரித்தமை காரணமாக அமைந்தது. வங்கியின் மூலதனத் தளத்தை மேம்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட வழிகள் இருப்பதால், பங்கு இலாப செலுத்துதலை 15.8% ஆகக் குறைக்க நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோம். இதனால் உள்ளே உருவாக்கப்பட்ட மூலதனத்தை குறித்த ஆண்டில் சேமிக்க முடிந்தது.

வரைபு 19

**உரிமைக்கான கடன்**



#### மூலதன முகாமை

வங்கியானது நீண்ட கால மற்றும் குறுகிய கால வங்கி இலக்குகளை அடைய உதவுவதன் மூலம் அக்கறையுள்ள தரப்பினருக்கான பெறுமதியை உருவாக்கும் இறுதி இலக்குடன் மூலதன நிர்வாகத்தில் ஈடுபடுகிறது. உள்ளக மதிப்பீடு மீதான இடர் நிலைகள், தரப்படுத்தல் நிறுவன எதிர்பார்ப்புகள், ஒழுங்கு விதிமுறைத் தேவைப்பாடுகள் மற்றும் அக்கறையுள்ள தரப்பினரால் எதிர்பார்க்கப்படும் வருமானங்கள் உள்ளிட்ட பல காரணிகளைக் கருத்தில் கொண்டு மூலதன மட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. தே.சே.வங்கியில், நமது மூலதனக் கட்டமைப்பு நிதித் திறனையும், மூலதனத் தளத்தின் இழப்பை உறிஞ்சும் திறனையும் மேம்படுத்துவதை உறுதி செய்யத்தக்க நாங்கள் முழு அளவிலான மூலதனக் கருவிகள் மற்றும் மூலதன முகாமை செயற்பாடுகளைப் பயன்படுத்துகிறோம்.

#### மூலதன முகாமை நோக்கங்கள்

மூலதன நிர்வாகத்தின் முக்கிய நோக்கங்கள் இரண்டு அடுக்குகளாக - வங்கியின் வணிக தந்திரோபாயத்துக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளை மீறாமல் கடுமையான சரிவுகளைத் தாங்கும் தேவைப்பாட்டுக்காக போதுமான அளவு மூலதனத்தை உறுதி செய்தல் ஆகும்.

வங்கியின் மூலதன முகாமை நோக்கங்களின் சுருக்கம் பின்வருமாறு:

மூலதன மூலங்களை பராமரிக்கும் அதே வேளையில் பங்குதாரருக்கு வருமானத்தை வழங்குவதை உறுதி செய்யும் விதத்தில் இவை பின்னர் வங்கியின் ஒட்டுமொத்த தந்திரோபாயத் திட்டங்கள் மற்றும் இடர் தாங்கு எல்லையுடன் இணைந்து பின்பற்றப்படுகின்றன. எங்களின் பங்கு இலாபக் கொள்கையானது வளர்ச்சி வாய்ப்புகளுக்கு இசைவான வகையில் காலப்போக்கில் நிலையான பங்கு இலாபத்தைச் செலுத்துவதாகும். எங்கள் பங்கு இலாபக் கொள்கையின்படி, வங்கி இறுதிப் பங்கு இலாபமாக ரூ. 3.5 பில்லியன் 2021 இல் செலுத்தியது.

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமையிலான சொத்து மற்றும் பொறுப்பு முகாமைக் குழு (ALCO) மூலம் மேற்பார்வையிடப்படும் மூலதன முகாமை மற்றும் திட்டமிடல் செயன்முறை மூலம் எங்கள் மூலதன முகாமை நோக்கம் செயற்படுத்தப் படுகிறது. குழு வழக்கமான முறையில் தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்ட மூலதன நிலைகள் பற்றிய அறிவிப்புகள் தொடர்பில் புதுப்பித்த நிலையில் பேணப்படுகின்றது. வருடாந்த உள்ளக மூலதன போதுகை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) என்பது மூலதன திட்டமிடலுக்கான ஒரு முக்கிய கருவியாகும், இது ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் தே.சே.வங்கி மூலதன இலக்குகள் தொடர்பாக நமது திட்டமிடப்பட்ட மூலதன வழங்கல் மற்றும் தேவையை மதிப்பிட உதவுகிறது. மூன்று ஆண்டு கால எல்லையுடன், ICAAP மாறுபட்ட நோக்கம்

கடன் மதிப்பீட்டை குறிக்கோள்களை அடைய மற்றும் குறிக்கோள்களை மற்றும் சாத்தியமான அழுத்த நிகழ்வுகளின் தாக்கத்தை தாங்கும் வகையில் வங்கி மூலதனத்தை பராமரிக்கிறது என்பதை உறுதிப்படுத்தல்

குறைந்தபட்ச ஒழுங்குமுறை மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்ய போதுமான மூலதனத்தை பராமரித்தல்



வங்கியின் தந்திரோபாய குறிக்கோள்களை ஆதரிக்க வணிகங்களுக்கு மூலதனத்தை ஒதுக்கீடு செய்தல்

வங்கியின் இடர் எல்லையை ஆதரிக்க போதுமான மூலதனத்தை வைத்திருத்தல்

### செயன்முறை

வங்கி மூலதனத்திற்கு அதிகபட்ச பாதுகாப்பை உறுதி செய்ய கவனமாக திட்டமிடப்பட்ட மூலதன முகாமை செயன்முறையை நாங்கள் பின்பற்றுகிறோம். மூலதன முகாமை நோக்கங்களை அமைப்பதற்கான பொறுப்பு, மூலதன இலக்குகள் மூலம் இதை வெளிப்படுத்தும் இயக்குநர்கள் சபை மீது உள்ளது. மற்றும் வணிக வளர்ச்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் பாதகமான சூழ்நிலைகளுக்கு போதுமான

மற்றும் தீவிர அழுத்த சூழ்நிலைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது.

இந்த ஆண்டு, வங்கி பின்வரும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ICAAP இன் கீழ் அதன் மூலதனத் தேவைகளை மதிப்பீடு செய்தது:

**தூண் 1 இடருக்கான மதிப்பீடு – மத்திய வங்கியினால் வழிகாட்டப்பட்டவாறு**

- கடனுக்கான நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை
- சந்தை அபாயத்திற்கான நியமப்படுத்தப்பட்ட அளவீட்டு அணுகுமுறை
- செயற்பாட்டு இடருக்கான அடிப்படை சுட்டி அணுகுமுறை

**தூண் 2 இடருக்கான மதிப்பீடு**

- தொழிற் துறையின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்றவாறு உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட மாதிரிகள்
- (ஒரு பரந்த அளவிலான இடர்கள் மற்றும் வங்கியின் இடர் மற்றும் மூலதன முகாமைத் திறன்கள்)

வணிக வரிசை மூலமான மூலதன ஒதுக்கீடுகள் பாதீட்டு செயன்முறையின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டு ஆண்டு முழுவதும் கண்காணிக்கப்படுகிறது. மூலதனப் போதுகை அளவு மற்றும் பிற மூலதனம் தொடர்பான சிக்கல்களை மதிப்பிடுவதற்கும், தந்திரோபாயத்தை செயற்படுத்துவதற்கான பரிந்துரைகளை உருவாக்குவதற்கும் மற்றும் அதிகரிப்பதற்கும் வங்கியின் கூட்டாண்மை ஆளுகை அவ்வப்போது கூடுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் விரிவான அழுத்தப் பரிசோதனை மற்றும் அதன் வணிக நடவடிக்கைகள் தொடர்பாக தே.சே.வ் செயல்பட்டு இருப்பதுடன், தந்திரோபாயத் திட்டம், இடர் தாங்கு இயலளவு, இடர் சுயவிபரம் மற்றும் அது செயற்படும் வெளிச் சூழல் ஆகியவற்றை அங்கீகரித்து வங்கி நன்கு மூலதனமிடப்பட்டுள்ளது என்று சபை முடிவு செய்தது.

### மூலதனப் போதுகை விகிதங்கள் வசதியான மட்டத்தில் காணப்படுகின்றன

எமது இடர் எடையளித்த சொத்துக்கள் 2020 இல் காணப்பட்ட ரூபா 309.4 பில்லியனுக்கு எதிராக, ஆண்டின் போது 13.3% அதிகரித்து ரூபா 350.4 பில்லியனாகக் காணப்படுகிறது. இந்த அதிகரிப்பு சொத்து வளர்ச்சிக்கு ஏற்ப இருந்ததுடன் பெருமளவில், இடர் எடையளித்த கடனிலான 11.1% அதிகரிப்புடன் இணைந்த வகையில் அதிகரித்த வருமானத்தின் தொழிற்பாட்டு இடர் எடையளித்த சராசரியின் அதிகரிப்புக்கு இணக்கமாக இருந்துள்ளது. இடர் எடையளித்த சொத்துக்கள் பக்கம் 212 முதல் 239 வரை உள்ள இடர் மதிப்பாய்வு அறிக்கையில் மற்றும் தூண் 3 பாசல் III இன் கீழான வெளிப்படுத்தல்கள் பக்கம் 454 முதல் 466 வரை).

**வரைபு 20**

**இடர் எடையளித்த சொத்துக்கள்**




A – கடன் இடர் B – சந்தை இடர்
C – தொழிற்பாட்டு இடர்

**வரைபு 21**

**சராசரி எடையளித்த சொத்துக்கள் மீதான திரும்பல்**




● மொத்த சொத்துக்கள் (ரூபா பில்லியன்)
● இடர் எடையளித்த சொத்துக்கள் (ரூபா பில்லியன்)
-○- சராசரி இடர் எடையளித்த சொத்துக்கள் மீதான திரும்பல் (வரிக்கு முன்) (%)

**வரைபு 22**

**மொத்த சொத்துக்கள் எதிர் இடர் எடையளித்த சொத்துக்கள்**




-○- மொத்த சொத்துக்கள்
-○- இடர் எடையளித்த சொத்துக்கள்

**வரைபு 23**

**பாசல் III - மூலதனப் போதுகை**




● 2020
● 2021

வங்கியின் மூலதன நிலை வலுவாக இருந்ததுடன், கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக ஒழுங்கு விதிமுறையாளரால் விதிக்கப்பட்ட திருத்தப்பட்ட குறைந்தபட்ச சட்டப்பூர்வ தேவைகளுக்கு மேலாக உயர்வடைந்தது. அடுக்கு 1 மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் முறையே 18.60% மற்றும் 20.83% ஆகியவை டிசம்பர் 2021 இன் இறுதியில், ஒழுங்குமுறைத் தேவைகளான 8.0% மற்றும் 12.0%க்கு மேல் காணப்பட்டன. முடுக்கு விகிதம் 8.92% குறைந்தபட்சத் தேவையான 3.0% ஐ விட அதிகமாக இருந்தது.

| புறநோக்கு | முக்கிய இடர்கள் |
|---|---|
| இலங்கை மத்திய வங்கியின் சாத்தியமான வீத உயர்வுகளுடன, இலாபத்தன்மை சிறிதளவால் அதிகரிக்கும | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வட்டி வீத எதிர்வுகூறல்களில் பெரிதும் தங்கியிருக்கும்.<br>மூலதன உருவாக்கம் முற்துணியப்பட்ட மட்டங்களை விட குறைவாக அல்லது இடர் எடையளித்த சொத்துக்களில் கூடுதலான அதிகரிப்பாக இருக்க எதிர்பார்க்கப்படுகிறது. |

## காசுப் பாய்ச்சல் முகாமை

| | 2021<br>ரூ. மில் | 2020<br>டுபா. மில் |
|---|---|---|
| **தொழிற்பாட்டுக் காசு மீதி** | **6,174.1** | 5,293.9 |
| தொழிற்பாட்டு சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களிலான மாற்றத்துக்கு முன்பான தொழிற்பாட்டு இலாபம் | **38,837.1** | 20,835.3 |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் (அதிகரிப்பு) குறைவு | **(223,344.5)** | (193,524.2) |
| தொழிற்பாட்டு பரிப்புக்களின் அதிகரிப்பு (குறைவு) | **199,164.1** | 186,754.7 |
| செலுத்திய வரிகள் | **(2,752.8)** | (2,889.0) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நிகர காசு** | **11,903.8** | 11,176.8 |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் நிகர காசு** | **241.6** | (13,516.6) |
| **நிதியியல் நடவடிக்கைகளின் நிகர காசு** | **10,730.0)** | 3,220.0 |
| இறுதிக் காசு மீதி | **7,589.5** | 6,174.1 |

தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் அதிகரிப்பின் விளைவாக, எங்கள் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதி முந்தைய ஆண்டை விட 17.9% அதிகரித்து 2021 இன் இறுதியில் ரூ. 7.7 பில்லியனாகக் காணப்பட்டது. பங்கு இலாப நிதி நடவடிக்கைகள் ரூ. 3.5 பில்லியன் - இது கடந்த ஆண்டை விட 250% அதிகரிப்பு - மற்றும் துணைநிலைப்படுத்தப்பட்ட

கடனைத் திருப்பிச் செலுத்துதல் என்பவை நேர்க் கணிய காசு உருவாக்கத்தை மட்டுப்படுத்தியது.

### நிதி மூலங்கள் மற்றும் நிதியின் பயன்பாடு

முதன்மையாக வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகை மற்றும் பிற மூலங்களில் இருந்து நிதியுதவியுடன், தொடர்ந்து வலுவான திரவத் தன்மை நிலையைக் கொண்டிருப்பதை உறுதிசெய்ய, எங்களின் ஐந்தொகைக் குறிப்பை நாங்கள் தீவிரமாக நிர்வகிப்பதுடன், கடன் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

நிதிச் செலவைக் குறைக்கும் அதே வேளையில், அதன் தற்போதைய முன்னறிவிப்புச் சொத்துத் தளத்தை ஆதரிப்பதற்காக உரிய தொகை, காலம் மற்றும் நிதியின் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றை வங்கி தொடர்ந்து உறுதிசெய்கிறது. போட்டி மற்றும் ஒழுங்குமுறை சூழலைப் பொறுத்து குழுவிற்கான பொருத்தமான நிதியுதவி தந்திரோபாயங்கள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக நிதிச் சந்தைகள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுகின்றன. நிதியிடல் கலவையின் முக்கிய அங்கமாக அதன் வைப்புத் தளத்தை உருவாக்குவதில் வங்கி தொடர்ந்து கவனம் செலுத்தியது.

வங்கியானது வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புத்தொகை, கடன் பத்திரங்கள், தவணைக் கடன்கள், மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்படும் பத்திரங்கள் மற்றும் துணைப் பொறுப்புகள் ஆகியவற்றின் முதன்மையான நிதி மூலங்களாக நம்பியுள்ளது. வாடிக்கையாளர்களிடமிருந்து பெறும் வைப்புக்கள் பொதுவாக குறுகிய முதிர்வுகளைக் கொண்டிருப்பதுடன், மேலும் அவற்றில் பெரும்பாலானவை தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படும். இந்த வைப்புத்தொகைகளின் குறுகிய காலத் தன்மையானது வங்கியின் திரவத்தன்மை அபாயத்தை அதிகரிப்பதுடன், மேலும் போட்டி விலை நிர்ணயம் மற்றும் சந்தை போக்குகளை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் வங்கி இந்த இடரைத் தீவிரமாக நிர்வகிக்கிறது.

அட்டவணை 10

| நிதி மூலங்கள் மற்றும் நிதியின் பயன்பாடு | 2021 ரூபா. மில். | 2020 ரூபா. மில். |
|---|---|---|
| **நிதி மூலங்கள்** | | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான வருமானம் | **136,559** | 125,300 |
| வைப்புக்கள் | **192,555** | 221,910 |
| கடன் பெறுகைகள் | **11,541** | 5,000 |
| முதலீடுகளின் முதிர்வு | **6,993** | 665 |
| ஏனையவை | **890** | 12,061 |
| | **348,538** | 364,935 |
| **நிதிகளின் பயன்பாடு** | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **89,026** | 96,178 |
| கடன் மற்றும் பிற சாதனங்கள் | **129,186** | 122,222 |
| கடன்படுகைகளின் மீள் செலுத்துகை | **11,568** | 35,016 |
| செலுத்திய வட்டி | **76,495** | 87,823 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | **11,591** | 9,574 |
| ஏனைய தொழற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு | **4,510** | 4,212 |
| மூலதனச் செலவினம் | **922** | 1,366 |
| பங்கு இலாபங்கள் | **3,500** | 1,000 |
| செலுத்திய வரி | **9,108** | 6,525 |
| ஏனையவை | **12,633** | 1,019 |
| | **348,538** | 364,935 |

வரைபு 24

நிதிகளின் மூலங்கள்




A – தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் வருமானம்
B – வைப்புக்கள்
C – கடன் படுகைகள்
D – முதலீடுகளின் முதிர்வு
E – ஏனையவை
2021
2020

வரைபு 25

நிதிகளின் பயன்பாடு




A – கடன்கள் மற்றும் முற்பணங்கள்
B – கடன் மற்றும் பிற சாதனங்கள்
C – கடன்படுகைகளின் கொடுப்பனவு
D – செலுத்திய வட்டி
E – ஊழியர்களுக்கான கொடுப்பனவு
F – ஏனைய தொழற்பாட்டு நடவடிக்கைகளின் கொடுப்பனவுகள்
G – மூலதனச் செலவினம்
H – பங்கு இலாபம்
I – செலுத்தப்பட்ட வரிகள்
J – ஏனையவை
2021
2020

2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த வைப்புத்தொகைக்கான கடன்கள் 37.7% ஆக இருந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு அறிக்கையிடப்பட்ட 41.8% ஐ விடக் குறைவாக இருப்பதுடன், இது பெரும்பாலும் ரூபா 59.4 பில்லியன் பெறுமதியான கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொகுதிக் கடன்களின் கீழ் மீள வகைப்படுத்தப் பட்டமையினால் ஏற்பட்டிருக்க் கூடும்.

மேலும், ஆண்டில் திரட்டப்பட்ட வைப்புத் தொகைகளில் 60% அரச பத்திரங்களில் இடர் இல்லாத விகிதத்தில் முதலீடு செய்ய வேண்டித் தேவைப்படுத்தப்படும் சட்டப்பூர்வ தேவைகளால் வங்கி கட்டுப்படுத்தப்படுவதன் விளைவாக குறைந்த வருமானமே கிடைக்கிறது. 2020 இல் 62.7% ஆக இருந்த முதலீட்டுக்கு எதிராக, டிசம்பர் 2021 இன் இறுதியில் 67.4% என்ற அளவில் அரச பத்திரங்கள் மீதான மொத்த வைப்பு விகிதத்தை வங்கி பராமரித்தது.

### கடன் விபரம்

எங்களின் நீண்ட கால மூலதன விரிவாக்கத் திட்டங்கள் மிதக்கும் மற்றும் நிலையான விகிதத்தின் நீண்ட கால கடன் மற்றும் உள்ளே உருவாக்கப்பட்ட நிதிகள் ஆகியவற்றின் மூலம் நிதியளிக்கப் படுகின்றன.

அட்டவணை 11

| கடன் விபரம் | 2021 ரூபா. மில். | 2020 ரூபா. மில். |
|---|---|---|
| குறுங் காலம் (1 வருடத்துக்கு குறைந்த) | **8,974** | 15,536 |
| நடுத்தரளவு காலம் (1 முதல் 3 ஆண்டுகள்) | **20,795** | 19,849 |
| நீண்ட காலம் (3 ஆண்டுகளுக்கு மேல்) | **23,166** | 17,411 |
| | **52,935** | 52,796 |

| கடன் சேர்க்கையின் கட்டமைப்பு | 2021 ரூபா. மில். | 2020 ரூபா. மில். |
|---|---|---|
| மறு கொள்வனவு ஒப்பந்த கடன் படுகை | **8,221** | 14,532 |
| வெளிநாட்டு நாணயக் கடன்படுகை | **7,118** | 6,172 |
| துணைநிலைப்படுத்திய பரிப்புக்கள் | **5,087** | 11,088 |
| தொகுதிக் கடன்கள் | **32,442** | 20,686 |
| ஏனையவை | **67** | 318 |
| | **52,935** | 52,796 |

வரைபு 26

**கடன் சேர்க்கையின் கட்டமைப்பு**




A – மறு கொள்வனவு ஒப்பந்த கடன்படுகைகள்
B – வெளிநாட்டு நாணயக் கடன்படுகைகள்
C – துணைநிலைப்படுத்திய பரிப்புக்கள்
D – தொகுதிக் கடன்கள்
E – ஏனையவை

### கடன் தரப்படுத்தல்

எங்களின் கடன் தரப்படுத்தல்கள் எங்களுடைய சொந்த குறிப்பிடத்தக்க இடர்களால் மட்டுமல்ல, இலங்கையின் இறையாண்மைக் கடன் மதிப்பீட்டில் உள்ள நகர்வுகள் போன்ற முறையான இடர்களாலும் பாதிக்கப்படுகின்றன. இந்த வருடத்தில் பின்வரும் தரமிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளன:

- **ஆகஸ்ட் 2021:** S&P Global இலங்கையின் CCC+ இறையாண்மை மதிப்பீட்டை நிலைத்த நிலையிலிருந்து குறைத்து எதிர்மறையான கண்ணோட்டம் வழங்கி, அடுத்த 12 மாதங்களில் நிதியளிப்பது மிகவும் கடினம் எனவும் அரசாங்கத்தை எச்சரித்தது.
- **அக்டோபர் 2021:** தரப்படுத்தல் முகவரகமான Moody நாடு ஒரு முற்றடக்க கடன் திருப்பிச் செலுத்தும் திட்டத்தைக் கொண்டு வரத் தவறிய அதே நேரத்தில் குறைந்த அந்நியச் செலாவணி இருப்பு இயல்புநிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தியதால்இலங்கையின் கடன் மதிப்பீட்டை Caa1 இலிருந்து Caa2 ஆகக் குறைத்தது.
- **டிசம்பர் 2021:** கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆபத்து அதிகரித்து வர, 2022 இலங்கையின் மோசமான வெளிப்புற திரவத்தன்மை நிலை காரணமாக அந்நியச் செலாவணி கையிருப்பின் வீழ்ச்சி அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டு, வெளிவாரிக் கடன் செலுத்துதல் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதி வரவு காரணமாக ∴ பிட்ச் மதிப்பீடுகள் இலங்கையின் இறையாண்மையைக் CCC இலிருந்து CC க்கு குறைத்து மதிப்பிட்டது.
- **ஜனவரி 2022:** திரவத்தன்மை உட்பாய்ச்சலிலான அழுத்தங்கள், நாணயம் தொடர்ந்து அழுத்தத்தில் இருப்பதால் கீழ் மட்டத்தில் எதிர்மறையான கண்ணோட்டத்துடன் இலங்கையின் வெளி நிதிநிலைமை வரவிருக்கும் காலாண்டு காலத்தில் மேலும் மோசமடையும் எனக் கருதி ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் இலங்கையை முந்தைய CCC+ இலிருந்து CCC க்கு தரமிறக்கியது.

எவ்வாறாயினும், ICRA இக்ரா லங்கா லிமிட்டானது, 100% இலங்கை அரசாங்கத்தின் உரிமை மற்றும் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் மூலம் வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணம் மற்றும் அதன் வட்டிக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 100% வெளிப்படையான உத்தரவாதத்தின் பின்னணியில், 2021 ஆம் ஆண்டில் நிலைத்த கண்ணோட்டத்துடன் (SL) AAA எனும் வழங்குனர் தரப்படுத்தலை வங்கிக்கு அளித்துள்ளது. மேலும் மொத்த வைப்புத் தொகையில் குறைந்தபட்சம் 60% ஐ அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்ய வங்கி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதால், வங்கியின் முதலீட்டுத் தொகுதி குறைந்த அபாயத்தால் வகைப்படுத்தப்படுகிறது.

### பங்கு இலாபம்

வங்கி அரசாங்கத்திற்கு பங்கு இலாபமாக முந்தைய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1.0 பில்லியனுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் ரூபா 3.5 பில்லியனை வழங்கியது. பங்கு ஒன்றுக்கான பங்கு இலாபம் 2020 இல் ரூபா 1.06 ஆகக் காணப்பட்டு 2021 இல் ரூபா 3.72 ஆக வளர்ச்சி கண்டது. பங்கு இலாப செலுத்தல் விகிதத்தின் அதிகரிப்பு காரணமாக 2020 இல் பதிவு செய்யப்பட்ட 10.1 தடவையில் இருந்து 2021 இல் பங்கு இலாப காப்பு விகிதம் 6.4 தடவையாகக் குறைக்கப்பட்டது.

வரைபு 27

**விளைதிறனான பங்கு இலாப வீதம் மற்றும் பங்கு இலாபக் காப்பு**




## திரவத்தன்மை முகாமை

அழுத்தமான சந்தை நிலைமைகளில் திரவத்தன்மை இடர் மதிப்பீட்டிற்கு இணங்க, தே.சே.வங்கி பொருத்தமான திரவத்தன்மை இடையகங்களைப் பராமரித்து, செயற்திறனுள்ள திரவத்தன்மை நிர்வாகத்தைப் பின்பற்றி, கணிக்க முடியாத மற்றும் நீட்டிக்கப்பட்ட திரவத் தன்மைச் சூழல் இருந்த போதிலும் போதுமான திரவத் தன்மை பராமரிக்கப்பட்டதை உறுதி செய்தது.

திடீர் திரவத்தன்மைத் தடங்கல்கள் ஏற்பட்டால், ஒழுங்குமுறை மற்றும் சாத்தியமான அழுத்த சூழ்நிலைகளைச் சந்திப்பதற்காக சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் திரவ சாதனங்களின் சேர்க்கையை வங்கி பராமரிக்கிறது.

இவை பல்வகைப்படுத்தல் மற்றும் திரவத்தன்மையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்குள் நிர்வகிக்கப்படுவதுடன், உயர்தர திரவ சொத்துக்கள் (HQLA) தகுதியானவை உட்பட தடையற்ற இலாபகரமான கருவிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பாசல் III திரவக்காப்பு விகிதத்தின் (LCR) கீழ், இது அழுத்த சூழ்நிலையில் திரவத்தன்மை மூலங்களை வழங்கும்.

பாசல் III இன் கீழ் LCR ஆனது 30 நாட்காட்டி நாள் திரவத்தன்மை இடர் விபரக்குறிப்பு, அழுத்தமான சூழ்நிலையில் சாத்தியமான வெளியேற்றங்களைச் சந்திக்க பொருத்தமான உயர்தர திரவ சொத்துக்களை (HQLA) உறுதி செய்வதன் மூலம் வங்கியின் குறுகிய கால மீளெழுச்சியை ஊக்குவிக்கிறது. பாசல் III நிகர நிலையான நிதி விகிதம் (NSFR) என்பது வங்கித் துறையில் நிதி நிலைத்தன்மை மற்றும் மீளெழுச்சித் தன்மையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டு இருப்பதுடன், அதன் தேவையின்படி வங்கிகள் அமைப்பு தொடர்பாக நிலையான நிதி சொத்துக்கள் மற்றும் இருப்புநிலை நடவடிக்கைகள் சுயவிவரத்தை பராமரிக்க வேண்டும். அதன்படி, கிடைக்கும் நிலையான நிதி என்பது NSFR ஆல் கருதப்படும் ஒரு வருட கால எல்லையில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் மூலதனம் மற்றும் பொறுப்புகளின் பகுதி என வரையறுக்கப்படுகிறது.

உள்நாட்டு வங்கி அலகுக்கான சட்டப்பூர்வ திரவ சொத்து விகிதத்துடன் (SLAR) ஆரோக்கியமான திரவத்தன்மை விவரத்தை வைத்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், அறிக்கையிடல் காலத்தின் முடிவில் 59.63% ஆகக் குறைந்தபட்சத் தேவையான 20% ஐ விட அதிகமாகப் பேணப் படுகிறது. 2021 ஆம் ஆண்டு முழுவதும் 30 நாட்கள் நிகர பண வெளியேற்றத்துக்கான மொத்த உயர்தர திரவ சொத்துக்களால் அளவிடப்பட்ட 100% திரவக்காப்பு விகிதத்தைத் தக்க வைத்துள்ளோம். மேலும், நாங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து நாணயங்களுக்குமான திரவக்காப்பு விகிதமாக 240.43%ஐ சித்தரித்தோம். நீண்ட காலத்தை அளவிடப் பயன்படும் நிகர நிலையான நிதி விகிதம் (NSFR) 2021 முடிவில் சட்ட நியதித் தேவைப்பாடான 100% க்கும் மிகவும் உயர்வாக, 160.78% இல் காணப்பட்டது. 2021 இல் முடிவில் வங்கியின் திரவத்தன்மை விகிதங்கள் பின்வருமாறு இருந்ததுடன் இவை யாவும் குறைந்தபட்சத் தேவைகளுக்கு மேலதிகமாக இருந்தன.

வரைபு 28

**திரவச் சொத்துக்களுக்கான பரிப்புக்கள்**




### நிதியிடல் மற்றும் திரவத்தன்மை இடரை நிர்வகித்தல்

நிதி இடைநிலையின் அடிப்படையில் வங்கியின் முதன்மைப் பங்கு, குறுகிய கால வைப்புகளை நீண்ட கால கடன்களாக மாற்றுவதாகும். இதைப் பின்தொடரும் போது, வங்கிகள் திரவத்தன்மைப் பொருத்தமின்மை மற்றும் அதன் விளைவாக நிதி மற்றும் சந்தை திரவத்தன்மை அபாயங்களுக்கு உள்ளார்ந்த ஆபத்தில் உள்ளன. இதைத் தணிக்க, தே.சே.வ ஒரு வலுவான திவரத் தன்மை இடர் முகாமைக் கட்டமைப்பை இயக்குகிறது, இது சாதாரண மற்றும் அழுத்தமான சூழ்நிலைகளில் தடையற்ற வங்கி செயற்பாடுகளை உறுதிசெய்ய நிதி மற்றும்

அட்டவணை 12

| விபரம் | வங்கி | | |
|---|---|---|---|
| | 2021 | 2020 | மாற்றம் (%) |
| சட்ட நியதி திரவச் சொத்து விகிதம் (SLAR) – குறைந்த பட்சத் தேவைப்பாடு 20% | **59.63** | 69.10 | -9.47 |
| ரூபா LCR - குறைந்த பட்சத் தேவைப்பாடு (2019 - 100%இ 2020 - 90%) | **240.84** | 311.02 | -70.8 |
| அனைத்து நாணய LCR - குறைந்த பட்சத் தேவைப்பாடு (2019 - 100%, 2020 - 90%) | **240.43** | 307.22 | -66.79 |
| ளேகுசு - குறைந்த பட்சத் தேவைப்பாடு (2019 - 100%, 2020 - 90%) | **160.78** | 168.54 | -7.76 |

சந்தை திரவத்தன்மை இடரை மேற்பார்வை செய்கிறது. திரவத்தன்மை இடர் முகாமைக் கட்டமைப்பின் முக்கிய நோக்கங்கள், எல்லா நேரங்களிலும் நிதிச் சந்தை நம்பிக்கையைப் பேணுதல், முக்கிய அக்கறையுள்ள தரப்பினர் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் ஒழுங்கு விதிமுறைத் திரவத் தன்மைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவை அடங்கும்.

நிதி மற்றும் திரவத் தன்மை ஆகியவை வங்கியில் மூலதனத்திற்கு சமமான முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன, ஏனெனில் அவை எல்லா நேரங்களிலும் போதுமான திரவத் தன்மை நிலைகளை பராமரிக்கும் அதே வேளையில் நிலையான நிதி மூலங்களை வழங்குவதற்கு முக்கியமாகும், இதன் மூலம் வங்கி மற்றும் நிதி சேவைகள் அமைப்பின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்துகிறது. பங்குதாரருக்கான வருமானத்தை ஈட்ட தே.சே.வங்கி உந்தப்பட்டாலும், அதன் திரவத் தன்மையை அது ஒருபோதும் சமரசம் செய்யாது.

திரவத் தன்மை இடர் முகாமை செயன்முறை வழக்கமான பகுப்பாய்வு மற்றும் ALCO மூலம் திரவத் தன்மை நிலையை கண்காணித்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கும். வழக்கமான காசுப்பாய்ச்சல் கணிப்புகள், திரவத் தன்மை விகிதங்கள் மற்றும் முதிர்வு இடைவெளி பகுப்பாய்வு போன்ற பகுப்பாய்வுக் கருவிகளை வங்கி சந்தை அணுகலைக் கற்க பயன்படுத்துகிறது, மேலும் திரவத் தன்மை மற்றும் நிதி இடர் ஆகியவை திரவக்காப்பு விகிதம் (LCR) மற்றும் நிகர நிலைத்த நிதியிடல் விகிதம் (NSFR) உள்ளிட்ட அளவீடுகளின் வரம்பைப் பயன்படுத்தி திரவநிலை மற்றும் நிதியீட்டல் இடர் அளவிடப்படுகிறது. திரவத் தன்மை இடர் முகாமை பற்றிய மேலதிக விபரங்களுக்கு பக்கம் 212 முதல் 239 வரையிலான இடர் மீளாய்வு அறிக்கையைப் பார்க்கவும்.

## நிதி செயற்றிறன் கண்ணோட்டம்

2022 ஆம் ஆண்டிற்கான எங்கள் பார்வை, நிலையான வளர்ச்சிக்கான ஒரு தளத்தை உருவாக்கும் வெளிச்சத்தில் ஐந்தொகைக் குறிப்பை விவேகமான முகாமையில் கவனம் செலுத்துகிறது. தற்போதைய போக்குகளின் அடிப்படையில் ஆராயும் போது, குறுகிய மற்றும் நடுத்தர காலப்பகுதியில் பற்றாக்குறை மற்றும் விலையுயர்ந்த மூலதனத்தின் வரம்புகளுக்குள் செயற்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலும் கவனமான மற்றும் அவதானத்துடனான திரவநிலை திட்டமிடலுடன், எமது நிதியீட்ட மாதிரியில் தொடர்ந்தும் செயற்றினுக்கு முன்னுரிமையளிப்போம். இந்த நடவடிக்கைகள் நிலையான மூலதனத்தை உருவாக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதே நேரத்தில் செலவு குறைந்த மூலதனத்திற்கான நமது அணுகலை மேம்படுத்துகிறது.

அட்டவணை 13

| முக்கிய பெறுபேற்றுக் குறிகாட்டி | 2021 பெறுபேறு | 2022 புறநோக்கு | நடுத்தர காலம் முதல் நீண்ட காலத்துக்கான இலக்குகள் |
|---|---|---|---|
| உரிமையாண்மை மீதான திரும்பல் | 33.92% | இலக்கிற்கு அமைவாக உள்ளது | 25% - 30% |
| நிகர எட்டி எல்லை | 3.71% | இலக்கிற்கு அமைவாக உள்ளது | 3.0% - 4.0% |
| வைப்புக்களின் வளர்ச்சி | 15.5% | இலக்கிற்கு அமைவாக உள்ளது | 12% - 15% |
| வட்டி வருமான வளர்ச்சி | 7.3% | இலக்கிற்கு அமைவாக உள்ளது | 10% - 12% |
| மொத்த மூலதனப் போதுகை விகிதம் | 20.83% | சட்ட நியதி குறைந்த பட்சத் தேவைக்கு உயர்வாக உள்ளது | குறைந்த பட்சத் தேவைக்கு உயர்வாக உள்ளது |
| வருமானத்துக்கான கிரய விகிதம் (வரி நீங்கலாக) | 33.3% | இலக்கிற்கு அமைவாக உள்ளது | 35% - 40% |

## 2022 மற்றும் அதற்கு அப்பாலானவற்றக்கான கண்ணோட்டம்

**குறுங்காலம்**

- வட்டி அல்லாத வருமானத்தை மேம்படுத்தல்
- அனைத்து ஒழுங்கு விதிமுறை தேவைகளுக்கும் இணங்கும்போது மூலதனத்தின் உகந்த பயன்பாட்டில் ஈடுபடுதல்

**நடுத்தரளவு காலம்**

- பாதீடு மற்றும் தந்திரோபாய வணிகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளை அடைதல்
- கடுமையான செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்தல்

**நீண்ட காலம்**

- அக்கறையுள்ள தரப்பினருக்கு நிலையான நிதி வருவாயை வழங்கும் திறன்

# வணிக வரிசைகளின் மீளாய்வு

## சில்லறை வங்கியியல்

சேமிப்புக் கணக்குகள், தவணை வைப்புக்கள், அடகு, தனிநபர் கடன்கள், சிறு வணிகக் கடன்கள் மற்றும் அன்றாட நிதி மற்றும் முதலீட்டு ஆலோசனைகள் மூலம் எங்கள் தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தும் முழு அளவிலான உற்பத்திகளை சில்லறை வங்கி வழங்குகிறது. ஒவ்வொரு தொடர்புகளிலும் வாடிக்கையாளர்களுக்கு விதிவிலக்கான அனுபவத்தை வழங்குவதிலும், உண்மையான நிதி முன்னேற்றத்தை அடைய உதவுவதிலும் ஒட்டுமொத்த கவனம் செலுத்தப்படுகிறது.

### 2021 தொழிற்பாட்டு சூழல்

- தொற்றுநோயால் தூண்டப்பட்ட இடையூறுகள் மற்றும் பலவீனமான பேரினப் பொருளாதாரக் கண்ணோட்டத்தைத் தொடர்ந்து முடக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள்.
- கடனுக்கான கேள்வி மற்றும் நிகர வட்டி வரம்புகளில் வட்டி விகிதங்கள் உயரும் தாக்கம்.

### தந்திரோபாய முன்னுரிமை

**அடையாளம் காணப்பட்ட பகுதிகள்/உற்பத்திகளிலான இலக்கு வளர்ச்சியை அடையும் அதேவேளை, சந்தைப் பங்கினை அதிகரித்தல்**

2021 இன் முன்னேற்றக் கட்டம்

- இரட்டைத் தான வளர்ச்சியால் சில்லறைக் கடன் சேர்க்கை அதிகரித்தது
- பொது மற்றும் தனியார் துறைகளின் நிரந்தர ஊழியர்களுக்கு 7.0% சலுகை வீதத்தில் ரூபா 1.23 பில்லியன் பெறுமதியான 382 வீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டன.
- ரூபா. 1.33 பில்லியன் மதிப்புள்ள “கௌரவ பிரஹன்சா” கடன்கள் 489 ஓய்வூதியர்களுக்கு 6.75% வீதத்தில் வழங்கப்பட்டன.
- SME கடன்கள் மூலம் 972 தொழில் முனைவோருக்கு ரூ. 117.1 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டது.
- ரூபா 107.9 மில்லியன் மதிப்புள்ள 195 கல்விக் கடன்கள் வழங்கப்பட்டன.
- ரூபா 3.8 மில்லியன் பெறுமதியான ஒன்பது சூரிய கலக் கடன்கள் வழங்கப்பட்டன.

2022 இன் நோக்கு

- சில வகைகளில் நியாயமான வளர்ச்சி மாத்திரமே காணப்பட்ட போதிலும், சந்தைப் பங்கை அதிகரித்தல்

**கடன் தரத்தினைப் பேணுதல்**

2021 இன் முன்னேற்றக் கட்டம்

- சில்லறைக் கடனுக்கான தொழிற்படா முற்பண விகிதத்தை 3.7% இல் நிர்வகித்தது, இது வங்கித் துறை சராசரியான 4.5% ஐ விட குறைவாக இருந்தது

2022 இன் நோக்கு

- நிகர வட்டி வருமானம் மற்றும் பரிவர்த்தனை எண்ணிக்கைகளில் வலுவான கவனம் செலுத்துதல்
- வசூலித்தல் மற்றும் சேத இழப்புக்களில் கவனம் செலுத்தும் வகையில் ஒரு பாதுகாப்பான கடன் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்

**செயற்பாடுகளை எளிமைப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் எண்ணியல் திறன்களில் முதலீடு செய்வதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்**

2021 இன் முன்னேற்றக் கட்டம்

- இணைய வங்கி வலையமைப்பில் 27,204 புதிய வாடிக்கையாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்

2022 இன் நோக்கு

- பலப்படுத்தப்பட்ட எண்ணியல் விநியோக வழிமுறைகள் மூலம் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்
- தொடர்புபட்ட பொருட்கள் விற்பனை வாய்ப்புகளைப் பின்பற்றுவதன் மூலம் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவதில் கவனம் செலுத்துதல்

## நிதியியல் மீளாய்வு

அட்டவணை 14

| | 2021 ரூபா. மில் | மொத்தத்தில் வீதம் |
|---|---|---|
| வட்டி வருமானம் | **37,966.6** | 28.9 |
| நிகர வட்டி வருமானம் | **17,308.9** | 31.7 |
| நிகர கட்டண மற்றும் தரகு வருமானம் | **2,819.9** | 99.2 |
| வரிக்கு முன்னான நிகர தொழிற்பாட்டு வருமானம் | **17,393.4** | 32.4 |
| பிரிவின் சொத்துக்கள் | **449,936.8** | 28.5 |
| பிரிவின் பரிப்புக்கள் | **1,419,045.5** | 94.4 |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் பணவீக்க உயர்வால் ஏற்படும் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுகள் மற்றும் வங்கி வைப்புகளிலிருந்து எதிர்மறையான வருமானம் காரணமாக சில்லறை வங்கியியல் மூலம் திரட்டப்பட்ட வைப்புக்கள் 5.3% குறைந்து ரூ. 192.6 பில்லியனாகப் பதிவானது. வைப்புக்களின் இந்த மந்தமான வளர்ச்சிக்கான மற்றொரு பங்களிப்பு, தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட அனைத்து விளம்பர பிரச்சாரங்களையும் வங்கி இரத்து செய்தமையாகும்.

வீடமைப்புக் கடன்கள், தனிநபர் கடன்கள், வைப்புத் தொகைக்கு எதிரான கடன்கள், அடகு வைத்தல், வாகனக் கடன்கள் மற்றும் பிற ஊழியர் கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சில்லறைக் கடன் சேர்க்கை வங்கியின் மொத்தக் கடன் தொகுப்பில் 80% ஆக உள்ளது, இது 21.1% அதிகரித்து டிசம்பர் 2021 நிலவரப்படி ரூபா 445.1 பில்லியனாகக் காணப்பட்டது. தனிநபர் கடன்கள் 29.6% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூபா 62.3 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டமை 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதிக திரவத்தன்மை மற்றும் குறைந்த வட்டி வீத நடைமுறையின் பின்னணியில் கடன் இயலளவின் மறுமலர்ச்சியால் இது முதன்மையாக உந்தப்பட்டதாகும். இதேபோல், தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது மற்றும் ஆண்டில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களால், அடகு வைப்பு முற்பணமும் முந்தைய ஆண்டை விட 23.1% அதிகரித்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, அட்டைகளுக்கான முன்னேப்போதும் இல்லாத அளவில் உருவான தேவையில் தொற்றுநோய் சூழல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. அடிக்கடி முடக்கங்கள் மற்றும் பிற கட்டுப்பாடுகள் பணமல்லாக் கொடுப்பனவுத் தீர்வுகளுக்கான கேள்வியை உருவாக்கி அதன் போது அட்டை செயற்பாடுகள் அதிகரித்தது. நடப்பு ஆண்டில் ஆச்சரியப்படத்தக்க வகையில், அட்டை நடவடிக்கைகளின் மூலம் வருமானம் 625.5% அதிகரித்து 2020 இன் ரூபா 5.5 மில்லியனுடன் ஒப்பிடும் போது, 40.1 மில்லியனாக அதிகரித்து அறிக்கையிடப்பட்டது.

### இடர் மற்றும் வாய்ப்புகளுடனான கண்ணோட்டம்

- நியம வைப்பு வசதி வீதத்தில் மேல்நோக்கிய திருத்தம் அதிக வைப்புக்களை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படும் அதே சமயம் நிலையான கடன் வசதி விகித அதிகரிப்பு கடன் வழங்குவதில் குறைவை ஏற்படுத்தும்.
- அதிக பணவீக்கத்தின் சூழல் வாடிக்கையாளர் கொள்வனவு சக்தி, சேமிப்பு திறன் மற்றும் கடன்களுக்கான கேள்வியைப் பாதிக்கும்
- கடன் தாமதக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கடன்களின் திருப்பிச் செலுத்தும் திறன் பற்றிய நிச்சயமற்ற தன்மைகள்
- அதிக எண்ணியல் மயமாக்கல் தொழிற்பாடுகள் மற்றும் தூண்டப்பட்ட வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான தேவை மற்றும் விருப்பங்களின் அதிகரிப்பு

### கூட்டு வணிக வங்கியியல்

கூட்டுவணிக வங்கியியலானது கூட்டு வணிகக் கடன், பல்துறை நிதி, ஒருங்கிணை கடன் மற்றும் கடன் உருவாக்கம் மற்றும் இடர் முகாமை உற்பத்திகளை உள்ளடக்கியது. கூட்டு வணிக நிதிப் பிரிவு பாரிய கூட்டு வணிகங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு நிதி மூலங்களை வழங்கும் வணிகத்தில் உள்ளது. இவ் வணிக வரிசையால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- நிதி வசதிகளை கட்டமைத்தல் (வாடிக்கையாளர்களுக்கான உய்த்தறி உற்பத்திகள்)
- ஒருங்கிணைக்கும் கடன் வசதிகளுக்கான முகவராகப் பங்கு வகித்தல்
- கடன் வழங்குபவர்களுக்கும் கடன் பெறுனர்களுக்கும் இடையே தீர்வு மற்றும் பரிவர்த்தனைகள்
- நம்பிக்கைச் சான்றிதழ்கள், தனியார் வைப்புக்கள் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்தல்
- உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு நிதியளிப்பதில் முன்னணி தொழில்சார் நிபுணத்துவம்

தனியார் துறை நிறுவனங்கள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் பாரிய அளவிலான செயற்திட்டங்களுக்கு மிகப்பெரிய கடன் வழங்குபவர்களில் ஒன்றாக, பொருளாதார நடவடிக்கைகளை இயக்குவதில் இப்பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. உற்பத்தி, மருந்துகள் மற்றும் நிலையான எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெரிய அளவிலான உட்கட்டமைப்பு மற்றும் கலப்பு மேம்பாட்டு திட்டங்களுக்கு நாங்கள் தொடர்ந்து நிதியளிக்கிறோம்.

கூட்டு வணிக வங்கி ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் வகையில் அவர்களுடன் அக்கறை உடையவர்களாக உள்ளனர். நிதித் தேவைகள் மற்றும் நிபுணத்துவம் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்வது அவர்களின் வணிகங்களை நிர்வகிக்கவும் வளரவும் உதவும். எங்கள் உறவுமுறை முகாமையாளர்கள் மற்றும் நிபுணர்களின் குழுவின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்துடன் தொழிற் துறையில், வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நம்பகமான ஆலோசனைக்கான எங்கள் அர்ப்பணிப்பு ஆகியவை வணிகக் கடன் மற்றும் வைப்புகளில் முன்னணி சந்தைப் பங்கைப் பெற்றுள்ளது.

### 2021 தொழிற்பாட்டு சூழல்

- பலவீனமான பொருளாதார சூழல் மற்றும் தொற்றுநோயால் தூண்டப்பட்ட சவால்கள் குறைந்த வட்டி வீத நடைமுறைக்கு மத்தியில் கூட்டு வணிகத் துறைக்கு கடன் வழங்குவதற்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்தியுள்ளது (கட்டுமானம், சுற்றுலா மற்றும் விவசாயம் போன்ற சில துறைகளில் மந்தநிலை)
- தொடர்ந்து திட்டமிடல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களின் தொடர்ச்சி
- மத்திய வங்கியின் கடன் தாமதத் திட்டத்தின் நீட்டிப்பு

### தந்திரோபாய முன்னுரிமை

**வணிகமயமாக்கல் திறன்கள் மூலம் முக்கிய வளர்ச்சித் துறைகளில் கவனம் செலுத்துதல், அதிக இடர் மிக்க துறைகள் (மின்சக்தி, பயன்பாடுகள், உட்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பசுமை வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள்) மீது ஒரு கண் வைத்திருத்தல்.**

**2021 இன் முன்னேற்றக் கட்டம்**

- ரூ. 28.5 பில்லியன் செயற்திட்டக் கடன்கள் வழங்கப்பட்டன, இதில் ரூ. 14.1 பில்லியன் மற்றும் ரூ. 13.2 பில்லியன் முறையே தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டது
- தொழிநுட்பப் பூங்கா விருத்தி நிறுவனத்திற்கு குருநாகலில் ஒரு தொழிநுட்பப் பூங்காவை அமைப்பதற்காக ரூபா 750 மில்லியன் கடன் வசதி வழங்கப்பட்டது. இத் தொழிநுட்பப் பூங்கா கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்து, எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தில் தனியார் முதலீட்டாளர்களை பங்கேற்க அனுமதிக்கும் ஒரு வர்த்தக அமைப்பாக இருக்கும். தொழிநுட்பப் பூங்காவில் மென்பொருள் விருத்தி, நிறுவன வள திட்டமிடல் (ERP), செயன்முறை கட்டுப்பாட்டு மென்பொருள் வடிவமைப்பு, பொறியியல் மற்றும் கணினி உதவி வடிவமைப்பு மென்பொருள் தகவல் தொழிநுட்பத்தால் இயக்கப்பட்ட சேவைகள் (ITES) மற்றும் மின்னியல் வணிகம் உள்ளிட்ட பல்வேறு வகையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் துணை நிறுவனங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2022 இன் நோக்கு**

- அதிக வளர்ச்சி மற்றும் குறைந்த, நடுத்தர இடர் விவரங்கள் கொண்ட துறைகளுக்கு கடன் வழங்குதல்
- சுத்தமான சக்தி வளம் தொடர்பான அரசாங்கக் கொள்கைகள் காரணமாக ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (சூரிய மற்றும் காற்று) ஆகியவற்றிற்கான ஆற்றல் மற்றும் ஆற்றல் துறைக்கு எதிர்பார்க்கப்படும் கடன் வாய்ப்புகள்
- உள்நாட்டு உற்பத்தியை அரசாங்கம் தீவிரமாக ஊக்குவிப்பதன் காரணமாக, ஆடை, விவசாயம் மற்றும் சுரங்கத் தொழில்களில் சிறிய நடுத்தரளவு உரிமங்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் கடன் வாய்ப்புகள்.
- இலங்கையில் எங்களின் கால்தடத்தை விரிவுபடுத்த உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் பங்காளர்களை மேம்படுத்துதல்

**கடன் தரத்தை முகாமை செய்தல்**

**2021 இன் முன்னேற்றக் கட்டம்**

- தொழிற்படாக் கடன் விகிதத்தை 2.1% என்னும் குறைந்த மட்டத்தில் பேணுதல்

**2022 இன் நோக்கு**

- கடன் சேர்க்கைத் தரத்தைப் பேணுதல்

**குறைந்த கிரய நிதியிடல் வாய்ப்புக்களைத் தேடுதல்**

**2021 இன் முன்னேற்றக் கட்டம்**

- இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதற்காக இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இருந்து ஆண்டுக்கு 6.89% என்ற விகிதத்தில் 35 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் வசதி கிடைத்தது.
- செப்டம்பர் 2021 இல் ரூ. 11.5 பில்லியன் சிரேஸ்ட கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டது.

**2022 இன் நோக்கு**

- சாத்தியமான குறைந்த கிரய நிதியிடல் வாய்ப்புக்களை ஆர்வமாகத் தேடுதல்.

**தொழிற்பாடுகளை எளிமையாக்கல் மற்றும் ஒழுங்கு வரிசைப்படுத்தல் மற்றும் எண்ணியல் இயலுமைகளில் முதலீடு செய்தல் ஆகியவற்றின் மூலம் வினைத்திறனைத் தூண்டுதல்**

**2021 இன் முன்னேற்றக் கட்டம்**

- கூட்டு வணிகக் கடன் தொகுதியை T24 (மைய வங்கியியல்) செயற்படுத்துவதற்கான முயற்சி
- கணக்காய்வு சோதனைப் பட்டியலை செயற்படுத்துதல்
- திருத்தப்பட்ட கூட்டுவணிகக் கடன் கொள்கை மற்றும் இடர் அடிப்படையிலான விலைக் கொள்கையை செயற்படுத்துதல்

**2022 இன் நோக்கு**

- கோப்புகள் மற்றும் அனைத்து தரவையும் சிறிய சேமிப்பக சாதனங்களில் காப்புப் பிரதி எடுப்பதன் மூலம் இந்தப் பிரிவு கடனை காப்பகப்படுத்துவதற்கும் எண்ணியல்மயமாக்குவதற்கும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது
- தொலைதூரத்தில் பணிபுரியும் சூழல் தேவைப்படும்போது VPN உரிமங்களைக் கொண்ட மடிக்கணினிகள் கோரப்படும்

## நிதியியல் மீளாய்வு

அட்டவணை 14

| | 2021 ரூபா. மில் | மொத்தத்தில் வீதம் |
|---|---|---|
| வட்டி வருமானம் | **18,729.6** | 14.2 |
| நிகர வட்டி வருமானம் | **6,849.6** | 12.5 |
| நிகர கட்டண மற்றும் தரகு வருமானம் | **22.8** | 0.8 |
| வரிக்கு முன்னான நிகர தொழிற்பாட்டு வருமானம் | **6.0** | 11.3 |
| பிரிவின் சொத்துக்கள் | **247,585.7** | 15.7 |
| பிரிவின் பரிப்புக்கள் | **48,056.8** | 3.2 |

ஜனவரி 1, 2021 அன்று, வங்கி ரூ. 59.4 பில்லியன் பெறுமதியான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடன் நிலுவையான இருந்த மீதியை தொகுதிக் கடன் பத்திரமாக (திறைசேரி உத்திரவாதத்தால் உள்ளடக்கப்பட்டது) மாற்றியுள்ளது. 31 டிசம்பர் 2021 இல் உள்ளபடி இது “கடன் மற்றும் முற்பணம்” வகுப்பில் இருந்து “கடன் மற்றும் பிற சாதனங்கள்” என்னும் வகுப்புக்கு மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 162.9 பில்லியனில் இருந்து 31.6% சரிவினால் 31 டிசம்பர் 2021 நிலவரப்படி கூட்டு வணிகக் கடன் சேர்க்கையில் ரூபா 111.4 பில்லியன் வீழ்ச்சி ஏற்படக் காரணமாக இருந்தது. வங்கிகள் மற்றும் மறு கொள்முதல் ஒப்பந்தத்தின் (rrepo) கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான கடன்களில் ஏற்பட்ட சரிவு, கூட்டு வணிகக் கடன்களின் வளர்ச்சிக்கும் எதிர்மறையாக பங்களித்தது.

வங்கி நெகிழ்வான கொடுப்பனவுத் தெரிவுகள், திரண்ட வட்டி மீதான தள்ளுபடிகள் மற்றும் தற்போதுள்ள தாமதக் காலம் மீதான நீட்டிப்புகள் முதலியவற்றை வழங்கியுள்ளது. திரவத்தன்மை அழுத்தத்தை எளிதாக்கும் வகையில், அத்தகைய கடன்களுக்கான கட்டண விடுமுறைகள் மற்றும் மறுகட்டமைக்கப்பட்ட மூலதனத் திருப்பிச் செலுத்துதலை வங்கி வழங்கியுள்ளது. அதன்படி, ரூபா 552 மில்லியன் மூலதனம் மற்றும் வட்டி கொடுப்பனவுகள் வருடத்தில் ஒத்திவைக்கப்பட்டன.

### இடர் மற்றும் வாய்ப்புகளுடன் கூடிய கண்ணோட்டம்

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை துறை செழிக்கும் என்ற எதிர்பார்ப்பு
- மின்சாரம், உட்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த துறைகளை ஆதரிக்கும் தேசிய கொள்கைகளில் அதிகரிப்பு
- பலவீனமான பேரினப் பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் கொள்கைத் தீர்மானங்களில் தொடரும் சீரற்ற தன்மை

## சர்வதேச வங்கியியல்

வெளிநாட்டு நாணயம் தொடர்பான தீர்வுகள், USD, EUR, GBP, AUD, SGD மற்றும் JPY ஆகியவற்றில் வெளிநாட்டு நாணய வைப்புகளின் (சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு) ஈடுபாடு, உள்நோக்கி மற்றும் வெளிப்புறப் பணம் அனுப்புதல், வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம், இறக்குமதி கடிதம், இறக்குமதிப் பட்டியல்களை கையாளுதல் மற்றும் கப்பல் மற்றும் விமான போக்குவரத்து உத்தரவாதங்களை வழங்குதல் போன்றவற்றின் தீர்வுகளை இந்தப் பிரிவு வழங்குகிறது.

### 2021 தொழிற்பாட்டு சூழல்

- உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளில் மந்தநிலை
- இறக்குமதியைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
- முக்கிய மூல சந்தைகளில் இருந்து அந்நிய செலாவணி வருவாய் குறைவடைதல்
- அந்நிய செலாவணி மீதான அடிக்கடி ஏற்படும் ஒழுங்குமுறை மாற்றங்கள்

செப்டம்பர் 2020 வரை, அமெரிக்க டாலர் (USD) - இலங்கை ரூபாய் (SLR) நாணய மாற்று வீதம் “முகாமை செய்யப்பட்ட மிதக்கும்” அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. இதன் பொருள், நாணய மாற்று விகிதத்தின் முதன்மை நிர்ணயமானது, சந்தையில் USDக்கான கேள்வி மற்றும் வழங்கல் ஆகும். தேவைப்படும் போது, அமெரிக்க டொலரை குறைந்த அளவில் விற்பனை செய்தல் அல்லது கொள்வனவு செய்தல் மூலம் உத்தியோகபூர்வ (மத்திய வங்கி) சந்தை தலையீடு பரிமாற்ற விகிதத்தில் ஏதேனும் பெரிய ஏற்ற இறக்கங்களை சீராக்கியது.

செப்டம்பர் 2021 இல், மத்திய வங்கி (CBSL) அதிகபட்ச வரம்பை வங்கிகள் உட்பட அந்நியச் செலாவணியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அனைத்து அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகளுக்கும் கடைபிடிக்க வேண்டும் என்று ஒரு USD க்கு ரூபா 203 ஏனும் வீதத்தை விதித்தது. இந்த கட்டுப்பாடு இலங்கையின் பொருளாதாரத்தின் செயற்பாட்டில் கடுமையான பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. USD களுக்கான கேள்வி அதிக வரம்பான ஒரு அமெரிக்க டாலருக்கு ரூபா 203 என்னும் மத்திய வங்கியின் கட்டுப்பாடு அடிப்படையில் இந்த விகிதத்தில் மாற்று விகிதம் ”நிலைப்படுத்தப்பட்டது”. வங்கிகள் இந்த ”நிலையான” விகிதத்தில், அனுமதிக்கப்பட்ட அனைத்து வெளிநாட்டு செலவினங்களுக்காகவும் வாடிக்கையாளர்களிடையே தங்கள் போதாத அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்வதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நிர்பந்திக்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக பற்றாக்குறை கடுமையாக அதிகரித்துள்ளது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, மத்திய வங்கி “நிலையான” விகிதத்தை பிடிவாதமாக பராமரிக்கும் போது, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த பற்றாக்குறையின் பாதகமான விளைவுகளை நிவர்த்தி செய்யத் தவறிய பல மேலதிக உத்தரவுகளை வெளியிட்டுள்ளது.

வெளிப்புற அதிர்ச்சிகளின் தீவிரம் மற்றும் உள்நாட்டு முன்னணியில் சமீபத்திய முன்னேற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை 4 மார்ச் 2022 அன்று அத்தகைய பொருளாதார தலையீடுகளை எதிர்கொள்ளும் நோக்கில் ஒரு விரிவான கொள்கைப் பொதியை அறிவித்தது. அந்தச் சூழலில், மாற்று விகிதத்தில் அதிக நெகிழ்வுத்தன்மை சந்தைகளுக்கு அனுமதிக்கப்பட்டதுடன், டொலரின் மதிப்பு ரூபா. 260 ஆகத் தீர்மானிக்கப்பட்டது.

## தந்திரோபாய முன்னுரிமை

**பணமாற்றல் சந்தைக்கான பிரதான காரணியாக உள்ளது சந்தை ஊடுருவல் மற்றும் சந்தை விருத்தி**

**2021 இல் முன்னேற்றக் கட்டம்**

- வெஸ்டர்ன் யூனியன் விரைவுப் பணம் அனுப்பும் சேவையுடன் வணிக நடவடிக்கைகளைத் தொடங்கியது.
- வரையறுத்த ஜப்பான் ரெமிட் பைனான்ஸ் கம்பனியுடன் பணம் அனுப்பும் உறவில் நுழைந்துள்ளது
  - தே.சே.வங்கி மற்றும் பிற உள்ளூர் வங்கிகளில் கணக்கு வரவுகள்
  - சேவை நிலையக் கட்டணங்கள்

**2022 இன் நோக்கு**

- முக்கிய வளர்ச்சி உந்து சந்தைகளில் தொடர்ந்து கவனம் செலுத்துதல்
- பயன்படுத்தப்படாத சந்தைகளில் ஊடுருவி சந்தைப் பங்கை அதிகரித்தல்
- ஏற்றுமதி வர்த்தக நிதி வணிகத்திற்கு அதிக கவனம் செலுத்துதல்
- செயற்பாடுகளை எளிமைப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் எண்ணியல் திறன்களில் முதலீடு செய்வதன் மூலம் செயற்திறனை மேம்படுத்துதல்

## நிதியியல் மீளாய்வு

அட்டவணை 14

| | 2021 ரூபா. மில் | மொத்தத்தில் வீதம் |
|---|---|---|
| வட்டி வருமானம் | **1,186.0** | 0.9 |
| நிகர வட்டி வருமானம் | **614.0** | 1.1 |
| நிகர கட்டண மற்றும் தரகு வருமானம் | **0.3** | 0.01 |
| வரிக்கு முன்னான நிகர தொழிற்பாட்டு வருமானம் | **270.3** | 0.5 |
| பிரிவின் சொத்துக்கள் | **14,480.3** | 0.9 |
| பிரிவின் பரிப்புக்கள் | **15,861.8** | 1.1 |

2021 ஆம் ஆண்டில், வங்கியின் வெளிநாட்டு நடப்பு வைப்புத் தளம் தேக்கமடைந்து 2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 3.3 பில்லியனுக்கு எதிராக 2021 இல் ரூபா 16.4 மில்லியனாகக் குறைவடைந்தது. 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் பிற்பகுதியில் நிர்வாக ரீதியாக டொலரின் மதிப்பு ரூபா 203.0 ஆக்கப்பட்டதன்படி, வங்கி வழிகள் மூலம் நாட்டிற்குள் வரும் அன்னியச் செலாவணியின் அளவு குறைவடைந்ததால், வெளிநாட்டு நாணய வைப்புகளின் சந்தைப் பங்கு 12 அடிப்படைப் புள்ளிகள் குறைந்து கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் பதிவாகியிருந்த 0.84% க்கு எதிராக இவ்வாண்டில் 0.72% ஆக ஆக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் வங்கி விநியோக வழிகள் மூலம் பணியாளர்கள் பணம் அனுப்புவது குறைந்துள்ளது. 2021 இல் வங்கி வழிமுறைகள் மூலமான தொழிலாளர்களின் மாற்றல்கள் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாதவாறு குறைவடைந்தது. எனினும், கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 56.2 பில்லியனுக்கு எதிராக வங்கி இவ்வாண்டில் ரூபா 57.1 பில்லியனை பெற்றுக் கொள்ள முடிந்தது. இதன் விளைவாக, 2020 டிசம்பரில் 4.24% ஆகக் காணப்பட்ட பண அனுப்புகைக்கான சந்தைப் பங்கு 2021 டிசம்பரில் 5.25% ஆக அதிகரித்தது.

தொழற் துறையின் போக்கைப் பிரதிபலிக்கும் வகையில், வங்கியின் மூலமாக மாற்றப்பட்ட வர்த்தகத்தின் அளவு நாட்டில் பூட்டப்பட்ட சூழ்நிலைக்கு மேலதிகமாக அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்கும் அரசாங்கத்தின் முன்முயற்சியுடன் சந்தையில் டொலர்கள் தட்டுப்பாடு காரணமாக வங்கி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் வாடிக்கையாளர்களை சுமூகமான வர்த்தக வணிகங்களை நடத்துவதைத் தடுத்து, இதன் மூலம் வர்த்தக நிதி வணிகத்தை பெரிதும் பாதித்தது.

### இடர் மற்றும் வாய்ப்புகளுடன் கூடிய கண்ணோட்டம்

- நாணய மாற்று விகிதத்தை சுதந்திரமாக அனுமதிக்கும் மத்திய வங்கியின் முடிவைத் தொடர்ந்து, பணம் அனுப்பும் வணிகம் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் புத்துயிர் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இருப்பினும், புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் அறிமுகத்துடன் இணைந்த நாணயப் பெறுமதித் தேய்வின் விளைவு, அந்நிய செலாவணி கையிருப்பு குறைவதால் இறக்குமதி தொடர்பான வர்த்தக நிதி நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திறைசேரி மற்றும் பரிவர்த்தனை

வங்கியின் சந்தை இடர்களான வட்டி வீதம் மற்றும் திரவத்தன்மை இடர்களை சொத்துப் பொறுப்பு முகாமைக் குழு மூலம் நிர்வகிப்பதில் திறைசேரி மற்றும் பரிவர்த்தனை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த பிரிவு அரச பத்திரங்கள், பங்குகள், நாணய மாற்றல்கள், மறு கொள்வனவு ஒப்பந்தக் கடன்கள் மற்றும் தலைகீழ் மறு கொள்வனவு ஒப்பந்தக் கடன் வழங்கல் ஆகியவற்றில் முதலீடு செய்கிறது. இது வங்கியின் திரவத் தன்மைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் கடன் பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

### 2021 தொழிற்பாட்டு சூழல்

- இலங்கை மத்திய வங்கி விலை உறுதியற்ற தன்மையை எதிர்த்து அதன் நாணயக் கொள்கையை கடுமையாக்குவதால், ஏற்படும் மேல்நோக்கிய விகித திருத்தம்
- ஒரு வருடம் மற்றும் நீண்ட கால கடன் பிணையங்களுக்கான விளைவு குறைவாக இருப்பதால், திரவத்தன்மை மிகுந்த குறுகிய கால பிணையங்களை நோக்கிய முதலீட்டாளர் ஈர்ப்பு
- அரச பத்திரங்களின் விளைவு ஓர் நிலையற்ற தன்மைக்கு மத்தியிலும் அதன் மேல்நோக்கிய வேகத்தைத் தொடர்தல்
- உயர் பணவீக்கத்தின் மத்தியில் எதிர்மறை உண்மையான வட்டி வீதங்கள்

## தந்திரோபாய முன்னுரிமை

**வங்கியியல் மற்றும் வியாபார ஏடுகளுக்கு போதிய முக்கியத்துவம் வழங்கி அரச பிணையங்களிலான முதலீடுகள் மற்றும் வங்கியின் வட்டி வீத இடர்களினைத் தந்திரோபாயமான முறையில் முகாமை செய்தல்**

**2021 இன் முன்னேற்றக் கட்டம்**

- அரச பிணையங்களில் ரூபா 170 பில்லியன் பெறுமதியான புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**2022 இன் நோக்கு**

- முதலீட்டின் மீதான திரும்பலை உச்சமாக்குதல் மற்றும் சொத்துப் பொறுப்பு முகாமைத் தொழிற்பாட்டை பலப்படுத்தல்

**தொழிற்பாடுகளை எளிமையாக்கல் மற்றும் ஒழுங்கு வரிசைப்படுத்தல் மற்றும் எண்ணியல் இயலுமைகளில் முதலீடு செய்தல் ஆகியவற்றின் மூலம் வினைத்திறனை இயக்குதல்**

**2021 இன் முன்னேற்றக் கட்டம்**

- திறைசேரி முகாமை முறையை செயல்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள்
- வங்கியில் அதே நேர மொத்த தீர்ப்பனவு (RTGS) முறைமை நிறுவலை முடிவு செய்தது

**2022 இன் நோக்கு**

- திறைசேரி முகாமை முறையை முழுமையாக செயற்படுத்துதல்
- முகவர் நேரடி பங்கேற்பாளர் நிலையை ஆரம்பித்தல்
- பணச் சூழலை மாற்றியமைத்து, நீக்கி, எளிமையாக்குவதன் மூலம், எங்கள் முன்னணி கிளை ஊழியர்களின் திறனை கணிசமாக அதிகரித்தல் அல்லது முக்கிய நிர்வாக நடவடிக்கைகளை மையப்படுத்துதல்
- அதே நேர மொத்த தீர்ப்பனவு (RTGS) முறைமையைச் செயற்படுத்துதல்

## நிதியியல் மீளாய்வு

அட்டவணை 14

| | 2021 ரூபா. மில் | மொத்தத்தில் வீதம் |
|---|---|---|
| வட்டி வருமானம் | **73,556.0** | 56.0 |
| நிகர வட்டி வருமானம் | **29,857.1** | 54.7 |
| நிகர கட்டண மற்றும் தரகு வருமானம் | **–** | – |
| வரிக்கு முன்னான நிகர தொழிற்பாட்டு வருமானம் | **29,866.8** | 51.6 |
| பிரிவின் சொத்துக்கள் | **867,086.3** | 54.9 |
| பிரிவின் பரிப்புக்கள் | **20,098.6** | 1.3 |

கட்டுப்படுத்தப்பட்ட வட்டி விகித முறைமையின் காரணமாக அரச பத்திரங்களுக்கான இரண்டாம் நிலை சந்தையில் செயலற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்தியில், திறைசேரி முதன்மையாக திரவத்தன்மை நிர்வாகத்தில் கவனம் செலுத்தியது. மேல்நோக்கிய விகித திருத்தம் மற்றும் சட்ட நியதி ஒதுக்கங்கள் அதிகரிப்பு ஆகியவற்றின் கூட்டு விளைவு காரணமாக ஆண்டின் இரண்டாம் பாதி சில சவால்களை முன்வைத்தது. இந்த நகர்வுகள் 3-6 மாத வருமான விளைவு எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் குறுகிய தவணைக்கால விருப்பங்களில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் வட்டி விகிதங்களை அதிகரிக்க வழிவகுத்தது.

அந்நியச் செலாவணித் திரவத்தன்மை தொடர்பில், முக்கிய முன்னுரிமையானது, தேறிய திறந்த நிலையை (NOP) நிர்வகிப்பது திறைசேரி ஆகும். 2021 முழுவதும் வங்கியின் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை நிலை வலுவாக இருந்தது.

வங்கியின் திறைசேரிப் பிரிவு 2021 ஆம் ஆண்டிலும் 51.6% வரிக்கு முந்தைய வங்கியின் தொழிற்பாட்டு இலாபத்தில் முக்கியமாக நிகர வட்டி வருமானத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. 2021 இல் நிலவிய சந்தை தளம்பல் பெருக்கங்கள் வங்கியின் திரவத்தன்மை நிலைகளை நிர்வகித்தல் மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முதிர்வு பொருத்தமின்மைகளை கண்காணிப்பதில் பிரிவின் பங்களிப்பு முக்கியத்துவம் மிக்கது. இப்பிரிவு விசேடமாக சந்தையில் அந்நியச் செலாவணிக்கான பற்றாக்குறை நிலவும் போது திரவ நிலை இடையங்களை பலப்படுத்தியது, குறைந்த செலவில் வெற்றிகரமாக நிதி திரட்டியது, மற்றும் அரசபத்திரங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளை நோக்கி நீண்டகால முதலீடுகளை வழிநடத்தியுள்ளது போன்றவற்றை மேற்கொண்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், அரச பிணையங்களின் தொகுதி ரூபா. 834.1 ஆக இருப்பதுடன், பங்குகள் முதலீட்டுத் தொகுதியானது ரூபா. 427.7 மில்லியன் சந்தை விலை மாற்றங்களிலேற்பட்ட இலாபத்தை கொண்டிருப்பதுடன் ரூபா. 5.2 பில்லியன் பெறுமதியான தொகுதியாகவிருக்கிறது.

### இடர் மற்றும் வாய்ப்புகளுடன் கூடிய கண்ணோட்டம்

- நாட்டின் இடர் விபர நிலையைக் கருத்தில் கொண்டு, வெளிநாட்டு நிதியை அணுகுவதில் உள்ள சவால்கள்
- அந்நிய நாணயக் கையிருப்பு குறைதல், தேவைகள், கட்டுப்படுத்தப்பட்ட சந்தை நிதி ஆதாரங்கள் மற்றும் சமீபத்திய பாதகமான விளைவுகளுடன் உலகளாவிய வளர்ச்சிகள் மற்றும் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்ற நிலையில் உயரும் அந்நிய செலாவணி கடன் திருப்பிச் செலுத்துகை அரசாங்கப் பத்திரங்களின் வருவாயில் அதிக அழுத்தம் கொடுக்க எதிர்பார்ப்பு
- மிகவும் பலவீனமான பொருளாதார குறிகாட்டிகள் நாணயத்தை அழுத்த, நிதிக் கொள்கையை மேலும் நாணய சபை கடுமையாக்கக் கூடும்
- வழங்கல் சங்கிலி சீர்குலைவுகள், அதிகரித்து வரும் பணவீக்க விகிதங்கள், பொருளாதாரம் மற்றும் புவிசார் அரசியல் காரணிகள்மேலும் பாதிப்படைந்தால்,

# உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

## இதனுள் உள்ளடங்குபவை எவை

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் என்பது ஒரு நிறுவனத்தால் சொந்தமான, குத்தகைக்கு விடப்பட்ட அல்லது சேவையை வழங்குவதில் பயன்படுத்தப்படும் உற்பத்தி செயன்முறைக்கு பங்களிகும் பௌதீக, மூலப்பொருள் மற்றும் தொழிநுட்ப பொருட்களின் சேகரிப்பைக் குறிக்கிறது.

## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் மூலம் பெறுமதியை உருவாக்குதல்

### எமது அணுகுமுறை

சரியாக முகாமை செய்யப்படும் உற்பத்தி மூலதனம், வாடிக்கையாளர் திருப்தியை உறுதிசெய்ய உகந்த வகையில் வடிவமைக்கப்பட்ட சுய-சேவை வழிமுறைகள் மூலம் வங்கிச் சேவைக்கான தடையற்ற அணுகலை வழங்குவதன் மூலம் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க எங்களுக்கு உதவுகிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், உற்பத்தி செய்யப்பட்ட மூலதனமானது செயற்பாட்டுத் திறன், கிரய வினைத்திறன் மற்றும் வங்கியின் இலாபத் தன்மை மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எங்களிடம் தொடர்ந்து முதலீடுகள் உள்ளன, மேலும் எப்பொழுதும் உயர்தர சொத்துத் தளத்தை உருவாக்கவும் பராமரிக்கவும் முயற்சி செய்கிறோம், அது எங்களுக்கு ஒரு போட்டி நன்மையை வழங்குவதோடு மட்டுமல்லாமல் எங்கள் நீண்ட கால வளர்ச்சியையும் பாதுகாக்கிறது.

### முக்கிய உள்ளீடுகள்

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் – ரூபா 15,046 மில்லியன்
- மூலதனச் செலவு - ரூ. 1,306 மில்லியன்
- பௌதீகத் தொடு புள்ளிகள்
- மெய்நிகர் தொடு புள்ளிகள் /எண்ணியல் வழிமுறைகள்
- எண்ணியல் உட்கட்டமைப்பு

### முக்கிய வெளியீடுகள்

- 27,204 புதிய இணைய வங்கி வாடிக்கையாளர்கள்
- 261 கிளை வலையமைப்புக்கள்
- 292 தன்னியக்க கூற்று இயந்திரங்கள் (ATM)
- 92 பண மறுசுழற்சி இயந்திரங்கள் (CRM)
- 4,064 தபால் நிலையங்கள் மற்றும் துணை அஞ்சல் அலுவலகங்கள்
- ICT முறைமைகள், எண்ணியல் தளங்கள் மற்றும் மேகத்தள (க்ளவுட்) சேவைகள்
- 42 சூரிய கலங்கள் நிறுவப்பட்ட கிளைகள்/ விடுதிகள்

### பெறுமதியை மேம்படுத்துவதற்காக தந்திரோபாய முன்னுரிமைகள்

- நீண்ட கால வளர்ச்சியில் போட்டி நன்மைக்காக உயர்தர சொத்துத் தளத்தை உருவாக்குதல்
- வேலையில்லா நேரம்/ மறுவேலையைக் குறைக்க சொத்துகளின் உகந்த பராமரிப்பை உறுதி செய்தல்
- செலவைக் குறைப்பதற்கான ஒருங்கிணைந்த மூலதனத் திட்டங்களில் ஈடுபடுதல்
- வாடிக்கையாளர் அனுபவத்தை வளப்படுத்த எண்ணியல் உட்கட்டமைப்பை விரிவுபடுத்தி மேம்படுத்தல்
- பௌதீகக் கிளைகளைத் திறப்பதற்கு இடையே பொருத்தமான சமநிலையை பராமரித்தல் மற்றும் எண்ணியல் வழிமுறைகளை அதிகரித்தல்
- தகவல் பாதுகாப்பை வலுப்படுத்துதல்
- ஆரம்பம் முதல் இறுதி வரையான செயற்பாடுகளை தன்னியக்கமாக்குவதன் மூலம் செயற்பாட்டு மேன்மையை அதிகரித்தல்



## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் என தேசிய சேமிப்பு வங்கி கருதுவது எதனை

தே.சே.வ இல், எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனமானது தொழிற்பாட்டு மேன்மையை அடையும் அதே வேளையில் எங்கள் வாடிக்கையாளர்களை வெற்றிகரமாக சென்றடைய உதவும் அனைத்து பௌதீக மற்றும் எண்ணியல் உள்கட்டமைப்புகளாக விளங்குகிறது. எமது பௌதீக உட்கட்டமைப்பில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கிளை வலையமைப்புக்கள், தன்னியக்க கூற்று இயந்திரங்கள், பணச் மீள்சூழற்சி இயந்திரங்கள், விற்பனைப் புள்ளி மையங்கள் மற்றும் கையடக்க விற்பனைப் புள்ளி இயந்திரங்கள், தபால் அலுவலகங்கள், துணை தபால் அலுவலகங்கள் மற்றும் அஞயளா சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் எண்ணியல் தளங்களான இணைய வங்கி, அரட்டை பெட்டி மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவை உள்ளடங்கும்.

### உருவாக்கப்பட்ட பெறுமதி

- சுய சேவை வழிமுறை மூலமான பெறுமதி முன்மொழிவுகள்
- பெறுமதிச் சங்கிலிகள் முழுவதும் எண்ணியல் மாற்றம்
- வணிகத் தொடர்ச்சித் தன்மை
- பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பு நம்பகத்தன்மை
- தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன்

### 2021 இன் முக்கிய சவால்கள்

- எண்ணற்ற மற்றும் மாறிவரும் வாடிக்கையாளர் விருப்பத்தேர்வுகள்
- தொடர்ச்சியான முதலீடுகள் மற்றும் நிதி நம்பகத்தன்மை மதிப்பீடுகள் தேவைப்படும் செயற்திட்டங்கள்
- புவியியல் ரீதியாக விரிவடைவதற்கான வரையறைகள்
- தகவல் பாதுகாப்பு முறைமைப் பராமரிப்பு
- புதிய தொழிநுட்பத்திற்கான வாடிக்கையாளர் எதிர்ப்பு

### 2021 இன் முக்கிய வாய்ப்புக்கள்

- தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் சாத்தியம்
- மேம்படுத்தப்பட்ட வங்கி உற்பத்தித்திறன் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம்
- தந்திரோபாய வேறுபாடுகளாகப் பயன்படுத்தப்படும் எண்ணியல் திறன்கள்
- எண்ணியல் வங்கியியலுக்கான விரைவான அணுகை
- தேசிய சேமிப்பு வங்கியின் துரிதத் தன்மையை அதிகரிக்க முடிதல்

**பொருண்மை மிக்க விடயங்கள்**

**தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்**

**குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**

## பெறுபேற்று அட்டை

### வாடிக்கையாளர் தொடு புள்ளிகள்

| கிளைகளின் எண்ணிக்கை | திறன் வலயங்களின் எண்ணிக்கை | ATM களின் எண்ணிக்கை | CRM களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ↑ 261 | ↑ 40 | ↑ 292 | ↑ 92 |
| 2020 – 259 | 2020 – 39 | 2020 – 289 | 2020 – 72 |

### நிலையான சொத்துக்கள்

| ஆதனம், பொறி உபகரணங்களின் நிகர ஏட்டுப் பெறுமதி | எண்ணியல் மூலதனம் மீதான முதலீடு |
|---|---|
| ↓ ரூபா. 15,046 மில். | ↓ ரூபா. 534.8 மில். |
| 2020 – Rs. 15,316 Mn. | 2020 – Rs. 539.1 Mn. |

## ஏனைய மூலதனங்களுக்கான இணைப்பு

வர்த்தக நாமத் தெரிவுநிலையானது கிளை விரிவாக்கங்கள் மூலம் ஊக்குவிக்கப்படும் அதே நேரத்தில் எண்ணியல் உட்கட்டமைப்பு வினைத்திறனை ஊக்குவிக்கிறது.

பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பின் விரிவாக்கம் வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர்களுடன் வலுவான இணைப்புகளை வழங்குகிறது.

செயன்முறை மேம்பாடுகள் மற்றும் புதிய முறைமைகளை செயற்படுத்துவது புதிய வேலை வாய்ப்புகள், பயிற்சி மற்றும் திறன் விரிவாக்கத்தை உருவாக்குகிறது.

நிலையான உடல் மற்றும் எண்ணியல் உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதனால் கார்பன் தடம் குறைக்கப்படுகிறது.

அதிகரித்த வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஒட்டுமொத்த செலவுகளை குறைக்கிறது.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

பரந்த சமூகத்தினரிடையே கிளை வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம், தீவு முழுவதும் ஸ்மார்ட் மண்டலங்களை அதிகரிப்பதன் மூலம் வங்கிச் சேவைகளுக்கு எளிதான அணுகலை வழங்குதல்.

10 REDUCED INEQUALITIES

எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு ஆகிய இரண்டிற்கும் நிதியளிப்பதன் மூலம் உற்பத்திகள் மற்றும் சேவைகளில் புதுமைகளை ஆதரித்தல்.

11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

13 CLIMATE ACTION

கிளை சக்தித் தேவைகளுக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்தல்.

7 AFFORDABLE AND CLEAN ENERGY

எண்ணியல் வங்கியை ஊக்குவிப்பதன் மூலம் காகித நுகர்வைக் குறைத்தல்.

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

## வர்த்தக விட்டுக்கொடுப்புகள்

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ |
| **நமது பௌதீக வலையமைப்பை விரிவுபடுத்துதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| வாடிக்கையாளர் வசதி மற்றும் அணுகலை மேம்படுத்தல் | | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| கிளை விற்பனை நிலையங்கள் மற்றும் தந்திரோபாய இடமாற்றங்களை அதிகரித்தல் | ✔ | ▲ | ▲ | | | | | | | | ▲ | ▲ | | ▲ | ▲ | | | |
| முதலீடுகள் மீது செலவிடுதல் | ✔ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| சக்தி வினைத்திறன் கொண்ட கட்டடத்தில் முதலீடு | ✔ | ▲ | ▲ | | | | | | | | ▲ | ▲ | | | | | ▲ | ▲ |
| **எமது எண்ணியல் வழிமுறைகளை விரிவுபடுத்துதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் அதிகரிப்பு | | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| காகித நுகர்வு குறைப்பு | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ |
| எண்ணியல் தொழிநுட்பம் மற்றும் உட்கட்டமைப்பில் செலவிடல் | ✔ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ |
| சிறப்பான செயல்பாட்டின் காரணமாக கிரயக் குறைப்பு | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| நிதிச் சேவைகளுக்கான வசதி மற்றும் அணுகலை மேம்படுத்துதல் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| **எண்ணியல் தொழிநுட்பம் மற்றும் உள்கட்டமைப்பில் முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| எண்ணியல் தொழிநுட்பம் மற்றும் உள்கட்டமைப்பில் செலவிடுதல் | ✔ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | |
| புதிய திறன்கள் மற்றும் வேலைகளை வளர்த்துக் கொள்ளல் | ✔ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| தொழிற்பாட்டு மேன்மை காரணமாக கிரய சேமிப்பு (நீண்ட காலத்திற்கு) | | | ▲ | | | | | | | | | | | | | | | |
| புதிய ICT திறன்கள் மற்றும் எண்ணியல் திறன்களை வளர்த்தல் | ✔ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | |
| தற்போதுள்ள சில வேலைகள் தேவையற்றதாகி, தொழிநுட்பத்தால் மாற்றப்படலாம் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |

கு குறுகிய காலம் ம மத்திய காலம் நீ நீண்ட காலம் ▲ பெறுமதி உயர்வு ✔ பெறுமதிக் குறைவு ⊖ பெறுமதிப் பாதுகாப்பு

## பெறுமதி உருவாக்க இயக்கிகள் (பெ.உ.இ)

உரு 12



**I.** எமது பிரசன்னம்

**II.** எமது அடைவை அதிகரித்தல்

**III.** எமது எண்ணியல் தடத்தை விரிவாக்கல்

**IV.** எமது தொழிற்பாட்டு செயன்முறையை மேம்படுத்தல்

## எங்கள் பிரசன்னம் (பெ.உ.இ I)

ஒரு வங்கி என்ற வகையில், தீவில் உள்ள ஒவ்வொரு மாகாணம் மற்றும் மாவட்டத்தை உள்ளடக்கிய எங்கள் வலையமைப்புக்கள் மூலம், எங்கள் உற்பத்திகள் மற்றும் சேவைகளை ஒவ்வொரு சமூகத்திற்கும் மற்றும் சமூகத்தின் ஒவ்வொரு அடுக்குக்கும் கொண்டு வரும் விரிவான தீவு முழுவதும் உள்ளடக்கப் படுவதைப் பெருமையாகக் கருதுகிறோம். இந்த வலையமைப்பில் 261 கிளைகள், 8 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் விசா மற்றும் மாஸ்டர் டெபிட் அட்டை வசதிகளுடன் கூடிய 384 ATM/CRMகள் உள்ளன. நாடு முழுவதிலும் உள்ள பண வைப்பு இயந்திரங்கள் (CDM) மற்றும் பண மறுசுழற்சி இயந்திரங்கள் (CRM) உட்பட 5,400 க்கும் மேற்பட்ட யுவுஆகளை இணைக்கும் வலையமைப்புக்கான அணுகலை வழங்கும் LankaPay Common ATM ஸ்விட்ச்சுடன் நாங்கள் கூட்டு சேர்ந்துள்ளோம்.

எங்கள் கிளைகள் மற்றும் வலையமைப்புக்கள் பற்றிய மேலதிக விவரங்களைப் பார்க்க ஸ்கேன் செய்யவும்.

GRI 102-4 and 6

உரு 13




| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **வட மத்திய மாகாணம்** | 15 | 19 | 1 |
| 6. அனுராதபுரம் | 12 | 16 | 1 |
| 7. பொலனறுவை | 3 | 3 | – |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **வட மேல் மாகாணம்** | 26 | 36 | 5 |
| 8. குருநாகல் | 8 | 13 | 4 |
| 9. புத்தளம் | 18 | 23 | 1 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | 82 | 151 | 24 |
| 10. கொழும்பு | 43 | 85 | 14 |
| 11. கம்பஹா | 27 | 48 | 7 |
| 12. களுத்துறை | 12 | 18 | 3 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **சப்பிரகமுவ மாகாணம்** | 21 | 26 | 2 |
| 24. கேகாலை | 10 | 12 | 1 |
| 25. இரத்தினபுரி | 11 | 14 | 1 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **தென் மாகாணம்** | 39 | 51 | 1 |
| 13. காலி | 15 | 19 | – |
| 14. மாத்தறை | 13 | 17 | 1 |
| 15. அம்பாந்தோட்டை | 11 | 15 | – |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **வட மாகாணம்** | 20 | 27 | 4 |
| 1. யாழ்ப்பாணம் | 14 | 20 | 4 |
| 2. கிளிநொச்சி | 1 | 1 | – |
| 3. மன்னார் | 2 | 2 | – |
| 4. முல்லைத்தீவு | 2 | 2 | – |
| 5. வவுனியா | 1 | 2 | – |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **மத்திய மாகாணம்** | 28 | 36 | 3 |
| 16. மாத்தளை | 4 | 6 | 1 |
| 17. நுவரெலியா | 7 | 8 | 1 |
| 18. கண்டி | 17 | 22 | 1 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **கிழக்கு மாகாணம்** | 17 | 20 | 0 |
| 19. திருகோணமலை | 2 | 2 | – |
| 20. அம்பாறை | 8 | 9 | – |
| 21. மட்டக்களப்பு | 7 | 9 | – |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **ஊவா மாகாணம்** | 13 | 18 | 0 |
| 22. பதுளை | 6 | 11 | – |
| 23. மொனராகலை | 7 | 7 | – |

## எமது அடைவை அதிகரித்தல் (பெ.உ.இ II)

ஒரு அரச வங்கியாக எங்களின் விரும்பத்தக்க நிலையைக் கருத்தில் கொண்டு, நாங்கள் அதை உறுதி செய்ய ஆர்வமாக உள்ளோம் எங்கள் வங்கிச் சேவைகள் பரவலானவையாக மட்டுமன்றி, தொழிநுட்பத்தின் உச்சத்தில் வினைத்திறன் மிக்கவையாகவும் உள்ளன. 2021 ஆம் ஆண்டில் நாங்கள் அடைந்துள்ள பின்வரும் அடைவுகள் எமது விருப்பத்திற்கு எங்களை நெருக்கமாக்கியுள்ளது:

### நாடளாவிய வலையமைப்புக்கள்

எங்கள் வர்த்தக நாமத்தை தனித்துவமாகக் காட்டும்போது, வாடிக்கையாளர்களுக்கு பௌதீக தொடு புள்ளிகளாகச் செயற்படுவதில் கிளைகள் ஒரு தந்திரோபாய வகிபாகத்தினை வகிக்கின்றன. அதே நேரத்தில், வாடிக்கையாளர் நடத்தையில் எண்ணியல் மாற்றம் ஏற்பட்டுள்ளமை, வங்கிச் சேவைக்கான எண்ணியல் தளங்களில் அதிக ஆர்வத்தைக் காட்டுகிறது. இதன் விளைவாக, வங்கியானது தீவு முழுவதும் பௌதீக தொடு புள்ளிகளை நிறுவுதல் மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் பௌதீக மற்றும் எண்ணியல் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துள்ளது.

எங்கள் பெறுமதியை உருவாக்கும் செயற்பாட்டில், தீவு முழுவதும் உள்ள எங்கள் பௌதீக தொடு புள்ளிகள் ஒரு முக்கிய சொத்தாக உள்ளது. எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பைக் கட்டமைக்கும் அதே வேளையில், தந்திரோபாய இடங்களில் புதிய கிளைகளைச் சேர்ப்பதன் மூலம் எங்கள் கிளை வலையமைப்பைப் பெருக்குகிறோம். 2021 ஆம் ஆண்டில், யக்கலமுல்ல மற்றும் அஹுங்கமவில் இரண்டு புதிய கிளைகளைத் திறந்தோம். கிளை இடமாற்றம், விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் ஆகியவை வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் எங்கள் ஊழியர்களுக்கு இனிமையான பணிச்சூழலை வழங்குவதற்கும் ஆண்டு முழுவதும் முழு முயற்சியுடன் தொடர்ந்தன. களனி, கஹபோவில, கஹதுடுவ, தங்கொடுவ, புத்தல, மொனராகலை மற்றும் உலக வர்த்தக மையம் (WTC) ஆகிய இடங்களில் உள்ள கிளைகள் புதிய விசாலமான இடங்களுக்கு மாற்றப்பட்டன.

### 'மாதிரிக் கிளை' எண்ணக்கரு

2017 இல் தொடங்கப்பட்ட, "மாதிரிக் கிளை" கருத்துருவானது, வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன வங்கிச் சேவைகளை வழங்க முற்படும் ஒரு வங்கி முயற்சியாகும், அங்கு ஒவ்வொரு கிளையும் 5S நிலையான நாமம் மற்றும் எண்ணியல் ஒப்பத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட "திறன் மண்டலத்தினைக்" கொண்டுள்ளது. இந்த எண்ணியல் ஊடக ஒப்பத்துடன் (IDMS) எண்ணியல் வங்கியியலுக்கான ATM மற்றும் ஊசூஆ வசதிகள் காணப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், NSB தீவு முழுவதும் 40 திறன் மண்டலங்களை நிறுவியுள்ளதுடன், மேலும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 43 திறன் மண்டலங்கள் என்ற இலக்கை அடையும் என நம்புகிறது.

அட்டவணை 18

| | திறன் மண்டலங்கள் |
|---|---|
| 2018 | 5 |
| 2019 | 34 |
| 2020 | – |
| 2021 | 1 |
| 2022 | 3 |

### மாற்றுத்திறனாளிகளுக்கான அனுகல்

அனைவருக்கும் சமமான அணுகலைப் பெறுவதற்கான எங்கள் முயற்சியின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் உள்ள கிளைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு அணுகலை வழங்க வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. 2021 ஆம் ஆண்டு நிலவரப்படி, 38 வங்கிகளுக்குச் சொந்தமான கிளைக் கட்டிடங்களும், வாடகை அடிப்படையில் இருக்கும் 90% கிளைகளும் ஊனமுற்றோருக்கான அணுகலைப் பெற்றுள்ளன. அனைத்து தே.சே.வ கிளைகளும் சமமான அணுகலுடன் வருவதை உறுதிசெய்யும் அதே வேளையில், எதிர்காலத்தில் உள்ள அனைத்து கிளைகளும் இந்தத் தேவையுடன் கட்டமைக்கப்படும்.

### பசுமைக் கட்டடங்கள்

நாங்கள் எங்கள் சுற்றுச்சூழல் பொறுப்பை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வதுடன், செலவுகளைக் குறைக்க, சக்தியை சேமித்து, நமது கார்பன் தடயத்தைக் குறைக்கவும் பல சக்தி வினைத்திறன் திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம். அனைத்து புதிய கிளைகளும் இயற்கை ஒளி மற்றும் காற்றை மேம்படுத்தி ஆற்றல் நுகர்வைக் குறைக்கும் வகையில் கட்டமைக்கப்படுவதை எங்கள் பசுமைக் கட்டட எண்ணக்கரு உறுதி செய்கிறது. 42 கிளைகள்/விடுதிகள் சூரிய சக்தி முறைமைகளுடன் பொருத்தப்பட்டுள்ளன, மின் கசிவைக் குறைக்க எங்கள் கிளை வளாகத்தில் மெருகூட்டப்பட்ட ஜன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், மேலும் எங்கள் கதிர்காமம் சுற்றுவட்ட பங்களா - பசுமைக் கட்டிடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது - இயற்கை ஒளி மற்றும் அதன் உகந்ததாக்குதல் காரணமாக குறைந்த மின் நுகர்வு. காற்று, ஆற்றல் சேமிப்புக்கு பங்களிக்கிறது. எங்கள் பசுமை எண்ணக்கரு பற்றிய கூடுதல் விவரங்களுக்கு பக்கம் 174 இல் பார்வையிடுக.

## எமது எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல் (பெ.உ.இ III)

தற்போதைய போக்கு வங்கித் துறையில் எண்ணியல் மயமாக்கலின் திசையில் சீராக உள்ளதுடன், வாடிக்கையாளர்கள் வங்கியில் ஈடுபடும் போது எண்ணியல் நுட்பத்தை அதிகரித்துள்ளனர். சுய சேவை வழிமுறைகள் வங்கியை மிகவும் வினைத்திறனாகவும், வசதியாகவும், நெகிழ்வாகவும் மாற்றும். எண்ணியல் செயன்முறைகள் மிகவும் திறமையானதாகவும் அதிக உற்பத்தித் திறனை உருவாக்குவதாகவும் பணியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த நோக்கத்திற்காக, நாங்கள் சுய சேவை முன்மொழிவுகள், பணம் செலுத்துவதில் முதலீடு செய்துள்ளதுடன் எண்ணியல் தீர்வுகள், மற்றும் தகவல் பாதுகாப்பை மேம்படுத்தியமை தொடர்பான எங்கள் முயற்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### எண்ணியல் தளங்கள்

நிகழ்நிலை பயனர்களின் அதிகரிப்பு மற்றும் இளைஞர்களின் தொழிநுட்ப ஆர்வமுள்ள இயல்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு எண்ணியல் வழிமுறைகளில் எங்கள் கவனத்தை நகர்த்தியுள்ளோம். இது இளைய வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும், எங்களின் தற்போதைய வாடிக்கையாளர்களுடன் சிறப்பாகத் தொடர்புகொள்வதற்கும், வங்கிக்கு அதிகத் தெரிவுநிலையை வழங்குவதற்கும் எங்களுக்கு உதவியுள்ளது.

### பாதுகாப்பான அட்டை மூல கொடுப்பனவு

வங்கியானது வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான தனது பொறுப்பை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்வதுடன், நாட்டின் பணமில்லா முயற்சியைப் பின்தொடர்வதில் புதுமையான மற்றும் பாதுகாப்பான கொடுப்பனவுத் தெரிவுகளைப் பெற அனைத்து முயற்சிகளையும் வங்கி மேற்கொண்டுள்ளது. வங்கியில்:

- மோசடியை எதிர்த்துப் போராட, சிப் இயக்கப்பட்ட EMV (ஐரோப்பா, மாஸ்டர் அட்டை மற்றும் விசா) வரவு அட்டைகளின் உள்ளக அச்சிடுதல் ஆரம்பிக்கப்பட்டது.
- 450,000 க்கும் மேற்பட்ட "காந்தப் பட்டை மட்டும்" அட்டைகள் EMV அட்டைகளாக மாற்றப்பட்டன.
- NFC (Near Field Communication) தொழிநுட்பம் அறிமுகப்படுத்தப் பட்டது, இது விசா மற்றும் மாஸ்டர் வரவு அட்டைகளை செயற்படுத்தியது.
- EMV அட்டைகளுக்கு வாடிக்கையாளர் நற்சான்றிதழ்களைப் பாதுகாக்க குறுஞ் செய்தி மூலம் குறியீட்டு இலக்கம் வழங்கப்படும் பசுமைக் குறியீட்டு எண் வழங்குதல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2018 இல் செயற்படுத்தப்பட்ட அட்டை முகாமை முறைமை (CMS) பேணப் பட்டது.
- மண்டலங்களில் "NSB Connect" என்ற பிராண்ட் பெயரில் ஒருங்கிணைந்த.
- அட்டை நிலையம், அடைப்பு நிலையம் மற்றும் ATM உதவிச் சேவை அலகு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தானியங்கு கண்காணிப்பு முறைமைகள் மூலம் வரவு அட்டை தொடர்பான சிக்கல்களைக் கையாளலாம்.
- சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டைதாரர் தரவு பாதுகாப்பு தரநிலையான தரவு பாதுகாப்பு தரநிலை PCI-DSS சான்றுப்படுத்தலை வங்கி கொண்டுள்ளது.

பக்கம் 133 இல் "புலமைசார் மூலதனம்: வலுவான முறைமைகள் மற்றும் செயன்முறைகள்" மற்றும் பக்கம் 235 இல் "தகவல் தொழிநுட்ப இடர்" ஆகியவற்றைப் பார்வையிடுக.

#### கைத் தொலைபேசி கட்டண செயலி

"NSB Pay App" என்ற நாமத்தில் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்டது, NSB கைத் தொலைபேசி கொடுப்பனவு செயலி iOS, Android மற்றும் Huawei போன்ற முன்னணி கைத் தொலைபேசி பயன்பாட்டு தளங்களில் கிடைக்கிறது. இந்த செயலியை அறிமுகப்படுத்தியதன் முக்கிய நோக்கம், வாடிக்கையாளர்களின் தினசரி வங்கித் தேவைகளை எளிதாகவும், பாதுகாப்பாகவும், விரைவாகவும் நிறைவேற்ற ஊக்குவிப்பதாகும்.

செயலி மூலம் வழங்கப்படும் வைப்புக்கள், வங்கி அல்லது பிற வங்கிகளில் உள்ள வேறு எந்தக் கணக்கிற்கும் பணப் பரிமாற்றங்கள், வங்கியிடமிருந்து பெற்ற கடனுக்கான கடன் தவணை செலுத்துதல், பட்டியல் செலுத்துதல், ஞசு குறியீட்டின் கீழ் பணம் செலுத்துதல், அதன் அழைப்பு மையத்துடன் உடனடி இணைப்பு மற்றும் பல வசதிகள் வழங்கப்படுகின்றன.

#### பிற கட்டணத் தீர்வுகள்

பாதுகாப்பான மின்னியல் வழிக் கொடுப்பனவு முறைகளுக்கு மாற்றமடைவதை ஊக்குவிக்க மத்திய வங்கி தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளதால், வங்கி கடந்த காலங்களில் LankaPay – CEFTS, Lanka Pay Online Payment Platform (LPOPP), துரளவியல மற்றும் USD Online போன்ற பல கொடுப்பனவுத் தீர்வு முறைமைகளை உருவாக்கியுள்ளது.

## எமது தொழிற்பாட்டு செயன்முறைகளை மேம்படுத்துதல் (பெ.உ.இ IV)

உலகம் எண்ணியல் மயமாக்கலை நோக்கிப் பரிணமித்து வருகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், இந்த நோக்கத்திற்காக, எங்கள் எண்ணியல் மற்றும் பௌதீக உள்கட்டமைப்புகள் ஒன்றோடொன்று இணைந்து செயற்படுவதை உறுதிசெய்துள்ளோம், இதன் மூலம் மிகவும் தடையற்ற மற்றும் திறமையான தொழிற்பாட்டு செயன்முறைகளை வழங்குகிறோம். எண்ணியல் யுகத்தில் வாடிக்கையாளரின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு விரைவாகப் பதிலளிப்பதில் எங்களின் உறுதியை விட முன்னேறி, எங்கள் முறைமைகளையும் செயன்முறைகளையும் நாங்கள் தொடர்ந்து மேம்படுத்துகிறோம். இது சம்பந்தமாக எங்கள் முன்முயற்சிகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

2019 இல் பெறப்பட்ட, ஒருங்கிணைந்த மைய வங்கியியல் தீர்வு, வைப்புத்தொகைகள், வரவுகள், காசோலைகள், கடன்கள், பிணையங்கள், சேகரிப்புகள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தையும் ஒரே தளத்தில் உள்ளடக்கியது. இது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகிறது:

#### ஒருங்கிணைந்த மைய வங்கியியல் தீர்வு

- வாடிக்கையாளர் நெகிழ்ச்சித் தன்மைக்காக சமீபத்திய மென்பொருளுக்கு IT கட்டமைப்பு மற்றும் முறைமைகளை மேம்படுத்துதல்
- மாற்றங்களுக்கு எளிதாக ஈடு கொடுக்கத்தக்க வகையில் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை எண்ணியல் முறையில் மாற்றியமைத்தல்
- தினசரி தொழிற்பாடுகளுக்கும் வாடிக்கையாளர் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும் சமீபத்திய தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல்
- எமது தொழிற்பாட்டின் வேகம், வினைத்திறன் மற்றும் வலிமையை மேம்படுத்தும் தன்னியக்க செயன்முறைக்கு பின்-அந்த தொழிற்பாடுகளை எண்ணியல் முறையில் புதுப்பித்தல்

உரு 14



மைய வங்கியியல் தீர்வு அதிக அளவிலான தன்னியக்கமாக்கலை விளைவித்துள்ளதுடன், அதிநவீன ஒருங்கிணைந்த வங்கித் தேவைகளை ஒப்படைக்கும் போது இடரற்ற வரிசைப்படுத்தல், பயன்படுத்த எளிதானதாக, ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கும்போது அதிக தொழிற்பாட்டு வினைத்திறனை வழங்குகிறது. ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் இருவரும் உடனடி அர்த்தத்தில் இதன் மூலம் பயனடைகிறார்கள், அதே நேரத்தில் வங்கியானது அதிக உற்பத்தித்திறன் நிலைகள் மற்றும் நீண்ட காலத்திற்கு சந்தைப்படுத்த அதிக நேரம் கொண்ட தரவு சார்ந்த முறைமையாக மாற்றப்பட்டுள்ளது. பணச் சலவைத் தடுப்பு தீர்வு (AML), திறைசேரி முகாமை முறைமை (TMS) மற்றும் மனித வள முகாமை முறைமை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பால் இது மேலும் வலுப்படுத்தப்பட்டு முகாமைக்கு முழுமையான செயன்முறைகளுக்கான அணுகுமுறையை வழங்குகிறது.

### பணச் சலவைத் தடுப்புத் தீர்வு (AML)

#### தொகுதிச் சங்கிலி தொழிநுட்பத்துடன் கூடிய E-KYC

2018 இல், இலங்கை மத்திய வங்கி இலங்கையின் நிதிச் சேவைகளுக்கான சாத்தியமான பலனைக் கண்டறிந்தது மற்றும் வங்கிகள் மற்றும் தகவல் தொழிநுட்பத் துறையின் தன்னார்வ பங்கேற்புடன் தொழில்துறைக்கு இடையேயான ஆய்வை ஆரம்பித்தது. மத்திய வங்கி இலங்கையில் தொகுதிச் சங்கிலி தொழிநுட்ப அடிப்படையிலான நிதிச் சேவை தீர்வுகளுக்கு வழி வகுக்க, பகிரப்பட்ட KYC தீர்வை உருவாக்கி, தொகுதிச் சங்கிலி தொழிநுட்ப அடிப்படையிலான பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரை அறியும் (KYC) முறையை உருவாக்கும் செயன்முறையை ஆரம்பிக்க ஒப்பந்தங்களில் ஈடுபட முடிவு செய்தது. அதன்படி, தொகுதிச் சங்கிலி தொழிநுட்பத்துடன் E-KYC தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை வங்கி மேற்கொண்டுள்ளது.

AML ஆனது மைய வங்கியியல் முறையை நிறைவு செய்து பின்வரும் செயற்பாடுகளை செயல்படுத்தியுள்ளது:

- மோசடி மற்றும் பணச்சலவை நடவடிக்கைகளை தடுக்க பரிவர்த்தனைகளை கண்காணித்தல் மற்றும் தடங்காணல்
- உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுதல் (KYC) மற்றும் வாடிக்கையாளர் தொடர்பான உரிய விழிப்பு கவனாய்வு
- தடைப் பட்டியல்களுக்கு எதிராக வாடிக்கையாளர்களை மற்றும் பரிவர்த்தனைகளை திரையிடும் திறன்
- அனைத்து AML விதிமுறைகளுடனும் இணங்குதல்
- தடுப்புப்பட்டியலில் பட்டியலிடப்பட்ட வாடிக்கையாளர்களின் கண்காணிப்பு மற்றும் தடங்காணல் முறைமை ஊடான முன்னெச்சரிக்கை ஆய்வு

### மனித வள முகாமைத்துவ முறைமை

மனித வள செயற்பாடுகளை தன்னியக்கமாக்கும் நோக்கில், இந்த முறைமை முழுமையான முகாமை செயன்முறையை நிறைவேற்றுவதுடன், பின்வரும் முறையில் தொழிற்பாடுகளின் செயற்திறனை மேம்படுத்துகிறது:

- ஊழியர் தகவலை சேகரித்தல், சேமித்து மதிப்பிடுதல்
- ஆட்சேர்ப்பு மற்றும் இணைத்தலை முகாமை செய்தல்
- ஊதியம் மற்றும் பெறுபேற்று மதிப்பீட்டைக் கண்காணித்தல்
- ஊழியர் நலன்களின் முகாமையை நிர்வகித்தல்
- ஊழியர் கற்றல் மற்றும் மேம்பாடு பற்றிய பதிவுகளைப் பேணுதல்

### Cash@Ease முறைமை

வங்கியின் பண முகாமை செயன்முறையை சீரமைக்க Cash@Ease முறைமை அறிமுகப் படுத்தப்பட்டது. திறைசேரிப் பிரிவு மற்றும் கிளைகள் முழுவதும் பண முகாமை செயன்முறையில் அதிக தொழிற்பாட்டு வினைத்திறனை இது அனுமதித்துள்ளதுடன், மேலும் பின்வருவனவற்றைச் செயற்படுத்தியுள்ளது:

- தினசரி பண நிலைகளை பார்வையிடல்
- திறைசேரியிலிருந்து பணத்தைக் கோருதல்
- நிலுவைகளை முகாமை செய்தல்
- பரிவர்த்தனைகளின் நிகழ்நிலை உறுதிப்படுத்தலை அனுப்புதல்
- பண முகாமை செயன்முறைகளில் அதிகரித்த துல்லியத் தன்மை
- அதிக அளவிலான வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை

## 2022 மற்றும் அதற்குப் பின்னான புறநோக்கு

**குறுங்காலம்**

- அஞ்சல் கொடுப்பனவு விண்ணப்பத்தை செயற்படுத்துதல்
- திறைசேரி முகாமை முறையை செயற்படுத்துதல்
- எண்ணியல் வங்கியியல் அலகை நிறுவுதல்
- இலங்கை மத்திய வங்கியின் எண்ணியல் வரைபடத்தின்படி தொகுதிச் சங்கிலி தொழிநுட்பத்தைப் பின்பற்றல்
- CRM, SMART, ATM மற்றும் எண்ணியல் தளங்கள் வழியாக வாடிக்கையாளர் அணுகலை விரிவுபடுத்துதல்

**நடுத்தரளவு காலம்**

- எண்ணியல் சாதனங்கள் மூலம் எளிதாக அணுகக்கூடிய விரிவான எண்ணியல் வங்கித் தீர்வாக இருத்தல்
- வலுவான தகவல் பாதுகாப்பு முகாமை முறைமையை (ISMS) அமைத்து ISO 27001 சான்றுப் படுத்தலைப் பெறுதல்
- மனிதவள மற்றும் திறைசேரி முகாமை முறைமைகளுடன் மைய வங்கியியல் தீர்வை ஒருங்கிணைத்தல்
- கிளை வலையமைப்புக்களை நெருக்கமாக கண்காணிக்க “நிகழ்நிலை இணக்கப்பாட்டு மதிப்பீடுகளை” மேற்கொள்ளுதல

**நீண்ட காலம்**

- வேகமான மற்றும் தரவு சார்ந்த நிறுவனமாக மாற்றமடைதல்

பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை

# புலமைசார் மூலதனம்



## இதனுள் உள்ளடங்குபவை எவை

புலமை மூலதனம் என்பது ஒரு நிறுவனத்தின் சில வகையான பொருளாதார நன்மைகளை வழங்கத்தக்க ஒருங்கிணைந்த அறிவு மற்றும் வளங்களின் பெறுமதியைக் குறிக்கிறது. இது ஒரு நிறுவனத்தில் உள்ள தொழிநுட்ப நிபுணத்துவம் மற்றும் செயன்முறை அறிவை உள்ளடக்கி இருப்பதுடன், நிறுவனத்தின் அருவச் சொத்துக்களை அடையாளம் காணவும் அவற்றை அர்த்தமுள்ள வகைகளாகப் பிரிக்கவும் பயன்படுகிறது. எனவே, புலமை மூலதனத்தை உச்சப்படுத்துவதில் உறுதியாக இருக்கும் எந்தவொரு நிறுவனமும், கவனம் செலுத்திய அறிவைப் பெறுதல் மற்றும் ஊழியர்களுக்கான பயிற்சிக்கான விரிவான திட்டங்கள் இருப்பதை உறுதி செய்யும் அதே நேரத்தில் அதை குறிப்பிட்ட போட்டி நன்மைகளாக மாற்றவும் பார்க்கிறது.

**புலமை மூலதனத்தின் மூலமாக பெறுமதியை உருவாக்குதல்**

### எமது அணுகுமுறை

எமது பொருளாதாரப் பெறுமதிக்கான மூலமானது எமது திடமான சொத்துக்கள் மற்றும் வருமானம் உழைக்கும் சொத்துத் தளத்தில் மாத்திரமன்றி, அக்கறையுள்ள தரப்பினர்களது தேவைக்கு பொருத்தமானவர்களாகவும் எமது சத்தியத்துக்கு உண்மையாவர்களாகவும் இருக்கும் அதே வேளை அந்த சொத்துக்களை நாம் முகாமை செய்யும் மற்றும் பயன்படுத்தும் முறை மற்றும் உயர்ந்த பெறுமதி மற்றும் வினைத்திறனான வளப் பாவனை ஆகியவற்றை அடைந்து கொள்ளும் வகையில் மாற்றத்துக்கு ஈடு கொடுத்தல் ஆகியவற்றிலும் தங்கியிருக்கின்றது என நாம் நம்புகின்றோம். அவசியமான வகையில், அது நாம் எமது புலமைச் சொத்துக்களை முகாமை செய்யும் விதத்தில் தங்கி இருக்கின்றது.

நாம் எமது புலமைச் சொத்துக்களை பலமான செயன்முறைப் பாய்ச்சல்கள், ஏனைய அமைப்புக்களுடனான பங்குடமை மற்றும் கற்றல் மற்றும் புத்தாக்கத்துக்கான ஈடுபாடு ஆகியவற்றின் மூலமாக விருத்தி செய்கின்றோம். அடுத்த கட்டமாக, புதிய உற்பத்திகளின் உருவாக்கம் மற்றும் முறைமைகள் மற்றும் செயன்முறைகளுக்கான மேம்பாடுகள் ஆகியவற்றின் மூலமாக உருவான வினைத்திறன் மூலமாகக் கட்டி எழுப்பப்படுகிறது.

மேலும், வாடிக்கையாளர் மையப்படுத்திய வணிகத் தந்திரோபாயத்தை மேம்படுத்தும் அதே வேளை, எமது கூட்டாண்மை விம்பத்தை பலப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் தொழிற்பாட்டுக் கிரயங்கள் ஆகியன குறைவடைவதுடன் வாடிக்கையாளர் உறவுமுறை முகாமை மற்றும் வணிகப் புலனறிவு ஆகியன மேம்படுத்தப்படுகின்றன. எமது தந்திரோபாயத்துக்கு இயலுமை அளிக்கத்தக்க மற்றும் மேம்பாடுகள் மூலமாக எமது பெறுமதி முன்னறிவித்தலை அதிகரிக்கத்தக்க முக்கிய திறன்களை ஆட்சேர்ப்பு செய்து தக்க வைத்துக் கொள்வதன் மூலம் நாம் மேற்கூறிய அனைத்து விடயங்களையும் நிலைபேறானவையாக மாற்றிக் கொள்கின்றோம்.

### முக்கிய உள்ளீடுகள்

- ஒருங்கிணைந்த வணிகத் தந்திரோபாயம்
- சிறந்த நடைமுறை ஆளுகை
- தந்திரோபாய வருவாக்கத்துக்கான துரித அணுகுறை மற்றும் சிறந்த தந்திரோபாய முன:னுரிமைகளின் நிறைவேற்றல்
- தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் மீதான இணைப்பு
- கூட்டாண்மை கலாச்சாரம்

### முக்கிய வெளியீடுகள்

- PCI DSS இணக்கப்பாட்டை அடைந்து கொண்ட ஒரேயொரு அரச வங்கி
- சர்வதேச நியமங்கள் மற்றும் அடுத்த தலைமுறை அம்சங்களுக்கு இணக்கமான முறையில் இடர் நிகழ்வுத் துலங்கல் இயலுமைகளைப் பேணும் வகையில் தகவல் பாதுகாப்பு பிரிவு மற்றும் ஒரு மூன்றாம் தரப்பு நிர்வாகத்தின் கீழ், 24/7 பாதுகாப்பு செயற்பாட்டு மையம் (SOC)
- இலங்கை மத்திய வங்கியின் “தொழிநுட்ப இடர் மீளெழுச்சிக்கான வழிகாட்டல்” முன்விபரணத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான அனைத்து பெறுபேற்று இலக்குகளையும் எட்டியுள்ளது.
- கைத் தொலைபேசி செயலி
- ஒரு முன்னணி வழங்குநரால் மனித வள தகவல் முறைமை அமுலாக்கப் பட்டது.

### பெறுமதி மேம்பாட்டுக்கான தந்திரோபாயங்கள்

- இலக்கு வைக்கப்பட்ட ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் நிபுணத்துவத்தின் மூலம் அறிவுசார் மூலதனத்தை உச்சமாக்கல்
- வணிக செயன்முறைகள் மற்றும் முகாமை முறைமைகளில் வினைத்திறனை மேம்படுத்துதல்
- நெறிமுறை சார்ந்த நடைமுறைகள், நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் மூலம் கூட்டாண்மை விம்பம் மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத்தை வலுப்படுத்துதல்
- தகவல் தொழிநுட்ப சொத்துக்களை அதிகரித்தல்
- புதுமைகளை ஊக்குவிக்கும் வேலைக் கலாச்சாரத்தை வளர்த்தல்
- சூழலியல் வணிக நடைமுறைகள் மூலம் சுற்றுச்சூழல் நிலைபேறான முன்னுரிமை அளித்தல்



## புலமைசார் மூலதனம் என்தபனால் தேசிய சேமிப்பு கருதுவது

தேசிய சேமிப்பு வங்கியில், அறிவுசார் மூலதனம் என்பது நமது வங்கியின் உள்ளார்ந்தமான பரந்த அறிவு மற்றும் திறனைக் குறிக்கிறது. அறிவுசார் மூலதனம் மனித மூலதனத்திலிருந்து வேறுபட்டு இருப்பதுடன், மீளப் பிரதி செய்யப்படத் தக்கதாக இருப்பதுடன், பகிர்ந்து கொள்ளப்படவும் முடியும். இது நாம் வணிகம் செய்யும் விதம் தொடர்பில் நம்மை வேறுபடுத்திக் காட்டுவதுடன் மேலும் இது நிலைபேறான வளர்ச்சியின் முக்கிய உந்துதலாகவும் அமைந்து உள்ளது. எமது உள்முக அறிவு என்பது எமது அக்கறையுள்ள தரப்பினருக்கான பெறுமதியை உருவாக்க அவசியமான வாடிக்கையாளர் விசுவாசம், பண்டக் குறி மற்றும் நற்பெயர், உள்ளக முறைமைகள் மற்றும் செயன்முறை, வணிக நெறிமுறைகள், கூட்டாண்மை பெறுமதிகள், கொள்கைகள் மற்றும் எமது கூட்டாண்மை கலாச்சாரம் உள்ளிட்ட அருவச் சொத்துக்களை உள்ளடக்கிய அனைத்து மூலதனங்களின் உச்ச சேர்க்கையாகும்.

### உருவாக்கப்பட்ட பெறுமதி

- வலுவான வர்த்தகநாம நிலைப்படுத்தல்
- தொடர்ச்சியாகப் பேணப்படும் யுயுயு கடன் தரப்படுத்தல் மதிப்பீடு
- வைப்புத் தொகை மற்றும் வட்டி மீதான 100% அரச உத்தரவாதம

### 2021 இன் போதான முக்கிய சவால்கள்

- கொவிட்-19 காரணமாக தொழிற்பாட்டு சூழலில் ஏற்படும் வேகமான மாற்றம்
- புதிய தொழிற்பாட்டு சூழலில் வணிக தொடர்ச்சியை உறுதி செய்தல்
- இணையவழி மீளெழுச்சி மற்றும் தகவல் பாதுகாப்பு
- மூலதன ஒதுக்கீட்டில் உள்ள வரையறைகள் காரணமாக பரஸ்பர நீங்கும் திட்டங்கள்
- மாற்றத்திற்கான தடைகள்
- வர்த்தகநாம பெறுமதியை நிலைநிறுத்துதல்

### 2021 இன் போதான முக்கிய வாய்ப்புக்கள்

- பயனுறுதி மிக்க அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பு
- மேம்படுத்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல்
- புத்தாக்கம் மற்றும் துரித மாறும் தன்மை
- எண்ணியல் மயமாக்கல்
- பயனுறுதி மிக்க சூழலிய, சமூக மற்றும் ஆளுகை தந்திரோபாயங்களை செயற்படுத்துதல்

**பொருண்மை மிக்க விடயங்கள்**



**தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்**



**குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்**



### பெறுபேற்று அட்டை

**பண்டக் குறி**

| வர்த்தகநாமப் பெறுமதி | வர்த்தகநாம தரப்படுத்தல் |
|---|---|
| ரூ. 30.73 | AA |
| 2020 – ரூ. 28.12 பில். | 2020 – AA |

**கடன் தீர் இயலுமை**

கடன்தீர் தரப்படுத்தல்

AAA

2020 – AAA

**உள்முக அறிவு**

10ஆண்டுக்கு மேற்பட்ட சேவையைக் கொண்ட ஊழியர்கள்

1,469

2020 – 1,148

## ஏனைய மூலதனங்களுக்கான இணைப்புக்கள்

வணிக செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் உட்கட்டமைப்பு, முறைமைகள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துதல்

எமது பெறுமதிகள், வணிக நெறிமுறைகள் மற்றும் இடர் முகாமைக் கட்டமைப்பு ஆகியவற்றின் விபரங்கள் மீது கவனம் செலுத்துவதன் மூலம் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு, நம்பிக்கையை வளர்க்கும் நற்பெயரை உருவாக்குதல்

பயிற்சிளித்தல் மற்றும் விருத்திக்கான முதலீடு எமது ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவங்களை மேம்படுத்துவதன் மூலம், எமது தொழிற்பாட்டு மேன்மைக்குப் பங்களிப்பு செய்கின்றது

நிலைபேறான தன்மை முன்முயற்சிகளில் எமது கவனம் எமது அறிவியல் அடிப்படையிலான அணுகுமுறையால் வலுப்படுத்தப்பட்டு, அதன் மூலம் அக்கறையுள்ள தரப்பினரின் நம்பிக்கையை ஊக்குவிக்கிறது.

வர்த்தகநாம மற்றும் ஊழியர்களின் விருத்திசார் துறைகளில் அதிகரித்த முதலீடு அதிக கூட்டாண்மை நற்பெயருடன் அக்கறையுள்ள தரப்பினர் நம்பிக்கையையும் அதிகரிக்க வழிவகுக்கிறது.

## நிலைபேறான தன்மை இலக்குகளுக்கான பங்களிப்பு

வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க ஊழியர்களின் புலமைசார் மூலதனத்தைக் கண்டறிந்து மேம்படுத்துதல்

தொழிநுட்பம் மற்றும் உட்கட்டமைப்பின் மீது முதலீடு செய்வதன் மூலம் புதுமை சார்ந்த கலாச்சாரத்தை ஊக்குவித்தல்

ஊழியர்களிடையே சமத்துவமின்மையைக் குறைக்க புலமைசார் மூலதனத்தில் முதலீடு செய்து, அதன் மூலம் வெற்றிக்கான சம வாய்ப்புகளை உருவாக்குதல்

வங்கி முழுவதும் நெறிமுறை நடத்தை, சிறந்த ஆளுகை மற்றும் இணக்கப்பாட்டை ஊக்குவித்தல்

## வர்த்தக விட்டுக்கொடுப்புகள்

| | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி மீதான முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| புதிய திறன்கள் மற்றும் புத்தாக்கம் | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | | |
| மேம்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் | ▲ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | |
| பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி மீதான செலவீடு | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | |
| **எண்ணியல் உட்கட்டமைப்பு மற்றும் வலையமைப்பை விரிவுபடுத்துதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல், வசதி மற்றும் அணுகல் | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | | |
| நிதிசார் உள்ளடக்கம் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| எண்ணியல் உட்கட்டமைப்பின் மீதான முதலீடுகளில் செலவிடுதல் | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | | |
| புதிய உட்கட்டமைப்பு உபகரணங்கள் | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | |
| **புதிய மற்றும் மேம்படுத்தும் எண்ணியல் தொழிநுட்பம் மீதான முதலீடுகள்** | | | | | | | | | | | | | | | | | | |
| முறைமைகள், செயன்முறைகள் மற்றும் உபகரணங்களின் மீதான மேம்பாடு | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | | | |
| வினைத்திறன் மற்றும் தொழிற்பாட்டு மேன்மை | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| எண்ணியல் தொழிநுட்பம் மீதான முதலீடுகளில் செலவிடுதல் | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ |
| உற்பத்தித்திறன் காரணமான கிரய சேமிப்பு | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| காகித நுகர்வு குறைப்பு | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ |
| புதிய திறன்கள் மற்றும் புத்தாக்கம் | ▼ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | |
| கையேட்டு தொழிற்பாடுகளின் குறைப்பு | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |

கு குறுகிய காலம் ம மத்திய காலம் நீ நீண்ட காலம் ▲ பெறுமதி உயர்வு ▼ பெறுமதிக் குறைவு ⊖ பெறுமதிப் பாதுகாப்பு

## பெறுமதி உருவாக்கத்துக்கான இயக்கிகள் (பெ.உ.இ)

உரு 15




## கௌரவம் மிக்க நிறுவனமாக கட்டியெழுப்புதல் (பெ.உ.இ I)

### ஆழமாக வேரூன்றிய ஒருங்கிணைந்த சிந்தனை

வங்கியின் ஒவ்வொரு தொழிற்பாட்டையும் ஒன்றிணைக்கின்ற ஒருங்கிணைந்த சிந்தனையே எங்கள் வணிகத்தின் மையத்தில் உள்ளது. பெறுமதி உருவாக்கம் தனித்தனியாக இடம்பெறுவதில்லை என்பதையும், நமது தந்திரோபாயத் தெரிவுகள் நீடித்த தாக்கங்களைக் கொண்டிருக்கின்றன என்பதையும் அவை எமது புலமைச் சொத்துக்களின் முகாமையில் தாக்கம் செலுத்துவதுடன், எமக்குத் தனித்துவமான போட்டி நன்மையினையும் வழங்குகின்றன என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஒவ்வொரு மூலதனத்தின் இடர்கள், வாய்ப்புகள், ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தன்மை மற்றும் நமது தந்திரோபாயத் தேர்வுகளில் உள்ளார்ந்த சாத்தியமான வர்த்தக விட்டுக் கொடுத்தல்களைக் கருத்தில் கொள்ளும்போது அறிவுசார் மூலதனம் முன்னணியில் திகழ்கின்றது. தந்திரோபாயம் சார்ந்த தாக்கங்கள் வங்கியை நேரடியாகப் பாதிக்கும் நிலையில், மிகவும் கொந்தளிப்பான சூழலில், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நோக்கங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்த இது வங்கிக்கு வழிகாட்டுகிறது. புலமைசார் மூலதனம், செயல்பாடுகளுக்குள் ESGக்கான நமது அர்ப்பணிப்பைக் கருத்தில் கொள்வதுடன், நிலைபேறான பெறுமதி உருவாக்கத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஐக்கிய நாடுகளின் பயணத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் தாக்கத்திற்கு நம்மை நாமே பொறுப்பேற்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த பல நடவடிக்கைகளை நாங்கள் கண்காணிக்கிறோம். இவை அர்த்தமுள்ள முக்கிய பெறுபேற்றுக் குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, நமது ஒவ்வொரு தந்திரோபாய நோக்கங்களுக்கும் எதிராக அளவிடப்படுகின்றன.

வணிகத்திற்கான எங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறையின் ஆழமான புரிதலுக்காக பக்கங்கள் 4 மற்றும் 5 இனைப் பார்க்கவும்.

### வர்த்தகக் குறியை நோக்கி

1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, எங்களின் முன்னோடியான இலங்கை சேமிப்பு வங்கியின் (CSB) 187 வருட வங்கியியல் பாரம்பரியத்துடன் இணைந்த வகையில் - தே.சே.வங்கி இலங்கையில் ஒரு வீட்டுத் துறைக்கான பெயராக மாறியுள்ளது.

- அனைத்து வைப்புத் தொகைகள் மற்றும் அதன் மீதான வட்டி மீதான உரிமை கோரல்களை நிலைநிறுத்துவதற்கான தனித்துவமான அரச உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பை
- வர்த்தகக் குறியீடு இலங்கையின் முதன்மையான சேமிப்பு வங்கியாக நம்பிக்கைக்கு ஒத்ததாக உள்ளது
- பல நிதி மற்றும் நிதி அல்லாத அடைவு மட்டங்களை எட்டியிருக்கிறோம்.
- தீவு முழுவதிலும் உள்ள பரந்த வலையமைப்பு பரந்த அணுகலை வழங்குகிறது

### எமது வர்த்தககநாமப் பெறுமதி மற்றும் தரப்படுத்தல் மதிப்பீடுகளை அதிகரித்தல்

2021 ஆம் ஆண்டிற்கான நிலையான கண்ணோட்டத்துடன் [SL] AAA இன் வழங்குநர் மதிப்பீட்டை ICRA லங்கா லிமிடெட் மீண்டும் உறுதிப்படுத்தியதால், நாங்கள் எங்கள் வர்த்தகக் குறி பெறுமதியில் தொடர்ந்தும் நாம் உயர்வாக இருந்தோம். இது 100% அரச உரிமை மற்றும் வைப்பு மற்றும் வட்டிக்கான உத்தரவாதம் மற்றும் சிறந்த கடன் சேர்க்கை மற்றும் குறைந்த அளவிலான இடர் முதலீட்டைப் பிரதிபலிக்கிறது. இலங்கையில் 5 ஆவது பெறுமதியான வர்த்தக நாமமாக கருதப்படுவதில் பெருமிதம் கொள்வதுடன், 2021 இல் எமது வர்த்தகக் குறிப் பெறுமதி ஆண்டுக்கு 9.3% அளவில் உயர்ந்து ரூபா 30.73 பில்லியன் பெறுமதியில் காணப்பட்டுள்ளது. "Brand Finance" நிறுவனத்தினால் மே 2021 ஆண்டு அறிக்கையின்படி, வர்த்தககநாம மதிப்பீடு AA மட்டத்தில் 2021 முழுவதும் ஸ்திரத்தன்மையைப் பேணியது.

வரைபு 29

தே.சே.வங்கி வர்த்தகக் குறி பெறுமதி




### உள்ளார்ந்த அறிவு

தே.சே.வங்கி ஆனது 1972 ஆம் ஆண்டு முதல் எங்களது 49 ஆண்டுகால சேவையின் அடிப்படையில் தொழிநுட்ப அறிவின் வளமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளதுடன், மேலும் இது எங்களின் போட்டி நன்மையின் அடிப்படைப் பகுதியாக நாங்கள் கருதுகிறோம். எங்களின் மறைமுக அறிவு பின்வரும் காரணிகளின் உச்சமாக இருப்பதுடன், மேலும் வங்கித் துறையின் உச்சக்கட்டத்தில் இருக்கும் வகையில் தரவுத்தளத்தை நாங்கள் தொடர்ந்து புதுப்பித்து வருகிறோம்.

தசாப்த காலங்களாக முதிர்ச்சியடைந்த செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள்.

அனுபவம் வாய்ந்த ஊழியர்கள்:

- 32% க்கும் அதிகமான ஊழியர்கள் 10 வருடங்களுக்கும் மேலாக சேவையில் உள்ளவர்களே
- 90% ஆன கூட்டாண்மை முகாமை உறுப்பினர்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலான சேவையுடன் உள்ளவர்களே
- பல்வகைமையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட பல்வகைமை மிக்க ஊழியர்கள்:
- வெவ்வேறு புவியியல் அமைவுகள், தலைமுறைகள் மற்றும் பின்னணிகள்
- 98.6% அளவிலான உயர் ஊழியர்கள் தக்கவைப்பு விகிதம்

உள்முக அறிவு

வலுப்படுத்தும் முறை

- ஒவ்வொரு ஊழியரிடமும் உள்ள உள்முக அறிவு இருப்பினை அடையாளம் காணுதல்
- உயர் உள்முக அறிவைக் கொண்ட ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்ளுதல்
- ஊழியர் ஈடுபாட்டின் உயர் மட்டத்தை எளிதாக்கும் மனித வளக் கொள்கைகள்
- கட்டமைக்கப்பட்ட பயிற்சியளித்தல் திட்டங்கள்
- அறிவுப் பகிர்வு கருத்தமர்வுகள்
- வழிகாட்டுதல் மற்றும் பிற பயிற்சியளித்தல் கருவிகள்
- அனுபவம் வாய்ந்த ஊழியர்களால் உள்முக பயிற்சியித்தல் மற்றும் ஊக்குவித்தல் திட்டங்கள்

### வர்த்தகநாம விம்பத்தை மேம்படுத்துதல்

வங்கியின் ஊக்குவிப்பு முறைகள் சமூகத்தின் அனைத்து அடுக்குகளையும் உள்ளடக்கிய பரந்த மக்கள் தொகையை இலக்காகக் கொண்டுள்ளன. எனவே, எங்கள் வர்த்தகக் குறி விம்பத்துக்கு அதிகபட்சத் தெரிவு நிலையை வழங்க எண்ணியல் மற்றும் பௌதீக விளம்பர வழிகளை நாங்கள் பயன்படுத்தியுள்ளோம். நாங்கள் வெகுஜன ஊடகங்கள், சமூக ஊடகங்கள், இணைய அடிப்படையிலான தளங்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் தீவு முழுவதும் பேருந்து நிறுத்தங்களில் பிரசன்னமாகி இருக்கிறோம் என்பதை இது குறிக்கிறது. பல்வேறு நிகழ்வுகள், கண்காட்சிகள், அனுசரணைகள் மற்றும் பல்வேறு தேசிய, சமூக, கலாச்சார மற்றும் மத நிகழ்வுகளுக்கு நாங்கள் அனுசரணை வழங்கிய அல்லது இணை அனுசரணை வழங்கிய விசேட விளம்பரப் பிரச்சாரங்கள் மூலம் எங்களின் விளம்பரப் பரப்புரைகள் இந்தக் கடுமையான விளம்பர யுக்தியினுள் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் தேசிய சேமிப்பு வங்கியை இலங்கையில் மிகவும் புலப்படும் மற்றும் நன்கு அறியப்பட்ட வர்த்தக நாமமாக மாறியுள்ளது.

## பெறுமதிகள் மற்றும் நெறிமுறைகள் (பெ. உ. இ II)

GRI 102-16

### விம்பம் மற்றும் மேம்பட்ட பொது உறவுகள்

நம்மை ஒரு பெறுமதி மிக்க நிறுவனமாக நாங்கள் கருதுவதுடன், நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, ஒருமைப்பாடு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் அடித்தளத்தில் எங்கள் செயற்பாடுகளை கட்டமைத்துள்ளோம். இந்தப் பெறுமதிகள் கடந்த 49 ஆண்டுகளில் நன்றாக ஒருங்கிசைவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் எங்கள் நிறுவனத் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் எங்கள் செயல்களைத் தூண்டும் இயக்கிகள் பற்றிய தெளிவான குறிப்பை வழங்குகிறது. இந்த பெறுமதிகள் நமது பெருநிறுவன கலாச்சாரத்தை வடிவமைத்தது மட்டுமல்லாமல், நமது நெறிமுறைகள், அடையாளம் மற்றும் தத்துவத்திற்கு பங்களித்துள்ளன. அக்கறையுள்ள தரப்பினரின் எதிர்பார்ப்புகளைக் கவனிக்கும் அதே வேளையில் அனைவருக்கும் நிதித் தீர்வுகளை வழங்குவதற்கான எங்களின் ஒட்டுமொத்த இலக்குக்கு பங்களிக்க இவை ஒன்று சேர்ந்துள்ளன.

**பரஸ்பர மரியாதை**

ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளார்ந்த பெறுமதியை அங்கீகரித்து அனைவரையும் கண்ணியத்துடன் நடத்துதல்.



**படைப்பாற்றல்**

புதுமையான கருத்துகளை தொடர்ந்து தேடும் அதே வேளையில் இருக்கும் நடைமுறைகளை சவாலுக்கு உள்ளாக்குதல்

**நம்பிக்கை**

சம்பந்தப்பட்ட அனைவரின் நலன்களிலும் முழு நம்பிக்கை வைப்பதன் மூலம் உறவுகளை உருவாக்குதல்.

**நாணயத் தன்மை**

எங்கள் எல்லா செயல்களிலும் தீர்மானங்களிலும் நேர்மையாகவும், நிலைபேறாகவும், வெளிப்படையாகவும் இருத்தல்.

நாம் பெறுமதிகளால் இயக்கப்படும் அளவுக்கு, தே. சே. வங்கியில் நெறிமுறைகளால் நிர்வகிக்கப்படுகிறோம். இலங்கையின் முதன்மையான சேமிப்பு வங்கியாக எங்களின் நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு, எங்கள் அனைத்துப் பரிவர்த்தனைகளிலும் நெறிமுறை ஒருமைப்பாடு முழுமையானதாகவும், நமது அக்கறையுள்ள தரப்பினருக்கான ஒரு சமூகப் பொறுப்பாகவும் கருதப்படுகிறது. சபை நெறிமுறை நடத்தைக்கான எல்லைகளை அமைக்க, அதே நேரத்தில் வங்கி முழுவதும் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை இயற்றி ஊழியர்கள் நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்குக் கட்டுப்படுவதை உறுதி செய்கிறது.

தே. சே. வங்கியில் உள்ள அனைத்து ஊழியர்களும் அனைத்து பரிவர்த்தனைகளிலும் நெறிமுறை நடத்தையை வெளிப்படுத்த எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் வங்கியானது உள்முக நியமங்கள், குறியீடுகள் மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் இணக்கத் தேவைகளை அவர்கள் சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை அதிகாரத் தேவைகளுக்கு ஏற்ப இருப்பதை உறுதிசெய்யும். இடர் முகாமை மற்றும் இணக்கப்பாடு ஆகியவை வங்கியில் இடர் உணர்வு மிக்க கலாச்சாரத்தை வளர்க்கும் குறிக்கோளுடன் இணைந்த ஒருங்கிணைந்த தந்திரோபாய முதலீடுகளாக கருதும் வகையில் சபையினால் முதன்மையான முன்னுரிமை அளிக்கப்படுகிறது. வங்கியில் பாதுகாப்புக்கான மூன்று கோடுகள் வலுவான பெறுமதிகள் அடிப்படையிலான இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தை அமைக்க, இது இணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு அடிப்படையாக அமைகிறது. கூட்டாண்மை ஆளுகையை மேம்படுத்துதல் மற்றும் வலுவான இடர் முகாமை கட்டமைப்பு மற்றும் இணக்கத்தை பராமரிப்பதன் மூலம் இவை முறையாக பலப்படுத்தப்படுகின்றன.

## வலுவான முறைமைகள் மற்றும் செயன்முறைகள் (பெ.உ.இ III)

### தொழிநுட்பம் மற்றும் புதுமைகளை ஒருங்கிணைத்தல்

தொழிநுட்பம் மற்றும் புதுமை ஆகியவை நமது எதிர்கால அறிவுசார் மூலதனத்தின் முக்கிய கூறுகள் மற்றும் "நாளைய தேசிய சேமிப்பு வங்கி" நமது அக்கறையுள்ள தரப்பினருக்கு எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை தீர்மானிக்கிறது. இந்தச் செயற்பாடு எங்கள் உள்ளகத் தகவல் தொழிநுட்ப வழிகாட்டுதல் குழுவின் (ITSC) குழுவின் மேற்பார்வையுடன் நடத்தப்படுகிறது. ITSC ஆனது தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்னுட்ப சேவைகள் மற்றும் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் உட்கட்டமைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள, அதே நேரத்தில் ஒரு பயனுறுதி மிக்க செயற்பாட்டு முகாமையைப் பராமரிக்கிறது. எனவே, தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்னுட்ப முகாமை நியமங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் வங்கி முழுவதும் ஒழுங்கு விதிமுறைத் தேவைப்பாடுகளைப் பின்பற்றும் விதத்தில் செயற்படுத்தப் படுவதன் மூலம் வங்கியின் குறிக்கோள்கள் அல்லது இலக்குகளுக்குச் சேவை செய்வதுடன் மேலும் மிகவும் பொருத்தமான, பாதுகாப்பான, வணிகப் பயனுறுதி மிக்க மாதிரி மற்றும் சிறந்த இறுதிப் பயனர் அனுபவத்தை வழங்க உதவுகின்றன. தொழிநுட்பம் மற்றும் புதுமைக்கான நமது அர்ப்பணிப்பு, "எண்ணியல்மயமாக்கலை துரிதப்படுத்துவதில்" நமது குறுகிய முதல் நடுத்தர கால தந்திரோபாய நோக்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்கள் ICT தந்திரோபாய அணுகுமுறை தொழிநுட்ப கண்டுபிடிப்புகளைத் தழுவி, இணைப்பு வழிகளில் எங்கள் வணிக மாதிரியின் மையத்தை மறுவடிவமைக்கிறது, நாங்கள் எவ்வாறு செயல்படுகிறோம் மற்றும் வாடிக்கையாளர்கள் எங்களை எவ்வாறு அனுபவிக்கிறோம் என்பதை மறுபரிசீலனை செய்கிறது.




### தொழிநுட்பம் சார்ந்த செயற்திட்டங்கள்

தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியன நீண்ட கால பெறுமதி உருவாக்கத்தின் முக்கிய இயக்கிகள் ஆகும். புத்தாக்கம் மிக்கவர்களாக இருப்பது ஒரு தந்திரோபாய இயக்கி என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், இது நாம் தொடர்புடையதாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதை உறுதிசெய்ய வழி வகுக்கிறது. தொழிநுட்ப அம்சங்களை விரிவுபடுத்துவதற்கும், தற்போதுள்ள எண்ணியல் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கும், அமைப்புகள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும், தரவு பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் வங்கி பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

- **மைய வங்கியியல் முன்முயற்சி –** 2017 இல் தொடங்கப்பட்டது, புதிய மைய வங்கியியல் முறைமை செயற்படுத்தல் தற்போது நடைபெற்று வருகிறது, அது நிறைவடைந்ததும், அனைத்து தகவல் தொழிநுட்பத்தால் இயக்கப்பட்ட வங்கிச் சேவைகளையும் சர்வதேச தரம் வாய்ந்த தொழில்துறை மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு மாற்றியமைக்கும்.
- **கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவு செயலி** – 2021 இல் செயல்படுத்தப்பட்ட இந்த செயலி iOS, அன்ட்ரொயிட் மற்றும் ஹுவாவேய் போன்ற முன்னணி திறன்பேசி பயன்பாட்டு தளங்களில் கிடைக்கிறது
- **புதிய தரவு மைய வசதி** – TIA 942 (அடுக்கு 3) சர்வதேச நியமத்தில் ஒரு முதன்மைத் தரவு மையத்தை உருவாக்குவதற்கான முன்முயற்சி, மேம்பட்ட நம்பகத்தன்மை மற்றும் தகவல் தொழிநுட்பம் செயற்படுத்தப்பட்ட வங்கி சேவைகளின் கிடைக்கும் தன்மையை வழங்குகிறது, இதனால் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் உள்ளக சேவை சிறப்பை மேம்படுத்துகிறது.

பக்கம் 124 முதல் 126 வரை உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்.

- **PCIDSS சான்றிதழ்** - தொழிற்துறையின் சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், தேசிய சேமிப்பு வங்கி 2019 இல் PCIDSS சான்றிதழைப் பெற்றுள்ளதுடன் 2021 இல் அதன் இணக்க நிலையைத் தொடர்ந்தும் பேணியது
- **பாதுகாப்பு செயற்பாட்டு மையம் (SOC)** - SOC ஆல் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் 2021 இல் தொடர்ரப்பட்டன.
- **மனித வள தகவல் முறைமை (HRIS)** - ஒரு முன்னணி வழங்குநரினால் 2021 இல் மனித வளத் தகவல் முறைமை செயற்படுத்தப்பட்டு வருகிறது
- **இலங்கை மத்திய வங்கியின் – "தொழிநுட்ப இடர் மீளெழுச்சிக்கான திசை" முன்விபரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டிற்கான அனைத்து மைல்கற்களும் தேசிய சேமிப்பு வங்கியினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன** – வங்கியின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது, இது நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை தொடர்ந்து பராமரிப்பதன் வழக்கமான முகாமைக் குழு மற்றும் தொழிநுட்ப ஆய்வுகள் மூலமாக ஆதரிக்கப்படும்.

#### சிறந்த நடைமுறை ஆளுகை மற்றும் இடர் முகாமைக்காக பாடுபடுதல்

ஆளுகை மற்றும் இடர் முகாமைக்கான எங்கள் அணுகுமுறை நமது அறிவுசார் மூலதனத்தின் ஒரு பகுதியாவதுடன் நமது ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கும் செயல்முறையை ஆதரிக்கிறது. சிறந்த நடைமுறை ஆளுகைக்கான தொடர்ச்சியான நாட்டம் வங்கிக்கு இன்றியமையாததாக உள்ளது - பெறுமதி உருவாக்கத்தை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மட்டுமல்லாமல், எங்கள் அக்கறையுள்ள தரப்பினருடனான நம்பிக்கையின் அடிப்படை முறிவுகளால் பெறுமதி சிதைந்துவிடாமல் இருப்பதை உறுதிசெய்ய உதவும்.

நிலைபேறான பெறுமதியை அடைவதற்கு, எங்கள் அக்கறையுள்ள தரப்பினருடன் நம்பிக்கையை நிலைநிறுத்தி பராமரிக்க வேண்டும், இது ஒரு வணிக இயக்கு சக்தியின்றி சாத்தியமற்றது. வங்கியின் பொருத்தமான ஆளுகைக் கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகள் நம்மை நன்கு முகாமை செய்யவும் வினைத்திறன் மிக்க வகையில் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. எங்களின் கடுமையான மற்றும் உள்ளடக்கிய தந்திரோபாய மீளாய்வு செயன்முறையானது, எங்களின் பரந்த தொழிற்பாட்டு சூழலுடன் இணைக்கப்பட்டுள்ள இடர்கள் மற்றும் வாய்ப்புகளை கருத்தில் கொள்கிறது. இந்த செயன்முறைகள் நமக்கும் நமது அக்கறையுள்ள தரப்பினருக்கும் - இப்போதும் எதிர்காலத்திலும் பெறுமதியை உருவாக்குவதற்கான தந்திரோபாயத்திற்கு எதிராக நாங்கள் வழங்குவதை உறுதி செய்கிறது. நல்லாட்சிக்கான எங்களின் அர்ப்பணிப்பு, எங்களின் உள்முகக் கொள்கை கட்டமைப்பில் பிரதிபலிக்கப்படுகின்றது, இது நாம் எப்படி வணிகம் செய்கிறோம் என்பதில் நெறிமுறைகளை நிலைநிறுத்துகிறது. மேலும், தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாடு

மூலம், கூட்டுக் கற்றலை வளர்க்கும் போது திறன்களை மேம்படுத்த முயல்கிறோம், சிறந்த நடைமுறை அணுகுமுறைகள் தனிநபர்களின் அறிவைத் தாண்டி நமது நிறுவன நடைமுறைகளின் ஒரு பகுதியை உருவாக்குவதை உறுதிசெய்கிறது - இதனால் நமது அறிவுசார் மூலதனத்தின் ஒரு பகுதியாக அமைகிறது.

நமது ஆளுகை செயன்முறைகள் மற்றும் பயிற்சியித்தல் மற்றும் விருத்தி மூலம் பெறுமதியை எவ்வாறு உருவாக்குகிறோம் என்பது பற்றிய மேலதிக தகவலுக்கு, பக்கம் 188 முதல் 202 வரை ஆளுகை மற்றும் மனித மூலதனம் பக்கங்கள் 136 முதல் 153 வரை பார்வையிடவும்.

தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் இடர்களையுக் கண்டறியும் வகையில் உத்வேகம் மிக்கதோர் இடர் முகாமை அணுகுமுறையை நாங்கள் பராமரிக்கிறோம். வங்கியின் பெருநிறுவன தந்திரோபாயத்துடன் இணைந்து இடர் தந்திரோபாயம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் தீர்மானிக்கப்பட்ட இடர் தாங்குதிறன்.

அளவானது, தந்திரோபாயத்தைத் தொடர வங்கி எதிர்கொள்ள விரும்பும் இடர்களின் தன்மை மற்றும் அளவை வரையறுக்கிறது. எங்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைக் கட்டமைப்பின் மூலம் இடர் நிர்வகிக்கப்படுகிறது. விவரங்களுக்கு இடர் மீளாய்வு அறிக்கைக்கான பக்கங்கள் 212 முதல் 239 வரை.

## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் (பெ.உ.இ IV)

வங்கித் துறையில் சிறந்து விளங்குவதையும் வாடிக்கையாளர் தளத்தை திருப்திப்படுத்துவதையும் நோக்கிய எங்கள் பயணத்தில், எங்களுக்கு ஏராளமான விருதுகள் மற்றும் பாராட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இது ஒரு வங்கியாக எங்களின் வெற்றியின் தெளிவான அறிகுறி என்று நாங்கள் நம்புவதுடன், மேலும் எங்கள் பயணத்தைத் தொடரவும், வங்கியை மேலும் மேம்படுத்தவும் நாங்கள் ஊக்குவிக்கப்படுகிறோம்.

உரு 16




- இலங்கையில் 5வது மிகவும் பெறுமதியான வர்த்தக நாமம் (வர்த்தகக் குறி பெறுமதி ரூ. 30.7 பில்லியன்)
- CIMA Sri Lanka இனால் இலங்கையின் மிகவும் போற்றத்தக்க பத்து நிறுவனங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது (தேசிய சேமிப்பு வங்கியின் வரலாற்றில் முதல் தடவையாக)
- மிகச் சிறந்த ICT சாதனை விருது (தேசிய சேமிப்பு வங்கி எண்ணியல் வங்கியியல் முறைமை முயற்சியின் மூலம் இலங்கையின் குடிமக்களுக்கு சிறந்த தரமான சேவைகளை வழங்குவதற்காக அதன் ICT சூழலை அறிமுகப்படுத்துதல், வளர்த்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் அங்கீகாரம் மற்றும் பாராட்டுக்காக)
- NSB Pay செயலிக்காக தேசிய தகவல் தொழிநுட்ப விருதுகள் NBQSA 2021 இல் தங்க விருது, (பொதுத்துறை மற்றும் அரச பிரிவின் கீழ் குடிமக்கள் சேவைகள் மற்றும் எண்ணியல் அரசாங்க அதிகாரமளிப்பை செயற்படுத்தியதற்காக வழங்கப்பட்டது)
- மிகவும் பிரபலமான வங்கி மற்றும் நிதித்துறை இணையதளம்
- சிறந்த தமிழ் இணையதளத்திற்கான தங்க விருது
- சிறந்த வங்கி மற்றும் நிதித்துறை இணையத் தளத்திற்கான வெண்கல விருது
- Satyn சஞ்சிகை மற்றும் CIMA Sri Lanka வினால் இலங்கையின் சிறந்த 10 மகளிர் சிநேக பணியிடங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.
- 56வது இலங்கைப் பட்டயக் கணக்காளர் ஆண்டு அறிக்கை விழாவில் 2020 ஆண்டு அறிக்கைக்கான வெள்ளி

## 2022 மற்றும் அதற்குப் பின் நோக்கிய புறநோக்கு

**குறுங்காலம்**

- அஞ்சல் துறைக்கு கைத்தொலைபேசி சாதனம் மற்றும் எண்ணியல் கணக்கு அறிமுகம்
- தரவு/களஞ்சியப்படுத்தல் மற்றும் வணிக நுண்ணறிவு தீர்வுகளை செயற்படுத்துதல்
- எண்ணியல் வங்கியியல் தளம் மற்றும் மின்னியல் பணப் பரிமாற்ற தீர்வுகளை செயல்படுத்துதல்
- அஞ்சல் வங்கி முறைமை மைய வங்கியியல் முறைமையுடன் இணைக்கப்படும்
- அடகுச் சேவை முறைமை ஓராக்கிள் முறைமைக்கு மாற்றப்படும்.

**நடுத்தரளவு காலம்**

- எண்ணியல் மாற்றத்தை விரைவுபடுத்துவதன் மூலம் அனைத்து செயற்பாடுகளிலும் தொழிற்பாட:டு மேன்மையை அடைதல்
- கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கக் கலாச்சாரத்தை உருவாக்குதல்

**நீண்ட காலம்**

- முழு வங்கிக்கும் பெருந் தரவுத் திறனைப் பயன்படுத்துதல்
- பகுதியளவு ரோபோடிக் முறைமையை உருவாக்கும் வகையில் மனிதத் திறன்களின் எண்ணியல் பெருக்கம்

# மனித மூலதனம்

## இதனுள் உள்ளடங்குபவை

தனிநபர்களினால் அல்லது குழுக்களினால் கொண்டிருக்கப்படக் கூடிய கட்புலனாகாத சொத்துக்களின் கூட்டு மனித மூலதனமாவதோடு இது தனிநபர் ரீதியாக அல்லது கூட்டாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு, திறன்கள், இயலுமைகள், அனுபவம், பயிற்சி, தீர்மானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இதனுடைய கூட்டுமொத்தமானது, நிறுவனங்களுக்கு அவற்றின் குறிக்கோள்களை அடைவதற்கும் மற்றும் பொருண்மையான செல்வத்தினை உருவாக்குவதற்குமான செல்வத்தினது ஒரு வடிவத்தினைப் பிரதிபலிக்கின்றது. இதே போன்று, மனித மூலதனமானது எவ்வாறு அபிவிருத்தி செய்யப்படுகின்றது மற்றும் எவ்வாறு முகாமை செய்யப்படுகின்றது என்பது பொருளாதாரத்தினதும் மற்றும் நிறுவனத்தினதும் செயற்திறனைத் தீர்மானிக்கும் முக்கியமான காரணிகளில் ஒன்றாகும்.

## மனித மூலதனத்தினூடாக பெறுமதியை உருவாக்குதல்

### எமது அணுகுமுறை

வங்கியினுள் ஊழியர்களினது ஈடுபடுத்தலானது ஒட்டுமொத்த வணிக செயற்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது என்பதை நாம் நம்புகிறோம். இதன்காரணமாக, தே.சே.வங்கியின் ஊழியர்கள் அனைவரும் தொழில்ரீதியான மற்றும் தனிப்பட்ட ரீதியான வளர்ச்சிக்காக சந்தர்ப்பங்களை வழங்கக்கூடிய பாதுகாப்பானதும் மற்றும் உள்ளடக்கியதுமான வேலைச்சூழலினுள் தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதனூடாக அவர்கள் அனைவருக்கும் நேர்மறையான தொழில்சார் அனுபவங்களை முன்னுரிமைப்படுத்துகிறோம்.

பன்முகத்தன்மை, சமமான வாய்ப்புக்கள், நேர்மை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய எமது பெறுமதிகளானவை, வங்கியினது கொள்கைகள், நியமங்கள், மற்றும் வழிகாட்டுதல்களில் பதிக்கப்பெற்றுள்ளன. இதற்காக, எமது அனைத்து ஊழியர்களையும் தமது வகிபாகங்களில் திறம்படுவதற்காகவும் தொழில்சார் வளர்ச்சிகளை அனுபவிப்பதற்காகவும் பொருத்தமான அறிவு, பயிற்சி மற்றும் திறன்களை உடையவர்களாகத் தெரிவு செய்துள்ளோம். ஊழியப்படை மீதான எமது பன்முகத்தன்மையானது அதிகமட்டத்திலான புத்தாக்கம் மற்றும் செயற்திறன் ஆகியவற்றினை வழிவகுத்துள்ளது என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம்.

### முக்கிய உள்ளீடுகள்

- பயிற்சியும் அபிவிருத்தியும்
- நேர்மறையான தொழிற்சூழல்
- உறுதியான ஊழியர் உறவுகளைக் கட்டியெழுப்புதல்
- நுட்பத்திறன்கள் மற்றும் அடுத்தடுத்த திட்டங்களை அபிவிருத்தி செய்தல்
- செயற்திறன் மற்றும் திறமையை முகாமை செய்தல்
- சேவை விநியோகத்தினை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அறிமுகப்படுத்துதல்

### முக்கிய வெளியீடுகள்

- அதிக எண்ணிக்கையிலான தொழில்சார் திறனுள்ள ஊழியர்கள்
- அதிகளவிலான தக்கவைத்தல் விகிதம்
- ஊக்கமுள்ள மற்றும் முனைப்புள்ள ஊழியர்கள்
- பன்முகமான மற்றும் சுறுசுறுப்பான ஊழியப்படை

### பெறுமதியை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள்

- ஊழியர் தொழில்சார் அபிவிருத்தியின் மீதான முதலீடு
- தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை வழங்குதல்
- தகுதி அடிப்படையிலான அளவுகோல்கள் மீது அடிப்படைத் தெரிவுகள் மற்றும் உள்ளக செயன்முறைகள்
- ஊழியர்களுக்கு பலவிதமான சுகாதார மற்றும் ஆரோக்கிய சேவைகளை வழங்குதல்.



## தேசிய சேமிப்பு வங்கியில் மனித மூலதனம் என்பதன் கருத்து

தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள நாங்கள் மனித மூலதனத்தை நமது தந்திரோபாயத் திசைமுகத்துடன் இணைவதன் மூலம் எங்கள் நோக்கத்தை நோக்கி நம்மை இயக்கும் எங்களின் மிகப்பெரிய சொத்தாக கருதுகிறோம். அனுபவம், திறன்கள் போன்ற வடிவங்களில் அருவமான கூட்டு வளங்களை வளர்ப்பதன் மூலம் அவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் வித்தியாசமான பணியாளர் அனுபவத்தின் மூலம் சிறந்த நபர்களை ஈர்க்கும், மேம்படுத்தி, தக்க வைத்துக் கொள்ளும் ஒரு செழிப்பான, எதிர்காலத்திற்கு ஏற்ற அமைப்பை உருவாக்குவதே எங்கள் மக்களின் இலட்சியமாக உள்ளது. இது வங்கியானது அதன் நிறுவன நோக்கங்களை திறமையான முறையில் அடைவதற்கு வழிவகுக்கும் அதே நேரத்தில் நமது அக்கறையுள்ள தரப்பினருக்கு பெறுமதி சேர்க்கிறது.

### உருவாக்கப்பட்ட பெறுமதிகள்

- அதிக திறன்வாய்ந்த மற்றும் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள்:
- எமது வாடிக்கையாளர்களை விளங்கிக்கொள்ளவும் மற்றும் அவர்களுக்கான சேவையை வழங்குவதற்கும், எமது இயலுமையை மேம்படுத்தக்கூடிய, எமது வணிக செயற்திறன் வெற்றிக்கு வழிவகுக்கக்கூடிய ஊழியர்கள்
- பெருநிறுவனக் குறிக்கோள்களை அடைவதற்கும் மற்றும் எமது அக்கறையுடைய தரப்பினருக்கு பெறுமதியினை உருவாக்குவதற்குமான எமது தந்திரோபாயங்களினது வினைதிறனான அமுலாக்கலுக்கு வசதியளித்தல்
- துரிதமான மற்றும் எதிர்பாராத அபிவிருத்திகள் நிகழக்கூடிய மாறுகின்ற மற்றும் நிச்சயமற்ற சூழலினது அழுத்தங்களின் கீழ் பெறுமதியினை உருவாக்குதல்.

பொருண்மை மிக்க விடயங்கள்

தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்

குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்

### 2021 இன் முக்கிய சவால்கள்

- கொவிட்-19 இன் பரவலைத்தொடர்ந்து வழமையான இயல்பு நிலைக்குத் திரும்புதல்
- தகுதிவாய்ந்த திறன்களினது அதிலும் குறிப்பாக புதிய தொழில்நுட்ப போக்குகளிலான திறனில் பற்றாக்குறையுள்ளதான வயதான ஊழியப்படை
- மரபுரீதியானதல்லாததும் மற்றும் தொழில்நுட்பம் சார் புத்திக்கூர்மையுள்ளதும், முனைப்புள்ளதுமான புதிய சந்ததி ஊழியப்படையானது தனது குறிக்கோள்கள் சார்பாக இவற்றினைத் தொடர்புபடுத்துவதனை வங்கிக்குக் கடினமாக்குகின்றது.
- அதீத தகுதியுள்ளவர்களாகவும், பல்தொழில்சார் திறமை உள்ளவர்களாகவுமுள்ள ஊழியர்கள் அதிக ஊதியத்தினையும் அதன்சார் நன்மைகளையும் எதிர்பார்ப்பதானது வங்கிக்கு மிகச்சிறந்த தகுதிகளைக் கவர்வதனைச் சவாலுக்குரியதாக்குகிறது.
- அரச கொள்கைகளுடன் இணைந்த வகையில் இலாபத் தன்மைக்காக அதீத அழுத்தம் தொடர்ச்சியான கையகப்படுத்தல், இணைவுகள் மற்றும் தந்திரோபாயக் கூட்டணிகள் ஆகியனவற்றை நோக்கி நிறுவன மாற்றத்தைத் தூண்டுகின்றன.
- அரச வங்கியாகவிருப்பதனால், மனிதவள முகாமைத்துவத்தினது சிறந்த செயன்முறைகளை அரசியல் மற்றும் தொழிற்சங்க செல்வாக்குகள் இடையூறு செய்யலாம்
- கொவிட்-19 சூழலொன்றில் திறன் உருவாக்க மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிகழ்வுகளை நடத்துவதிலான சிரமங்கள்
- சுகாதார மற்றும் பாதுகாப்பு முன்னுரிமைகள் மற்றும் தடையில்லாத வாடிக்கையாளர் சேவையினை வழங்குதல் ஆகியவற்றுக்கிடையிலான விட்டுக்கொடுப்புகள்

### 2021 இலிருந்த முக்கிய வாய்ப்புக்கள்

- அதீத திறனுள்ள மற்றும் தகுதி வாய்ந்த இளைய ஊழியப் படையினை கவர்வதற்கும் மற்றும் தக்க வைப்பதற்குமான இயலுமை
- ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் தக்கவைக்கப்பட்டுள்ள தரமான ஊழியர்களினூடான அதீத வினைத்திறன்
- எமது பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியப் படையின் ஊடாக தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை எதிர்கொள்ளும் இயலுமை
- மனித இயலுமைகள் மற்றும் உற்பத்தி இயலுமை ஆகியவற்றை மேம்படுத்தும் எதிர்பார்ப்பு, இதன் மூலமாக, எமது மக்கள் சுறுசுறுப்பான, மாறுபடக்கூடிய, மற்றும் வேகமாக வளர்ந்து வருகின்ற சூழல் மற்றும் தொழில்சந்தை ஆகிவற்றுக்கு பொருத்தமானவர்களாக அமைவர்.
- நேரம் மற்றும் வளங்களினது முறையான பிரயோகப்படுத்தலுக்காக மனிதவளச் செயன்முறைகளை அபிவிருத்திசெய்தல் மற்றும் ஆவணப்படுத்துதல்.
- ஆரோக்கியமான தொழில்-வாழ்க்கைச் சமநிலையினை வலுப்படுத்துவதன் ஊடாக ஊழியர் அனுபவம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றினை மேம்படுத்துதல்.

### பெறுபேற்று அட்டை

**ஊழியர் ஈடுபாடு**

| ஊழியர் எண்ணிக்கை | தலா ஊழியருக்கான சராசரி வருமானம் | தக்க வைத்தல் வீதம் | ஊழியர் புரள்வு வீதம் |
|---|---|---|---|
| ↓ 4,616 | ↑ ரூ. 29.2 மில் | ↓ 98.6% | ↑ 1.4 |
| 2020 – 4,641 | 2020 – ரூ. 27.5 மில். | 2020 – 98.8% | 2020 – 1.2% |

**பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி**

| பயிற்சியளித்தல் மற்றும் விருத்தியில் முதலீடு செய்தல் | தலா ஊழியருக்கான சராசரி பயிற்சியளித்தல் மணித்தியாலம் |
|---|---|
| ↑ ரூ. 11.03 5 மில் | ↑ 9.4 |
| 2020 – ரூ. 8.8 மில். | 2020 – 5.0 |

**சம வாய்ப்பு**

| பெண் ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|
| ↓ 2,518 |
| 2020 – 2,522 |

## ஏனைய மூலதனங்களுடனான தொடர்பு

சாதகமான தொழில் இடைவெளியை உருவாக்குதல், மனிதவள செயன்முறைகளைத் தன்னியக்கமாக்குதல், மற்றும் வங்கியை எண்ணியல் மயமாக்குதல் ஆகியவை மீதான முதலீடு, ஊழியர் நிறைவினையும் மற்றும் வங்கியினது அதீத செயற்திறனையும் உறுதிப்படுத்தும்.

பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு, வங்கிக்கு நன்மையளிக்கக்கூடியதான ஊழியர் அறிவு, திறன் மற்றும் வணிகப்பயிற்சி ஆகியவற்றினை அதிகரிக்கும்.

மனித மூலதனத்தினை உருவாக்குவதிலான முதலீடானது, அதிகரித்த வினைத்திறன், விளைதிறன், இணையில்லாத வாடிக்கையாளர் அனுபவத்தின் விநியோகம் ஆகியவற்றினூடாக நீண்டகால நிதிசார் பெறுகைக்குப் பங்களிப்புச்செய்யும்.

வேலை வாய்ப்புக்களின் வழங்கலானது வங்கியினது வியாபார நன்மதிப்பிற்கு இணக்கமான சமுகத்தொடர்புகளை உருவாக்கும்.

நிலைபேறான முயற்சிகள் ஊழியர்களினது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதுடன் பசுமை உணர்வுள்ள கலாசாரத்தினையும் ஊக்குவிக்கும்.

## SDG க்கான பங்களிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேலைவாய்ப்பினை வழங்குவதன் ஊடாக பொருளாதார அபிவிருத்திக்கு வலுச்சேர்த்தல் | நேரடியான வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக ஊழியர்களினது ஊழியர் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல் | வேலைவாய்ப்பிற்கான மூலங்களை உருவாக்குவதற்கு பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி மூலமாக திறன்களை அபிவிருத்தி செய்தல | ஊழியப்படைக்குள் அதீத பெண்களின் வருகையை ஊக்கப்படுத்தும் விதமாக வாய்ப்புக்களை வழங்குதல் | உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்காக பொருளாதார வளர்ச்சியை இலகுவாக வசதிசெய்யக்கூடிய வகையில், ஊழியர்களுக்காக பாதுகாப்பானதும், உகந்ததும் மற்றும் வெகுமதியளிக்கக்கூடியதுமான பணியிடத்தினை உறுதிப்படுத்துதல். | எமது ஊழியப்படையில் அதிக பெண்கள் வகிபாகத்திற்காக பாதுகாப்பானதும் ஆதரவானதுமான சூழலை உருவாக்குதல். |
| 1 NO POVERTY | 2 ZERO HUNGER | 4 QUALITY EDUCATION | 5 GENDER EQUALITY | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH | 10 REDUCED INEQUALITIES |

## வர்த்தக விட்டுக்கொடுப்புக்கள்

| | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வேலை வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் புதிய நபர்களை வேலைக்கு அமர்த்துதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| ஊதியம் மற்றும் பிற நன்மைகள் | ▼ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| புதிய அறிவு மற்றும் திறன்களின் வருகை | ▼ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | ▲ | ▲ | | | |
| சமூகத்தில் அதிகரித்த வேலை வாய்ப்புகள் மற்றும் அவற்றுடன் இணைந்த பலன்கள் (உ-ம்: வாழ்க்கைத் தரம், வறுமைக் குறைப்பு) | ▼ | | | | | | | | | | | | | ▲ | ▲ | | | |
| **பயிற்சி மற்றும் மேம்பாடு: வாடிக்கையாளர் சேவைகள், புதுமை, தொழிற்பாட்டு மேன்மை மற்றும் பெருநிறுவன கலாச்சாரம், மற்றும் பெறுமதி ஆகியவற்றைச் சூழ இயலுமைகளை உருவாக்குதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| பயிற்சி மீது செலவிடல் | ▼ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் புத்தாக்கம் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| அதிக தொழில்சார் நபர்கள் | | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| புதிய வேலை வாய்ப்புகள் ஆரம்பிக்கப்படல் | ▼ | | | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| பெறுபேற்றால் இயக்கப்படும் கலாச்சாரம் | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | |
| உற்பத்தித்திறன் மூலம் சேமிப்பு | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |

கு குறுகிய காலம்   ம மத்திய காலம்   நீ நீண்ட காலம்   ▲ பெறுமதி உயர்வு   ▼ பெறுமதிக் குறைவு   ⊖ பெறுமதிப் பாதுகாப்பு

## பெறுமதி உருவாக்கத்துக்கான இயக்கிகள் (பெ.உ.இ)

உரு 17




## மிகப்பொருத்தமான திறனைக் கவர்தல் (பெ.உ.இ I)

**தே.சே.வ அணி** GRI 102-8 and 401-1

ஒரு நிறுவனமென்ற வகையில் ஒட்டுமொத்த வெற்றி மற்றும் நிலைபேற்றிற்கு அவசியமானதும் மற்றும் வங்கியினது ஊக்க சக்தியாகவும் எமது ஊழியர்கள் இங்கு தே.சே.வ இல் கருத்தில் கொள்ளப்படுகிறார்கள். 31 டிசம்பர் 2021இல், எமது ஊழியப்படையானது வலுவான 4,616 ஆகவும் அதனுள் நிரந்தர ஊழியர்கள் 4,551ஐயும் ஒப்பந்த ரீதியிலான ஊழியர்கள் 65 பேரையும் கொண்டிருந்தது. 20 புதிய பெண் ஊழியர்களுடன் ஒட்டுமொத்தமாக 36 புதிய ஊழியர்கள் எமது ஊழியப்படையினுள் இணைந்துள்ளனர். எமது உயர்வான தக்க வைத்தல் வீதமாகிய 98.6% எமது வெற்றிகரமான மனிதவள கொள்கைகள் மற்றும் ஊழியர் பெறுமதி மையப்படுத்தல் ஆகியவற்றைப் பிரதிபலிக்க, எமது 32% ஆன பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்ட ஊழியர்கள் எமது நிறுவனத்தின் மீதான விசுவாசத்தைக் காட்டி நிற்கின்றனர்.




பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021

வரைபு 30

**வேலைவாய்ப்பு வகைப்படுத்தல்**




வரைபு 31

**பால் ரீதியான ஊழியர் வகைப்படுத்தல் 2021**




வரைபு 32

**ஊழியர் தரக் கட்டமைப்பு**




வரைபு 33

**பால் ரீதியாக வகைப்படுத்தல்**




## சிறந்த பொருத்தமான தகமையைப் பணிக்கமர்த்துதல்

GRI 202-2 and 401-1

வங்கியினுடைய நீண்டகால வெற்றியானது, தொடர்ச்சியான முறையில் வளர்ச்சியை உறுதிப்படுத்தக்கூடிய ஊழியர்களை கவர்ந்திழுத்தல், தக்கவைத்தல், மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றில் தங்கியுள்ளது. இதற்கமைவாக, வங்கியானது எப்போதும், பாலினம், இனம், அல்லது மதம் ஆகியவற்றினைப் புறந்தள்ளி, தகுதிகள், திறன்கள், மற்றும் அனுபவம் ஆகிய முக்கிய தெரிவு செய்தல்க் காரணிகளுடன் சிறந்த நபர்களையே தெரிவுசெய்ய முயல்கிறது. இந்த பணிக்கமர்த்துதல் மற்றும் தெரிவுசெய்தல் செயன்முறையானது, தற்போதுள்ள குழுவுடன் நன்றாக ஒருங்கிணையக்கூடியதும், செயற்திறன் ரீதியாக ஊக்குவிக்கப்பட்டதும் மற்றும், வங்கியினது நிறுவனரீதியிலான குறிக்கோள்களை அர்ப்பணிப்புடனும், புத்தாக்கத்துடனும் மற்றும் தொழில்முறையாகவும் அடைவதில் தொடர்ச்சியான முனைப்புடன் ஈடுபடக்கூடிய ஆர்வமுள்ளதுமான தனிநபர்களையே தேடுகின்றது. இந்தத் தெரிவு முறையானது, தெரிவுசெய்யப்பட்டவர்கள் தமது சொந்த தொழில்வளர்ச்சியில் நிறைவையும் அதேநேரத்தில் தமது இயலுமையின் பெரும்பகுதியினை வங்கிக்காக வழங்குவதனையும் உறுதிசெய்கின்றது. இந்த வழியில், வங்கியும் மற்றும் தனிநபர்களும் நேர்மறையான விதத்தில் வளர்ச்சியடைவர்.

தே.சே.வங்கியில், உள்நாட்டு ஆட்சேர்ப்பானது தொடர்ந்தும் முன்னிலையளிக்கப்படுவதுடன், 100% உள்ளூர் ஆட்சேர்ப்பினாலான மூத்த முகாமைத்துவம் தொடர்பில் நாம் பெருமையடைகிறோம். எமது ஒட்டுமொத்த ஊழிய ஆட்சேர்ப்பானது

எமது பல்வேறுபட்ட வாடிக்கையாளர் அடிப்படையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பன்முகப்படுத்தப்பட்ட மக்கள் குழுவிடமிருந்து பெறப்பட்டதாகும். இதன்மூலமாக, இடைத் தொடர்பினூடாக வாடிக்கையாளர்களினது தேவையைத் திருப்திப்படுத்துவதில் எமது பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறனானது பேணப்படும். இந்த பன்முகத்தன்மையானது சிறந்த தீர்மானமெடுத்தல் மற்றும் சிந்தனையின் உண்மைத்தன்மை மற்றும் புத்திசாலித்தனம் ஆகியவற்றினை விளைவிக்கக்கூடிய முழுமையான கண்ணோட்டத்தினை வழங்கும் என்பதை நாம் முழுமையாக நம்புகிறோம். இளைய சமூகத்தினர் எமது நிறுவனம் போன்ற முன்மாதிரியான நிறுவனமொன்றில் வங்கித்துறை அனுபவத்தினை பெற்றுக்கொள்வதனை உறுதி செய்வதற்கு, 2021 இல் 21 பயிற்சி வாய்ப்புக்களை நாம் வழங்கினோம். இது வங்கியினது கலாசாரம், பெறுமதிகள், நெறிமுறைகள், தொழிற்பாட்டு செயன்முறைகள், முறைமைகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றைப் பற்றிய விபரமான முன்னோட்டத்தினை வழங்குகின்ற கட்டாய அறிமுக நிகழ்வினையும் உள்ளடக்கியிருந்தது.

இந்த ஆண்டுக்கான ஆட்சேர்ப்பானது நிலவிய தொழிற்பாட்டு நிலைமைகளின் நிச்சயமற்ற தன்மையினால் கட்டாயமான தேவைகளால் வழிவந்ததாக இருந்தது. பௌதீக ரீதியிலான நேர்முகத் தேர்வுகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துவது கொவிட்-19 பரவலின் இடரினை உள்ளடக்கி இருந்தமையினால், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு ஆகியவற்றில் ஆரம்பகாலப் பின்டைவு ஏற்பட்டதுடன் கொவிட் 19 மனிதவளச் செயன்முறைகளைப் பாதித்தது. எவ்வாறாயினும், ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகவும் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றியும், அதேசமயத்தில் Zoom மூலமாகவும் நேர்முகத் தேர்வுகள் பின்னர் நடாத்தப்பட்டன. எண்ணியல் மயமாக்கம், வாடிக்கையாளர் மையப்படுத்தல் மற்றும் நிறுவன மீள் வடிவமைப்பு ஆகிய பகுதிகளில் மொத்தமாக 36 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

வரைபு 35

**ஊழியர் புவியியல் பரம்பல்**




A – தலைமையகம்
B – மத்திய
C – கிழக்கு
D – வட மேல்
E – வடக்கு
F – சப்ரகமுவ
G – தெற்கு
H – மேல் மாகாணம் 1
I – மேல் மாகாணம் 2

வரைபு 36

**புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்கள் வயது மற்றும் பாலின வகைப்படுத்தல்**




சிரேஷ்ட தரம்
நிறைவேற்றுனர்
ஊழிய உதவியாளர்
அலுவலக உதவியாளர்

வரைபு 37

**பால் ரீதியாக புவியியல் பரம்பல்**




ஆண்
பெண்

A – தலைமையகம்
B – மத்திய
C – கிழக்கு
D – வட மேல்
E – வடக்கு
F – சப்ரகமுவ
G – தெற்கு
H – மேல் மாகாணம் 1
I – மேல் மாகாணம் 2

வரைபு 34

**புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்களின் கட்டமைப்பு**




A – ஆண்
B – பெண்

வரைபு 38

**புதிதாக ஆட்சேர்க்கப் பட்டவர்கள் வயது மற்றும் பாலின வகைப்படுத்தல்**




## ஒரு வெற்றி அடையும் அணியை உருவாக்கி விருத்தி செய்தல் (பெ.உ.இ II)

GRI 404-1 and 2

### தொழில் செய்வதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்

தமது முழுமையான இயலுமையினை அடையும் விதத்தில் எமது குழுவினை நாம் உருவாக்குகின்ற மற்றும் அபிவிருத்தி செய்கின்ற வழிமுறைகளை அடிப்படையில் மாற்றியதன் ஊடாக கொவிட்-19, எமது தொழில் புரியும் முறையினை மாற்றியமைத்தது. ஊழிய முகாமைத்துவத்தில் சுகாதார வழிகாட்டுதல்களை முன்னுரிமைப்படுத்துவதன் ஊடாக "தொலைதூர வேலை", "வீட்டிலிருந்து வேலை செய்தல்" ஆகியவை 2020 இலிருந்ததான எமது வேலைமுறையில் ஏற்பட்ட கணிசமான மாற்றங்களாகும். இது வேறுபட்ட கருவிகளையும் மற்றும் தளங்களையும் தேவைப்படுத்திய போதும், "வீட்டிலிருந்து வேலை செய்தல்" எனும் எண்ணக்கருவினை வழமையானதொரு நடைமுறையானதாக ஆக்கும் விதத்தில், இந்த மாற்றத்தினை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ஊழியர்களை தே.சே.வங்கி வெற்றிகரமாக தயார் செய்திருந்தது.

இதேநேரத்தில், கிளைத் தொழிற்பாட்டு ஊழியர்கள் அவர்களினது கடமைகள் தொழிற்பாட்டு ரீதியிலானவையாக இருந்ததனாலும் மற்றும் இயல்பிலேயே அத்தியாவசியமானவையாக இருந்ததனாலும் பௌதீக ரீதியிலான வருகைக்குத் தேவைப்படுத்தப்பட்டனர். மனிதவள முகாமையாளர் வங்கியினது சுமூகமான தொழிற்பாடுகளின் நிகழ்தலை ஆதரிப்பதுடன் ஊழியர்களினது சுகாதார மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்வது தொடர்பிலும் கணிசமானதொரு பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

இந்தவகையில், ஊழியர்களுக்கு சுகாதார ஒழுங்குமுறைகள் மற்றும் தேவையான முன்னெச்சரிக்கை நடைமுறைகள் ஆகியவை தொடர்பில் கற்பிக்கப்பட்டதுடன், ஊழியர் தொடர்பான இணங்குவிப்பு மற்றும் வழிகாட்டல்கள் மனிதவள முகாமையால் பேணப்படுகிறது. வங்கியானது சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பின்வருவனவற்றினை ஊழியர்கள் பின்பற்றுவதனையும் அவர்களது பாதுகாப்பு உணர்வினையும் உறுதிசெய்து கொள்வதில் எல்லைக்கும் அப்பால் நகர்ந்துள்ளது:

- கொவிட்-19 இன் முதலாவது தொடர்பாளர்களுக்கு வங்கிக் கட்டடத்திற்குள்ளேயே PCR சோதனைகளை ஏற்பாடு செய்தது.
- கொவிட்-19 உறுதி செய்யப்பட்ட ஊழியர்களுக்கு துரிதமான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் விதமாக வைத்தியசாலைகள் மற்றும் இடைநிலைப் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகளை உருவாக்கிக்கொண்டது.
- தமது மருத்துவ நன்மைகளுக்கான உரிமைக்கும் மேலதிகமாக ஊழியர்களால் எதிர்கொள்ளப்பட்ட கொவிட்-19 உடன் தொடர்புபட்ட மருத்துவச்செலவுகளை வங்கி மீளளிப்புச் செய்தது.
- வைரஸினால் தொற்றுக்குள்ளானவர்களுக்கும் அவர்களுடன் தொடர்புபட்ட ஊழியர்களுக்கும் தனிமைப்படுத்தல் விடுமுறைகளை வழங்கியது.
- கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் சிக்கலான இயலாமையுள்ளவர்கள் ஆகிய அதிக இடருள்ள ஊழியர்களுக்கு நோய்ப்பரவலின் ஆச்சமான மற்றும் தொடர்ச்சியான அலைகளின் போது "வீட்டிலிருந்தான வேலை"க்கு வழியமைத்ததுடன், வைரஸ் தாக்கம் மற்றும் பரவலைக் குறைக்கும் விதமாக, ஊழியர்களைச் சுழற்சிமுறையில் வேலையில் ஈடுபடுவதற்கும் வழியமைத்தது.
- பயணத்தடைகள் மற்றும் முடக்க நிலைமைகளின் போதும் தமது சொந்த வாகனங்களில் தொழிலுக்கு பயணித்த ஊழியர்களுக்கு பயணப்படிகளை வழங்கியது.
- முடக்கக் காலநிலைமைகளின்போது, தாமாகவே வைரஸை எதிர்கொள்ள வேண்டிய இடர் இருப்பினும் தொழிலுக்கு வருகை தந்த ஊழியர்களுக்கு இடர் படிகளை வழங்கியது.
- ஊழியர்கள் இலகுவான முறையில் பயணிப்பதை வழிவகுக்கும் விதமாக தலைமை அலுவலகத்தினையும் வெவ்வேறு இடங்களையும் தொடர்புபடுத்துகின்ற சிறப்பான பேருந்துச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- ஊழியர்களுக்கான ஊரடங்கு நுழைவு அனுமதிகள் எற்பாடு செய்யப்பட்டன.
- கொவிட்-19 காலப்பகுதியின் போது, ஊழியர்களின் தாமதமான வரவு புறக்கணிக்கப்பட்டதுடன் அவர்கள் நேரத்துடனேயே வேலையிலிருந்து வெளியேறுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.
- வழமையான தொழில்சார் உடைகளுக்குப் பதிலாக, அலுவலக T-Shrit களை அணிந்து கொள்வதற்கு ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டனர்.
- தொழிலுக்குச் சமுகமளிக்க முடியாத ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட தனிமைப்படுத்தல் விடுமுறைகள் வழங்கப்பட்டதுடன் எந்தவொரு நிதிசார் கழிப்பனவுகளும் இதற்காக மேற்கொள்ளப்படவில்லை.
- கொவிட்-19, பணியிடச் சுகாதாரம், முன்னெச்சரிக்கைச் சுகாதார நடைமுறைகள், மற்றும் சமூக இடைவெளி ஆகியவை தொடர்பில் ஊழியர்களினது விழிப்புணர்வினை அதிகரிக்கும் விதத்தில் சுற்றறிக்கைகள் காலத்திற்குக் காலம் பிரசுரிக்கப்பட்டன.
- நிகழ்நிலை ரீதியிலான பயிற்சி நிகழ்வுகள் பயிற்சியளிக்கும் பிரிவினூடாக நடாத்தப்பட்டன.
- சாதகமான போது, கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவை நிகழ்நிலையில் நடத்தப்பட்டன.

கிளையினது தொழிற்பாடுகளின் சுமுகமான நிகழ்தலைப் பாதிக்கக்கூடிய விதமாக, ஊழியர்கள் தமது தொழிலுக்கு சமுகமளித்தலில் பிராந்திய ரீதியிலான ஊரடங்குகளினால் விளைவிக்கப்பட்ட இயலாமையினுடனான தருணங்களை மனிதவள முகாமையாளர் எதிர்கொண்டுள்ளார். மேலும், நோய்ப்பரவலின் இடர் காரணமாக, சுழற்சிமுறையில் ஊழியர்கள் தொழிலில் ஈடுபட்டமையினால் ஏனைய தொடர்புபட்ட தொழிற்பாடுகளை புதுப்பிக்கப்பட்டவையாக வைத்திருத்தலானது சவாலுக்குரியது என நிருபிக்கப்பட்டது. இதற்கமைவாக, கிளை முகாமையாளர்கள் மற்றும் பிரிவுகளின் தலைமை அலுவலர்கள் ஆகியோர் தமது சுழற்சிமுறையை தமக்கு உகந்த வகையில் கட்டமைத்துக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டதுடன், ஊழியர்கள் மாறுபட்ட முறையிலாவது 2021 தொடக்கம் 2022 வரையான தமது கட்டாய விடுமுறையினால் நன்மைமையடைய அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சவால்கள் அடுத்த சில வருடங்களுக்கு தொடருமாகையினால், வங்கியின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் அடையும் விதமாக, வங்கியின் பிரதான தொழிற்பாடுகளுடன் தொடர்புபடும் விதமாக மனிதவள செயற்பாடுகளை அதிகம் டிஜிட்டல் மயப்படுத்தக்கூடிய தெரிவுகளை அவதானிக்கும் செயன்முறையில் வங்கி ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

### மக்கள் விருத்தியை ஏற்படுத்தல்

ஊழியர்கள் திறனுள்ளவர்களாகவும், தற்போதுள்ள, மற்றும் நாளாந்த வணிகத்தினை வினைத்திறனாகக் கையாளக்கூடியவர்களுமாகவுள்ள தன்மையினை உறுதிசெய்யும் விதமாக வங்கியானது கடுமையான பயிற்றுவித்தல் நிரற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இலக்குவைக்கப்பட்டுள்ள இந்த பயிற்றுவித்தலானது, ஊழியர்களை

சிறப்பான வேலைத் தேவைப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வுள்ளவர்களாக மட்டுமல்லாது அத்தகைய தேவைப்பாடுகளை வினைத்திறனான முறையில் வழங்குவதற்கும் பொருத்தமானவர்களாக மாற்றும் என்பதை நாம் நம்புகிறோம். வங்கியினுள் தமது வகிபாகங்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகியவற்றினைப் பற்றிய தெளிவான விழிப்புணர்வினை அனைத்து ஊழியர்களும் கொண்டிருப்பதன் ஊடாக இந்த கவனமான பயிற்றுவித்தலானது செயற்திறன் முகாமைத்துவத்தின் அதீத வினைதிறனையும் உறுதிப்படுத்தும். கற்றலானது அனைவரும் பங்குகொள்ளும் விதமான, தானாகவே-வழிப்படுத்தப்பட்ட மற்றும் ஊழியர்கள் எங்கிருந்தவாறும் எந்த நேரத்திலும் எந்த சாதனத்தினூடாகவும் எந்த மட்டத்திலும் தேர்வு செய்யக்கூடிய டிஜிட்டல் அனுபவத்தினைச் சார்ந்ததாக முக்கியமாகத் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. வேலைக்கான எதிர்காலத்திற்காக ஊழியர்களை மீளத்திறன்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை முக்கிய நோக்கமாகவிருப்பினும், வாழ்நாள் கற்றலுக்கான மன நிலையைப் புகுத்துவதனையும் நாம் குறிக்கோளாக்கியுள்ளோம்.

**வரைபு 39**

**பாலின ரீதியாக பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள் மற்றும் பயிற்சியளித்தல் முறை**




**வரைபு 40**

**பயிற்சியளித்தல் வகையின் (ஒழுக்க விதிகள்) அடிப்படையில் பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள்**







பயிற்சியளித்தல் தேவைகள் பகுப்பாய்வை நடத்துவதன் மூலம், எங்கள் ஊழியர்களின் பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் தேவைகளை பல முறைகளைப் பயன்படுத்தி அடையாளம் கண்டோம். வருடாந்த பயிற்சி தேவைகள் கணக்கெடுப்பு, அந்தந்த குழுத்தலைவர்களுடனான நேர்காணல்கள், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்களுடன் கலந்தாலோசித்தல் மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகள், செயற்திறன் மதிப்பீடுகள் மற்றும் வினாக் கொத்துக்களின் மதிப்புரைகள் ஆகியவை இதில் அடங்கும்.

**அட்டவணை 19**

| பயிற்சித்திட்ட வழிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | மொத்த மணித்தியாலங்கள் | மொத்த பங்குபற்றுனர்கள் | ஆண் | பெண் | தர வகைப்படுத்தல் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | சிரேஸ்ட தரம் | சிரேஸ்ட தரம் (மணித்தியாலங்கள்) | முகாமையாளர் | முகாமையாளர் (மணித்தியாலங்கள்) | நிறைவேற்றுனர் | நிறைவேற்றுனர் (மணித்தியாலங்கள்) | ஊழிய உதவியாளர் | ஊழிய உதவியாளர் (மணித்தியாலங்கள்) | அலுவலக உதவியாளர் | அலுவலக உதவியாளர் (மணித்தியாலங்கள்) |
| உள்ளக | 35 | 8,989 | 1,425 | 392 | 1,033 | 20 | 86 | 306 | 1,707 | 276 | 1,675 | 728 | 4,767 | 95 | 755 |
| பிராந்திய | 15 | 11,579 | 2,864 | 397 | 2,467 | 2 | 10 | 408 | 1,656 | 826 | 3,346 | 1,616 | 6,519 | 12 | 48 |
| இணையவழிக் கருத்தரங்கு | 145 | 19,754 | 9,812 | 3,328 | 6,484 | – | – | 1,106 | 1,726 | 3,457 | 7,040 | 5,249 | 10,988 | 1 | 3 |
| வெளியக | 51 | 2,232 | 213 | 101 | 112 | 29 | 277 | 116 | 1,293 | 44 | 492 | 23 | 168 | – | – |
| **மொத்தம்** | 246 | 42,553 | 14,314 | 4,218 | 10,096 | 51 | 373 | 1,936 | 6,382 | 4,603 | 12,552 | 7,616 | 22,442 | 108 | 806 |

வரைபு 41

**தர ரீதியாக பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள்**




வரைபு 42

**வகை (ஒழுக்கவிதி) ரீதியாக பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள்**




வரைபு 43

**வகை (ஒழுக்கவிதி) ரீதியாக பங்குபற்றுனர்கள்**




தொழில்ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் அவர்களின் தொழில் வாழ்க்கையை முன்னேற்றும் வகையில் எங்கள் ஊழியர்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் எங்களது ஊழியர் மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைப்பதிலும், வங்கி முழுவதிலும் உள்ள ஊழியர்களின் உயர் செயற்திறன் கொண்ட குழுவை உருவாக்குவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். பணியிடத்தில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இடங்களில், உள்ளக மற்றும் வெளியக பயிற்சி, அனுசரணைகள் மற்றும் கல்வி ஊக்கத்தொகை உட்பட பல்வேறு தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளை நாங்கள் எங்கள் ஊழியர்களுக்கு வழங்குகிறோம்.

கொவிட்-19 இன் தொடர்ச்சியுடன், தே.சே. வங்கி எண்ணியல் தளங்கள் மற்றும் இணையவழிக் கருத்தரங்குகளில் பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்காக அதிகளவில் நகர்ந்தமை, மூலம் புதிய இயல்பு நிலைக்கு வெற்றிகரமாக மாறியது. எங்கள் எண்ணியல் மற்றும் பௌதீக பயிற்சித் திட்டங்களில் சமமான வெற்றியைப் பெற்றிருப்பதுடன், முறைமையில் மாற்றம் ஏற்பட்டு இருந்தாலும், ஊழியர்கள் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் தொழிற்பாட்டு மற்றும் தொழிநுட்ப நிபுணத்துவத்தை மேம்படுத்த அவர்களின் தொழில் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் வெவ்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வங்கியில் நீண்டகாலம் பணியாற்றிய ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் அதே வேளையில், புதிய ஆட்கள் பெறுமதியான அனுபவம் மற்றும் வேலை சார்ந்த திறன்களைப் பெறுவதற்கு பின்வரும் திட்டங்கள் கவனம் செலுத்துகின்றன:

இவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- தொழில் அறிமுகம்
- இணைவின் போதான பயிற்சி
- பின்னூட்டல் மூலம் கற்றல்
- தொழிநுட்ப திறன் மேம்பாடு
- மென் திறன் மேம்பாடு
- தலைமைத்துவ திறன் மேம்பாடு

மதிப்பாய்வுக்கு உட்படும் ஆண்டில், முதல்-தடவை முகாமையாளர் விருத்தி பயிற்சியளித்தல் நிகழ்ச்சி தேர்ந்தெடுக்கப்பட்ட 30 கிளை முகாமையாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. “மைய வங்கியியல் பயிற்சி மற்றும் செயற்பாட்டு உருவாக்கம்-புதிய கற்றல் கலாச்சாரம் மற்றும் அனுபவங்களைப் பகிர்தல்” என்ற திட்டத்தின் கீழ் 260 மாற்ற முகாமைத்

தலைவர்கள் அடையாளம் காணப்பட்டனர். மேலும் ஒன்பது பயிற்சி நிகழ்ச்சிகள் இணைவழிக் கருத்தரங்கு அமர்வுகள் மூலம் "மின்னியல் மூலமான-கற்றல் மூலம் அறிவுப் பகிர்வு" திட்டத்தின் கீழ் பணியாளர் விழிப்புணர்வுக்காக நடத்தப்பட்டன. இந்தத் திட்டம், தலைமை அலுவலக ஊழியர்களையும் கிளைகளையும் இணைக்கவும், தகவல்களைப் பகிரவும், நாட்டில் எந்த இடத்தில் இருந்தாலும், நிகழ்நேரத்தில் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அனுமதிக்கிறது. மேலும் பயிற்சி திட்டங்களுக்கு இடமளிக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டு கல்கிசையில் புதிய பயிற்சி நிலையத்தை வங்கி நிறுவியது.

2021 ஆம் ஆண்டில், கடந்த ஆண்டின் ரூபா 2.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் நாங்கள் ரூ. 11.0 மில்லியன் உள்நாட்டுப் பயிற்சியளித்தல் திட்டங்களில் முதலீடு செய்துள்ளோம். 2021 ஆம் ஆண்டில் எங்கள் பணியாளர்கள் 42,553 மணித்தியால பயிற்சி நேரங்களில் ஈடுபட்டுள்ளனர், மேலும் ஒரு ஊழியரின் சராசரி பயிற்சி நேரங்களின் எண்ணிக்கை 9.4 மணிநேரம் ஆகும்.

## எமது திறமையை நிர்வகித்தல் (பெ.உ.இ III)

மனிதவளப் பிரிவு பிரதிப் பொது முகாமையாளரால் வழிநடத்தப்படுகிறது, அவர் நேரடியாக பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அறிக்கையிடுகிறார். ஊழியர் இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், ஆட்சேர்ப்புகள் மற்றும் பிற மனித வளம் தொடர்பான விடயங்கள் இயக்குநர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட மனித வளக் குழுவால் திரையிடப்படுகின்றன. கூட்டாண்மை ஆளுகையில் ஐந்து மூத்த அதிகாரிகளைக் கொண்ட குழு, மனிதவள விவகாரங்களில் சபையின் மனிதவள மற்றும் சம்பளக் குழு மற்றும் சபைக்கு தேவையான பரிந்துரைகளை செய்கிறது. 2021 ஆம் ஆண்டிற்கான ஒரு முக்கிய முயற்சியாக, மனிதவள மேம்பாட்டுப் பிரிவு, தகவல் தொழிநுட்பப் பிரிவுடன் கலந்தாலோசித்து புதிய மனிதவள முறைமையைச் செயற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. நடைமுறைப்படுத்துதலின் முதல் கட்டமாக, 2021 ஆம் ஆண்டில் முழு கிளைத் துறையிலும் விடுமுறை மற்றும் வருகைப் பதிவு தன்னியக்கமாக்கப் பட்டுள்ளது.

### தரத்தின் அடிப்படையிலான பதவி உயர்வுகள்

முடிந்தவரை வங்கியில் தொழில் வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்புக்கு நாங்கள் ஆதரவளிப்பதுடன், அனைத்து பதவி உயர்வுகளும் ஆர்வமுள்ள விண்ணப்பதாரரின் தகுதிகள், திறன் மற்றும் கடந்த பணியின் தரம் ஆகியவற்றின் ஒப்பீட்டு மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். ஊழியர்களின் பதவி உயர்வுக்கு வேலை தொடர்பான காரணிகள் மட்டுமே கருதப்படுகின்றன. பதவி உயர்வு முடிவுகள் உட்பட அதன் அனைத்து தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு செயன்முறைகளிலும், அனைத்து தனிநபர்களுக்கும் சமமான வேலை வாய்ப்பு வழங்கப்படுவதை உறுதி செய்ய வங்கி அனைத்து முயற்சிகளையும் செய்கிறது.

வங்கியின் பதவி உயர்வு நாட்காட்டியின்படி வங்கியின் படிநிலையில் ஒவ்வொரு தரத்திற்கும் பதவி உயர்வுக்கான நேர்காணல்கள் திட்டமிடப்பட்டுள்ளன. வங்கியின் வருடாந்த மனிதவளத் திட்டமானது, வங்கி மற்றும் வங்கி அல்லாத பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களை உள்ளக விளம்பரங்கள் மூலம் நிரப்பக்கூடியதாக இருந்தால், அந்தந்த பதவி உயர்வுகளுக்கான விண்ணப்பங்கள் வங்கியின் அக இணையத்தில் வெளிப்படையாக அழைக்கப்படும். வங்கித் துறை மற்றும் வங்கி அல்லாத பிரிவுகள் ஆகிய இரண்டிலும் ஒவ்வொரு தரத்திற்கும் வழங்கப்படும் பதவி உயர்வுகள் பற்றிய திட்டங்கள் சுற்றறிக்கைகளில் குறிப்புக்காக தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன. இயக்குநர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகளின் தொடர்புடைய திட்டங்களின் அடிப்படையில் பதவி உயர்வுக்கான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

2021 ஆம் ஆண்டில், வங்கி மற்றும் வங்கி அல்லாத பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களின்படி 36 பணியாளர்களை வங்கி நியமித்தது. மேலும், வங்கி மற்றும் வங்கி அல்லாத பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களின்படி 254 உள்ளக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக வங்கி சில உள்ளக தேர்வுகள் மற்றும் நேர்காணல்களை தாமதப்படுத்த வேண்டியிருப்பதால், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளின் எண்ணிக்கை முன்பு காணப்பட்டதை விட சற்று குறைவாகவே உள்ளது.

வரைபு 44

**பதவி உயர்வுகளின் கட்டமைப்பு**




வரைபு 45

**வயது மற்றும் தரத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகள்**




வரைபு 46

**வயது மற்றும் தரத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகள்**



**நிரந்தர வகுப்பில் தொழில்சார் தகைமை பெற்ற ஊழியர்கள்**

அட்டவணை 20

| விபரணம் | 2021 |
|---|---|
| தகவல் தொழில்நுட்பம் | 86 |
| தொழில்நுட்பம் | 20 |
| கணக்கியல் | 11 |
| சட்டம் | 23 |
| ஏனையவை | 4,411 |
| **மொத்தம்** | 4,551 |

## பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு

GRI 401-3, 405-2

இனம், நிறம், மதம், பாலினம், வயது, திருமண நிலை, தேசிய தோற்றம் அல்லது இயலாமை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து நபர்களுக்கும் சமமான வேலை வாய்ப்புகளை வங்கி வழங்குகிறது. இந்தக் கொள்கையின் நோக்கத்திற்கு ஏற்ப, வங்கி பின்வரும் நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்கும்:

- உடல் ரீதியான மற்றும் வாய்மொழி துன்புறுத்தல்கள் இல்லாத பணியிடத்தை பேணுதல்
- ஆட்சேர்ப்பு, பணியமர்த்தல், இழப்பீடு, நன்மைகள், இடமாற்றங்கள், பயிற்சி மற்றும் மேம்பாடு, கல்வி உதவி, பொழுதுபோக்கு திட்டங்கள் மற்றும் அனைத்து வேலை வகைப்பாடுகளிலும் தனிநபர்களின் பதவி உயர்வு ஆகியவை சார்பு இல்லாமல், உண்மையான தொழில் தகுதிகளை மட்டுமே கருத்தில் கொண்டு நடத்தப்படும்.
- தேர்வுக்கான அளவுகோல்கள் வேலை தொடர்பானதாக இருக்கும்போது, வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு முடிவுகள் - முடிந்த போதெல்லாம் - சமமான வேலை வாய்ப்புக் கொள்கையை மேலும் எளிதாக்கும் விதத்தில் எடுக்கப்படும்.
- சம வாய்ப்பு வேலை வழங்குபவராக இருப்பதால், எங்கள் குழுவில் (நிரந்தரப் பணியாளர்கள்) பெண்களின் பிரதிநிதித்துவம் 55% ஆக இருந்தது, 2021ல் புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்களில் 56% பேர் பெண்களாக இருந்தனர். சிரேஸ்ட முகாமை மற்றும் மத்திய நிர்வாகத்தில் முறையே 54% மற்றும் 56% பெண்கள் ஆவர்.
- அனைத்து பெண் ஊழியர்களும் 84 வேலை நாட்கள் மகப்பேறு விடுப்புக்கு முழு நன்மைகளுடன் தகுதியுடையவர்கள், அதே நேரத்தில் அனைத்து ஆண் ஊழியர்களும் மூன்று நாட்கள் மகப்பேறு விடுப்பு எடுக்கலாம்.

  2021 இல், 305 பெண் ஊழியர்கள் இதன் மூலம் பயன்பெற்றனர் மகப்பேறு விடுப்பில் 99.0% பேர் விடுப்பு முடிந்த நிலையில் பணிக்குத் திரும்பினர், அதே நேரத்தில் 105 ஆண் ஊழியர்கள் மகப்பேறு விடுப்பு எடுத்துள்ளனர்.

சமமான வேலை வாய்ப்புக் கொள்கையின் மீறல்கள் மீதான அனைத்து முறைப்பாடுகளும் உடனடியாக விசாரிக்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில், சமமான வேலை வாய்ப்புக் கொள்கையின் மீறல்கள் தொடர்பான ஒரு முறைப்பாட்டையும் வங்கி பெறவில்லை.

வரைபு 47

**பால் ரீதியாக சிரேஷ்ட முகாமை**




வரைபு 48

**பெண் தலைமைத்துவம்**




A – சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்
B – உதவிப் பிரதிப் பொது முகாமையாளர்
C – பிராந்திய முகாமையாளர்கள்
D – கிளை முகாமையாளர்கள்
E – ஏனைய பிரதம/ சிரேஷ்ட முகாமையாளர்

**மிக உயர்ந்த தொழில்சார் மற்றும் நெறிமுறை நியமங்களை நிலைநிறுத்துதல** GRI 406-1

தே.சே.வ ஒழுக்க விதிகள், நெறிமுறைகள், நடத்தை மற்றும் இணக்கப்பாடு தொடர்பாக நமது மக்களிடம் எதிர்பார்க்கப்படும் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நடத்தை கொள்கைகளை அமைக்கிறது. தகுதி அடிப்படையிலான, சமமான வேலை வாய்ப்புகளுக்கான நமது உறுதிப்பாட்டை குறியீடு பிரதிபலிப்பதுடன், பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் இல்லாத பாதுகாப்பான பணிச்சூழலை உறுதிசெய்ய தேவையான தரங்களை வரையறுக்கிறது. புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் வங்கியில் சேர்ந்தவுடன் நடத்தை விதிகளின் கீழ் அவர்களது கடமைகள் மற்றும் உரிமைகள் குறித்து தெரிவிக்கப்படுகின்றனர்.

வங்கியின் ஒழுக்காற்று நடத்தை விதிகள் ஒழுக்கம் தொடர்பான விடயங்களில் ஊழியர்கள் பினபற்ற வேண்டிய வழிகாட்டுதலை வழங்குகிறது. ஒழுக்காற்று நடத்தை விதிகள் 2017 ஆம் ஆண்டு அரசாங்க நிறுவனங்களின் குறியீடு தொகுதி II இன் விதிகளின் அடிப்படையில் திருத்தப்பட்டு வங்கியின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது, இது அனைத்து வகையான ஊழல், இலஞ்சம் மற்றும் மிரட்டி பணம் பறிக்கும் நடைமுறைகளில் “பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை” பேணுகிறது. நிர்ணயிக்கப்பட்ட நியமங்கள், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளுடன் தனிப்பட்ட நடத்தையில் ஏதேனும் முரண்பாடு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான எந்தவொரு சர்ச்சையும் முறையாகவும் ஒழுக்கக் குறியீடு மூலம் வெளிப்படையாகவும் கையாளப்படுகிறது.

## பெறுபேற்று முகாமை

GRI 404-3

பெறுபேற்று முகாமை செயன்முறை வங்கியின் பெறுபேற்று மதிப்பீட்டு முறை மூலம் பணியாளரை மதிப்பீடு செய்யும் ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும். அனைத்து ஊழியர்களுடனும் அவ்வப்போது பெறுபேற்று மதிப்பீட்டை நடத்துவது வங்கியின் கொள்கையாக உள்ளது. மதிப்பீடு என்பது ஊழியர்களின் அதிகபட்ச திறனை அடைய உதவுவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் ஒரு பணியாளர் மேம்பாட்டு நடவடிக்கையாக இருக்கும். வங்கியின் பெறுபேற்று மதிப்பீட்டு முகாமை முறைமை தொடர்பான வழிகாட்டுதல்களை நிறுவுவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் பெறுபேற்று முகாமை குறித்த கொள்கையை வங்கி கொண்டுள்ளது. பின்வரும் முக்கிய கூறுகளை அடைவதை உறுதி செய்வதற்காக இந்தக் கொள்கை வரையப்பட்டது:

- வங்கியின் ஒட்டுமொத்த நோக்கங்களை அடைவதற்காக பெறுபேற்று விலகல்களைக் கண்டறிந்து ஊழியர் பெறுபேற்றை மேம்படுத்துதல்
- தனிப்பட்ட பணியாளர்கள் மற்றும் குழுக்களின் பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் தேவைகளைக் கண்டறிதல்
- ஊழியர்களின் ஊதியப் பொதிகள் மீதான அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் பெறுபேற்று மதிப்பீட்டைப் பற்றிய பின்னூட்டத்தை வழங்குதல்

வரைபு 49

**பெண் தலைமைத்துவம்**




வங்கியானது ஊழியர்களின் அதிகார வரிசைமுறையின் அடிப்படையில் ஊழியர்களின் பெறுபேற்றை அவ்வப்போது அளவிடுகிறது. எனவே, நிர்வாகப் பணியாளர்கள், மேற்பார்வைப் பணியாளர்கள், செயற்பாட்டுப் பணியாளர்கள் மற்றும் சிறு பணியாளர்களுக்கு தனித்தனி படிவங்கள் உள்ளன. தே.சே.வங்கியில், ஆண்டுதோறும் நடைபெறும் பணியாளர் மதிப்பீடுகளுடன், பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான ஒரு மதிப்பீட்டு முறையைப் பற்றி நாங்கள் பெருமை கொள்கிறோம்.

முன்னரே தீர்மானிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில், கூட்டாண்மை முகாமையானது முக்கிய பெறுபேற்றுக் குறிகாட்டிகளில் (KPI) சமநிலைப்படுத்தப்பட்ட பெறுபேற்று அட்டை முறைமை மூலம் மதிப்பிடப்படுகிறது. இந்த இலக்கு அடிப்படையிலான செயற்திறன் முகாமை முறைமை, உணர்வு சார்ந்த சாத்தியமான சார்புகளை நீக்குவதாகவும் குறிக்கோள் அடிப்படையிலான மதிப்பீட்டை ஊக்குவிப்பதாகவும் உள்ளது.

## பணியாளர்களைத் தக்கவைத்தல் (பெ.உ.இ IV)

GRI 401-1

2020 இல் நிரந்தர ஊழியர்களுக்கான தக்கவைப்பு விகிதம் 98.8%, 2021 இல் 98.6% ஆகக் குறைந்துள்ளதுடன் இதற்கான காரணம் 2020 இல் 1.2% ஆக இருந்த ஊழியர்களின் புரள்வு விகிதம் 2021 இல் 1.4% ஆக அதிகரித்தது. இருப்பினும், தொழில்துறையினுடன் ஒப்பிடுகையில் தே.சே.வ பதவிகளில் மிக உயர்ந்த தக்கவைப்பு விகிதங்கள் மற்றும் மிகக் குறைந்த பணியாளர் புரள்வு விகிதங்கள் காணப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டுக்கான மொத்த ஊழியர்களின் புரள்வு 60 பணியாளர்களாக இருந்தது, அவர்களில் 58% ஆண்கள் மற்றும் 80% பேர் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள், இதனால் பணியின் முடிவில் ஓய்வு பெறுகின்றனர். 2021 இல் நிர்வாக மட்டத்தில் அதிகபட்ச புரள்வு 43% ஆகும். இந்த புள்ளிவிவரங்கள், ஊழியர்களை வளர்க்கும் எங்கள் மிகுந்த ஈடுபாடு, வெகுமதி மற்றும் நிலையான பணி கலாச்சாரத்தின் வலுவான பிரதிபலிப்பாகும். மிகவும் திறமையான மற்றும் ஊக்கமளிக்கும் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்ய நாங்கள் உறுதியளிக்கிறோம், இது எங்கள் ஊழியர் பராமரிப்பு முயற்சியில் முழுமையான அணுகுமுறையை எடுக்கத் தூண்டியதுடன், அவர்களின் உடல், சமூக, உளவியல் மற்றும் பொருளாதார நல்வாழ்வு வங்கியில் கவனிக்கப்படுவதை உறுதிசெய்கிறது.

வரைபு 50

**புரள்வின் கட்டமைப்பு**




வரைபு 51

**தரம் மற்றும் வயது அடிப்படையில் புரள்வுக்கான காரணம்**




வரைபு 52

**தரம் மற்றும் வயது அடிப்படையில் புரள்வுக்கான காரணம்**




வரைபு 53

**தரம் மற்றும் பாலின அடிப்படையில் புரள்வு**




வரைபு 54

**பாலின அடிப்படையில் புரள்வுக்கான காரணம்**




## ஊழியர்கள் மீதான பரிபூரண கவனம்

GRI 401-2 மற்றும் 403-9

ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்புடன் இணைந்து பணி-வாழ்க்கை சமநிலையில் ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான எங்கள் கவனமே எங்கள் திறனின் முக்கிய பகுதியாகும். தே.சே.வங்கியில் செழித்து வரும் மகிழ்ச்சியான ஊழியர்களை உருவாக்க இந்த இரண்டு எண்ணக்கருக்களும் ஒன்றாகப் பயணிக்கின்றன என நாம் நம்புகிறோம். இந்த நோக்கத்திற்காக, எங்கள் ஊழியர்களிடையே வேலை-வாழ்க்கை சமநிலை மற்றும் நல்ல பணி உறவுகளை பராமரிக்க உதவும் சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை வங்கி ஊக்குவிக்கிறது. தே.சே.வ கலர்ஸ் நைட், வெசாக் பக்தி கீ, கிறிஸ்துமஸ் கரோல்கள் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் போன்ற சமூக செயற்பாடுகள் வங்கியின் சமூக

நாட்காட்டியின் முக்கிய நிகழ்வுகளாகும், அதே நேரத்தில் வங்கியின் தலைமை அலுவலகத்தில் உள்ள முழு வசதியுள்ள உடற்பயிற்சிக் கூடம் உடற்பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்ள வசதி வழங்குகிறது. கொவிட்-19 தொற்றுநோயைத் தொடர்ந்து சுகாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்தச் செயற்பாடுகளில் பல குறைக்கப்பட்டிருந்தாலும், ஊழியர்கள் நன்றாகக் கவனிக்கப்படுவதை உறுதிசெய்ய பின்வரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்:

- 251 பணியாளர்களின் பங்கேற்புடன், 17 மனுதாரர்களின் அமர்வு மூலம், நிபுணர்கள்/ஆலோசகர்களின் ஆலோசனையுடன் மருத்துவ அமர்வுகளை ஊழியர்கள் பெற்றுள்ளனர்.
- அனைத்து புதிய தாய்மார்களுக்கும் நெகிழ்வான பணி ஏற்பாடுகள் வழங்கப்படுவதுடன், குழந்தைக்கு ஒரு வருடம் ஆகும் வரை பாலூட்டும் நேரத்தை ஒரு நாளைக்கு இரண்டு மணிநேரமாக அதிகரித்து, இது காலை மற்றும் மாலை அமர்வுகளிடையே பிரிக்கப்படுகிறது:
- பொதுநலப் பிரிவின் ஒட்டுமொத்த முகாமையுடன் அங்கீகரிக்கப்பட்ட முன்னணி தனியார் மருத்துவமனையால் நடத்தப்படும் உள்முக மருத்துவ மையம்
- மருத்துவ மையத்தில் சிறப்பு மருத்துவர்கள் மாதத்திற்கு இருமுறை வருகை தருவர்.
- முன்னணி தனியார் மருத்துவமனைகளால் நடத்தப்படும் மருத்துவ சிகிச்சைகள்
- மன அழுத்த முகாமை, கண் பராமரிப்பு மற்றும் இருதய நோய் தடுப்பு ஆகிய பகுதிகளில் நலன்புரி பிரிவால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகள் / விரிவுரைகள்.
- நீண்ட கால சேவையை அங்கீகரிக்கும் வருடாந்த பாராட்டு விழா
- ஊழியர்களின் குழந்தைகளுக்கான வருடாந்த சாதனையாளர் விருது வழங்கும் விழா
- சலுகை விலையில் தலைமை அலுவலக சிற்றுண்டிச் சாலை
- தே.சே.வ விளையாட்டு அணி மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள உடற்பயிற்சிக் கூடம்
- தே.சே.வ கலை வட்டம்
- நூலக வசதிகள்
- நாட்டின் வெவ்வேறு இடங்களில் 15 சுற்றுவட்ட பங்களாக்களை பேணுதல்
- கிளைகள் மற்றும் பிரிவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நாள் பயணங்களுக்கு நீட்டிக்கப்பட்ட பண உதவி

வங்கி தனது மனிதவளக் கொள்கை கையேடுக்கு ஏற்ப ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதன் மூலம் பணியிட பாதுகாப்பை மேற்பார்வையிடுவதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உறுதிப்பாட்டை செயற்படுத்த வங்கிக்கு வழிகாட்டுதல்களை அமைக்கிறது. இந்த உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்குத் தேவையான முக்கிய நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள், நிர்வாகம் மற்றும் ஊழியர்களின் பொறுப்புகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை உறுதி செய்வதில் சுகாதாரக் குழுவின் சிறப்புப் பங்கு மற்றும் செயற்பாடுகளை இது குறிப்பாக விவரிக்கிறது. இந்தக் கொள்கையின் குறிப்பிட்ட நோக்கங்களாவன:

- தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை மற்றும் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலயச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க தேசிய சேமிப்பு வங்கியில் தேசிய அளவில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைப்பை நிறுவுதல்
- அந்தந்த கிளை அல்லது பிரிவில் “உடல்நலம் மற்றும் பாதுகாப்பு” சார்ந்த பணிச்சூழலை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு கிளை அல்லது பிரிவிலிருந்து இரண்டு நபர்களை நியமித்தல்
- பணியில் இருக்கும் ஊழியர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் நலனைப் பாதுகாத்தல்
- பணியிடத்தில் பணியாளர்களுக்கு சாத்தியமான உடல்நலம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களை அடையாளம் காணுதல்

ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்கு ஏற்றவாறு அலுவலக சூழலை மேம்படுத்துதல்

### நியாயமான மற்றும் பொறுப்பான ஊதியம் மற்றும் நன்மைகள்

GRI 201-3, 202-1, 401-2 and 405-2

தொழிலாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் வங்கியின் திறனின் மற்றொரு முக்கிய அம்சம் நியாயமான மற்றும் பொறுப்பான ஊதியங்கள் மற்றும் நலத் திட்டங்கள் ஆகும். போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் கவர்ச்சிகரமான ஊதியத் தொகுப்பை வழங்கி, போட்டித்தன்மை, ஊக்கமளித்தல் மற்றும் நியாயமான ஊதியக் கட்டமைப்புகளை வங்கி ஆதரிப்பதுடன், வங்கி அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் வகிபாகங்கள் மற்றும் நிறுவனத்திற்குள் செயற்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நியாயமான ஊதியம் வழங்குகிறது.

சம்பளம் மற்றும் பிற நிதிசார் நன்மைகள் தொழிற்சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. தலைமை முகாமையாளர் தரம் மற்றும் அதற்குக் கீழே உள்ள ஊழியர்களுக்கு சம்பளப் பலன்களுக்கான கூட்டு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு, வங்கியின் அக இணையத்தில் சம்பள விகிதங்களை வெளியிடுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை பின்பற்றப்படுகிறது. விகிதங்கள் தொடர்பாக வங்கியின் நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான விவாதங்களுக்குப் பிறகு, இரண்டு ஒப்பந்தங்களும் - சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத நலன்கள் - ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதங்களுக்கு ஏற்ப மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தப்படுகின்றன. ஒரே மாதிரியான பொறுப்புகளைக் கொண்ட அனைத்து பணியாளர்களும் ஒரே சம்பள வரம்பிற்குள் செலுத்தப்படுகிறார்கள், அதே நேரத்தில் சேவையின் நீளம் எந்த சம்பள வரம்பிற்குள்ளும் சம்பளத்தை பாதிக்கும். 2021 இல், 2021 - 2023 காலகட்டத்திற்கான சம்பள திருத்தத்திற்கான கூட்டு ஒப்பந்தம், கூட்டு வணிக முகாமை மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே வெற்றிகரமாக கையெழுத்திடப்பட்டது.

ஒவ்வொரு பணியாளரின் ஊதியத்தின் முக்கியப் பகுதியைப் பலன்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், வங்கியில் பணியைத் தொடர்வதற்காக ஒரு ஊழியர் பெறும் அனைத்து நிதிக் கொடுப்பனவுகளாக நிதிப் பலன்கள் வரையறுக்கப்படும். அனைத்து வழக்கமான முழுநேர ஊழியர்களும் தங்கள் சேவையில் உறுதி செய்யப்பட்ட பிறகு பின்வரும் நிதி நன்மைகளை அனுபவிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

அட்டவணை 21

| நலன்கள் | விபரம் |
|---|---|
| **நிலையான மற்றும் மாறக்கூடிய பணப் பலன்கள்** | ● போட்டித்திறன் மிக்க சம்பளம்<br>● அடையப்படும் இலாப இலக்குகள் மற்றும் சபை ஒப்புதலுக்கு உட்பட்ட வகையில் ஏப்ரல் மற்றும் டிசம்பரில் வெகுமதிக் கொடுப்பனவு<br>● ஆண்டு இறுதியில் அதிகபட்சம் ஏழு நாட்கள் வரை சிறப்புரிமை மற்றும் மருத்துவ விடுப்பு பணமாக்குதல்<br>● முந்தைய 12 மாதங்களில் திருப்திகரமான பெறுபேற்றுத் தடத்தைக் கொண்ட ஊழியர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்பு<br>● எரிபொருள்/பயணம், தங்குமிட உதவி, வாழ்வாதாரம் மற்றும் கடமைப் பயணத்திற்கான ஏற்பாடு<br>● மேலதிக வேலை நேரம் சார்ந்த கொடுப்பனவு<br>● பங்களிப்பு அல்லாத ஓய்வூதிய திட்டம் மற்றும் பங்களிப்பு விதவை மற்றும் அனாதைகள் பங்களிப்பு உதவித் திட்டம் |
| **திருப்பிச் செலுத்துதல்கள்** | ● தொடர்புடைய கல்விச் செலவுகள் தொடர்பில் தொழில்முறை நிறுவன உறுப்பினர் கட்டண அனுசரணையைத் திரும்பப் பெறுதல்<br>● இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தில் (IBSL) வங்கியியல் மற்றும் நிதிக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா நிலைகளை நிறைவு செய்யும் போது கௌரவக் கொடுப்பனவு<br>● பங்களிப்பு அல்லாத ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு விதவைகள் மற்றும் அனாதைகள் திட்டத்திற்கான உரிமை |
| **மானிய கடன் பலன்கள்** | ● வீடு, வாகனக் கடன்கள், நுகர்வு மற்றும் துன்ப நிகழ்வுக் கடன்கள், பண்டிகை முற்பணம் மற்றும் பிற மானியக் கடன்கள் |
| **மருத்துவ உதவி திட்டங்கள்**<br>"வங்கியின் பணியாளர் மருத்துவ உதவித் திட்டத்தில்" பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் | ● மருத்துவக் கட்டணங்கள், மருத்துவமனையில் அனுமதித்தல், ஆபத்தான நோய்கள், கண் மற்றும் பல் பராமரிப்புக்கான நிரந்தர மற்றும் தகுதிகாண் ஊழியர்களுக்கான மருத்துவத்திட்டம்<br>● உடல் காயம் மற்றும் இறப்பு ஏற்பட்டால் அதிகபட்சம் ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான இழப்பீட்டுத் திட்டம் |
| **ஓய்வூதிய பலன்கள்**<br>நியமனத் திகதியில் அமுலிலுள்ள ஓய்வூதியத் திட்டத்தின் நிபந்தனைகளுக்கு இணக்கமாக அனைத்து நிரந்தரப் பணியாளர்களும் பங்களிப்பு இல்லாத ஓய்வூதியத் திட்டத்தில் பங்கேற்க தகுதியுடையவர்கள்.<br>ஓய்வூதிய நிதியப் பலன்கள் கவனிப்பு, முன்னெச்சரிக்கை, விவேகம் ஆகியவற்றுடன் பொருத்தமான முதலீட்டுக் கொள்கைகளுடன் இறுக்கமான முகாமை செய்யப்படும். | ● ஓய்வூதிய நிதியம் (திட்டம் I மற்றும் திட்டம் II)<br>மேலே உள்ள திட்டம் முழுவதுமாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது, திட்டமிடப்பட்ட அலகுக் கடன் புள்ளி விபர மதிப்பீட்டு முறையில் உறுதிசெய்யப்பட்ட, வரையறுக்கப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பலன்களை வழங்குவதற்கான செலவு.<br>வங்கியின் ஓய்வூதிய நிதி (திட்டம் I) 1 அக்டோபர் 1995 க்கு முன் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்குப் பொருந்தும், இதற்கான பங்களிப்பு ரூபா 326 மில்லியன் 2021 வங்கியால் மேற்கொள்ளப்பட்டதுடன், நிதியிடப்படாத பொறுப்பு ரூ. 4,921.4 மில்லியன் ஆகும்.<br>ஊழியரின் மொத்த சம்பளத்தில் 12% வங்கியால் ஓய்வூதிய நிதிக்கு (திட்டம் II) அளிக்கப்படுகிறது, இது அக்டோபர் 1, 1995 அன்று அல்லது அதற்குப் பிறகு பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்குப் பொருந்தும். ஓய்வூதியத் திட்டம் II புள்ளிவிபர மதிப்பீட்டின்படி ரூபா 397.7 மில்லியன், 31 டிசம்பர் 2021 இல் மிகையாக உள்ளது.<br>● பங்களிப்பு விதவைகள்/விதவைகள் மற்றும் அனாதைகள் நிதி (திட்டம் II க்கு மட்டும்)<br>பங்களிப்புகள் ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தால் தீர்மானிக்கப்படுவதுடன், உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் அவர்களின் அடிப்படை மாத சம்பளத்தில் 5% பங்களிக்க வேண்டும்.<br>● பங்களிப்பு ஓய்வூதிய மருத்துவத் திட்டம்<br>ஊழியரின் வயதைப் பொறுத்து மாதாந்த பங்களிப்பு தீர்மானிக்கப்படுகிறது. வங்கி ரூ. 196.5 மில்லியன் இந்த திட்டத்திற்கு பங்களித்து இருப்பதுடன், நிதியிடப்படாத பொறுப்பு ரூ. 3,669.3 மில்லியனாக ஆண்டு இறுதியில் காணப்பட்டது. |
| **2021 இல் பணியாளர்களின் நலன்களில் புதிதாக சேர்க்கப்பட்டவை** | ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான பங்களிப்பு மருத்துவ உதவித் திட்டத்தைத் திருத்தியதன் விளைவாக, ஊழியர்களின் மருத்துவ உதவித் திட்டத்திற்கு இணையான பலன்கள் வழங்கப்படும்.<br>தினசரி உணவுப் படி, கிளை முகாமையாளர்களுக்கான மாதாந்த உதவித்தொகை, பணியில் இருக்கும் போதான ஒரு ஊழியரது இறப்புக்குப் பிறகு வழங்கப்படும் இழப்பீடு மற்றும் வருடாந்த ஊழியர் சுற்றுலாவுக்கான போக்குவரத்து கொடுப்பனவு போன்ற பிற ஊழியர் நலன்புரி வசதிகள் அதிகரிப்பு. |

வரைபு 55

**ஊழியர்களின் சேவைக்காலம்**




வரைபு 56

**பாலின அடிப்படையில் சேவைக்காலம்**




## தரம் அடிப்படையில் சேவைக்காலம்

அட்டவணை 22

| தரம் | 5 வயதிற்கு கீழானோர் | 5-10 வயதிற்கிடைப்பட்டோர் | 11-15 வயதிற்கிடைப்பட்டோர் | 16-20 வயதிற்கிடைப்பட்டோர் | 21 வயதிற்கு மேற்பட்டோர் |
|---|---|---|---|---|---|
| சிரேஸ்ட தரம் | 4 | 4 | 5 | 2 | 13 |
| நிறைவேற்றுனர் | 35 | 174 | 127 | 125 | 267 |
| முகாமையாளர் | 211 | 185 | 404 | 198 | 93 |
| ஊழிய உதவியாளர் | 694 | 1,162 | 167 | 12 | 41 |
| அலுவலக உதவியாளர் | 608 | 5 | 0 | 1 | 14 |
| **மொத்தம்** | 1,552 | 1,530 | 703 | 338 | 428 |

## வினைத்திறன் மிக்க வகையில் தொடர்பாடல் (பெ.உ.இ V)

தேவையான தகவல்களை தெளிவாக சரியான நேரத்தில் மென்மையான தொடர்பாடலை ஏற்படுத்தும் வழிகளை வங்கி எப்போதும் ஊக்குவிக்கிறது. நிர்வாகத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையே திறந்த இருவழித் தொடர்பு, மற்றும் நட்பு, கூட்டுறவு பணிச்சூழலை நிறுவுதல் ஆகியவை முரண்பாடுகளை நீக்குவதற்கும், மகிழ்ச்சியை அதிகரிப்பதற்கும், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு தொடர்பாடலுக்காக வங்கி முடிந்த வரையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல வழிமுறைகளைப் பயன்படுத்தியுள்ளது:

- நாடளாவிய ரீதியில் கிளைகளுக்கிடையில் நேரடித் தொடர்பாடல் மற்றும் திறந்த கலந்துரையாடல்களை எளிதாக்குவதற்கு இணையவழிகள்
- பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் உதவியுடன் அமைக்கப்பட்ட, மனிதவள மேம்பாட்டுப் பிரிவு “இணையவழிக் கருத்தரங்கு” எண்ணக்கருவானது திறந்த விவாதங்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆதரவளிக்கும் நேரடி அமர்வுகளை அனுமதிக்கிறது. கொவிட்-19 தொற்றுநோய்களின் போது, பௌதீக ரீதியான முடக்கங்களை ஏற்படுத்திய நேரத்தில் பணியாளர்களை எண்ணியல் முறையில் இணைக்க இது குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக உதவுகிறது.
- ஊழியர் தரவு சேகரித்தல்கள்
- அக இணையம்
- சுற்றறிக்கைகள்
- பணியாளர் அறிவிப்பு பலகை
- முகாமையிடம் இருந்தான மின்னஞ்சல்கள்
- மனிதவளப் பிரிவில் இருந்து முறையான கடிதங்கள்

### தொழிற்சங்கங்களுடனான உறவு - சங்கத்தின் கூட்டு பேரம் பேசுதலுக்கான சுதந்திரம் GRI 102-41

வங்கியின் நீண்டகால வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கு தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பிரதிநிதித்துவ சங்கங்களுடனான அதன் உறவு முக்கியமானது என்றும், அதன் மூலம் ஊழியர்கள் மற்றும் வங்கி ஆகிய இருவருக்கும் நன்மை பயக்கும் என்றும் வங்கி நம்புகிறது. எனவே, முகாமை அதன் அனைத்து ஊழியர்களுடனும் - தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அல்லாதவர்கள் - ஒரு சுமூகமான மற்றும் வெற்றிகரமான உறவைப் பேணுவதற்கு நேரடி மற்றும் அடிக்கடி தொடர்பு கொள்ளப்படுவதை உறுதி செய்கிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து தொடர்புகொள்வதன் மூலம், தகவல்களை வழங்குவதற்கும், அவர்களின் உறுப்பினர்கள் மற்றும் பிற பிரதிநிதி சங்கங்கள் வணிக நடவடிக்கைகள் மற்றும் வங்கியின் குறிக்கோள்கள் பற்றிய முழு புரிதலைப் பெறுவதற்கும், அதன் மூலம் பரஸ்பர புரிந்துணர்வின் சூழலை வளர்ப்பதற்கும் அதிக வாய்ப்பை உருவாக்குகிறது.

ஜாதிக சேவகா சங்கமய, இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை சுதந்திர வங்கி ஊழியர் சங்கம், நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் மற்றும் அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கம். உள்ளிட்ட வங்கிக்குள் இயங்கும் தொழிற்சங்கங்கள், அனைத்து வர்த்தகசங்கங்களுடனும் வங்கி மிகவும்

ஆரோக்கியமான உறவுகளை தொடர்ந்து கொண்டுள்ளது.

வங்கி அதன் ஊழியர்களின் சங்க சுதந்திரத்தை நிலைநிறுத்தி, கூட்டுப் பேரம் பேசலுக்கான அவர்களின் உரிமையை அங்கீகரிக்கிறது. மேலும், ஊழியர்களுக்கான நன்மைகள் வங்கிக்கான பலன்களாக மொழிபெயர்க்கப்பட்டு, அதன் மூலம் அதன் நீண்டகால வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில், தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பிரதிநிதித்துவ சங்கங்களுடனான அதன் நேர்க்கணிய உறவைத் தக்க வைத்துக் கொள்ள வங்கி விரும்புகிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் தொடர்பில் இருப்பதன் மூலம், வங்கியின் வணிக நடவடிக்கைகள் மற்றும் இலக்குகள் பற்றிய முழுப் புரிதலைப் பெறுவதற்கு தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் பிற பிரதிநிதி சங்கங்களை அனுமதிக்கும், தகவல்களை வழங்குவதற்கான கூடுதல் வாய்ப்புகளை உருவாக்குகிறது. சம்பளம் மற்றும் பிற நிதிச் சலுகைகள் தொழிற்சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. 2021 - 2023 காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத பலன்களுக்கான கூட்டு ஒப்பந்தம் வங்கியின் முகாமை மற்றும் தொழிற் சங்கங்களுக்கு இடையில் வெற்றிகரமாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வங்கி அதன் ஊழியர்களின் சங்க சுதந்திரத்தை நிலைநிறுத்தி, கூட்டுப் பேரம் பேசலுக்கான அவர்களின் உரிமையை அங்கீகரிக்கிறது. மேலும், ஊழியர்களுக்கான நன்மைகள் வங்கிக்கான பலன்களாக மொழிபெயர்க்கப்பட்டு, அதன் மூலம் அதன் நீண்டகால வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில், தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பிரதிநிதித்துவ சங்கங்களுடனான அதன் நேர்க்கணிய உறவைத் தக்க வைத்துக் கொள்ள வங்கி விரும்புகிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் தொடர்பில் இருப்பதன் மூலம், வங்கியின் வணிக நடவடிக்கைகள் மற்றும் இலக்குகள் பற்றிய முழுப் புரிதலைப் பெறுவதற்கு தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் பிற பிரதிநிதி சங்கங்களை அனுமதித்து, தகவல்களை வழங்குவதற்கான கூடுதல் வாய்ப்புகளை உருவாக்குகிறது. சம்பளம் மற்றும் பிற நிதிச் சலுகைகள் தொழிற்சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. 2021 - 2023 காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத பலன்களுக்கான கூட்டு ஒப்பந்தம் வங்கியின் முகாமை மற்றும் தொழிற் சங்கங்களுக்கு இடையில் வெற்றிகரமாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

### பணியாளர் குறை தீர்க்கும் வழிமுறைகள்

வங்கியானது “படி ஏணி” முறையைப் பயன்படுத்துகிறது, அங்கு ஒரு வரிசைமுறையின்படி ஒரு குறையைத் தீர்க்க முடியும், அதே நேரத்தில் திறந்த கதவுக் கொள்கை” பின்பற்றப்படுகிறது, அங்கு குறைகளை நேரடியாக மனிதவளக் குழுவால் பரிந்துரைக்கப்படும் ஒரு சுயேச்சைக் கட்சிக்கு அனுப்ப முடியும். முடிந்தவரை, “படி ஏணி அமைப்பின்” கீழ் ஊழியர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். இரண்டு முறைமைகளும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

#### 1. ஏணிப் படி முறை




மேலே குறிப்பிட்டுள்ள படி ஏணி முறைமை மூலம் ஊழியரது குறையை தீர்க்க முடியாது என்று ஒரு ஊழியர் கருதினால், அதை நேரடியாக மனிதவள மேம்பாட்டுப் பிரிவுக்கு அனுப்பலாம், அது கீழே உள்ள திறந்த கதவுக் கொள்கையை புறநோக்கினைப் பின்பற்றும்.

#### 2. திறந்த கதவுக் கொள்கை



**3. குழலோசை எழுப்பும் கொள்கை**

முறைகேடுகள், நிதி அறிக்கை மோசடிகள், முறைகேடுகள் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற செய்கைகள் தொடர்பான அவதானத்தை உருவாக்க குழலோசை எழுப்பப்பட்டால் முறைப்பாட்டாளருக்கு வலுவான பாதுகாப்புடன் அது மிக உயர்ந்த நெறிமுறை நடைமுறைகளுடன் கேட்கப்படும் என்ற உறுதியை இது ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது.

## 2022 மற்றும் அதற்குப் பின்னான புறநோக்கு

**குறுங் காலம்**

- அனைத்து ஊழியர்களும் பௌதீக மற்றும் உணர்ச்சி ரீதியாக ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியத்தின் அடிப்படையில் நன்கு கவனிக்கப்படுவதை உறுதி செய்தல்
- சரியான திறன்களை சரியான இடத்தில் இணைப்பதற்கு சிறந்த ஆட்சேர்ப்பு தீர்வுகளில் ஈடுபடுதல்
- பணியாளர் மேம்பாடு மற்றும் ஈடுபாட்டின் மீது சிறப்பு கவனம் செலுத்தி "கற்றல் கலாச்சாரத்தை" உருவாக்குதல்
- வலுவான வாடிக்கையாளர் சேவையைப் பேண சேவை நுட்பங்கள் மற்றும் மென் திறன்கள், உற்பத்தி அறிவு மற்றும் வாடிக்கையாளர் தொடர்பில் புதிதாக வருபவர்கள் மற்றும் ஏற்கனவே உள்ள ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல்
- பரிவர்த்தனைகள் மற்றும் செயலாக்கத்தில் ஊழியர் வேகம் மற்றும் துல்லியத்திற்கு முன்னுரிமை கொடுத்தல்

**நடுத்தரளவு காலம்**

- மனிதவள செயற்பாடுகள், மனித வளத்தின் ஒட்டுமொத்த வினைத்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்த மனிதவள முறைமையின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்துதல்
- சார்புத் தன்மைகளை நீக்கி, மதிப்பீடுகளின் செயற்திறனை மேம்படுத்தும் வகையில் இலக்கு அடிப்படையிலான பெறுபேற்று மதிப்பீட்டு (KPI அடிப்படையிலான) முறைமையை அமைத்தல்
- ஒழுக்க விசாரணை செயன்முறையை விரைவுபடுத்துதல்

**நீண்ட காலம்**

- வங்கித் தொழிலைத் தொடர விரும்புவோருக்கு விருப்புக்குரிய தொழில் தருனராக இருத்தல்
- ஒவ்வொரு தருணத்திலும் பௌதீக மற்றும் மனதிற்குகந்த நிலைநிறுத்தும் பணிச்சூழலை உருவாக்குதல்

# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்



## இதனுள் உள்ளடங்குபவை

ஒரு நிறுவனத்திற்குள் உள்ள சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் என்பது, தனிநபர் மற்றும் கூட்டு நல்வாழ்வை மேம்படுத்த தகவலைப் பகிர்ந்து கொள்ளும் திறனுடன் இணைந்து சமூகங்கள், அக்கறையுள்ள தரப்பினர் குழுக்கள் மற்றும் பிற வலையமைப்புக்களிடையே உள்ள நிறுவனங்கள் மற்றும் உறவுகளை இணைக்கிறது.

**சமூக மற்றும் உறவு மூலதனத்தின் மூலம் மதிப்பை உருவாக்குதல்**

### எமது அணுகுமுறை

தகவலைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் தனிப்பட்ட மற்றும் கூட்டு நல்வாழ்வை மேம்படுத்து-வதற்கான எங்கள் திறன் நேரடியாக எங்கள் உறவுகளின் வலிமையுடன் தொடர்புடையது என்று நாங்கள் நம்புகிறோம், இது உருவாக்கப்பட்ட பெறுமதியில் இருந்து மதிப்பை உருவாக்கவும் பயனடையவும் உதவுகிறது. எனவே அவை வங்கியின் சமூக உணர்வை வடிவமைக்கின்ற காரணத்தினால், அத்தகைய இணைப்புகள் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்படுவது கட்டாயமாகும். இது வங்கி உருவாக்கும் பெறுமதியின் அளவில் தாக்கம் புரிவதுடன், தொழிற்படுவதற்கான எங்கள் சமூக உரிமத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அவை முக்கியமானவையாக உள்ளன.

இந்த நோக்கத்திற்காக, பெறுமதி முன்மொழிவுகளை வழங்குவதன் மூலமும், எதிர்பார்ப்புகளையும் தாண்டிச் செயற்படுவதன் மூலமும் நாங்கள் வாடிக்கையாளர் உறவுகளை வலுப்படுத்தியுள்ளோம் - நிச்சயம் மிக்க செயற்திட்டங்கள் மூலம் சமூக ஆதரவை வழங்கியுள்ளோம் - எங்கள் வழங்கல் சங்கிலி மூலம் உற்பத்தி மற்றும் சேவைகளின் விருத்திக்கு ஆதரவு வழங்கியுள்ளோம் - திறன்களை மேம்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம் - அத்துடன் அனைத்து சட்ட மற்றும் ஒழுங்கு விதிமுறைசார் தேவைப்பாடுகளுடனும் இணங்கியுள்ளோம்.

### முக்கிய உள்ளீடுகள்

- நீண்ட கால வாடிக்கையாளர் உறவுகள்
- ஆக்கபூர்வமான ஊழியர் ஈடுபாடு
- அரசு மற்றும் ஒழுங்கு விதிமுறையாளர்களுடனான நேர்க்கணிய உறவுகள்
- ஊடகங்கள் மற்றும் சமூகங்களுடனான முன்னாக்கமான ஈடுபாடு
- வணிகப் பங்காளர்கள் மற்றும் வழங்குனர்களுடனான கூட்டுச் செயற்பாடுகள்

### முக்கிய வெளியீடுகள்

- சமூக உரிமத்தைப் பேணுதல்
- வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவை வழங்கல்
- நியாயமான மற்றும் சமத்துவமான கேள்விமனுக் கோரல் செயன்முறை
- தொழிலாளர் சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தங்கள்
- நெறிமுறைசார் முகாமை முறைமைகள்

### பெறுமதியை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள்

- நீண்ட கால வணிகத்திற்காக அக்கறையுள்ள தரப்பினருடன் நீண்டகால உறவுகளை நோக்குதல்
- நிலைபேறான சமூகபொருளாதார வளர்ச்சிக்காக பகிரப்பட்ட பெறுமதியை உருவாக்குதல்
- உற்பத்திகள் மற்றும் சேவைகளின் நிலைபேறான தன்மையைப் பேண, சிறந்த ஆளுகைக்கு முன்னுரிமை வழங்குதல்



## தேசிய சேமிப்பு வங்கியில் சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் என்பதன் கருத்து

ஒரு அரசுக்கு சொந்தமான வங்கியாக அதன் நிலை அதிக சமூகக் கடமைகளுடன் முன்னிலை பெறுவதன் காரணமாக, ஆரம்பத்தில் இருந்தே, தே.சே.வ அதன் சமூக மற்றும் உறவு மூலதனத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. எனவே, பரந்த சமூகம், எங்கள் அக்கறையுள்ள தரப்பினர் மற்றும் பிற வலையமைப்புக்கள் ஆகியவற்றில் நேர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தும் உறவுமுறைகளைப் பேண நாங்கள் முயற்சித்துள்ளோம். சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வில் முக்கிய கவனம் செலுத்துவதன் மூலம் நம்பிக்கை, ஒருமைப்பாடு மற்றும் பெறுமதிப் பகிர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நாங்கள் உறவுமுறைகளை உருவாக்கியுள்ளோம். எனவே, நமது சமூக மற்றும் உறவு மூலதன முகாமை நமது சமூகப் பங்காளிகளுடன் ஆரோக்கியமான தொடர்புகளைத் தக்கவைத்துக் கொள்வதில் மிக முக்கியமானதாக இருக்கின்றது.

### உருவாக்கப்பட்ட பெறுமதி

- வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மற்றும் நம்பகமான சேவை வழங்கல்
- தொழிற்படுவதற்கான சமூக உரிமத்தை வைத்திருத்தல்
- நியாயமான மற்றும் சமத்துவமான கேள்வி மனுக் கோரல் செயன்முறை
- முன்னார்வம் மிக்க மற்றும் கூட்டுறவான வழங்குனர் விருத்தி
- நியாயமான, வெளிப்படையான மற்றும் நெறிமுறை மிக்க முகாமை

### 2021இன் முக்கிய சவால்கள்

- அக்கறையுள்ள தரப்பினரின் எதிர்பார்ப்புகளினை மேம்படுத்துதல்
- அக்கறையுள்ள தரப்பினரின் அக்கறை முரண்பாடுகளை அங்கீகரித்து முகாமை செய்தல்
- பல்வேறு அக்கறையுள்ள தரப்பினர் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய வளங்களை வினைத்திறன் மிக்க வகையில் ஒதுக்கீடு செய்தல்
- சுமுகமான உறவுகள் பராமரிக்கப்படாதபோது, நற்பெயருக்கான சாத்தியமான சேதம்

### 2021இன் முக்கிய வாய்ப்புக்கள்

- எங்கள் வணிகத்தில் அக்கறையுள்ள தரப்பினர் தேவைப்பாடுகளைக் கட்டியெழுப்பவும் மற்றும் வெற்றிகரமான பொறுப்புகளை வழங்கவும் கூடியதாக இருத்தல்
- அக்கறையுள்ள தரப்பினரின் மாறுபட்ட கவனத்துக்குரிய விடயங்களில் ஈடுபடும் மற்றும் பதிலளிக்கும் திறன்
- சமூகத்தில் நேர்க்கணிய நீண்ட கால தாக்கத்தை உருவாக்கும் வாய்ப்பு

**பொருண்மை மிக்க விடயங்கள்**

**தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்**

**குறுங்காலம் முதல் நடுத்தளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**

### பெறுபேற்று அட்டை

**வாடிக்கையாளர் சேர்ப்பு**

மொத்த கணக்குகளின் எண்ணிக்கை

21.82 மில்.

2020 – 21.27

பாவனையிலுள்ள அட்டைகளின் எண்ணிக்கை

2,041,842

2020 – 2,405,021

**பொறுப்புணர்வு மிக்க கொள்வனவு**

பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் எண்ணிக்கை

351

2020 – 351

**சமூகத்துக்கான பங்களிப்பு**

உட்கட்டமைப்புக்கான நிதியீட்டம்

ரூ. 28,045.4 மில்.

2020 – ரூ. 31,415 மில்.

## ஏனைய மூலதனங்களுடனான இணைப்பு

கூட்டு வணிக சமூகப் பொறுப்பு முன்முயற்சிகள் விழிப்புணர்வை உருவாக்கி, குழு வேலையை வலுப்படுத்தி அத்துடன் தொழில் வாழ்க்கை சமநிலையை ஏற்படுத்தும்.

ஒழுங்கு விதிமுறை இணக்கப்பாடு இயற்கை வளங்களை நிலைநிறுத்துவதுடன், நிலைபேறான தன்மையை அதிகரிக்கிறது

கூட்டு வணிக சமூகப் பொறுப்பு செயற்திட்டங்கள் ஊழியர்களின் புலமைசார் திறனை விரிவுபடுத்துவதுடன், புதிய அறிவு அனுபவங்களை உருவாக்குகிறது

எண்ணியல் மயமாக்கல் முயற்சிகள் உற்பத்தி மூலதனத்தின் திறனை மேம்படுத்துகின்றன

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முன்முயற்சிகள் ஆரம்பத்தில் நிதி மூலதனத்தை குறைப்பினும், நீண்ட கால இலாபத் தன்மைக்காக வர்த்தக நாம விம்பத்தை உருவாக்க வழிவகுக்கிறது

## நிலைபேற்று அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

செயற்திட்டங்களில் நிதிச் சேர்க்கைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைத்தல்

1 NO POVERTY
10 REDUCED INEQUALITIES

"I'm Fit" செயற்திட்டத்தின் மூலம் ஆரோக்கியம் மிக்க சமூகத்தை மேம்படுத்தல்

3 GOOD HEALTH AND WELL-BEING

உதவித்தொகைத் திட்டங்கள், சமூகத் திட்டங்கள் மற்றும் உயர் கல்வி தொடர்பான நிதி உதவி மூலம் கல்வியறிவு மற்றும் கல்வியை ஊக்குவித்தல்

4 QUALITY EDUCATION

சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகிய இரண்டிற்கும் பயனளிக்கும் நிலைபேறான உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை ஆதரித்தல்

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE
11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

பொறுப்புணர்வு மிக்க நுகர்வு மற்றும் உற்பத்தியை ஊக்குவிக்கும் இறுக்கமான கொள்வனவு செயன்முறையைப் பேணுதல்

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

## விட்டுக்கொடுப்புகள்

| | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்பைத் தாண்டிச் செயற்படல்** | | | | | | | | | | | | | | | | | | |
| முதலீட்டின் மீது செலவிடுதல் | ▼ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய சரியான திறமைகளை ஈடுபடுத்தல் | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| திறன்கள் மற்றும் இயலுமைகளை வளர்த்தல் | ▼ | | | | | | | | | | | | | | | | | |
| புதிய வணிக வாய்ப்புகள் மற்றும் புதிய வருமான வழிகள் | | ▲ | ▲ | | | | | | | | | | | | | | | |
| **சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| முதலீட்டின் மீது செலவிடுதல் | ▼ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| நேர்க்கணிய வர்த்தகக் நாம விம்பம் மற்றும் விசுவாசத்தை அதிகரித்தல் | ▲ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | | ▲ | ▲ | ▲ | | | |
| பொறுப்புணர்வு மிக்க கூட்டாண்மை மற்றும் பிரஜாவுரிமை, நல்ல சமூக உறவுமுறைகள் மூலம் உருவாக்கப்பட்ட நல்லெண்ணம் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| **ஒழுங்கு விதிமுறைத் தேவைப்பாடுகளுக்கு இணங்குதல்** | | | | | | | | | | | | | | | | | | |
| முறைமைகள் மற்றும் செயன்முறைகளின் மீது செலவிடுதல் | ▼ | ▲ | ▲ | | | | | | | | | | | ▲ | ▲ | | | |
| பிரயோகிக்கத் தேவையான திறன்களை வளர்த்தல் | ▼ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| சிறந்த நற்பெயர் முகாமை மற்றும் சிறந்த நிர்வாக நடைமுறைகள் | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |
| எண்ணியல் தொழிநுட்ப முதலீடுகளின் மீது செலவிடுதல் | ▼ | ▲ | ▲ | | | | | | | | | | ▲ | ▲ | ▲ | | | |

கு குறுகிய காலம் ம மத்திய காலம் நீ நீண்ட காலம் ▲ பெறுமதி உயர்வு ▼ பெறுமதிக் குறைவு − பெறுமதிப் பாதுகாப்பு

## பெறுமதி உருவாக்கத்துக்கான இயக்கிகள் (பெ.உ.இ)

உரு 18

I. விசுவாசம் மிக்க வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல் - வாடிக்கையாளர் மூலதனம்



II. வணிகப் பங்காளர்களுடன் பலமான உறவுமுறை-களைக் கட்டி எழுப்புதல் - வணிகப் பங்காளர் மூலதனம்

III. ஒழுங்கு விதிமுறை இணக்கப்பாட்டைப் பலப்படுத்துதல் - ஒழுங்குவிதிமுறை மூலதனம்

IV. நிலைத்து நிற்கும் சமுதாயங்களைக் கட்டியெழுப்புதல் - சமூக மூலதனம்

மேலே உள்ள விடயங்கள் தே.சே.வங்கியில் மிகவும் விரிவானதாகவும், எமது வணிக நடவடிக்கைகளில் முக்கிய முன்னுரிமையாக நாம் கருதும் நமது சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தின் ஒட்டுமொத்த பகுப்பாய்வை வழங்குகிறது. எனவே, சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் தொடர்பான மேலும் விரிவான விபரங்களை பக்கம் 75 இல் "அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாடு", பக்கங்கள் 136 முதல் 153 வரை "மனித மூலதனம்" மற்றும் பக்கங்கள் 170 முதல் 176 வரை "இயற்கை மூலதனம்" ஆகியவற்றின் கீழ் காணலாம். பின்வரும் பிரிவுகள் சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தின் நான்கு கூறுகளான, வாடிக்கையாளர் மூலதனம், வணிகப் பங்காளர் மூலதனம், ஒழுங்கு விதிமுறை மூலதனம் மற்றும் சமூக மூலதனம் ஆகியன தொடர்பான விரிவான தகவல்களை வழங்குகின்றன.

### விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல் - வாடிக்கையாளர் மூலதனம் (பெ.உ.இ I)

வாடிக்கையாளர் மூலதனம் என்பது ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுடனான உறவுகளின் விளைவாக - தற்போதைய மற்றும் எதிர்கால வருமானத்துக்கான பங்களிப்புக்கான பெறுமதி, சாராம்சத்தில், இது வாடிக்கையாளர் உறவின் விளைவாகும்.

**பொருண்மை மிக்க விடயங்கள்**



**குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**



**வாடிக்கையாளர் மூலதனத்துக்கான எமது அணுகுமுறை**

நாங்கள் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றுவதுடன், சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காகப் பல வழிமுறைகளைப் பயன்படுத்துகிறோம். எமது விரிவான கிளை வலையமைப்பு மற்றும் கைத்தொலைபேசி மற்றும் இணையவழி வங்கியியல் மற்ற அனைத்து தளங்களுடனும் இணைந்து எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளுக்கான சிறந்த அணுகலை வழங்குகிறோம். வாடிக்கையாளர் திருப்தியின் சமீபத்திய அளவீட்டு முறைகள் வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கு விரைவான மற்றும் பயனுறுதி மிக்க பதிலளித்தல்களை உறுதிசெய்யவும், சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் ஏற்ற விரிவான உற்பத்திச் சேர்க்கைகளை வழங்கவும், பல ஆண்டுகளாக நாங்கள் வளர்த்து வந்த பல தலைமுறை உறவுகளைத் தக்கவைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

**பெறுமதியை உயர்த்துவதற்கான தந்திரோபாயங்கள்**

பெறுமதி உருவாக்கத்தை முன்னுரிமையாகக் கொண்டு விநியோக வலையமைப்பை மீள் வடிவமைப்பாக்கல்

எண்ணியல் தள வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்தல்

இலக்கு வைத்த பெறுமதி உருவாக்கத்திற்கான வாடிக்கையாளர் பயணங்கள் மீதான தனிப்பட்ட கவனம்

**பெறுமதி உருவாக்க இயக்கிகள் - விசுவாசம் மிக்க வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குவதற்காக**

சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்

பல்வகைமை மிக்க வாடிக்கையாளர் தளத்திற்கு சேவை வழங்குதல்

வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துதல்

வாடிக்கையாளர் முறைப்பாடுகளை சிறப்பாகத் தீர்த்தல்

வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல்

வங்கி நடைமுறைகள் குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வை அதிகரித்தல்

### கொவிட்-19 பரவலின் போதான வாடிக்கையாளர்களுக்கான ஆதரவு

கொவிட்-19 பரவலினால் பாதிப்புக்குள்ளான வணிகங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டிய அவசரத் தேவையாலும், கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு “சௌபாக்யா” கொவிட்-19 மறுமலர்ச்சி வசதி மற்றும் கடன் தாமதக் காலத் திட்டம் உள்ளிட்ட பரந்த அடிப்படையிலான ஊக்குவிப்புப் பொதிகளை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. அதன்படி, வங்கி கடன் செலுத்தல் தாமதக் காலம் மற்றும் தவணைக் கட்டண ஒத்திவைப்பு ஆகியவற்றை கடன் தாமதக் காலம் அல்லது கட்டண ஒத்திவைப்புகளை மறுத்தவர்களைத் தவிர அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வழங்கியுள்ளது.

- 90% சில்லறைக் கடன் சேர்க்கைகளுக்கு 7% சலுகை விகிதத்தில் தாமதக் காலம் விதிக்கப்பட்டதுடன், கடன் காலம் முடியும் வரை தவணைகள் ஒத்திவைக்கப்பட்டது
- தாமதக் காலம் இரண்டு மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை மாறுபடுவதுடன், குறித்த விடயங்களில் ஆறு மாதங்களுக்கும் மேலாக நீடிக்கத்தக்கவாறு வழங்கப்பட்டுள்ளது
- நிவாரணம் கோரிய வாடிக்கையாளர்களுக்கு தற்போதுள்ள கடன்களுக்கு 10% வரை வட்டி வீதக் குறைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன
- இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலின் படி கடன்களின் ஒப்பந்த விகிதங்களில் இருந்து வட்டி விகிதங்களை 7% ஆகக் குறைப்பதால் வட்டி வருமானத்தில் தே.சே.வ ரூ. 2.2 பில்லியன் நட்டத்தை சந்தித்தது.
- மேற்கூறிய வழிகாட்டலைக் கடைபிடிப்பதன் மூலம், தே.சே.வ கடன் தாமதக் காலம் முடிவடையும் வரை 7% பெற வேண்டிய வட்டியை ஒத்திவைத்ததுடன், மேலும் அதன் மூலம் வட்டி வருமானத்தில் ஏற்பட்ட “முதலாவது நாள் இழப்பு” ரூ. 1.4 பில்லியன் ஆகும்.
- மொத்தத்தில், இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கடன் தாமதக் காலம் காரணமாக தே.சே.வ மொத்த இழப்பாக ரூபா. 3.6 பில்லியனைப் பதிவு செய்தது.

### “வீடு" என அழைக்கத்தக்க ஒரு இடம்

2021 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட சலுகைக் கடன் திட்டங்களை நிறைவு செய்யும் வகையில், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நாணயச் சபை, உரிமம் பெற்ற வங்கிகளிலிருந்து சம்பளம் பெறும் ஊழியர்களால் பெறப்படும் ஈட்டு அடிப்படையிலான வீட்டுக் கடன்களுக்கான அதிகபட்ச வட்டி விகிதத்தை அறிமுகப்படுத்தியது. இது உள்நாட்டு கட்டுமானத் துறை மற்றும் அதன் வழங்கல் சங்கிலிகளுக்கு மேலதிக ஊக்குவிப்பை வழங்கும் அதே வேளையில் இலங்கையில் வீட்டு உரிமையை விரிவுபடுத்துவதற்கு ஆதரவாக இருந்தது.

அதன்படி, 2021 ஆம் ஆண்டில், பொது மற்றும் தனியார் துறையில் நிரந்தர ஊழியர்களுக்கான விசேட வீட்டுக் கடன் திட்டத்தை வங்கி அறிமுகப்படுத்தியது:

- ஆண்டுக்கு 7% என்ற குறைந்த விகிதம்
- ரூபா 1,331 மில்லியன் பெறுமதியான 382 கடன்கள் வழங்கப்பட்டன.
- குறைந்த வட்டி விகிதத்திலான “சொந்துரு கெதெல்ல" குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீட்டுக் கடன் திட்டம் அமுலாக்கம்
- தொடர்புடைய அரச அதிகார சபைகளால் உருவாக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் இருந்து வீட்டு அலகுகளை வாங்குவதற்கு வசதியாக “சொந்துரு கெதெல்ல" செயற்படுத்தப்பட்டது

#### குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான நிதி வசதி

துணைநிலை பண்டிகைக் கடன் வசதியின் கீழ் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், சமுர்த்தி வைத்திருப்பவர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான கடன் வசதியின் கீழ் வங்கி ரூ. 1.0 பில்லியன் கடன்களை வழங்கியது.

ஆண்டின் போது, ரூபா 156.4 மில்லியன் பெறுமதியான கடன்கள் 5,878 வாடிக்கையாளர்களுக்கு தனிநபர் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூபா 893.3 மில்லியன் தொகை பண்டிகை முற்பணக் கடன் திட்டத்தின் கீழ் 363 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், “NSB கௌரவ பிரஸன்ச” என்ற நாமத்தின் கீழ் 6.75% சலுகை விகிதத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கான சிறப்புக் கடன் திட்டத்தை வங்கி இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ், மாதாந்த ஓய்வூதியத்தில் இருந்த முற்பண எல்லை 85% வரை உயர்த்தப்பட்டதுடன், அதிகபட்ச வயது வரம்பு 75 ஆக உயர்த்தப்பட்டது.

### புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான பாராட்டு

#### சிறப்பு வைப்பு கணக்கு (SDA)

இலங்கை அரசாங்கம் – இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையுடன் கலந்தாலோசித்து – நாட்டில் கொவிட்-19 இன் விளைவுகளைச் சமாளிப்பதற்கான உதவியைப் பெறுவதற்கான நோக்கத்துடன் ஒரு சிறப்பு வைப்பு கணக்கை (SDA) அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் வங்கி ரூபா 818.5 மில்லியன் தொகையினை 2021 இன் போது திரட்டியுள்ளது.

**வெளிநாட்டுப் பணவரவின் உட்பாய்ச்சலை அதிகரித்தல்**

தொழிற் துறை பணம் அனுப்புகையில் கூர்மையான சரிவைச் சந்தித்த போதிலும், வங்கியின் வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் ரூபா 57.1 பில்லியனாக அதிகரித்துள்ளதோடு, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 4.24% ஆக இருந்த பணப் பரிமாற்றத்திற்கான சந்தைப் பங்கை வங்கி 2021 இல் 5.25% ஆக உயர்த்தியுள்ளது. தற்போது, ருமேனியா, சுவிட்சர்லாந்து மற்றும் மால்டாவில் புதிய சந்தைகளில் நுழைவதன் மூலம் அடுத்த மூன்று ஆண்டுகளில் பணம் அனுப்புகைக்கான சந்தை வீச்சை விரிவுபடுத்த வங்கி எதிர்பார்க்கிறது.

## 2021 இல் புதிய உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட அம்சங்கள்

- 2021 வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க பொது மற்றும் தனியார் துறைகளில் நிரந்தர ஊழியர்களுக்கான சிறப்பு வீட்டுக் கடன் திட்டம்
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான “சொந்துரு கெதல்லே” வீட்டுக் கடன் திட்டம்
- இலங்கைப் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான வீட்டுக் கடன் திட்டம்

- “இலங்கை தொழில்நுட்ப வளாகத்தின் (SLTC)” மாணவர்களுக்கான கல்வி நோக்கங்களுக்காக “தேசேவ புத்தி” தனிநபர் கடன் திட்டம்
- யெரெவன் ஸ்டேட் ஆர்மீனியா பல்கலைக்கழக மருத்துவப் பட்டங்களுக்கான புத்தி கல்விக் கடன் வசதி (MBBS/MD) –

- இலங்கை இராணுவ நலன்புரி நிதியத்தின் நிலையான வைப்புகளுக்கான விசேட நிலையான வைப்பு வட்டி வீத அறிமுகம்

- சிறப்பு ஓய்வூதியக் கடன் திட்டம் – “ தேசேவ கௌரவ பிரஸன்சா”
- முப்படைகள், சிறப்பு அதிரடிப்படை, இலங்கை காவல்துறை, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் இவற்றைச் சேர்ந்த அனைத்துப் பாதுகாப்புப் படைகளுக்குமான சிறப்பு தனிநபர் கடன் திட்டம்
- அரசு ஊழியர்களுக்கு தகுதிகாண் காலத்தின் போது கடன் வழங்குதல்
- தெற்காசியா கேட்வே டெர்மினல் ஊழியர்களுக்கான சிறப்புக் கடன் திட்டம்
- விசேட தனிநபர் கடன் திட்டம்

**எதிர்கால முயற்சிகள்**

- குடும்ப உற்பத்தித் தொகுப்பு ”மகிழ்ச்சியான குடும்பம்”
- மாதாந்த/வருடாந்த மீள் செலுத்தல்களுடனான நீண்ட கால நிலையான திட்டம்
- குழந்தைகளுக்கான நீண்ட கால கட்டாய சேமிப்புத் திட்டம்
- பத்திரங்களற்ற நிலையான வைப்புத் திட்டம்
- பருவகால விவசாயத் துறைக்கு கடன் வழங்கும் திட்டம்
- பிணையளிக்கப்பட்ட கடன் அட்டை
- குறுகிய கால தங்க மீளளிப்புக் கடன்
- கூட்டாண்மை ஊழியர்கள்/தொழில் வல்லுநர்களுக்கான குழு கடன் திட்டம்
- முன்னணி வங்கியியல் எண்ணக்கருவை நிறுவுதல்
- விமான நிலையம் மற்றும் துறைமுக நகரத்தில் தேசேவ சேவையகத்தை மீண்டும் நிறுவுதல்
- கடன் வழங்குவதற்காக கடன் வரிசைகளைப் பெறுதல்
- வீட்டுக் கடன்கள் மற்றும் தனிநபர் கடன்களுக்கான வர்த்தக நாம முகாமையாளர்களை நியமித்தல்

## தேசேவங்கியில் பல தலைமுறை உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட அம்சங்கள் - புறநோக்கு

தேசேவங்கியில் சமூகத்தின் எந்தப் பிரிவினருக்கும் அவர்களின் வயது, பாலினம் மற்றும் வாழ்க்கை முறைக்கு ஏற்ற திட்டத்தைக் கண்டறிந்து பரந்த அளவிலான உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட அம்சங்களைக் கொண்டிருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். கீழே உள்ள வரைபடம் எங்கள் சலுகைகளின் பரந்த அளவிலான விஸ்தீரணத்தை எடுத்துக் காட்டுகிறது.

உரு 19




**வங்கியால் மேற்கொள்ளப்படும் எண்ணியலாக்க முயற்சிகள்**

- மைய வங்கியியல் தீர்வு
  - 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மைய வங்கியியல் தீர்வுக்கான கொள்முதல் நிறைவேற்றப்பட்டதுடன், T24 பரிவர்த்தனையை செயற்படுத்துவதற்கான திட்டம் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2022 இல் இது பாவனையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
  - சக்திவாய்ந்த முன் அந்த எண்ணியல் தளங்களை உருவாக்கவும், பின் அந்த அலுவலக செயன்முறைகளும் தானியங்கு மற்றும் நெறிப்படுத்தப்பட்ட திறமையான முடிவு - இறுதித் தீர்வுகளை உருவாக்க வங்கிக்கு உதவுகிறது.
  - கொவிட்-19 காரணமாக வணிக மற்றும் தொழிநுட்ப ஆலோசகர்கள் இல்லாமை போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியில் திட்டம் முன்னேற்றம் கண்டுள்ளது
  - மைய வங்கியியல் திட்டக் குழு T24 பரிவர்த்தனை மைய வங்கி தீர்வை செயற்படுத்துவது குறித்த ஆரம்ப விழிப்புணர்வு நிகழ்ச்சியை மேற்கொண்டது.
  - கிளை மற்றும் தலைமை அலுவலக ஊழியர்களுக்கு இறுதிப் பயனர் பயிற்சியை வழங்குவதற்கு முன், இதுபோன்ற விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் அறிவுப் பகிர்வு அமர்வுகள் மேற்கொள்ளப்படும்.

- பரவலான சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் கிளை வலையமைப்பு 261 ஆகவும், தானியக்க கூற்று இயந்திரங்கள் 292 ஆகவும், காசு மீள் சுழற்சி இயந்திரங்கள் 92 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.
- வாடிக்கையாளர்கள் தங்கள் அன்றாட வங்கித் தேவைகளை பாதுகாப்பாகவும் வினைத்தினான வகையிலும் நிறைவேற்றுவதை ஊக்குவிப்பதற்காக “NSB Pay” என்ற வர்த்தக நாமத்தில் கைத்தொலைபேசி கொடுப்பனவு செயலியை அறிமுகப்படுத்தியது.
- ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் கைரேகை சரிபார்ப்பு வசதிக்கு இணங்க, தே.சே.வ 10 முக்கிய கிளைகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கைரேகை சரிபார்ப்பை ஏற்றுக்கொள்ளும் முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- துல்லியமான வாடிக்கையாளர் அடையாளத் தரவை உடனடியாகப் பெற, தே.சே.வங்கியின் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் சரிபார்ப்பு செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் எண்ணியல் மயமாக்குவதற்கும் ஆட் பதிவுத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- VISA EMV தொடர்புகளற்ற (இரட்டை இடைமுகம்) வரவு அட்டைகள் மூலம் மின்னியல் வர்த்தக பரிவர்த்தனைகள் செயற்படுத்தப்பட்டது
- iOS, Android மற்றும் Huawei போன்ற முன்னணி கைத் தொலைபேசி பயன்பாட்டு தளங்களில் கிடைக்கும் “NSB Pay” நவீன கைத் தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது.
- கொவிட்-19 இன் முதல் மற்றும் இரண்டாவது அலைகளின் போது வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக வரவு அட்டைகள் வழங்கப்பட்டன
- அடகுப் பணம் செலுத்தும் வசதி, NSB E-Connect anytime இணையவழி வங்கியியலில் சேர்க்கப்பட்டது
- சமூக ஊடக தளங்கள் - எண்ணியல் முறையில் முன்னோக்கிப் பார்க்கும் வங்கியாக எங்கள் நிலையை வலுப்படுத்த, நாங்கள் எங்கள் சமூக ஊடக தளங்களில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறோம்.

### வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல் GRI 418-1

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. எண்ணியல் வங்கியியல் பயன்பாடு அதிகரித்துள்ளதால், இணையவழிக் குற்றங்களுக்கான இடர் அதிகரித்து உள்ளது. அதனால் தான் வாடிக்கையாளர் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கும், எங்கள் முறைமைகளைப் பாதுகாப்பதற்கும் தே.சே.வங்கியில் இணையப் பாதுகாப்பை ஒரு முக்கிய விடயமாகக் கண்டறிந்துள்ளோம்.

நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில், சமீபத்திய தொழிநுட்பத்தில் முதலீடு செய்துள்ளோம். தே.சே.வங்கிச் சட்டம், வாடிக்கையாளர் சாசனம் மற்றும் எங்கள் தகவல் முறைமை பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றால் எங்கள் முறைமைகளின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. எங்கள் முறைமைகளின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கும் உறுதி செய்வதற்கும் வழக்கமான சோதனைகள் நடத்தப்படுகின்றன. வங்கியின் தகவல் பாதுகாப்பு அதிகாரி (ISO) சுயாதீனமாக கண்காணித்து, இணையப் பாதுகாப்பு இடர் முகாமை தொடர்பாக ஏதேனும் விலகல்கள் காணப்பட்டால், அதன் விளைவு குறித்து சபைக்குத் தெரிவிப்பார்.

வாடிக்கையாளரின் தனியுரிமை மீறல் அல்லது வாடிக்கையாளர் தரவு இழப்பு அல்லது வங்கி மீது விதிக்கப்பட்ட அபராதம் அல்லது பிற அனுமதி தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் 2021 இல் காணப்பட்டு இருக்கவில்லை.

எண்ணியல் மயமாக்கலுக்கான வங்கியின் வேகமான முனைப்புடன், எங்கள் வாடிக்கையாளர்களுக்கான எங்கள் பொறுப்பையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். இதைக் கருத்தில் கொண்டு, எண்ணியல் தளங்களில் வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- புதிய தரவு நிலைய வசதி - தரவு நிலையங்களுக்கான சர்வதேச நியமம் TIA 942 (Tier III) அடிப்படையில் இது தகவல் தொழிநுட்பம் செயற்படுத்தப்பட்ட வங்கி சேவைகளின் நம்பகத்தன்மை மற்றும் கிடைப்பனவுத் தன்மையை மேம்படுத்தி, அதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் உள்ளக சேவை மேன்மையை மேம்படுத்தும்.
- PCIDSS சான்றுப்படுத்தல் - தொழிற்துறையின் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, வங்கி 2019 இல் PCIDSS சான்றுப்படுத்தலைப் பெற்றதுடன், 2021 முழுதும் இதற்கான இணக்க நிலையைத் தொடர்ந்தது.
- பாதுகாப்பு செயற்பாட்டு மையம் (SOC)- 2020 இல் வினைத்திறன் மிக்க மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரின் ஆதரவுடன் செயற்படுத்தப் பட்டதுடன், SOC 2021 இல் அதன் சேவையைத் தொடர்ந்தது
- தொகுதிச் சங்கிலி தொழிநுட்பத்துடன் இலத்திரனியல் KYC தொடங்கப்பட்டது

வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாப்பதற்காக வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய

### சந்தைப்படுத்தல் மற்றும் சுற்றுத் துண்டிடல்

வங்கியால் வெளியிடப்படும் ஒவ்வொரு விளம்பரமும் பின்வரும் தகவலைக் கொண்டு இணக்கப்பாடாக இருத்தல் வேண்டும்.

- தொடர்பு விவரங்கள் - அழைப்பு நிலைய எண், இணைய முகவரி
- கடன் மதிப்பீடு
- தே.சே.வங்கிக்கான தனித்துவமான அம்சம் - 100% அரசு உத்தரவாதம், வங்கியின் குறியீடு மற்றும் மகுட வாசகம்
- QR குறியீடு

உற்பத்தி மற்றும் சேவைக்கான தகவல் சுற்றுத் துண்டிடல் தொடர்பில் பூச்சிய இணக்கமின்மை நிகழ்வுகளை இவ்வாண்டில் வங்கி அறிக்கையிட்டுள்ளது.

சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களில் பூச்சிய இணக்கமின்மை சம்பவங்களை வங்கி அறிக்கையிட்டுள்ளது.

### வங்கியியலை எளிதாக்குதல்

வேகமாக மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளுக்குப் பதிலளிப்பதற்கும், குறைபாடற்ற மற்றும் வேகமான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கும் நெகிழ்வுத்தன்மையுடன் வினைத்திறனான முறையில் செயற்படுவதில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறோம். இந்த ஆண்டில், சேமிப்புக் கணக்குகள், கடன் மற்றும் வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான செயன்முறைகளை நாங்கள் மறுவடிவமைத்து எளிமைப்படுத்தியுள்ளோம். மேலும், முறைமை மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் வாடிக்கையாளர் பயணங்களின் தன்னியக்கமாக்கலை அதிகரிக்க பல திட்டங்கள் செயற்றிட்ட வரிசையில் உள்ளன. (பக்கம் 124 முதல் 126 வரை).

### விசேட தேவையுடைய வாடிக்கையாளர்களுக்கான சேவை

எங்கள் வங்கிக்கு வரும் அனைத்து நபர்களையும் தனிப்பட்ட மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடாத்துவது சிறந்த வாடிக்கையாளர் சேவையின் மையமாகும். உள்ளடக்கிய சமுதாயத்தை மேம்படுத்துவதில் பங்கு வகிப்பதன் மூலம், வாடிக்கையாளர்களின் சிறப்புத் தேவைகளைப் புரிந்துகொண்டு, எங்கள் கிளைகளில் அவர்களுக்கு சீரான வங்கி அனுபவத்தை வழங்குகிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகல் வசதியுடன் எங்கள் கிளைகளை நிறுவ நாங்கள் முயற்சி செய்கிறோம், இது அனைத்து புதிய கிளைகளுக்கும் மற்றும் ஏற்கனவே உள்ள கிளைகளை இடமாற்றம் செய்யும்போதும் கட்டாயமாகும். இதுவரை, வங்கிகளுக்கு சொந்தமான 38 கட்டிடக் கிளைகளும், வாடகை அடிப்படையில் உள்ள 90% கிளைகளும் மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகலைப் பெற்றுள்ளன.

### வாடிக்கையாளர் கரிசனங்களைத் தீர்த்தல்

அனுபவத்தின் பயணம் வாடிக்கையாளரின் ஆரம்பத் தொடர்புடன் தொடங்கி அவர்களின் வங்கியியல் சிக்கல்களை நிறைவேற்றும் வரை நீண்டு செல்கின்றது. அனைத்து வாடிக்கையாளர் முறைப்பாடுகளையும் வினைத்திறன் மிக்க முறையில் நிவர்த்தி செய்ய வலுவானதொரு முறைமையை நாங்கள் செயற்படுத்தியுள்ளோம். வாடிக்கையாளர் குறைகளைத் தெரிவிக்க அழைப்பு மையம், இணையவியல் வழிமுறைகள் மற்றும் கிளைகள் உட்பட பல தளங்கள் நிறுவப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் தங்கள் வினாக்கள், முறைப்பாடுகள், குறைகள் மற்றும் பிற கருத்துகளை 24/7 செயற்படும் தே.சே.வ அழைப்பு மையத்திற்கு, நாடு முழுவதும் உள்ள எங்கள் கிளைகளில் பயிற்சி பெற்ற பணியாளர்கள், கிளை வளாகங்களில் உள்ள ஆலோசனைப் பெட்டிகள், சமூக ஊடகங்கள், www.nsb.lk என்ற இணையதளம் மற்றும் மின்னஞ்சல், ஸ்கைப் மற்றும் இணைய அரட்டை போன்ற பிற டிஜிட்டல் முறைகளின் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும்.

வங்கிக்கும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான முதன்மையான தொடர்பாடல் முறைமை, வாடிக்கையாளர்களின் கேள்விகள் மற்றும் குறைகளைக் கையாள்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட எங்கள் அழைப்பு மையம் ஆகும். அனைத்து அழைப்புகளும் உயர் பயிற்சி பெற்ற மற்றும் திறமையான வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகளால் கையாளப்படுகின்றன. ஒரு வினவல் முதலில் முகவரால் கையாளப்படுகிறது, அவர் அதை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்புகிறார். ஒவ்வொரு வினவலுக்கும் ஒரு குறிப்பு எண் உருவாக்கப்படுகிறது, இது வாடிக்கையாளருக்கு அவர்களின் வினவலைப் பின்தொடர கொடுக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள் மற்றும் அவற்றைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்பட்டு முகாமையிடம் சமர்ப்பிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளைக் கவனிப்பதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், கடினமான சூழ்நிலைகளை மாற்றுவதற்கும் தேவையான திறன்களுடன், "வங்கி முழுவதும்" பயிற்சித் திட்டத்தின் மூலம் எங்கள் ஊழியர்களைத் தொடர்ந்து தயார்படுத்தினோம்.

### வாடிக்கையாளர் திருப்திப் புள்ளிவிபரங்கள்

ஒரு அழைப்பைப் பதிலளிப்பதற்கு எடுக்கும் சராசரி நேரம்
**<30 செக்கன்ஸ்**
(2020<30 செக்.)

பெற்றுக் கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை
**269**
(2020 – 256)

பயன்பாட்டில் உள்ள அட்டைகளின் எண்ணிக்கை
**2,041,842**
(2020 – 2,405,021)

தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளப்படும் விசாரணைகளின் எண்ணிக்கை
**441,569**
(2020 – 434,174)

வாடிக்கையாளர் தனியுரிமை மீறல் மற்றும் வாடிக்கையாளர் தரவு இழப்பு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள்
**Nil**

தீர்க்கப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகள்ன எண்ணிக்கை
**228**
(2020 – 212)

அட்டைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை
**4,506**
(2020 – 3,393)

இலங்கை மத்திய வங்கிக்கான முறைப்பாடுகளின் எண்ணிக்கை
**Nil**
(2020 – Nil)

அனைத்து தொடர்புடைய தரவுகளையும் கிளைகள், மின்னியல் ஊடகங்கள் மற்றும் கூட்டுவணிக இணையதளத்தில் காட்சிப்படுத்துதல்.
**Nil**
(2020 – Nil)

### வாடிக்கையாளர்களிடம் பொறுப்புடன் செயற்படுதல் GRI 417-2 மற்றும் 3

உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவது முதல் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை வரை எங்கள் செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான உறவின் அனைத்து அம்சங்களிலும் பொறுப்புணர்வு ஆழமாகப் பதிந்துள்ளது. பின்வரும் செயற்பாடுகள் மூலம் நாம் பொறுப்பு நிறைவேற்றத்தை உறுதி செய்கிறோம்:

- எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான மற்றும் பாதுகாப்பான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல்
- தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளத் தெளிவான, பொருத்தமான மற்றும் சரியான நேரத்திலான தொடர்பாடல்
- பயனுறுதி மிக்க மற்றும் உடனடியான முறையில் கருத்துக்களைக் கையாளுதல்
- வாடிக்கையாளர்களைப் புரிந்து கொள்வதற்கும் தரமான சேவையை வழங்குவதற்கும் எங்கள் ஊழியர்களின் திறனை உருவாக்குதல்
- எங்கள் கடன் மற்றும் வைப்பு உற்பத்திகள், வட்டி வீதங்கள், நாணய மாற்று வீதங்கள், கடன் வீதங்கள் போன்ற அனைத்து தொடர்புடைய தரவுகளையும் கிளைகள், மின்னியல் ஊடகங்கள் மற்றும் கூட்டுவணிக இணையதளத்தில் காட்சிப்படுத்துதல்.
- உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்குப் பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகள் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின்படி வாடிக்கையாளர்களுக்கு முறையாகத் தெரிவிக்கப்படுகின்றன. மத்திய வங்கி வழிகாட்டுதல்களுக்கு இணங்க, நிதி குறைகேள் அதிகாரி மூலம் வங்கியின் முறைப்பாடு நிவர்த்தி செயன்முறை அனைத்து கிளைகளிலும் காட்டப்படும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு இணங்க, பொதுத் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு, பொதுமக்களுக்கான தகவல்களை அணுகும் உரிமையை உறுதி செய்வதற்கான நடைமுறையை நாங்கள் வகுத்துள்ளோம். விதிமுறைகளுக்கு இணங்க, எங்கள் அனைத்து விளம்பரங்களும் பின்வரும் தகவல்களைக் கொண்டுள்ளன:

- எங்கள் அழைப்பு மையம் மற்றும் நிறுவன இணைய முகவரியின் தொடர்பு விவரங்கள்
- வங்கியின் கடன் மதிப்பீடு – இக்ரா லங்கா லிமிட்டட்.

- தே.சே.வங்கிக்கான தனித்துவமான அம்சம் - 100% அரச உத்தரவாதம், வங்கிக் குறியீடு மற்றும் மகுட வாசகம்

மதிப்பாய்வின் போது எந்தவொரு உற்பத்தி மற்றும் சேவை சுற்றுத் துண்டில் அல்லது சந்தைப்படுத்தல் தொடர்பாடல் தொடர்பான விதிமுறைகள் அல்லது பிற வழிகாட்டுதல்களுக்கு இணங்காத நிகழ்வுகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

## வணிகப் பங்காளர்களுடன் வலுவான உறவை உருவாக்குதல் - வணிக பங்குதாரர் மூலதனம் (பெ.உ.இ II) GRI 102-9

வணிகப் பங்காளர் மூலதனம் என்பது சீரான மற்றும் தடையற்ற உற்பத்திகள் மற்றும் சேவைகளை எளிதாக்கும் வகையிலான பரஸ்பர நன்மை பயக்கும் வணிக உறவுகள் மூலம் உருவாக்கப்படும் பெறுமதியை உள்ளடக்கியது ஆகும். இந்தப் பங்குடமைகளில் தொடர்புடைய வங்கிகள், பரிவர்த்தனை வீடுகள், வழங்குனர்கள், ஒப்பந்தப் புற வழங்கல் சேவை வழங்குநர்கள் மற்றும் பிற வணிகப் பங்காளிகள் உள்ளடங்குவர்.

**பொருண்மைமிக்க விடயங்கள்**

**குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**

**வணிக பங்குதாரர் மூலதனத்திற்கான எங்கள் அணுகுமுறை**

தே.சே.வங்கியில், வங்கியின் ஒட்டுமொத்த இலாபத் தன்மைக்குப் பங்களிக்கும் வணிகப் பங்காளர்கள் எங்கள் வணிகத்தின் விரிவாக்கமாக கருதப்படுவார்கள். எனவே, அனைத்து பரிவர்த்தனைகளும் ஒட்டுமொத்த செயன்முறையை நிர்வகிக்கும் பெருநிறுவனக் கொள்கைகளுடன் நெறிமுறை மற்றும் வெளிப்படையான முறையில் நடாத்தப்படுகின்றன. செயற்பாட்டு ஒருங்கிணைவுகள், சந்தை அணுகல் மற்றும் புதிய வணிக வாய்ப்புகள் மூலம் பரஸ்பர பெறுமதியைப் பெறும் நீண்ட கால நிலைபேறான வணிக உறவுகளைப் பராமரிப்பதே எங்கள் குறிக்கோளாக உள்ளது.

**பெறுமதியை உயர்த்துவதற்கான தந்திரோபாயங்கள்**

நிலையான மற்றும் நிலைபேறான பரிவர்த்தனைகள்

வெளிப்படையான மற்றும் நிலைபேறான கொள்வனவு நடைமுறைகள்

**பெறுமதி உருவாக்கும் இயக்கிகள் - வலுவான வணிகப் பங்காளர் உறவுகளை உருவாக்குவதற்காக**

பொறுப்புணர்வு மிக்க கொள்வனவு

இருவழி உரையாடல்

புற வழங்கல் சேவை வழங்குநர்களுக்கு பெறுமதியை வழங்குதல்

தந்திரோபாய கூட்டணிகளை வலுப்படுத்துதல்

தொழிற்துறை உறுப்பினர்கள்

### பொறுப்புணர்வு மிக்க கொள்வனவு GRI 204-1

எங்கள் வழங்குனர்கள் தந்திரோபாய பங்காளிகளாகக் கருதப்படும் வேளையில், அதற்குப் பதிலாக, தரம், சேவை மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றின் உயர்ந்த தரங்களை நாங்கள் கடைப்பிடிக்க எதிர்பார்க்கிறோம். 2021 ஆம் ஆண்டில் எமது மொத்த கொள்வனவுச் செலவு ரூபா 1.3 பில்லியன் ஆக இருந்ததுடன், எங்களின் 100% பொருட்கள் மற்றும் சேவைகள் உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து உள்நாட்டு சமூகங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றன. எங்கள் வழங்குனர்கள் அனைவரும் மத்திய வங்கி நிர்ணயித்த தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

எம்மிடம் ஒரு வெளிப்படைத் தன்மை மிக்க வழங்குனர் தேர்வு செயன்முறை காணப்படுகிறது. எமது கொள்வனவு செயன்முறை பாகுபாடு மற்றும் சமத்துவமான கையாளல், இரகசியத்தன்மை, நேர்மை, திறந்த தன்மை மற்றும் பொறுப்புணர்வைச் சுற்றி உருவாக்கப் பட்டுள்ளது. சமநிலையான முறையில் பெறுமதியை உருவாக்க எங்களிடம் பன்முகப்படுத்தப்பட்ட வழங்கல் சங்கிலி காணப்படுகின்றது.

எங்கள் வலுவான கொள்வனவு செயன்முறையின் முக்கிய அம்சங்களாவன:

- பொருளாதார மதிப்பு மற்றும் கொள்வனவு வினைத்திறனை அதிகரித்தல்
- கொள்வனவு செய்த சொத்துக்களை அகற்றுவதில் அல்லது உரிமைகள், சலுகைகள் அல்லது பிரத்தியேக நலன்கள் ஆகிய விடயங்களில் பரிந்துரைக்கப்பட்ட நியமங்கள், விவரக்குறிப்புகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கடைபிடித்தல்.
- கொள்முதலில் பங்கேற்க ஆர்வமுள்ள தரப்பினருக்கு நியாயமான மற்றும் சமத்துவமான வாய்ப்பை வழங்குதல்
- பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை விரைவாக நிறைவேற்றுதல்
- உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்குதல்
- மதிப்பீடு மற்றும் தேர்வு நடைமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் சீரான தன்மையை உறுதி செய்தல்
- ஏலதாரர் வழங்கிய தகவலின் இரகசியத்தன்மையை பேணுதல்

மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப ஆண்டுதோறும் எங்களது கொள்முதல் திட்டத்தை நாங்கள் புதுப்பித்து வருகிறோம். நிலையான சொத்துக்கள், நுகர்வு பொருட்கள், பரிசுப் பொருட்கள், அச்சிடுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் விளம்பர நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் கட்டுமான சேவைகள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் மற்றும் ஆலோசனை உதவி ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு வழக்கமான வழங்குனர் தவிர்ந்த வெளிப்புற வழங்குனர்களது சேவைகள் பெறப்படுகின்றன.

வங்கியின் கொள்கையானது வெவ்வேறு கொள்முதல்களுக்கான பல்வேறு நடைமுறைகளை தெளிவாகக் குறிப்பிடுகிறது. வங்கியின் விநியோகப் பிரிவு கொள்முதல்களை மேற்கொள்ளும் போது, கொள்முதல் நடைமுறைகள் அந்தந்த கொள்முதல் குழுக்கள், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் இயக்குநர்கள் குழு, பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று

அதிகாரி அல்லது பிரதிநிதித்துவ அதிகாரத்தால் நியமிக்கப்பட்ட ஏலத் திறப்புக் குழு ஆகியவற்றால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஆரம்ப சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் (IEE), சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIA) ஆகியவற்றைக் கண்காணித்து உறுதிப்படுத்துதல் மற்றும் தேவைப்படும்போது அதிகாரிகளிடமிருந்து தேவையான ஒப்புதல்களைப் பெறுதல் ஆகியவை கொள்முதல் பிரிவின் பொறுப்பாகும். பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை செயற்பாட்டில் ஒருங்கிணைப்பதன் மூலம் எங்கள் கொள்முதல் செயன்முறையில் நிலைபேறான தன்மையை ஒருங்கிணைத்துள்ளோம். பொதுவான தெரிவு மூலப் பிரமாணங்களில் சேவைகள் அல்லது உற்பத்திகளின் தரம், போட்டி விலைகள், அனுபவம் மற்றும் திறன், நிதி உறுதிப்பாடு, நெகிழ்வுத்தன்மை மற்றும் திறன் மற்றும் சட்டத் தேவைகளுக்கு இணங்குதல் ஆகியவை அடங்கும்.

### இருவழி உரையாடல்

எங்கள் தொடர்பாடல் கொள்கையால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அனைத்து உள்ளக மற்றும் வெளிப்புற தொடர்பாடல்களும் மிகுந்த பொறுப்புணர்வு, கணக்களிதகமை, நிலைத்த தன்மை மற்றும் வெளிப்படைததன்மையுடன் கையாளப்படுகின்றன. எங்கள் தொடர்பாடல் கொள்கையானது, எங்கள் வர்த்தக நாம விம்பம், வாடிக்கையாளர் விசுவாசம் மற்றும் அக்கறையுள்ள தரப்பினரின் விழிப்புணர்வை மேம்படுத்த பொறுப்புக்கூறலுடன் தகவல்களை சரியான நேரத்தில் பரப்புவதற்கு உதவும் ஒரு பயனுள்ள கட்டமைப்பாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப் புற வழங்கல் சேவை வழங்குநர்களுக்கு பெறுமதியை வழங்குதல்

ஆண்டின் போது நாங்கள் வங்கிக்குள் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை உள்ளடக்கிய எங்கள் ஒப்பந்தப் புற வழங்கல் சேவை வழங்குநர்களுக்கு ரூபா 464.6 மில்லியன் தொகையினை வழங்கியுள்ளோம். எமது புற வழங்கல் கொள்கையானது புற வழங்கல் செய்யப்படுவதற்கான செயற்பாடு, சேவை செயன்முறை அல்லது செயற்பாடு மற்றும் அதன் செயலாக்கத்தின் தேவையை மதிப்பிடுவதற்கான மூலப் பிரமாணத்தை புற வழங்கல் குறித்த வழிகாட்டுதல்களுடன் குறிப்பிட்டு வழங்குகிறது.

### தந்திரோபாய கூட்டணிகளை வலுப்படுத்துதல்

**ரியா/பினான்ஸ்ஸியல் சேர்விசஸ் இன்க் அமைப்புடனான பணம் அனுப்புகை உறவுமுறை**

150 நாடுகள்/பிராந்தியங்களில் பரந்து விரிந்த உலகளாவிய வலையமைப்பு, "ரியா பணப் பரிமாற்றம்" உலக அளவில் பூகோள குடும்பப் பணப் பரிமாற்றலில் முன்னணி நிறுவனமாக உள்ளது.

- தேசிய சேமிப்பு வங்கியின் பணம் அனுப்பும் சேவையை பரந்த உலகளாவிய திறனுக்கு விரிவுபடுத்தும் நோக்கில் ரியா உடன் இணைந்து செயல்படுகிறது.

### யூரோகிரோ நிதிப் பல்பொருள் அங்காடி

- யூரோகிரோ பல்பொருள் அங்காடி என்பது அடுத்த தலைமுறைக்கான திறந்த கட்டணத் தளமாகும், இது நிதிச் சேவைகளில் தீவிரமாக ஈடுபடுவதற்கு அஞ்சல் நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது
- தே.சே.வ இலங்கையின் முதல் முகவராக தே.சே.வங்கியுடன் இணைந்து பணம் அனுப்பும் பரிமாற்ற சேவைகளில் மிகக் குறைந்த கட்டணங்களை ஏற்படுத்தும் ஒரு பங்காளரை உருவாக்குவதற்கான இறுதிக் கட்ட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

### தே.சே.வங்கி வரவு அட்டைகளுக்கு பண மீளளிப்பு சலுகை

- நியோ வரவு அட்டைகளில் பண மீளளிப்பு சலுகைகளுக்காக வரையறுத்த சரசவி புத்தக நிலையம் தனியார் நிறுவனம் மற்றும் வரையறுத்த எம் டி குணசேனா அன்ட் கம்பெனி தனியார் நிறுவனம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### புத்தி கடன்களுக்காக கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ளோம்

- இலங்கை தொழில்நுட்ப வளாகம் (SLTC)
- ஆர்மேனியாவில் உள்ள யெரெவன் மாநில பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் (MBBS/MD).

**நிதிச் சேவை வழங்குனர்கள்**

- வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள்
- தொடர்புபட்ட வங்கிகள்
- பரிமாற்ற வீடுகள்
- யூரோகிரோ நிறுவனங்கள்

**புற வழங்கல் சேவை வழங்குனர்கள்**

- பாதுகாப்பு
- உணவு மற்றும் குடிநீர்
- சுகாதார மற்றும் துப்புரவு சேவைகள்
- போக்குவரத்து மற்றும் ஏனையவை
- கட்டுமான மற்றும் பராமரிப்பு சேவைகள்

**தகவல் தொழிநுட்ப வன்பொருள் வழங்குனர்கள்**

- தகவல் தொழிநுட்ப மென்பொருள் உருவாக்குநர்கள் மற்றும் வழங்குனர்கள்
- வலையமைப்பு சேவை பாதுகாப்பு

**நிலையான சொத்துக்கள் மற்றும் மூலப் பொருட்கள்**

- வாகனங்கள்
- தளபாடங்கள்
- காணி மற்றும் ஆதனம்
- அலுவலக உபகரணங்கள்
- காகிதாதி
- ஏனைய மூலப் பொருட்கள்

**தொழில்சார் சேவைகள்**

- கணக்காய்வாளர்கள்
- ஆலோசனை சேவை வழங்குனர்கள்

**பயன்பாட்டு சேவை வழங்குனர்கள்**

- மின்சாரம், நீர், சக்தி

பிற கடன் கூட்டணிகள்

- "ஜாதிக சேவக சங்கமய – கொழும்பு டாக்யார்ட் பிஎல்சி கிளைக்கான விசேட தனிநபர் கடன் திட்டம்
- விளம்பர நிகழ்ச்சிகள்- "யூ-ட்ரஸ்ட் - மற்றும் "சல்லி எஹேன்தேகி மெஹன் VII" - பண்டிகைக் காலங்களில் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் 2021, அத்துடன் வங்கியின் பொன்விழா வெகுமதிகள்

## தொழிற்துறை உறுப்பினர்கள்

GRI 102-13

இலங்கையில் நிதிச் சேவைத் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் நாம், தொழிற் துறையினருடனான எமது ஈடுபாட்டின் மூலம் எமது நாட்டின் நிதித்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதில் முக்கிய பங்கினை ஆற்றினோம். தொழிற்துறை சவால்களைத் தீர்ப்பதற்கும் சாதகமான செயற்பாட்டுச் சூழலை உருவாக்குவதற்கும் பின்வரும் நிறுவனங்களில் நாங்கள் உறுப்பினர்களை வைத்திருக்கிறோம்:

- தேசிய வணிகர் கழகம்
- லங்கா கிளியர் பிரைவேட் லிமிடெட்
- இலங்கை தொழில் தருனர் சம்மேளனம்
- உலகளாவிய வங்கிகளிடையிலான சமூகம்
- நிதி தொலைத்தொடர்பு (SWIFT).
- இலங்கை SWIFT பயனர் குழு
- யூரோகிரோ பூகோளக் கொடுப்பனவு சமூகம்
- உலக சேமிப்பு வங்கி நிறுவனம்

## ஒழுங்கு விதிமுறைசார் இணக்கப்பாட்டை வலுப்படுத்துதல் - ஒழுங்கு விதிமுறை மூலதனம் (பெ.உ.இ III)

ஒழுங்கு விதிமுறை மூலதனமானது நிதி மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக வங்கிகளில், ஒழுங்கு விதிமுறை மூலதனம் இழப்புகளை உறிஞ்சுதல், பொதுமக்களின் நம்பிக்கையை ஊக்குவித்தல், கட்டுப்படுத்த உதவுதல் போன்ற பல முக்கியமான செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

அதிகப்படியான சொத்து வளர்ச்சி, மற்றும் வைப்பாளர்களுக்கும் வைப்புத்தொகை காப்பீட்டு நிதிக்கும் பாதுகாப்பை வழங்குகிறது.

**பொருண்மை மிக்க விடயங்கள்**

**குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**

**ஒழுங்குமுறை மூலதனத்திற்கான எங்கள் அணுகுமுறை**

அரசுக்குச் சொந்தமான உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாக, தே.சே.வங்கியானது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களால் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இந்த பெரும் பொறுப்பின் நிலைப்பாட்டில், அனைத்து ஒழுங்கு விதிமுறைத் தேவைகளையும் பின்பற்றுவதற்கும், வாடிக்கையாளர் நம்பிக்கையை உருவாக்குவதற்கும் நிலையான பொருளாதாரத்தைப் பேணுவதற்கும் சிறந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் நாங்கள் முற்றிலும் கடமைப்பட்டுள்ளோம். எனவே, நாங்கள் அனைத்து விதிமுறைகளுக்கும் இணங்குவதுடன், வணிக நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச நியமங்களைப் பின்பற்றுகிறோம். அரசாங்கத்திற்கு செலுத்தப்படும் வரிகள் பொருளாதார வளர்ச்சியை சாதகமாக பாதிக்கும் அதே வேளையில் நாம் தொடர்ந்து தொழிற்படுவதை இத்தகைய இணக்கப்பாடு உறுதி செய்கிறது.

**பெறுமதியை உயர்த்துவதற்கான தந்திரோபாயங்கள்**

ஒழுங்கு விதிமுறை மாற்றங்களை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு மற்றும் பதிலளிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்

தொழிற்பாட்டு மீளெழுச்சித் தன்மையை வலுப்படுத்தல்

அழுத்த சோதனை நியமங்களை மேம்படுத்தல்

தாக்க சகிப்புத்தன்மையை மதிப்பாய்வு செய்தல்

பெறுபேற்று அளவீடுகளை மீளமைத்தல்

**பெறுமதி உருவாக்கும் இயக்கிகள் - ஒழுங்கு விதிமுறை இணக்கப்பாட்டை வலுப்படுத்த**

ஒழுங்கு விதிமுறைகளுடன் நிலையான இணக்கப்பாடு

பணச் சலவை, லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றுக்கு எதிரான நடைமுறைகள்

வலுவான ஆளுகை மற்றும் விவேகமான இடர் முகாமை

அரசாங்கத்திற்கான பங்களிப்புகள்

GRI 205-2, 3 and 206-1

### விதிமுறைகளுடன் நிலையான இணக்கம்

- பின்வரும் சட்ட விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்குதல்:
  - 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
  - 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் அதன் திருத்தங்கள்
  - நிதிப் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டம்
  - நாணயப் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு சட்டம், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) வெளியிடப்பட்ட அனைத்து விதிமுறைகளும்
- பின்வரும் தரப்பினருடன் நெருக்கமான உறவுகளைப் பேணுதல்:
  - நிதி அமைச்சு
  - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
  - கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
  - சட்டமா அதிபர் திணைக்களம்
  - இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை
  - பாராளுமன்றம்
- தேவையான அனைத்து ஒழுங்கு விதிமுறைத் தேவைப்பாடுகளுடனும் இணங்குதல்
- மத்திய வங்கி வழங்கிய உத்தரவுகளுக்கு இணங்க வங்கியின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை அவ்வப்போது சமர்ப்பித்தல்

### பலமான ஆளுகை மற்றும் விவேகமான இடர் முகாமை

- ஸ்திரமான ஆளுகை முறைமை மற்றும் இறுக்கமான இடர் முகாமைக் கொள்கையைப் பேணுதல்
- இடர் கலாச்சாரத்தை குறுகிய முதல் நடுத்தர கால தந்திரோபாய முன்னுரிமையாக வலுப்படுத்துதல்
- அக மற்றும் புற சூழல்களில் இருந்து எழும் இடர்களை திறம்பட எதிர்நோக்கும், முகாமை செய்யும் மற்றும் குறைக்கும் வலுவான இடர் கலாச்சாரத்தை பின்பற்றுதல்

இடர் முகாமை தொடர்பான மேலதிக கலந்துரையாடல் பக்கம் 212 முதல் 239 வரையுள்ள இடர் முகாமை பகுதியின் கீழுள்ள அறிக்கையில் காணப்படுகிறது.

### பணச் சலவை, இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகள்

- எண்ணியல் மயமாக்கல் கட்டத்தில் மூன்று முக்கிய இடர் பகுதிகளை கண்டறிதல்:
  - இணையவழிப் பாதுகாப்பு
  - மோசடி தடுப்பு
  - பணச் சலவைக்கு எதிரன நடவடிக்கைகள்
- வாடிக்கையாளர்களை மோசடியிலிருந்து பாதுகாக்க வலுவான இடர் முகாமை முறைமை
- இணையக் குற்றங்கள், பணச் சலவை, தீவிரவாத நிதியிடல் ஆகியவற்றைத் தடுக்க ஒழுங்குபடுத்துதல் விதியாளர்களுக்கு உதவுதல் மற்றும் சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகளை அறிக்கையிடல்
- ஊழல், போட்டிக்கு எதிரான நடத்தை, நம்பிக்கை முறிவு, தனியுரிமை நடைமுறைகள் மற்றும் உற்பத்தி மற்றும் சேவைகளின் பயன்பாடுகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்காததன் காரணமாக விதிக்கப்பட்ட அபராதங்கள் அல்லது கண்காணிப்பு அல்லாத தடை உத்தரவுகள் எதுவும் மீளாய்வுக்கு உட்படும் ஆண்டில் பதிவாகவில்லை

### அரசாங்கத்திற்கான பங்களிப்புகள்

- அரசு சார்பில் வரியை வசூலித்தல் மற்றும் செலுத்துதல்
- எங்கள் ஊழியர்கள் சார்பாக மற்றும் அவர்களின் சார்பாக செலுத்த வேண்டிய அனைத்து தொடர்புடைய வரிகளையும் செலுத்துதல்
- அரசாங்கம் மற்றும் பிற தொடர்புடைய ஒழுங்கு விதிமுறை மற்றும் சட்டப்பூர்வ அதிகார சபைகளுக்கு பொருந்தக்கூடிய அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளையும் செலுத்துதல்

## வளரும் சமூகங்களை உருவாக்குதல் - சமூக மூலதனம் (பெ.உ.இ IV) GRI 203-1 and 413-1

சமூக மூலதனம் என்பது ஒரு வங்கியில் உள்ள பல்வேறு குழுக்களிடையே நம்பிக்கையை வளர்க்க உதவும் வங்கியின் நல்லெண்ணமாகக் கருதப்படலாம். இது ஒரு வலுவான சமூகத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதுடன், மேலும் இது தனியார் சந்தைகளில் மட்டும் வழங்க முடியாத ஒரு பொது நன்மையாகும். மாறாக, இலாப நோக்கற்ற மற்றும் தன்னார்வ நிறுவனங்களால் உருவாக்கப்படுவது சமூக மூலதனம் ஆகும்.

**பொருண்மையான விடயங்கள்**

**குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்**

**சமூக மூலதனத்திற்கான எங்கள் அணுகுமுறை**

ஒரு அரசுக்குச் சொந்தமான வங்கியாக, நாங்கள் செயற்படும் சமூகத்திற்குத் திரும்பக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதனால். நமது சமூகங்களின் சமூக-பொருளாதார நிலையை உயர்த்த முயற்சிக்கும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் நாங்கள் அதிக அளவில் முதலீடு செய்கிறோம். நாங்கள் நம்புவது போல் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்த இணைந்து பணியாற்றும் வகையில் சமூக முன்முயற்சிகளை வகுத்து அரங்கேற்ற நாங்கள் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வழிகாட்டுதல்களாக பயன்படுத்துகிறோம்.

**பெறுமதியை உயர்த்துவதற்கான தந்திரோபாயங்கள்**

முதலீடுகளுக்கான சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளைக் கவனத்தில் எடுத்தல்

சமூகத்தில் தன்னார்வமாகப் பணியாற்றுதல்

உள்நாட்டு மக்கள் மற்றும் வணிகங்களுக்கு ஆதரவு வழங்குதல்

**பெறுமதியை உருவாக்கும் இயக்கிகள் → சமூக மூலதனத்தை மேம்படுத்த**

தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்தல்

நிதிச் சேர்க்கைக்கு முன்னுரிமை கொடுத்தல்

சமூகங்களுக்குத் திரும்பக் கொடுத்தல்

சமூக மேம்பாட்டிற்கு உந்தும் தந்திரோபாயக் கூட்டணிகள்

| நிகழ்ச்சித் திட்டம் | குறிக்கோள் | உள்ளடக்கம் | முதலீடு | பயனாளிகள் மற்றும் பயனாளிகள் எண்ணிக்கை | ஊழியர் ஈடுபாடு | விளைவு |
|---|---|---|---|---|---|---|
| **தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்தல்** | | | | | | |
| அரசுடமை உரிமங்களின் உட்கட்டமைப்பு விருத்திக்கு கடன் வழங்கல் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | வினைத்திறனான மற்றும் சுற்றுச் சூழல் சிநேகமான பொதுப் போக்குவரத்து முறைமை மற்றும் போக்குவரத்து வலையமைப்பை உருவாக்கும் அரச இலக்கினை அடைதல்<br>குழாய் மூலமான நீர் வசதிக்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சுத்தமான மற்றும் பாதுகாப்பான நீருக்கு அணுகலைக் கொண்டிருப்பதை உறுதி செய்தல் | தீவளாவிய வீதி உட்கட்டமைப்பு | வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்காக ரூபா 27.3 பில்லியன் பெறுமதியான கடன்களை வழங்கியது.<br>2021 ஆம் ஆண்டில் ரூபா 31.8 பில்லியன் பெறுமதியான தொகுதிக் கடன்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கியது. | ஒட்டுமொத்த இலங்கை சமூகம் | எதுவுமில்லை | வினைத்திறன் மிக்க மற்றும் பயனுறுதியான பொதுப் போக்குவரத்து முறைமை<br>சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீருக்கான பாரியளவு அணுகல் |
| தொழிநுட்பப் பூங்காக்களில் முதலீடு செய்தல் - மிக அண்மையான எதிர்காலத்தில் நான்கு தொழிநுட்பப் பூங்காக்களை உருவாக்குதல் | தொழிநுட்ப மையமான சமுதாயத்தை உருவாக்குதல் | எதிர்காலத்துக்கானது | இந்த செயற்றிட்டத்துக்காக ரூபா 7 பில்லியன் முதலீட்டுக்கான முன்னெச்சரிக்கை ஆய்வினைத் தேசிய சேமிப்பு வங்கி தற்போது மேற்கொள்கின்றது. | ஒட்டுமொத்த இலங்கை சமூகம் | எதுவுமில்லை | புத்தாக்கத்தின் உச்ச விளிம்பில் ஒரு தொழிநுட்ப மையமான சமுதாயம் |

| நிகழ்ச்சித் திட்டம் | குறிக்கோள் | உள்ளடக்கம் | முதலீடு | பயனாளிகள் மற்றும் பயனாளிகள் எண்ணிக்கை | ஊழியர் ஈடுபாடு | விளைவு |
|---|---|---|---|---|---|---|
| **நிதிசார் உள்ளடக்கத்தை முன்னுரிமைப்படுத்தல்** | | | | | | |
| "ஸ்த்ரீ" மகளிர் தினக் கொண்டாட்டம், பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் உல்லாச விடுதியில் | பெண்களைக் கொண்டாடுதல் மற்றும் அவர்களது முக்கியத்துவத்தை சமூகத்துக்கு வெளிப்படுத்தல் | கொழும்பு | ரூபா 2.6 மில்லியன் | 150 | 50 | பங்குபற்றுனர்களுக்கு சேமிப்பின் முக்கியத்துவம் மற்றும் குடும்ப சேமிப்பினை முகாமை செய்வதில் பெண்களின் முக்கியத்துவம் ஆகிய பற்றி கல்வி வழங்கப்பட்டது. பத்து சிறந்த பெண் ஆளுமைகள் இலங்கையில் பெண் உரிமையினை மேம்படுத்தியதற்காக கௌரவிக்கப்பட்டனர் |
| கண்டியில் உள்ள வங்கியினால் QR குறியீட்டு முன்முயற்சி ஆரம்பிக்கப்பட்டது | பணமற்ற கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட வியாபாரிகளுக்கு தனித்துவமான QR குறியீடுகள் வழங்கப்பட்டன. | கண்டி | ரூபா 403,250 | 250 | 100 | அதிகளாவன நிலைபேறான தன்மைக்கு வசதியளிக்கும் வகையில் பணமற்ற கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்தல் |
| உலக சுற்றுச் சூழல் தினம் - 2021 – கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் மரம் நாட்டும் நிகழ்வு மற்றும் நாரஹேன்பிட்ட எல்விட்டிகல தொடர்மாடியில் மரக் கன்றுகள் வழங்கல் | கொழும்பை ஓர் பசுமையான நகராக்குதல்<br>விகாரமாதேவி பூங்காவில் பூர்வீக மற்றும் பெறுமதி மிக்க மரங்களை நாட்டுதல் | கொழும்பு | ரூபா 262,380 | கொழும்பு நகரின் போக்குவரத்தாளர்கள்<br>நாரஹேன்பிட்டி எல்விட்டிகல தொடர்மாடி வாசிகள்<br>சுற்றுச் சூழல் | 20 | பசுமைச் சுற்றுச் சூழல் மற்றும் நிலைபேறான சமூகத்துக்குப் பங்களிப்பு செய்தல் |
| க.பொ.த சாதாரண தரம் மேன்மை விருதுகள் | க.பொ.த சாதாரண தர உயர்நிலை மாணவர்களை ஊக்கப்படுத்தல்<br>கல்விகற்ற இளைஞர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தல் | கொழும்பு | ரூபா 152,500 | 61 | 10 | வர்த்தக நாம பெறுமதியை அதிகரித்தல்<br>புதிய கணக்குகளை ஆரம்பித்தல் |
| **சமுதாய விருத்தியை தூண்டுவதற்கான தந்திரோபாய பங்காளிகள்** | | | | | | |
| "ஆங்கிலம் இலகுவானது" செயற்றிட்டம் | இலக்கு குழுவின் ஆங்கில வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசும் திறன்களை மேம்படுத்தல்<br>2020 மற்றும் 2021 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தின் பெறுபேற்றை அதிகரிக்க பாடசாலைகளுக்கு உதவுதல்<br>க.பொ.த சாதாரண தரத்தில் தற்போதுள்ள பெறுபேறுகளை மேலும் உயர்த்துதல்<br>ஆங்கில மொழி அடிப்படையிலான போட்டிகளில் மாணவர் ஈடுபாட்டை அதிகரித்தல்<br>மாணவர்களை அவசியமான மொழித் திறன் மட்டங்களில் மேம்படுத்துவதற்கு அவசியமான ஆவணங்கள் மற்றும் வழிகாட்டல்களை ஆசிரியர்களுக்கு வழங்கிப் பயிற்சி அளித்தல் | 11 அக்டோபர் 2019 இல் கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.<br>29 அக்டோபர் 2019 இல் தேசிய சேமிப்பு வங்கியினால் கல்வி அமைச்சில் வைத்து நாடு முழுதும் பணியாற்றும் கல்விப் பணிப்பாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.<br>நிபுணர்கள் உள்ளடங்கலான வளவாளர் குழுவினால் நான்கு கருத்தமர்வுகளில், செயற்பாடுகள், மாதிரிப் பரீட்சைகள் மற்றும் கடந்தகாலப் பரீட்சைகள் உள்ளடங்கலான பாடப்புத்தகம் வடிவமைக்கப்பட்டது.<br>பாடப்புத்தகம் மற்றும் மாதிரிப் பரீட்சைகளின் உள்ளடக்கங்கள் அச்சுப் பதிப்பிட முன்னர் இரு தடவைகள் சரி பார்க்கப்பட்டன. | மூன்று ஆண்டுகளுக்கு ரூபா 8 மில்லியன் | 81 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 8, 9, 10 மற்றும் 11 மாணவர்கள்<br>தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 40,000 க்கு மேற்பட்ட மாணவர்கள்<br>500 ஆசிரியர்கள் | சந்தைப்படுத்தல் பிரிவின் நியமிக்கப்பட்ட ஊழியர்கள்<br>● பாடத்திட்டத்தைத் தயாரித்தல்<br>● ஆசிரியர் பயிற்சியளித்தல் செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தல்<br>● கருத்துப் பரிமாற்றமுள்ள மாணவர் செயலமர்வுகளை உருவாக்குதல்<br>ஆகிய விடயங்களில் ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.<br>அமுலாக்கல் கட்டத்தில் கிளை முகாமையாளர்களை அண்மையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக்கு அனுப்பப்பட்டு செயற்றிட்டத்தின் காலரீதியான முன்னேற்றக் கட்டத்தை மதிப்பிட்டுத் தகவல்களை வழங்குவர் | க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்கான மேம்பட்ட சித்தி வீதங்கள் |

## கொவிட்-19 தாக்கங்கள்

தொற்றுநோய் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உறுதியற்ற தன்மை, சமூக மற்றும் உறவு மூலதனத்தை நேரடியாக பாதித்த தொழிற் துறையுடன் தொடர்புடைய பல இடர்கள் காணப்படுகின்றன. முதன்மையாக, தொற்றுநோயால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக வங்கியின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கான திறன் குறைக்கப்பட்டதுடன், வங்கியானது உட்புறங்களில், எண்ணியல் தளங்கள் வழியாக அல்லது வரவு அட்டைகளின் அடிப்படையில் நடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. பாதீட்டுக் குறைப்புக்கள் விளம்பர நடவடிக்கைகளுக்கான குறைந்தபட்ச வரவுசெலவுத் திட்டங்களுக்கும் வழிவகுத்துடன், வர்த்தகநாம விம்பத்தை விளம்பரப்படுத்தக்கூடிய மட்டத்தில் நேரடி தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

கொவிட்-19 தொற்று ஊழியர்களுக்கு ஏற்பட்டதன் மூலம் இந்த சவால்கள் மேலும் மோசமடைந்ததுடன், இது வங்கியை வெற்றிகரமாக சந்தைப்படுத்தும் திறனை மேலும் பாதித்தது.

அதே நேரத்தில், எண்ணியல் மயமாக்கலை நோக்கி அதிக உந்துதல் காணப்பட்டதுடன், இணைய வங்கி சேவை மற்றும் Pay App செயலி வசதி மூலம் புதிய வருமான வழிகளை வழங்கியது. வர்த்தக நாம விம்பம் மற்றும் வங்கி முன்முயற்சிகளைப் பரப்புவதற்கு சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதில் சந்தைப்படுத்தல் குழு புத்திசாலித்தனமாக இருந்தது. மேலும், விளம்பரம் மற்றும் ஊடக நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பதில் குழு வினைத்திறன் மிக்கதாகக் காணப்பட்டது.

குறைந்த வட்டி வீதங்கள் காரணமாக கடன் உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்த அதே வேளையில், நிலையற்ற சூழ்நிலையானது ஓய்வூதிய நிதிகள் மற்றும் வருடாந்திர திட்டங்கள் போன்ற சமூக பாதுகாப்பு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கியது.

இந்த கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, வங்கி தனது சமூக மற்றும் உறவு மூலதன முயற்சிகளைப் பராமரித்து, கடினமான நேரத்தில் மூலதனத்தை வலுப்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான வழிகளைக் கொண்டு வந்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொண்டு சமூகத்திற்கான எங்கள் சேவையைத் தொடரும் எங்கள் திறனில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்

## 2022 மற்றும் அதற்குப் பின்னான புறநோக்கு

**குறுங்காலம்**

- புதுப்பிக்கப்பட்ட பெறுமதியுடன் ஏற்கனவே உள்ள உற்பத்திகளை மீள ஆரம்பித்தல்
- கிளை அளவிலான முயற்சிகளில் முக்கிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்தல்
- இளைஞர்கள் தொடர்பான வங்கிச் சேவைகளை மேம்படுத்துதல்
- நேர்க்கணிய வர்த்தக நாம விம்பத்தை உருவாக்க கவனத்தை ஈர்க்கும் வர்த்தக நாம தந்திரோபாயங்களை உருவாக்குதல்

**நடுத்தரளவு காலம்**

- வாடிக்கையாளர்களின் பரிவர்த்தனையை எளிதாக்க முழு அளவிலான எண்ணியல் வங்கியியல் தீர்வைச் செயல்படுத்தல்
- பொருளாதாரத்தில் வங்கியில்லாத மற்றும் குறைந்த வங்கி வசதி உள்ளவர்களுக்கு நிதி உள்ளடக்கத்தை வழங்குதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஐநா சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடிய நிலையான நிதி நடைமுறைகளை பின்பற்றல்

**நீண்ட காலம்**

- பாதுகாப்பான மற்றும் நிலையான நிதி சூழலை எளிதாக்குதல்
- சமூகத்தில் நேர்க்கணியமான முறையில் தாக்கம் ஏற்படுத்தல்

# இயற்கை மூலதனம்

## இதனுள் உள்ளடங்குபவை

இயற்கை மூலதனம் என்பது புவியியல், மண், காற்று, நீர் மற்றும் அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கிய உலகின் இயற்கை சொத்துக்களின் இருப்பு என வரையறுக்கப்படுகிறது. இந்த இயற்கை சொத்துக்கள் பொருளாதார உற்பத்திக்கான இயற்கை வள உள்ளீடுகள் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகளை நிறுவனங்களுக்கு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## இயற்கை மூலதனத்தின் மூலம் பெறுமதியை உருவாக்குதல்

### எமது அணுகுமுறை

இயற்கை மூலதனத்தின் மூலம் பெறுமதியை உருவாக்கும் எமது அணுகுமுறை இயற்கை வளங்களின் நிலைபேறான தன்மை மற்றும் நீண்ட ஆயுளை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, குறைந்த கார்பன் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக எங்கள் இயற்கை மூலதனத்தை நாங்கள் நிர்வகிக்கிறோம், அதன் மூலம் சுற்றுச்சூழலுக்கான நிலைபேறான தன்மை மற்றும் வங்கியின் நீண்டகால பெறுமதி உருவாக்கம் ஆகிய இரண்டையும் உறுதி செய்கிறோம்.

வங்கியின் சுற்றுச்சூழல் தடம் பரந்த உலகத்தில் பரந்துபட்ட வகையில் தாக்கம் செலுத்துவதனால் எமது தந்திரோபாயங்கள் எதிர்க்கணியத் தாக்கத்தைக் குறைப்பதுடன், வங்கிக்கான நிதிசார் வருவாயை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன. இந்த நோக்கத்திற்காக, நாங்கள் தொடர்ந்து எங்கள் கார்பன் தடத்தை குறைத்து, பசுமை செயற்பாடுகள் மற்றும் நிலைபேறான நிதியை ஊக்குவித்து, சுற்றுச்சூழல் முகாமையில் எங்கள் நிறுவன கொள்கைகள், மற்றும் நடைமுறைகள் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறோம். அனைத்து வணிக செயன்முறைகளிலும் சுற்றுச்சூழல் உணர்வை ஒருங்கிணைக்கவும் நாங்கள் முயற்சி செய்கிறோம்.

### முக்கிய உள்ளீடுகள்

- காற்று
- நீர்
- நிலம்
- தாதுக்கள்
- காடுகள்
- பல்லுயிர்த்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் முறைமைகள்

### முக்கிய வெளியீடுகள்

- பொறுப்புணர்வு மிக்க நுகர்வு
- சக்தி வினைத்திறனான மற்றும் பசுமை முன்முயற்சிகள்
- புதுப்பிக்கத்தக்க சக்திகளில் தங்கியிருத்தல்
- வேகமான கட்டங்களுடனான எண்ணியலாக்கம்

### பெறுமதியை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள்

- நீண்ட கால சக்தி வினைத்திறனான முன்முயற்சிகள்
- புதுப்பிக்கத்தக்க வளங்களின் அதிகரித்த பயன்பாடு
- உற்பத்திகளின் வினைத்திறனான சந்தைப்படுத்துதலுக்காக எண்ணியலாக்கம் மற்றும் உற்பத்தி விருத்தியில் முதலீடு செய்தல்
- காலப்போக்கில் இயற்கை வளங்களின் நுகர்வினைக் குறைத்தல்



## தேசிய சேமிப்பு வங்கியின் பார்வையில் இயற்கை மூலதனம் என்பது

தேசிய சேமிப்பு வங்கியில் எமது தொழிற்பாடுகள், காற்று, நீர், சக்தி மற்றும் இயற்கைச் சூழல் ஆகியவற்றை உள்ளடக்கிய இயற்கை மூலதனம் மற்றும் சுற்றுச் சூழல் முறைமைகளின் இருப்புக்களைச் சார்ந்து உள்ளது. இயற்கை மூலதனம் ஆபத்தில் உள்ளது என்பதை நாங்கள் புரிந்துகொண்டு, அதற்கு அமைய குறைந்த கார்பன் பொருளாதாரத்திற்கான நிலைபேறான தெரிவுகளை எதிர்பார்த்து, இயற்கை மூலதனத்தைப் பாதுகாத்து நிலைநிறுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். நமது கிரகத்தைப் பாதுகாப்பது மற்றும் வங்கிக்கு நிலைபேறான நீண்ட காலப் பெறுமதி உருவாக்கத்தை உறுதி செய்வதை ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகக் காண்கிறோம் - இது நமது இயற்கை மூலதன முகாமையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

| உருவாக்கப்பட்ட பெறுமதி |
|---|
| • குறைந்த கார்பன் தடத்துடனான வணிகத் தொழிற்பாடுகள்<br>• பசுமை வணிகத்திற்கான வாய்ப்புகளை கண்டறிதல்<br>• சக்தி வினைத்திறனான மேம்பாடுகள் மூலமான கிரய சேமிப்பு<br>• சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு |

| 2021 இன் முக்கிய சவால்கள் | 2021 இன் முக்கிய வாய்ப்புக்கள் |
|---|---|
| • அதிக முதலீடு தேவைப்படும் பசுமை முயற்சிகள்<br>• வங்கியின் சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிடுவதில் உள்ள சிரமங்கள்<br>• வங்கியின் கார்பன் தடத்தைக் குறைப்பதற்குப் பின்னால் உள்ள சிக்கல்கள்<br>• பசுமை முயற்சிகளின் முக்கியத்துவம் குறித்து அக்கறையுள்ள தரப்பினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்<br>• வாடிக்கையாளர் மற்றும் பணியாளர்களது எண்ணியல் தொழிநுட்பத்துடனான இடர்பாடுகள்<br>• விரும்பத்தகாத விளைவுகளுடன் கூடிய இயற்கைப் பேரழிவுகள் | • பசுமை உற்பத்திகள், பசுமை நிதி மற்றும் பசுமைக் கட்டிடங்கள் போன்ற பசுமை முயற்சிகளை ஊக்குவிக்க முடியும்<br>• வங்கியின் நீண்ட கால நிலைபேறான தன்மையைப் பேண வேண்டியதன் அவசியம் சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைப்பதற்கான காரணங்களை வழங்குகிறது<br>• முன்கூட்டிய திட்டமிடல் தொழிற்பாடுகளின் குறைந்த சுற்றுச்சூழல் தாக்கங்களை அனுமதிக்கிறது<br>• வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் செலவுகள் குறைக்கப்பட்டு வலுவான நிதி நிலைத்தன்மை ஏற்படுகிறது |

**பொருண்மை மிக்க விடயங்கள்**



**தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்**



**குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்**



### பெறுபேற்று அட்டை

**கார்பன் குறைவான பொருளாதாரத்துக்கு ஆதரவு வழங்குதல்**

| வலை அளவீட்டுடன் இணைக்கப்பட்ட கிளைகள், வலயங்கள் | வழங்கப்பட்ட சுற்றுச் சூழல் கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட சுற்றுச் சூழல் கடன்களின் பெறுமதி |
|---|---|---|
| 42 | 9 | ரூ. 3.80 மில். |
| 2020 – 42 | 2020 – 8 | 2020 – ரூ. 5.41 மில். |

**பொறுப்புணர்வு மிக்க நுகர்வு**

| தலா ஊழியருக்கான சக்தி நுகர்வு | தலா கிளைக்கான சக்தி நுகர்வு | நீர் நுகர்வு | தேசிய கட்டமைப்புக்கு மாற்றப்பட்டது |
|---|---|---|---|
| 7.27GJ | 128.50GJ | 88,986$m^3$ | 277,328kWh |
| 2020 – 7.69GJ | 2020 – 122.78GJ | 2020 – 105,515$m^3$ | 2020 – 119,696kWh |

## ஏனைய மூலதனங்களுடனான இணைப்பு

நிலைத்தன்மை மற்றும் பசுமை உணர்வு ஊக்குவிப்பு, ஆரோக்கியமான மற்றும் பரந்த சூழல் பற்றிய அறிவுடனான ஒரு ஊழியப் படையை உருவாக்கும்

பசுமை முயற்சிகள் வங்கியின் கட்புல நிலையை வழங்கின, வர்த்தக நாம விம்பத்தை அதிகரிக்கின்றன

நிலைபேறான கட்டடங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மீதான முதலீடுகள் வங்கியின் பௌதீக சொத்துக்களை பலப்படுத்துகின்றன

புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை எண்ணக் கருக்களின் மீதான முதலீடுகள் நீண்ட கால செலவைக் குறைக்கின்றன

நிலைபேறான வழங்கல் சங்கிலிகளை உருவாக்குதல் வழங்குனர்களுடன் நீண்ட கால உறவுகளைப் பேணுகிறது,

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்காக பங்களிப்பு

நீர் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பொறுப்புணர்வு மிக்க நுகர்வு மூலம் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்

கிரயம் குறைந்த மற்றும் சுத்தமான எரிசக்தியை உருவாக்க பசுமைக் கட்டடங்கள் மற்றும் சூரிய கலக் கிளைகளை உருவாக்குதல்

சுற்றுச் சூழலுக்கு சிநேகமான இடங்களை அடைய தே.சே.வ வேளாண் காடாக்கல் திட்டத்தை ஊக்குவித்தல்

வங்கிச் செயன்முறைகளை எண்ணியல் மயமாக்குவதன் மூலம் காகித நுகர்வைக் குறைத்தல்

பசுமை முயற்சிகள், எண்ணியல் மயமாக்கல், பொறுப்புக்கூறத்தக்க கடன் வழங்குதல் மற்றும் சிறந்த வள முகாமை மூலம் இயற்கை மூலதனத்தை முகாமை செய்வதற்கான ஒட்டுமொத்த பொறுப்புணர்வு மிக்க அணுகு-முறையைப் பயிற்சி செய்தல்

வர்த்தக விட்டுக்கொடுப்பு

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ | கு | ம | நீ |
| **தொழிற்பாட்டில் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள்** | | | | | | | | | | | | | | | | | | |
| கார்பன் தடத்தை அதிகரித்தல் | | | | | | | | | | | | | | | | ▼ | ▼ | ▼ |
| உட்கட்டமைப்புப் பயன்பாடு | | | | | | | | | | | | | | | | ▼ | ▼ | ▼ |
| வளங்களின் பயன்பாட்டின் மூலம் கிடைக்கும் வருவாய் | ▲ | ▲ | ▲ | | | | | | | | | | | | | ▼ | ▼ | ▼ |
| **காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகள்** | | | | | | | | | | | | | | | | | | |
| எதிர்மறையாக பாதிக்கப்பட்ட வணிக அளவு மற்றும் வருவாய் | ▼ | ▼ | ▼ | | | | | | | | | | | | | ▼ | ▼ | ▼ |
| உட்கட்டமைப்பின் மீதான எதிர்மறையான தாக்கம் | | | | | | | | | | | | | | | | ▼ | ▼ | ▼ |
| பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு செலவு | ▼ | | | | | | | | | | | | | | | ▼ | ▼ | |
| **பசுமை முயற்சிகளின் மீதான முதலீடு** | | | | | | | | | | | | | | | | | | |
| தொழிற்பாட்டு மேன்மை மற்றும் திறன் விருத்தி | ▼ | ▲ | ▲ | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ |
| புத்தாக்கம் மற்றும் இயலளவு விருத்தி | | | | | | | | | | | | | | | | | | |
| பசுமை முயற்சிகள் மீதான செலவினம் | ▼ | | | | | | | | | | | | | | | ▲ | ▲ | ▲ |

கு குறுகிய காலம் | ம மத்திய காலம் | நீ நீண்ட காலம் | ▲ பெறுமதி உயர்வு | ▼ பெறுமதிக் குறைவு | ⊖ பெறுமதிப் பாதுகாப்பு

**பெறுமதி உருவாக்கத்தின் இயக்கிகள் (பெ.உ.இ)**

வரைபட உரு 20

I. ஒரு நிலைபேறான உலகத்திற்குப் பங்களிப்பு செய்தல்



III. நிலைபேறான நிதியிடல்

II. பொறுப்புணர்வு மிக்க நுகர்வு

## பெறுமதி உருவாக்கத்தின் இயக்கிகள் (பெ.உ.இ 1)

பசுமையான இடப் பரப்புக்கள் மூலம் பணியாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் அதே வேளையில் சக்தி, நீர் மற்றும் இயற்கை வளங்களை திறம்பட முகாமை செய்வதற்கான முன்னோக்கிய வழியாக பசுமைக் கட்டிடங்களை நாங்கள் நோக்குகின்றோம். 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 42 சூரிய கலக் கிளைகள் அல்லது வலயங்கள் வலை அளவீட்டுடன் இணைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மூலம் 15% ஆன கிளைகள் அல்லது வலயங்கள் தொழிற்படுகின்றன. எங்கள் கிளைகள் சிறந்த ஆற்றல் திறனுக்காக ஒளி மற்றும் காற்று சுற்றோட்டமடையத் தக்க வகையில் மெருகூட்டப்பட்ட ஜன்னல்களைக் கொண்டு இருப்பதன் விளைவாக மகிழ்வான பணியிடங்கள் உருவாக்கப் படுகின்றன. கதிர்காமத்தில் உள்ள எமது புதிய சுற்றுவட்ட பங்களாவும் இதே போன்ற கட்டடக்கலை அம்சங்களைப் பின்பற்றி உள்ளது. அனைத்து கிளைகளிலும் மின்னழுத்த தடுப்பான்களை நிறுவுவதன் மூலம் கூடுதலான பாதுகாப்பு அடுக்குடன் சக்தி வினைத்திறன் கொண்ட மின் சாதனங்கள் பொருத்தப்பட்டு உள்ளன. முன்பு திட்டமிட்டபடி, அனுராதபுரத்தில் உள்ள புதிய கட்டடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது.





பசுமைக் கட்டடங்கள்



தே.சே.வ வேளாண் காடாக்கல் செயற்றிட்டம் - இனிவரும் சந்ததிக்காக ஓர் வேறுபாட்டினை உருவாக்குதல்



எண்ணியலாக்கம் மூலமான ஓர் நிலைபேறான உலகுக்கு ஆதரவு வழங்குதல்




வெளிவாரி அங்கீகாரம்



கிகாலி திருத்தத்துடன் இணக்கப்படுத்தல்

இந்த நூற்றாண்டில் புவி வெப்பமடைதலை 0.4°c வரைக் குறைக்கும் வகையில் ஹைட்ரோ புளோரோ கார்பன்கள் (HFCs) மற்றும் ஆற்றல்மிக்க பச்சை வீட்டு வாயுக்களின் (GHGs) உற்பத்தி மற்றும் நுகர்வைக் குறைப்பதே கிகாலி திருத்தத்தின் நோக்கமாகும். ஓசோன் படலத்தை அழிக்கும் பொருட்களுக்கான மாண்ட்ரீல் நெறிமுறையின் திருத்தமாக இது முன்வைக்கப் பட்டது, இது இலங்கை உட்பட 65 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு 1 ஜனவரி 2019 அன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. சுற்றுச் சூழல் மற்றும் வனவிலங்கு வளங்கள் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பட்டறையில் வங்கி கலந்து கொண்டதைத் தொடர்ந்து கிகாலி திருத்தத்தின் கொள்கையின் மீது கூட்டுவணிக நிறுவனங்களின் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த, தேசிய சேமிப்பு வங்கி அதன் வங்கிச் செயன்முறைகளில் நிலைபேறான தன்மையை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறது.

## பொறுப்புணர்வு மிக்க நுகர்வு (பெ.உ.இ II) GRI 302-1 and 303-5

குறைந்த அளவு இயற்கை வளங்களின் தேவைப்பாடு மற்றும் அதன் மூலமாக நமது கார்பன் தடம் குறைக்கப் படுவதனால் நாம் எண்ணியல் மயமாக்கலில் காணப்படும் நிலைபேறான தன்மையை நாங்கள் ஏற்பிசைவு செய்து இருக்கின்றோம். எங்கள் பரந்த அளவிலான எண்ணியல் உற்பத்திகள் மற்றும் சேவைகள் வணிகப் பரிவர்த்தனைகளுக்கு எண்ணியல், கைத்தொலைபேசி மற்றும் இணைய வங்கியியலுக்கு செல்வதற்கு எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஊக்கமளிக்கிறது. குறுஞ் செய்திகள் மூலம் வழங்கப்படும் இரகசியக் குறியீடுகள், அச்சிடப்பட்ட கூற்றுக்களுக்குப் பதிலாக மின்னியல் புதுப்பித்தல் கடிதங்கள் முறைமைகள் மூலம் காகிதப் பயன்பாடு குறைந்துள்ள அதே சமயம் விளம்பரங்களுக்காக இலகுவில் உக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துவது - சமூக ஊடகங்கள் மற்றும் எண்ணியல் தளங்களில் பெருகிய அளவில் நகரும் விளம்பரங்கள் போன்றன இந்த முயற்சிக்கு பெரிதும் உதவின.

### சக்தி நுகர்வு

வங்கியில் சக்தி நுகர்வுக்கான முக்கிய ஆதாரங்களாக மின்சாரம், (தேசிய கட்டமைப்பு மூலம் மற்றும் சூரிய கல முறைமை மூலம் உருவாக்கப் படுகிறது) டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியன காணப்படுகின்றன. எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கும் நோக்கில் பொறுப்புணர்வு மிக்க நுகர்வுக்கு நாங்கள் கடமைப் பட்டுள்ளோம். இந்த நோக்கத்திற்காக, நாங்கள் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்:

குளோரோ புளோரா காபன் மின்சேகரிப்பானில் இயக்கப்படும் குளிரூட்டி அலகுகளை நிறுவுதல் மூலம் மின் நுகர்வை மீதப்படுத்துவதுடன் கார்பன் வெளியேற்றத்தையும் குறைக்கும்.

வழக்கமான வங்கி நேரங்களுக்கு குளிரூட்டிப் பயன்பாட்டை மட்டுப்படுத்துதல்

விடுமுறை நாட்களில் வங்கி வளாகங்களில் ஊழியர்கள் பணிபுரிதலை ஊக்கமிழக்கச் செய்தல்

LED மற்றும் CFL மின்குமிழ்களைப் பொருத்துதல்

LED கணினித் திரைகளைப் பயன்படுத்தல்

மறுசுழற்சி செய்வதை கூடுதலாக ஊக்குவித்தல்

சக்தி சேமிப்பின் முக்கியத்துவம் குறித்து ஊழியர்களுடன் தொடர்ச்சியான தொடர்பாடல்களை மேற்கொள்ளல்

42 கிளைகள்/வலயங்களில் சூரிய கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

வலை அளவீட்டு முறை மூலம் 42 கிளைகள்/வலயங்கள் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன

7.27GJ அளவிலான தலா ஊழியருக்கான சக்தி நுகர்வு

128.50GJ அளவிலான தலா கிளைக்கான சக்தி நுகர்வு

### நீர் நுகர்வு

2021 ஆம் ஆண்டில் வங்கியின் நீர் நுகர்வு 88,986 கன மீட்டராக இருந்ததுடன் மேலும் அடுத்து வரும் ஆண்டில் இதைக் குறைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தண்ணீரை கவனமாகப் பயன்படுத்துவதற்கான புதுமையான வழிமுறைகளை நாங்கள் கண்டறிந்துள்ளதுடன், எமது நடைமுறைகளை பணியாளர்கள் பின்பற்றுவதை நாம் உறுதி செய்கின்றோம்.

அனைத்து புதிய கிளைகளிலும் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மூலங்களில் இருந்து புதிய நீருக்கு மாற்றாக மழைநீர் சேகரிப்பு முறைமை பொருத்தப்பட்டுள்ளது. பொது வடிகால் கழிவு நீருக்குப் பயன்படுத்தப்பட்டு, வளாகத்தில் உள்ள நிலையான ஊறவைக்கும் குழிகளின் மூலம் கழிவு நீர் அகற்றப்படும் போது பொறுப்புணர்வு மிக்க வகையில் நீரை அகற்றுவதில் நாங்கள் ஈடுபடுகின்றோம்.

19.28 கன மீட்டர் தலா ஊழியருக்கான நீர் நுகர்வு

340.9 கன மீட்டர் தலா கிளைக்கான நீர் நுகர்வு

நீர் முகாமை

பல்லுயிர்த் தன்மை மற்றும் மனித ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கு முறையான கழிவு முகாமையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, வங்கி ஒரு நுணுக்கமான கழிவு முகாமை முறைமையில் ஈடுபட்டுள்ளது. கீழே உள்ள முறைமைகளின் முக்கியத்துவத்தை விளக்கும் மற்றும் சிறப்பித்துக் காட்டும் நிகழ்ச்சிகள் மூலம் எங்கள் ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம்:

கழிவுகளை சேகரிக்கும் அனைத்து இடங்களிலும் கழிவுகளை வகைப்படுத்தல்

சம்பந்தப்பட்ட நகராட்சி, மாநகர சபை மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு மறுசுழற்சி சேவை வழங்குநர்கள் மூலம் கழிவுகளை அகற்றுதல்

கழிவுக் காகிதங்கள் மறுசுழற்சிக்காக காகிதக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படல்

உணவு மற்றும் பொலித்தீன் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான நகராட்சியிடம் ஒப்படைத்தல்

பிற கழிவுப் பொருட்கள் வழங்கல் பிரிவு மூலம் ஏலம் விடப்படுதல்

மீள்சுழற்சி நிறுவனம் ஒன்றின் ஊடாக 3,070 கிலோ செய்தித் தாள்கள் மீள்சுழற்சி செய்யப்பட்டன

## நிலைபேறான நிதியிடல் (பெ.உ.இ III)

நிலைபேறான தன்மைக்கு உறுதியளிக்கப்பட்ட ஒரு அமைப்பு என்ற வகையில், எங்கள் கடன் வழங்கும் நடவடிக்கைகள் சுற்றுச்சூழலை எதிர்மறையாக பாதிக்கலாம் என்பதைப் புரிந்துகொண்டு பொறுப்புணர்வு மிக்க கடன் வழங்கலில் நாம் ஈடுபடுகிறோம். நீண்ட கால நிலைபேறான அபிவிருத்தியே எங்கள் வெற்றிக்கு முக்கியமாக இருப்பதால், கடன் வழங்கும் நடைமுறைகளுக்கு வரும்போது, எங்கள் கடன் மற்றும் இடர் மதிப்பீட்டு செயன்முறையில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) பரிசீலனைகளை ஒருங்கிணைத்து உள்ளதுடன், உயர்வாக ECG இடர்மிக்க பரிவர்த்தனைகள் மேலதிக மதிப்பீட்டுக்கு உட்படும். எதிர்மறையான சுற்றுச்சூழல் தாக்கங்களை ஏற்படுத்தும் எந்தவொரு செயலுக்கும் நாங்கள் நிதியளிப்பதில்லை என்பதை உறுதிசெய்ய, வங்கிக் கடன் வழங்குவதற்குத் தகுதிபெறாத செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தும் ஒரு விலக்குப் பட்டியலை எங்கள் கூட்டாண்மை கொள்கை கொண்டுள்ளது. அனைத்து வாடிக்கையாளர்களும் உள்நாட்டு ESG தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும், அதே நேரத்தில் அனைத்து கடன் பெறுபவர்களும் கடனைக் கோரும் போது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த ஆண்டின் போது, சுற்றுச்சூழல் காரணங்களுக்காக எந்தக் கடன்களோ அல்லது வசதிகளோ நிராகரிக்கப் படவில்லை. காலப்போக்கில் உயர்வான ESG தொழிற்துறை எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு வாடிக்கையாளர்களை மெதுவாகத் தூண்டுவது எமது நோக்கம் ஆகும். சுற்றுச்சூழல் காரணிகளின்

கீழ் முன்னெச்சரிக்கை ஆய்வு மற்றும் ஆளுகை வழிகாட்டுதல்கள் கீழே வழங்கப்பட்டுள்ள நமது விரிவான சுற்றுச் சூழல் சமூக இடர் முகாமை (ESRM) கொள்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

உரு 21




கடுமையான மதிப்பீட்டிற்கு மேலதிகமாக, சமூக அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டமான சூரிய பல சங்கிரமயவை ஆதரிக்கும் தே.சே.வ சுற்றுச்சூழல் கடன் மூலம் பசுமைக் கடன் எண்ணக்கருவையும் நாங்கள் ஊக்குவிக்கிறோம். 2016 ஆம் ஆண்டு முதன்முதலில் அமைக்கப்பட்ட இந்தத் திட்டம், மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுத்த லங்கா மின்சார கம்பனி தனியார் நிறுவனம் ஆகியவற்றின் பங்குடமை ஆகும். வீடுகள் மற்றும் மத வழிபாட்டு இடங்கள்

முதல் ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வரையிலான கூரைகளில் சிறிய சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதே இதன் இலக்காகும். இந்த சலுகைக் கடன் திட்டம் வாடிக்கையாளர்களுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாற உதவுவதன் மூலம் கார்பன் தடத்தைக் குறைக்கிறது. வாடிக்கையாளர்கள் தமது மின் உபயோகத்தின் அடிப்படையில் வலை அளவீட்டு முறை, வலை கணக்குப்பேணல் முறை மற்றும் தேறிய அதிகரிப்பு முறை ஆகியவற்றிலிருந்து ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

அட்டவணை 24

| ஆண்டு | வழங்கிய கடன்களின் எண்ணிக்கை | வழங்கிய கடன்களின் பெறுமதி ரூபா மில்லியன் |
|---|---|---|
| 2018 | 781 | 656.61 |
| 2019 | 222 | 193.2 |
| 2020 | 8 | 5.41 |
| 2021 | **9** | **3.80** |

### காலநிலை மாற்றத்தின் தாக்கம்

தீவிரமான காலநிலை நிலைமைகள் நேரடியாக எங்கள் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்றத்தினால் விளையும் அழிவுகள் உற்பத்தி மட்டம் மற்றும் வருமான மட்டங்கள் குறைவடைவதற்கு வழிவகுக்கிறது. மேலும், பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த செலவினங்களில் அறியப்பட்ட விளைவு காணப்படலாம். இது கடன் பெறுனர்களின் கடன் மீளச் செலுத்தும் திறனைப் பாதிப்பதுடன், இது வங்கித் துறையில் தனிநபர், வீடமைப்பு மற்றும் வணிகக் கடன்களின் ஒட்டுமொத்த தொழிற்படாக் கடன்களின் அளவை அதிகரிக்க வழிவகுக்கும்.

### 2022 மற்றும் அதற்குப் பின் நோக்கிய புறநோக்கு

**குறுங்காலம்**

- டிஜிட்டல் சேனல்களுக்கு வாடிக்கையாளர் இடம்பெயர்வதை ஊக்குவித்தல்
- சூரியகல கிளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- சுற்றுச்சூழல் திட்டங்கள் நிதி

**நடுத்தர காலம்**

- நிலைபேறான கடன் வழங்கலில் நிதியிடலுக்காக சுற்றுச்சூழல் மற்றும் சமூக அளவுகோல்களை வலுப்படுத்துதல்
- குறைந்த கார்பன் பொருளாதாரத்திற்கான பசுமைக் கடன்களை அதிகரித்தல்
- பசுமைக் கட்டடங்கள் மூலம் கார்பன் வெளியேற்றத்தை குறைத்தல்
- பொறுப்புணர்வு மிக்க வளப் பாதுகாப்பு மற்றும் முகாமை மூலம் சக்தி, நீர் மற்றும் காகித நுகர்வு குறைத்தல்

**நீண்ட காலம்**

- சுற்றுச்சூழல் மற்றும் சமூக ரீதியாகப் பொறுப்பு மிக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளை உருவாக்குதல்
- நீண்ட கால சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களில் முதலீடு செய்தல்

பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021 →

# நிறுவன ஆளுகைக் கூற்று

ஆளுகை என்பது வங்கித் தொழிற்துறையில் இணங்குவித்தல் விடயமொன்றாக உருவாக்கப்பட்டுள்ள அதேவேளை தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள நாம் ஆளுகையினை வெறுமனே ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டை மிதப்படுத்துகின்றது என்றும் அதற்கு பதிலாக பெறுமதி உருவாக்கச் செயன்முறையின் அனைத்து மட்டங்களிலும் தாக்கமேற்படுத்துகின்ற பொறுப்பினதும் ஒழுக்கநெறிசார்ந்த முகாமைத்துவத்தினதும் உயரிய அணிவகுப்பை எடுத்துக்காட்டுகின்றது என்றும் அதனை நோக்குகின்றோம். ஆளுகையானது எமது ஒருங்கிணைப்பட்ட சிந்தனை வழிமுறைகளுடனும் அவ்வாறான தொடக்க எண்ணக்கருக்களில் இருந்து பெறுவிக்கப்படுகின்ற மற்றும் அதனைத்தொடர்ந்து வருகின்ற தொழிற்பாடுகளின் தொகுதிகளுடனும் உட்பொதிந்த தன்மையில் இணையப்பெற்றுள்ளது, இதனூடாக இறுதி இலக்காக நீண்டகால பெறுமதி உருவாக்கத்துடன் கூடிய வங்கியின் விழுமியங்கள் மற்றும் உபாயக் குறிக்கோள்கள் மூலம் இயக்கப்படும் ஒழுக்கநெறிசாரந்த, பொறுப்புமிக்க, அறநெறி தெரிவுகளைக் கொண்ட இடமொன்றிலிருந்து தேசிய சேமிப்பு வங்கி தொழிற்படுகின்றது என்பது உறுதிசெய்யப்படுகின்றது.

அத்தகைய பெருமுயற்சிமிக்க இப்பொறுப்பினை வெற்றிகரமாக அடைந்துகொள்ளும் பொருட்டு தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள ஆளுகைக் கட்டமைப்பானது வலுவான ஒழுக்கம்சாரந்த அத்திவாரத்திலிருந்து பெறுவிக்கப்பட்ட வலிமையான தலைமைத்துவம், பக்கச்சார்பற்ற மேற்பார்வை, பொறுப்புடமை ஆகியவற்றின் மூலம் உறுதுணையளிக்கப்படுகின்றது. ஆளுகை இடம்பெறுகையினுள் தெளிவான எல்லைகளை காண்பிக்கின்ற சபையினதும் முகாமைத்துவத்தினதும் கடமைகளை உத்தியோகபூர்வமாக எடுத்தியம்புகின்ற தேசிய சேமிப்பு வங்கிப் பொறுப்பாணை இதற்கு மேலும் வலுச்சேர்க்கின்றது.

ஆளுகையின் பாரிய பங்கு சபைக் குழுக்களுக்கும் பொதுமுகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர் மூலம் தலைமைவகிக்கப்படுகின்ற நிறுவன முகாமைத்துவத்திற்கும் வழங்கப்பட்ட உபாயப் பணிப்புரை தொடர்புபட்ட ஒப்படைக்கப்பட்ட அதிகார மட்டத்துடன் சபையின் தோள்களிலேயே அமைந்துள்ளது. சபையின் முக்கிய பொறுப்புடமையானது வங்கியின் விவகாரங்கள், சமூகப்-பொருளாதார, மற்றும் சூழல்ரீதியாக நிலைபெறத்தக்கது என உறுதிசெய்கின்ற அதேவேளை அக்கறைதாரர் நலன்களை எய்துவதனை உறுதிசெய்வதற்கு அவற்றைப் பணித்து, மேற்பார்வை செய்வதன் மீதே காணப்படுகின்றது. அனைத்து அக்கறைதாரர்களுக்கும் நன்மைபயக்கின்ற, சமநிலையான பெறுமதி உருவாக்க முறைமையினை எண்ணக்கருவாக்குவதற்கு சபையை இயலச்செய்கின்ற உபாய மற்றும் தொடர்புபட்ட தொழிற்பாட்டுக் குறிக்கோள்களை வங்கி உருவாக்கி அங்கீகரிப்பதில் ஈடுபடுகின்ற சபையின் கடமைகள் ஊடாக இது நிறைவளிக்கப்படுகின்றது.

ஆகையினால், ஒருமைப்பாடு, வினைத்திறன், பொறுப்புக்கூறல் பக்கச்சார்பின்மை, மற்றும் வெளிப்படைத்தன்னை என்பவற்றைக் கொண்ட பண்புகளை உள்ளடக்கி தேசிய சேமிப்பு வங்கியில் ஒழுக்கநெறிசார்ந்த மற்றும் செயல்திறன்மிக்க வங்கித்தொழில் தொழிற்பாடுகளை பேணுவதற்கு சபை வேண்டப்பட்டுள்ளது. இப்பண்புகள், வங்கித் தொழில்துறையினை ஆளுகின்ற விதிகள், ஒழுங்குவிதிகள், சட்டவாக்கம், கொள்கை, சட்டங்கள், கோவைகள் என்ற அனைத்துடனும் தேசிய சேமிப்பு வங்கியின் இணங்குவித்தலில் திட்டவட்டமாக தோன்றி, ஒழுக்கநெறி சாரந்த நிறுவனப் பிரசைக்கான அதன் கடமைப்பொறுப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

எனவேதான், தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுகை பற்றிய எண்ணக்கருவும் நடைமுறைப்படுத்தலும் உபாயக் குறிக்கோள்களை எய்துதல், அக்கறைதாரர் நலன்களைப் பெற்றுக்கொள்ளல், பொதுவில் சமூகத்திற்கு ஒழுக்கநெறிசார்ந்த மற்றும் நிலைபெறத்தக்க சேவையினை வழங்குதல் என்பன ஊடாக தொழிலை இயலச்செய்வதனை ஈடுபடுத்துகின்ற பல்துறைசார் நடவடிக்கையொன்றாக விளங்குின்றது. ஆகையினால், ஆளுகையானது தேசிய சேமிப்பு வங்கிக்கு தொடர்ந்தும் முன்னுரிமைமிக்க துறையாக இருந்துவரும்.

தேசிய சேமிப்பு வங்கியின் நிறுவன ஆளுகை மற்றும் இணங்குவித்தல் நிலைமைகள் பற்றிய விரிவான மீளாய்வு பக்கம் 188 தொடக்கம் 202 வரை காணப்படுகின்றது.

உரு 22



# இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான கூற்று

ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவமானது நிறுவனங்களின் குறுகியகால மற்றும் நீண்ட கால உறுதிப்பாட்டினை உறுதிசெய்கின்றது. ஆதலால், இடர்நேர்வு முகாமைத்துவமானது கால ஓட்டத்தில் நிலைபெறத்தக்க பெறுமதியினைத் தோற்றுவிப்பதற்கான எமது இயலுமையில் நேரடியாக தாக்கம் விளைவிப்பதனால் அது எமது தொழில் மாதிரிக்கும் நிறுவன உபாயத்திற்குமான மிக முக்கியமான தொழில்பாடாக இருந்து வருகின்றது என்பதாக தேசிய சேமிப்பு வங்கியில் நாம் இடர்நேர்வு முகாமைத்துவத்தை நோக்குகின்றோம். இடர்நேர்வு முகாமைத்துவத்தின் நோக்கெல்லையானது தேசிய சேமிப்பு வங்கி அதேபோன்று அதற்கு முழுமையாக உரித்தான துணை நிறுவனங்களான என்எஸ்பி நிதி முகாமைத்துவம் மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி ஆகிய இரண்டினையும் உள்ளடக்குகின்றது. இதனூடாக தொகுதி முழுவதும் பரந்த அத்துடன் மிகவும் அறிந்த இடர்நேர்வு மதிப்பீடொன்றினை அது கூட்டிணைக்கின்றது.

வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவமானது அதன் தொழிற்பாடுகள் மற்றும் இணைந்த இடர்நேர்வுகளை முகாமைசெய்யும் ஒட்டுமொத்த குறிக்கோள்களை அடைகின்ற அதேவேளை அக்கறைதாரர்களின் நலன்களை நிலைநிறுத்துவதில் செம்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன மூலம் தூண்டப்படுகின்றது. தொழிற்பாடானது இடர்நேர்வுகளை தானாக இனங்கண்டு, கணிப்பிட்டு, அளவீடுசெய்து, ஒன்றுதிரட்டி அத்துடன் முகாமைசெய்கின்ற அதேவேளை மூலதன ஒதுக்கீடுகளின் உகப்பாக்கத்தினை மேற்பார்வை செய்யும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பெறுமதி உருவாக்கத்தில் இடர்நேர்வுக்கும் ஆதாயத்துக்கும் இடையிலான விட்டுக்கொடுப்பு மிகவும் சமனிலைப் படுத்தப்பட்டுள்ளதென்றும். இதனூடாக எமது வர்த்தகநாமம் பற்றிய எண்ணப்பாங்கு, கடன்தீர்க்கும் ஆற்றல் அத்துடன் தொழிற்துறையில் உள்ள ஆற்றல்வாய்ந்ததன்மை என்பன தொழிற்துறையில் நிலைநிறுத்தப்படுகின்ற அதேவேளை ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் சமகாலத்தில் இணங்கியொழுகுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கு நாம் அர்ப்பணித்துள்ளோம். எனவே, நாம் வங்கித் தொழிற்துறையினுள் இடர்நேர்வு முகாமைத்துவம் வேண்டுகின்ற தீவிரத்தன்மையுடனும், கடுமையுடனும் அதன் முகாமைத்துவத்தை நாம் கொண்டுநடாத்துகின்றோம்.

ஒன்றுக்கொன்று இடையிலான இத்தொடர்பினைக் கருத்திற்கொண்டு, வங்கியின் தொழில் உபாயமானது சபையினால் நிர்ணயிக்கப்பட ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ உபாயத்தினுள்ளும் இடர்நேர்வு ஏற்பினுள்ளும் இணங்கிக் காணப்படுகின்றது. சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு என்ற பெயரிலான சபை நியமித்த துணைக் குழுவிடம் சபையினால் உருவாக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ உபாய வினைத்திறன் மற்றும் பொருத்தப்பாடு மீதான விழிப்புணர்வை உருவாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாக தேசிய சேமிப்பு வங்கி ஒட்டுமொத்தமாக அதன் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையில் ஈடுபடுகின்றது.

### கண்ணோட்டம்

உலகளாவிய நோய்த்தொற்று அலைகளாக தொடர்ந்தும் வந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஒதுக்குகள் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட சமூக பொருளாதார பின்னடைவுகளுடன் இணைந்து இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைப் பாதிப்புக்குள்ளாக்கியது.

நாம் வியாபாரத் தொழிற்பாடுகளில் ஏற்படும் உபாயரீதியான மாற்றங்களுக்கு தங்குதடையற்ற ஆதரவினை வழங்குகின்ற டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதனூடாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை வலிமைப்படுத்துவதற்கு அர்ப்பணித்துள்ளோம். இது வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் அனைத்து அபிவிருத்திகளும் சர்வதேச ரீதியாக சிறந்த நடத்தைகளுடனும் இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புடனும் இணங்கியொழுகுகின்றன என்பதனை உறுதிசெய்கின்றது.

### தேசிய சேமிப்பு வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம்

தளம்பல்மிக்க சூழலில் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு போதுமான வழிமுறைகளை ஒருங்கிணைத்துள்ள எமது எச்சரிக்கைமிக்க இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பின் காரணமாக சவால்மிக்க வருடத்தின் மத்தியில் எமது வங்கியின் தொடர்ச்சியான உறுதிப்பாடு ஓரளவானதாகவே இருந்துவருகின்றது. எமது இடர்நேர்வுக் கட்டமைப்பானது எப்போதும் சவால்மிக்க தொழிற்பாட்டு சூழலினுள் தோன்றுகின்ற இடர்நேர்வுகளுக்கு ஏற்றதாகி கொள்வதனால், அதன் பன்மைத்துவம் மிக முக்கிய நோக்குகளில் ஒன்றாக காணப்படுகின்றது. முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட இடர்நேர்வு ஏற்பு மட்டங்களுக்கு எதிராக நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகையைக் கிரமமாக கண்காணிப்பதற்கு சிறப்பாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட இடர்நேர்வு ஏற்பு மட்டங்கள் எம்மை இயலச்செய்கின்றன.

இலாபத் தன்மை மற்றும் கடன்தீராற்றல் குறிகாட்டிகள் நியதிகளில் 2021 ஆம் ஆண்டில் வங்கி இடர்நேர்வு ஏற்பு மட்டங்களை அடையப்பெறுவதற்கு இயலுமாகவிருந்தது.

வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து 212 - 239 ஆம் பக்கங்களைப் பார்க்க.

## தொகுப்பு

# 179

# → ஆளுகை


பணிப்பாளர் சபை – **180**
கூட்டாண்மை முகாமைத்துவம் – **184**
நிறைவேற்று முகாமைத்துவம் – **185**
பிரதான முகாமையாளர்கள் – **187**
கூட்டாண்மை ஆளுகை – **188**
சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை – **203**
சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை – **206**
சபை நியமனக் குழுவின் அறிக்கை – **208**
சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை – **210**
இடர் மீளாய்வு – **212**

# பணிப்பாளர் சபை






**திருமதி கேசிலா ஜயவர்தன**

தலைவர்
சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**நியமனத் திகதி**
2 ஜனவரி 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திருமதி ஜயவர்தன அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராக 15 ஆண்டுகள் பணியாற்றியுள்ள ஒரு கல்வியியலாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆவார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளமாணி (கௌரவ) மற்றும் முதுமாணி பட்டங்களைப் பெற்றவராவார். இவர் இரு அபிவிருத்தி வங்கிகளின் தலைவராக 8 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
தலைவர் - வரையறுக்கப்பட்ட என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனி, தலைவர் - இலங்கை சேமிப்பு வங்கி

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
தலைவர் - கந்துரட்ட அபிவிருத்தி வங்கி, தலைவர் - பிராந்திய அபிவிருத்தி வங்கி, மாகாண சபை உறுப்பினர்.




**திரு எரங்க ஜயவர்தன**

சிரேஷ்ட பணிப்பாளர்
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**நியமனத் திகதி**
23 ஜனவரி 2020

**சிரேஷ்ட பணிப்பாளர்**
15 ஜூன் 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திரு ஜயவர்தன அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் Rensselaer Politechnic Institute இடமிருந்து விஞ்ஞான இளமாணி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்திலிருந்து மின்சார பொறியியல் விஞ்ஞான முதுமாணி (M.Sc) பட்டத்தினையும் பெற்றுள்ளார். திரு. ஜயவர்தன அவர்கள் அப்பிள் இன்க். (Apple Inc.), கூப்பர்டினோ, சி.ஏ, யு.எஸ்ஏ (Cupertino, CA, USA) மற்றும் சிஸ்கோ சிஸ்டம்ஸ், சான் ஜோஸ், சி.ஏ, யு.எஸ்.ஏ. (Cisco Systems, San Jose, CA, USA) ஆகிய நிறுவனங்களிலான அவரது சேவைக் காலத்தின் போது பல்வேறு தலைமைத்துவ விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

திரு. ஜயவர்தன அவர்கள் மெலின்டா கேட்ஸ் (Melinda Gates Fellowship) புலமைப் பரிசிலைப் பெற்ற முதலாவது இலங்கையராக இருப்பதுடன், இது மின் பொறியியலில் தமது கலாநிதிக் கற்கையினை முழுமையான புலமைப் பரிசிலில் ஐக்கிய அமெரிக்காவின் ஸ்ரான்போர்ட் பல்கலைக் கழகத்தில் கற்க வாய்ப்பாக, மேலும் அவரது கல்வி வாழ்க்கைக்கு உதவியது.

திரு. ஜயவர்தன பல பிரசுரங்களின் எழுத்தாளராக, அவரது ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேச கட்புல பொறியியல் அமைப்பின் வருடாந்த சர்வதேச மாநாடுகளில் வெளியிடப்பட்டன. அமெரிக்காவின் கெய்தெஸ்பர்க், எம்.டி., தேசிய நியமங்கள் மற்றும் தொழிநுட்ப நிறுவனத்தில் நடாத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி பிரதானமாக, நுண் கல்அச்சுக்கலை (Micro lithography) மீதான செயன்முறைக் கட்டுப்பாடுகள் மீது கவனம் செலுத்தியது. அவர் 2010 இல் பேபால் புத்தாக்க விருதை வென்ற சிலிக்கான் வேலி அடிப்படையிலான ஆரம்ப நிறுவனத்தின் ஸ்தாபக உறுப்பினராக இருந்ததுடன், இது வயர்ட் (WIRED), நியூயோர்க் டைம்ஸ் (NY Times), பொஸ்டன் குளோப் (Boston Globe), சி.என்.பி.சி (CNBC) மற்றும் சான்பிரான்சிஸ்கோ குரோனிக்கல் (San Francisco Chronicle) ஆகிய சர்வதேச ஊடகங்களின் வெளியீடுகளிலும் இடம்பெற்றது.

திரு. ஜயவர்தன அவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களில் தனது தொழிற்துறை அனுபவத்தினைக் கொண்டிருப்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகளிலும் உரையாற்றியிருக்கிறார்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
பிரதம நிறைவேற்று அதிகாரி - வரையறுக்கப்பட்ட கிகா புட்ஸ் (தனியார்) கம்பனி

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
பணிப்பாளர் - எண்ணியலாக்கம் வரையறுத்த மாஸ் இன்டிமேட்ஸ் (தனியார்) கம்பனி, பிரதம நிறைவேற்று அதிகாரி - சிலூட்டா (தனியார்) கம்பனி, பொது முகாமையாளர்/ பணிப்பாளர் மாஸ் இனோவேன்ஸ், பொது முகாமையாளர், கொள்வனவுகள் மற்றும் வழங்கல் சங்கிலி, வரையறுத்த மாஸ் இன்டிமேட்ஸ் (தனியார்) கம்பனி, வழங்கல் சங்கிலி, திட்டமிடல் மற்றும் கொள்வனவு, அப்பிள் இன்க்., கூப்பர்டினோ, சி.ஏ, யு.எஸ்ஏ கேள்வித் திட்டமிடல் முகாமையாளர், சிஸ்கோ சிஸ்டம்ஸ், சான் ஜோஸ், சி.ஏ, யு.எஸ்.ஏ, ஆராய்ச்சி விஞ்ஞானி-தேசிய நியமங்கள் மற்றும் தொழிநுட்ப நிறுவகம், கெய்தெஸ்பர்க், எம்.டி., யு.எஸ்ஏ.




**திரு. யூ ஜீ ஆர் ஆரியரத்ன**

பதவிவழிப் பணிப்பாளர்

சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**நியமனத் திகதி**
31 ஆகஸ்ட் 2018

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திரு ஆரியரத்ன அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் 28 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஒரு இலங்கை நிர்வாக சேவையில் (SLAS) சிறப்பு வகுப்பு அதிகாரி ஆவார். அவர் களனிப் பல்கலைக்கழகத்தின் வணிகவியல்

இளமாணி, சமூகவியல் முதுமாணி மற்றும் பட்டப் படிப்பின் பின்னான பிராந்திய திட்டமிடல் டிப்ளோமா பெற்றவர் ஆவார். அத்துடன் அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்பின் பின்னான கல்வியியல் டிப்ளோமாவையும் பூர்த்தி செய்துள்ளார். திரு. ஆரியரத்ன அவர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடமிருந்து (SLIDA) இலங்கை நிர்வாக சேவை வகுப்பு ஐ அலுவலர்களுக்கான பொது நிர்வாக சான்றிதழ் மற்றும் பொது முகாமைத்துவம் மற்றும் இயற்திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்ட சான்றிதழ் ஆகியவற்றையும் பெற்றிருக்கிறார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
தபால் மா அதிபர், தபால் திணைக்களம், இயக்குனர் - வரையறுக்கப்பட்ட என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனி, பணிப்பாளர், கடன் தரவுப் பணியகம்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், பொலன்னறுவை, மேலதிக செயலாளர் (சமூக அபிவிருத்தி), சமூக மேம்பாடு மற்றும் நலன்புரி அமைச்சின் மேலதிக செயலாளர் (கிராம அபிவிருத்தி), அரச அச்சகத் திணைக்களத்தில் மேலதிக அரச அச்சுப் பதிப்பாளர் (நிர்வாகம்), தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், காணி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் (காணி), இலங்கை மகாவலி அதிகார சபையின் நிறைவேற்று இயக்குநர்/துணைப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி), தபால் திணைக்களத்தின் பிரதித் தபால் மா அதிபர் (வடமேற்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணம்), மாவத்தகமை பிரதேச செயலகப் பிரதேச செயலாளர், விவசாய சேவைகள் திணைக்களத்தின் உதவி/துணை ஆணையாளர் (குருநாகல்), கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர், வடமேல் மாகாணம், நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் (வட மத்திய மாகாணம்), உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், ராஜங்கனை, திரப்பனை, காணி உதவி ஆணையாளர், காணி ஆணையாளர் திணைக்களம்.




**கலாநிதி. எம் கே சி சேனநாயக்க**
பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**நியமனத் திகதி**
11 ஜனவரி 2020 முதல் 02 மார்ச் 2022 வரை

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
ஒரு பொதுத்துறைப் பணியாளரான தனது சேவை வாழ்க்கைக்கு மேலதிகமாக, ஒரு கல்வியாளராக இருக்கும் கலாநிதி சேனநாயக்க தனது நிபுணத்துவத்துடன் தொடர்புடைய பல சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பிரசுரங்களுக்குப் பங்களித்துள்ளார். உலகெங்கிலும் நடைபெற்ற பல சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் தனது முன்னிலைப்படுத்தல்களை வழங்கியுள்ளார். அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றுள்ளார். கலாநிதி சேனநாயக்க அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் கலாநிதிப் பட்டம், ஜப்பானின் ஹிட்டோட்சுபஷி பல்கலைக்கழகத்தின் வணிகத் தந்திரோபாயப் பள்ளியில் பொதுக் கொள்கைகள் முதுமாணிப் பட்டம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் இளமாணி (சிறப்பு) பட்டம் (2 ஆம் வகுப்பு -மேல் பிரிவு) ஆகியவற்றைக் கொண்டிருக்கிறார். அவர் மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) மற்றும் இலங்கை மன்ற நிறுவனம் ஆகியவற்றிலிருந்து முகாமை மற்றும் நிர்வாக உயர் டிப்ளோமாவினையும் கொண்டிருக்கிறார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
பணிப்பாளர் நாயகம், பாதீட்டுக் கொள்கைகள் திணைக்களம், நிதி அமைச்சு, இலங்கை முதலீட்டு சபையின் அவதானிப்பாளர் (திறைசேரிப் பிரதிநிதி), இலங்கைக் கொள்கைகள் கற்கை நிலையத்தின் ஆளுகைச் சபை உறுப்பினர்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் (பதில்) மற்றும் உதவிப் பணிப்பாளர், பாதீட்டுக் கொள்கைகள் திணைக்களம் மற்றும் உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு ஆணைக்குழு உறுப்பினர் (திறைசேரி பிரதிநிதி), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டத்தின் பின்னான ஆங்கிலக் கல்வி நிறுவகத்தின் சபை உறுப்பினர், இலங்கை உள்ளாட்சி ஆளுகை நிறுவகம், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப ஆணைக்குழு.




**திருமதி மனோஹரி அபயசேகர**
பணிப்பாளர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**நியமனத் திகதி**
14 ஜனவரி 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திருமதி அபயசேகர கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (முதலாம் வகுப்பு கௌரவ) மற்றும் வணிக நிர்வாக முதுமாணி (MBA) பட்டங்களைப் பெற்று மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றவர். அவர் பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் (CIMA – UK) முதுநிலை அங்கத்தவரும் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் (ICASL) முதுநிலை அங்கத்தவரும் ஆவார். பட்டய முகாமைக் கணக்காளர் இறுதிநிலை பரீட்சைகளில் அவர் ஓர் பரிசுபெற்ற வெற்றியாளரும், பட்டய முகாமைக் கணக்காளர் இலங்கை தேசியவலையமைப்புக் குழுவின் 2019 ஆம் ஆண்டின் தலைவியும் ஆவார் திருமதி அபயசேகர அவர்கள் 2021 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கான பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவக பூகோள ஆளுகைக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். திருமதி அபயசேகர கே.பி.எம். ஜியின் முன்னாள் ஊழியர் ஆவார். அவர் 20 ஆண்டுகள் பட்டத்தின் பின்பான அனுபவம் கொண்டவர் ஆவார். அவர் பண்டாரநாயக்க சர்வதேச

இராஜதந்திர பயிற்சி நிறுவனத்தின் வெர்னன் மெண்டிஸ் (Vernon Mendis) ஞாபகார்த்த விருதை வென்று சர்வதேச உறவுகளில் பட்டப் படிப்பின் பின்னான டிப்ளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். அவர் 2019-2020 காலப்பகுதிக்கான கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வணிக நிர்வாக முதுமாணி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். அவர் இலங்கை சர்வதேச வணிகர் கழகத்தில் ஒரு நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திருமதி அபயசேகர ஐக்கிய அமெரிக்க மாநில திணைக்களத்தின் மகளீருக்கான பார்ச்சூன் (Fortune) வழிகாட்டுதல் திட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார். மற்றும் அவர் ஐக்கிய அமெரிக்க மாநில திணைக்களத்தின் சர்வதேச வருகையாளருக்கான தலைமைத்துவ திட்டத்தின் (IVLP) முன்னாள் மாணவருமாவார். அவர் ஹைதராபாத் இந்திய வணிகப் பள்ளி (ISB), ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா மற்றும் ஜெர்மனியின் பி.எச்.எப் வங்கி ஆகியவற்றில் நிறைவேற்றுக் கல்வியைப் பெற்றுள்ளார். இவர் 2015 ஆம் ஆண்டு ஜப்பானிய AOTS புலமைப்பரிசிலினை பெற்றுள்ளார்.

திருமதி அபயசேகர மகளீர் தலைமைத்துவத்துக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார் - இலங்கை முகாமைத்துவத்திலுள்ள மகளீர் (2012), உலக மகளீர் தலைமைக்துவ காங்கிரஸ் (2015) மும்பாய் மற்றும் தெற்காசியா.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
இயக்குநர், வரையறுத்த என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனி

குழு உறுப்பினர் - பட்டய முகாமைக் கணக்காளர்

பணிப்பாளர் - கபுறுக்கா கூட்டு நிறுவனம்

குழு உறுப்பினர் - மகளீர் நிறுவன பணிப்பாளர்கள் - இலங்கை அத்தியாயம்

குழு உறுப்பினர் - இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனம்

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
2002 முதல் 2020 வரையான 18 வருட தொழில் அனுபவத்தில் ஹேலீஸ் குழுமத்தில் பல்வேறு தலைமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார். தொலைநோக்குத் திட்டமிடல் பிரிவுக் கணக்காளர், தந்திரோபாய வணிக மேம்பாட்டு பிரிவு முகாமையாளர் மற்றும் தலைவர், பணிப்பாளர் - ஹேலீஸ் குழுச் சேவைகள் மற்றும் பென்டோன்ஸ் லிமிட்டட் 31 ஒக்டோபர் 2020 வரை




**திரு. எம் ரீ ஜே பெரேரா**

சுயாதீனமற்ற
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

**நியமனத் திகதி**
11 ஏப்ரல் 2020

**திறன்சேர்க்கை மற்றும் அனுபவம்**
திரு. பெரேரா அவர்கள் தேசிய சேமிப்பு வங்கியில் நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலங்களுக்கு சேவையாற்றி 2016 இல் ஓர் பிரதம முகாமையாளராக இருந்து ஓய்வு பெற்றார். அவர் சேவை வழங்கலிலான தமது பரந்த அனுபவத்தை வெளிப்படுத்தும் வகையில் கூடுதலான அளவில் கிளைத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனியின் பணிப்பாளர். இலங்கை சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
2010 முதல் 2013 வரை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் (Janatha Estates Development Board) உறுப்பினர்.




**திரு. எச் கே டீ லக்ஷ்மன் காமினி**

சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரம் அற்ற
பணிப்பாளர்

**நியமனத் திகதி**
07 ஜனவரி 2021

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திரு காமினி அவர்கள் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மக்கள் வங்கியில் சேவையாற்றி 2014 இல் ஓய்வு பெற்ற ஓர் அனுபவம் மிக்க வங்கியாளர் ஆவார். அவர் கூடுதலான அளவில் சர்வதேச வங்கியியல் மற்றும் கிளை வங்கியில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
த்ரீ ஸ்டார் லொஜிஸ்டிக்ஸ் (Three Star Logistics (Pvt) Ltd) தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர், என்.எஸ்.பி. நிதி முகாமைத்துவ கம்பெனியின் பணிப்பாளராக பிரேரிக்கப்பட்டு உள்ளார்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் உபதவிசாளர் பணிப்பாளர் திறன்விருத்தி நிதியம், திறன்விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு.



**திரு ஜுட் நிலுக்ஸன்**

பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற
பணிப்பாளர்

**நியமனத் திகதி**
02 மார்ச் 2022

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திரு நிலுக்ஸன் அவர்கள் தென் கொரியாவின் Kyung Hee University இடமிருந்து சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு முதுமாணி பட்டத்தினையும் ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டாம் உயர் வகுப்பு முகாமைத்துவ சிறப்பு இளமாணி (BSc) பட்டத்தினையும் பெற்றுள்ளார். பொது நிதி முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச மதிப்பு மிக்க நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெற்றுள்ளார். இவர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடமிருந்து (SLIDA) இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான பொது நிர்வாக சான்றிதழ் மற்றும் பொது முகாமைத்துவம் மற்றும் இயற்திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்ட சான்றிதழ் ஆகியவற்றையும் பெற்றிருக்கிறார்.

திரு நிலுக்ஸன் அவர்கள் பொது துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட இலங்கை நிர்வாக சேவையில் சிறப்பு தர அலுவலகர் ஆவார். அவரது பொது சேவைகள்

காலத்தில் பல்வேறுபட்ட பொது திறைசேரி, பாராளுமன்ற அமைச்சர்களுக்கான அலுவலகம் போன்ற சிரேஸ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
பொதுப்பணிப்பாளர், தேசிய பாதீட்டுத் திணைக்களம், சபை உறுப்பினர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) மற்றும் தேசிய திரைப்படவாக்கல் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைக்கு பிரேரிக்கப்பட்டுள்ளமை.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**
2015 முதல் 2020 வரை பாராளுமன்ற அமைச்சர்களுக்கான அலுவலக சிரேஸ்ட உதவி செயலாளர், பொது திறைசேரி பணிப்பாளர், பிரதி பணிப்பாளர்/ உதவிப்பணிப்பாளர், பணிப்பாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் கலால் வரி இலங்கைச்சுங்கம், சர்ம வாசனா நிதியத்தின் சபைத்தலைவர். இலங்கை மின்சார சபை (CEB), நிதி கற்கை கலைக்கூடம் (MILODA), இலங்கை மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் (SPMC), தேசிய தாவரவியல் புங்கா நம்பிக்கை நிதியம், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு (ITN), கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை உள்ளூர் அரச கடன் சபை, இலங்கை இளைஞர் கூட்டுத்தாபனம், தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் (NBRO) பொது ஊழியர் சேமலாப நிதியம் (PSMPA) உள்ளடங்கலான பல்வேறுபட்ட அரச நிறுவனங்களில் பொது திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்

**திரு. எம் பி ஏ டபிள்யூ பீரிஸ்**

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

**நியமனத் திகதி**
12 அக்டோபர் 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**
திரு. பீரிஸ் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞான இளமாணி (சிறப்பு), முதல் வகுப்பு பட்டம் பெற்றிருப்பதுடன், தொழில்சார் வங்கியாளர்கள் சங்கம், இலங்கை வங்கியாளர் நிறுவனம், இலங்கை கடன் முகாமை நிறுவகம் மற்றும் இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் ஆகியவற்றின் அங்கத்தவரும் ஆவார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**
பணிப்பாளர் - என்.எஸ்.பி. நிதி முகாமைத்துவக் கம்பனி, பணிப்பாளர் - இலங்கை வங்கியியலாளர் சங்கம், பணிப்பாளர் - இலங்கையின் வங்கிகள் அமையம், பணிப்பாளர் - இலங்கை நிதி குறைகேள் அமையம், இலங்கை (FOSL).

**முன்னைய நியமனங்கள்**
திரு. பீரிஸ் அவர்கள் ஒரு தொழில்சார் தகுதி வாய்ந்த மற்றும் தகமைமிக்க சிறந்த செயற்பாட்டுத் தடம் மிக்க ஒரு வங்கியாளர் ஆவார். 1988 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியில் ஒரு முகாமைப் பயிலுனராக சேர்ந்ததில் இருந்து அவரது வங்கி வாழ்க்கை தேசிய சேமிப்பு வங்கியில் 33 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது. அவர் கிளைத் தொழிற்பாடுகள், கிளை முகாமை, சில்லறைக் கடனாக்கம், சர்வதேச வங்கியியல் அஞ்சல் வங்கியியல் உள்ளிட்ட வங்கியின் பல துறைகளில் தொழிற்பாடுகளில் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமனம் பெற முன்னர் கிளை முகாமையாளர், வலய முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் ஆகிய பதவிநிலைகளை வகித்துள்ளார்.

**திருமதி அனுபமா முகாந்திரம்**

சபையின் செயலாளர்

**நியமனத் திகதி**
6 டிசம்பர் 2016

**திறன் தேர்ச்சி மற்றும் அனுபவம்**
ஒரு வழக்கறிஞராகிய திருமதி அனுபமா முகாந்திரம் அவர்கள் இங்கிலாந்தின் கார்டி.்ப் மெட்ரொபொலிடன் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுமாணிப் பட்டம் (LLM), மணிப்பால் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுமாணி (MBA) பட்டம் மற்றும் இலங்கை சட்டக் கல்வியின் கூட்டிணைத்த குழுமத்தின் வங்கி மற்றும் காப்புறுதி சட்டப் பட்டத்தின் பின்னான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தற்போது அவர் இலங்கை பட்டயம் பெற்ற கூட்டுவணிக செயலாளர் நிறுவகக் கற்கையினை மேற்கொண்டுள்ளார்.

6 டிசம்பர் 2016 அன்று தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, அவர் நவம்பர் 2015 முதல் டிசம்பர் 2016 வரை பணிப்பாளர் சபையின் உதவி செயலாளராக பணியாற்றியுள்ளார். அவர் வரையறுத்த என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனியின் கம்பனி செயலாளராக 2015 முதல் 2017 வரை பணியாற்றியுள்ளார். வங்கி மற்றும் நிதித் துறையிலான தனது 24 ஆண்டுகால அனுபவத்தில், மக்கள் வங்கியில் சட்ட அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபையின் உதவி செயலாளராக 18 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ளார்.

திருமதி முகாந்திரம் அவர்கள் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளர் (வணிகச் சட்டம்) ஆவார்.

மேலும் அவர் இலங்கையின் வங்கி சபை/ கம்பனி செயலாளர்கள் அமையத்தின் ஸ்தாபக செயலாளர் ஆவார்.

BHRRC – சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுத் தலைவர்
BAC – சபை கணக்காய்வு குழுத் தலைவர்
BNC – சபை நியமனக் குழுத் தலைவர்
BIRMC – சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுத் தலைவர்
BHRRC – சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு அங்கத்தவர்
BAC – சபை கணக்காய்வு குழு அங்கத்தவர்
BNC – சபை நியமனக் குழு அங்கத்தவர்
BIRMC – சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அங்கத்தவர்

# கூட்டாண்மை முகாமைத்துவம்



**திரு எம் பி ஏ டபிள்யூ பீரிஸ்**
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி



**திரு. கே ரவீந்திரன்**
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளா



**செல்வி. சீ எஸ் யேசுடியன்**
பிரதிப் பொது முகாமையாளர் (கடன் மற்றும் சர்வதேசம்)



**செல்வி. ஜி வீ ஏ டி டி சில்வா**
பிரதிப் பொது முகாமையாளர் (திறைசேரி)



**திரு. கே கே வி வி எல் டபிள்யூ கருணாதிலக**
பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல், நிர்வாகம் மற்றும் மீட்பு)



**திரு. ஜீ டபிள்யூ ஈ ஜெயவீர**
பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)



**செல்வி. எம் என் ஏ பெர்னாண்டோ**
பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி)



**கலாநிதி. ஏ கே எல் இளேசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிரதான தகவல் அதிகாரி)



**திருமதி எம் ஏ கோமஸ்**
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்)



**திரு. டபிள்யூ எம் ஆர் பீ வீரக்கோன்**
பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்)



**திருமதி. கே. டி. ஜெயதிலக**
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)



**திரு. டி எச் எஸ் அத்தபத்து**
பதில் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி, நிறுவன திட்டமிடல், மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை)

# நிறைவேற்று முகாமைத்துவம்



**திரு கே எம் டபிள்யூ எச் கருணாரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்)



**திரு. ஜே எச் டி சந்திரரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்)



**திருமதி. எச் எம் எஸ் எல் பெர்னாண்டோ**
உதவிப் பொது முகாமையாளர்
(செயற்பாடுகள்)



**திரு. ஏ எல் ஏ ஹலீம்**
உதவிப் பொது முகாமையாளர்
(செயற்பாடுகள்)



**திருமதி. டபிள்யூ பி யூ ஏ டீ சில்வா**
உதவிப் பொது முகாமையாளர்
(செயற்பாடுகள்)



**திருமதி. ஆர் ஏ என் என் விஜேசிங்க**
உதவிப் பொது முகாமையாளர்
(செயற்பாடுகள்)



**திரு. கே எஸ் வீரசேன**
உதவிப் பொது முகாமையாளர்
(மனித வள அபிவிருத்தி)



**திருமதி. ஐ கே எல் சசி மகேந்திரன்**
இணக்குவிப்பு அலுவலர்



**திருமதி. ஆர் பி ஏ எம் பீ ராஜநாயக்க**
பிரதம இடர் அலுவலர்



**திருமதி. டீ டீ விக்ரமசிங்க**
உதவிப் பொது முகாமையாளர்
(செயற்பாடுகள்)



**திருமதி. சீ டபிள்யூ பத்திரன**
உதவிப் பொது முகாமையாளர்
(துணைச் சேவைகள்)



**திரு. எம் சி ராஜபக்ச**
உதவிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)



**திருமதி. எஸ் டபிள்யூ ஏ வீரசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் (திறைசேரி)



**திரு. எல் சீ சேனநாயக்க**
உதவிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)



**திருமதி. அனுபமா முகாந்திரம்**
சபை செயலாளர்



**திரு. எம் டீ சுரஞ்ஜன**
உதவிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)

# பிரதான முகாமையாளர்கள்

**திருமதி. எச் ஆர் கருணாமுனி**
பிராந்திய அலுவலகம் (மேற்கு 2)
பிராந்திய முகாமையாளர்

**திரு. டீ சி ஒலபொடுவ**
பிராந்திய அலுவலகம் (வடமேற்கு)
பிராந்திய முகாமையாளர்

**திருமதி. சீ என் ஏக்கநாயக்க**
பிராந்திய அலுவலகம் (மேற்கு 1)
பிராந்திய முகாமையாளர்

**திருமதி. ஏ எம் சி அத்தநாயக்க**
பிராந்திய அலுவலகம் (சப்ரகமுவ)
பிராந்திய முகாமையாளர்

**திரு. எஸ் சிவசொரூபன்**
பிராந்திய அலுவலகம் (கிழக்கு)
பிராந்திய முகாமையாளர்

**திரு. என் பகீரதன்**
பிராந்திய அலுவலகம் (வடக்கு)
பிராந்திய முகாமையாளர்

**திரு. எஸ் பீ சுரங்க**
பிராந்திய அலுவலகம் (தெற்கு)
பிராந்திய முகாமையாளர்

**திரு ஜீ ஹப்புஆராய்ச்சி**
பிராந்திய அலுவலகம் (மத்திய)
பிராந்திய முகாமையாளர்

**திரு. எச் எம் ஜீ பி ஜே ஹேரத்**
கடன் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஏ பீ சீ ஆர் விஜயபால**
கிளை முகாமைத்துவப் பிரிவு
பிரதான முகாமையாளர் – அடகு

**திரு. எம் வீ ஜீ சுசில் குமார**
சர்வதேச வங்கியியல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. கே டி எஸ் எஸ் குணவர்தன**
பாதுகாப்பு பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. டீ எல் பி அபயசிங்க**
வரையறுக்கப்பட்ட என் எஸ் பி நிதிய முகாமைத்துவக் கம்பனி
பிரதம நிறைவேற்று அதிகாரி

**திரு. எம் டபிள்யூ கே சி டீ சில்வா**
திறைசேரி பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. கே டீ கே கே விஜயவர்த்தன**
அட்டை நிலையம்
பிரதான முகாமையாளர்

**திரு. டீ எம் சி பி பீ திசாநாயக்க**
பொது முகாமையாளர் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஏ பி ஆர் டீ சொய்சா**
தகவல் தொழில்நுட்ப பிரிவு
பிரதான முகாமையாளர்
(தகவல் முறைமைப் பாதுகாப்பு)

**திருமதி. எஸ் எஸ் ஜே பி எஸ் டீ சில்வா**
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. எச் எஸ் பி ரணவீர**
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. எஸ் ஏ எம் ஏ சீ ஜே எஸ் கே சேனரத்ன**
சட்டப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. எஸ் ஏ ஏ பட்டுவந்துடாவ**
கடன் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. டீ ஏ வீ விஜேவந்த**
கிரிபத்கொட கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி. எஸ் எச் ஏ எஸ் குமாரி**
ஓய்வூதிய நிதியப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. என் ஐ குணதிலக**
கடன் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. எச் டீ யூ சுசந்த குமார**
கண்டி கிளை
கிளை முகாமையாளர்

**திரு. பீ ஏ ஜீ எல் ஹேமால்**
வென்னப்புவ கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி ஜே எம் ஏ கே ஜெயசிங்க**
நகரக் கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி. கே பீ என் சீ குமாரி**
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஏ எம் ஜீ அழககோன் பண்டா**
கம்பஹா கிளை
கிளை முகாமையாளர்

**திரு. டி டீ பி பெரேரா**
மனிதவளப் பிரிவு
பிரதான முகாமையாளர் (பணியாளர்)

**திரு. எம் டி ஹுசைன்**
தகவல் தொழில்நுட்ப பிரிவு
பிரதான முகாமையாளர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழிற்பாடுகள்)

**திருமதி. கே சீ தயானந்தன்**
சுன்னாகம் கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி. எம் டீ டி பெரேரா**
சந்தைப்படுத்தல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. டபிள்யூ ஈ சீ பெரேரா**
இடர் முகாமைப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஜே எல் பி மஞ்சுள**
இடர் முகாமைப் பிரிவு
பிரதான முகாமையாளர்

# கூட்டாண்மை ஆளுகை



## தலைவரின் செய்தி

2020 இல் தொடங்கிய கொவிட்-19 தொற்று நோய் எங்கள் வணிகம், எங்கள் பங்குதாரர் மற்றும் உலகம் முழுவதையும் மோசமாக பாதித்துள்ளது. இன்றும் ஒரு வருடமாக கொவிட்-19 ஆதிக்கம் செலுத்தியுள்ளது மற்றும் நாங்கள் அதன் தாக்கங்களுடன் இன்றும் போராடிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் பதிலளிப்பதை உறுதிப்படுத்தும் போது புதிய இயல்புக்கு திரும்புகிறோம். கொவிட் -19 தற்போது வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. நாம் நமது சிந்தனையை மாற்றிவிட்டு வணிகம் தொடர்ச்சியாக மற்றும் முன்கூட்டியே செயற்பட உறுதி செய்ய வேண்டும்.

தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுகை மற்றும் தலைமைத்துவத்திற்கான எங்கள் அணுகுமுறை இணக்கத்திற்கு அப்பாற்பட்டது. எங்கள் வியாபாரத்தில் ஆளுகை மற்றும் தலைமைக்கான எங்கள் அணுகுமுறை மேம்பட்ட பொறுப்புக்கூறல், வினைத்திறனான தலைமைத்துவம், வலுவான இடர் முகாமைத்துவம், தெளிவான செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் பரந்தளவிலான வெளிப்படைத்தன்மை என்பவற்றின் ஊடாக பதிலளிக்கக்கூடிய சிந்தனை மற்றும் பொறுப்பான நடத்தை ஆகியவற்றின் மூலம் பகிரப்பட்ட மதிப்பை உருவாக்குகின்றது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். நிலையான மதிப்பை அடைவதற்காக முன்னோக்கி செல்லும் வழியில், இப்போதும் எதிர்காலத்திலும் எங்கள் நலன்விரும்பிகளுடன் நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்வதற்கு வியாபார இயலுனராக ஆளுகையை விரும்பி ஏற்றுக்கொள்கின்றோம்.

எங்கள் நலன்விரும்பிகளின் சிறந்த நலனுக்காக செயல்பட உலகத்தரம் வாய்ந்த வங்கி நடைமுறைகள் மற்றும் வலுவான நிறுவனக் கட்டடமைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதை உறுதிப்படுத்த எங்கள் நிர்வாக கட்டமைப்பை நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கின்றோம் மற்றும் தொற்று நிலைமையின் தாக்கங்களிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவுகிறோம். சபை ஈடுபடுத்திய பிரதான நிறுவன நிர்வாக நடவடிக்கைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

## மதிப்பினை பாதுகாக்க வலுவான நிர்வாக முறைமையினை உறுதிப்படுத்தல்

நெருக்கடியான காலங்களில் சிறந்த நிர்வாகம் முக்கியத்துவம் பெறுகிறது. நெருக்கடிகள் ஒரு எதிர்வினை அணுகுமுறையினை உறுதிப்படுத்தலாம். ஒரு நிறுவனத்துக்கு நீண்டகால நிலைத்த தன்மை மிக முக்கியமானது எனினும் ஒரு தெளிவான வெளிப்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ற நிர்வாகக் கட்டமைப்பு, அதில் அடங்கும் கடுமையான இடர் மேலாண்மை, தகவல் அடிப்படையிலாக முடிவெடுத்தலுக்கு ஆதரவளிக்கும். எமது நிர்வாக கட்டமைப்பை செயற்படுத்துகின்ற நிர்வாகத்துக்கு இடையேயான சீரமைப்பு மற்றும் வங்கி தொடர்பான சபை மதிப்பு உருவாக்கம் நோக்கியதாகும். ஆக ஒரு சூழலில் சீரமைப்பு முக்கியமானது அதற்கு விரைவாக முடிவெடுக்க வேண்டும். எங்கள் நிர்வாகக் கட்டமைப்பு தன்னை நிலை நிறுத்தும் மற்றும் தொற்றுநோயின் பரவலின் போது ஆதரவளித்தது என நான் உறுதியாக நம்புகிறேன். நிர்வாக கட்டமைப்பு சுறுசுறுப்பான முடிவெடுத்தலை உறுதிப்படுத்தி வங்கி மற்றும் அதன் பங்குதாரர்களை உடனடித்தாக்கங்களிலிருந்து பாதுகாத்தது. எம்மை எதிர்காலத்தில் வழிநடத்திச் செல்லக்கூடிய தந்திரோபாய வழிமுறையினை நாம் கொண்டுள்ளோம்.

## சபை பன்முகப்படுத்தல் மற்றும் சுதந்திரத்தினை பலப்படுத்தல்

நாட்டின் மாபெரும் சேமிப்பு வங்கியாக, இலங்கையரிடையே சேமிப்பு பழக்கத்தினை உருவாக்குதலை நோக்காகக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கி அதன் சபை பன்முகப்படுத்தல் மற்றும் சுதந்திரத்தினை அதிகரிக்கும் பயணத்திலுள்ளது. நாம் திறன், அனுபவம் மற்றும் பால் தொடர்பில் பன்முகப்படுத்தப்பட்ட சபையினைக் கொண்டுள்ளோம். பொறுமதியினை அதிகரிப்பதற்காக தனித்துவமான திறன்கள் மற்றும் அனுபவமுள்ள பணிப்பாளர்களை எமது குழுக்களில் கொண்டுள்ளோம். ஒரு தலைவராக சபையின் உரையாடல் விவாதங்களில் ஈடுபாடு மற்றும் தரம் பற்றி நான் பெருமைகொள்கிறேன். எமது பங்குதாரர்கள் மீதான கூட்டு பொறுப்பினை பாராட்டி, பரஸ்பர ஆழமான மரியாதையினை அடிப்படையாக கொண்டு பிரச்சினைகள் தொடர்பில் வலுவான விவாதங்கள் நடாத்தப்படும்.

## அக்கறைதாரர்களின் ஈடுபாடு

பெறுமதி உருவாக்கத்தின் போது அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தினை சபை அறிந்துள்ளது. எமது நோக்கத்தில் மத்தியஸ்தம் வகிப்பது பங்குதாரர்களுக்கான வங்கியின் பொறுப்பினை அடைதல் மற்றும் கடமைகளை நிறைவேற்றல் என்பனவாகும். மேலும் அக்கறைதாரர்களின் ஈடுபாட்டை வங்கி எவ்வாறு கருத்தில் கொள்கிறது என்பது பக்கம் 67 - 75 வரை வழங்கப்பட்டுள்ளது.

## புதிய தந்திரோபாயம் தொடர்பில் சபையின் பார்வை

வங்கியின் புதிய தந்திரோபாயத்தினை உருவாக்குவதில் சபை ஆழமாக ஈடுபட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான பிரதான சபை கலந்துரையாடல்கள் பற்றிய மேலதிக விபரங்கள் பக்கம் 50 மற்றும் 66 இல் உள்ளது.

## கலாச்சரத்தில் முன்னிற்றல்

பெறுமதிசேர் மற்றும் ஆரோக்கியமான கலாச்சாரத்தினை உருவாக்க சபையானது இந்த வருடம் முன் நின்றுள்ளது. பொறுமதி நோக்கிய கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு சபையின் ஆய்வு, மேற்பார்வை மற்றும் பார்வை பற்றிய விபரங்கள் பக்கம் 189 இல் உள்ளது.

## சபை மற்றும் சபை உப குழுக்களின் மதிப்பீடு

குறித்த வருடத்தில் சபை வருடாந்த சபை மற்றும் சபை உப குழுக்களின் மதிப்பீட்டினை நடாத்தியது. இந்த செய்முறை பற்றிய மேலதிக விபரங்கள் பக்கம் 202 இல் காணப்படுகிறது.

### நிறுவன நிர்வாக நியமம்

2007ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கூட்டிணைந்த ஆளுகைப் பணிப்புரைக்கு அமைவான இணக்கப்பாடுகள் பக்கம் 422 முதல் 441 வரை வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிறுவன நிர்வாகம் தொடர்பான திருத்தப்பட்ட சிறப்பு நடைமுறைகள் பக்கம் 442 முதல் 446 வரை வழங்கப்பட்டுள்ளது.



**திருமதி கேசிலா ஜயவர்தன**

தலைவர்

24 மார்ச் 2022

கொழும்பு

உரு 23




## பெறுமதி உருவாக்கத்துக்கான எமது ஆளுகைத் தத்துவம்

தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுகை மற்றும் தலைமைத்துவத்திற்கான எங்கள் அணுகுமுறை இணக்கத்திற்கு அப்பாற்பட்டது. எங்கள் வியாபாரத்தில் ஆளுகை மற்றும் தலைமைக்கான எங்கள் அணுகுமுறை மேம்பட்ட பொறுப்புக்கூறல், வினைத்திறனான தலைமைத்துவம், வலுவான இடர் முகாமைத்துவம், தெளிவான செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் பரந்தளவிலான வெளிப்படைத்தன்மை என்பவற்றின் ஊடாக பதிலளிக்கக்கூடிய சிந்தனை மற்றும் பொறுப்பான நடத்தை ஆகியவற்றின் மூலம் பகிரப்பட்ட மதிப்பை உருவாக்குகின்றது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். நிலையான மதிப்பை அடைவதற்காக முன்னோக்கி செல்லும் வழியில், இப்போதும் எதிர்காலத்திலும் எங்கள் நலன்விரும்பிகளுடன் நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்வதற்கு வியாபார இயலுனராக ஆளுகையை விரும்பி ஏற்றுக்கொள்கின்றோம்.

எப்போதும் உரு மலர்சியுறுகின்றதும் சிக்கலானதுமான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலில், ஒழுங்குமுறை பரப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு முன்கூட்டியே செயல்படும் அதேவேளையில், சிறந்த ஆளுகை நடைமுறைகளைச் செயற்படுத்த வங்கிகள் அந்த மாற்றங்களை விரைவாக மாற்றியமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எங்கள் நலன்விரும்பிகளின் சிறந்த நலனுக்காக செயல்பட உலகத்தரம் வாய்ந்த வங்கி நடைமுறைகள் மற்றும் வலுவான நிறுவனக் கட்டடமைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதை உறுதிப்படுத்த எங்கள் நிர்வாக கட்டமைப்பை நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கின்றோம்.

நாங்கள் மிக உயர்ந்த ஆளுகையை மற்றும் அந்த பெறுமதிகளும் வெகுமதிகளும் முன்மாதிரியான நெறிமுறை நியமங்கள், தனிப்பட்ட மற்றும் கூட்டிணைந்த ஒருமைப்பாடு மற்றும் ஏனையவர்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு காலாச்சரரத்தை வளர்க்கும் முயற்சியை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடனுள்ளோம். பொறுப்பான கூட்டிணைந்த பிரஜையாக இருக்க வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தில், ஒழுங்குமுறைத் தேவைகள், தன்னார்வ ஒழுக்கநெறிகள் மற்றும் வங்கிக்கு பொருந்தக்கூடிய கூட்டிணைந்த ஆளுகையின் உள்ளக கூறுகளைப் பின்பற்றுகின்றோம்.

## ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் தொடர்பிலான எமது அணுகுமுறை

நன்கு கட்டமைக்கப்பட்ட ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் வங்கி நன்கு நிர்வகிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுவதை உறுதி செய்கின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரக் குழுவுடன் வங்கி நன்கு வரையறுக்கப்பட்ட நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த ஆளுகை நடைமுறை இப்போதும் எதிர்காலத்திலும் நமக்கும் எங்கள் அக்கறைதாரர் பெறுமதிகளை உருவாக்குவதற்கு இந்த உபாயமார்க்கத்திற்கு எதிராக வழங்குவதை உறுதிசெய்கின்றது. பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் பணிப்பாளர் சபைக் குழுக்கள், முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் நிர்வாகத்திற்கு வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் சபைக் குழுக்களின் உதவியுடன் பணிப்பாளர் குழு வங்கியின் உபாயமார்க்கத்தை அடைவதற்கு நெறிமுறை மற்றும் பயனுள்ள தலைமையை ஒப்புக்கொள்ளப்பட்ட இடர் நாட்டத்திற்குள் வங்கி நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்கின்றது. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வழிகாட்டப்பட்ட உபாயமார்க்கங்களை செயற்படுத்தும் பொறுப்பு முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவக் குழுக்களைச் சார்ந்ததாகும்.

எமது சபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஆளுகை செய்முறையானது அனைத்து வங்கித் தொழிற்பாடுகளிலும் உள்வாங்கப்பட்டுள்ளதோடு பொறுப்பான முடிவெடுத்தலுக்கான தெளிவான நோக்கு மற்றும் பொறுப்பான நடத்தைக்கு உதவியளிக்கிறது. நமது செயல்முறையினை பின்வருவனவற்றுக்காக அமுல்படுத்துகின்றோம்:

- சபையினால் அங்கிகரிக்கப்பட்ட இடர்நிலை மற்றும் இடர் மற்றும் வருவாய் நடுநிலைமைக்கு ஏற்ப தந்திரோபாய வாய்ப்புக்களில் ஈடுபடுதல்
- தவறான நடத்தையினால் ஏற்படக்கூடிய நிதி இழப்பு மற்றும் நன்மதிப்பிற்கான பாதிப்பினை தடுக்க வினைத்திறனான கட்டுப்பாடுகளை வழங்கல்
- எமது சந்தைகளில் சரியான நடத்தைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த சரியான வணிகத்தினை, சரியான முறையில் நடாத்துதல்
- எமது வங்கி, பங்குதாரர் மற்றும் சமூகத்திற்கு எதிர்கால நன்மையினை ஏற்படுத்த சிறந்த ஒரு பிரஜையாக வளங்களை மேம்படுத்தல், வினைத்திறனான வள ஒதுக்கீடு மற்றும் உறவுகளை பேணுதல்.

## நாம் எப்படி ஆளுகிறோம்

வெகுமதிகள், நியாயமான நடைமுறை, தனிப்பட்ட மற்றும் நிர்வாக நேர்மை மற்றும் ஏனையோரை மதித்தல் என்பவற்றை கொண்ட கலாச்சாரத்தினை மேம்படுத்தும் உயர்தர ஆளுகைக்கு முக்கியத்துவமளிக்கிறார். சிறந்த நிறுவன பிரஜையாக திகழ்வதற்கு ஒழுங்குவிதிசார் தேவைப்பாடு, வங்கிக்கான தன்னிச்சையான விதிகள் மற்றும் உள்ளக கூறுகளை நாம் பின்பற்றுகிறோம்.

### ஒழுங்கு விதிசார் தேவைப்பாடுகள்

- 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்.
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்.
- இலங்கை மத்திய வங்கியினால், மிகப் பிரத்தியேகமாக, 2007 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கு வழங்கப்படும் அனைத்து வழிகாட்டல்களும் (பக்கம் 422 முதல் 441)
- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டம்
- 1954 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலயங்கள் சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்
- இலங்கையின் பொதுத் துறை உரிமங்களின் கூட்டிணைந்த ஆளுகைக்கான சிறந்த நடைமுறை விதிகள்.

### வங்கிக்கான தன்னிச்சையான விதிகள்

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் கூட்டிணைந்த விதிகள் தொடர்பாக வழங்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு. (பக்கம் 442 முதல் 446)

### உள்ளக கூறுகள்

- பணிப்பாளர் சபை பட்டயம் மற்றும் சபை உபகுழுக்களின் பட்டயம்.
- ஊழியர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை.
- பணிப்பாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை.
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள்.

## தேசிய சேமிப்பு வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பு

உரு 24




நியமனப் பாய்வு
பொறுப்பு பாய்வு
நிர்வாகப் பாய்வு
கலந்துரையால்

| | |
|---|---|
| CMC | கூட்டிணைந்த முகாமைத்துவக் குழு |
| ALCO | சொத்துக்கள் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு |
| CC | கடன் குழு |
| IC | முதலீட்டுக் குழு |
| EC | உரிமைப்பங்குக் குழு |
| TNIC | கேள்விமனு மற்றும் புதிய முதலீட்டுக் குழு |
| PRC | செயலாற்றுகை மீளாய்வுக் குழு |
| BOSC | கிளை தொழிற்பாட்டு உந்துதல் குழு |
| IT SC | தகவல் தொழில்நுட்ப உந்துதல் குழு |
| MKTC | சந்தைப்படுத்தல் குழு |
| ORMC | தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு |
| PDC | பண்ட அபிவிருத்திக் குழு |
| HRC | மனித வளக் குழு |
| CPC Major | கூட்டிணைந்த பெறுகைக் குழு – பாரிய |
| CPC Minor | கூட்டிணைந்த பெறுகைக் குழு – சிறிய |
| EPC | நிறைவேற்றுப் பெறுகைக் குழு |
| CSRSC | கூட்டிணைந்த சமூக பொறுப்பு மற்றும் நிலைத்திருத்தல் குழு |
| SMC | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு |
| ISC | தகவல் பாதுகாப்புக் குழு |

சிறந்த நடைமுறைகளைத் தழுவிய ஒரு நன்கு நிர்வகிக்கப்படும் வங்கி நலன்விரும்பிகளின் நம்பிக்கையைத் தூண்டுகின்றது, மூலதனங்களின் ஆகுசெலவைக் குறைக்கின்றது, அனைத்தையும் உள்ளடக்கிய ஆளுகை கட்டமைப்பை உருவாக்குகின்றது மற்றும் நிலையானதாக இருக்க விரும்புகின்றது என்பதை பணிப்பாளர் சபை அறிந்திருக்கின்றது.

வங்கியை வழிநடத்துவதில் பணிப்பாளர் சபை எடுக்கும் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளால் வங்கியின் வடிவம் மற்றும் வாய்ப்புகள் மற்றும் நீண்டகால நம்பகத்தன்மை தீர்மானிக்கப்படும். பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கி வங்கி முழுமையாக உறுதியளித்திருப்பதை பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது. இது உபாயமார்க்க அமுல்படுத்தலுடன் முன்னோக்கிச் செல்கையில் பொறுப்பான கூட்டிணைந்த பிரஜையாக இருக்க உதவும். செயற்திட்டத்தின் ஊடாக வங்கியின் உபாயமார்க்கத்தின் அமுலாக்கத்தை பணிப்பாளர் சபை கண்காணிக்கின்றது, இது உத்திகளை செயற்படுத்துகின்றதுடன் உபாயமார்க்கத்தை பூர்த்திசெய்தலினுள் தொடர்புடைய சாதனைகள் மற்றும் இடர்களைத் தவிர்த்துவிடுகின்றது. நீண்டகால நிலைத்திருப்பு என்பது பணிப்பாளர் சபையின் பிரதான முன்னிருத்தலாக இருப்பதுடன் இது பொருளாதார, சமூக, ஆளுகை மற்றும் சூழல் பெறுபேறுகளை தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கின்றது.

வங்கியின் ஆளுகை கட்டமைப்பின் விரிதிறன் 2021 இல் வெளிப்படுத்தப்பட்டது. கொவிட் 19 பரவலின் போது சபை அதற்கான பதில்களை உறுதிப்படுத்தியது.

ஆளுகை கட்டமைப்பு பற்றிய விடயங்கள் 191 ஆம் பக்கத்தில் உரு 24 இல் பார்க்கவும்.

### பணிப்பாளர் சபை

தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது வங்கியினுடைய உச்சமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை கொண்ட பகுதியாக இருப்பதுடன், இணைக்கப்பட்ட இடர் ஏற்பு மட்டத்தின் அடிப்படையில் உபாயமார்க்க திசைமுகப்படுத்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அத்தகைய தீர்மானங்களை தந்திரோபாயங்களை அடைந்து கொள்வதற்கான கொள்கை சட்டத்தினை உருவாக்கல் ஆகியவற்றுக்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கு பாதகம் ஏற்படுத்தாத வகையில் வங்கியினுடைய நாளாந்த தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கும் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி கண்காணிப்பதற்குமான பொறுப்பினை பணிப்பாளர் சபை கூட்டு வணிக முகாமைத்துவதற்கு பகிர்ந்தளித்து இருக்கின்றது. இந்த ஏற்பாடுகள் யாவும் பரஸ்பர கௌரவம் மற்றும் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுகின்றன.

1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாக சபை அமைக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை பட்டயத்தில் பணிப்பாளர் சபைக்கான அதிகாரங்கள் மற்றும் அதன் வகிபாகங்களும் பொறுப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கியின் தொழிற்பாட்டு செயற்றிறன், நிதி செயற்றிறன் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முகாமைத்துவ முறைமை மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கு பொறுப்பானது மற்றும் முகாமைத்துவம் சபையிடம் வெளிப்படையானது. நிறுவன முகாமைத்துவம் மற்றும் சபைக்கு இடையிலான ஆழமான இணக்கப்பாடுகள் வங்கி முடிவெடுத்தல்களை உறுதிப்படுத்தகிறது மற்றும் சமநிலையான அதிகாரத்தினை உறுதிப்படுத்தும். இணக்கப்பாடுகள் பரஸ்பர மரியாதை மற்றும் நேர்மை அடிப்படையில் இடம்பெறும்.

**சபையின் வகிபாகங்கள், பொறுப்புகள், மற்றும் அதிகாரங்கள்**

உரு 25






வரைபடம் 57

பால் பல்வகைமை




பணிப்பாளர் சபை பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக்கான அதிகாரங்கள் மற்றும் அதன் வகிபாகங்களும் பொறுப்புகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

### சபைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

- பணிப்பாளர் சபை பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு வங்கி தொடர்பான எந்தவொரு விடயத்திலும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரமாக செயற்படுவது.
- வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைக் கையேடு மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதி தொடர்பான விடயங்களில் பொருத்தமான முடிவுகளுக்கு வருவது.
- அனைத்து மட்டங்களிலும் மிகவும் சாதகமான வணிக முயற்சிகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக வங்கியின் அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகிப்பதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.
- அறிக்கைகள், ஒரு குழுவை நியமித்தல் அல்லது பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் படி பொருத்தமான எந்தவொரு முறையினையும் அழைப்பதன் மூலம் வங்கியின் செயற்திறன், முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் விசாரித்தல்.

### பணிப்பாளர் சபையின் வகிபாகங்கள் மற்றும் சபையின் பொறுப்புகள்

- பணிப்பாளர் சபையிடமிருந்து பணிப்புரைகள் வழிகாட்டல்களை கோரும் அனைத்து மட்ட விடயங்களில் ஈடுபடுதல்.
- வங்கியின் முழுமையான தொழிற்பாடுகள் தொடர்பாக வழமையான கண்காணிப்பையும் மேற்பார்வையையும் பேணுதல்.
- எந்தவொரு பணிப்பாளர் சபை உப குழு, எந்தவொரு பணிப்பாளர், பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தும் வேறு எந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது.
- வங்கியினதும் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் உள்ளடங்களாக பிரதான முகாமைத்துவ நபர்களின் செயலாற்றுகைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- சபையின் மனித வள ஊதியங்கள் குழு மற்றும் சபையின் நியமனக் குழுவின் நியதிகளின் படி பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி நியமித்தல் மற்றும் பதவியமர்த்தல்கள் மற்றும் பதவியுயர்வுகள்.

### பணிப்பாளர் சபையின் அமைப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் நியதிகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபை உருவாக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை பட்டயம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை விபரிக்கின்றது. தற்போதைய பணிப்பாளர் சபையானது தமது நிபுணத்துவம் மற்றும் திறன்கள் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்கு முன் வைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமிக்க தொழில்சார் நபர்களான ஆறு பணிப்பாளர்களை கொண்டுள்ளது. நிதியாண்டின் நிறைவின் போது, தற்போதைய பணிப்பாளர் சபையின் ஆறு பணிப்பாளர்களில் ஐந்து பணிப்பாளர்கள் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்றவர்களாக இருக்கும் அதேவேளை ஒரு பணிப்பாளர் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்றவராக இருக்கின்றார். பணிப்பாளர் சபையின் தலைமைத்துவத்திற்கும் அதன் செயல்திறனை உறுதி செய்வதற்கும் தலைவருக்கு ஒட்டுமொத்த பொறுப்பு உள்ளது. பணிப்பாளர் சபை வங்கி இடரை திறம்பட நிர்வகிக்கின்றது, நிதியியல் செயலாற்றுகை மற்றும் அறிக்கையிடலை கண்காணிக்கின்றது மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் அவற்றின் உரிய இடங்களில் உள்ளதென்பதை உறுதி செய்கின்றது.

### திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

ஒரு நிதி இடைத்தரகராக, அனைத்து நலன்விரும்பிகளின் நலனுக்காக பெறுமதி சேர்ப்பினை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு பரந்தளவிலான திறன்கள் அவசியமாகும். விரைவாக மாறிவரும் சூழலுக்கும் வங்கியின் நீண்டகால உபாயமார்க்க இடப்பெயர்வுக்கும் பதிலளிக்கும் விதமாக தேவையான திறன்களின் தொகுப்பை பணிப்பாளர் சபை தீர்மானிக்கின்றது. சரியான திறன்களும் நிபுணத்துவமும் கலந்திருப்பது ஒரு ஐக்கிய சபையாக ஒரு ஐக்கிய சபை வங்கியின் மூலோபாயத்தை முன்னோக்கி செல்லும் வழியிலும், மதிப்பு உருவாக்கும் செயல்பாட்டிலும் வழிநடத்தவும் இயங்கவும் நன்கு பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்கின்றது. எங்கள் பணிப்பாளர் சபை குறிப்பாக வங்கி, நிதி, பொருளாதாரம், ஆராய்ச்சி, திட்டமிடல், மூலோபாய மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு, மனித நேயம், மேலாண்மை, நிர்வாகம் மற்றும் சர்வதேச உறவுகள் போன்ற துறைகளில் திறன்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் தகைமை மற்றும் திறன்கள், ஏனைய முக்கியமான அங்கத்துவங்கள் மற்றும் பதவிகள் பக்கம் 180 முதல் 183 வரை வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 25

| | திறன் சேர்க்கை மற்றும் அனுபவம் | தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம். |
|---|---|---|
| தலைமைத்துவம் ○○○○○○● | தலைவர், பணிப்பாளர், பிரதான நிர்வாக அதிகாரி அல்லது அதற்கு சமனான தரங்களை பெரிய மற்றும் சிக்கலான நிறுவனங்களில் வகித்துள்ளமை. | தந்திரோபாயங்களை தீட்டுதல் மற்றும் பிரதான முகாமைத்துவ அதிகாரிகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்தல். |
| நிதிச்சேவைகள் ○○○○○●● | தனிநபர் மற்றும் நிறுவன வங்கி சேவைகள் உள்ளடங்கலான நிதிச் சேவைகள் மற்றும் அதற்கு நெருக்கமான துறை மற்றும் சட்டங்கள் தொடர்பில் அனுபவம். | துறைசார் தொழிற்பாடுகள், வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் பற்றி விளங்கிங்கொள்தல். |
| நிதிசார் அறிவு ○○○●●●● | நிதிக் கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் மற்றும் மூலதன முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் தொடர்பிலான தேர்ச்சி. | சிக்கலான நிதி மற்றும் மூலதன முன்னெடுப்புகளை மதிப்பீடு செய்தல். |
| நிர்வாக திட்டமிடல் மற்றும் தந்திரோபாயம் ○●●●●●● | தந்திரோபாய திட்டமிடல் மற்றும் வணிக இலக்குகளை முன்னெடுத்தல், உருவாக்கல் அல்லது அமுல்படுத்தல் சார் அனுபவம். | நிறுவன தந்திரோபாயம் மற்றும் திட்டமிடல் முறைமையினை உருவாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல். |
| ஆளுகை ●●●●●●● | இலங்கையில் பட்டியலிடப்பட்ட கம்பனி அல்லது அரச வங்கியில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளாராக மற்றும் அல்லது நிறுவன ஆளுகையினை நிர்ணயிக்கும் சட்ட முறைமை பற்றிய அனுபவம். | பணிப்பாளரின் பங்கினை வினைத்திறனாக செயற்படுத்த சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பினை விளங்கிக்கொள்ளல். |
| இடர் முகாமைத்துவம் ○○●●● | முறைசார், தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் நிதி மற்றும் நிதி சாரா இடர்களை அடையாளம் காணுதல், ஆராய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். | இடர் தாங்கி கொள்ளும் தன்மை, இடர் தன்மையினை ஆராய்தல் மற்றும் வளர்ந்து வரும் முன்னேற்றங்களை தழுவுதல். |
| டிஜிடெல் மற்றும் தொழில்நுட்பம் ● | தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் அனுபவம் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம் | வங்கியின் டிஜிடெல் தந்திரோபாயத்திற்கு உதவுதல் |
| மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் வெளிப்பாடு ○○○●●●● | வாடிக்கையாளரின் மாற்றமடையும் தேவைகளை அவர்களின் நிதி நல்வாழ்வு மற்றும் வாடிக்கையாளர் அனுபவ மேம்படுத்தலை விளங்கிக் கொள்ளுதல். | வாடிக்கையாளர் தேவைகளை அடைவதை ஆக்கபூர்வமான சவால்கள் மூலமாக உறுதிப்படுத்தல். |
| அக்கறைதாரர் ஈடுபாடு ○●●●●●● | அரசாங்கம், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் சமூகத்துடன் நம்பிக்கையான மற்றும் ஒருங்கிணைந்த உறவுமுறையினை உருவாக்கல் மற்றும் நடாத்தும் அனுபவம். | ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் வினைத்திறனான ஈடுபாட்டு திட்டமிருப்பதை உறுதிப்படுத்தல் |
| மக்கள் மற்றும் கலாச்சாரம் ○●●●●●● | நிறுவன கலாச்சாரம், எதிர்கால திட்டமிடல், மற்றும் சம்பளம் மற்றும் வெகுமதி கட்டமைப்பு பற்றிய விளக்கம் | வங்கின் கலாச்சாரத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் நடைமுறைகளுக்கான நியமத்தினை உறுதிப்படுத்தல் |
| சூழல் மற்றும் சமூக நிலையான தன்மை ●○○○○ | சூழல், சமூக மற்றும் நிலைத்திருத்தல் தொடர்பிலான இடம்பெறக்கூடிய இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய விளக்கம் | நிலைத்திருக்கும் நடைமுறைகள், கொள்கைகள் மற்றும் சூழல் மற்றும் சமூக வெளிப்பாடுகளுக்கு உதவும் முடிவுகளில் தாக்கம் செலுத்துதல் |

○ அதிக திறன் அறிவு மற்றும் அனுபவம்    ● நடைமுறையான/நேரடியான அனுபவம்

### பணிப்பாளர் சபையின் செயன்முறை

பணிப்பாளர் சபையானது தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பரிந்துரைகளின் பிரகாரம், இணங்கப்பட்ட கூட்ட அட்டவணையின் அடிப்படையில் குறைந்தபட்சம் ஆறு வாரங்களுக்கு ஒரு முறை கூடுகின்றது. தேவைகளின் அடிப்படையில் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படும். பணிப்பாளர்கள் ஒழுங்காக கூட்டங்களுக்கு சமூகமளிப்பதுடன் கலந்துரையாடல்களில் உத்வேகமாக பங்கு பெறுவர். கூட்டங்களுக்கான சமூகமளித்தல் தொடர்பான விபரங்கள் பக்கம் 195 இல் வழங்கப்பட்டுள்ளன. பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் உடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில் பணிப்பாளர் சபை செயலாளரது உதவியுடன் கூட்ட நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பொறுப்பு தலைவரைச் சாரும். கூட்டத்துக்கு ஒரு வாரம் முன்பாக பணிப்பாளர் சபையின் செயலாளரினால் பொருத்தமான பணிப்பாளர் சபை ஆவணங்களுடன் கூட்ட நிகழ்ச்சி நிரலானது பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த செயன்முறையானது பணிப்பாளர் சபை உரிய காலத்தில் கூட்டத்திற்கு தயாராவதுடன் கலந்துரையாடல்கள் மற்றும் முறை சாா்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதைத் தயார்படுத்த உதவும். வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் மிகக் குறுகிய அறிவிப்புடன் அல்லது கூட்டங்கள் இடம்பெறும் போது அவசரமான பணிப்பாளர் சபை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும். போதுமான அளவு விபரமான கூட்ட அறிக்கைகள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பான விபரங்கள் பணிப்பாளர்கள் அணுகக் கூடிய விதத்தில் பேணப்படுகின்றன. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்துரையாடல் மற்றும் முடிவெடுப்பதற்கான நிகழ்ச்சி நிரலின் சில ஆவணங்களைச் சேர்க்குமாறு கோரலாம்.

### அக்கறை முரண்பாடுகள்

பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் வங்கி மீதான மிகச்சிறந்த அக்கறையுடன் உச்ச நம்பிக்கையில் நிதிசார் அல்லது வேறு எந்த வகையிலுமான தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் செயற்படுவதற்கான அர்பணிப்பினைக் கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட வியாபாரம் தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கக்கூடிய முரண்பாடுகள் அல்லது உத்தேச முரண்பாடுகள் குறித்து பணிப்பாளர்கள் உடனடியாக பணிப்பாளர் சபைக்கு தெரிவிக்க வேண்டும். எந்தவொரு விடயத்திலும் அவர்கள் ஆர்வமுள்ள முரண்பாடுகளைக் கொண்ட முடிவுகளின் விவாதங்களிலிருந்து அவர்களை மன்னிக்க இயக்குநர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி நிரலில் ஒரு வி'யத்தில் முரண்பாடு ஏதேனும் உள்ளதா என்பதை அறிவிக்க ஒரு நிலையான நிகழ்ச்சி நிரல் உருப்படி சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக குறிப்பெடுக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு வசதிகளும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்துடன் இணங்குகின்றன.

ஆண்டுதோறும் தங்கள் விருப்பத்தை அறிவிக்கின்றார்கள் மற்றும் அக்கறை முரண்பாடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த தேவையான நடைமுறைகள் உள்ளன.

2021ஆம் ஆண்டில், நிதி அறிக்கைகளின் பக்கம் 368, குறிப்பு 49.5.2 இல் வெளிப்பட்டுள்ளதைத் தவிர வங்கி அல்லது அதன் துணை நிறுவனங்களினால் எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது ஏற்பாட்டிலும் எந்த பணிப்பாளருக்கும் குறிப்பிடத்தக்க அக்கறை இல்லை.

### பணிப்பாளர் சபை கூட்டங்கள்

முடிவடைந்த ஆண்டின் போது 27 திட்டமிடப்பட்ட கூட்டங்கள் மற்றும் குறுகிய அழைப்புடன் அவசர விடயங்களுக்காக 2 திடீர் கூட்டங்களையும் கூட்டி இருந்தது. இவற்றுக்கான வருகை தகவல்கள் பக்கம் 195 மற்றும் 196 இல் தரப்பட்டுள்ளது. 1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாக தலைவர் தேவை எக்கருதும் அனைத்து சந்தர்ப்பங்களிலும், குறைந்த பட்சம் ஆறு வாரங்களுக்கு ஒருமுறையேனும் சபை சந்திக்க வேண்டும். தொற்று பரம்பல் மற்றும் மாறுபடும் வணிக முக்கியத்துவங்கள் போன்ற மாறும் நிலைமைகளுக்கு ஏற்றதாக நெகிழ்ச்சியான மற்றும் அமுல்படுத்தக்கூடிய பதில்களை சபை இனம்காண வேண்டும் மற்றும் அவை முக்கிய பிரச்சினைகளை பார்வையிடுதல் மற்றும் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுதலை உறுதிப்படுத்த வேண்டும்.

உத்திகளுக்கு எதிராக வழங்குவதற்கான ஆளுகை செயல்பாட்டில், வங்கியின் மூன்று ஆண்டு மூலோபாய வியாபாரத் திட்டத்தை வகுப்பதில் கூட்டிணைந்த நிர்வாகத்திற்கு தெளிவான வழிமுறைகளை வழங்குவதில் பணிப்பாளர் சபை தங்கள் நேரத்தை அர்ப்பணித்ததன் விளைவாக பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்து அதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த ஆண்டில் பணிப்பாளர் சபை மூலதன நிர்வாகத்தில் தொடர்ந்து நேரத்தை ஒதுக்கியது. உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டை மதிப்பாய்வு செய்ததுடன் மேலும் கவனம் தேவைப்படும் முழுமையாக சொந்தமான துணை நிறுவனத்தை கையகப்படுத்துதல், இலங்கை சேமிப்பு வங்கி, இடர் முகாமைத்துவம், இணக்கம் மற்றும் கூட்டிணைந்த ஆளுகை போன்ற விடயங்களில் விவாதங்களை நடாத்தியது.

| பணிப்பாளரின் பெயர் | நியமன திகதி | வயது | பணிப்பாளர் தகைமை | பங்குபற்றிய/பங்குபெற தகுதியுடைய | | | | | சபை காலம் (வருடங்-களில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சபை | ச.க.கு | ச.ம.வ. ஊ.கு | ச.நி.கு | ச.ஒ.இ. மு.கு | |
| திருமதி கேசிலா ஜயவர்தன - தலைவர் | 2 ஜனவரி 2020 | 62 | NED/NID | 29/29 | | 9/9 | | | 1+ |
| திரு எரங்க ஐயவா்தன - சிஷேட பணிப்பாளர் | 23 ஜனவரி 2020 | 43 | NED/ID | 24/29 | | 7/8 | 2/2 | 1/1 | 1+ |
| திரு யூ ஜீ ஆர் ஆரியரத்ன - பதவி வழிப்பணிப்பாளர் | 31 ஆகஸ்ட் 2018 | 56 | NED/NID | 23/29 | | 9/9 | 2/2 | 3/4 | 3+ |

| பணிப்பாளரின் பெயர் | நியமன திகதி | வயது | பணிப்பாளர் தகைமை | பங்குபற்றிய/பங்குபெற தகுதியுடைய | | | | | சபை காலம் (வருடங்களில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சபை | ச.க.கு | ச.ம.வ. ஊ.கு | ச.நி.கு | ச.ஒ.இ. மு.கு | |
| கலாநிதி எம் கே சி சேனநாயக்க - பதவி வழிப்பணிப்பாளர் | 11 ஜனவரி 2020 | 49 | NED/NID | 22/29 | 12/13 | | 1/1 | 5/5 | 1+ |
| திருமதி மனோஹரி அபேயசேகர - பணிப்பாளர் | 14 ஜனவரி 2020 | 46 | NED/NID | 28/29 | 13/13 | | 0/0 | | 1+ |
| திரு எம் ரி ஜே பெரேரா - பணிப்பாளர் | 11 ஏப்ரல் 2020 | 65 | NED/NID | 29/29 | | | | 5/5 | 1+ |
| திரு. எச் கே டீ லக்ஷ்மன் காமினி– பணிப்பாளர் | 07 ஜனவரி 2021 | 67 | NED/NID | 29/29 | 13/13 | 1/1 | 1/1 | | <1 |

NED- நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் NID- சுயாதீனமற்ற பணிப்பாளர் ID- சுயாதீன பணிப்பாளர்

### சபையின் உப குழுக்கள்

எந்தவொரு குழு அல்லது குழுக்களுக்கும் அதன் அதிகாரங்கள், தனிவிருப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களை ஒப்படைக்க பட்டயத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்படுகின்றது. ஏனெனில் பிரதிநிதிகளின் சுயாதீன தீர்ப்பை ஊக்குவிப்பதை உறுதிசெய்வது பொருத்தமானது என்று கருதுவதுடன், அதிகார சமநிலை மற்றும் கடமைகளை திறம்பட நிறைவேற்ற உதவுகின்றது. முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் அந்தந்த அதிகாரிகள் தொடர்பான விடயங்களை மேற்பார்வையிடுவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும், இருப்பினும் பணிப்பாளர் சபை தொடர்ந்தும் குழுக்களின் தீர்மானங்களுக்கான பொறுப்பை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைக்கேற்ப சபை கணக்காய்வுக் குழு (BAC), சபை மனித வளம் மற்றும் ஊதியக் குழு (BHRRC), சபை நியமனக் குழு (BNC), மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), எனும் கட்டாயக் குழுக்கள் நான்கும் நிறுவப்பட்டன. கூட்டங்களின் குறிப்புகள் தகவல், மீளாய்வு, கருத்து மற்றும் தேவையான அனுமதிக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள், அமைப்பு, வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள், அங்கத்தவர்களின் வருகை, 2021 ஆம் ஆண்டில் கொண்டு நடாத்தப்பட்ட நடவடிக்கைகள், 2022 இற்கான கண்ணோட்டம் என்பன அந்தந்த குழுக்களின் அறிக்கைகள் அமைந்துள்ள 203 இருந்து 211 வரையுள்ள பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

### முகாமைத்துவக் குழுக்கள்

சபைக் குழுக்களுக்கு மேலதிகமாக, வங்கி முகாமைத்துவக் குழுக்களை நிறுவியுள்ளது. இது பணிப்பாளர் சபையின் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட உப குழுக்களின் பட்டயத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிற்பாட்டு பரப்பெல்லைகளுக்கு இணக்கமாக பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் முகாமைத்துவக் குழுக்களின் தலைவராக செயற்படுவார். இந்தக் குழுக்கள் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கியமான விடயங்களில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்:

| முகாமைத்துவக் குழு | நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள் | கட்டமைப்பு |
|---|---|---|
| கூட்டாண்மை முகாமைத்துவ குழு (CMC) | கொள்கை மற்றும் உபாயமார்க்க உருவாக்கம், கொள்கை மற்றும் உபாயமார்க்க உருவாக்கங்களை தொழில்பாட்டு மட்டங்களில் நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்தல். | பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் தொழிற்படும் அனைத்து அதிகாரிகளும் |
| சொத்து மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு (ALCO) | திரும்பலை உச்சப்படுத்தும் வகையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட இடர் ஏற்பு வரம்புக்கு உட்பட்டு சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்களை பேணுதல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| கடன் குழு (CC) | வங்கியினுடைய கடன் கொள்கையினை கால ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தல், கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வங்கியினுடைய இடர் ஏற்பு மட்டத்திற்கு உட்பட்ட வகையில் திரும்பல்களை உச்சப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு ஆரோக்கியமான சேர்க்கையைப் பேணுதல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |

| முகாமைத்துவக் குழு | நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள் | கட்டமைப்பு |
|---|---|---|
| முதலீட்டுக் குழு (IC) | வங்கியினுடைய முதலீட்டு கொள்கையினை கால ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தல் மற்றும் வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர் ஏற்பு மட்டத்தில் வங்கியின் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| பெறுபேற்று மீளாய்வுக் குழு (PRC) | நிதிசார் பெறுபேறு, தொடர்ந்து செல்லும், கைவிடப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறுபேற்றுக்கு வசதியளிக்கும் ஏதேனும் துணைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றின் விருத்திநிலை முதலியவற்றை மீளாய்வு செய்தல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள், அனைத்துப் பிரிவுகளினதும் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்கள், அனைத்து உதவிப் பொது முகாமையாளர்களும், இணைக்கப்பட்டு அதிகாரிகள் மற்றும் குழுக்களால் நியமிக்கப்பட்ட பிற உறுப்பினர்கள் |
| கிளைத் தொழிற்பாடுகள் உந்துதல் குழு (BOSC) | பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிசார் அதிகாரங்களுடன் கிளைகளின் தொழிற்பாடுகளை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சட்டம் மற்றும் வளாகங்களின் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் (ITSC) | வங்கியின் வியாபார உபாயமார்க்கங்களுடன் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கங்கள் சமாந்தரமாக செல்கின்றது என்பதை உறுதிப்படுத்தல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி, சட்டம், மனித வள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், இணக்கம் மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| சந்தைப்படுத்தல் குழு (MKTC) | பணிப்பாளர் சபை மற்றும் கூட்டு வணிக முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு சந்தைப்படுத்தல் ஆலோசனை நிபுணத்துவம் மற்றும் உதவிகளை வழங்குதல் வங்கியினுடைய சந்தைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான படிவங்களில் முதல் ஆய்வு மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் தொழிற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு (ORMC) | தொழிற்பாட்டு இடர்முகாமைத்துவ நுட்பங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளக கட்டுப்பாடுகள் ஊடாக நாணயத் தன்மையினை பாதுகாத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளல், வங்கியின் இடர்களை முகாமை செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழிற்பாடுகள், மனித வள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், துணைச் சேவைகள், ஆதன முகாமை, சட்டம், இணக்கம் மற்றும் இடர் முகாமைத்துவ இணக்கப்பாடு மற்றும் தகவல் பாதுகாப்பு பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| உற்பத்தி விருத்திக் குழு (PDC) | அதிகரித்துச் செல்லும் போட்டிக்கு முகம் கொடுக்கும் வகையில் புத்தாக்கம் மிக்க உற்பத்திகளை விருத்தி செய்வதன் மூலம் நீண்டகால பெறுமதி சேர்த்தலை மேற்பார்வை செய்தல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழிற்பாடுகள், சர்வதேச தொழிற்பாடுகள், தகவல் பாதுகாப்பு, சில்லறைக் கடன், சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| மனித வளக் குழு (HRC) | வங்கியின் உபாயமார்க்க நோக்கங்களுடன் இணக்கமாக மனித வளத்தினை விருத்தி செய்தல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், மனித வள அபிவிருத்தி, கடன் மற்றும் சட்டப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள் |
| கூட்டிணைந்த பெறுகைக் குழு (பாரியவை) | வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், தொழிற்பாடுகள் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள், நிதி அமைச்சின் பிரதிநிதி |
| கூட்டிணைந்த பெறுகைக் குழு (சிறியவை) | வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், தொழிற்பாடுகள் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள், நிதி அமைச்சின் பிரதிநிதி |
| நிறைவேற்றுத்தர பெறுகைக் குழு (EPC) | வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல் | சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), பிரதான முகாமையாளர் (நிதி) |

| முகாமைத்துவக் குழு | நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள் | கட்டமைப்பு |
|---|---|---|
| கூட்டிணைந்த சமூக பொறுப்பு மற்றும் நிலைத்திருத்தல் குழு (CSRSC) | நிலையான செயற்திறன் மற்றும் மேம்பாட்டுடன் இணைக்கப்பட்ட கூட்டிணைந்த நோக்கங்களால் வரையறுக்கப்பட்டுள்ளபடி, தினசரி வியாபார நடவடிக்கைகளில் நெறிமுறை, சமூக மற்றும் சுற்றுச் சூழல் பொறுப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் முக்கிய நலன்விரும்பிகளுக்கான ஆதரவு மதிப்பு உருவாக்கம் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள், அனைத்து ஆலோசனையாளர்கள், பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் அனைத்து உதவிப் பொது முகாமையாளர்கள். |
| சிரேஷ்ட முகாமைத்துவ குழு (SMC) | மனிதவளம் தொடர்பான விடயங்களை ஆராய்தல் | பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி), மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு). |
| தகவல் பாதுகாப்புக் குழு (ISC) | வங்கியின் தகவல் பாதுகாப்பினை முகாமை செய்தல் மற்றும் தேவையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தல் மற்றும் வங்கியின் தகவல் பாதுகாப்பினை அதிகரிக்க மற்றும் இணக்கப்பாடுகளை முன்னேற்ற குறித்த கட்டுப்பாடுகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்தல் | பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்), சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு அலுவலகர் (CISO), தகவல் தொழில்நுட்பம், மனித வளம் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ அதிகாரிகள் |

### மீள் தேர்வு மற்றும் இராஜினாமா

அரசுக்கு சொந்தமாகிய வங்கியாக, தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்களை நியமித்தல் 1971 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, அரசுக்கு பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏழு பணிப்பாளர்களில் ஒருவர் திறைசேரி செயலாளராகவோ அல்லது அவரது பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், மற்றவர் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி தபால் அதிபதி நாயகமாகவோ அல்லது அவரது பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அந்த நியமனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் அளிக்கின்றது. 2007 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கூட்டிணைந்த ஆளுகைப் பணிப்பரைக்கு அமைவாக ஒரு பணிப்பாளரின் சேவைக் காலம் ஒன்பது ஆண்டுகளுக்கு வரையறுக்கப்படுகின்றது. பணிப்பாளர்களின் இராஜினாமாக்கள் மற்றும் மீள்தேர்தல் இலங்கை மத்திய வங்கிக்கு உரிய முறையில் அறிவிக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் பிற்பட்ட அதன் திருத்தங்களின்படி செய்யப்படுகின்றது. பணிப்பாளர் பற்றிய விபரங்கள் மற்றும் மாற்றங்கள் பக்கம் 195 இல் தரப்பட்டுள்ளது

### பணிப்பாளர் சபை புகுமுகம் மற்றும் பயிற்சி

புதிய பணிப்பாளர்களை பணிப்பாளர் சபையின் முழுமையான விவாதங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு இயலுமானதாக்க, வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகள் தொடர்பாக அவர்கள் போதியளவு அறிவூட்டப்பட்டுள்ளார்கள் மற்றும் அவசியமான அறிவினைக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சரியான முறையில் முன்னிறுத்தப்பட்ட புகுமுகம் மற்றும் பயிற்சியின் அவசியத்தை வங்கி அடையாளம் கண்டுள்ளது. அத்துடன் இது பணிப்பாளர்களின் நம்பகமான மற்றும் சட்டரீதியான கடமைகளை மேலும் கோடிட்டுக் காட்டுகின்றதுடன் சட்ட மற்றும் நிர்வாகம் தொடர்பான அனைத்துக் கடமைகளுக்கும் வழிகாட்டுதலை வழங்குகின்றது. புதிய பணிப்பாளர்களுக்கு பயிற்சியுடன் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் தீர்வுத் தொகுதி மற்றும் கையேட்டு அணுகல், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள், பணிப்பாளர் சபையின் பட்டயம், பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் பட்டயங்கள், ஏனைய பொருத்தமான சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நியமனங்கள் தொடர்பான ஆவணங்கள் வழங்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் பொருளாதாரம், ஒழுங்குமுறை மற்றும் தொழில்துறை போக்குகளில் பணிப்பாளர்களை நிலையொத்து வைத்திருப்பதற்கு உதவும் பணிப்பாளர் சபை செயலாளரிடமிருந்து தங்கள் காலவரையறை முழுவதும் தகவல் புதுப்பிப்புகள் மற்றும் பயிற்சியினைப் பெறுகின்றார்கள். பணிப்பாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் அல்லது ஏதேனும் ஏனைய அதிகாரசபைகளினால் ஒழுங்குபடுத்தப்படும் பயிற்சி.'. அறிந்துகொள்ளல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள்.

### தகவல்களை அணுகுதல்

பணிப்பாளர்கள் அனைத்து தகவல்களுக்கும் கட்டுப்பாடற்ற அணுகலைக் கொண்டுள்ளதுடன், அவர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தேவையான ஆதாரங்களும் உள்ளன. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் ஆண்டின் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையின் திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் செலவில் வெளிநிபுணர் ஆலோசனைக்கான அணுகல் பணிப்பாளர்களுக்கு கிடைக்கின்றது. பணிப்பாளர்களுக்கு அவசியமான விவாதங்களை மேற்கொள்வதற்கு போதிய நேரம் கிடைப்பதற்காக முறைமையின் ஊடாக பணிப்பாளர் சபைப் பத்திரங்களை

சுற்றுநிருபம் செய்வதற்கு அவர்களுக்கு இலத்திரனியல் பணிப்பாளர் சபைப் பத்திர முறைமை கிடைக்கப் பெறுகின்றது.

### 2021 இல் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள்

கொவிட்-19 இன் சவால்கள் ஆளுகை கட்டமைப்பின் முக்கியத்துத்தினை கோடிட்டு காட்டுகிறது மற்றும் பெறுமதியினை உருவாக்க சபை எவ்வாறு கடமைகள் மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றியது மற்றும் தந்ரோபாய முறைமையினையும் விளக்குகிறது. வெளிப்படையான தன்மை, சிறந்த செயற்றிறன், வினைத்திறனான கட்டுப்பாடுகள், நேர்மையான மற்றும் சிறந்த வங்கி தொழிற்பாடுகளுக்கிடையிலான கலாச்சாரம் என்பன ஊடாக ஆளுகை கட்டமைப்பின் உயர்தரத்தினை அடைதலினை சபை உறுதிப்படுத்தல். வணிகத்தின் வழமையான ஆளுகை தேவைப்பாடுகளை முகாமை செய்வதோடு, தொற்றின் போது ஒருங்கிணைந்த விரிவான மற்றும் ஏற்புடைய பதில்களை வழங்க கூடிய நடைமுறையான அணுகுமுறையினை கொண்டிருந்தது. வங்கியின் மீள் முதலீட்டுக்கான வாய்ப்புகள், மறுஅளவிடுதல் மற்றும் மாற்றங்களுடனான இடர் முகாமைத்துவம் மேற்பார்வை செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டுக்கான சபையின் பிரதான நோக்குகள் மற்றும் அக்கறைதாரர் குழுக்கள், குறுங்கால மற்றும் இடைக்கால நோக்கங்கள் மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| 2021 இன் சபை நடவடிக்கைகள் | பெறுபேறு | குறுகிய மற்றும் இடைக்கால தந்திரோபாய இலக்குகள் | அக்கறைதாரர் | 2022 ஆளுகை இலக்குகள் |
|---|---|---|---|---|
| **நிறுவக தந்திரோபாயம், செயற்பாடு மற்றும் அறிக்கையிடல்** | | | | |
| • வங்கியின் தந்திரோபாயங்களை தீர்மானிக்க ஆழமான கலந்தரையாடல்கள் மற்றும் கொவிட் 19 இன் தாக்கங்கள் மற்றும் வங்கி தொழிற்படும் சூழலில் அதன் மூலதனம் மற்றும் திரவத்தன்மையினை பாதுகாத்து மற்றும் வாடிக்கையாளருக்கு உதவும் வகையில் 2022-2024 க்கான தந்திரோபாய வணிக திட்டத்தினை அங்கிரித்தமை. இந்த தோற்றுநிலைமை சில காலத்திற்கு தொடரும் என்பதால் தந்திரோபாயம் மற்றும் திட்டங்கள் மற்றும் அதன் அமுல்படுத்த மேற்பார்வை செய்யும். மேலதிக விபரங்களுக்கு பக்கம் 50 முதல் 66 வரை வாசிக்கவும்.<br>• திருத்தப்பட்ட 2021 மற்றும் 2022 பாதீட்டினை அங்கிரித்தமை<br>• அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால நிதி அறிக்கைகள மற்றும் வருடாந்த நிதி அறிக்கைகள்<br>• தொற்றுக்கு பிந்திய பணியின் வழிகளை ஆழமாக ஆராய்தல்<br>• பொருளாதாரம் மற்றும் நிதி தாக்கங்கள் பற்றி ஆழமாக ஆராய்தல் | • சிறப்பாக முகாமை செய்யப்படும் வங்கி நோக்கத்திற்காக மற்றும் பெறுமதி உருவாக்கம் மற்றும் வழங்கலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.<br>• வங்கியின் இலக்கு மற்றும் மதிப்புகள் தந்திரோபாயத்தினால் அடையப்பட்டமை<br>• மதிப்பு உருவாக்-கத்திற்கு அக்கறை-தாரர்களின் நம்பிக்கை பங்களிப்பினை அளிக்கிறது. |  |  | • தொழிற்பாட்டு சூழலில் அங்கீகரிக்கப்பட்ட 2022-2024 க்கான தந்ரோபாய வணிக திட்டத்தின் அமுலாக்கத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் பேரின பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளை கருத்தில் கொள்ளல்.<br>• 2023 -2025 க்கான தந்ரோபாய வணிக திட்டத்தினை அங்கீகரித்தல்<br>• திருத்தப்பட்ட 2022 மற்றும் 2023 பாதீட்டினை அங்கீகரித்தல் |
| **தொழில்நுட்பம்** | | | | |
| தொழில்நுட்ப மாற்றம் மற்றும் டிஜிடெல் பயணத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் அந்த நோக்கத்துடன் வங்கியில் நடைபெறுகின்ற சேவைகளை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்தல், ஒரு உகந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நிலையான தன்மைளை உணர்த்தல். | • தொழில்நுட்பம் நிறைந்த சூழலில் சுறுசுறுப்பாக இருப்பது |  |  | மேற்பார்வையிடவும் தொழில்நுட்பம் மற்றும் டிஜிடெல் பயணம் வங்கி உறுதி செய்ய வேண்டும். நிலையான விநியோகம் சேவைகள் ஒரு பாதுகாப்பான மற்றும் நிலையான வாடிக்கையாளர் அனுபவம் (வித்தியாசமான வாடிக்கையாளர் பிரிவுகளைஇனம்காணல்) மற்றும் நிலையான மதிப்பு உருவாக்கம். |

| 2021 இன் சபை நடவடிக்கைகள் | பெறுபேறு | குறுகிய மற்றும் இடைக்கால தந்திரோபாய இலக்குகள் | அக்கறைதாரர் | 2022 ஆளுகை இலக்குகள் |
|---|---|---|---|---|
| **வாடிக்கையாளர்கள்** | | | | |
| • தொற்றுநோய்காலங்களின் போது வாடிக்கையாளர்கள் ஆதரவு, தடையற்ற சேவைகள் மற்றும் விநியோக சேவைகள் வழங்கப்பட்டது<br>• தகவல் தொடர்பு பற்றி வாடிக்கையாளரிடம் வங்கியின் அணுகுமுறை பற்றி தொடர்பாடப்பட்டது. | • தந்திரோபாய இலக்குகளை அடைய வாடிக்கையாளர் மையமாக இருத்தல் |  |  | வாடிக்கையாளர் மையமாக வங்கியின் முன்னேற்றத்தை கண்காணித்து மதிப்பிடுதல் |
| **இடர் முகாமைத்துவம்** | | | | |
| • இடர் தாங்கிக்கொள்ளும் தன்மை<br>• இடர் தாங்கிக்கொள்ளும் தன்மை அளவீடுகள்<br>• ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை கட்டமைப்பு<br>• சைபர் பாதுகாப்பு இடர் மதிப்பீடு<br>• கட்டுப்பாட்டு செயற்றிறன் மதிப்பாய்வு<br>• வழக்கமாக இடர் அறிக்கைகள்<br>• ஒருங்கிணைந்த குழுவினால் வழங்கப்படும் இடர் அறிக்கைகள்<br>• 2021 இன் உள்ளக மூலதன போதுமான தன்மை மதிப்பீட்டுச் செயன்முறை அறிக்கையை அங்கீகரித்தல் | • ஆபத்து மற்றும் இணக்க மேலாண்மை நடைமுறைகள் உள்ளன. வங்கி அதன் தந்திரோபாயத்தை அடைவதற்கு முன்னுரிமை படுத்தப்பட்டுள்ளது<br>• தகவல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் பொறுப்பு மற்றும் நெறிமுறை பயன்பாடு |  |  | செயற்றிறனுக்கான அணுகுமுறை இடர் மேலாண்மை பற்றி அறிந்திருத்தல் மற்றும் பேரின பொருளாதாரம், அதன் பொருளாதாரத்தின் காரணிகளை வங்கி கண்காணிக்கிறது |
| **அக்கறைதாரர் உறவுகள்** | | | | |
| • அக்கறைதாரர்களை அடையாளம் கண்டு வழிநடத்தியது. அக்கறைதாரரின் உருவாக்கம் மற்றும் செயற்படுத்தல் ஈடுபாட்டு உத்திகள்<br>• வழக்கமான மற்றும் எளிதாக்கும் நிர்வாகத்தை இயக்கி பங்குதாரருடன் தொடர்புடைய தொடர்பு | • அக்கறைதாரரை உள்ளடக்கிய அணுகுமுறை செயல்படுத்துவதில் நிர்வாக தந்திரங்கள் மற்றும் பொறுப்புகள்<br>• வங்கியின் நியாயமான சமநிலை தேவைகளுக்கு இடையில் ஆர்வங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் அக்கறைதாரர் தேவைகள் மற்றும் சிறப்பு ஆர்வம்<br>• ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகம் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வங்கியின் உத்தி நீண்டகால செயற்படுத்த மதிப்பு உருவாக்கம் |  |  | செயன் முறை மேம்பாடுகளை தேவையான அக்கறைதாரரின் ஈடுபாட்டினை மேற்பார்வை செய்தல் |

| 2021 இன் சபை நடவடிக்கைகள் | பெறுபேறு | குறுகிய மற்றும் இடைக்கால தந்திரோபாய இலக்குகள் | அக்கறைதாரர் | 2022 ஆளுகை இலக்குகள் |
|---|---|---|---|---|
| **நிறுவன ஆளுகை** | | | | |
| • சுயாதீன சபை மதிப்பீடு மற்றும் சபை உபக்குழு மதிப்பீடு<br>• நிறுவன நிர்வாக வழிகாட்டுதல்கள் கருதப்படுகின்ற இணக்கநிலை ஒழுங்குமுறை அதிகாரிகளால் வழங்கப்பட்டது மற்றும் மதிப்பிப்பட்டது<br>• பணிப்பாளர் சபை நடத்தை விதிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது | • தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் சபையின் செயற்றிறன்<br>• இணக்க ஒழுங்குமுறை திசைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் |  |  | • ஒழுங்குமுறையுடன் மற்றும் தொழில்துறை சிறந்த நடைமுறைகளுடன் வங்கி 100% இணக்கமாக இருப்பதை உறுதி செய்தல்<br>• சிறந்த ஆளுகை தர நிலைகளின் வங்கி இணக்கப்பாட்டை மேற்பார்வை செய்தல் |

## இடர் முகாமைத்துவத்தில் பணிப்பாளர் சபையின் வகிபாகம்

வங்கியின் வணிக உபாயமார்க்கத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இடர் முகாமைத்துவத்தை சீரமைப்பதை பணிப்பாளர் சபை அடையாளம் காட்டுகின்றது. இடர் முகாமைத்துவம் குறித்த விவேகமான மேற்பார்வை பணிப்பாளர் சபைக்குள் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன், மேலும் இது வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடு தொடர்பாக தனது கடமைகளை நிறைவேற்றுவதில் அதன் பொறுப்பை பணிப்பாளர் சபையின் இடர் முகாமைத்துவ குழுவிற்கு வழங்கியுள்ளது. அந்த வகையில் வங்கியானது பலமான இடர் முகாமைத்துவ சட்டத்தினை உருவாக்கியுள்ளதுடன், வங்கியினுடைய இடர் அளவினைக் கையாளுவத்கான இடர் ஏற்பு வரம்புகள், சகிப்புத்தன்மை மட்டங்கள் மற்றும் இடரினைக் கண்காணிப்பதற்கான பொறிமுறைகள் ஆகிய உருவாக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையானது ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவினால் சீரான கால இடைவெளிகளில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் இடர் தொடர்புபட்ட விடயங்களைக் கண்காணிக்கின்றது. ஒப்புக் கொள்ளப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களில் இருந்து ஏதேனும் விலகல்களுக்கு நிர்வாகத்திடம் தெளிவுபடுத்தல் கோரப்பட்டதுடன் அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது. நீண்டகால வியாபார திட்டமிடல் செயன்முறை தொடர்பான ஆபத்தை நன்கு நிவர்த்தி செய்யும் உபாயமார்க்க வியாபாரத் திட்டம் குறித்த கலந்துரையாடலின் போது வணிகத்தில் உள்ள அபாயங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆழமாக விவாதிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டன (மேலதிக விபரங்களுக்கு இடர் மீளாய்வு அறிக்கை பக்கம் 212 முதல் 239 பார்வையிடவும்).

## தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் வகிபாகங்கள்

1971ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் கைத்தொழிற்துறையின் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்கும் வகையில் நியமனம் மற்றும் வகிபாக தெளிவாக்கலுக்கான முகாமைத்துவத்துவ பங்களிப்புக்கான சாட்டுதல் மற்றும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளின் வினைத்திறனான பின்பற்றல்கள் என்பவற்றை வங்கி உறுதி செய்கின்றது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர்.'. பிரதான நிர்வாக அலுவலர் ஆகியோரின் வகிபாகங்கள் தனித்தனியாக உள்ளதுடன், அவற்றின் தனிப்பட்ட பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எந்தவொரு தனி நபருக்கும் தடையற்ற முடிவெடுக்கும் அதிகாரங்கள் இல்லை என்பதையும், அதிகாரம் மற்றும் அதிகாரத்தின் பொருத்தமான சமநிலைகள் இருப்பதை உறுதி செய்வதற்கும் பொறுப்புகளைப் பிரிப்பது வடிவமைக்கப்பட்டுள்ளது.

தலைவர் ஒரு சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருக்கின்றார். பொது முகாமையாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு முக்கிய முகாமைத்துவ பணியாளராக இருக்கின்றார், அவர் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் இருப்பார், ஆனால் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருக்கமாட்டார். தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிர்வாக அலுவலரின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை பணிப்பாளர் சபை பட்டயம் தெளிவாக வரையறுக்கின்றது. தலைவரானவர், பணிப்பாளர் சபைக்குத் தலைமைத்துவம் வழங்குதல், பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டுக்கு வசதி அளித்தல், அதிகாரத்தை கையாளுதல் மற்றும் வங்கியின் சிறந்த கூட்டிணைந்த ஆளுகையினை மேம்படுத்தல் மற்றும் பேணுதல் ஆகிய பொறுப்புகளை கொண்டுள்ளார். பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரலை அமைக்கின்றனர். பணிப்பாளர் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதில் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபை போதுமான தகவல்களைப் பெறுவதை தலைவர் உறுதி செய்கின்றதுடன், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் அங்கத்தரவர்களின் திறம்பட்ட பங்கேற்பு, பங்குதாரருடன் பயனுள்ள தகவல்தொடர்பு மற்றும் பிரதான முகாமைத்துவப் நபர்களுடன் திறந்த தொடர்பு என்பவற்றைக் கொண்டுள்ளார்.

பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இடர் சகிப்புத்தன்மை நிலைகளுக்குள் வங்கியின் உபாயமார்க்கம் மற்றும் வியாபாரத்தின் அன்றாட முகாமைத்துவம் ஆகியவற்றை வடிவமைத்தல், மேம்படுத்தல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றுக்கு பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் பொறுப்பேற்கின்றார். பொது முகாமையாளர்.'.பிரதான நிர்வாகஅலுவலர் கூட்டிணைந்த முகாமைத்துவக் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகின்றதுடன் கூட்டிணைந்த நிர்வாக கட்டமைப்பில் அனுமதிக்கப்பட்ட அவர்களுடைய அதிகாரத்தின் அம்சங்களை கூட்டிணைந்த முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு வழங்குகின்றார். முகாமைத்துவ குழுக்களுக்குத் தலைமை தாங்குவதோடு,

வங்கியின் செயல்திறன் குறித்த துல்லியமான, சரியான நேரத்தில் மற்றும் தெளிவான தகவல்களை பணிப்பாளர் சபை பெறுவதை உறுதி செய்கின்றார். பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் வங்கியின் விவகாரங்களை மேற்கொள்ளும் போது நல்ல கூட்டிணைந்த நிர்வாகமும் உயர்ந்த தரங்களும் பயன்படுத்தப்படுவதையும் பராமரிப்பதையும் உறுதி செய்கின்றார்.

## பணிப்பாளர் சபை செயலாளரின் வகிபாகம்

சபையின் செயலாளர் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் ஒழுங்காக பின்பற்றப்படுதல் மற்றும் மீளாய்வு செய்யப்படுதலை உறுதி செய்வதில் ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கினறார். பணிப்பாளர் சபையின் செயலாளரது பொறுப்புகள் பின்வருமாறு சுருக்கமாக கூறப்படுகின்றன:

- சபை மற்றும் உபகுழுக்களுக்கான அனைத்து கூட்டங்களுக்கும் தேவையானவற்றை உறுதிப்படுத்தல்
- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்துக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளைப் பேணுதல்
- பணிப்பாளர் சபையினது ஒழுக்க விதிகள் மற்றும் சட்ட ரீதியான இணக்கப்பாட்டு தன்மையினை உறுதி செய்தல்.
- பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டை உறுதி செய்தல்
- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்துக் கூட்டங்கள் தொடர்பான தொழில்சார் ஆலோசனைகளை தலைவருக்கு வழங்குதல்
- தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக பணிப்பாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல்.கூட்டிணைந்த ஆளுகைக்கான கோட்பாடுகள் மற்றும் தொடர்புபட்ட ஒழுக்கவிதி மற்றும் சட்டங்களுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்தல்.
- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்து பதிவுகள், கூட்ட அறிக்கைகளைப் மற்றும் ஏனைய ஆவணங்களை பாதுகாத்தல்
- சபை பற்றிய சுற்றுநிருபங்கள் நேரத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை மற்றும் பணிப்பாளர் சபையின் முடிவுகளை நேரத்திற்கு முகாமைத்துவத்திற்கு தொடர்பாடுதல்
- சபையின் உப குழுக்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் வெளிப்பாடுகள் ஆகியன தொடர்பாக உரிய வகையில் சபை தகவல்களை பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல்.
- சபை முடிவுகளின் முகாமைத்துவ அமுல்படுத்தல்கள் பின்தொடரல் மற்றும் சபைக்கு அறிக்கையிடல்

ஓர் முக்கிய முகாமை நபர் என்னும் வகையில் செயலாளரது நியமனம் மற்றும் பதவி நீக்கம் ஆகியன சபை நியமன குழுவுடன் தொடர்புபட்டதாகும்

## பணிப்பாளர்களது சம்பளம் மற்றும் நிர்ணய முறை

1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கியின் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்குட்பட்டு, பணிப்பாளர்களின் சம்பளமானது தொடர்புபட்ட அமைச்சரினால் தீர்மானிக்கப்படும். எந்த ஒரு பணிப்பாளரும் தன்னுடைய சம்பளத்தை தீர்மானிப்பது தொடர்பான விடயங்களில் தொடர்புபடுவதில்லை. பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவானது பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களது சம்பளங்கள் தொடர்பாக மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளும் வங்கியானது பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சம்பளக் கொள்கையினைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக பணிப்பாளர் சபை அரசுடமை வங்கிகள் தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் இணக்கமான வகையில் இறுதி முடிவினை வழங்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த அமைச்சருக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும். பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவானது 3 நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

## பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் மீளாய்வு

2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கியில் சட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய பிரயோகிக்கத்தக்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் கூட்டிணைவு கோட்பாடுகளுக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட பொறுப்புகளை உள்ளடக்கும் பணிப்பாளர் சபையின் பட்டயம் மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் பட்டயம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட கடமைகளை பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்கள் உரிய வகையில் நிறைவு செய்கின்றமையை உறுதி செய்வதற்காக வருடாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் சுயமீளாய்வை மேற்கொள்ளுகின்றனர். இந்த மீளாய்வு செயன்முறையிலே ஒவ்வொரு பணிப்பாளர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்பாளர் சபை பெறுபேற்று மீளாய்வுப் படிவம் ஒன்றை பூர்த்தி செய்ய அது சபையின் செயலாளரினால் பணிப்பாளர் சபை நியமன குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

பெப்ரவரி 2021 மற்றும் பெப்ரவரி 2022 இல் இடம்பெற்ற சபை கூட்டங்களில் முறையே 2020 மற்றும் 2021 இற்கான சபை மீளாய்வுகள் மதிப்பிடப்பட்டது.

## பிரதான நிறைவேற்று அலுவலரின் மதிப்பீடு

வருடத்தின் ஆரம்பத்தில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் நிதி மற்றும் நிதியல்லா இலக்குகளின் படி அளவுகோள்களின் அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரின் செயற்திறனை பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்கின்றது. மதிப்பீட்டினைச் செய்யும் போது தொழிற்பாட்டுச் சூழலில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் சரியான கவனத்தை வழங்குகின்றன. தலைவர் முறையான மற்றும் முறைசாரா பின்னூட்டல்களை பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலருடன் கலந்தாலோசிக்கின்றார். அனுமதிக்கு முன்னர் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரினால் மதிப்பீட்டுக்கான பின்னூட்டல் வழங்கப்படும் போது உரிய கவனம் மேற்கொள்ளப்படுகின்றது.

# சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை



**மனோஹரி அபேயசேகர**
தலைவர்
சபைக் கணக்காய்வுக் குழு

**குழுவின் அமைப்பு**

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையின் கணக்காய்வுக் குழு கீழ்வரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது. 31 டிசம்பர் 2021 இற்கான குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 180 இருந்து 183 வரை வழங்கப்பட்டுள்ளன.

| பெயர் | அங்கத்துவ நிலை | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| திருமதி மனோஹரி அபயசேகர* | தலைவர் | 13 | 13 |
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க* | அங்கத்தவர் | 13 | 12 |
| திரு. எச் கே டீ லக்மன் காமினி* | அங்கத்தவர் | 13 | 13 |

* சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்**

சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்

பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)

பதில் பிரதிப் பொது முகாமையாளர், (நிதி, நிறுவன திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை)

**கோரம்**

இரண்டு உறுப்பினர்

**குழுவின் செயலாளர்**

குழுவின் செயலாளர் சபைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

## சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம் ஒழுங்காக புதுப்பிக்கப்பட்டதுடன், குழுவின் குறிப்புகளின் நியதியைத் தெளிவாக வரையறுக்கின்றது. வங்கித்துறையில் ஏற்பட்ட புதிய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு 2018 ஆம் ஆண்டில் குழுவின் பட்டயம் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டது.

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை மீதான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் சிறந்த ஆளுகைக்கான அரச தொழில் முயற்சிகளின் ஏற்பாடுகளுக்கமைய வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட பணிப்புரையின் பிரிவு 3(6)(ii) இற்கு அமைய அரச தொழில் முயற்சிகளின் சிறந்த ஆளுகைக்கான ஏற்பாடு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை" என்பவையும் அதன் தொடர்ச்சியான திருத்தங்களாகும்.

குழுவானது, தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பின்வரும் மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அ. வங்கியின் நிதிக் கூற்றுகள் நேர்மையானதாகயிருத்தல்:

ஆ. வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் செயற்திறனுடையதாக இருத்தல்:

இ. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டு செயலாற்றுகை: மற்றும்

ஈ. வங்கியின் வெளியகக் கணக்காய்வுச் செயற்பாட்டு செயலாற்றுகை.

குழுவின் தொழிற்பாடுகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பற்றி குழுவின் பட்டயம் கூறுகின்றது. குழுவின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ளும் போது பட்டயத்திற்கு இணக்கமாக உள்ளமையை பட்டய சரிபார்க்கும் பட்டியல் உறுதிப்படுத்துகிறது.

## அறிக்கையிடல்

குழு அதன் நடவடிக்கைகள் குறித்து குழு நேரடியாக, அதன் கூட்ட அறிக்கைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகிறது. சுபைக் கணக்காய்வுக் குழு அகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கு இடையேயான திறந்த தொடர்பாடல்களைப் பேணுகிறது. குழுவின் செயற்பாட்டுப் பரப்பெல்லை நியதிகள் (TOR) அனைத்து பொருண்மைமிக்க அம்சங்களிலும் இணங்கப்பட்டுள்ளன எனக் குழு கருதுகிறது.

## 2021 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் குழுவானது பதின்மூன்று கூட்டங்களை நடாத்தியதுடன் சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயத்துக்கு

அமைவாக குழுவின் ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) மூன்றில் இரண்டாகும். அழைப்பின் பேரில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி அடங்கிய வங்கியின் சிரேஷ்ட முகாமைத்தவத்தினர் தேவை அடிப்படையில், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

### நிதி அறிக்கையிடல்

வங்கி நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையினை மேற்பார்வை செய்ய குழு மதிப்பீடு செய்தது மற்றும் வெளிப்படுத்தல்களுக்காக காலாண்டு அறிக்கைகள் தாயாரிக்கப்பட்டன. குழுவானது பிரதான தீர்மான இடங்கள், கணக்கீட்டு கொள்கைள் மற்றும் நடைமுறைகளிலான மாற்றங்கள், கணக்காய்விலிருந்து எழும் பிரதான மாற்றங்கள், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு, நிதிக்கூற்றுக்களின் உண்மையான மற்றும் நியாயமான தன்மையினை வெளிப்படுத்த பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குதல் என்பவற்றை நோக்குகிறது.

“2020 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின் ஆய்வு அறிக்கையினை குழு ஆய்வு செய்தது இது உள்ளக கணக்காய்வு பிரிவின் கண்டுபிடிப்புகளுடன் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் வரைவு நிதி அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டது.

### உள்ளக மூலதன போதுமானதன்மை மதிப்பீட்டு முறைமை (ICAAP)

பகுதி 10 (பிரிவு II – மேற்பார்வை மதிப்பீட்டு முறைமை) 2016 வங்கிச்சட்ட நியமம் 1 ஆனது மூலதன மதிப்பீட்டு முறைமையின் நேர்மையான, சரியான மற்றும் நியாயமான தன்மை தொடர்பில் சுயாதீனமான மதிப்பீட்டினை கோருகிறது. ICAAP இன் தேவைப்பாட்டிற்கு ஏற்ப குழு உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறனை மதிப்பீடு செய்தது.

### இடர் மற்றும் கட்டுப்பாடுகளின் அளவீடுகள்

வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் அதன் துணை அமைப்புகள் இடர்களை இனம்காணுதல் மற்றும் ஆராய்தல் மற்றும் வணிக தொழிற்பாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பில் பொறுப்பானது. வங்கி இடர் அடிப்படையிலான கணக்காய்வு முறைமை மற்றும் 2007 வங்கிச்சட்டம் நியமம் இல 12, பிரிவு 3 (8) (ii) (ஆ) ஏற்ப வங்கி உள்ளக கட்டுப்பாட்டினை மீளாய்வு செய்தது மற்றும் இலங்கை பட்டய கணக்காளர்களினால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக முழுமையான கட்டுப்பாட்டு சூழல் மற்றும் பிரதான இடர்களுக்கான குறித்த கட்டுப்பாடுகள் என்பவற்றை வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமையினை குழு ஆய்வு செய்தது. மேலும், கணக்கீட்டு மற்றும் நிதி அறிக்கையிடலின் பிழைகள் சொத்துக்களை தவறாக வழிநடத்தல், சட்ட மீறல், நிறுவன கொள்கைகளுக்கு இணங்காமை போன்ற வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மதிப்பீடு செய்தது. இது தொடர்பில் வெளியக மற்றும் உள்ளக கணக்காய்வாரள்களின் தொடர்புபட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை முகாமைத்துவ பதில்களுடன் ஆராய்தல்.

பக்கம் 251 முதல் 253 வரை உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளரின் அறிக்கை மற்றும் கண்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேவைப்பாடுகளை இணங்குவதில் வங்கி தேவையான நடைமுறைகளை கொண்டுள்ளதென கருதுகிறது.

### உள்ளக கணக்காய்வு மற்றும் ஆராய்ச்சி

சபை கணக்காய்வு குழுவானது உள்ளக கணக்காய்வு பணிகள் தனிச்சையாக இடம்பெறுவதை உறுதிப்படுத்துகிறது. அதன் வாய்ப்பு, பணிகள், மற்றும் கணக்காய்வுப் பிரிவின் வளங்களின் பொதுமான தன்மையினை ஆய்வு செய்தது மற்றும் பிரிவான அதன் வேலைகளை நடாத்துவதற்கு தேவையான அதிகாரங்களை கொண்டுள்ளனதென திருப்தியடைகிறது.

வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் படி வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவானது கிளைகள், பிரிவுகள் மற்றும் ஏனைய பிரிவுகளில் கணக்காய்வினை நடத்தியது. மதிப்பிடப்பட்ட இடர் அடிப்படையில் கணக்காய்வின் தேவை தீர்மானிக்கப்பட்டது. கணக்காய்வு திட்டம் சபை கணக்காய்வு குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. 2021 இற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டமானது முடிவடைந்த 2021 ஆம் ஆண்டில் அடையப்பட்டது.

உள்ளக கணக்காய்வு பிரிவானது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க செயல்படுதலை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறனை உறுதிப்படுத்த உள்ளக பரிசீலனைகளை மேற்கொள்வதோடு அதன் கண்டுபிடிப்புகளை பிரசுரிக்கிறது. முகாமைத்துவ தொழிற்பாடுகளின் தன்னிச்சையான மற்றும் நேரான தன்மையை வழங்க உள்ளக கணக்காய்வு நடத்தப்பட்டது மற்றும் அதன் கண்டுபிடிப்புகளை குழுவானது மதிப்பீடு செய்தது.

மேலும் குழுவானது டிசெம்பர் 2020 முதல் ஆகஸ்ட் 2021 வரை நடாத்தப்பட்ட உள்ளக விசாரணைகள் மற்றும் வங்கியின் மோசடித் திரும்பல்கள் அறிக்கைகளை மதிப்பீடு செய்தது மற்றும் கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவின் சிரேஸ்ட ஊழியர்களின் செயற்றிறனை ஆய்வு செய்தது.

வங்கியின் உள்ளக கணக்காய்வு கையேடு உள்ளக கணக்காய்வு பணியினை சுருக்கமாக கூறுவதோடு உள்ளக கணக்காய்வினை ஆட்சி செய்யும் கொள்கைகள், தரங்கள், மற்றும் நடைமுறைகள் வரையறுக்கிறது.

உள்ளக கணக்காய்வு சாசனம் உள்ளக கணக்காய்வு பிரிவின் கடைமைகளை வினைத்திறனாக மற்றும் தன்னிச்சையாக நடாத்த உதவுகிறது. சாசனமானது எல்லை, பணிகள், அதிகாரங்கள், அறிக்கையிடல், நடைமுறைகள் மற்றும் தன்னிச்சையான தன்மை என்பவற்றை உள்ளடக்குகிறது.

### வெளியக கணக்காய்வு

சட்டத்தின் படி கணக்காய்வாளர தலைமை அதிபதியே வங்கியின் வெளியக கணக்காய்வாளர். ஈடுபாட்டின் போது சிரேஸ்ட முகாமையாளர் இல்லாது வெளியக கணக்காய்வாளருடன் இரு கூட்டங்கள் இடம் பெற்றன. முக்கியமான விடயங்கள் தொடர்பில் தங்களது எண்ணங்களை வெளிப்படுத்தவும் கலந்தாலோசிக்கவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. குழுக் கூட்டங்களின் போது அரச கணக்காய்வாளர் சிரேஷ்ட அதிகாரியுடன் கணக்காய்வு செய்முறையின் வினைத்திறன் கலந்தாலோசிக்கப்பட்டது. வெளியக கணக்காய்வுக்கு வேையான அனைத்து தகவல்கள் மற்றும் ஆவணங்களும் வழங்கப்படுதலை குழு உறுதி செய்தது.

குழுவானது வருடத்தினுள்:

- 2020 டிசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையினை, முகாமைத்துவ பதில்கள் மற்றும் திருத்த நடவடிக்கைகளுக்கான பின் தொடரல் என்பவற்றை மதிப்பீடு செய்தது.
- கணக்காய்வாளர் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய அறிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன மற்றும் தேவையான நடவடிக்கைகள் முன்னேடுக்கப்பட்டன.

### உள்ளக கணக்காய்வினை மேற்பார்வை செய்தல்

2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிக் கட்டளைச் சட்டத்தின் பகுதி 3 (8) (ii) (ஆ) மற்றும் (இ) பிரகாரம் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளுக்கு வங்கி முறைமையின் நம்பகமான நிதி அறிக்கையிடலினை உறுதிப்படுத்த வேண்டிய நிறுவன ஆளுகை தேவைப்பாடுகளை குறிப்பிடுகிறது. நியமத்தின் படி 2021 டிசெம்பர் 2021 நிதி அறிக்கையிடல் தொடர்பான வங்கியின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனை குழு மதிப்பீடு செய்தது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பிலான பணிப்பாளரின் கூற்றுக்கான உறுதி அறிக்கையினை வெளியிட்டுள்ளார் இது ஆண்டறிக்கை ↳ பக்கம் 253 இல் தரப்பட்டுள்ளது.

குழுவானது புதிதாக அடையாளம் காணப்பட்ட இடர்களை குறைப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருப்பதை அடிக்கடி மீளாய்வு செய்யும்.

### நெறிமுறைகள் மற்றும் நல் ஆளுகை

குழுவானது வங்கியின் நல் ஆளுகை நடைமுறைகளை பேணுதல் மற்றும் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்தல். இது தொடர்பில் வங்கியின் நேர்மையினை உறுதிசெய்ய மோசடி இடர் முகாமைத்துவம் பிரதான பங்காகும். இது வங்கியின் வெளிப்படையான தன்மை மற்றும் வங்கி நடவடிக்கைகள் மற்றும் அதன் நன்மதிப்பினை பாதிக்ககூடிய விடயங்களுக்கு எதிராக மோசடிகளை முன்கூட்டியே கண்டறிய உதவுகிறது.

அனைத்து தர மோசடிகளையும் சபை கணக்காய்வுக்குழு காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்கிறது. காலாண்டு மதிப்பீட்டின் போது சபை கணக்காய்வுக்குழு ஒவ்வொரு மோசடிகள், அதற்கான நடவடிக்கைகள் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் புள்ளிவிபரங்களை அளித்தது. அனைத்து ஆரம்ப விசாரணைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பில் சுருக்கத்தினை கேட்பதற்கு எந்த நேரத்திலும் குழுவிற்கு உரிமையுள்ளது.

## இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

வங்கி இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs/ LKASs) அமைவாகத் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் கைக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் குழுவினால் மீளாய்விற்குட்பட்டது.

## இணக்கப்பாடு

சட்டம் மற்றும் ஒழுங்குமுறையின் இணக்கப்பாடு வினைத்திறனினை குழு மதிப்பீடு செய்தது மற்றும் இணக்கப்பாடுகள் அல்லாத (ஒழுக்க நடவடிக்கை உள்ளடங்கலான) முகாமைத்துவ விசாரணைகளை பின்தொடர்ந்தமை.

## 2022 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- சிக்கலான உள்ளக மற்றும் வெளியக சூழலின் தேவைக்கு மற்றும் வினைத்திறனாக தொழிற்பட நிதி முறைமை, செய்முறைகள், உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றை தொடர்ந்தும் பார்வையிடல்
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தன்னிச்சையான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்பார்வையிடல் மற்றும் தேவையான முன்னேற்றங்களை மேற்கொள்ளல்.

குழு 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டை, சுய மதிப்பீட்டைக் கொண்டு நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டு செயன்முறை மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்பட்ட போது, அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

MP Abeysekera

**மனோஹரி அபேயசேகர**
தலைவர்
*சபைக் கணக்காய்வுக் குழு*

24 மார்ச் 2022
கொழும்பு

# சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை





**திருமதி கேசிலா ஜயவர்தன**

தலைவர்
சபை மனிதவளங்களும் ஊதியங்களும் குழு

### குழுவின் அமைப்பு

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது. 31 டிசம்பர் 2021 இற்கான, குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 180 இருந்து 183 வரை வழங்கப்பட்டுள்ளன.

| பெயர் | அங்கத்துவ நிலை | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| திருமதி கேசிலா ஜயவர்தன* | தலைவர் | 09 | 09 |
| திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன* | அங்கத்தவர் | 09 | 09 |
| திரு. எச் கே டீ லக்மன் காமினி* (08.01.2021 முதல் 08.03.2021 வரை) | அங்கத்தவர் | 01 | 01 |
| திரு எரங்க ஜயவர்தன** (28.10.2020 முதல் 08.01.2021 வரை மற்றும் 08.03.2021 முதல் இன்று வரை) | அங்கத்தவர் | 08 | 07 |

* சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
** சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

### அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியுடன் தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி குழுவுக்கு தகவல்கள் வழங்குவதுடன், அனைத்து குழுக் கூட்டங்களிலும் கலந்துக்கொள்வார்.

பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி) மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்தவத்தின் தேவை அடிப்படையில், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்வார்.

### கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்.

### குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

## சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் பட்டயம்

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவானது திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 X (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையின் பிரிவு 03 (06) (i) மற்றும் (iii) இன் ஏற்பாடுகளின் நியதிப்படி சபை உருவாக்கப்பட்டது. இக்குழு பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகள் நேரடியாக பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிவிக்கப்படும்.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

பட்டயத்தின்படி, குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- கூட்டு உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர வங்கியின் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையைத் (சம்பளங்கள், சம்பளப் படிகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானித்தல் குழுவின் பொறுப்பாகும்.
- குழுவானது, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான குறிக்கோள் மற்றும் இலக்குகளை ஏற்படுத்தியுள்ளது.
- மேலும், காலத்துக்கு காலம் ஏற்படுத்தப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினரின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதுடன் செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புக்களான ஊதியம், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைத் திருத்தியமைக்கும் அடிப்படையையும் தீர்மானிக்கின்றது.

## 2021 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

2021 ஆம் ஆண்டில் ஒன்பது (09) கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் குழுவின் கூட்ட நடவடிக்கைகள் பணியாளர்களின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்களுக்காக சபைக்கு தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

- 2020 இற்கான பிரதான முகாமைத்துவ பணியாளர்கள் (KMPs) பொது முகாமையாளர்/பிரதமநிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட DGM, அனைத்து DGM, மற்றும் AGMகளின் முக்கிய நிர்வாக குறிகாட்டிகளின் (KPI) செயற்றிறன் மதிப்பீடு
- ஆட்சேர்ப்பு மதிப்பாய்வு மற்றும் வங்கி தேவையின் அடிப்படையில் ஊழியர்களின் பதவி உயர்வு
- பணியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனித வளம் மேலான முறையீடுகளின் பரிசீலனை
- ஆட்சேர்ப்பு முறையின் மதிப்பாய்வு

## 2022 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- ஊதிய கொள்கை பொருத்தபாட்டினை வங்கி பேணுவதை உறுதிப்படுத்தல்
- ஈடுபடும் தொழிலாளி கலாச்சாரத்தை உருவாக்க மனிதவள தந்திரோபாயத்தில் கவனம் செலுத்தல்
- பட்டயத்தின் பொறுப்புக்களை அடைதல்

## குழு மதிப்பீடு

குழு 2021 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப் பட்டிருந்தது.



**கேசிலா ஜயவர்தன**
தலைவர்
*சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு*

24 மார்ச் 2022
கொழும்பு

# சபை நியமனக் குழுவின் அறிக்கை



**யூ ஜி ஆர் ஆரியரத்ன**

தலைவர்
சபை நியமனக்குழு

### குழுவின் அமைப்பு

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபை நியமனக் குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது. 31 டிசம்பர் 2021 இற்கான குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 180 இருந்து 183 வரை வழங்கப்பட்டுள்ளன.

| பெயர் | அங்கத்துவ நிலை | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| திரு. யூ ஜி ஆர் ஆரியரத்ன* | தலைவர் | 02 | 02 |
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க* (17.01.2020 முதல் 20.07.2021 வரை) | அங்கத்தவர் | 01 | 01 |
| திரு எரங்க ஐயவர்தன** | அங்கத்தவர் | 02 | 02 |
| திரு. எச் கே டீ லக்மன் காமினி* (20.07.2021 முதல் இன்று வரை) | அங்கத்தவர் | 01 | 01 |
| திருமதி மனோஹரி அபேயசேகர* (16.09.2021 முதல் இன்று வரை) | அங்கத்தவர் | 00 | 00 |

* சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ** சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

### அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி குழுவுக்குத் தகவல்களை வழங்குவதுடன் குழுக் கூட்டங்களில் அழைப்பின் பேரில் கலந்து கொள்கின்றார்.

### கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

### குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர், சபை நியமனக் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

## சபை நியமனக் குழுவின் பட்டயம்

முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவில் சபையின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதற்காக திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 (x) (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை நியமனக் குழுவை பணிப்பாளர் சபை நிறுவியது.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

சபை நியமனக் குழு, பொது முகாமையாளர் /பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கு/நியமிப்பதற்கான செயன்முறையை நடைமுறைப்படுத்தல், பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பதவிக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்காக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய தகுதிக்கான தேவைப்படுத்தப்படும் தராதரங்கள், அனுபவம் மற்றும் முக்கிய விடயங்கள் போன்ற பிரமாணங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும்.

மேலும் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளவாறும், பணிப்புரை 3 (3) இல் கொடுக்கப்பட்ட அளவுகளிலும் குறித்துரைக்கப்பட்ட பதவிகளை பெறுவதற்கு தகுதியான மற்றும் சரியானவர்கள் என பணிப்பாளர்கள் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை குழு உறுதிப்படுத்தும். ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குழு காலத்துக்கு காலம் மேலதிகமான/புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளையும், ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான அடுத்து வரும் ஒழுங்குகளையும் கவனத்தில் எடுத்து பரிந்துரைகளை மேற்கொள்ளும்.

## 2021 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த 2021 ஆம் ஆண்டில் இரண்டு (02) கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

- முன்மொழியப்பட்ட வங்கிக் கோட்டா 2021 இனை மதிப்பிட்டமை மற்றும் ஒப்புதல்
- வங்கியின் நிலைத்த எதிர்கால திட்டம் 2021 இனை மதிப்பிட்டமை
- வங்கி மற்றும் வங்கி அல்லாத துறைகளில் சிறப்பு தரத்திற்கான பதவிகளுக்கு மற்றும் பிரதான முகாமைத்துவ பணியாளர்களுக்கு (KMPs) நேர்காணல்

## 2022 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- KMPs தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்குதல்
- வங்கியின் நிலைத்த எதிர்கால திட்டமிடலினை தொடர்ச்சியாக கண்காணித்தல்
- பட்டயத்தின் பொறுப்புக்களை அடைதல்

## குழு மதிப்பீடு

குழு 2021 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.



**திரு. யூ.ஜி.ஆர்.ஆரியரத்ன**
தலைவர்
*சபை நியமனக் குழு*

24 மார்ச் 2022
கொழும்பு

# சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை





**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**

தலைவர்
சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

### குழுவின் அமைப்பு

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையினால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. 31 டிசம்பர் 2021 இற்கான, குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 180 இருந்து 183 வரை வழங்கப்பட்டுள்ளன.

| பெயர் | அங்கத்துவ நிலை | வருகை தரக்கூடிய எணணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க* | தலைவர் | 05 | 05 |
| திரு எரங்க ஜயவர்தன** (28.10.2020 முதல் 08.03.2021 வரை) | அங்கத்தவர் | 01 | 01 |
| திரு எம் ரி ஜே பெரேரா* | அங்கத்தவர் | 05 | 05 |
| A+ ஜி ஆர் ஆரியரத்ன* | அங்கத்தவர் | 04 | 03 |

* சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ** சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

### பணிப்பாளர் அல்லாத அங்கத்தவர்கள்

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதான இடர் அதிகாரி.

### அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

குழுவானது, ஏனைய பிரதிப் பொது முகாமையாளர்கள் உதவிப் பொது முகாமையாளர்கள், இணங்குவிப்பு அலுவலர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள் ஆகியோரை தேவைப்படும் போது கூட்டங்களுக்குச் சமூகமளிக்குமாறு வேண்டியிருந்தது.

### கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

### குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

## சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபை 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவின் நியதிகளின் கீழ் நாணயச் சபையில் நிறைபெறச் செய்யப்பட்ட அதிகாரத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை ஒருங்கிணைந்த முகாமைத்துவக் குழுவை நிறுவியது.

## குழுவின் வகிபாகங்களும் பொறுப்புக்களும்

- குழுவானது இடர் முகாமைத்துவம் தொடர்பில் சபையின் பெறுப்பினை நிறைவேற்ற உதவுதல்
- வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கொள்கை மற்றும் ஏனைய இடர் தொடர்பான கொள்கைகளை அங்கிகரித்தல் மற்றும் காலத்திற்கு காலம் வங்கியின் இடர் முகாமைத்துவத்தினை முன்னேற்றல்.
- வங்கியினால் எதிர்கொள்ளப்படும் கடன், சந்தை, தொழிற்பாட்டு மற்றும் தந்ரோபாய இடர்கள் அடையாளம் காணப்படல், மேற்பார்வை செய்யப்படல் மற்றும் போதுமான அளவு முகாமை செய்யப்படல்.
- பிரதான முகாமைத்துவ நபர்களுடன் மிக நெருக்கமாக வேலை செய்தல் மற்றும் பொருத்தமான பரிந்துரைகளை கட்டமைப்பினுள் மற்றும் குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்பின் அடிப்படையில் முன்வைத்தல்
- புதிய தொழிற்பாட்டு முன்னேற்றங்கள் தொடர்பில் அடையாளம் காணல், மதிப்பிடல், அறிக்கையிடல் மற்றும் பரிந்துரைகள் வழங்கல் மற்றும் அவற்றுடனான இணக்கப்பாடு.
- பாசல் III மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்கள்/ வழிகாட்டுதல்களுடன் இணங்குவதை உறுதிசெய்தல்.

குழு கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் வங்கியுடன் தொடர்பான இடர் மற்றும் இணக்கம் பற்றிய எடுத்துரைப்புகள் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது ஆணையின் கீழ் வரும் முன் மொழிவுகளுக்கான ஒப்புதலை வழங்குவதுடன் சபையினால் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய முன் மொழிவுகள் / அறிக்கைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்கின்றது.

இடர் முகாமைத்துவம் தொடர்பான உரிய பகுதி/பிரிவு ஆகியன வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விபரமான அறிமுகத்தை வழங்குகின்றன. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இடர் முகாமைத்துவம், இணக்குவிப்புப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகள் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது.

## 2021 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

காலாண்டுக்கு ஒருமுறை சந்திக்கிறது எனினும் தேவைகளுக்கு ஏற்ப கூட்டங்கள் நிர்ணயிக்கப்படும் 2021 ஆம் வருடத்தில் தேசிய சேமிப்பு ஐந்து கூட்டங்களை நடத்தியது.

குழு வங்கியினை எதிராக பாதிக்கக்கூடிய தொழிற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை போன்ற அனைத்து பிரதான இடர்களை ஆராய்கிறது. இது பிரதான முகாமைத்து நபர்களுடன் நெருக்கமான உறவினை பேணுகிறது.

வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் இடர்முகாமைத்துவ வினைத்திறன் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

குறித்த வருடத்தினுள் குழுவினால் நடாத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்:

- இடர் தாங்கு எல்லைக் கட்டமைப்பு மற்றும் இடர் சகிப்புத்தன்மை வரம்பு குறித்த மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கைகள், வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமை அம்சம் குறித்த அறிக்கைகளை மீளாய்வு செய்தல் (அதாவது கடன் இடர், சந்தை இடர், திரவத்தன்மை இடர், தொழிற்பாட்டு இடர், மனிதவள இடர், தொழில்நுட்ப இடர், சைபர் பாதுகாப்பு இடர் போன்ற)
- வேறுபட்ட இடர் ஏல்லைகளை மீளாய்வு செய்தலும் தேவைப்படும் போது முறையான அனுமதியளித்தலும்.
- வங்கியின் இடர் முகாமை கொள்கைகளை மீளாய்வு செய்து, சபையின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்தல் வங்கியின் உள்ளக மூலதன போதுகை மதிப்பீட்டு செயல்முறை (ICAAP) ஆவணத்தை மீளாய்வு செய்தல்
- இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை தொடர்பில் எழுந்த திருத்த செயல்முறை தொடர்பிலான பின் தொடர்பிலான செயன்முறை
- தொடர்புபட்ட பிரிவுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள், நிதி மோசடி, மோசடி இடர் முகாமைத்துவம் தொடர்பான காலாந்த அறிக்கைகளை மதிப்பிடல்
- வங்கி இணக்க ஆராய்வுகள் மற்றும் அதன் முக்கிய பணிகளான அடகு வைத்தல், கடன், மனித வளம் முலுஊ தேவைப்பாட்டினை பேணுதல் பற்றிய மதிப்பீடு
- பாசல் III அறிவுறுத்தல்கள் வழிகாட்டுதல்களுடன் இணங்குவதை உறுதிசெய்தல்
- இணக்கப்பாடு திட்டம் மற்றும் இணக்கப்பாடு கையேட்டின் வருடாந்த மதிப்பீடு

## 2022 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- பேரின மற்றும் நுண்பாக சூழல் காரணிகள், சந்தைகள், உள்;ர் மற்றும் சர்வதேச இடர் காரணிகளில் கவனம் செலுத்தல்.
- வங்கியின் இடர் மற்றும் இணக்கப்பாட்டு தந்ரோபாயத்தின் அமுல்படுத்தலை மேற்பார்வை செய்தல்.
- இடர் முகாமைத்துவத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேச முன்னேற்றங்களை ஆராய்தல்.
- டிஜிடல்மயமாக்கல் பயணத்தின்போது சைபர் மீள்தன்மையுடைய வங்கியாக இருத்தல்.
- சந்தை முன்னேற்றங்கள் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கு வங்கியின் நோக்கு தொடர்பில் தொடர்ச்சியாக நோக்குதல்.

## குழு மதிப்பீடு

குழு 2021 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.



**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
தலைவர்
*சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு*

24 மார்ச் 2022
கொழும்பு

# இடர் மீளாய்வு



இந்த அறிக்கையானது, இடர்களை முகாமைத்துவம் செய்தல், சர்வதேச அளவில் இடம்பெற்ற கொவிட்-19 நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட சிக்கல் மிக்க இடர் பின்னணிகள் மற்றும் உறுதியற்ற சூழல் போன்றவற்றுக்கு பதிலளிப்புச் செய்வதில் ஒரு வலுவான இடர் கலாசாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் உள்நாட்டு ரீதியில் அந்நியச் செலாவணி ஒதுக்கங்கள் மீதான அழுத்தம் காரணமாக எழக்கூடிய சவால்கள் போன்ற தொடர்பில் தேசிய சேமிப்பு வங்கியின் அணுகல் பற்றி மீளாய்வு செய்கிறது. இதனால், வங்கியானது இடர் பின்னணியில் பல மாற்றங்களை 2021 ஆம் ஆண்டில் எதிர்கொண்டது. அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட தேசிய தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டம் காரணமாக இவ் ஆண்டின் பிந்திய நாட்களில் கொவிட்-19 தொற்று நோயின் பாதிப்புக்களும் குறைந்தன. இருப்பினும், கொவிட்-19 தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார பின்னடைவினை மீட்டெடுப்பதற்கு இன்னும் சில ஆண்டுகள் தேவைப்பட உள்ளன.

இவ் ஆண்டுக் காலத்தில் தரப்படுத்தல் நிறுவனங்கள், பிரதானமாக பாரிய வெளியகக் கடன் மீட்பிலிருந்தான நாட்டின் அந்நியச் செலாவணி ஒதுக்கங்கள் மீதான அதிகரித்த அழுத்தத்தின் அடிப்படையில் இலங்கையின் கடன் மீளளிப்புத் தகுதி பற்றிய மதிப்பினை தரமிறக்கி மதிப்பீடு செய்தன. வங்கியானது நிதி முறைமையின் ஸ்திரத் தன்மையினை உறுதிப்படுத்தும் நோக்கில் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குறுத்துகைப் பணிப்புரைகளைக் கடைப்பிடித்ததன் மூலமும் மற்றும் நீடித்த கொந்தளிப்பான சூழமையினுள் புதிய சாதாரண நிபந்தனைகளில் வாடிக்கையாளர்களுக்கு தடையின்றிய சேவைகளை வழங்கியதன் மூலமும் ஒரு குறிப்பிடத்தக்க வகிபாகத்தினைச் செய்தது.

இக் காலப் பகுதியில், பணியாட்டொகுதியினரின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த விடயங்களளைக் கொண்ட இயக்கப்பாட்டு இடரானது ஒரு அக்கறைமிக்க விடயமாகக் கருதப்பட்ட போதிலும், வியாபாரத் தடங்கல்கள் ஒரு குறைந்தபட்ச அளவிலேயே காணப்பட்டன. வாடிக்கையாளர்கள் தமது கணக்குகளை தொலைதூ ரத்திலிருந்து அணுகுவதற்கான அவர்களின் விருப்பத்தெரிவானது தகவல் பாதுகாப்பு இடர் வெளிப்பாட்டினை அதிகரித்தது. கடன் தொகுதித் தரத்தில் ஏற்பட்ட தரக் குறைவானது வலுக்குறைவுக்கான குறிப்பிடத்தக்க ஏற்பாடளித்தலுக்கு வழியமைத்தது.

இடர் விடயத்தில் மாற்றங்கள் இருந்த போதிலும், வங்கியானது விவேகம் மிக்க அபிவிருத்தி மூலோபாயத்தினைப் பேணி இலாபம் மிக்க இலக்குகளை அடைந்ததோடு, கடன் தீர்க்கும் ஆற்றல் சுட்டிகளையும் ஒழுங்குறுத்துகை சார் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கு மேலாக கணிசமானளவு பேணியது. இருப்பினும், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ நடைமுறைகளை சீராக அமுல்படுத்துவதன் தேவைப்பாட்டினை துரிதப்படுத்தி, இந்த மட்டத்தினை நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்குப் பேணுவதானது சவால் மிக்க விடயமாகுமென்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

**கொவிட்-19 மற்றும் அந்நியச் செலாவணி ஒதுக்க நெருக்கடி போன்றன மூலம் எழுந்த சவால்கள்** — உரு 26

**கடன் தீர்க்கும் ஆற்றல் மற்றும் கடன் மீட்சி**

- மூலதன மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம்
- வியாபாரத் தொடர்ச்சி மற்றும் முகாமைத்துவக் கோட்பாடு மற்றும் இடர் அம்சத்திலுள்ள ஏனைய இடர்கள்

**மூலோபாயம் மிக்க மாற்றங்கள்**

- SBP இற்கான மாற்றியமைப்பு
- டிஜிடல் நிலைமாற்றம்
- தொலைதூரத்தில் இருந்து பணியாற்றல்
- ஆதரவுமிக்க அரசாங்க மற்றும் ஒழுங்குறுத்துகை நிறுவன முன்னெடுப்புகள்.

**ஒழுங்குறுத்துகை அபிவிருத்திகள்**

- நிதி சார் ஸ்திரத் தன்மை மற்றும் கடன் பெறுவோருக்கு ஆதரவளித்தல்.




**சமூகம்**

- பிரதேச முடக்கம் மற்றும் சமூக தூரப்படுத்தல்.
- வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கான தடங்கல்கள்
- குறைவான கொள்வனவுச் சக்தி

**பொருளாதாரம்**

- BOP விரிவாக்கம்
- FX குறைபாடு
- ரூபாய் மதிப்பு வீழ்ச்சி
- பணவீக்கம்

**கொள்கை நிச்சயமின்மை**

- பொருளாதார ஸ்த்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

## இடர் கலாசாரம்

இடர் கலாசாரம் என்பது பெறுமதிகள், திறனாற்றல்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் ஒரு தொகுப்பாகும். இது இடர்கள் பற்றி புரிந்துகொள்வதற்கும் வங்கியின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் நோக்கில் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் ஊழியர்களை தயார்படுத்துகிறது.

அனைத்து மட்டங்களிலுமுள்ள பணியாளர்களும் சம்பந்தப்பட்ட வியாபார இயக்கப்பாடுகளிலுள்ள இடரினை புரிந்துள்ளனர். இடர் கலாசாரமானது இடரினை உறுதிசெய்வதற்கும், வர்த்தகத்தினை மீளப் பெறுவதற்கும் மற்றும் இடர்கள் மற்றும் மூலதன மட்டங்களை நிர்வகிப்பதற்குமான ஒரு பிரதான இயக்கியாக விளங்குகிறது.

## இடர் மற்றும் திரும்பல் விட்டுக்கொடுப்பு

உரு 27

**இடர்**

- இடர் கலாசாரம்
- ஒழுங்குறுத்துகை இணக்கப்பாடு
- சிறந்த இடர் முகாமைத்துவ நடைமுறைகள்
- இடர் தணிப்பு மற்றும் இடமாற்றம்
- ஏற்றுக்கொள்த்தக்க இடர்களும் தவிர்க்கப்பட வேண்டிய இடர்களும்

**திரும்பல்**

- நிதி சார் ஸ்திரத்தன்மை மற்றும் தாக்குப்பிடிப்பு
- குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்
- இடர் சீராக்கம் பெற்ற செயலாற்றுகை
- அழுத்தத்தின் மத்தியில் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகை



IRM ஆனது வங்கியின் அனைத்துப் பாகங்களுக்குமான நியமங்கள், குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை வரையறை செய்வதன் மூலம் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான மூலோபாய அணுகலை தாபிக்கின்றது. IRM வேலைச் சட்டகமானது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படுவதோடு, ஒரு வலுவான இடர் கலாசாரத்தினை வலியுறுத்துவதற்கு துணை நிற்கும் வகையில் வங்கியினால் பொருந்திக் கொள்ளப்படுகிறது.

## இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்

உரு 28

இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமானது விவேகம் மிக்க இடர் முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் நோக்கில் குறித்த இடர்களை இனங்கண்டு, மதிப்பீடு செய்து, கண்காணித்து, அறிக்கை செய்து மற்றும் அவற்றைத் தணிப்பதற்கான மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பொருத்தமான முறையில் விருத்தி செய்து அவற்றை அமுல்படுத்துவதனை இயலச் செய்கிறது.




**கொள்கை வேலைச்சட்டகம்**
இடர் முகாமைத்துவத் தொழிற்பாடு தொடர்பில் வங்கிக்கு வழிகாட்டலை வழங்குகிறது. இடர் முகாமைத்துவம் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் ஏனைய பிரதான தேவைப்பாட்டினை தாபிக்கிறது.

**கடமைகளைப் பிரித்தல்**
மூன்று பாதுகாப்பு மட்டங்கள் மாதிரியை வரையறுத்தல்

**இடர் மாதிரிகள்**
இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல்

**இடரைப் பதிவு செய்தல்**
வங்கி எதிர்கொண்ட பிரதான இடர்கள்

**இடர் நாட்டம் பற்றிய கூற்று**
வாங்கி ஏற்றுக்கொள்ள விரும்பும் இடர் மட்டத்தினை வரையறுத்தல்

**இடர் ஆளுகை**
பணிப்பாளர்கள் சபை மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக் கூறலை வழங்குகிறது.

**முறைமைகள் மற்றும் செயலாக்கங்கள்**
கொள்கையில் உள்ள தேவைப்பாடுகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன மற்றும் கட்டுப்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன.

### கொள்கைகள் வேலைச்சட்டகம்

இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் அட்டவணை 29

| கொள்கை | உள்ளடங்கும் விடயம் |
|---|---|
| ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை | வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் |
| கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை | கடன் தொடர்பிலுள்ள இடர்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் தணித்தலுக்கான வேலைச்சட்டகம் |
| சந்தை மற்றும் திரவத்தன்மை பற்றிய இடர் முகாமைத்துவக் கொள்கை | சந்தை மற்றும் திரவத்தன்மை பற்றிய இடர்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் தணித்தலுக்கான வேலைச்சட்டகம் |
| இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை | இயக்கப்பாட்டு இடர்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் தணித்தலுக்கான வேலைச்சட்டகம் |
| அழுத்தச் சோதனைக் கொள்கை | வங்கியின் அழுத்தச் சோதனை பற்றிய வேலைச்சட்டகத்தினை சுட்டிக்காட்டுதல் |
| இடர் முகாமைத்துவ வெளிப்பாட்டுக் கொள்கை | இடர் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள். |
| உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை (ICAAP) | வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை (ICAAP) முன்னெடுப்பதற்கான வேலைச்சட்டகத்தினை வழங்கல். |
| மாதிரி இடர் முகாமைத்துவக் கொள்கை | நிதி மற்றும் ஒழுங்குறுத்துகை பற்றிய அறிக்கையிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலில் பயன்படுகின்ற மாதிரிகளின் இடரை முகாமை செய்வதற்கானதொரு நடைமுறையினை வழங்குவதற்கான கொள்கை |

## கடமைகளைப் பிரித்தல்

அனைத்துப் பணியாளர்களும் தமது தனிப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய சூழமைவினுள் உள்ள இடர்களை உணர்ந்து அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளனர். “மூன்று பாதுகாப்பு மட்டங்கள” எனும் மாதிரியானது கடமைகளை பிரித்து வழங்குவதன் மூலம் தெளிவான பாதுகாப்பு மட்டங்களை வழங்குகிறது.

முதல் மட்டமானது, வருமான ஈட்டுகை மற்றும் வாடிக்கையாளரை எதிர்கொள்ளும் பிரதேசங்கள் மற்றும் நிதி, திறைசேரி, மனித வளம் போன்றன உள்ளிட்ட சம்பந்தப்பட்ட ஆதரவுத் தொழிற்பாடுகள் போன்றவற்றில் பணியாற்றுகின்ற அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்குகிறது. இந்த முதல் மட்டமானது, தாம் ஊகிக்கின்ற இடர்களை இனங்கண்டு அவற்றை முகாமைத்துவம் செய்தல், கட்டுப்பாட்டு வேலைச்சட்டகம் ஒன்றினைத் தாபித்தல் மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாட்டுத் தொழிற்பாடுகளைக் கொண்ட இரண்டாம் மட்டத்திற்கு இடர் நிகழ்வுகளை அதிகரித்து வழங்கல் போன்ற பொறுப்பினைக் கொண்டுள்ளது.

எல்லைகளையும் விதிமுறைகளையும் தாபிப்பதே இரண்டாம் மட்டத்தின் வகிபாகம் ஆகும். இதன் கீழேயே வங்கியின் இடர் நாட்டத்திற்கு இணங்க முதல் மட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய எல்லைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு எதிராக முதல் மட்டத்தின் செயலாற்றுகையினை கண்காணிப்பதும் இதன் வகிபாகமாகும்.

மூன்றாவது பாதுகாப்பு மட்டமானது உள்ளக கணக்காய்வாகும். ஆளுகை, இடர் முகாமைத்துவம் ஆகியவற்றின் மீது ஒரு சுயாதீன உத்தரவாதத்தினை வழங்குவதும் மற்றும் தற்போதைய, முறையான மற்றும் வளர்ந்து வரும் இடர்கள் மீது கட்டுப்பாட்டினை வழங்குவதும் இதன் வகிபாகமாகும்.

ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களால் வழங்கப்படுகின்ற உள்ளீடுகள் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் போன்றவற்றுக்கு வசதியளிப்பதோடு, இது பங்கீடுபாட்டாளர்களுக்கான ஒரு மேலதிக உத்தரவாதமாகவும் விளங்குகின்றது.

டுனைநௌ ழக னநகநநஉெந னை சுளைம ஆயயெபநஅநவெ

உரு 29




## இடர் மாதிரிகள்

மாதிரி என்பது ஒரு அளவிடக்கூடிய முறையாகும். இது தீர்மானம் எடுக்கும் நோக்கில், உள்ளீட்டுத் தரவுகளை அளவிடக்கூடிய வெளியீடு ஒன்றை பெறுவதற்குச் செயலாக்கம் செய்வதற்காக பயன்படுத்துகிறது. இடர் மாதிரிகள் இடர்களை இனங்காண்பதற்கும் அவற்றை மதிப்பிடுவதற்கும் மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்படுகின்றன. ICAAP மாதிரி, இடரிலுள் பெறுமதி (VaR) மாதிரி மற்றும் உள்ளக தரப்படுத்தல் மாதிரி போன்றன இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்காக வங்கியினால் உபயோகிக்கப்படுகின்ற பிரதான மாதிரிகளாகும். மதிப்பீட்டு மாதிரிகளிலிருந்து எழுகின்ற இடர்கள் வங்கியின் மாதிரி இடர் முகாமைத்துவக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பொருந்திக் கொள்வதன் மூலம் முகாமை செய்யப்படுகின்றன.

## இடர் பதிவு

இடர் பதிவானது தற்போதைய மற்றும் எதிர்கால இடர்களை இனங்காணக் கூடியதொரு ஒரு கருவியாகும். இது இனங்காணப்பட்ட இடர்கள் பற்றிய தகவல்கள், இடரின் மட்டம், இடருக்குரியவர்கள் மற்றும் இடர்களைத் தணிப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் போன்ற தகவல்களைக் கொண்டுள்ளது.

இடர் முகாமைத்துவப் பிரிவானது (RMD) இடர் மதிப்பீட்டு மாதிரிகளை உபயோகித்து இடர் பதிவினை அவ்வப்போது இற்றைப்படுத்துகிறது.

## இடர் நாட்டம் பற்றிய கூற்று

இடர் நாட்டம் பற்றிய கூற்றானது இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தின் ஒரு இன்றியமையாத அங்கமாகும். இது விரும்பத்தக்க முன்னோக்கிய இடர்த்தன்மையை சுட்டிக் காட்டுகிறது. இது கொள்கை, மூலோபாயம் மற்றும் செயலாக்கம் போன்றவற்றை இலகுவாக்குகின்றது.

இடர் நாட்டமானது வங்கியானது அதன் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அது ஏற்றுக் கொள்ள விரும்புகின்ற இடர் மட்டமாகும். இது வியாபாரத்தின் பிரதான அம்சங்களையும் மற்றும் அக்கறைதாரர்களின் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிக்கின்றது.

வங்கியின் இடர் நாட்டம் பற்றிய கூற்றானது வியாபார இயக்கங்கள் மற்றும் இடர்களை சீரமைப்பதன் மூலம் பெறுமானத்தினை மேம்படுத்துகிறது. இது ஒரு எதிர்பார்க்கப்பட்ட இடருக்குப் பொருத்தமான திரும்பல் மிகுதியை வழங்கும் வகையில் வியாபாரச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான ஒரு வழிகாட்டியாகச் செயற்படுகின்ற அதேவேளை, ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் மட்டங்களினுளேயே இது காணப்படுகிறது.

பணிப்பாளர்கள் சபையினால் ஒப்புதலலிக்கப்பட்ட இடர் நாட்டம் பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட பிரதான விடயங்களுள் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- முனைப்பான இடர் முகாமைத்துவத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன வியாபாரத்தின் ஒரு அங்கமாக வங்கி ஊகிக்கின்ற இடர்கள்.
- ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க இடர் நாட்டத்தினுள் பேணப்படுவதற்காக முனைப்பாக முகாமைத்துவம் செய்யப்படுகின்ற வியாபாரத்தின் ஒரு அங்கமாக வங்கி ஊகிக்கின்ற இடர்கள்.
- வங்கியானது பூச்சிய இடர் சகிப்புத் தன்மையினைக் கொண்டிருப்பதற்கான இடர்கள்.

வங்கியானது பெறுமானங்களுக்கும் மற்றும் நிதிசார் நிலைமைக்கும் உரிய பாதகமான விளைவுகளை குறைத்துக் கொள்ளும் நோக்கில் தரப் பண்பு மற்றும் அளவுப் பண்பு ஆகியவற்றை உபயோகித்து கூட்டாண்மை மட்டத்தில் இடர் நாட்டத்தினை தாபிப்பதில் மேலிருந்து கீழான அணுகுமுறை ஒன்றினை உபயோகித்து வருகிறது. கூட்டாண்மை மட்டத்திலான அளவுப் பண்பு சார் இடர் நாட்டமானது பிரதானமாக மூலதனப் போதுமை, திரவத் தன்மை, இலாபம் மற்றும் ஏனைய விவேகம் மிக்க தேவைப்பாடுகள் மீது அவதானம் செலுத்துகின்றது.

தரப் பண்பு சார்ந்த கூற்றானது, வங்கி பூச்சிய இடர் நாட்டத்தைக் கொண்டிருப்பதற்கான இடர்களையே பிரதானமாகக் கொண்டுள்ளது. வியாபாரத் தொடர் மட்டத்தில்

இடர் நாட்ட எல்லைகளாக குறிப்பாக கடன், பங்குமூலதனம், வட்டி வீதம், அந்நியச் செலாவணி மற்றும் செயற்பாட்டு இடர் போன்ற இடர் வகைகள் மூலமான விடயங்கள் காணப்படுகின்றன. மேலிருந்து கீழான மற்றும் அடியிலிருந்து உச்சி வரையான அணுகலை ஒருமுகப்படுத்துவதானது, வரையறுக்கப்பட்ட கட்டமைப்புகள், வரவு செலவு மதிப்பிடப்பட்ட மட்டங்கள் மற்றும் பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகள் போன்றவற்றை உபயோகித்து அனேக விவேகம் மிக்க இடர் நாட்ட மட்டங்களைத் தாபிப்பதற்காக பிரிவு மட்டத்திலும் மற்றும் உற்பத்தித் தொடர் மட்டத்திலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

### பிரதான இடர் நாட்டம்

அட்டவணை 30

| அவதானம் செலுத்தப்பட்ட விடயம் | சுட்டி | 2021 – உண்மைப் பெறுமதி (வங்கி) % | இடர் நாட்டத்திற்கு எதிராக செலயாற்றுகை |
|---|---|---|---|
| இலாபத் தன்மை | தேறிய வட்டி எல்லை | 3.68 | ✔ |
| | சராசரி பங்குதாரரின் நிதியங்கள் மீதான இலாபம் | 34.14 | ✔ |
| | சராசரி சொத்துக்கள் மீதான இலாபம் | 1.86 | ✔ |
| மூலதனப் போதுமை | பொதுப்பங்கு மூலதன அடுக்கு 1 | 17.17 | ✔ |
| | அடுக்கு 1 | 18.60 | ✔ |
| | மொத்த மூலதனம் | 20.83 | ✔ |
| திரவத் தன்மை | திரவ காப்பு விகிதம் | 240.43 | ✔ |
| | நியதிச்சட்டத் திரவத்தன்மை விகிதம் | 59.63 | ✔ |
| | தேறிய நிலையான நிதி விகிதம் | 160.78 | ✔ |
| உந்துசக்தி | முடுக்கி விகிதம் | 8.92 | ✔ |

இடர் மட்டங்கள்

- ✔ இடர் நாட்ட மட்டத்தினுள்
- ✔ அதிகபட்ச சகிப்பு மட்டத்திற்குள்
- ✔ அதிகபட்ச சகிப்பு மட்டத்திற்கு கீழே

வங்கியானது மூலதன போதுமை திரவத்தன்மை மற்றும் உந்துசக்தி ஆகியவற்றுக்காக தாபிக்கப்பட்ட இடர் நாட்ட மட்டங்களினுள் பேணப்பட்டது.

வங்கியின் இலாபச் சுட்டிகள் 2020 ஆம் ஆண்டிடை விட 2021 ஆம் ஆண்டில் மேம்பாடடைந்துள்ளதோடு, வங்கியின் இடர் நாட்டத்தினுள் காணப்பட்டது.

## இடர் ஆளுகை

இடர் முகாமைத்துவ நடைமுறைகள் ஒரு உயர் நியமதர ஆளுகையினைப் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் வங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இது இடர் முன்னெடுப்புச் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையிலும் விவேகம் மிக்க முறையிலும் மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் ஆகியோரை இயலச் செய்கிறது. பணிப்பாளர்கள் சபையானது ஆளுகை வேலைச் சட்டகத்தின் உயர் மட்டத்தில் செயற்படுகிறது.

சிரேஷ்ட முகாமைத்துவமானது பல்வேறு இடர் பிரதிபலிப்புக்களை முகாமை செய்யும் வகையிலும் மற்றும் உள்ளகக் கொள்கைகள் பொருத்தமான முறையில் தாபிக்கப்பட்டு அவை இணக்கமுறுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் ஒருங்கிணைந்த வேலைச்சட்டகம் ஒன்றை தாபித்துள்ளதை பணிப்பாளர்கள் சபையானது அதன் இடர் கண்காணிப்பு வகிபாகத்தின் ஊடாக உறுதிப்படுத்துகிறது. நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத அனைத்து இடர் வகைகளும் வங்கியின் வேலைச்சட்டகத்திற்கு இணங்க முகாமைத்துவம் செய்யப்பட்டு அறிக்கை செய்யப்படுகிறது.

## சபை மட்ட இடர் முகாமைத்துவக் குழுக்கள்

அட்டவணை 31

| குழு | பொறுப்பு |
|---|---|
| சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) | BIRMC ஆனது, ஒரு வினைத்திறன் மிக்க இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினைப் பரிந்துரைக்கும் நோக்கில் தனது இடர் சார் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பணிப்பாளர்கள் சபைக்கு உதவுகிறது. BIRMC இன் பிரதான நோக்கம் யாதெனில், இடர் நாட்டத்தினைத் தாபித்தல், இடர் நாட்டத்திற்கு எதிராக இடர் விபரத்தினை மதிப்பீடு செய்தல் ICAAP மற்றும் மேற்பார்வை இணக்கப்பாட்டுத் தொழிற்பாடுகளை பரிந்துரைத்தல் போன்றனவாகும். |
| டீழயசன யுரனவை ஊழஅஅவைவநந (BAC) | BAC ஆனது உள்ளக கட்டுப்பாட்டுச் செயலாக்கம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு ஆகியவற்றின் பயனுறுதி மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை கண்காணிக்கின்றது. மேலும் BAC ஆனது தகவல் ஒழுங்கு, பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளின் உபயோகம் மற்றும் சட்டவாக்க மற்றும் ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டுப் பிரச்சினை போன்றவற்றை உறுதிப்படுத்துகிறது. |

தகவலளிக்கப்பட்ட தீர்மானத்தினை மேற்கொள்ளும் நோக்கில் சிறந்த உள்ளகத்தினை வழங்கி அனைத்து வியாபாரத் தொடர்களிலுமுள்ள தற்போதைய மற்றும் எழக்கூடிய இடர்கள், போக்குகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை உணர்ந்து கொள்வதில் அவதானம் செலுத்தி முகாமைத்துவக் குழு வேலைச் சட்டகத்தினைத் தாபிப்பதன் மூலம் சிரேஷ்ட முகாமைத்துவமானது நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத இடர்களுக்கு எதிராக ஆளுமை வன்மையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## முகாமைத்துவ மட்ட இடர் முகாமைத்துவக் குழு

அட்டவணை 32

| குழு | பொறுப்பு |
|---|---|
| கடன் குழு (CC) | கடன் குழுவானது கடன் குறித்தான தொழிற்பாடுகளில் நிகழக்கூடிய கடன் இடர்கள் மற்றும் இயக்கப்பாட்டு இடர்களை முகாமை செய்வதற்கான பொறுப்பினைக் கொண்ட உயர் மட்ட முகாமைத்துவக் குழுவாகும்.<br><br>இக் குழுவானது வங்கியின் கடன் பற்றிய கொள்கைகளை அவ்வப்போது மீளாய்வு செய்கிறது.'. அமுல்படுத்துகிறது. இது ஒப்படைக்கப்பட்ட உத்தியோகபூர்வ எல்லைகளினுள் கடனுக்கு ஒப்புதலளித்தல் மற்றும் பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலுக்காக கடன் வசதியை பரிந்துரைத்தல் போன்ற விடயங்களில் ஈடுபடுகிறது. |
| சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு (ALCO) | ALCO ஆனது உயர் மட்ட முகாமைத்துவக் குழுவாகும். இது வங்கியின் சந்தை பற்றிய இடர் மற்றும் திரவத்தன்மை பற்றிய இடர் போன்றவற்றை முகாமை செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இது முன்னர் தீர்மானிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர்.'.நேர்பயன் விகிதம் ஒன்றை அடையும் நோக்கில் சொத்து மற்றும் பொறுப்புக்களின் அளவு, கலவை, முதிர்ச்சி நிலை, வட்டி வீதம், தரப் பண்பு மற்றும் திரவத்தன்மை போன்ற விடயங்களை முகாமைத்துவம் செய்வதற்கான இலக்கினைக் கொண்டுள்ளது.<br><br>ALCO இன் தொழிற்பாடானது, வங்கியின் குறுங்கால இலாபங்கள், நீண்டகால ஈட்டல்கள் மற்றும் நீண்டகால கடன் தீர்க்கும் ஆற்றல் போன்றவற்றை ஸ்தீரப்படுத்தும் நோக்குடன் மூலதனக் கட்டமைப்பு, பொருள் விலையிடல், நிதியிடல் மற்றும் முதலீடுகள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு ஆரம்ப மற்றும் முடிவு ஐந்தொகை நிலைகளை முகாமைத்துவம் செய்தல் குறித்தான கொள்கைத் தீர்மானங்களையும் உள்ளடக்குகின்றது. |
| செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு (ORMC) | ORMC ஆனது வங்கியின் இயக்கப்பாட்டு இடரினை முகாமைத்துவம் செய்து இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தினை அமுல்படுத்துவதோடு, வங்கியின் இயக்கப்பாட்டு இழப்புக்களை குறைக்கும் நோக்கில் உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஒருமுகப்படுத்தலைப் பேணுதல், கொடுக்கல் வாங்கலில் தவறுகளைக் குறைத்தல் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் போன்றவற்றுக்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. |
| முதலீட்டுக் குழு (IC) | முதலீட்டுக் குழுவானது வங்கியின் முதலீட்டுத் தொகுப்புக்களிலுள்ள இடர்களை முகாமைத்துவம் செய்கின்ற உயர் மட்ட முகாமைத்துவக் குழுவாகும். இக் குழுவானது வங்கியின் முதலீட்டுக் கொள்கைக் கூற்றினை (IPS) மீளாய்வு செய்து அதனை நடைமுறைப்படுத்துகிறது.<br><br>இக் குழுவானது ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ மட்டங்களினுள் முதலீடுகளுக்கு (அரசாங்க முறிகள், பங்குமூலதனங்கள் மற்றும் ஏனைய நிதி ஆவணங்கள்) ஒப்புதல் வழங்குவதற்கு ஈடுபடுவதோடு, பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலுக்கான முதலீடுகளுக்கு பரிந்துரை வழங்குகிறது. |
| தகவல் பாதுகாப்புக் குழு (ISC) | தகவல் பாதுகாப்புக் குழுவானது வங்கியின் தகவல் பாதுகாப்புக் கொள்கையினை அமுல்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்காக தாபிக்கப்பட்ட உயர் மட்ட முகாமைத்துவக் குழுவாகும். இது அனைத்து தகவல் முறைமைகளும் முக்கியமான தகவல்களும் வங்கி மூலமாக பாதுகாப்பாக உள்ளதைக் மேற்பார்வை செய்வதோடு, தனியுரிமை மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை போன்ற விடயங்களுடன் இசைவுறுவதையும் மேற்பார்வை செய்கிறது. |

பிரதம இடர் அதிகாரியை (CRO) தலைவராகக் கொண்ட RMD ஆனது BIRMC இற்கும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கும் அறிக்கை செய்கிறது. RMD ஆனது இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகத்தினை BIRMC இற்கு பரிந்துரைக்கின்றது. RMD ஆனது குறிப்பாக கடன் இடர் முகாமைத்துவ அலகு (CRMU), சந்தை இடர் முகாமைத்துவ அலகு (MRMU)/ திறைசேரி மத்திய செயலகம் (TMO) மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் (ORMU) ஆகிய மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது. RMD ஆனது பணிப்பாளர்கள் சபையினால் பரிந்துரைக்கப்படுகின்ற கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் எல்லைகளுக்கு எதிரான அனைத்து இடர்களையும் சுயாதீனமாக கண்காணிக்கின்றது. இடர் மதிப்பாய்வுகள் மூலம் பெறப்பட்ட சுயாதீன கண்டறிதல்கள் முகாமைத்துவக் குழு, BIRMC மற்றும் பணிப்பாளர்கள் சபை ஆகியோருக்கு, குறித்த இடர்களை இலகுவாக்கல் மற்றும் தடுப்பு மற்றும் சரிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவற்றுக்காக அறிக்கை செய்யப்படுகிறது.

இணக்கப்பாட்டு அதிகாரியைத் தலைவராகக் கொண்ட இணக்கப்பாட்டு அலகானது அனைத்து ஏற்புடைய சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அனைத்திற்கும் இசைவுறுவதை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. இந்த அலகானது மாறுகின்ற இணக்கப்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப உரியவாறு இற்றைப்படுத்திச் செயற்படுவதோடு, புதிய பணிப்புரைகள் சம்பந்தப்பட்ட பணியாட்டொகுதியினர் மத்தியில் சரியான முறையில் பகிரப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் உரிய பிரிவுகள்/கிளைகளுடன் தொடர்பினைப் பேணி வருகிறது.

**இடர் முகாமையின் ஆளுகை கட்டமைப்பு (செயற்பாட்டு அறிக்கையிடல்)**

உரு 30




BIRMC - சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு
BAC - சபைக் கணக்காய்வுக் குழு
GM/CEO - பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
ISC - தகவல் பாதுகாப்புக் குழு
ORMC - செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு
ALCO - சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு
CC - கடன் குழு
IC - முதலீட்டுக் குழு
CRMU - கடன் இடர் முகாமைத்துவ அலகு
ORMU - செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்
MRMU/TMO - சந்தை இடர் முகாமைத்துவ அலகு/திறைசேரி மத்திய செயலகம்

### முறைமைகள் மற்றும் செயலாக்கங்கள்

IRM வேலைச்சட்டகமானது நான்கு பிரதான இடர்களை இனங்காண்பதோடு, இடர் முகாமைத்துவம் சார்ந்த தொடர்புபட்ட பொறுப்புக்களையும் எதிர்பார்ப்புக்களையும் வழங்குகிறது. கடன் இடர், சந்தை இடர் (அதாவது, பங்குமூலதனம், வெளிநாட்டு நாணயம் மற்றும் வட்டி வீதம்), இயக்கப்பாட்டு இடர் மற்றும் திரவத்தன்மை சார் இடர் ஆகியனவே இந்த பிரதான நான்கு இடர்களுமாகும். இடர்கள் முகாமைத்துவத்திற்கு அறிக்கை செய்யப்படுவதோடு, சபைக் குழுக்கள் பிரதான இடர்கள் மற்றும் தற்போதைய ஏனைய அனைத்து மற்றும் எதிர்காலத்தில் எழக்கூடிய இடர்கள் பற்றி கலந்துரையாடுகின்றன. பிரதான இடர்களும் மற்றும் இடர்களை முகாமை செய்வதற்கு பயன்படுகின்ற முறைமைகள் மற்றும் செயலாக்கங்கள் போன்றவற்றுடன் கூடிய ஏனைய இடர்களும் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

### கடன் இடர்

கடன் இடரானது, கடன் வாங்குபவர் அல்லது எதிர்த் தரப்பினர் தமது நிதி அல்லது ஒப்பந்தக் கடப்பாடுகளை எதிர்கொள்ளத் தவறுவதன் காரணமாக ஏற்படக்கூடிய இழப்புக்கான வாய்ப்பாகும். இந்த வெளிப்பாடுகள் கடன்கள், முற்பணம், கடப்பாடுகள் மற்றும் தற்செயல் செலவினம் போன்றவற்றை பிரதானமாகக் கொண்டிருக்கும்.

வங்கிக்கான கடன் இடரானது பிரதானமாக எதிர்த் தரப்பினரின் தவணை தவறல் இடர், ஒருமுகப்படுத்தப்பட்ட இடர், செலுத்தித் தீர்த்தல் இடர் மற்றும் எஞ்சிய கடன் இடர் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

### கடன் வெளிப்பாடு

கடன் வழங்கும் செயற்பாடுகள் வங்கியின் பாரிய கடன் இடர் வெளிப்பாட்டினை உருவாக்குகிறது. கொவிட்-19 தொற்று நோய் காரணமாக நாட்டில் நிலவிக் காணப்பட்ட சவால் மிக்க பொருளாதார நிபந்தனைகளுக்கு மத்தியில், கடன்களும் முற்பணங்களும் 4.3 சதவீதத்தினால் அதிகரித்ததோடு, கடன் இடருக்கான அதிகபட்ச வெளிப்பாடானது, வங்கியின் மொத்த சொத்துக்களின் 97.2 சதவீதத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், 14.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 33

| டிசம்பர் 31 இலுள்ளவாறு | 2021 - அதிகபட்ச வெளிப்பாடு (ரூ. '000) | | | 2020 - அதிகபட்ச வெளிப்பாடு (ரூ. '000) | | | மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த நிலுவை பெறுமதி | கடன் குறைவு | நிகர வெளிப்பாடு | மொத்த நிலுவை பெறுமதி | கடன் குறைவு | நிகர வெளிப்பாடு | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **7,656,263** | **225** | **7,656,038** | 6,492,060 | 97 | 6,491,963 | 17.9% |
| வங்கிகளில் இடப்பட்டவை | **7,122,376** | **1,678** | **7,120,698** | 13,255,210 | 1,711 | 13,253,499 | -46.3% |
| பெறப்பட்ட நிதிப் பத்திரம் | **–** | **–** | **–** | 19,897 | – | 19,897 | -100.0% |
| இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் | | | | | | | |
| – நியாயமான பெறுமதியில் கணக்கிடப்பட்டவை | **19,572,933** | **–** | **19,572,933** | 11,221,746 | – | 11,221,746 | 74.4% |
| **கடன்தீர் செலவில் நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| – கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **550,912,009** | **11,970,220** | **538,941,789** | 525,786,983 | 8,991,823 | 516,795,160 | 4.3% |
| – படுகடன் மற்றும் ஏனைய பத்திரங்கள் | **936,735,215** | **1,385,163** | **935,350,052** | 754,336,347 | 103,002 | 754,233,344 | 24.0% |
| OCI மூலம் நியாய பெறுமதியில் கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | **13,817,594** | **–** | **13,817,594** | 15,271,822 | – | 15,271,822 | -9.5% |
| **ஐந்தொகையில் அதிகபட்ச வெளிப்பாடு (மொத்த அடிப்படையில்)** | **1,535,816,390** | **13,357,286** | **1,522,459,104** | 1,326,384,065 | 9,096,633 | 1,317,287,431 | 15.6% |
| **ஐந்தொகைக்கு அப்பாலான அதிகபட்க வெளிப்பாடு** | | | **11,853,668** | | | 22,004,476 | -46.1% |
| **அதிகபட்ச கடன் வெளிப்பாடு** | | | **1,534,312,772** | | | 1,339,291,907 | 14.6% |

## கடன் மற்றும் கூட்டாண்மைக் கடன் ஆவணப் பிரிவு

வரைபு 58

**உற்பத்தியின் அடிப்படையிலான வெளிப்படுகை**

**2021**




**2020**




| | 2021 | 2020 |
|---|---|---|
| **A –** வீடு மற்றும் ஆதனக் கடன்கள் | 11.7% | 13.6% |
| **B –** பிரத்தியேகக் கடன் | 40.5% | 38.0% |
| **C –** வைப்புகளுக்கு எதிராக கடன்கள் | 4.6% | 5.4% |
| **D –** அடகு | 7.7% | 7.6% |
| **E –** வாகனக் கடன்கள் | 0.2% | 0.3% |
| **F –** தவணைக் கடன் - அரச தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் | 13.6% | 23.3% |

| | 2021 | 2020 |
|---|---|---|
| **G –** தவணைக் கடன்கள் - வங்கி மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் | 1.6% | 4.1% |
| **H –** தவணைக் கடன்கள் - கூட்டாண்மை நிறுவனம் | 1.0% | 1.4% |
| **I –** கடன் ஆவணங்களிலான முதலீடு - அரச தொழில் முயற்சி நிறுவனங்கள் | 18.6% | 5.7% |
| **J –** கடன் ஆவணங்களிலான முதலீடு - வங்கி மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் | 0.4% | 0.5% |
| **K –** கடன் ஆவணங்களிலான முதலீடு - கூட்டாண்மை நிறுவனங்கள் | 0.1% | 0.1% |

வரைபு 59

**வட்டி வீத அடிப்படையில் வங்கி மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் வெளிப்படுகை (2021)***




**A –** முதலீட்டுத் தரம் **B –** முதலீடு அற்றவை
**C –** மதிப்பிடப்படாதவை

* வெளியக கடன் மதிப்பீட்டு நிறுவனங்களின் தரப்படுத்தல் அடிப்படையில்

வரைபு 60

**வட்டி வீத அடிப்படையில் கூட்டாண்மை நிறுவன வெளிப்படுகை (2021)***




**A –** முதலீட்டுத் தரம் **C –** தரப்படுத்தப்படாதவை
* வெளியக கடன் மதிப்பீட்டு நிறுவனங்களின் தரப்படுத்தல் அடிப்படையில்

பிரசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021 →

வங்கியின் சில்லறை கடன் வழங்கல் பிரிவானது பிரதானமாக 2021 இல் அறிக்கை செய்யப்பட்ட கடன் பிரிவின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தது. பிரத்தியேக கடன் வகையானது மொத்தமான கடன் வழங்கல் பிரிவில் 50.1 சதவீத அதிகூடிய பங்களிப்புடன் காணப்பட்டது.

### எதிர்த் தரப்பினர் பற்றிய இடர்

கொவிட்-19 தொற்று நோயின் மூன்றாவது அலையின் காரணமாக 2021 ஆம் ஆண்டுக் காலமானது மிகவும் சவால் மிக்கதொரு காலமாகவே விளங்கியது. இது மே மாதம் நடுப்பகுதி முதல் ஒக்டோபர் ஆரம்பம் வரையான காலத்தில் நிகழ்ந்ததோடு, இது பொருளாதார நடவடிக்கைகளுக்கு பாரிய இடையூறாகவும் சமூக இடைவெளியை வேண்டியும் மற்றும் பயணக் கட்டுப்பாடும் நாடு பூராகவும் காணப்பட்ட காலப் பகுதியாகும். இந்த கடன் இடர் பற்றிய கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத்தின் தேவைப்பாட்டினை மேலும் கடுமையாக்கியது. இந்த தொற்று நோயின் தாக்கங்கள் எதிர்த் தரப்பினர் பற்றிய இடரினையும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து அது கடன் இழப்பு ஏற்பாட்டிற்கும் வழியமைத்தது. கடன் மீளச் செலுத்தலை காலம் தாழ்த்தி சலுகை வட்டி வீதங்கள் வழங்கப்பட்ட போதிலும், இடரில் இருந்த வாடிக்கையாளர்கள் கடனை செலுத்தித் தீர்ப்பதற்காக மேலும் நிவாரணங்களை நாடினர்.

வங்கியின் மொத்த செயற்படா கடன்களின் விகிதமானது 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 2.97 சதவீதமாகும் என்பதோடு, இது 2020 இல் 2.79 சதவீதமாகக் காணப்பட்டது. இருப்பினும் இது துறையின் மொத்த செயற்படா கடன்களின் விகிதமான 4.5 சதவீதத்தை விடவும் குறைவாகும்.

2021 ஆம் ஆண்டில் கடன் குறைபாடுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 20.0 பில்லியனாக இருந்ததாடு (2020 இல் ரூபா 16.9 பில்.), இது வங்கியின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் 3.6 சதவீதமாகும் (2020 இல் 3.2 சதவீதம்). கடன் பிரிவுத் தரத்தில் ஏற்பட்ட சீர்குலைவானது ரூபா 3.0 பில்லியன் எனும் ஒரு குறைபாடுள்ள கட்டணத்தில் தாக்கம் செலுத்தியதோடு (2020 இல் ரூபா 4.7 பில். எதிரானது), ஒரு மொத்த கடன் குறைபாட்டு ஏற்பாடாக ரூபா 12.0 பில்லியன் தொகையிலும், ஆண்டு இறுதியிலுள்ளவாறு 31.5 சதவீதம் எனும் கட்டம் 3 ஏற்பாட்டுடன் தாக்கம் செலுத்தியது.

மேம்பட்ட கடன் மதிப்பீடுகள், கடன் அங்கீகாரங்கள், கடன் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம், பிந்திய ஒப்புதலுறுதிக் கண்காணிப்பு மற்றும் மீட்டெடுத்தல் முயற்சி போன்றன செயற்படா கடன்களின் மட்டங்களை கீழே கொண்டு வருவதற்கு வங்கிக்கு துணை நிற்குமென்பதோடு, கடன் ஏட்டின் தரத்தினைப் பேணுவதற்கும் பங்களிப்புச் செய்கிறது.

வரைபு 61

**செயற்படா கடன்களின் போக்கு மற்றும் வயது பற்றிய பகுப்பாய்வு**




வரைபு 62

**செயற்படா கடன்களின் மற்றும் முற்பணங்கள் எதிர் குறைபாட்டுக்கான ஏற்பாடு**




### ஒருமுகப்படுத்தப்பட்ட இடர்

ஒருமுகப்படுத்தப்பட்ட இடராது வங்கியின் ஆரோக்கியத்தினை அல்லது அதன் பிரதான இயக்கப்பாட்டினைத் தக்கவைத்துக் கொள்ளும் திறனை அச்சுறுத்தும் அளவிற்கு இழப்புக்களை உண்டாக்கும் வாய்ப்புடன் கூடிய ஒரு தனியான வெளிப்பாட்டில் அல்லது பல வெளிப்பாடுகளில் ஒரு குறைபாடுடைய பல்வகைப்படுத்தலின் இடராக எடுத்துக் கூறப்படலாம். கடன் இடர் பற்றிய ஒருமுகப்படுத்தலானது இயல்பாகவே பொதுவான அல்லது தொடர்புடைய இடர் காரணிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். இவை அழுத்தங்களை எதிர்கொள்கின்ற வேளையில் கவனம் செலுத்தும் ஒவ்வொரு பிரத்தியேக எதிர்த் தரப்பினரின் கடன் தகுதியின் மீது பாதகமான விளைவினைக் கொண்டுள்ளன. சிறந்த இடர் முகாமைத்துவச் செயலாக்கத்தினைப் பேணுவதற்கு கடன் பிரிவின் ஒருமுகப்படுத்தல் இடரினை முகாமைத்துவம் செய்வதானது ஒரு முக்கிய அம்சமாக மாறியுள்ளது.

வங்கியின் வியாபார மாதிரி மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் அதன் பங்களிப்பு மட்டம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, இடர் நாட்டம் நோக்கிய துறையானது ஒரு மிதமான மட்டத்தினைக் கொண்டுள்ளதாக இடர் நாட்டக் கூற்றில் வரையறை செய்யப்படுகிறது.

அழுத்தம் மிக்க சந்தை நிபந்தனைகளின் கீழ் மாத்திரம் வெளிக்காட்டக் கூடிய வெளிப்பாடுகளுக்கு இடையில் பரஸ்பரம் சார்ந்துள்ள விடயங்களை இனங்காணும் நோக்கில் ஒருமுக இடர் மட்டங்களை மதிப்பீடு செய்து அவற்றைக் கண்காணிக்கும் வகையில் வங்கியானது ர்ர்ஜ மற்றும் அழுத்தச் சோதனைகள் போன்ற தொழில்நுட்பங்களை உபயோகித்து வருகிறது.

குறித்த ஒருமுகப்படுத்தலானது இடர் நாட்டத்தினுள் இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில், எதிர்த் தரப்பினரின் எல்லைகளுக்கு எதிராக வங்கியின் கடன் வெளிக்காட்டல்கள் அடிக்கடி கண்காணிக்கப்பட்டு வருகிறன. மேல் மாகாணத்திற்கான உயர் புவியியல் சார்ந்த ஒருமுகப்படுத்தல் இடம்பெறுவதற்கு அனைத்து பாரிய கடன்களும் கடன் பிரிவில் முன்பதிவு செய்யப்பட்டமை காரணமாக அமைந்தது.

வரைபு 63

**புவியியல் ரீதியிலான வெளிப்படுத்தல்**

2021




2020




| | 2021 | 2020 |
|---|---|---|
| **A –** மத்திய மாகாணம் | 7.9% | 6.7% |
| **B –** கிழக்கு மாகாணம் | 2.7% | 2.3% |
| **C –** வட மத்திய மாகாணம் | 4.7% | 3.9% |
| **D –** வட மேல் மாகாணம் | 7.9% | 6.8% |
| **E –** வட மாகாணம் | 3.4% | 3.0% |

| | 2021 | 2020 |
|---|---|---|
| **F –** சப்ரகமுவ மாகாணம் | 6.0% | 4.9% |
| **G –** தென் மாகாணம் | 9.5% | 7.9% |
| **H –** ஊவா மாகாணம் | 5.4% | 4.6% |
| **I –** மேல் மாகாணம் | 52.5% | 59.9% |

வரைபு 64

**தொழிற்துறை ரீதியிலான வெளிப்படுத்தல்**

2021




2020




| | 2021 | 2020 |
|---|---|---|
| **A –** விவசாயம் மற்றும் கடற்றொழில் | 5.9% | 6.3% |
| **B –** சுற்றுலா | 0% | 0% |
| **C –** போக்குவரத்து | 0.3% | 0.3% |
| **D –** நிர்மாணத்துறை/வீடமைப்பு | 30.1% | 29.0% |
| **E –** நிதி மற்றும் வியாபாரச் சேவைகள் | 0.7% | 1.6% |

| | 2021 | 2020 |
|---|---|---|
| **F –** உட்கட்டமைப்பு | 11.4% | 18.4% |
| **G –** மின்சக்தி மற்றும் எரிசக்தி | 2.1% | 3.0% |
| **H –** கல்வி | 1.7% | 1.7% |
| **I –** பிரத்தியேகம்/அடகு/ஏனையவை | 47.8% | 39.7% |

### தேங்கிய கடன் இடர்

தேங்கிய கடன் இடரானது, அனைத்து கடன் இடர் தணிப்பு விடயங்கள் மற்றும் காரணியாக அமைந்த அனைத்து இடர்களையும் கருத்திற்கொண்ட பின்னர் எஞ்சியிருக்கும் இயல்பான இடரின் அளவினை தேங்கிய கடன் இடர் என இனங்காணப்படலாம்.

இடர் ஆளுகை வேலைச்சட்டமானது, தேங்கிய இடர் வெளிப்பாடு குறைவடைவதை உறுதிப்படுத்தும் நோக்கில் செயலாக்கங்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் கொள்கை மட்டத்தில் வரையறுக்கப்படுகின்ற கடன் இடர் தணிப்பு நுட்பங்கள் ஆகியவற்றின் பிரகாரம் வலுவான கட்டுப்பாட்டுப் பொறிமுறையினை வடிவமைக்கின்றது. மேலும், தேங்கிய கடன் இடரை முகாமைத்துவம் செய்வதில் வங்கியின் வலுவான மீட்பு நடைமுறை உதவுகிறது. தேங்கிய கடன் இடர் வெளிப்பாட்டு அதிகரிப்பானது பிரத்தியேக உத்தரவாததாரர்களினால் ஆதரவளிக்கப்படுகின்ற அதிக பிரத்தியேக கடன்களுக்கு வழியமைத்தது. 2021 இல் கடன் பிரிவின் 39.7 சதவீதமானவை பிரத்தியேக உத்தரவாதத்தினால் ஆதரவளிக்கப்பட்டன.

இருப்பினும், 30.3 சதவீத கடன் பிரிவிற்கு அரசாங்க உத்தரவாதம் ஆதரவளித்ததோடு, 12.3 சதவீதமானவற்றுக்கு அசையாச் சொத்து அடமானங்களினால் ஆதரவளிக்கப்பட்டது. இவற்றில் 9.5 சதவீதமான கடன்கள் 50 சதவீத LTV விகிதத்தையும் விடக் குறைவான விகிதத்துடன் அசையாச் சொத்தினால் ஆதரவளிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியுடனான இணக்கப்பாட்டின் பேரிலான அசையாச் சொத்துக்களின் விலை மதிப்பீடு மற்றும் மீள் மதிப்பீட்டு குறித்தான வங்கியின் கொள்கையின் அடிப்படையில், துணைப் பிணையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அசையாச் சொத்து அடமானங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

வங்கி குறித்தான வெளிநாட்டு வெளிப்படுதலும் வெளிநாட்டு வங்கிகளுடனான வைப்புக்களிலிருந்து எழுந்துள்ளதோடு, கடன் வசதிகள் மற்றும் பத்திர கடன் போன்றன மொத்த சொத்துக்களின் 0.2 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டன.

வரைபு 65

**துணைப் பிணையம் மற்றும் LTV உள்ளடக்கம் மூலமான வெளிப்பாடு**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| **A –** பிரத்தியேக உத்திரவாதம் | 39.7% | **E –** பணம் | 4.6% | **I –** கூட்டாண்மை உத்தரவாதம் | 0.0% |
| **B –** திறைசேரி உத்தரவாதம் | 30.3% | **F –** ஏனையவை | 2.9% | **J –** அசையாச் சொத்து | 12.3% |
| **C –** பாதுகாப்பற்றது | 2.0% | **G –** பெறத்தகு குத்தகை | 0.3% | ● 50 சதவீதத்திற்கும் குறைவான LTV | 77.5% |
| **D –** தங்கம் | 7.7% | **H –** அசையும் சொத்து | 0.2% | ● 50% – 75% ற்கு இடைப்பட்ட LTV | 20.9% |
| | | | | ● 75% ற்கும் மேலான LTV | 1.6% |

## கடன் இடர் மீளாய்வு

அட்டவணை 34

| இடர் உள்ளடக்கம் | விபரம் | கண்காணிப்பு/முகாமைத்துவக் கருவி | வெளிப்படுகை | தாக்கம் |
|---|---|---|---|---|
| எதிர்த் தரப்பினர் இடர் | கடன் பெறுவோர் ஒப்பந்தம் சார்ந்த காசுப்பாய்ச்சலின் இறுதித் தீர்வுக்கு முன்னரானதொரு எதிர்த் தரப்பினர் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான நிதிக் கடப்பாடுகளின் சாத்தியமான தவணை தவறல் | • வரையறைக் கண்காணிப்பு<br>• முன் எச்சரிக்கை சுட்டிகள், செயலாற்றுகை அற்ற முற்பணப் போக்குகளை கண்காணித்தல்<br>• கடன் மீளாய்வுப் பொறிமுறை<br>• கடன் தரப்படுத்தல்<br>• அழுத்தச் சோதனை | உயர்வு | தாக்கம் அதிகரிப்பு |
| ஒருமுகப்படுத்தப்பட்ட இடர் | ஒரு கைத்தொழில் துறைக்கு அல்லது புவியியல் சார்ந்த பிராந்தியத்திற்கான கடனில் எதிர்த் தரப்பினரின் சீரற்ற பகிர்வு | • ஹேர்பின்டல் - ஹேர்ச்மேன் சுட்டி<br>• வரையறைக் கண்காணிப்பு<br>• அழுத்தச் சோதனை | உயர்வு | தாக்கம் அதிகரிப்பு |
| செலுத்தித் தீர்த்தல் பற்றிய இடர் | செலுத்தித் தீர்க்கும் வேளையில் ஒப்பந்தம் ஒன்றின் விதிமுறைகளை பின்பற்றத் தவறுவதன் காரணமாக ஏற்படும் பாதிப்பு | • வரையறைக் கண்காணிப்பு<br>• முன் எச்சரிக்கைச் சுட்டிகளைக் கண்காணித்தல் | மிதமானது | தாக்கம் அதிகரிப்பு |
| தேங்கிய இடர் | ஏனைய அனைத்து இடர்களும் நீக்கப்பட்ட பின்னர் அல்லது வேறு விதமாக கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர் எஞ்சிய ஏதேனும் இடர்களின் சாத்தியம் மிக்க தாக்கம் | • கடன் காப்புச் சொத்து<br>• விலைமதிப்பு/மீள் மதிப்பினைக் கண்காணித்தல்<br>• LTV விகிதங்களை கண்காணித்தல் | மிதமானது | தாக்கம் அதிகரிப்பு |
| எல்லைப் புற இடர் | கடன் தீர்க்கும் ஆற்றல் தவிர்ந்த மற்றும் நேரடியான கடன்தீர் தகு நிலை ஈடுபாடு அல்லது கொள்கை காரணமாக விருப்பமுள்ள எதிர்த் தரப்பினர் தமது கடப்பாடுகளை எதிர்கொள்ள முடியாதவிடத்து ஏற்படக்கூடிய இடர் | • கடன் காப்புச் சொத்து<br>• வரையறைக் கண்காணிப்பு<br>• அழுத்தச் சோதனை | குறைவானது | மாற்றமில்லை |

* வருமான மற்றும் மூலதன தாக்கத்திலான வருட மாற்றம்

தாக்கம் அதிகரிப்பு　　மாற்றமில்லை　　தாக்கம் குறைவு

கொவிட்-19 தாக்க விடயப்பரப்பு மற்றும் விளைவு

அட்டவணை 35

| தாக்க விடயப்பரப்பு | விளைவு |
|---|---|
| கடன் பிரிவின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் | • பிரத்தியேகக் கடன்கள் குறித்தான உள்ளடக்க அதிகரிப்பு<br>• ஏனைய துறைகளுக்கு கடன் கொடுத்தலில் குறைவு |
| கடன் பிரிவின் தரம் | • செயலாற்றுகை அற்ற மற்றும் குறை செயலாக்கம் கொண்ட கடன்களை அதிகரித்தல்.<br>• கடன் பிரிவின் திரும்பலைக் குறைத்தல் |
| சேகரித்தல்கள் | • கடனை மீளச் செலுத்த காலம் வழங்கல்<br>• கடன்களை மீளச் சீரமைத்தல்<br>• மீட்புச் செயற்பாடுகளை காலம் தாழ்த்தல் |
| கடன்தீர் ஆற்றல் பற்றிய சுட்டிகள் | • பெறுமதி குறைவுக்கான ஏற்பாடளிப்பு<br>• கடன் இடர் மிக்க சொத்துக்களின் அதிகரிப்பு<br>• கடன் சேகரிப்புக்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணப் பாய்ச்சல்களை குறைத்தல் |

## கடன் இடர் முகாமைத்துவம்

கடன் இடர் முகாமைத்துவமானது, கடன் இடர் முகாமைத்துவக் கருவிகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் வங்கியின் கடன் செயன்முறை குறித்தான ஒவ்வொரு உப செயன்முறையிலும் உட்பொதிக்கப்படுகின்றன.

கடன் இடர் முகாமைத்துவ செயன்முறை

உரு 31

**கடன் தோற்றம்**

- கடன் விண்ணப்பம் மற்றும் மதிப்பாய்வு
- சட்டவாக்கப் பரிசோதனை
- உள்ளக இடர் தரப்படுத்தல்
- சுயாதீன இடர் மதிப்பீடுகள்.ஃ. தரப்படுத்தல் செல்லுபடியாக்கல்
- ஆதனம் பற்றிய பரிசோதனை மற்றும் விலை மதிப்பீடு
- கடனுக்கான ஒப்புதல்

**ஆவணமாக்கல் மற்றும் கடன் வழங்கல்**

- கடன் உடன்படிக்கை
- விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்
- அடமானப் பிணைப்பத்திரங்கள்
- தலைப்பு.ஃ.தீ காப்புறுதி.ஃ.டீ.ரீ.ஏ.
- பணம் வழங்குதல்
- எல்.ஆர்.எம்

**கடன் வழங்கலின் பின்னரான முகாமைத்துவம்**

- வியாபார அலகின் மூலம் கடனைச் சேகரித்தல், கண்காணித்தல் மற்றும் பின் தொடர்தல் (கிளைகள், கடன் அலகு)
- கடன் தொகுதி பற்றிய மீளாய்வு
- வரையறை பற்றிய கண்காணிப்பு
- மீளப்பெறல் பற்றிய செயற்பாடுகள்

### கடன் தோற்றம்

சில்லறை கடன் வழங்கலுடன் தொடர்புடைய கடன் விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறை ஆகியன கடன் உத்தியோகத்தர்கள், கிளை அலுவலக மற்றும் தலைமை அலுவலக கடன் பிரிவிலுள்ள முகாமையாளர்கள் ஆகியோருக்கிடையிலான பணியாகும் என்பதோடு, இதற்கான ஒப்புதல் செயன்முறையானது பல அதிகார மட்டங்களினால் வழங்கப்படுகிறது.

கூட்டாண்மைக் கடன் வழங்கலானது, கூட்டாண்மை நிதிப் பிரிவிலுள்ள வாடிக்கையாளர் தொடர்பு உத்தியோகத்தர் மற்றும் முகாமையாளர்களினால் துல்லியமாக மதிப்பீடு செய்யப்படுவதோடு, உள்ளக இடர் தரப்படுத்தல் மாதிரியை உபயோகித்து உள்ளக இடர் தரப்படுத்தலுக்கும் ஒதுக்கப்படுகிறது. இந்த கடன் மதிப்பீடுகள் மற்றும் தரப்படுத்தல் மதிப்பாய்வுகளானவை சுயாதீன மதிப்பாய்வுக்கு உட்படுவதோடு, RMD இன் CRMU மூலம் உறுதிசெய்யப்படுகிறது.

வங்கியானது அசையும்/அசையா ஆதனங்கள் தொடர்பில் ஒரு இரண்டாவது அடமான வழியாக துணைப் பிணை ஆவணத்தினை உத்தரவாதத்தின் (திறைசேரி, கூட்டாண்மை அல்லது நபர்) வடிவமாக பெற்றுக்கொள்கிறது. ஒழுங்குறுத்துகைப் பணிப்புரைகளுக்கு அமைவாக விருத்தி செய்யப்பட்ட உள்ளக் கொள்கையின் பிரகாரம் ஆதன அடமானங்களுக்கானதொரு ஒழுங்குமுறையான மீள் பெறுமதியிடல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சில்லறைக் கடன் வசதிகளுக்கான ஒப்புதலானது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்ற அதிகார மட்டங்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தொடக்கநிலைக்கு மேலான வசதிகளுக்கான ஒப்புதலைப் பெறுவதற்கு கடன்குழுவிற்கும் பணிப்பாளர்கள் சபைக்கும் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுக் கடன் வசதியானது CC இற்கும் பணிப்பாளர்கள் சபைக்கும் அவர்களின் ஒப்புதலுக்கா பிரதிப் பொது முகாமையாளரினால் சிபாரிசு செய்யப்படுகின்றது.

### ஆவணமாக்கல் மற்றும் கடன் வழங்கல்

கடன் செயன்முறையில் உள்ள இயக்கப்பாட்டு இடரைக் குறைக்கும் நோக்கில் கடன் ஆவணமாக்கல்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. இது போதுமை மற்றும் கடன் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல், KYC ஆவணங்கள், வருமானம், துணை பிணை ஆவண மதிப்பீட்டு ஆவணங்கள், அடமானம்/ உத்தரவாதப் பிணைகள், ஏனைய சட்ட ரீதியான ஆவணங்கள் மற்றும் பணம் வழங்கப்படுவதற்கு முன்னதான காப்புறுதி போன்றவற்றை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றது.

LRM செயலாக்கத்தில், கடன் ஏட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்காக கடன் பத்திரங்கள் மற்றும் கடன் செயலாக்கம் ஆகியன முழுமையடைவதை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு மாதிரி அடிப்படையில் கூட்டுறவு மற்றும் சில்லறைக் கடன் வசதிகளுக்காக மீளாய்வுகள்

மேற்கொள்ளப்படுகின்றன. LRM இலிருந்தான அவதானிப்புகள் அவை பற்றிய உடனடியான சரிப்படுத்தலுக்காக கடன் அதிகாரியுடன் கலந்துரையாடப்படுகின்றன.

பணம் வழங்கல் இரட்டைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுகின்றது. இந்தச் செயலாக்கமானது தாபிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டினுள் வாடிக்கையாளரின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப நிதிகள் இருப்பதனை உறுதிப்படுத்துகிறது.

### கடன் வழங்கலின் பின்னரான முகாமைத்துவம்

கடன் சேகரிப்பினைக் கண்காணிப்பதானது ஒரு தொடர் செயலாக்கமாக விளங்குவதோடு, இது முன் வரிசைப் பணியாட்டொகுதியினரினால் மேற்கொள்ளப்படுகின்றது. கொவிட்-19 தொற்று நோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட கடன் பெற்றோருக்கு கடனை மீளச் செலுத்துவதற்கான சலுகைகள் வழங்கப்பட்டன. இருப்பினும், தொற்று நோயினால் பாதிக்கப்படாத செயலாற்றுகை இன்றிய கடன் பெற்றோருக்கு மென் மீட்புச் செயற்பாடுகள் மூலம் கடன் அறவிடப்பட்டன. இது கடன் பிரிவின் தரத்தினைப் பாதிக்காதவாறும் வங்கியின் இடர் நாட்டத்திற்கு ஏற்ற வகையிலும் மேற்கொள்ளப்பட்டது.

வங்கியானது மட்டுப்படுத்தப்பட்ட வேலைச்சட்டகத்திற்குள்ளான தொழிற்துறைகள் மற்றும் இடர் மிகுந்த சொத்து வகையாக்கங்களின் அடிப்படையில் கடன் வெளிப்பாடு வரையறைகளை தாபித்துள்ள அதேவேளை, இடர் நாட்ட மட்டங்கள் கடன் பிரிவின் தரம், ஒருமுகப்படுத்தல் மற்றும் திரும்பல்களைக் கண்காணிக்கும் வகையில் தாபிக்கப்பட்டுள்ளன. கடன் வழங்கும் செயற்பாடுகள் இடர் நாட்ட வரையறையினுள் மேற்கொள்ளப்படுவதையும் மற்றும் உள்ளக ரீதியிலும் ஒழுங்குறுத்துகையாளரினாலும் தாபிக்கப்படுகின்ற ஒற்றை கடன் பெறுனர் வரையறைகள் பொருந்திக் கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்தும் நோக்கில் அவை வரையறை வேலைச்சட்டகத்திற்கு ஏதிராக அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

CRMU ஆனது, வங்கியின் கடன் பிரிவின் தரத்தினை மோசமடையச் செய்யக் கூடிய நேரகால எச்சரிக்கைச் சைகைகளை இனங்காணும் நோக்கில் கடன் பிரிவினை கண்காணித்து வருகிறது. உற்பத்தி வாரியான பகுப்பாய்வுகளும் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, சாத்தியம் மிக்க பாதகமான நகர்வுகள்∴ ஒருமுகப்படுத்தல்களை இனங்காணும் வகையில் தற்காலிக அடிப்படையிலும் இவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுகள் குறித்தான அவதானங்கள், மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காகவும் கொள்கை மாற்றங்களுக்காகவும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

*2021 ஆம் ஆண்டுக் காலத்தின் போதான கடன் இடர் முகாமைத்துவ முன்னெடுப்புகள்*

**கொள்கை வேலைச்சட்டகம்**

- வங்கியின் கடன் இடர் முகாமைத்துவக் கொள்கையானது மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது.
- இடர் நாட்ட எல்லைகளும் மற்றும் கடன் எல்லைகளும் மீளாய்வு செய்யப்பட்டன.

**கண்காணிப்பு**

- கடன் இடர் விபரங்கள் BIRMC இற்கும் பணிப்பாளர்கள் சபைக்கும் அவ்வப்பொழுது சமர்ப்பிக்கப்படுகின்றன.
- நேரகால எச்சரிக்கைச் சுட்டிகள் மற்றும் கடன் பிரிவுக் கண்காணிப்பு அறிக்கைகள் போன்றன அவ்வப்போது CC இற்குச் சமர்ப்பித்தல்
- குறை பெறுமதி மதிப்பாய்வுகளை செல்லுபடியாக்கல்
- மீள்மதிப்பீட்டுச் செயலாக்கத்தினைக் கண்காணித்தல்

**செயலாக்க முன்னேற்றம்**

- வெளியீடுகளின் அடிப்படையில் பரிந்துரைச் செயலாக்கம் மற்றும் கட்டுப்பாட்டு முன்னேற்றம் போன்றன பின்வரும் வழிமுறைகள் ஊடாக உருவாக்கப்படுகின்றன:
  - சில்லறைக் கடன் மற்றும் மீட்டல் செயலாக்கங்களுக்காக RCSA முன்னெடுக்கப்படுதல்
  - LRM
  - அழுத்தச் சோதனை மற்றும் நிகழ்வு பற்றிய பகுப்பாய்வு

**உள்ளக இடர் தரப்படுத்தல்**

- கூட்டுறவு கடன் பெறுனர்களின் உள்ளக தரப்படுத்தல் மதிப்பாய்வுகளை செல்லுபடியாக்குதல்.
- உள்ளக இடர் தரப்படுத்தலை உபயோகித்து கடன் பிரிவின் விவரக்குறிப்பினை மீளாய்வு செய்தல்.

## சந்தை இடர்

வட்டி வீதங்கள், அந்நியச் செலாவணி வீதங்கள், பங்கு விலைகள் மற்றும் பொருள் விலைகள் போன்ற சந்தை வேறுபாடுகளிலிருந்தான பாதகமான நகர்வுகளின் விளைவிலான ஒரு பிரிவு நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அல்லது வருமான மாற்றங்கள் மூலம் எழக்கூடிய எதிர்கால வாய்ப்புள்ள இழப்புக்களினால் சந்தை இடர் எழுகின்றது. இலங்கை மத்திய வங்கியானது "திறைசேரி இயக்கங்களுக்கான சந்தை முன்னெடுப்பு மற்றும் நடைமுறைகள்" எனும் தலைப்பிலான 2019 இன் 06 ஆம் இலக்க பணிப்புரையினை விநியோகித்து, சந்தை இடர் முகாமைத்துவத் தொழிற்பாட்டின் தேவைப்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் போன்றவற்றை வலுப்படுத்தியது. சந்தை இடருக்கான வங்கியின் வெளிப்பாடு பின்வரும் வழிமுறைகள் மூலமே பிரதானமாக எழுகின்றது.

### வர்த்தக ஏடு

வர்த்தக இடர் என்பது நிதிச் சந்தைகளில் வங்கியினால் முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் ஏற்படுகின்ற இழப்புக்கான வாய்ப்பாகும். வங்கியின் வர்த்தக ஏடானது அரசாங்க பிணையங்கள் மற்றும் பங்கு முதலீடுகள் தொடர்பிலான விடயங்களைக் கொண்டுள்ளது. வங்கியானது வர்த்தக ஏட்டிலுள்ள பிடித்துவைத்தல் நிலைமைகள் காரணமாக சந்தை இடர்களை எதிர்கொள்கின்றது. 2021 ஆம் ஆண்டின் முடிவில், வங்கியின் வர்த்தக ஏடானது ரூபா 19.6 பில்லியனைக் காண்பிப்பதோடு, இது வங்கியின் மொத்த சொத்துக்களின் 1.2 சதவீதமாகும்.

**வட்டி வீத இடர்:** ஆக்கவிளைவு வளைவுகள் மற்றும் கடன் பரவுகைகளின் மாற்றங்களின் மூலம் ஏற்படுகிறது.

**பங்கு விலை இடர்:** சமபங்கு முதலீடுகள் குறித்தான விலைகளிலான மாற்றங்கள் மூலம் உண்டாகின்றது.

**அந்நியச் செலாவணி வீத இடர்:** தற்போதைய செலாவணி வீதங்களிலான மாற்றங்களிலும் உண்டாகின்றது.

**பண்டங்கள் சார்ந்த இடர்:** வங்கியானது பண்டங்களின் விலை சார்ந்த இடருக்கு ஒரு புறக்கணிக்கத்தக்க வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது. தங்கத்தின் விலையிலேற்படும் மாற்றங்களினால் அடகுதொகுதியில் ஏற்படும் மாற்றங்களையே இது குறிக்கின்றது.

### வர்த்தக ஏடு அல்லாதவை

வங்கியானது போதுமானளவு திரவத்தன்மையான சொத்துக்களைக் கொண்டுள்ளதை சொ.பொ.மு கருமபீடம் உறுதிப்படுத்துவதோடு, இவற்றில் பெரும்பாலானவை உயர் தர சந்தைப்படுத்தத்தகு அரசாங்க பிணையங்களில் பேணப்படுகின்றன. 2021

இன் முடிவில், அரசாங்க பிணையங்களிலுள்ள மொத்த முதலீடுகள் ரூபா 835.4 பில்லியன் ஆகுமென்பதோடு, இது வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 52.9 சதவீதமுமாகும். மேலும் கூட்டுறவு கடன் மற்றும் ஏனைய நிதிக் கருவிகளிலுள்ள முதலீடுகள் ரூபா 129.5 பில்லியனாக விளங்குகின்றதோடு, இது வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 8.2 சதவீதமுமாகும்.

வங்கியானது வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளில் இடர் வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளது.

### ஐந்தொகையில் உள்ள சந்தை இடர் விடயங்கள் பற்றிய விபரம்

அட்டவணை 36

| 2021 டிசம்பர் 31 இலுள்ளவாறு | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொகை ரூ. '000 | வர்த்த இடருக்கான வெளிக்காட்டல் ரூ. '000 | வர்த்தகமற்ற இடருக்கான வெளிக்காட்டல் ரூ. '000 | சந்தை இடர் வகை |
|---|---|---|---|---|
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | **7,656,038** | | **7,656,038** | **IRR, FX** |
| வங்கிகளில் வைப்பிடலப்பட்டவைகள் | **7,120,698** | | **7,120,698** | **IRR, FX** |
| நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | **19,572,933** | **19,572,933** | | **IRR,** பங்கு |
| கடன்தீர் செலவிலான நிதிச் சொத்துக்கள் - கடன்களும் பெறத்தக்கவைகளும் | **538,941,789** | | **538,941,789** | **IRR, FX** |
| கடன்தீர் செலவிலான நிதிச் சொத்துக்கள் - கடன்களும் ஏனைய நிதிக் கருவிகளும் | **935,350,052** | | **935,350,052** | **IRR, FX** |
| OCI மூலமான நியாயமான பெறுமானத்தில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | **13,817,594** | | **13,817,594** | **IRR,** பங்கு |
| **மொத்தம்** | **1,522,459,104** | **19,572,933** | **1,502,886,171** | |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் செலுத்தவேண்டியவை | **7,686,553** | | **7,686,553** | **IRR, FX** |
| கடன்தீர் செலவிலான நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்கள் | **1,428,467,385** | | **1,428,467,385** | **IRR, FX** |
| கடன்தீர் செலவிலான நிதிச் சொத்துக்கள் - ஏனைய கடன் பெற்றவர்கள் | **7,719,532** | | **7,719,532** | **IRR, FX** |
| குத்தகைப் பொறுப்பு | **1,292,139** | | **1,292,139** | **IRR** |
| விநியோகிக்கப்பட்ட கடன் பிணையங்கள் | **37,529,017** | | **37,529,017** | **IRR** |
| **மொத்தம்** | **1,482,694,626** | | **1,482,694,626** | |

2021 இல், அரசாங்க பிணைய இரண்டாம்நிலைச் சந்தையின் ஆக்கவிளைவு வளைவானது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேல்நோக்கிய மாற்றத்தைக் காண்பித்தது. சமபங்குச் சந்தைப் புரள்வு மற்றும் கொள்ளவுகளும் இக்காலத்தில் நிலவிய குறைந்த வட்டி வீதம் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினையே காட்டியது. மீளாய்வுக் காலத்தின் பொழுது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பட்டியலிடப்பட்ட பங்கிலிருந்து ரூபா 52.6 பில்லியன் தொகையினையும் மற்றும் அரசாங்க பிணையங்களிலிருந்து ரூபா 5.1 பில்லியன் தொகையியையும் நிகர விற்பனையாளராகக் காட்டியது.

2021 இல், ஏற்றுமதி வருமானங்கள் 24.4 சதவீதத்தினால் வருடா வருட அதிகரிப்பினைக் காட்டிய அதேவேளை, இறக்குமதிச் செலவானது 28.5 சதவீதத்தினால் வருடா வருட அதிகரிப்பினைக் காட்டியது. இது வர்த்தக மிகுதியை 8.1 பில்லியன் ஐ.அ.டொலர்களால் விரிவாக்குவதற்கு வழியமைத்தது. மேலும் சுற்றுலா மற்றும் தொழிலாளர் அனுப்பு பணங்கள் போன்றவற்றிலிருந்தான வருமானக் குறைவானது நாட்டின் அந்நியச் செலவணி ஒதுக்கங்களை 2021 நவம்பர் இறுதியில் 1.0 பில். ஐ.அ.டொ ஆன தொகைக்கு வீழ்ச்சியடைவதற்கு வழியமைத்தது. இருப்பினும், நேச நாடுகளான இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றின் பண்டமாற்றுப் பெறுகைகள் காரணமாக இந்த ஆண்டின் இறுதியில் மேற்படி தொகையினை 2.77 பில் ஐ.அ.டொலர்களுக்கு அதிகரித்தது. இவ் ஆண்டுக் காலத்தின் போது ஐ.அ.டொலர்களுக்கான உயர் கேள்வி காரணமாக, ஐ.அ.டொ/இ.ரூ. விகிதமானது 7.55 சதவீதத்தினால் (இலங்கை மத்திய வங்கி TT நடுக்கால வீதம்) தேய்மானமடைந்தது. இலங்கை மத்திய வங்கியானது 2021 செப்டம்பர் மாத ஆரம்பத்திலிருந்து TT நடுக்கால வீதத்தினை ஐ.அ.டொ.ஃ.இ.ரூ. 200.75 எனும் மட்டத்தில் பேணியது. (தரவு மூலம்: இலங்கை மத்திய வங்கி)

2021 ஆம் ஆண்டுக் காலத்தில், முதலீட்டாளர்கள் நிச்சயமின்மையின் காரணமாக இடர் மிக்க சொத்துக்களிலிருந்து பாதுகாப்பான செல்வம் மிக்க முதலீட்டிற்கு மாறியதன் காரணமாக உலகில் தங்கத்தின் பெறுமதி கிட்டத்தட்ட 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது (மூலம்: இலங்கை மத்திய வங்கி). விலைப் போக்கினை அவதானிக்கையில், வங்கியானது இவ் ஆண்டுக் காலத்தில் அடகு வைத்தல் மீதான முற்பண எல்லைகளை திருத்தியமைத்தது.

விவேகம் மிக்க இடர் எல்லைகள், வங்கியின் உள்ளக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பொருந்திக் கொள்ளல், சிறந்த சந்தை நடைமுறைகள் மற்றும் சந்தை மற்றும் திரத்தவத் தன்மை சார்ந்த இடர்கள் பற்றிய தொடர்ச்சியான கண்காணிப்பும் அறிக்கையிடலும் போன்றன சாத்தியம் மிக்க இழப்புக்களைக் குறைத்து கொள்வதற்கு காரணமாக அமைந்தன.

வங்கியானது உள்ளக மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளைப் பொருந்திக் கொண்டு, பங்கு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் போன்றவற்றிலான வியாபாரத்திலிருந்து மீளாய்வுக் காலத்தில் வருமானத்தை ஈட்டிக் கொண்டது. இருப்பினும், அரசாங்கப் பிணையங்கள் மீதான இரண்டாம் நிலை சந்தை ஈட்டுகையிலான அதிகரிப்பிலிருந்து எழுந்த எதிர்மறையான தாக்கத்தினை வங்கி சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்தது.

## சந்தை இடர் மீளாய்வு

அட்டவணை 37

| இடர் உள்ளடக்கம் | விபரம் | கண்காணிப்பு/முகாமைத்துவக் கருவிகள் | இடர் வெளிப்பாடு | தாக்கம் |
|---|---|---|---|---|
| வட்டி வீத இடர் | | | | |
| மீள்-விலையிடல் இடர் | தொடக்க மற்றும் முடிவு ஐந்தொகைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான வீத வேறுபாடு மூலமாக ஏற்பட்ட வீத மாற்றங்கள் அல்லது காசுப் பாய்ச்சல்களுக்கு இடையிலான கால வேறுபாட்டிலிருந்து எழுகின்ற இடர். | • மீள்-விலையிலடல் இடைவெளி எல்லைகளைக் கண்காணித்தல்.<br>• வீத உணர்வுமிக்க சொத்துக்கள் (RSA) மற்றும் வீத உணர்வுமிக்க பொறுப்புக்கள் (RSL) மீதான வரையறை. | உயர்வு | ⬆ |
| ஆக்கவிளைவு வளைவு இடர் | நீண்ட கால வீதங்களிலான மாற்றத்தை விட அதிக அல்லது குறைவான வீத மாற்றங்கள் காரணமாக ஏற்படும் குறுங்கால வீதங்கள் குறித்தான இடர்கள். | • வீத திடீர் மாற்றத்துடன் கூடிய உணர்வு மிக்க/அழுத்தச் சோதனை | உயர்வு | ⬆ |
| அடைப்படையுடைய இடர் | சமமான முதிர்வு அல்லது மீள் விலையிடல் தினத்தைக் கொண்ட RSA மற்றும் RSL குறித்தான பற்றிய வீத குறியீடுகளிலுள்ள சமமற்ற நகர்வுகளிலிருந்தான இடர்கள். | • RSA மற்றும் RSL மீதான வீத திடீர் மாற்ற உணர்வுகள் | உயர்வு | ⬆ |
| FX இடர் | வெளிநாட்டு நாணய நிலைமைகளிலான முதிர்ச்சிப் பொருத்தமின்மைகளில் இருந்து எழுகின்ற செலாவணி மாற்ற வீதங்களிலான பாதகம் மிக்க மாற்றங்கள் மூலம் எழுகின்ற வருமானம் மற்றும் மூலதனம் மீதான சாத்தியம் மிக்க தாக்கம். | • வரையறைக் கண்காணிப்பு.<br>• FX VaR<br>• அழுத்தச் சோதனை. | நடுத்தரம் | ⬇ |
| பங்கு விலை சார் இடர் | பங்குச் சந்தை விலைகளிலான மாற்றங்களிலிருந்து எழுகின்ற சாத்திம் மிக்க இழப்புக்கள். | • வரையறைக் கண்காணிப்பு<br>• சமபங்கு VaR<br>• சந்தை FVPL மற்றும் FVOCI இற்கான குறி<br>• நாளாந்த அடிப்படையில் பிரிவுகள் | நடுத்தரம் | ⬆ |
| பண்டங்களின் விலை சார் இடர் | பண்டங்களின் விலைகளிலான மாற்றங்கள் காரணமாக வருமானங்கள் மீதான சாத்தியம் மிக்க எதிர்மறையான தாக்கம். | • LTV கண்காணிப்பு | குறைவு | ➡ |

* வருமானம் மற்றும் மூலதனம் மீதான தாக்கத்திலுள்ள வருடா வருட (YoY) மாற்றம்

⬆ தாக்க அதிகரிப்பு ➡ மாற்றம் இல்லை ⬇ தாக்கம் குறைவு

### கொவிட் 19 தாக்க விடயப்பரப்புகளும் அதன் விளைவுகளும்

அட்டவணை 38

| தாக்கம் மிக்க விடயப்பரப்பு | விளைவுகள் |
|---|---|
| • வட்டி வீதங்கள் | • இவ் ஆண்டுக் காலத்தின் ஆரம்பத்தில் பொருளாதாரத்தில் நிலவிய குறைந்த வட்டி வீதங்கள் மேம்பட்ட NIM இற்கு வழியமைத்தன.<br>• 2021 இன் இறுதிப் பகுதியில் இரண்டாம் நிலைச் சந்தை வர்த்தக விளைவு அதிகரிப்பானது FVPL பிரிவு மீதான இழப்புக்களை அதிகரித்தது. |
| • பங்கு விளைகள் | • பங்குச் சந்தைச் செயலாற்றுகையினை அதிகரித்தது, மூலதன அடைவுகள் மற்றும் உணரப்படாத அடைவுகளை அதிகரித்தது. |
| அந்நிய செலாவணி | • 2021 செப்டம்பரிலிருந்து ஐ.அ.டொ./இ.ரூ. 200.75 என்ற விகிதத்தில் உறுதியான CBSL TT- நடுத்தர வீதம்.<br>• அனுப்பு பணச் செலவு அதிகரிப்பு மற்றும் அனுப்பு பணத்தில் வீழ்ச்சி<br>• ஐ.அ.டொலர்களுக்கான கேள்வி அதிகரிக்கப்பட்டது மேலும் ஐ.அ.டொ. நிதியிடல் குறைவு. |

### சந்தை இடர் முகாமைத்துவம்

வருமானப் பாதுகாப்பின் முதல் நிலையாகத் திகழ்கின்ற திறைசேரி முகப்பு அலுவலகமானது, இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தமது நேரடி பொறுப்பெல்லையினுள் வங்கியின் வர்த்தக மற்றும் வர்த்தகமற்ற சந்தை இடர்களை வினைத்திறன் மிக்க முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. திறைசேரி மத்திய அலுவலகத்தின் தொழிற்பாடானது, ஒரு இரண்டாம் நிலைக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு என்ற வகையில், வருமானப் பாதுகாப்பின் முதல் வரிசை பற்றிய வர்த்தக இடர் முகாமைத்துவ நடைமுறைகளை சுயாதீனமாகக் கண்காணிக்கும் நடைவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

IRM வேலைச்சட்டகத்தின் கீழ், சந்தை இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமானது, வர்த்தக மற்றும் வர்த்தகமற்ற இடருக்குப் பொதுவான இடர் அம்சங்களையுடைய அனைத்து இடர் வகைகளுடன் சம்பந்தப்படுகிறது.

## வட்டி வீத இடர்

### வர்த்தக ஏட்டிலான IRR

வர்த்தக ஏட்டிலான IRR ஆனது, FVPL பிரிவில் உள்ள வங்கியின் வீத உணர்வு முதலீட்டிலிருந்து எழுகிறது. வங்கியின் வீத உணர்வு FVPL முதலீடானது 2021 இன் இறுதிக் காலத்திலுள்ளவாறு அரசாங்க பிணையங்களில் உள்ள மொத்த முதலீட்டின் 2.1 சதவீதமாகும். இது திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணையங்கள் ஆகிய இரண்டையும் உளளடக்குகின்றது. அரசாங்க பிணைங்கள் FVPL பிரிவிலுள்ள வட்டி வீத இடரான முன்-தீர்மானிக்கப்பட்ட இடர் நாட்ட வரையறைகளுக்கு எதிரான எம்-காலப்பகுதி, உணரப்படராத அடைவுகள்.ஃ.நட்டங்கள் மற்றும் வர்த்தக ஏட்டில் உள்ள பிணையங்களுக்கான காலப்பகுதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட மூலதன தேவைப்பாடுகள் போன்ற விடயங்களின் ஊடாக மதிப்பிடப்படுகிறது.

### வங்கியியல் ஏட்டிலுள்ள வட்டி வீத இடர் (IRRBB)

*வட்டி வீத உணர்வு இடைவெளி அட்டவணை 39

| | 1 மாதத்திற்கு குறைவு | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| RSA (ரூ. மில்) | 35,361 | 52,240 | 42,769 | 138,127 | 428,017 | 383,775 | 429,696 |
| RSL (ரூ. மில்) | 268,601 | 461,057 | 270,169 | 436,608 | 16,737 | 23,230 | 5,000 |
| காலப்பகுதி சார் GAP (RSA-RSL) – (ரூ. மில்) | (233,240) | (408,817) | (227,400) | (298,481) | 411,280 | 360,544 | 424,696 |
| திரண்ட GAP (ரூ.மில்) | (233,240) | (642,057) | (869,457) | (1,167,938) | (756,658) | (396,114) | 28,583 |
| RSL இன் ஒரு சதவீதமாக உண்மை GAP – 2021 | -86.80% | -88.70% | -84.20% | -68.40% | 2,457.30% | 1,552.10% | 8,493.90% |
| RSL இன் ஒரு சதவீதமாக உண்மை GAP – 2020 | -82.40% | -82.50% | -79.50% | -67.00% | 827.40% | 2,509.30% | |

நிகர வட்டி வருமானத்தின் ஒரு விளைவாக வட்டி வீத இடருக்கான வங்கியின் வெளிப்பாடானது சந்தை வட்டி வீதங்களிலான கடுமையான ஏற்ற இறக்கங்களினால் பாதிக்கப்பட்டு வந்தது. இது அடிப்படை வட்டி-வருமானச் சொத்துக்கள், வட்டி-சார் பொறுப்புக்கள் மற்றும் முடிவு ஐந்தொகைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் மீது சாத்தியம் மிக்க ஒரு தாக்கத்தினை கொண்டுள்ளது. IRR இற்கான வங்கியின் இடர் வெளிப்பாடானது மீள் விலையிடல் இடர், ஆக்கவிளைவு வளைவு இடர் மற்றும் அடிப்படை இடர் போன்ற வடிவங்களில் இனங்காணப்படலாம்.

பாதகமான வட்டி வீத நகர்வுகளும் சமகால பெறுமானம் மற்றும் வங்கியியல் ஏட்டு நிலைமை குறித்தான எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் பொருத்தப்பாடின்மை போன்றவற்றிலான மாற்றங்களினூடாக, வங்கியின் மூலதனம் மற்றும் வருமானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்த IRR வடிவமானது வர்த்தகமற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தவணைக் கட்டமைப்பிலுள்ள வேறுபாட்டிலிருந்து எழுவதோடு, வட்டி வீத சுட்டிகளின் அடிப்படையில் நிதிக் கருவிகள் விலையிடப்படுகின்றன. IRRBB ஆனது உரியவாறு முகாமைத்துவம் செய்யப்படாதவிடத்து, அது வங்கியின் மூலதன அடிப்படை மற்றும் எதிர்கால வருமானங்கள் ஆகியவற்றின் மீது குறிப்பிடத்தக்க பாதகமான தாக்கங்களை தோற்றுவிக்கக் கூடும்.

வரைபு 66

அரசாங்க பிணையங்களிலான முதலீடுகள்




A – கடன் தீர் செலவு

B – இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி

C – ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு ஆண்டையும் விடக் குறைவான முதிர்ச்சியில் பாரிய எதிர்மறையான பொருத்தப்பாடின்மைகள் இவ் ஆண்டுக் காலப் பகுதியின் போது வங்கியின் NII மீது நேர்மறையான தாக்கங்களுக்கு காரணமாக அமைந்தன. கொள்கை வீதங்களும் 2021 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் எல்லை ஓரமாக அதிகரித்ததோடு, இதனால் வட்டி வீதங்கள் அதிகரித்தன. எனவே, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரியளவு எதிர்மறையான முதிர்வுகள் குறைந்துள்ளன.

வங்கியின் NII அல்லது NIM ஆனது வட்டி வீத ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுமிடத்து வங்கியின் 90 சதவீதங்களுக்கும் மேலான சொத்துக்களும் பொறுப்புக்களும் வட்டி வீத உணர்வுடையவை என்பதால் IRR முகாமைத்துவமானது வங்கிக்கு மிகவும் இன்றியமையாததாகும். இதனால் வங்கியின் IRR முகாமைத்துவமானது முதிர்வுகளில் (நிலையான வீதமுடைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள்) பொருத்தப்பாடின்மையினைக் குறைப்பதற்கு அல்லது மீள் விலையிடல் தினத்தினைப் பொருந்துவதற்கான (நிலையற்ற வீதமுடைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள்) இலக்கினை முன்னெடுக்கின்றன. வங்கியானது வருமானக் கண்ணோட்டம் மற்றும் பொருளாதார பெறுமதிக் கண்ணோட்டம் ஆகிய இரண்டு கண்ணோட்டங்களிலும் IRR ஐ அளவிடுகின்றது.

வங்கியானது பிரதானமாக ஒரு வட்டி வீத மீள் விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வின் ஊடாகவே IRR ஐ மதிப்பீடு செய்கிறது. வட்டி வீத மீள் விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வானது வட்டி-வருமானச் சொத்துக்களுக்கும் வரையறுக்கப்பட்ட முதிர்வுத் தொகுதியினுள் மீள்விலையிடப்படுகின்ற வட்டி-சுமக்கும் பொறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை அளவிடுகிறது.

### பங்குமூலதன விலை சார்ந்த இடர்

பங்குமூலதன விலை சார்ந்த இடர் என்பது, பங்குச் சந்தையின் உந்துசக்தியானது வருமானம் மற்றும் ஒதுக்கங்களில் வங்கியை சாத்தியம் மிக்க மாறுபாடுகளுக்கு வெளிப்படச் செய்வதன் காரணமாக சமபங்குப் பிரிவிலுள்ள முதலீட்டுகளின் பெறுமானத் தேய்வு குறித்தான இடரைக் குறிக்கின்றது. வங்கியானது சாதாரண பங்குகள் மற்றும் அலகு பொறுப்புகள்

(யுனிட் ட்ரஸ்ட்) ஆகிய இரண்டு தொடர்பிலும் பட்டியலிடப்பட்ட பங்குமூலதன கருவிகளில் உள்ள அதன் முதலீடுகளிலிருந்தான சமபங்கு விலை இடருக்கு வெளிப்படுகிறது.

வங்கியின் பட்டியலிடப்பட்ட பங்குமூலதனப் பிரிவானது FVPL மற்றும் FVOCI ஆகிய இரு பிரிவுகளையும் கொண்டுள்ளதோடு, பங்குகளிலான முதலீட்டு அளவானது இடர் வரையறை வேலைச்சட்டகம், முதலீட்டுக் கொள்கைக் கூற்று (IPS) மற்றும் சந்தை நிபந்தனைகள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

பங்குமூலதன தொகுதிநிலை **அட்டவணை 40**

| பிரிவின் வகை | 2021 | | 2020 | | உணரப்படாத வருமானம்/ (நட்டம்) (ரூ. '000) |
|---|---|---|---|---|---|
| | ஏட்டுப் பெறுமதி (ரூ. '000) | சந்தைப் பெறுமதி (ரூ. '000) | ஏட்டுப் பெறுமதி (ரூ. '000) | சந்தைப் பெறுமதி (ரூ. '000) | |
| FVPL பிரிவு | **2,683,677** | **2,329,980** | 2,524,999 | 1,675,748 | 495,554 |
| FVOCI பிரிவு | **3,230,241** | **2,895,358** | 3,228,106 | 2,769,948 | 123,274 |
| **மொத்தம்** | **5,913,918** | **5,225,337** | 5,753,105 | 4,445,696 | 618,828 |

2021 ஆம் ஆண்டுக்கான CSE இன் பிரதான சுட்டியானது 80 சதவீத அடைவுடன் அல்லது 5,452 சுட்டிப் புள்ளிகளுடன் 12,226.01 எனும் பெறுமதியில் நிறைவு செய்யப்பட்ட அதேவேளை, S&P சுட்டியானது 4,233.25 எனும் பெறுமதியில் நிறைவுசெய்யப்படுவதற்கு 1,595 சுட்டிப் புள்ளிகளினால் 60 சதவீதங்களினால் அதிகரித்தது. சமபங்கு FVPL பிரிவின் சந்தைப் பெறுமதியானது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வருடா வருடத்திற்கான 30 சதவீதத்தினால் ரூபா. 2.3 பில்லின் தொகைக்கு அதிகரித்தது. சமபங்குச் சந்தையிலுள்ள முனைப்பான பங்களிப்புடன் வங்கியானது 2021 நிதி ஆண்டுக்கான சமபங்குப் பிணையங்களின் விற்பனையிலிருந்தான நிகர அடைவாக ரூபா 485.6 மில்லியன் ஆன தொகையினை பாதுகாத்துக் கொண்டது.

**வரைபு 67**

**பங்குமூலதன தொகுதியின் உள்ளடக்கங்கள் (முதலீடுகள் பற்றிய ஏட்டுப் பெறுமதி)**




| | 2021 | 2020 | | 2021 | 2020 |
|---|---|---|---|---|---|
| **A –** பட்டியலிடப்பட்ட பங்குமூலதனம்FVPL | **43.8%** | **42.2%** | **C –** பட்டியலிடப்பட்ட பங்குமூலதனம் FVOCI | **50.8%** | **52.2%** |
| **B –** அலகுப்பொறுப்பு | **1.6%** | **1.7%** | **D –** பட்டியலிடப்படாத பங்குமூலதனம் FVOCI | **3.8%** | **3.9%** |

### அந்நியச் செலாவணி குறித்தான இடர்

அந்நியச் செலாவணி இடர் என்பது, எதிர்பாராத மற்றும் சாதகமற்ற ஏற்ற இறக்கங்கள் காரணமாக வருமானங்கள் மற்றும் மூலதனத்தில் ஏற்படக்கூடிய சாத்தியம் மிக்க தாக்கமாகும். 2021 ஆம் ஆண்டுக் காலத்தில் ஐ.அ.டொ./இ.ரூ. சராசரி வீதமானது 9.3 சதவீதத்தினால் தேய்மானமடைந்ததோடு, ரூபா 186.54 முதல் ரூபா 202.77 வரையான வீச்சில் ஏற்ற இறக்கத்தினைக் காட்டியது (மூலம்: புளூம்பேர்க்). 2021 ஆம் ஆண்டுக் காலத்தில் CBSL TT இடைத்தர வீதமானது 7.55 சதவீதத்தினால் குறைவடைந்ததோடு, 2021 செப்டம்பர் மாதத்திலிருந்து ஐ.அ.டொ./இ.ரூ. 200.75 என தேக்கமடைகிறது. மீளாய்வுக்கான அண்டுக் காலத்தில், இலங்கை மத்திய வங்கியானது வெளியக வளங்கள் மூலம் அந்நியச் செலாவணித் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. மேலும் ஒதுக்கங்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தையிலிருந்து இலங்கை மத்திய வங்கியானது தொடர்ந்தும் அந்நியச் செலாவணியைக் கொள்வனவு செய்தது.

அந்நிய செலாவணி செயற்பாடுகளின் நாணயரீதியான முதிர்வு இடைவெளி **அட்டவணை 41**

| | <1 மாதங்கள் | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | >5 வருடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | (18,163,065) | 10,784,337 | 6,960,493 | (11,560,806) | 15,596,773 | 1,077,464 | – | 4,695,197 |
| யூரோ | (2,200,737) | 587,588 | 3,387,453 | (1,937,815) | – | – | – | (163,511) |
| பிரித்தானிய பவுண் | 17,235 | 825,067 | 138,493 | (690,238) | – | – | – | 290,557 |
| சிங்கப்பூர் டொலர் | 8,232 | – | – | – | – | – | – | 8,232 |
| அவுஸ்திரேலிய டொலர் | (413,175) | 23,700 | 735,297 | (165,665) | – | – | – | 180,157 |
| ஜப்பானிய யென் | 2,893,592 | – | – | – | – | – | – | 2,893,592 |
| சுவிஸ் பிராங்க | 47,145 | – | – | – | – | – | – | 47,145 |
| கனேடியன் டொலர் | 15,432 | – | – | – | – | – | – | 15,432 |
| அரபு எமிரேட்ஸ் திர்ஹாம் | 7,328 | – | – | – | – | – | – | 7,328 |

அந்நியச் செலாவணி இடரானது சகல வெளிநாட்டு நாணயங்களிலும் உள்ள இழப்புக்காப்பு அற்ற நிலைமையுடன் தொடர்புபட்டதாகும். நிகர திறந்த நிலையானது (NOP) சீரான மற்றும் உள்ளக எச்சரிக்கை எல்லைகளுக்கு எதிராக ஒரு நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், வங்கியின் நிகர வெளிநாட்டு நாணய வெளிப்பாடானது (NFCE) 2.62 மில். ஐ.அ.டொலர்களாகும், இது வங்கியின் மொத்த சீராக்க மூலதனத்தின் 1.2 சதவீதமாகும்.

முறையான அந்நிய செலாவணி வெளிப்பாடுகள் **அட்டவணை 42**

| நாணயம் (மில்.) | 2021 | 2020 |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | **2.259** | 1.672 |
| யூரோ | **(0.193)** | 7.191 |
| பிரித்தானிய பவுண் | **0.298** | 0.567 |
| ஜப்பானிய யென் | **2.736** | 0.244 |
| சிங்கப்பூர் டொலர் | **0.008** | 0.009 |

**வரைபு 68**

**உள்ளக மற்றும் சீராக்க எல்லைக்கு எதிராக நாளாந்த நிகர திறந்த நிலைமை (NOP)**



வங்கியானது சமபங்கு வர்த்தக ஏடு மற்றும் வெளிநாட்டு நாணய திறந்த நிலை ஆகியவற்றுக்கான VaR ஐ உபயோகித்து சந்தை இடர் மாற்றங்களை அளவிடுகிறது. VaR ஆனது வங்கியின் இடர் சகிப்புத் தன்மை எல்லையினுள் பேணப்பட்டது.

வரைபு 69

**பங்குமூலதன VaR**




வரைபு 70

**வெளிநாட்டுச் செலாவணி VaR**




## திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார் இடர்

திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார் இடரானது, ஐந்தொகை அல்லது ஐந்தொகைக்கு அப்பாற்பட்ட கடப்பாடுகளை எதிர்கொள்ளும் நோக்கில் வங்கியிடம் போதுமான நிலையான அல்லது மாறுபட்ட நிதியிடல் வழிமூலங்கள் இல்லாதிருக்கக் கூடிய வேளையிலான இடர்களாகும். வங்கியின் திரவத்தன்மை வங்கி முன்னதாகத் தீர்மானிக்கப்பட்ட திரவத்தன்மை எல்லைகளினுள் செயற்படுவதையும் மற்றும் வங்கியின் திரவத்தன்மைக் கொள்கை, ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கியொழுகுவதையும் உறுதிப்படுத்துவதை இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் வேண்டுகிறது.

### திரவத்தன்மை இடர் மீளாய்வு

வங்கியானது இந்த ஆண்டுக் காலத்தில் உறுதியான திரவத்தன்மை நிலைமையினை பேணியதோடு, இது கவனமான மூலதன முகாமைத்துவம், நோய்த்தொற்றுக்கு பதிலளிப்பதில் ஒழுங்குறுத்துகை நிறுவனங்களினால் பொருந்திக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சில்லறை மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களின் உறுதியான வைப்பு வளர்ச்சி ஆகியவற்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு வருகிறது.

2016 இல் விநியோகிக்கப்பட்ட மட்டம் II கடனீட்டுப் பத்திரத்தினை இவ் ஆண்டுக் காலத்தில் வங்கி மீட்டெடுத்தது. பொருளாதாரத்தில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களை மூலதனப்படுத்துவதன் மூலம் வங்கியானது 5-7 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட சிரேஷ்ட கடனீட்டுப் பத்திரங்களை இவ் ஆண்டுக் காலத்தில் விநியோகித்தது.

2021 ஆம் ஆண்டுக் காலத்தின் போதான சந்தை இடர் முகாமைத்துவ முன்னெடுப்புகள்

**கொள்கை வேலைச்சட்டகம்**

- வங்கியின் சந்தை இடர் மற்றும் திரவத்தன்மை சார்ந்த இடர் முகாமைத்துவம் தொடர்பிலான மீளாய்வு.
- இடர் நாட்ட எல்லைகள் மற்றும் திறைசேரி எல்லைகள் தொடர்பிலால மீளாய்வு.
- எதிர்த் தரப்பினர் தரப்படுத்துகை மாதிரி தொடர்பிலான மீளாய்வு மற்றும் மேம்பாடு

**கண்காணிப்பு**

- நாளாந்த திறைசேரி நடுத்தர அலுவலகத் தொழிற்பாடுகள்.
- BIRMC மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கான சந்தை இடர் கட்டுப்பாடு பற்றிய அவ்வப்போதைய சமர்ப்பிப்பு.
- முதலீடு மற்றும் வர்த்தகப் பிரிவு, வெளிநாட்டு நாணய வெளிப்பாடுகள் மற்றும் திறைசேரி தொடர்பான பரிமாறல்கள் மற்றும் IC/ALCO இற்கான அறிக்கை குறித்தான கண்காணிப்பு.
- அழுத்தச் சோதனை மற்றும் நிகழ்வு பற்றிய பகுப்பாய்வுகள்.

**செயலாக்கம் பற்றிய மேம்பாடுகள்**

- திறைசேரி இயக்கங்கள் மற்றும் இடைவெளிப் பகுப்பாய்வுகளுக்காக முன்னெடுக்கப்படுகின்ற சுஊளுயு ஊடாக உருவாக்கப்பட்ட வெளியீடுகளின் அடிப்படையில பரிந்துரைச் செயலாக்கம் மற்றும் கட்டுப்பாட்டு மேம்பாடுகள்.

### திரவத்தன்மை சார் இடர் முகாமைத்துவம்

திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார்ந்த இடர் முகாமைத்துவத்தின் பிரதான குறிக்கோள் யாதெனில், சாதாரண மற்றும் அழுத்தம் மிக்க சந்தர்ப்பங்களின் போது பொருத்தமான வேளையில் பொருத்தமான செலவில் குறித்த கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குத் தேவையான நிதிகளைப் பெற்றுக் கொள்வதும் அதன் இருப்பினை உறுதிப்படுத்துவதுமாகும்.

வங்கியின் திரவத்தன்மை சார்ந்த இடரானது, ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மற்றும் கையிருப்பு அணுகல் மற்றும் நகர்வு அணுகல் போன்றவற்றின் கீழான தேவைப்பாடுகள் ஆகிய இரு தேவைப்பாடுகளின் கீழுள்ள பிரதான திரவத்தன்மைச் சுட்டிகளை கண்காணிப்புச் செய்வதன் மூலம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டு விடயங்களிலுமுள்ள மாற்றங்கள் விரும்பத்தக்க திரவத்தன்மை மட்டம் ஒவ்வொரு வேளையின் பொழுதும் பேணப்படுவதையும் மற்றும் அது வங்கியின் இடர் நாட்டத்திற்கு ஏற்ப இருப்பதையும் உறுதிப்படுத்தும் வகையில் நிதியிடல் தேவைப்பாடுகள் ஒப்பீட்டாய்வு செய்யப்பட்டு அளவிடப்படுகின்றன. திரவத்தன்மை இடைவெளிகளுக்கான உள்ளக எல்லைகள் நடைமுறையில் உள்ளதோடு, வங்கியின் திரவத்தன்மை விவரம் ஆரோக்கியமான மட்டத்தில் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் ரூபாய் மற்றும் பிரதான வெளிநாட்டு நாணயங்கள் ஆகிய இரு நாணயங்களுக்குமாக ஒழுங்குமுறை அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரவத்தன்மை சார் இடரானது, உயர் தரம் மிக்க திரவச் சொத்துக்கள் மற்றும் பன்முகத் தக்மை மிக்க நிதியிடல் மூலங்கள் ஆகியவற்றிலுள்ள போதுமான தடைகாப்புக்களை பராமரிப்பதன் மூலம் தணிக்கப்படுகிறது. மேலும், வங்கியின் தற்செயலான நிதியிடல் திட்டத்திற்கு இணங்க போதுமான திரவத்தன்மைத் தடைக் காப்புக்களின் இருக்கையினை உறுதிப்படுத்தும் வகையில் மூலோபாயங்கள்/விருப்பத் தெரிவுகள் நடைமுறையில் உள்ளன.

### ஒழுங்குறுத்துகை விகிதங்கள்

வங்கியின் ஒழுங்குறுத்துகை சார் திரவத்தன்மைச் சுட்டிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளன. இருப்பினும், குறைந்த பட்ச ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளுக்கு மேலாக பேணப்படுகிறது.

### நகர்வு அணுகுமுறை:

நகர்வு அணுகுமுறையின் கீழ், திரவத்தன்மை சார்ந்த இடர்களை மதிப்பீடு செய்வதற்காக வங்கியினால் உபயோகிக்கப்படுகின்ற முறையில் ஒன்றே திரவத்தன்மை சார் இடைவெளிப் பகுப்பாய்வாகும். திரவத்தன்மை சார் இடைவெளிகள் எல்லைகளுக்கு எதிராக அவ்வப்பொழுது கண்காணிக்கப்பட்டு வருவதோடு, அது உணர்திறன் மிக்க பகுப்பாய்வுகள் மற்றும் அழுத்தச் சோதனை போன்றவற்றுக்கும் உபயோகிக்கப்படுகின்றன.

சேமிப்புப் பண வைப்புக் குறித்தான வகையாக்கம் மற்றும் ஒரு வருடத்திற்கும் குறைவான தவணை வைப்புக்கள் போன்றனவே ஒரு வருடத்திற்கும் குறைவான முதிர்வு நிகழ்வில் அவதானிக்கப்பட்ட அதியுயர் எதிர்மறையான திரவத்தன்மை இடருக்கு பிரதான காரணியாகும். இருப்பினும், திரவத் தன்மை மீதான பாதகம் மிக்க தாக்கமானது வரலாற்று நடத்தையின் அடிப்படையிலான நீட்டிப்புக்கான போக்கினைக் கருத்திற் கொள்கையில் குறைவாகும்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சியில் நிலவிய எதிர்மறையான இடைவெளிகள் மேலும் விரிவாக்கப்பட்ட அதேவேளை, மூன்று வருடங்களுக்கும் அதிமான முதிர்ச்சியில் காணப்பட்ட நேர்மறையான இடைவெளிகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

ஒழுங்குறுத்துகை திரவத்தன்மை விகிதங்கள் **அட்டவணை 43**

| | 2021 | 2020 | ஒழுங்குறுத்துகை சார் குறைந்தபட்ச வீதம் |
|---|---|---|---|
| SLAR – DBU | **59.6** | 69.1 | 20 |
| LCR – ரூபாய் | **240.8** | 311.0 | 100 |
| LCR – அனைத்து நாணயங்கள் | **240.4** | 307.2 | 100 |
| NSFR | **160.8** | 169.0 | 100 |

### கையிருப்பு அணுகல்முறை

வங்கியானது, நிதியிடல் தேவைப்பாடுகள் பற்றிய போதுமையினைக் கண்காணித்தல் மற்றும் நிதியிடலை உறுதிப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக கையிருப்பு அணுகல் முறையின் கீழ் பின்வரும் திரவத்தன்மை சார் விகிதங்களை கண்காணித்து வருகிறது.

கையிருப்பு அணுகல் முறையின் கீழான விகிதங்கள் **அட்டவணை 44**

| | 2021 (%) | 2020 (%) |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்களுக்கான நிகர கடன்கள் | **34.1** | 33.5 |
| வாடிக்கையாளர் வைப்புக்களுக்கான கடன்கள் | **38.6** | 38.5 |
| குறுங்கால பொறுப்புக்களுக்கான திரவத்தன்மை சார் சொத்துக்கள் | **56.4** | 64.5 |
| மொத்தச் சொத்துக்களுக்கு கொள்முதல் செய்யப்பட்ட நிதிகள் | **20.8** | 20.5 |
| (வருமானச் சொத்துக்கள் - தற்காலிக முதலீடுகள்) இற்கான (பாரிய பொறுப்புக்கள் - தற்காலிக முதலீடுகள்) | **20.7** | 11.2 |
| மொத்தக் கடன் விகிதத்திற்கான அர்ப்பணிப்பு | **1.7** | 4.6 |

**சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான முதிர்வு விவரம்**

| வங்கி - ரூ. மில். | 0-3 மாதங்கள் | 3-12 மாதங்கள் | 1-3 ஆண்டு | 3-5 ஆண்டு | >5 ஆண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஒப்பந்தம் சார் முதிர்வுடன் கூடிய சொத்துக்கள் | 98,548 | 189,694 | 438,361 | 393,126 | 459,369 | 1,579,098 |
| ஒப்பந்தம் சார் முதிர்வுடன் கூடிய பொறுப்புக்கள் | 733,847 | 713,693 | 17,949 | 23,519 | 90,089 | 1,579,098 |
| முதிர்ச்சி சார் இடைவெளி | (635,299) | (523,999) | 420,412 | 369,607 | 369,280 | – |
| ஒட்டுமொத்த இடைவெளி | (635,299) | (1,159,299) | (738,887) | (369,280) | – | – |
| RSL இன் % ஆக உண்மை இடைவெளி - 2021 | -87% | -73% | 2,342% | 1,572% | 410% | 0% |
| பொறுப்புக்களின் % ஆக உண்மை இடைவெளி - 2020 | -82% | -71% | 831% | 2,489% | 514% | 0% |

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வுக் கண்காணிப்பானது பாதகமான திரவத்தன்மை எல்லைகளை முன்கூட்டியே அறிந்துகொள்வதை இயலச் செய்கிறது. இவ் ஆண்டுக்காலத்தில் கடன் பெறல் குறித்தான குறைந்தபட்ச நம்பிக்கையுடன் நிதியிடல் தேவைப்பாடுகளை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு வங்கியினால் இயலுமாக இருந்தது.

**உற்பத்திகளின் அடிப்படையில் நிதியிடல் பற்றிய பல்வகைப்படுத்தல்**

கொவிட்- 19 தொற்று நோயத் தாக்க நெருக்கடியின் பின்னணியிலும் மற்றும் நாட்டில் நிலவிய குறைந்த வட்டி வீதத்தின் பின்னணியிலும், வங்கியின் வைப்புத் தளமானது 2021 இன் இறுதியிலுள்ளவாறு 15.5 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ரூபா 1.43 ட்ரில்லியனை அடைந்தது. இதற்கு வங்கியின் வைப்புத் தொடர்பில் 100 சதவீத அரசாங்க உத்தரவாதம் வழங்கப்படுவதனால் வாடிக்கையாளர்களின் வைப்புக்கான பாதுகாப்பு மிக்கதொரு வங்கி என்ற வகையில் வங்கி மீது வடிக்கையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையே காரணமாகும். இந்த ஆண்டுக் காலத்தில் பண வைப்புக் கலவையில் எந்தவொரு பாரிய மாற்றங்களும் சான்று பகரப்படவில்லை.

**வரைபு 71**

**நிதியிடல் கலவை**

2021




2020




| | 2021 | 2020 |
|---|---|---|
| **A –** சேமிப்பு வைப்புகள் | 22.0% | 21.7% |
| **B –** நிலையான வைப்புகள் | 74.4% | 74.2% |
| **C –** ரெபோ கடன் பெறுதல்கள் | 0.6% | 1.1% |
| **D –** ஐ.அ.டொ. கடன் பெறுதல்கள் | 0.5% | 0.5% |
| **E –** கடன் பிணைகள் | 2.5% | 2.5% |

வங்கியானது பாரியளவிலானதொரு சில்லறை வைப்புக்கள் மற்றும் நிறுவன வைப்புக்களுக்கு அதன் கிளை அலுவலகங்கள் ஊடான அணுகலைக் கொண்டுள்ளதோடு, நிலையான நிதிகளுக்கான ஆரம்ப மூலம் என்ற வகையில் அவை மீதான அக்கறையினையும் கொண்டுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள வங்கியின் கிளை அலுவலகங்கள் ஊடான சில்லறை வைப்புக்களுக்கான அணுகலானது நிதியிடலிலுள்ள ஒருமுகப்படுத்தப்பட்ட இடரைக் குறைப்பதற்கு உதவுகிறது.

திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார் இடர்கள், பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உபயோகித்து திறைசேரியின் ALM பிரிவினால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்றது.

## இயக்கப்பாட்டு இடர்

இயக்கப்பாட்டு இடர் என்பது, குறைபாடுள்ள அல்லது அடையத் தவறிய உள்ளக செயன்முறைகள் மற்றும் முறைமைகள், மக்கள் அல்லது வெளியக நிகழ்வுகள் காரணமாக ஏற்படுகின்ற ஒரு பாதகமான விளைவாகும். இயக்கப்பாட்டு இடரானது நிறுவனத்தின் புகழ் மற்றும் மூலோபாய இடர்களைத் தவிர்த்து, சட்டவாக்க இடர்களைக் கொண்டுள்ளது. இது வங்கியிலுள்ள அனைத்து உற்பத்திகள் மற்றும் செயன்முறைகளிலான உள்ளார்ந்த அம்சமாக விளங்குவதோடு, இது வணிகத் தடங்கல்கள், மோசடியான செயற்பாடுகள், நன்னடத்தை அற்ற வணிக நடைமுறைகள், முதலாளி-தொழிலாளர் முரண்பாடுகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இசைவுறாமை, இணையத் தாக்குதல்கள் மற்றும் விற்பனையாளர் முகாமைத்துவம் குறித்தான தோல்வி ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

### இயக்கப்பாடு சார்ந்த இடர் வெளிப்பாடு

2021 ஆம் நிதி ஆண்டுக்கான இயக்கப்பாடு சார்ந்த நட்டமானது, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான சராசரி கணக்காய்வு செய்யப்பட்ட மொத்த வருமானத்தின் 0.1 சதவீதமாகுமென்பதோடு, இது இடர் நாட்ட மட்டத்தினுள் பொருத்தமானதாக விளங்குகிறது.

வரைபு 72

**இடர் நாட்டம் மற்றும் சகிப்புத்தன்மை எல்லைக்கு எதிராக உண்மையான இயக்கப்பாட்டு நட்டங்கள்**




மேற்படி போக்கானது கடந்த ஐந்து வருட காலத்திற்கும் மேலாக குறைந்த பட்ச எல்லைகளில் இழப்புக்களைப் பராமரிப்பதில் வங்கியின் உறுதியான நிலையினை எடுத்துக் காட்டுகிறது. இது இயக்கப்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்வதற்குத் தற்போதுள்ள ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கைகள், உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகள், செயலாக்கங்கள் மற்றும் நடைமுறைகள் போன்ற விடயங்களிலுள்ள வினைத்திறன்களை பிரதிபலிக்கின்றது.

2021 ஆம் ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட உள்ளக இழப்பு நிகழ்வு பற்றிய தரவுகள் மூலம், உயர்ந்தளவு நிகழ்வுத் தடவைகள் மற்றும் அவற்றின் தீவிரம் போன்றன முறையே நிறைவேற்றம், விநியோகம் மற்றும் செயன்முறை முகாமைத்துவ இழப்புகள் மற்றும் உள்ளக மோசடி வகைகள் போன்றவற்றிலிருந்து அறிக்கை செய்யப்பட்டன.

குறித்த நிகழ்வுகளின் தடவைகள் மற்றும் அவற்றின் தீவிரத் தன்மை போன்றன சகிப்பு எல்லைகளினுள் முகாமைத்துவம் செய்யப்பட்டன.

வரைபு 73

**நட்டம் ஏற்பட்ட நிகழ்வின் தடவைகள் பற்றிய தரவு**




● 2021 ● 2020

IF – உள்ளக மோசடி
EF – வெளியக மோசடி
EPWS – வேலைவாய்ப்பு நடைமுறைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு
CPBP – வாடிக்கையாளர்கள், உற்பத்திகள் மற்றும் வியாபார நடைமுறைகள்
DPA – பௌதீகச் சொத்துக்களுக்கான சேதம்
BDSF – வியாபார தடங்கல் மற்றும் முறைமை தோல்விகள்
EDPM – நிறைவேற்றம், விநியோகம் மற்றும் செயலாக்க முகாமைத்துவம்

வரைபு 74

**நட்டம் ஏற்பட்ட நிகழ்வின் தீவிரம் பற்றிய தரவு**




● 2021 ● 2020

IF – உள்ளக மோசடி
EF – வெளியக மோசடி
EPWS – வேலைவாய்ப்பு நடைமுறைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு
CPBP – வாடிக்கையாளர்கள், உற்பத்திகள் மற்றும் வியாபார நடைமுறைகள்
DPA – பௌதீகச் சொத்துக்களுக்கான சேதம்
BDSF – வியாபார தடங்கல் மற்றும் முறைமை தோல்விகள்
EDPM – நிறைவேற்றம், விநியோகம் மற்றும் செயலாக்க முகாமைத்துவம்

## இயக்கப்பாடு சார்ந்த இடர் மீளாய்வு

அட்டவணை 45

| இடர் உள்ளடக்கம் | விபரம் | கண்காணிப்பு/முகாமைத்துவக் கருவிகள் | இடர் வெளிப்பாடு | தாக்கம்* |
|---|---|---|---|---|
| மோசடி பற்றிய இடர் | வங்கியின் உள்ளக அல்லது வெளியக நபர்களின் மோசடியான நடவடிக்கைகள் காரணமான இடர் | • மோசடி இடர் முகாமைத்துவம் மற்றும் தகவல் தெரிவித்தல் செயன்முறை<br>• உள்ளகக் கட்டுப்பாடுகள்<br>• பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகள் (KORIs) கண்காணிப்பு<br>• இழப்பு நிகழ்வுகள் கண்காணிப்பு<br>• இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு (RCSA)<br>• ABC இடர் மதிப்பாய்வு | மிதமானது | அதிக தாக்கம் |
| தகவல் தொழில்நுட்ப இடர் | தொழில்நுட்பம்/தகவல் பாதுகாப்பு இடர் | • உள்ளகக் கடடுப்பாடுகள்<br>• தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை<br>• KORIs கண்காணிப்பு<br>• நிகழ்வு அறிக்கையிடல் | உயர்வு | மாற்றம் இல்லை |
| வியாபார முன்னெடுப்பு பற்றிய இடர் | வியாபார தடங்கல் அல்லது முறைமை தோல்வி மூலமாக எழக்கூடிய நட்டங்கள் பற்றிய இடர் | • KORIs கண்காணிப்பு<br>• வணிக முன்னெடுப்பு முகாமைத்துவ முறைமை (BCMS) நடைமுறைப்படுத்தல். | உயர்வு | மாற்றம் இல்லை |
| இணக்கபாட்டு/ ஒழுங்குறுத்துகை இடர் | சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு இணக்கமுறத் தவறுதல் | • இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பரிசோதனைகள்<br>• KORIs கண்காணிப்பு<br>• இடர் புள்ளி அட்டை இணக்கப்பாடு | மிதமானது | மாற்றம் இல்லை |
| சட்டவாக்க இடர் | போதாமை/சட்ட தேவைப்பாடுகளுக்கு இணக்கமுறத் தவறுதல் | • ஒப்பந்தம் சார்ந்த அனைத்துக் கடப்பாடுகள் மீதான சட்டவாக்க சான்றுப்படுத்தல்<br>• KORIs கண்காணிப்பு | மிதமானது | மாற்றம் இல்லை |

*வருவாய் மற்றும் மூலதனம் மீதான தாக்கத்தின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றம்

அதிக தாக்கம் | மாற்றம் இல்லை | தாக்கம் குறைவு

### கொவிட்-19 தாக்க விடயப்பரப்பு மற்றும் விளைவுகள்

வங்கியின் இயக்கப்பாடுகள் தொடர்பில் ஏற்பட்ட கொவிட்-19 நோய்த் தொற்றின் தாக்கமானது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது. அரசாங்கம் முன்னெடுத்த தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை மற்றும் உள்நாட்டு சுகாதார நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்றவற்றின் காரணமாக வங்கியின் பணியாட்டொகுதியினர் மத்தியிலான நோய்த் தொற்றுப் பரவுகையானது குறைவடைந்தது. இதனால், வங்கியானது தொடர்ச்சியான வியாபார முன்னெடுப்பு ஏற்பாடுகள் மற்றும் செயலூக்கம் மிக்க தீர்மானங்கள் ஆகியவற்றின் மூலம் தனது வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற சேவைகளை வழங்கி வந்தது.

ஆன்லைன் மற்றும் கையடக்கத் தொலைபேசி வங்கிச் சேவைகள் போன்ற வழிமுறைகளுக்கு மக்கள் மாறியதன் காரணமாக ஏற்பட்ட இடர் வெளிப்பாட்டினைக் குறைக்கும் நோக்கில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்பு உட்கட்டமைப்புகள், செயலாக்கங்கள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றில் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம்

இயக்கப்பாட்டு இடரானது வங்கியின் இயக்கப்பாட்டு இடர் நாட்டத்தின் பிரகாரம் வியாபாரத்தின் தன்மை, ஒழுங்குறுத்துகைச் சூழல் மற்றும் நிதி சார் நிலைமை போன்றவற்றை செலவு-வினைத்திறன் மிக்க முறையில் கருத்திற்கொண்டு முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகிறது.

இயக்கப்பாட்டு இடர் பற்றிய முகாமைத்துவமானது தற்போதும் இடம்பெற்று வருகின்றதொரு செயலாக்கமாகும். இது இனங்காணல், இயக்கப்பாட்டு இடரை அளவிடுதல் மற்றும் கண்காணிப்பு மற்றும் உரிய வேளையின் போதான அறிக்கையிடல் பொறிமுறை போன்றவற்றின் ஊடாக அத்தகைய இடர்களை தணித்தல் அல்லது தவிர்த்தலுக்குரிய கட்டுப்பாடுகளை உபயோகித்தல் போன்றவற்றை உள்ளடக்குகிறது. வங்கியின் இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டமானது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையில் வரையறுக்கப்படுகிறது.

இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கான அடிப்படையானது முறைமைக் கட்டுப்பாடுகள், அணுகல் கட்டுப்பாடுகள், கடமை பிரிப்பு, தெளிவான அதிகார விளக்கங்களும் பதிலளிப்புகளும், கொடுக்கல் வாங்கல்களுக்கான அதிகாரமளிப்பு மற்றும் சரிபார்க்கை மீதான இரட்டைச் சோதனைகள், சொத்துக்கள் மீதான பௌதீகக் கட்டுப்பாடுகள், பதிவு பேணுகை, ஒருமைப்பாடு, கணக்காய்வுச் சான்றுகள் மற்றும் கணக்காய்வுப் பதிவேடுகள் போன்றன உள்ளிட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு ஒன்றின் ஊடாக தாபிக்கப்படுகிறது.

இடர் முகாமைத்துவ பிரிவிலுள்ள செயற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகானது இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினுள் காணப்படக் கூடிய இயக்கப்பாட்டு இடர்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிடுவதற்கான பல்வேறு தொழில்நுட்பங்களையும் செயன்முறைகளையும் உபயோகிக்கின்றது.

இயக்கப்பாட்டு இழப்பு நிகழ்வு பற்றிய தரவுகளைச் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்வு செய்வதானது வங்கியின் இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தின் ஒரு பிரதான அம்சமாக விளங்குகின்றது. முறையான தரவுச் சேகரிப்பானது மிகவும் அர்த்தமுள்ள மற்றும் வினைத்திறன் மிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தரவுப் பகுப்பாய்வு பற்றிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்துகிறது. வங்கியானது உரிய வேளையின் போதான ஒழுங்குறுத்துகை

அறிக்கையிடலுக்கான அனைத்து புவியியல் சார் அமைவிடங்களிலிருந்துமான உள்ளக இழப்புத் தரவுகளை இனங்கண்டு அவற்றை சேகரிப்பதற்காக ஒரு ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறையினைக் கொண்டுள்ளது. மேலும், வங்கியின் வெளியக இழப்பு நிகழ்வு பற்றிய தரவுத் தளமானது இது போன்ற நிறுவனங்களில் இடம்பெற்ற இயக்கப்பாடு சார்ந்த இழப்பு நிகழ்வுகள் பற்றிய தகவல்களையும் சுட்டிக்காட்டுகிறது. சேகரிக்கப்படுகின்ற தரவுகள் அடிப்படை தளம் II இழப்பு நிகழ்வு வகையாக்கத்திற்குள் வகைப்படுத்தப்படுவதோடு, அவை தன்மை, அடிப்படைக் காரணிகள் மற்றும் நிகழ்வுத் தடவைகளை அறிந்து கொள்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. செயன்முறை மேம்பாடுகள் மற்றும் இடர் தணிப்பு நடவடிக்கைகள் போன்றன இழப்பு நிகழ்வுத் தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றன.

KORIs ஆனது இயக்கப்பாட்டு இடர் வெளிப்பாடு தொடர்பில் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்குத் தெரிவிப்பதற்காக உபயோகிக்கப்படுகின்றது. வங்கியானது இயக்கப்பாட்டு இடர் விவரங்களை இனங்கண்டு அவற்றை மதிப்பீடு செய்வதற்காக KORI மெட்ரிக்ஸ் ஒன்று உபயோகிக்கப்படுவதோடு, இதனுள் கணக்காய்வு விடய முகாமைத்துவம், வியாபாரத் தொடர் முன்னெடுப்பு முகாமைத்துவம், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், உற்பத்தித் தரம், செயன்முறைத் தரம் மற்றும் இணக்கப்பாடு போன்ற அம்சங்களை உள்ளடங்கியுள்ளன. KORIs ஆனது முன் வரையறை செய்யப்பட்ட தொடக்க வாயில் எல்லைகளின் அடிப்படையில் இடரை மதிப்பிடும் வகையில் ஒவ்வொரு பிரதேசத்தின் கீழும் வரையறுக்கப்படுகிறது. இந்த தொடக்கவாயில் எல்லைகள் வருடாந்தம் அல்லது குறித்த இயக்கப்பாட்டுச் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களைக் கருத்திற்கொண்டு அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகின்றன.

RCSA என்பது ஒரு செயன்முறையாகும். இதன் மூலம் அனைத்து மட்டங்களிலுமுள்ள முகாமைத்துவம் மற்றும் செயன்முறை உரிமையாளர்கள் ஒன்றாக இணைந்து இடர்களையும் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகளையும் இனங்கணப்பட்டு அவை மதிப்பிடப்படுகின்றன. இது இடர் வெளிப்பாடுகளை இனங்காணல், கட்டுப்பாடுகளை வடிவமைத்துப் பராமரித்தல் மற்றும் சரிப்படுத்தும் நடவடிக்கைகளை தீர்மானித்தல் போன்றவற்றில் இடர் உரிமையாளர்களின் ஈடுபாட்டினை அதிகரிப்பதன் மூலம் பெறுமதி சேர்க்கின்றது. குறிக்கோள்களை அடைந்துகொள்வதில் வங்கியின் நாளாந்த இயக்கப்பாடுகளினுள் இடர் முகாமைத்துவக் கலாசாரத்தினை நுழைப்பதே RCSA இன் இலக்காகும்.

வங்கியானது, வாடிக்கையாளர் முறைப்பாட்டுப் பகுப்பாய்வுகளை வங்கியுடன் வாடிக்கையாளர் கொண்டுள்ள அனுபவம் தொடர்பிலானதொரு இலவச பின்னூட்டலாக அங்கீகரிக்கின்றது. ORMU ஆனது வாடிக்கையாளர் முறைப்பாடுகளை அடிக்கடி பகுப்பாய்வு செய்வதோடு, இதன் மூலமான கண்டறிதல்கள் செயன்முறை மேம்பாடுகளுக்கும் மற்றும் இயக்கப்பாட்டு இடர் பாதிப்புக்களைத் திணிப்பதற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

### சட்டவாக்க இடர்

சட்டவாக்க இடரானது இயக்கப்பாட்டு இடரின் ஒரு உள்ளார்ந்த அங்கமாக விளங்குகின்றது. இது வியாபாரம் மற்றும் சம்பந்தப்பட்ட தொடர்புகள், செயன்முறைகள், நடைமுறைகள் மற்றும் சேவைகள் தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்ற சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் விழிப்புணர்வின்மை அல்லது தவறுதலான புரிதல் அல்லது தெளிவின்மை மற்றும் பொறுப்பற்ற அலட்சியம் போன்றன காரணமாக ஏற்படக்கூடிய நிதி சார்ந்த இடர் அல்லது புகழ் சார்ந்த இழப்பினால் ஏற்படக் கூடிய இடராகும்.

இது அபராதம், தண்டம் மற்றும் தண்டனைக்குரிய சேதங்களுக்கு வழிவகுக்கக் கூடிய அல்லது பொறுப்பு அல்லது இழப்பில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய வங்கிக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கோரிக்கைக்கு வழிவகுக்கக் கூடிய தவறான ஆவணப்படுத்தல் மற்றும் ஆவண வரைவு செய்வதிலான குறைபாடு காரணமாக குறித்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய இழப்புக்களும் இதில் அடங்குகின்றன.

சட்டவாக்க இடர் முகாமைத்துவமானது, வங்கியின் இயக்கப்பாடுகள் மற்றும் அதன் நற்பெயரை குறைமதிப்பிற்கு உட்படுத்தக் கூடிய அடிப்படை உந்து சக்திகளை இனங்கண்டு வழங்குகிறது. சட்டவாக்கப் பிரிவானது வியாபாரப் பிரிவுகளுக்கு வழிகாட்டலை வழங்குவதோடு, வங்கியின் சட்டவாக்க இடர் குறித்தான மூலோபாய முகாமைத்துவத்தில் ஈடுபடுகிறது. சட்டவாக்கப் பிரிவானது ஏனைய வியாபார பிரிவுகளுடன் கூட்டிணைந்து வாய்ப்பு மிக்க சட்டவாக்க இடர்கள் மறறும் பிரச்சினைகளை இனங்காண்பதில் முனைப்புடன் ஈடுபட்டு வருவதோடு, வங்கியின் நலனைப் பாதுகாக்கும் வகையில் போதுமான மற்றும் பொருத்தமான தணிப்பு நடவடிக்கைகள் பொருந்திக் கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துகிறது.

மேலும் சட்டவாக்கப் பிரிவானது, வங்கியானது ஒப்பந்தம் சார்ந்த தொடர்புறல்களுடனும் மற்றும் அதன் வியாபார இயக்கப்பாடு குறித்தான நடத்தைகளிலும் இணைந்துகொள்ளும் போது, ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு வங்கி இசைவுறுவதை உறுதிப்படுத்துவதோடு, சட்டவாக்க இடர்கள் ஏற்படும் அளவு மற்றும் அவற்றின் தீவிரத்தன்மையினைக் குறைக்கக் கூடிய கிடைக்கத்தகு சிறந்த தகவல்களின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கின்ற அதேவேளை, வங்கியின் எதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்வதற்கு வினைத்திறன் மிக்க முறையிலான பதிலளிப்புக்களையும் வழங்குகிறது.

### இணக்கப்பாடு மற்றும் ஒழுங்குறுத்துகை இடர்

இணக்கப்பாட்டு இடரானது தொழிற்துறை சார்ந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், உள்ளக கொள்கைகள் அல்லது பரிந்துரைக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க செயற்படத் தவறியமை காரணமாக நிகழக்கூடிய சட்டவாக்கத் அபராதங்கள், நிதிசார் பறிமுதல் மற்றும் மூலப்பொருள் இழப்பு போன்ற விடயங்களுக்கான வங்கியின் சாத்தியம் மிக்க இடர் வெளிப்பாடுகளாகும். இது ஒழுங்குறுத்துகை சார்ந்த பொருளாதாரத் தடைகள், நிதிசார் அபராதங்கள், வியாபாரத் தடங்கல்கள், இயக்கப்பாட்டு மற்றும் நிறுவனத்தின் புகழ் சார்ந்த சேதங்கள் போன்றவற்றுக்கு வழிவகுக்கக் கூடும்.

குறித்த இணக்கப்பாடானது துரித கதியில் மாறி வருவதோடு, வங்கியானது இடர் மூலோபாயங்கள், முறையியல்கள் மற்றும் வேலைச்சட்டகங்களை விருத்தி செய்து அவற்றை ஒருமுகப்படுத்த வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. இதனால், இணக்கப்பாட்டு இடர்களுக்கு தீர்வளிக்கும் வகையில் பாரம்பரிய அணுகு முறைகள் மீது நம்பியிருப்பதானது தொழிற்துறையின் இணக்கப்பாட்டுச் சூழல் முறைமையின் அதிகரித்து வரும் பல்வகைமைக்கு எதிரான வினைத்திறன் அற்றதொன்றாகும்.

எனவே, வங்கியானது இணக்கப்பாட்டு இடருக்கு தீர்வளிக்கும் வகையில் இடர் மதிப்பீட்டிற்குரியதொரு வினைத்திறன் மிக்க ஆளுகை வேலைச்சட்டகத்துடன் கூடிய நவீன மற்றும் புத்தாக்கமுள்ள மூலோபாயங்களை பொருந்திக் கொண்டு வருகிறது. இணக்கப்பாட்டுப் பிரிவானது இணக்கப்பாட்டு அதிகாரியை தலைமையாகக் கொண்டு செயற்படுவதோடு, அது BIRMC ஊடாக பணிப்பாளர்கள் சபைக்கு நேரடியாக அறிக்கை செய்கிறது.

2021 ஆம் ஆண்டுக் காலத்தில், வங்கியின் இணக்கப்பாட்டு மற்றும் ஒழுங்குறுத்துகை சார்ந்த இடர்களைக் குறைக்கும் நோக்கில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன:

- 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி சார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கை செய்தல் சட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டதன் பிரகாரம், நிதி மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் போன்றவற்றைத் தடுத்தல், கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடர்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் வகையில் சந்தேகத்திற்கிடமான நிதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட தரவுகளை வழங்கல்.
- வங்கியின் சபை மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவத்தின் மூலம் வங்கியின் வியாபாரம் மற்றும் அலுவல்கள் முன்னெடுக்கப்படுவதற்கு ஏதுவான பொறுப்புக்களையும் நிறுவனத்தின் ஒதுக்கங்களையும் தீர்மானிப்பதற்கான 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 76 (ஐ) (ஒ) இன் மூலம் அளிக்கப்பட்ட அதிகாரங்களை உபயோகிப்பதிலான கூட்டாண்மை ஆளுகை குறித்தான 2007 இன் 12 ஆம் இலக்க பணிப்புரைக்கு இணங்குதல். இதன் மூலம் வங்கியானது நிதி சார்ந்த ஸ்திரத்தன்மையினையும் தமது வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான தன்மையினையும் பேணும் வகையிலான பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது.
- பொருத்தமான கொள்கைகள் மற்றும் நெறிமுறைகளை உரிய நேரத்தில் மீளாய்வு செய்யப்படுவதனை உறுதிசெய்தல்

– வங்கியின் கிளை அலுவலகங்கள், பிரிவுகள் மற்றும் உற்பத்திகள் போன்றன குறித்தான இணக்கப்பாட்டு மதிப்பாய்வினை முன்னெடுத்தல்.
– பயிற்சி அளித்தல் மூலம் விழிப்புணர்வூட்டலை வழங்கல்.

வங்கியானது புதிய தொலைதூர பணி நிறைவேற்றுச் சூழலில் வினைத்திறன் மிக்க முறையில் தொழிற்படக் கூடிய முக்கியமான இணக்கப்பாட்டுக் குழுக்களின் அவசியத்தை இனங்கண்டு அதனை முன்னெடுத்ததோடு, இணக்கப்பாட்டுத் தொழிற்பாட்டினை மேற்கொள்வதற்கான புதிய தொழில்நுட்பக் கருவியுடன் கூடிய வசதிகளையும் வழங்கியது.

### வியாபார முன்னெடுப்புசார் இடர்

மனித உருவாக்கத்தினால் அல்லது இயற்கையின் பேரழிவினால் ஏற்படக்கூடிய தீங்குடன் கூடிய அனர்த்தங்கள் காரணமாக வங்கியின் இயக்கப்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் காணப்படக் கூடிய சாத்தியமுள்ள அச்சுறுத்தலே வியாபார முன்னெடுப்பு சார் இடர் எனப்படுகிறது.

வியாபார முன்னெடுப்பு முகாமைத்துவமானது (BCM) வாடிக்கையாளர்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுக்கான தடங்கலின்றிய தொடர் சேவை விநியோகத்தை உறுதிப்படுத்துகிறது. இது ஒரு தகவல் தொழில்நுட்ப இயக்கமுடைய வங்கிச் சூழமைவில் ஒரு இன்றியமையாத முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது.

இயற்கையான, மனித உருவாக்கத்துடன் கூடிய அல்லது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அனர்த்தங்களிலிருந்தான தடங்களைக் குறைத்து வணிக முன்னெடுப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில், வியாபார முன்னெடுப்பு முகாமைத்துவத்திற்கென ஒரு ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கை ஆவணங்கள், செயலாக்கங்கள் மற்றும் முறைமைகள் போன்றவற்றை வங்கி கொண்டுள்ளது.

BCP அலகானது, வினைத்திறன் மிக்க நடைமுறைப்படுத்துகை, சோதனை மற்றும் BCM வேலைச்சட்டகக் கண்காணிப்பு போன்றன தொடர்பிலான பொறுப்பினைக் கொண்டுள்ளதோடு, வங்கியின் அனர்த்த மீட்பு தொடர்பிலான முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்குமான பொறுப்பினையும் கொண்டுள்ளது. அடுக்கு III வடிவச் சான்று (TCDD) வழங்கப்பட்ட தரவு மையமானது வியாபார முன்னெடுப்பு உட்கட்டமைப்புக்கானதொரு மேலதிக சக்தியை வழங்குகிறது.

### தகவல் தொழில்நுட்பம் சார் இடர்

நிதிச் சேவை முறைமைகளினுள் காணப்படுகின்ற தொழில்நுட்ப முன்னேற்றமானது வங்கியின் வணிக மாதிரியில் ஒரு பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. வங்கிகள் சேவை வழங்கலுக்காக தகவல் தொழில்நுட்ப வசதிகளை பெருமளவில் உபயோகிக்கின்றன. இதனால், இணையத் தாக்குதல், முறைமை செயலிழப்புகள், முறைமைத் தவறுகள், முறைமைத் திறன் கையாளுகை, மோசடிகள், தொழில்நுட்பம் வழக்கற்றுப் போதல் போன்ற இயக்கப்பாடு சார்ந்த நிகழ்வுகள் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளது. தீவிரம் மற்றும் நிகழ்வுத் தடவைகள் போன்றவற்றின் அடிப்படையில் மூலப்பொருள் சார்ந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, ஒழுங்குறுத்துகைப் பணிப்புரையில் சொல்லப்பட்டவாறு, தகவல் தொழில்நுட்ப இடர்கள் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத் தேவைப்பாடுகளை மைய அவதானமாகக் கொண்டு இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத்தினுள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. ORMU ஆனது மேற்படி கலந்தாரயப்பட்ட நுட்பங்களை உபயோகித்து தகவல் தொழில்நுட்ப இடர்களை மதிப்பீடு செய்து கண்காணித்து வருகிறது.

வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான வங்கிச் சேவையினை வழங்கும் நோக்கில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் என்றும் எழக்கூடிய பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்புப் பெற்று தகவல் இரகசியம், ஒருமைப்பாடு மற்றும் தகவல் காணப்படுகையின் பிரகாரம், வங்கியின் முக்கியமான தகவல் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக சபையின் அங்கீகாரத்தைக் கொண்ட தகவல் பாதுகாப்பு ஆளுகை வேலைச்சட்டகம் ஒன்றினை வங்கி பேணி வருகிறது.

தகவல் பாதுகாப்பு அலகானது (ISD) தகவல் பாதுகாப்பு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. ISD ஆனது வெளியக நிபுணத்துவச் சேவை வழங்குனர்களின் உதவியுடன் தகவல் முறைமைகள் பற்றிய சுயாதீன இடர் மதிப்பீடுகளை மேற்கொண்டு வருவதோடு, மதிப்பீட்டு முடிவுகள் இடர் பரிகார அல்லது இடர் தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைப்பதற்காக உபயோகிக்கப்படுகின்றன.

கொடுப்பனவு அட்டைக் கைத்தொழில் - தரவுப் பாதுகாப்பு நியமம் (PCI DSS), எதிர்கால சந்ததியினர் பாதுகாப்பு இயக்க மையம் (NG-SOC) மற்றும் தரவு ஒழுக்கு பாதுகாப்பு (DLP) ஆகியன 2021 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இடம்பெற்ற பிரதான அம்சங்களாகும்.

PCI DSS ஆனது நிறுவனத்திற்கான ஒரு தகவல் பாதுகாப்பு நியமமாகும். இது பிரதான அட்டைத் திட்டங்களிலுள்ள வர்த்தகச் சின்னம் கொண்ட கடன் அட்டை/ பற்று அட்டைகளை கையாளுகின்றது. இது கொடுப்பனவு அட்டைப் பாதுகாப்பிற்கான மிகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுள் ஒன்றாக விளங்குவதோடு, அட்டைச் செயற்பாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட தகவல் முறைமைகளுக்கான குறிப்பான நுட்பம் சார்ந்த மற்றும் இயக்கம் சார்ந்த கட்டுப்பாட்டு அடிப்படையைக் கொண்டவையுமாகும். தற்போது வங்கியானது மாஸ்டர்காட் மற்றும் வீசா ஆகிய வர்த்தக சின்னமுடைய பற்று அட்டைகளை வழங்கி வருவதோடு, அட்டை உரிமையாளர்களின் தரவுப் பாதுகாப்பினை PCI DSS உறுதிப்படுத்துகிறது. இந்த வங்கியானது 2019 ஆம் ஆண்டிலிருந்து PCI DSS இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரேயொரு அரச வங்கியாகத் திகழ்கின்றது.

சர்வதேச மட்டத்திலான சிறந்த அனுபவங்களையும் அடுத்த சந்ததியினருக்கான விடயங்களையும் எதிர்கொள்ளும் வகையில் நிகழ்வுப் பதிலளிப்புத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், வங்கியானது நிபுணர்களின் உதவியுடன் 24x7x365 இயக்க SOC நடைமுறைப்படுத்தலைக் கொண்டுள்ளது.

தரவினைப் பாதுகாத்து ஒழுங்குவிதிகளுக்கமைய இசைவுறும் நோக்கில், ISD ஆனது தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவியுடன் தரவு ஒழுக்குப் பாதுகாப்பு நடவடிக்கையினையும் தரவு வகைப்படுத்தல் தீர்வு நடவடிக்கையினையும் 2020 ஆம் ஆண்டுக் காலத்தில் நடைமுறைப்படுத்தியது.

வங்கியானது, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தும் நோக்கிலும் மற்றும் ஒழுங்குமுறையான மீளாய்வுகளின் ஊடாக அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை பராமரிக்கும் நோக்கிலும் "தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம் மற்றும் உரிமம் அளிக்கப்பட்ட வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் திறன் பற்றிய ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகம்" குறித்தான CBSL வழிகாட்டலை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளை வங்கி எடுத்துவருகிறது.

### இலஞ்சம் மற்றும் ஊழல் சார்ந்த இடர்கள்

இலஞ்சம் மற்றும் ஊழலானது, அன்பளிப்புக்களை ஏற்றுக்கொள்ளல், விருந்தோம்பல், வசதிக் கொடுப்பனவுகள், அரசியல் பங்களிப்புகள், பணம் மற்றும் தரகுக் கொடுப்பனவுகள், அனுசரணை அளிக்கப்பட்ட பிரயாணங்கள் மற்றும் உறைவிட வசதியளித்தல், மற்றும் அறக்கட்டளை பங்களிப்புகள் போன்ற வடிவங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளிலும் விடயங்களிலும் இடம்பெறக் கூடும்.

வங்கியானது நிறுவனத்தின் புகழ் சார்ந்த இடர்களையும் மற்றும் நிதி சார்ந்த இழப்புக்களையும் தணிக்கும் நோக்கில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் எந்தவொரு சகிப்புத் தன்மையினையும் கொண்டிருக்காது. இதற்கிணங்க, ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் வங்கிக்காக மற்றும் வங்கியின் துணை நிறுவனங்களுக்கா அல்லது இவை சார்பில் செயற்படுகின்ற மூன்றாம் தரப்பினர் ஆகியோர் பின்வரும் விடயங்களிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்::

– ஏதேனும் அனுகூலமானது, மற்றுமொரு நபருக்கு வழங்கப்படினும் அல்லது மற்றுமொரு நபரினால் பெற்றுக்கொள்ளப்படினும், மற்றும் அதன் மதிப்பு எவ்வளவாயிருப்பினும், எந்தவொரு தன்மையுமுடைய இலஞ்சம் மற்றும் ஊழல் நடத்தைகளில் ஈடுபடுதல்.
– எந்தவொரு நேர்மையற்ற கணக்கீடுகளையும் மேற்கொள்ளல் அல்லது பூரணமான மற்றும் துல்லியமான நிதி சார்ந்த நடவடிக்கைகளை மறைத்தல்.

வங்கியானது இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் (ABC) கொள்கை ஒன்றினை 2020 ஆம் ஆண்டில் விருத்தி செய்துள்ளது. இதற்கிணங்க, உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் சார்ந்த இடருக்கு வழியமைக்கும் பிரதேசங்களை இனங்காணும் நோக்கில், RMD ஆனது ABC இடர் மதிப்பாய்வினை 2021 ஆம் ஆண்டு முதற்கொண்டு வருடாந்தம் முன்னெடுத்து வருகிறது.

#### இடர் பரிமாற்றம்

வங்கியின் **வெளியகவள** ஏற்பாடுகள் வங்கியின் நிர்வாகப் பிரிவின் வெளியகவளக் கண்காணிப்பு அலகினால் இனங்காணப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகிறது. வெளியகவளச் சேவையானது வங்கிக்கான ஒரு வினைத்திறன் மிக்க செலவுச் சேமிப்பும் இடர் பரிமாற்ற மூலோபாயமுமாக விளங்குகின்றது. வெளியகவளச் செயற்பாடுகள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளியகவளக் கொள்கை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் போன்றவற்றுக்கு அமைய முன்னெடுக்கப்படுகின்றன.

வங்கியின் உள்ளகக் கொள்கைகளுக்கு அமைவான தேவைப்பாடுகளின் பிரகாரம் வெளியகவளச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு குறித்த சேவை வழங்குனர் கொண்டுள்ள திறனை உறுதிப்படுத்தும் நோக்கில், புதிய ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் அல்லது தற்போதுள்ள உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு முன்னர் வெளியகவளச் சேவை வழங்குனர் குறித்தானதொரு துறைசார்ந்த சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**காப்புறுதியானது** பிரதான காப்பீடளிக்கத்தக்க இடர்களை ஒரு காப்புறுதிச் சேவை வழங்குனருக்கு பரிமாற்றும் வகையில் ஒரு இயக்கப்பாடு சார்ந்த இடர் தணிப்பு நுட்பத்திற்குரிய பிரதான வகிபாகம் ஒன்றினை வழங்குகிறது. காப்புறுதிக் கொள்கைகளின் போதுமைத் தன்மையானது வங்கிக்குரிய தற்போதைய மற்றும் எதிர்கால இடர்களைக் கருத்திற்கொண்டு தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. சுஊனு ஆனது இயக்கப்பாடு சார்ந்த இடர்களுக்கான காப்புறுதி மீட்புக் குறித்தான முன்னேற்றத்தினைக் காண்காணிப்புச் செய்து அறிக்கை செய்கிறது. காப்புறுதித் தொழிற்பாடானது நிர்வாகப் பிரிவினுள் ஒருமுகப்படுத்தப்படுகிறது.

## நிறுவனத்தின் நற்பெயர் சார்ந்த இடர்

நிறுவனத்தின் நற்பெயர் சார்ந்த இடரானது வங்கியின் செயற்பாடுகள், வியாபார அனுபவங்கள், உற்பத்திகள், சேவைகள் போன்றன குறித்தான எதிர்மறையான பங்கீடுபாட்டாளர் எண்ணக்கருக்கள் காரணமாக வர்த்தகச் சின்னத்தில் ஏற்படக் கூடிய பாதகமான தாக்கம் பற்றிய இடராகும். நற்பெயர் சார் இடரானது வங்கியின் வருமானம் மற்றும் சொத்துக்களில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால், நிதி நிறுவனங்களின் இயக்கத்தில் பொதுமக்களின் நம்பிக்கையினைப் பேணும் நோக்கில் நிதி நிறுவனங்களுக்கென தாபிக்கப்பட்டதொரு நற்பெயர் சார் இடர் பற்றிய முகாமைத்துவமானது இன்றியமையாதக விளங்குகின்றது.

வங்கியானது, இலங்கையிலுள்ள ஒரு முன்னோடி உரிமம் பெற்ற விசேட அரச வங்கி என்ற வகையில் சுமார் ஐந்து தசாப்த காலமாக களங்கமற்ற நற்பெயரினைப் பேணி வந்துள்ளது. ஒரு நல்ல புகழ் மிக்க நற்பெயரானது வங்கியின் நாணயத்தினைப் பிரதிபலிக்கின்றது. ஒரு நிதிச் சேவை வழங்குனர் என்ற வகையில், பணியாட்டொகுதியினரின் திறன் மற்றும் வாடிக்கையாளர் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தும் உற்பத்திகள் மற்றும் சேவைகள் போன்றன வாடிக்கையாளர் நம்பிக்கைக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன.

வங்கியானது நற்பெயர் இழப்பு தொடர்பில் இடர் நாட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை. இதனால், RMD ஆனது ஆரம்பகால எச்சரிக்கைச் சுட்டிகள் ஊடாக நற்பெயர் சார் இடர்களை நெருக்கமாக கண்காணித்து வருகின்றது. வங்கியானது வாடிக்கையாளர்களுடனும் ஏனைய அக்கறைதாரர்களுடனும் தொடர்பாடலைப் பேணுவதற்காகவும் மற்றும் பாதகம் மிக்க தொடர்பாடல்களிலிருந்து வங்கியின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கும் பல்வேறு வழிமுறைகளை உபயோகித்து வருகிறது.

ICAAP வழிகாட்டல்களின் அடிப்படையில் நற்பெயர் சார்ந்த இடர்களை மதிப்பிடுவதற்காக ஒரு ஸ்கோர்காட்-மைய மாதிரி உபயோகிக்கப்படுகிறது.

## மூலோபாய இடர்

மூலோபாய இடரானது, வங்கியானது அதன் குறிக்கோள்களையும் மூலோபாய இலக்குகளையும் அடைந்து கொள்வதில் வங்கிக்கு கடினத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் அல்லது தீர்மானங்களைக் குறிப்பிடுகிறது. இது தொடர்ந்தும் தவறான விடயமாக இருக்கக் கூடிய, அல்லது மாறும் சூழல்களுக்கு வினைத்திறன் மிக்க முறையில் பதிலளிக்காத வங்கியின் மூலோபாயத் தெரிவுகளாகவும் இருக்கலாம்.

மூலோபாயத் திட்டங்களும் மற்றும் வரவுசெலவுத் திட்டச் செயலாக்கங்களும் வங்கியின் தொலைநோக்கு, பணியிலக்கு மற்றும் இடர் நாட்டம் என்பவற்றை சீரமைப்பதோடு, சிரேஷ்ட முகாமைத்துவத்தின் கண்காணிப்புடன் கூடிய பணிப்பாளர்கள் சபையின் கண்காணிப்பானது மூலோபாய இடர் பற்றிய முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கின்றது.

வங்கியின் வியாபார மூலோபாயத்தை வகுத்தமைப்பதில் ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து பெறப்படுகின்ற உள்ளீடுகள் பங்களிப்புச் செய்கின்றன. மூலோபாயத்தை நிறைவேற்றுவதிலுள்ள இடரைக் குறைக்கும் நோக்கில் சரியான தகைமை, திறன்கள், உட்கட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்றன இருப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அவசியமான நடவடிக்கைகளை வங்கி எடுத்துள்ளது. மூலோபாய இடர்களைத் தணிக்கும் வகையில், முகாமைத்துவமானது ஒரு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலோபாயத் தீர்மானங்களின் முன்னேறத்தினை மீளாய்வு செய்து வருகிறது.

ICAAP வழிகாட்டலுடன் சீரமைக்கப்பட்ட ஒரு விரிவான ஸ்கோர்காட்- மைய மாதிரியானது வங்கியின் மூலோபாய இடரை மதிப்பிடுவதற்காக உபயோகிக்கப்படுகிறது.

## மூலதன மீளாய்வு

ஒழுங்குவிதி சார் மூலதனத் தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தல், பண வைப்பாளர்கள்/கடன் கொடுனர்களுக்கு நிதிசார் பாதுகாப்பினை வழங்கல், எதிர்கால வியாபார விரிவாக்கத் தளர்வினைப் பேணுதல் மற்றும் பங்குதாரர்களுக்கு போதுமான திரும்பலை உருவாக்குதல் என்பன போன்ற நோக்கங்களுக்காக வங்கிக்கு உறுதியான மூலதனக் கட்டமைப்பு ஒன்று அவசியமாகிறது.

2021 ஆம் ஆண்டுக் காலப் பகுதியின் போதான இயக்கப்பாடு சார்ந்த இடர் முகாமைத்துவ முன்னெடுப்புகள்

**கொள்கை வேலைச்சட்டகம்**

- வங்கியின் இயக்கப்பாடு சார்ந்த இடர் முகாமைத்துவக் கொள்கை உள்ளிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை வேலைச்சட்டகம் மீளாய்வு செய்யப்பட்டது.
- இடர் நாட்டம் மற்றும் KORIs தொடக்க எல்லைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

**கண்காணிப்பு**

- பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகளைக் கண்காணித்தல்.
- இயக்கப்பாட்டு இழப்பு நிகழ்வுகள் மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கண்காணித்தல்.
- இயக்கப்பாடு சார்ந்த இடர் தளம் பற்றிய விபரங்களை BIRMC மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கு அடிக்கடி சமர்ப்பித்தல்.
- இலஞ்சம், ஊழல் எதிர்ப்பு இடர் மதிப்பீடு.
- அழுத்தச் சோதனை.

**செயலாக்க மேம்பாடுகள்**

- அட்டை செயற்படுத்தல்கள் மற்றும் ஏனைய முக்கிய கிளை அலுவலகச் செயற்பாடுகள் போன்றவற்றுக்காக முன்னெடுக்கப்பட்ட சுஊளுயு இன் அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட செயலாக்கம் மற்றும் கட்டுப்பாட்டு அமுல்படுத்தல்கள்.
- இயக்கப்பாடு சார் இழப்பு நிகழ்வுத் தரவு தொடர்பில் அறிக்கையிடுவதற்கான தானியக்க பணிநகர்வின் அறிமுகம்.

மூலதனத்தை முகாமைத்துவம் செய்வதானது வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு உறுதியளிக்கின்ற அதேவேளை, பங்குதாரர்களுக்கான திரும்பலையும் அது உருவாக்குகிறது. இதனால், வங்கியானது செயலாற்றுகைக்கும் இடருக்கும் இடையில் உகந்ததொரு சமநிலையினை பேணி மிகவும் வினைத்திறன் மிக்க முறையில் மூலதனத்தினை முகாமைத்துவம் செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதோடு, இடர் விவரத்திலுள்ள மாற்றங்கள் மற்றும் இடர் திணிவுமிக்க சொத்துக் கலவை போன்ற தொடர்பில் கண்டிப்பான கண்காணிப்பினையும் முன்னெடுத்து வருகிறது. மூலதன முகாமைத்துவச் செயன்முறையானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க காணப்படுகிறது.

2019 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் செயற்பாட்டு பணிப்புரைகளின் பிரகாரமும் மற்றும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் பற்றிய பணிப்புரைக்கான திருத்தங்களின் பிரகாரமும், அட்டவணை 47 இல் விபரிக்கப்பட்டவாறு குறைந்தபட்ச மூலதன விகிதங்களைப் பேணுமாறு வேண்டப்படுகிறது.

தேசிய சேமிப்பு வங்கியானது ஒரு D-SIB ஆக தொடர்ந்தும் கருதப்படாததன் காரணமாக, உயர் இழப்பு உள்ளீர்ப்பினைப் பேணவேண்டிய அவசியமில்லை.

இலங்கை மத்திய வங்கியானது, கொவிட்-19 பாதிப்பினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவுக்கு மத்தியிலான சூழமைவில், D-SIBs அல்லாதவர்கள் தமது மூலதனப் பேணுகைத் தடைகாப்பினை 50%இனால் குறைப்பதற்கு அனுமதித்துள்ளது. மேலும், அதிவிசேட ஒழுங்குறுத்துகை சார் நடவடிக்கைகள் RWAs குறித்தான மேம்பாட்டிற்கு வசதியளித்தது.

இலாபங்களில் ஏற்பட்ட மேம்பாடானது 2021 ஆம் ஆண்டுக்காக வகுக்கப்பட்ட இடர் நாட்டத்திற்கு மேல் மூலதன போதுமையினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தது. இது தீர்மானிக்கப்பட்ட ஒழுங்குவிதி சார் குறைந்தபட்சத் தேவைப்பாடு மீதான ஒரு போதுமான பாதுகாப்புத்தடையுடன் காணப்படுகிறது. CET1 விகிதமானது 2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காணப்பட்ட 12.03 சதவீதத்திலிருந்து 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் 17.17 சதவீதம் வரை இவ் ஆண்டுக் காலத்தில் அதிகரித்தது. வங்கியின் அடுக்கு 1 மூலதன விகிதமானது 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 18.60 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த மூலதன விகிதமானது 2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காணப்பட்ட 16.45 சதவீதத்திலிருந்து 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 20.83 சதவீதத்திற்கு அதிகரித்தது.

குழுமத்தின் மொத்த மூலதன விகிதமானது 2021 இல் 22.0 சதவீதமாகக் காணப்பட்டதோடு, இது 2020 டிசம்பரில் 18.30 சதவீதமாகக் காணப்பட்டது 100 சதவிதம் அரச உடைமையுடைய சேமிப்பு வங்கி என்ற வகையில், ஒழுங்குறுத்துகை சார் மூலதனத்தை அதிகரிப்பதற்கான விருப்பத்தெரிவுகள் வெளியக ரீதியில் மட்டுப்படுத்தப்பட்டே காணப்படுகின்றன. இதனால், வங்கியானது மூலதனத்தை அதிகரிப்பதற்காக மிகவும் சாதகமான வளங்களையே (அதாவது, தக்கவைத்துக் கொண்ட வருமானங்கள்) 2021 ஆம் ஆண்டில் உபயோகித்தது.

### மூலதன மட்டம் - வங்கி மற்றும் குழுமம்

வரைபு 75

மூலதன மட்டம் - வங்கி மற்றும் குழுமம்




### மூலதனப் போதுமை விகிதம்

| விகிதம் (%) | ஒழுங்குறுத்துகை சார் குறைந்தபட்சம் | 2021 டிசம்பர் 31 இலுள்ளவாறு உண்மைப் பெறுமதி | | 2021 டிசம்பர் 31 இலுள்ளவாறு உண்மைப் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | வங்கி | குழுமம் | வங்கி | குழுமம் |
| பொது பங்குமூலதன அடுக்கு 1 உடன் மூலதன காப்பு தாங்கியிருப்பு | 7.00 | **17.17** | **18.54** | 12.03 | 13.96 |
| அடுக்கு 1 உடன் மூலதன காப்பு தாங்கியிருப்பு | 8.50 | **18.60** | **19.96** | 13.65 | 15.57 |
| **மொத்த மூலதனம்** | 12.50 | **20.83** | **22.00** | 16.45 | 18.30 |

ICAAP ஆனது, இயக்கப்பாட்டு வினைத்திறன்கள், அபிவிருத்தி மற்றும் கடன் தீர்க்கும் ஆற்றல் போன்றவற்றை அடையும் நோக்கில் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் மூலோபாய வியாபாரத் திட்டமிடல்களை இணைத்து ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையினை ஊக்குவிக்கின்றது.

### உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை (ICAAP) தூண் III

ICAAP ஆனது, அனைத்து மூலப்பொருள் சார் இடர்களையும் இனங்கண்டு கொள்ளும் நோக்கில் ஒரு சிறந்த இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்துடன் கூடிய இடர் நாட்டம், அழுத்தச் சோதனை, மற்றும் மூலதனத் திட்டமிடல் எண்ணக்கருக்கள் போன்றவற்றை

உள்ளடக்கியுள்ளது. இது வங்கியின் இடர் விவரங்களைக் கொண்ட உள்ளக மூலதனச் சமான மட்டத்தினை உறுதிப்படுத்தும் நோக்கில் மிகவும் நியாயம் மிக்கதொரு தன்மையில் வியாபார செயலாற்றுகை, இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் இடர் உணர்வு மிக்க மூலதனம் போன்றன ஒன்றுசேர்வதை இயலச் செய்கிறது.

வங்கியானது சபை ஒப்புதலைப் பெற்ற ICAAP முகாமைத்துவக் கொள்கை ஒன்றைக் கொண்டுள்ளதோடு, இது மேற்பார்வை மிக்க மீளாய்வுச் செயன்முறை மற்றும் சர்வதேச தரத்திலான சிறந்த நடைமுறைகள் போன்றன தொடர்பில் வங்கிக்கு வழங்கப்படுகின்ற பாசல் III மற்றும் தூண் II வழிகாட்டல்கள் பற்றிய இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு இசைவாக காணப்படுகிறது.

வங்கியின் ICAAP ஆனது வங்கிக்கும் ஒழுங்குறுத்துகையாளருக்கும் அடிப்படை அம்சங்களாக விளங்குகின்ற நான்கு கோட்பாடுகளினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தச் செயன்முறையானது தீர்மானம் எடுத்தல், விரிவான இடர் மதிப்பீடு, உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல், கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் அழுத்தச் சோதனை இடர்கள் போன்றவற்றுக்கான இடர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஈடுபடுகிறது. இது BIRMC ஊடாக பணிப்பாளர்கள் சபையின் மேற்பார்வைப் பொறுப்புடன் இடம்பெறுகிறது.

இடர் மதிப்பீடானது தூண்-I மற்றும் தூண்-II ஆகிய இரு இடர்கள் தொடர்பிலும் ஈடுபடுகிறது. தூண்-I இடர்கள் ஒழுங்குறுத்துகை சார்ந்த மூலதனத் தேவைப்பாடுகளுடன் சம்பந்தப்படுகின்ற அதேவேளை, தூண்-II இடர்கள் பொருளாதார மூலதனத்துடன் சம்பந்தப்படுகிறது.

வங்கியானது இடர் விவரங்களையும் உள்ளக மூலதனத் தேவைப்பாடுகளையும் மதிப்பீடு செய்து அவற்றை அளவிடுவதற்கான உள்ளக மாதிரிகளைக் கொண்டுள்ளது. மூலதனப் போதுமை தொடர்பிலான வினைத்திறன் மிக்க மதிப்பீட்டினை வழங்கும் நோக்கில் உள்ளக மூலதனத் தேவைப்பாட்டினை உள்ளடக்கியதாக உள்ள எல்லைகள் தாபிக்கப்பட்டுள்ளன. விரிவான முறையில் ஆவணப்படுத்தப்பட்ட ICAAP ஆனது, ஒழுங்குறுத்துகையாளருக்கு அது சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கலந்துரையாடப்பட்டு, ALCO மூலமாக BIRMC இனாலும் பணிப்பாளர்கள் சபையினாலும் ஒப்புதலளிக்கப்படுகிறது.

### அழுத்தச் சோதனை

அழுத்தச் சோதனையானது தூண்-II கீழான ICAAP இன் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். வங்கியின் அழுத்தச் சோதனை வேலைச்சட்டகமானது பணிப்பாளர்கள் சபையினதும் மற்றும் மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டல்களினதும் ஒப்புதலைப் பெற்ற அழுத்தச் சோதனைக் கொள்கையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. வங்கியின் அழுத்தச் சோதனை வேலைச்சட்டகமானது வர்த்தக ஏடு மற்றும் வங்கியில் ஏடு ஆகியவற்றிலுள்ள கடன் இடர், வட்டி வீத இடர், இயக்கப்பாட்டு இடர், திரவத்தன்மை சார் இடர், ஒருங்கிணைத்தல் இடர் மற்றும் எஞ்சிய கடன் இடர் போன்ற அனைத்து மூலப்பொருள் இடர்கள் தொடர்பிலுமான அழுத்தச் சோதனைகளைக் கொண்டுள்ளது. வங்கியானது அழுத்தச் சோதனை நோக்கங்களுக்காக அதிகரிக்கும் பாதிப்புகள் தொடர்பில் வரையறுக்கப்பட்ட மூன்று மட்டங்களைக் கொண்டுள்ளது, அவையாவன சிறியளவு மற்றும் நடுத்தரவளவு மற்றும் பாரியளவு (அல்லது, குறைந்தளவு, நடுத்தரவளவு மற்றும் உயர்ந்தளவு) என்பனவாகும்.

அழுத்தச் சோதனையானது, வங்கி இயங்குகின்ற சூழமைவில் ஏற்படுகின்ற பாதகமான பொருளாதாரம், அரசியல் மற்றும் பௌதீக மாற்றங்களின் கீழ் மாறுபட்ட தீவிரத் தன்மையின் எதிர்பாராத நிகழ்வுகளைத் தாங்கி நிற்பதற்கான வங்கியின் திறன் மீதான ஒரு புரிதலை வழங்குகின்றது.

வங்கி அழுத்தமானது, தீர்மானம் எடுத்தலுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் கடன் தீர்க்கும் ஆற்றல் பற்றிய சுட்டிகள் மீதான தாக்கத்தை புரிந்துகொள்வதற்கு ஒழுங்குறுத்துகைகளிலுள்ள மாற்றம் மற்றும் கொவிட்-19 தொடர்பான சம்பவத்தினை சோதித்துள்ளது.

வட்டி வீதங்கள், அந்நியச் செலாவணி வீதங்கள் மற்றும் பங்குமூலதன விலைகள் போன்றன உள்ளிட்ட குறிப்பான கருவிகள் அல்லது விவரங்கள் பற்றிய பிரத்தியேக சந்தைக் காரணி நகர்வுகளின் தாக்கத்தை அளவிடுவதற்காக உணர்வு ரீதியான பகுப்பாய்வு உபயோகிக்கப்படுகிறது.

வங்கியானது பிரதானமாக, பாதகம் மிக்க வட்டி வீத ஏற்ற இறக்கங்கள் காரணமாக ஏற்படக்கூடிய வர்த்தக மற்றும் வங்கியியல் ஏடு குறித்தான தாக்கத்தினை இனங்காண்பதற்காக மேற்படி உணர்வு ரீதியான பகுப்பாய்வினை உபயோகிக்கின்றது. மேலும் இது குறித்தான அறிக்கைகள் ALCO இற்கு ஒரு ஒழுங்குமுறை அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கைகள் வங்கியின் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் மற்றும் விலையிடல் தீர்மானங்கள் ஆகியவற்றில் முக்கிய கருவியாக விளங்குகின்றன.

உணர்வுத்தன்மைப் பகுப்பாய்வு – வர்த்தகப்படுத்தல் ஏட்டில் வட்டி வீத இடர்நேர்வு - அரசாங்கப் பிணையங்கள் **அட்டவணை 47**

| | இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி (ரூ. ’000) | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி (ரூ. ’000) | மொத்தம் (ரூ. ’000) |
|---|---|---|---|
| 2021 இன் நிறைவில் செலவுக்கு எதிராக உணரப்படாத அடைவு/(இழப்பு) | (745,907) | (616,663) | (1,362,570) |
| M2M பெறுமதியிலான மாற்றம் | | | |
| வருவாயில் 100 bps அதிகரிப்பு | (212,120) | (170,469) | (382,589) |
| வருவாயில் 200 bps அதிகரிப்பு | (416,913) | (335,805) | (752,718) |
| வருவாயில் 100 bps வீழ்ச்சி | 219,838 | 175,848 | 395,686 |
| வருவாயில் 200 bps வீழ்ச்சி | 447,802 | 357,324 | 805,126 |

உணர்வுத்தன்மைப் பகுப்பாய்வு – வங்கி தொழில் ஏட்டின் விளைவு வளையி இடர் மதிப்பீடு அட்டவணை 48

| எதிர்மறை இடைவெளிகள் மீதான 100bp வீதம் | | <1 மாதங்கள் | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | >5 வருடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தனித்து நிற்கும் மட்டம் | இடைவெளி | (233,254) | (410,128) | (235,684) | (301,337) | 410,555 | 353,153 | 423,718 | 7,025 |
| | NII மீதான தாக்கம் (ரூ. மில்) | (2,243) | (3,427) | (1,485) | (784) | | | | (7,940) |
| திரண்ட மட்டம் | இடைவெளி | (239,476) | (425,886) | (232,062) | (301,001) | 412,454 | 358,225 | 427,703 | (45) |
| | NII மீதான தாக்கம் (ரூ. மில்) | (2,303) | (3,559) | (1,462) | (783) | | | | (8,107) |

அழுத்தச் சோதனை அனுபவத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் இடர் நாட்டம் மற்றும் இடர் எல்லைகளைத் தாபித்தல், மூலதலனத் திட்டமிடல், மூலோபாய வியாபாரத் திட்டமிடல் போன்றவற்றுக்கும் மற்றும் செயலூக்கமுள்ள தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் முக்கிய வியாபார இயக்கங்களிலுள்ள இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

**வேறுபட்ட தகைவுப் பரிசோதனை மட்டங்களில் மூலதனப் போதுமைக்கான தாக்கம்**

அட்டவணை 49

| விடயப்பரப்பு | நிகழ்வு | மூலதனப் போதுமை விகிதத்திற்கான தாக்கம் குறைவு (%) | நடுத்தரம் (%) | உயர்வு (%) |
|---|---|---|---|---|
| கடன் இடர் | கொடு கடன் இடர்நேர்வு- பொருளாதார வீழ்ச்சி காரணமாக செயற்படா கடன்களில் அதிகரிப்பு (குறைவு-10%, நடுத்தரம்-20%, உயர்வு-30%) | -0.207 | -0.414 | -0.621 |
| சந்தை இடர் | வட்டி வித இடர்நேர்வு: சந்தை விளைவில் அதிகரிப்பு (இ/ந சி. பெ சொத்துப் பட்டியல்) (குறைவு-50bps, நடுத்தரம்-100bps, உயர்வு-200bps) | -0.051 | -0.101 | -0.199 |
| | பங்குமூலதன விலை இடர்நேர்வு: சந்தை விலைகளில் வீழ்ச்சி (குறைவு-10%, நடுத்தரம்-20%, உயர்வு-30%) | 0.144 | 0.169 | 0.193 |
| | வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு: ரூபா மதிப்பிறக்கம் (குறைவு-10%, நடுத்தரம்-15%, உயர்வு-20%) | 0.035 | 0.040 | 0.045 |
| திரவத்தன்மை சார் இடர் | 3 மாத முதிர்ச்சிக்கு அப்பால் வைப்புக்களின் முன்கூட்டிய பணம் மீளப்பெறல் (குறைவு-30%, நடுத்தரம்-40%, உயர்வு-50%) 3 மாத முதிர்ச்சிக்கு குறைவான கடன் தவணைகளின் தவறுகை (குறைவு-30%, நடுத்தரம்-40%, உயர்வு-50%) | -0.526 | -0.701 | -0.877 |
| இயக்கப்பாட்டு இடர் | பாசல் II இழப்பு நிகழ்வு வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இயக்கப்பாட்டு இழப்புக்களிலான அதிகரிப்பு | -0.016 | -0.021 | -0.031 |

## குறைந்தபட்ச வெளிப்பாட்டுத் தேவைப்பாடு - தூண் III

குறைந்தபட்ச வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள், வங்கியின் மூலதனப் போதுமை மற்றும் இடர் வெளிப்பாடுகளை அளவிடுவதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களை அனுமதிக்கும் நோக்கில் பாசல் III இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைகளுக்கு இணங்க குறைந்தபட்ச வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொட்பில் பக்கம் 454 தொடக்கம் 466 வரை பார்க்க.

# → நிதியியல் அறிக்கைகள்


நிதியியல் நாட்காட்டி 2021 – **242**

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை – **243**

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று – **249**

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று – **251**

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம் – **253**

பொது முகாமையாளர்/பிரதரம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று – **254**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – **256**

நிதியியல் கூற்றுகளின் உள்ளடக்கம் – **259**

வருமானக் கூற்று – **260**

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று – **261**

நிதியியல் நிலைக் கூற்று – **262**

பங்குரிமைமூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று – **264**

காசுப் பாய்ச்சல் கூற்று – **268**

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – **270**

# நிதியியல் நாட்காட்டி

| | |
|---|---|
| **நிதியியல் நாட்காட்டி 2021** | |
| 2021 மார்ச் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல் | 2021 மே 31 |
| 2021 ஜூன் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல் | 2021 ஆகஸ்ட் 30 |
| 2021 செப்டம்பர் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல் | 2021 நவம்பர் 30 |
| 2021 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை (கணக்காய்வுசெய்யப்பட்ட) வெளியிடுதல் | 2022 மார்ச் 30 |
| **2022 முன்மொழியப்பட்ட நிதியியல் நாட்காட்டி** | |
| 2022 மார்ச் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல் | 2022 மே 31 |
| 2022 ஜூன் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல் | 2022 ஆகஸ்ட் 30 |
| 2022 செப்டம்பர் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல் | 2022 நவம்பர் 30 |
| 2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை (கணக்காய்வுசெய்யப்பட்ட) வெளியிடுதல் | 2023 மார்ச் 30 |

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

## பொது

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் இணைத்து வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய தமது ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். வங்கியானது கடந்த ஆண்டுகளிலும் மற்றும் எதிர் காலத்திலும் இவ்வாறு பெறுமதி வாய்ந்ததாகவும் அதனை நிலை நிறுத்துவதாகவும் விளங்குமென்பதைத் தெரிவிக்கும் வகையில் வங்கியின் செயற்பாடுகள் மூலோபாயத் தோற்றத்தை வழங்குவதாக நாம் உறுதிப்படுத்துகிறோம்.

வருடாந்த நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வாளர் சபையினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் பரிந்துரை செய்யப்பட்டு 2022 மார்ச் 24 இல் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2022 மார்ச் 24 இல் விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது. இவ்வறிக்கையானது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிறுவன ஆளுகை மீதான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கான வங்கிச் சட்ட நியமம் 2007 ஆம் ஆண்டு இல 12 பணிப்புக்கள் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் தேவைப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடன் சேர்த்து இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்பாக பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் 27 ஜனவரி 2005இல் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை இல. பொ.மு.தி.ீ.27வழிகாட்டலுக்கமைவாக நிதியமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கி, 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மூலம்இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியென்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. வங்கிக்கு ICRA லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் நீண்டகால கடன் இறுக்கும் ஆற்றல் AAA (நிலையான) தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## வணிக மதிப்பாய்வு

### வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

தேசிய சேமிப்பு வங்கி முதன்மைச் செயற்பாடானது, இலங்கை மக்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்வதும் ஆகும். குறித்த வருடத்தில் வங்கி நடவடிக்கைகளானது, சில்லறை வங்கியியல், நிறுவன வங்கியியல், வியாபார நிதியிடல், திறைசேரி நடவடிக்கைகள் மற்றும் முதலீடு கொரஸ்போன்டன் வங்கியியல் மற்றும் பணமாற்றல் வசதிகள், அடகுவைத்தல், வெளிநாட்டு நாணய தொழிற்பாடுகள், மற்றும் ஏனைய நிதிச்சேவைகள்.

### நோக்கம், பணி மற்றும் மதிப்பீடுகள்

வங்கியின் நோக்கம், பணி, மதிப்பீடுகள் ஆகியன இவ்வாண்டறிக்கையின் 8ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து நிரந்தர ஊழியர்களும் வங்கியின் ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்பட்டுள்ளதுடன், வங்கியின் நோக்கு மற்றும் பணியை அடைவதற்கான நோக்கில் அரச சத்தியப் பிரமாணத்துக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

### அரசாங்க உத்தரவாதம்

வங்கியில் வைப்புச் செய்த மற்றும் அதற்கான வட்டியினை மீளச்செலுத்துவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.

### வங்கியின் துணை நிறுவனங்கள்

தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி ஆகியன வங்கியின் இரண்டு துணை நிறுவனங்களாகும். தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடு, இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர் ஒருவராக, அரசாங்கப் பிணையங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும்.

இலங்கை சேமிப்பு வங்கியின் முக்கிய செயற்பாடுகளாவன சேமிப்பு வைப்பு மற்றும் நேர வைப்புக்களைத் திரட்டல், கடன்கள் வழங்குதல், குத்தகை, வாடகை கொள்வனவு, நகை அடகு மற்றும் பிறகடன் வசதிகளை வழங்குதல் மற்றும் முறிவடைந்த வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் கடன் கணக்குகளை மறுசீரமைத்து வைப்பு பொறுப்புக்களை தீர்த்தல்.

இக்கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 24 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

### குழும கட்டமைப்பு மாற்றங்கள்

எதுவித பாரிய மாற்றங்களும் வங்கி மற்றும் குழுமத்தில் பிரதான நடவடிக்கைகளில் இடம் பெறவில்லை.

### வணிக செயற்திறன் மீளாய்வு

2021 வருடத்தின் வங்கி மற்றும் குழுமத்தின் முழுமையான நிதி செயற்றிறன் பற்றிய மீளாய்வு தலைவர் அறிக்கை (பக்கம் 14 தொடக்கம் 17), பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மீளாய்வு (பக்கம் 18 தொடக்கம் 22) வழங்கப்பட்டுள்ளது. பக்கம் 95 தொடக்கம் 178 வரையான முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு நிதி மூலதன மீளாய்வு பக்கம், 24 தொடக்கம் 38 மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் (பக்கம் 260) என்பன பிரதான வணிகங்கள் பற்றி மற்றும் வங்கி மற்றும் குழுமத்தின் நிலைமை பற்றிய விவரமான ஆய்வினை வழங்குகிறது. இந்த அறிக்கைகள் ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

### கிளை வலையமைப்பு விரிவாக்கம்

தீவு முழுதும் வங்கியின் பிரசன்னத்தை விரிவுபடுத்தும் நோக்கில் மீளாய்வின் கீழான ஆண்டில் இரண்டு கிளைகள் வலையமைப்பில் சேர்க்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 261 கிளைகளை வங்கி தனது வலையமைப்பில் கொண்டிருந்தது. வாடிக்கையாளர் வசதிகளை அதிகரிக்கும் விதத்தில் தன்னியக்கக் காசு இயந்திர வலையமைப்பு (ATM/CRM) மேலும் விரிவாக்கப்பட்டது. வங்கியானது இவ் ஆண்டில் நாடு முழுவதிலும் 20 CRM மற்றும் 03 ATM இயந்திரங்களை நிறுவி, ஏனைய (peer) வங்கிகளின் ATM பாவனைக்கு மேலதிகமாக தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய தன்னியக்கக் காசு இயந்திரங்கள் எண்ணிக்கையை 384 ஆக்கியது.

### நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய (SLFRSs/LKASs) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை திருத்தப்பட்ட 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் குறித்த வெளிப்பாடுகள் தொடர்பிலான சட்ட தேவைப்பாட்டுடன் இணங்குவதாகவும் அமைந்துள்ளன. 2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) இனால் முறையாக சான்றுபடுத்தப்பட்டு, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் தலைவர் உள்ளிட்ட இரு பணிப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்டும், கையொப்பமிடப்பட்டும் பக்கம் 260 முதல் தரப்பட்டுள்ளது. இது வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது.

#### கணக்கீட்டுக் கொள்கைகளும் இவ்வாண்டின் போது ஏற்பட்ட மாற்றங்களும்

வங்கி தனது நிதிக் கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs/LKASs) அமைவாகத் தயாரித்துள்ளது.

இவ்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் கைக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் 270 தொடக்கம் 288 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்பட்ட ஆண்டில், எதுவித மாற்றங்களும் வங்கி மற்றும் குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் இடம் பெறவில்லை.

### நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

2021 டிசெம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியினது அலுவல்களை உண்மையான மற்றும் நேர்மையான நோக்கத்தினைப் பிரதிபலிப்பதற்கும் அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான இலாபத்தினைப் பிரதிபலிப்பதற்கும் வங்கியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையது ஆகும். இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs/LKASs) மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க அனைத்தையுமுள்ளடக்கிய பக்கம் 260 முதல் 263 வரை உள்ள பக்கங்களில் காணப்படும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கருத்தினை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர். இவ் ஆண்டறிக்கையின் 249 முதல் 250 ஆம் பக்கத்தில் காணப்படும் பணிப்பாளர்களின் பொறுப்புடைமைக் கூற்று வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புடமை இதில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

### கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு யாப்பின் 154ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியே தேசிய சேமிப்பு வங்கியின் கணக்காய்வாளர் ஆவார். 2021 டிசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியினதும் மற்றும் குழுவின் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பனவற்றின் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொண்டுள்ளனர். வங்கிக்கான மற்றும் அதன் துணை கம்பனியான தே சே வ நிதி முகாமைத்துவக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியினது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2021 இல் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வங்கியின் கண்காய்வு நடாத்தப்பட்டது. அவர்களின் கணக்காய்வில் அடையாளங் காணப்பட்ட விடயங்கள் உடனடி நடவடிக்கைக்காக கிரமமான முறையில் முகாமைத்துவத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதி அறிக்கையிடல் முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களுடன் நிதியியல் கூற்றுக்கள் பரிசோதனைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் ஆண்டறிக்கையின் 256 முதல் 258 ஆம் பக்கங்களில் காணப்படுகிறது.

வங்கி மற்றும் குழுமத்தின் எதிர்கால முன்னேற்றம் பற்றிய மீளாய்வு 2021இன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையின் தலைவர் தகவல் (பக்கம் 14 முதல் 17), பொது முகாமையாளர்/பி.நி.அ மீளாய்வு (பக்கம் 18 முதல் 22) மற்றும் “முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு” பக்கம் 96 முதல் 178 வரை வழங்கப்பட்டுள்ளது.

## மொத்த வருமானம்

2021 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் ரூபா 134,939 மில்லியனாகக் (2020 - ரூபா 127,547 மில்லியன்) காணப்பட்ட வேளையில் தொகுதியின் வருமானம் ரூபா 130,060 மில்லியனாக (2020 - ரூபா 130,039 மில்லியன்) விளங்கியது. வருமானங்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் பக்கம் 289இல் தரப்பட்டுள்ளன.

## பங்கிலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

### பெறுபேறுகளும் பகிர்வும்

வங்கியினதும் தொகுதியினதும் வருமான வரிக்கு முன்பான இலாபம் முறையே ரூ. 28,381 மில்லியனாகவும், ரூ. 28,425 மில்லியனாகவும் (2020 - ரூ. 15,645 மில்லியனாகவும், ரூ. 16,791 மில்லியனாகவும்) விளங்கியது.

வருமான வரிக்குப் பின்பான வங்கியினதும், தொகுதினதும் இலாபம் முறையே ரூ. 22,120 மில்லியனாகவும் ரூ 22,131 மில்லியனாகவும் (2020 ரூ. 10,108 மில்லியனாகவும் ரூ 10,821 மில்லியன்) விளங்கியிருந்தன. வங்கிக்கான இலாபம் பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## எதிர்கால முன்னேற்றங்கள்

| | 2021<br>ரூ. மில்லியன் | 2020<br>ரூ. மில்லியன் |
|---|---|---|
| அனைத்துச் செலவுகள் தேய்வுக்கான ஒதுக்கீடு ஏற்படக் கூடிய கடன் இழப்புக்கள் மற்றும் பெ.சே.வ, தே.நி.வ, க.மீ.வ மற்றும் வரிக்கு முன்பான எதிர்காலத் தேய்வுகள் ஆகியவற்றின் பின்பான ஆண்டுக்குரிய இலாபம் | **34,544** | 19,431 |
| நிதிச் சேவைகள் மீதான பெ.சே.வ வரி | **6,162** | 3,787 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | **6,262** | 5,537 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் | **22,120** | 10,108 |
| வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **2,183** | (4,498) |
| வருடத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **24,303** | 5,610 |
| **பங்கீடுகள்:** | | |
| நியதிச்சட்ட ஒதுக்கத்திற்கு மாற்றல் | **(1,106)** | (505) |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிக்கான (NITF) பங்களிப்பு | **(221)** | (101) |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு/பங்கிலாபம் | **(3,500)** | (1,000) |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | **20,582** | 4,509 |

### வரி விதிப்பிற்கான ஏற்பாடு

வங்கி மற்றும் தொகுதியின் தொழிலுக்கு ஏற்புடைய வருமான வரி 24% ஆகும். வங்கி மற்றும் தொகுதியின் தொழிலுக்கு ஏற்புடைய நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 15% ஆகும்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS 12 இற்கமைய வருமான வரிகள் மீது பொறுப்புடைமை முறையின் கீழ் அனைத்து அறியப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மீதும் பிற்போடப்பட்ட வரியினை வங்கி வழங்கியது. வருமான வரிச் செலவினம் மற்றும் பிற்போடப்பட்ட வரி விதிப்பு பற்றிய தகவல்கள் முறையே குறிப்புகள் 13 இலும் 30 இலும் 299 கொடக்கம் 300 வரை மற்றும் 336 கொடக்கம் 338 வரையான பக்கங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

### அரசாங்கத்திற்கு பங்கு இலாபம், வரிகள் மற்றும் அறவீடுகள்/ தேசத்திற்கான பங்களிப்புகள்

2020 ஆம் ஆண்டில் வங்கி அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் அறவீடுகள் வாயிலாக ரூ. 10,745 மில்லியன் (2019 - ரூ. 11,664 மில்லியன்) பங்களிப்புச் செய்தது.

| | 2021 ரூ. மில்லியன் | 2020 ரூ. மில்லியன் |
|---|---|---|
| வருமான வரி | **6,262** | 5,537 |
| பெறுமதிசேர் வரி | **6,162** | 3,787 |
| சிறப்பு கட்டணம் | **320** | 320 |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | **3,500** | 1,000 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு | **221** | 101 |
| **தேசத்திற்கான மொத்த பங்களிப்பு** | **16,465** | 10,745 |

### ஒதுக்குகள்

வங்கியின் மொத்த ஒதுக்குகள் 31 டிசெம்பர் 2021 இல் ரூ. 76,013 மில் ஆக காணப்பட்டது. (2020 - ரூ. 54,414 மில்). வங்கியின் ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

| | 2021 ரூ. மில்லியன் | 2020 ரூ. மில்லியன் |
|---|---|---|
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | **5,174** | 4,068 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | **7,050** | 6,679 |
| பிடித்து வைத்த வருவாய்கள் | **13,728** | 14,400 |
| ஏனைய ஒதுக்குகள் | **40,661** | 19,867 |
| **மொத்த ஒதுக்குகள்** | **66,613** | 45,014 |

ஒதுக்குகளின் மாற்றங்கள் பற்றிய தகவல்கள் பங்கு மூலதன மாற்றங்களின் கூற்றில் 264 முதல் 267 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### தபால் மா அதிபருக்கான (த மா அ) சேவைக் கட்டணங்கள்

தபால் மா அதிபருக்கான 2021 ஆம் ஆண்டுக்குரிய சேவைக்கட்டணங்கள் ரூ. 170 மில்லியனாக, 2020 இல் வழங்கப்பட்ட அதே அடிப்படையிலேயே வழங்கப்பட்டன.

### ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பொறுப்புக்கள்

வங்கி இரண்டு ஓய்வூதிய நிதியினை பேணுகிறது: ஊழியர் ஓய்வூதிய நிதி I மற்றும் ஓய்வூதிய நிதி II. மேலும் வங்கி துணையிழந்த மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதிய நிதி மற்றும் ஓய்விற்கு பின்னரான மருத்துவ திட்டத்தினையும் பேணுகிறது. நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 38 ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் பக்கம் 346 முதல் 357 இல் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன செலவினம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி, தொகுதிக்கு முறையே ரூ. 15,046 மில்லியன் மற்றும் ரூ. 15,950 மில்லியனாக (2020 இல் வங்கிக்கு ரூ. 15,316 மில்லியன் மற்றும் தொகுதிக்க ரூ. 16,198 மில்லியனாக) விளங்கியது. நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களிலுள்ள விபரங்கள் வருமாறு:

- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 26: ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பக்கம் 325 முதல் 331.
- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 29: நன்மதிப்பு மற்றும் கட்புலனாகாச் சொத்து பக்கம் 334 முதல் 335.
- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 48.1: மூலதன அர்ப்பணிப்பு பக்கம் 363.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள், கட்புலனாகாச் சொத்துக்கள் (நடைமுறையிலுள்ள மூலதனம் உள்ளடங்கலாக) ஆகியனவற்றைக் கையேற்றல் தொடர்பிலான வங்கியின் மொத்த மூலதனச் செலவினம் இவ்வாண்டில் ரூ. 1,306 மில்லியனாகவும் (2020 - ரூ. 2,159 மில்லியன்) மற்றும் தொகுதியின் செலவினம் ரூ. 1,336 மில்லியனாகவும் (2020 - ரூ. 2,169 மில்லியன்) விளங்கின. இவற்றின் விபரங்கள் இந்த ஆண்டறிக்கையில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 26 (அ) மற்றும் 26 (ஆ) இல் 327 முதல் 330 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

### நிரந்தரச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

உரிமம் வழங்கப்பட்ட விசேட வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் பெறுமதி மீதான 2014 இன் எண் 01 கொண்ட மத்திய வங்கிப் பணிப்புரையின் பிரிவு 3 இற்கு அமைவாக வங்கியானது 2020 டிசம்பரில் இல் உள்ளவாறு நிரந்தர ஆதனம் மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீடொன்றை மேற்கொண்டது. வங்கியின் ஆதனம் மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீட்டுச் செய்முறையானது, மேற் கூறப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க தொழில் சார் தகைமை பெற்ற சுயாதீனமான மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. நிரந்தரச் சொத்து மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீட்டுத் தொகையானது, அவற்றின் சந்தைப் பெறுமதியை விஞ்சவில்லை என்ற அபிப்பிராயத்தை பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

### குறித்துரைக்கப்பட்ட மூலதனம் மற்றும் பங்குடைமை

#### குறித்துரைக்கப்பட்ட மூலதனம்

வங்கியின் அங்கீகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 பில்லியன் ஆகும். இது ஒவ்வொன்றும் ரூ. 10.00 கொண்ட ஒரு பில்லியன் சாதாரண பங்குகளைக் கொண்டு ஆக்கப்பட்டது. வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் 2021 டிசெம்பர் 31 இல் ரூ. 9.4 பில்லியன் ஆக விளங்கியது. திறைசேரியின் செயலாளர் அவரது அலுவல்சார் பதவிக்கிணங்க விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் அனைத்திற்கும் உரிமையாளராவார். இது பற்றிய தகவல்கள் குறிப்பு 43 -

வழங்கப்பட்ட மூலதனம் மற்றும் மற்றும் குறிப்பு 46.1 கோரப்படாத வைப்பு ஒதுக்கம் என்பவற்றின் கீழ் 361ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

### பங்குடைமை

இலங்கை அரசாங்கமானது, தேசிய சேமிப்பு வங்கியின் தனிப்பட்ட பங்குதாரர் ஆகும்.

### கீழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் வழங்கல்

2021 டிசெம்பர் 31 கீழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் பொறுப்பு ரூபா 6 பில்லியன் தரப்படுத்தப்பட்ட, பிணையளிக்கப்படாத, கீழ் நிலைப்படுத்தப்பட்ட மீளளிப்பு செய்யப்படும் ரூபா 100 பெறுமதியினை உடைய 29 டிசெம்பர் 2016 இல் தனிப்பட்ட வைப்பாக வழங்கப்பட்ட மற்றும் ரூபா 5 பில்லியன் பட்டியல்படுத்தப்படாத தரப்படுத்தப்பட்ட பிணையளிக்கப்படாத கீழ்நிலைப்படுத்தப்பட்ட நிரந்தர தொகுதிக்கடன்களை ரூபா 100 பெறுமதியினை உடைய தனிப்பட்ட வைப்பாக 27 அக்டோபர் 2020 வழங்கப்பட்டது. வங்கியானது 2ம் நிலை மூலதனத்திற்கு தகுதிபெறுகின்ற 2021 டிசெம்பர் 31இல் முதிர்வடைகின்ற ரூபா 6 பில்லியன் தொகுதிக்கடன்களையும் வழங்கியுள்ளது. நிதிநிலவர அறிக்கை தினத்தில் உள்ள தொகுதிக்கடன் விபரங்கள் குறிப்பு 37.1 பக்கம் 343 முதல் 345 இல் உள்ளது.

### சிரேஷ்ட தொகுதிக்கடன் வழங்கல்

2021 டிசெம்பர் 31 அன்று வங்கியின் தொகுதிக்கடன் பொறுப்பு ரூபா 11.5 பில்லியன் ஆகும். பட்டியலிடப்படாத தரப்படுத்தப்பட்ட சிரேஸ்ட மீட்டுக்கொள்ளக்கூடிய ரூபா 100 பெறுமதியான தொகுதிக்கடன்கள் 24 செப்டெம்பர் தனியார் வழங்கல் மூலம் வழங்கப்பட்டன. மற்றும், ரூபா 20.0 பில்லியன் பெறுமதியான பட்டியலிடப்படாத தரப்படுத்தப்பட்ட பிணையளிக்கப்படாத மீட்டுக்கொள்ளக்கூடிய ஒவ்வொன்றும் ரூபா 100 பெறுமதியான தொகுதிக்கடன் செப்டெம்பர் 2019இல் வழங்கப்பட்டன. சிரேஸ்ட தொகுதிக்கடன் விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் 345 தொடக்கம் 346 வரையான பக்கங்களில் குறிப்பு 37.2இல் உள்ளது.

### பங்கு தகவல்

குறித்த வருடத்திற்கான 2021 இற்கான அடிப்படை பங்கிற்கான வருவாய் மற்றும் பங்கிற்கான தேறிய சொத்து பெறுமதி என்பன ரூபா 23.53 (2020 - ரூபா 10.75) மற்றும் ரூபா 80.86 (2020 - ரூபா 57.89). சராசரி பங்கிற்கான அடிப்படை மற்றும் குன்றிய வருமானம் குறிப்பு 14 பக்கம் 300 மற்றும் தேறிய சொத்து பெறுமதி 50 பக்கம் 371 இல் தரப்பட்டுள்ளது.

### நிறுவன சமூகப் பெறுப்பு

வங்கியினால் நடாத்தப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிகழ்வுகளின் விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் பக்கம் 167 மற்றும் 168 இல் தரப்பட்டுள்ளது

### பணிப்பாளர் சபை

#### 2021 வருடத்திற்கான பணிப்பாளர் தகவல்கள்

பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் நிதி அமைச்சு மற்றும் தபால் மா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு பதவி வழி உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கி ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. 1995 இன் 28 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1971 இன் 30 ஆம் இலக்க தேசேவ சட்டத்தின் பிரிவு 11 (1) இன் ஏற்பாடுகளின் கீழ் தலைவர் மற்றும் ஏனைய நான்கு பணிப்பாளர்கள் ஆகியோர் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுவர். ஆண்டிற்கான பணிப்பாளர்களின் விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கம் 180 முதல் 183 இல் தரப்பட்டுள்ளது.

#### வங்கி துணை நிறுவனங்களின் பணிப்பாளர்கள்

**2021 ஆம் ஆண்டுக்கான தே.சே.வ நிதி முகாமைத்துவ கம்பனியின் பணிப்பாளர் பெயர்கள் வருமாறு:**

திருமதி கேசிலா ஐயவர்தன – தலைவர்

திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன – பணிப்பாளர்

திருமதி மனோஹரி அபயசேகர – பணிப்பாளர்

திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்

திரு. டபிள்யூ ஓ ரொட்ரிகோ – பணிப்பாளர்

திரு எச் கே டி லக்ʻமன் காமினி – பணிப்பாளர்

திரு எம் பி ஏ டபிள்யூ பீரிஸ் – பணிப்பாளர்

**2021 இல் பதவியளிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் பெயர்கள் வருமாறு:**

திருமதி கேசிலா ஐயவர்தன – தலைவர்

திரு சாலிய தர்மவர்த்தன – பணிப்பாளர்

திரு. ஹேமந்த கமகே – பணிப்பாளர்

திரு பிரசாட் இம்புல்கொட – பணிப்பாளர்

திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்

திரு ஜனக அருணசாந்த – பணிப்பாளர்

| பணிப்பாளரின் பெயர் | நியமன திகதி | அங்கத்துவ அந்தஸ்து |
|---|---|---|
| திருமதி கேசிலா ஐயவர்தன - தலைவர் | 2 ஜனவரி 2020 | நிஅஅ/சுஅ |
| திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன - பதவிவழிப் பணிப்பாளர் | 31 ஆகஸ்ட் 20218 | நிஅஅ/சுஅ |
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க - பதவிவழிப் பணிப்பாளர் | 11 ஜனவரி 2020 | நிஅஅ/சுஅ |
| திரு எரங்க ஐயவர்தன - சிரேஷ்ட பணிப்பாளர் (15 ஜீன் 2020 முதல் இன்று வரை) | 23 ஜனவரி 2020 | நிஅஅ/சு |
| திருமதி மனோஹரி அபயசேகர | 14 ஜனவரி 2020 | நிஅஅ/சுஅ |
| திரு எம் ரி ஜே பெரேரா | 11 ஏப்ரல் 2020 | நிஅஅ/சுஅ |
| திரு எச் கே டி லக்ஷ்மன் காமினி | 07 ஜனவரி 2020 | நிஅஅ/சுஅ |

சுஅ - சுயாதீனம் அற்ற பணிப்பாளர்,

நிஅஅ - நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்,

சு - சுயதீனமான பணிப்பாளர்

### சபை உப குழுக்கள்

முழுமையான பொறுப்பு மற்றும் பதில்கூறும் பெறுப்பு பணிப்பாளர் சபையிடம் காணப்பட நான்கு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கினால் வெளியிடப்பட்ட வங்கிகளின் முழுமையான கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்தும், "இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்" 2007 இன் இல 12 வங்கி சட்ட நியமத்தின் படி அவையாவன: சபை கணக்காய்வு குழு, சபை மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழு, சபை நியமன குழு, மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு.

சபை உப குழுக்களின் நியமங்கள் மத்திய வங்கி மற்றும் தேசேவ சட்ட நிறுவன ஆளுகை தொடர்பான பரிந்துரைகளையும் மற்றும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சுயாதீனமான நியமங்கள் என்பவற்றின் பரிந்துரைகளுக்கு அமைவானது.

31 டிசெம்பர் 2021 இல் கட்டாயமான சபை உப குழுக்களின் உள்ளடக்கம் மற்றும் கூட்டங்களின் போதான பணிப்பாளர் வருகை என்பன பக்கம் 195 மற்றும் 196 மற்றும் இவ் உப குழுக்களின் அறிக்கைகள் பக்கம் 203 முதல் 211 வரை வழங்கப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள், சபை உப குழு கூட்டங்கள் மற்றும் முன் கூறப்பட்ட கூட்டங்களுக்கான பணிப்பாளர்களின் வருகைகள் இவ்வாண்டறிக்கையின் நிறுவன ஆளுகை அறிக்கையில் பக்கம் 195 முதல் 196 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

நேரடி மற்றும் நேரடியற்ற வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள் நிதிக் கூற்றுக்கான குறிப்பு 49.5.2 இல் பக்கம் 368 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந் நலன்கள், சபைக் கூட்டங்களில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் ஏதேனும் நேரடி அல்லது நேரடியற்ற நலன்களைக் கொண்டிருக்கவில்லை.

### வங்கியினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களில் பணிப்பாளர்களின் அக்கறை

பணிப்பளாளர்கன் பெயரில் எதுவித தொகுதிக்கடன்களும் பதிவாகவில்லை.

### பணிப்பாளர்களின் வேதனங்களும் ஏனைய நலன்களும்

வங்கி மற்றும் தொகுதி தொடர்பில் 2021 நிதியாண்டுக்கான பணிப்பாளர்களது வேதனங்கள் மற்றும் ஏனைய நலன்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 49.5.1 ஆம் குறிப்பில் பக்கம் 367 இல் தரப்பட்டுள்ளன.

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (LKAS) 24 இல் தொடர்புடைய திறத்தவர்களின் நியமங்களுக்கமைய "தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை" வகைப்படுத்தக் கூடிய ஏதேனும் இருப்பின் பணிப்பாளர்கள் அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள், பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையின் பகுதியொன்றாக விளங்கும் நிதிக் கூற்றுக்களுக்கான 49.5.3 ஆம் குறிப்பில் 368 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

### சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது அபாயங்களை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் செயற்பாட்டில் வங்கியும் தொகுதியும் ஈடுபடவில்லை. சுற்றாடலை பாதுகாக்க எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் பக்கம் 170 முதல் 176இல் தரப்பட்டுள்ளன.

### நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசுக்கான நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட ஒழுங்குமுறை அமைப்புக்கள், ஊழியர்களுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## அறிவித்தல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 52, பக்கம் 371 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, கணக்குகளுக்கான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்களைத் தேவைப்படுத்தும் எந்தவித நிகழ்வுகளும் அறிவிக்கும் திகதியிலிருந்து ஏற்படவில்லை.

## தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

முன்னறிகின்ற எதிர்காலத்தின் போது அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு வங்கி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினைப் பேணுவதற்கு செயற்பாடுகளைத் தடை செய்கின்ற கட்டுப்பாடுகள் அல்லது திட்டம் போன்ற வங்கியின் இயலுமை மீது சந்தேகத்தினைத் தோற்றுவிக்கின்ற நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் இருப்பதாக பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

## இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள்

இடர் முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பினையும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. இந் நோக்கத்திற்காகப் பணிப்பாளர்கள் சபையானது செயற்திறன் மிக்க மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைகளை வங்கியில் ஆரம்பித்து அமுல்படுத்தியுள்ளது. வங்கி எதிர் கொள்ளக் கூடிய இடர்களைக் குறைத்தல், முக்கிய தவறுக் கூற்றுக்கள் அல்லது இழப்புகளுக்கு எதிராக நியாயமான உத்தரவாதங்களை வழங்குதல் என்பவற்றுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மீள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வங்கியினால் எதிர்கொள்ளப்படும் அத்தகைய இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தல் ஆகியவற்றுக்கான செயல்முறையொன்று நடைமுறையிலுள்ளது. இடர்களைக் குறைப்பதற்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க வழிமுறைகள் இவ்வறிக்கையின், இடர் மற்றும் மூலதன முகாமைத்துவ அறிக்கையின் 212 ஆம் பக்கத்திலிருந்து 239 வரையான பக்கங்களிலும், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கையின் 210 முதல் 211 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## கணக்காய்வாளர் நியமனம், அவர்களது ஊதியம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 வது பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி தேசிய சேமிப்பு வங்கியின் கணக்காய்வாளர் ஆவார்.

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 12 பக்கம் 298 இல் கணக்காய்வு கட்டணம் மற்றும் நிதியாண்டுக்கான ஏனைய சேவைகள் தொடர்பிலான செலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஒழுங்குவிப்பு மேற்பார்வை

ஒழுங்குவிப்பு மேற்பார்வை நிறுவனமான மத்திய வங்கி (CBSL) காலத்திற்கு காலம் வங்கியானது மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பரிந்துரைகளுக்கு இணங்கியுள்ளதா என பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. வங்கியில் அக்கறை கொண்ட தரப்பினரின் அக்கறைகளுக்கு ஏற்ப தேவையான நிதி நியமங்களை தேவையான மட்டங்களில் பேணுகிறதா என்பதை தீர்மானிக்கிறது. குறிப்பாக வைப்பாளர்களை பாதுகாத்தல்.

### கூட்டாண்மை ஆளுகை

வங்கியினை முகாமை செய்வதில் சிறந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் நியதிகளை பின்பற்றுவதை பணிப்பாளர்கள் முக்கியப்படுத்தியுள்ளனர். எனவே பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை பரிந்துரைத்துள்ளனர்:

(அ) வங்கி வணிகத்தினை நடாத்துவதில் குறித்த சட்டங்கள் மற்றும் நியதிகளை உடன்பட்டுள்ளது மற்றும் சட்டங்கள் மற்றும் நியதிகளை மீறும் எந்த வித நடவடிக்கைளிலும் ஈடுபடவில்லை.

(ஆ) வங்கி தொடர்புபட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர் மற்றும் அவர்கள் அக்கறை கொண்ட எந்த விடயத்திலும் ஈடுபடவில்லை.

(இ) வங்கியானது தொடர்ந்து இயங்கும் எண்ணப்பாடு உடையது மற்றும், பணிப்பாளர் சபை தந்திரோபாய வணிக திட்டத்தினை பகுப்பாய்வு செய்துள்ளது மற்றும் எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்திற்கு தே.சே.வ தேவையான வளங்களைக் கொண்டுள்ளது. வங்கி மற்றும் துணைக்கம்பனியின் நிதிக்கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவில் தயாரிக்கப்பட்டள்ளன.

(ஈ) தொடர்புபட்ட தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

(உ) நிதி, தொழிற்பாடு மற்றும் இணங்குவிப்பு கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய உள்ளக கட்டுப்பாடு தொடர்பான மீளாய்வினை வங்கி செய்துள்ளது மற்றும் அவற்றின் வினைத்திறன் மற்றும் உடன்பாடு தொடர்பில் நியாமான உறுதியினை பெற்றுள்ளது.

### நீடித்து நிலைத்திருத்தல்

வணிக தந்திரோபாயங்களை உருவாக்கும் போது வங்கி நீடித்து நிலைத்திருக்கும் விடயங்களை கருத்தில் கொள்கிறது. இவ்விபரங்கள் பூகோளவியல் அறிக்கையிடல் முன்முனைவுகளின் உள்ளடக்கச் சுட்டெண்ணின் கீழ் 469 முதல் 472 வரையான பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### மனித வளங்கள்

உயர் தரச் சேவையினூடாக, நிலை பெறத்தக்க பெறுமதியினைத் தோற்றுவிப்பதற்கு அர்ப்பணிப்பு மிக்க மற்றும் உயர் ஊக்கமிகு ஊழியர்களை விருத்தி செய்வதற்கும், பேணுவதற்கும் வங்கி தொடர்ந்தும் செயலாற்றியது. வங்கியின் மனித மூலவளத் தரத்தினை விருத்தி செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மனித மூலதனத்தை மேம்படுத்த வங்கியினால் தழுவப்பட்ட கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் 2021 ஆண்டறிக்கையின் 136 முதல் 153 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### தொடரும் வழக்குகள்

நிதிக்கூற்றின் குறிப்பு 51, பக்கம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள், பணிப்பாளளர் மற்றும் வங்கியின் சட்டத்தரணிகளின் கருத்துப்படி, வங்கி நிதி நிலைமை மற்றும் எதிர்கால தொழிற்பாடுகளில் தாக்கத்தை கொண்டதல்ல.

### அறிக்கையின் உள்ளடக்கத்தினை ஒத்துக்கொள்ளல்

பணிப்பாளர் சபை இந்த ஆண்டறிக்கையின் உள்ளடக்கத்தை ஒப்புக்கொள்கிறது.

சபையின் ஆணைப்படி.

Kesila Jayawardana

**திருமதி கேசிலா ஜயவர்த்தன**
தலைவர்

**அனுபமா முகாந்திரம்**
சபைச் செயலாளர்

24 மார்ச் 2022
கொழும்பு

# நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் (வங்கி) மற்றும் வங்கியினதும், அதன் துணை நிறுவனங்களின் (தொகுதி) திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்பு இக்கூற்றில் தரப்பட்டுள்ளது.

## நிதிக் கூற்றுக்கள்

அனைத்துக் கொடுக்கல் வாங்கல் கணக்குகளினதும் முறையான பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் நியதிச் சட்ட வேண்டுதலுக்கிணங்க ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் நிலைமையின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்ற, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு வங்கியின் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, பங்கு மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அவற்றிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

வங்கியினதும், அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள், உண்மையானதும் நியாயமானதுமான நோக்கினை பின்வருவன தொடர்பில் தருகின்றன:

1. 2021 டிசெம்பர் 31 இல் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதி நிலைமை மற்றும்.
2. 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதிச் செயலாற்றுகை.

நிதிக் கூற்றுக்கள் தயாரித்தலில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர்:

1. நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பக்கம் 270 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், தற்போது நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புகளுக்கு அமைவாக பொருத்தமாகக் காணப்படுகின்றன. இக் கொள்கைகள் முரண்பாடின்றிப் பிரயோகிக்கப்பட்டதுடன் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டுமுள்ளன.
2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் அவற்றின் போதுமை ஆகியவற்றின் சரியான பிரதிபலிப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற நியாயமானதும், விவேகமிக்கதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. இயைபுடைய அனைத்துப் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்படுகின்றன.

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும், 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 7 (i) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர்கள் சபை வங்கியின் அலுவல்கள் மற்றும் தொழிற்பாட்டினைக் கட்டுப்படுத்தி நிருவகிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மாதிரியுடன் நிதிக் கூற்றுக்கள் இணங்கிச் செல்வதை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது கணக்கீட்டு பதிவுகள் சரியாக பதிவு செய்யப்பட்டு வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான செம்மையுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களை எவ்வேளையிலும் தயாரிக்க இயலச் செய்வதனை உறுதி செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இவ்வாண்டறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒருமைப்பாடு மற்றும் குறிக்கோள்களுக்கான பொறுப்புடைமையினையும் பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்கின்றது. (260 முதல் 269 வரையுள்ள பக்கங்களில் நிதிக் கூற்றுகள் காட்டப்பட்டுள்ளன.) இவ்வாண்டறிக்கையில், தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், கணக்குப் பதிவேடுகளுடன் முரண்படாத மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றுக்கான திருத்தங்கள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ளன.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

பணிப்பாளர்கள் சபை வங்கியினதும் தொகுதியினதும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளையும் கவனத்தையும் எடுத்தல், மோசடிகள் மற்றும் வேறு ஒழுங்கீனங்களைக் கண்டு பிடித்தல் என்பற்றுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் செயற்றிறன் மிக்க மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவி மற்றும் உள்ளகக் கணக்காய்வினையும் முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் எல்லைகளுக்கமைவாகவே பிரயோகிக்க மற்றும் செயல்படுத்தப்படுகின்றமையையும் உள்ளடக்குகின்ற செயற்றிறனைக் கண்காணிக்கின்ற செயற்றிறன் மிகு முறைமையினை ஏற்படுத்தியுள்ளது. பணிப்பாளர்கள், நிதிக் கூற்றுக்கள், அவர்களது கிரமமான கூட்டங்களில் அவர்களால் நேரடியாகவும், சபைக் கணக்காய்வுக் குழுவினூடாகவும் மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றனர். நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று இவ்வாண்டறிக்கையின் 251 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை 253 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## கணக்காய்வு அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக வங்கியின் அனைத்துப் பதிவேடுகளும் பணிப்பாளர்கள் சபை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வறிக்கையின் 256 ஆம் பக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்டவாறு காணப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகளை வெளிப்படுத்தியுள்ள மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் ஆய்வு செய்துள்ளது பொருத்தமானதென அவரால் கருதப்பட்ட அனைத்துப் பரிசோதனைகளையும் பொறுப்பேற்பதற்கு சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளது.

## இணங்குவிப்பு அறிக்கை

அரசாங்கத்திற்கும் ஏனைய தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்குமானதும், வங்கி மற்றும் தொகுதியின் தொடர்பிலும் ஊழியர்கள் தொடர்பிலும் வங்கியினால் செலுத்தப்படத்தக்க அனைத்து வரிகள், சுங்கம் மற்றும் விதிப்புகள் அத்துடன் அனைத்து ஏனைய அறியப்பட்ட நியதிச்சட்ட நிலுவைகளையும் பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உறுதி செய்கின்றனர். நிதி நிலைமைக் கூற்று திகதியன்று உள்ளவாறான வங்கியினாலும் தொகுதியினாலும் நிலுவையாகச் செலுத்தப்படத்தக்கதாயுள்ள அதிகார நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன, அல்லது தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், நிதி நிலை, தொழிற்பாட்டு நிலைமைகள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட “கூட்டாண்மை ஆளுகைக் கோவை” இல் தீர்க்கப்பட வேண்டிய ஏனைய காரணிகள் கருத்திற் கொள்ளப்பட்டன.

வங்கி மற்றும் தொகுதி முன்னறிகின்ற எதிர்காலத்திற்குத் தொழிற்பாட்டினைத் தொடர்வதற்காக போதிய வளங்களைக் கொண்டுள்ளன. மற்றும் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் பிரயோகத்தினை நியாயப்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன், இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு சபை அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

சபையின் ஆணைப்படி



**அனுபமா முகாந்திரம்**
சபைச் செயலாளர்

2022 மார்ச் 30
கொழும்பு

# நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று

## பொறுப்புக்கள்

2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை 3 (8) (ii) (ஆ) இற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 இல் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறப்பு வழிகாட்டலின் கோட்பாடு (ஈ) 1.5 யை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில், போதிய மற்றும் செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு பேணப்படுவதனை உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் சபை (சபை) பொறுப்புடையதாகும். எனினும், அத்தகைய முறைமையொன்று வங்கியின் தொழில் குறிக்கோள்களை அடைவதற்கான தவறு இடரினை இல்லாதொழிப்பதனை விட ஏற்றுக் கொள்ளத்தக்க இடர் வழிவகைகளினுள் வங்கியின் முக்கிய இடர் பகுதிகளை முகாமை செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, முகாமைத்துவத்தின் மற்றும் நிதித் தகவல்களின், அத்துடன் பதிவேடுகளுக்கு எதிரான அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கெதிரான முக்கிய புறழ் கூற்றுக்களுக்கு எதிரான தீர்க்கமான உத்தரவாதத்தையன்றி நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கக் கூடியதாகவுள்ளது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டு முகாமை செய்வதற்காக முன்னெடுக்கப்படும் செயன்முறை ஒன்றை பணிப்பாளர்கள் சபை ஸ்தாபித்துள்ளதுடன், இச் செயன்முறை வியாபாரச் சூழலில் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் அத்துடன் ஏனைய வழிகாட்டல்களில் மாற்றங்கள் ஏற்படும் போது அல்லது வேண்டப்படும் போது நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையினை மேம்படுத்துவதனை உள்ளடக்குகின்றது. இச் செயன்முறைகள் சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட உள்ளக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்றின் மீது வங்கி பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன் இணங்குகின்றமை உறுதி செய்யப்படுகின்றது. இவ் வழிகாட்டலில் வழங்கப்பட்டவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் கொள்கைகளுக்கமைய சபையானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடு செய்தது.

நிதி அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு தற்போது செயற்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற்றிறன் மிக்கது, மற்றும் போதுமானது எனவும், அத்துடன் புற நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் இயைபுடைய கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது எனவும் சபை கருதுகின்றது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட இடர்களை இனங்கண்டு மதிப்பிடுவதனூடாக இடர் மற்றும் கட்டுப்பாடு என்பவை மீது சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் அமுலாக்குவதிலும் இவ்விடர்களைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல் தொழிற்படுத்தலிலும், கண்காணித்தலிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவுகின்றது.

## நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை பிரயோகித்தல் மற்றும் மீளாய்வு செய்தலின் போது தழுவிக்கொள்ளப்பட்ட செயன்முறையின் சிறப்பம்சங்கள்

காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்ற முறைமையினை சபை செயற்படுத்தியுள்ளது. ஏனையவற்றுக்கிடையிலான முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வங்கித் தொழிற்பாடுகளின் செயற்றிறன் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவனக் குறிக்கோள்கள், உபாயங்கள் மற்றும் கொள்கைகளும் வியாபாரப் பணிப்புரைகளுக்கும் இணங்கி வங்கித் தொழிற்பாடுகள் காணப்படுகின்றன என்றும் உறுதி செய்வதில் சபைக்கு உதவுவதற்குமான வரையறை செய்யப்பட்ட நோக்கெல்லைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் சபை உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

- சபைக் கணக்காய்வுக் குழுவானது (BAC), வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரிகள் ஆகியோரால் அடையாளங் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொள்வதுடன், அத்தகைய குறைபாடுகளைச் சரி செய்வது தொடர்பில் திருத்த நடைமுறைகளையும் மேற்கொள்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளியகக் கணக்காய்வினை மேற்கொள்கின்றார். பொதுவாக, அரச கணக்காய்வு மேற்பார்வையாளர் சபைக் கணக்காய்வுக் குழுக்கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்.

- சபைக் கணக்காய்வுக் குழு, கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அதன் தரம் தொடர்பில் குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்தி உள்ளக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மீளாய்வு செய்கிறது. 2021 ஆம் ஆண்டில் சபை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இந்த ஆண்டறிக்கையின் 203 ஆம் பக்கத்தில் காணப்படும் சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கிளைகள், பிரிவு மற்றும் ஏனைய அலகுகளின் கணக்காய்வுகளை மேற்கொள்கின்றது. கணக்காய்வு இடைவெளிகள் மதிப்பிடப்பட்ட இடர் மட்டங்களின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்துவதற்காக சபை கணக்காய்வுக் குழுவினால் ஒப்புதலளிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுடனான இணக்கத்தையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்றிறன் தன்மைகளையும் உறுதி செய்வதற்கு கணக்காய்வுப் பரிசோதனைகளை நடாத்துவதுடன் ஏதேனும் இணங்கியொழுகாமை தொடர்பில் அதன் காண்புகளை அறிக்கையிடுகின்றது. தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளின் மீதான சுயாதீன மற்றும் பொருண்மை அறிக்கையொன்றினை வழங்கும் பொருட்டு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வுகளின் காண்புகள், சபைக் கணக்காய்வுக் குழுவின் பருவகாலக் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள், குழுக் கூட்டங்களின் குறிப்புகளோடு காலத்துக்குக் காலம் என்ற அடிப்படையில் சபையின் தகவலுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

- வங்கியின் இடரினது பிரதான பகுதிகளின் முழுமையான முகாமைத்துவத்தைக் கண்காணிப்பதற்கு சபைக்கு உதவுவதற்காக சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) சபையினால் நிறுவப்பட்டது. வங்கியின்

நடவடிக்கைகள் பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களுக்கிணங்க மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுயாதீன இணங்குவிப்புப் பிரிவொன்றை நிறுவியது. ஏதாவது இணங்குவிப்பற்ற விடயங்கள் தொடர்பில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவுக்கு காலத்துக்குக் காலம் அறிவிக்கப்படும். இடர் மதிப்பீடு பற்றிய அறிக்கை சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கப்படும்.

- முகாமைத்துவ மட்டக் குழுக்கள், வங்கியின் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய விடயங்களின் செயற்றிறன் வாய்ந்த முகாமை மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்துவற்கு ஏற்புடைய உரித்துடன் இயங்குகின்றன. இம் மதிப்பீடு, வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட செயன்முறையை மட்டும் உள்ளடக்கியுள்ளதுடன், அதன் துணை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளை உள்ளடக்கவில்லை.

வங்கியானது LKASs மற்றும் SLFRSs ஆகியவற்றை உள்ளடக்கிய, புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை 2012 இல் ஏற்றுக் கொண்டது. அத்தகைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமையினால் ஏற்றுக் கொள்ளுகைக்கான புதிய தேவைப்பாடுகள், அறவீடு, பகுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்துகை ஆகியவற்றுடன் இணங்கிச் செல்லும் செய்முறைகளில் முன்னேற்றகரமான அதிகரிப்பும், தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன.

## உறுதிப்படுத்தல்

மேற்குறித்த செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு சபை வெளியக நோக்கங்களுக்காக நிதி அறிக்கையிடல் நம்பகத் தன்மை மற்றும் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பில் நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கும் பொருட்டு வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதி செய்கின்றது.

## வெளியகக் கணக்காய்வாளர்-களின் கூற்று மீளாய்வு

2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று பற்றிய மேலே உள்ள பணிப்பாளர்களின் கூற்றானது வெளியகக் கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் வங்கியின் நிதியறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டின் திட்டமிடல் மற்றும் செயற்திறன் தொடர்பான மீளாய்வின் போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடு தொடர்பாக தனது அறிவு முரண்படுவதை ஏற்றுக் கொள்ளுவதற்கான காரணங்கள் எதுவும் தனது கவனத்திற்குட்படுத்தவில்லை என பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடப்பட்டது. நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று தொடர்பான அவர்களது அறிக்கை இவ் ஆண்டறிக்கையின் 253 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

சபையின் ஆணைப்படி



**திருமதி. கேசிலா ஜயவர்த்தன**
தலைவர்



**திருமதி மனோஹரி அபேயசேகர**
தலைவர் - சபைக் கணக்காய்வு குழு/
பணிப்பாளர்



**திரு. எம் டி ஜே பெரேரா**
பணிப்பாளர்

2022 மார்ச் 30

கொழும்பு.

# உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/A/NSB/IC/2021/15
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 26 April 2022

தலைவர்,

தேசிய சேமிப்பு வங்கி

**தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர் சபைக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை**

## அறிமுகம்

2021 திசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு ("கூற்று") மீதான பணிப்பாளர் சபைக் கூற்றுத் தொடர்பான உறுதிப்பாட்டை இவ்வறிக்கை வழங்குவதாக உள்ளது.

## முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டாயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2007ன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட நெறிப்படுத்தலின் 3(8) (ii)(b) பிரிவிற்கிணங்க விறியோகிக்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு உரித்தான பணிப்பாளர்களின் கூற்று மீதான வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்"களுக்கிணங்க கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமரப்பித்தல் ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கைத் தரநியமத்துடனான 3050 (திருத்தப்பட்டது) உடன் எனது பொறுப்புக்களும் இணங்குவித்தலும்

| செலுத்தப்பட்ட வருமான வரி | **(2,752,838)** | (2,889,044) | **(3,043,406)** | (3,271,758) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/இருந்து தேறிய காசு** | **11,903,831** | 11,176,759 | **13,610,246** | 11,018,557 |

| டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி 2021 ரூ. '000 | வங்கி 2020 ரூ. '000 | தொகுதி 2021 ரூ. '000 | தொகுதி 2020 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | **(461,960)** | (976,972) | **(490,543)** | (994,063) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான பெறுகை | **4,219** | 6,504 | **7,736** | 6,504 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் சாதனங்களில் தேறிய (அதிகரிப்பு)/குறைவு | **909,103** | (12,326,936) | **(544,756)** | (11,927,988) |
| நிதியியல் முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்வுகளில் இருந்தான பெறுகை | **–** | – | **–** | – |
| அருவச்சொத்துகளின் தேறிய கொள்வனவு | **(459,757)** | (389,202) | **(460,828)** | (395,250) |
| முதலீட்டு ஆதனங்களின் தேறிய கொள்வனவு/மேம்படுத்தல் | **–** | – | **26,500** | – |
| துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களில் முதலீடு கையகப்படுத்தலில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | **–** | – | **–** | – |
| துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களில் முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | **250,000** | 170,000 | **–** | – |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **241,604** | (13,516,606) | **(1,461,890)** | (13,310,796) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| சாதாரண பங்கு மூலதன வழங்கலில் இருந்து தேறிய பெறுகைகள் | **–** | – | **–** | – |
| பின்நிகழ்வுப் படுகடன் வழங்கலில் இருந்து தேறிய பெறுகைகள் | **–** | 5,000,000 | **–** | 5,000,000 |
| பின்நிகழ்வுப் படுகடன் மீள்கொடுப்பனவு | **(6,000,000)** | – | **(6,032,140)** | (92,454) |
| பின்நிகழ்வுப் படுகடன் மீது செலுத்தப்பட்ட வட்டி | **(1,229,984)** | (780,000) | **(1,242,812)** | (817,007) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு - பங்கிலாபம்/வரி அறவீடு | **(3,500,000)** | (1,000,000) | **(3,500,000)** | (1,000,000) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **(10,729,984)** | 3,220,000 | **(10,774,951)** | 3,090,539 |
| **காசு மற்றும் காசுக்கு சமனானவைகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | **1,415,451** | 880,153 | **1,373,405** | 798,300 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமனானவைகளும் | **6,174,060** | 5,293,907 | **6,280,307** | 5,482,007 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை தொடர்பில் செலாவணி மாற்று வேறுபாடு | **–** | – | **–** | – |
| **ஆண்டின் முடிவில் காசும் காசுக்குச் சமனானவைகளும்** | **7,589,511** | 6,174,060 | **7,653,712** | 6,280,307 |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் இணக்கம்** | | | | |
| கையிருப்பிலுள்ள காசு | **3,687,059** | 1,901,551 | **3,691,618** | 1,906,210 |
| வங்கி மீதி | **3,968,959** | 4,590,397 | **4,029,894** | 4,692,371 |
| அழைப்பு மற்றும் குறுகிய அறிவித்தலில் உள்ள காசு | **245** | 112 | **245** | 112 |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | **–** | – | **7** | 6 |
| வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை | **(66,752)** | (318,000) | **(68,052)** | (318,391) |
| | **7,589,511** | 6,174,060 | **7,653,712** | 6,280,307 |

270 தொடக்கம் 420 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதியியல் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்



## 1 அறிக்கையிடும் நிறுவனம்

### 1.1 நிறுவனம் பற்றிய தகவல்கள்

தேசிய சேமிப்பு வங்கியானது, 1971 இன் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் கீழ் 1972 இல் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியொன்றாவதுடன் இலங்கையில் அதன் அமைவிடத்தைக் கொண்டுள்ளது. 1988 ஆம் ஆண்டின் வங்கித் தொழில் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் இது கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் சிறப்பியல்புவாய்ந்த வங்கியொன்றாகும். வங்கியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், 'சேமிப்பகம்', இல. 255, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் ஆளணி 4,616 (2020-4,641) ஆக காணப்பட்டது.

வங்கியானது 261 கிளைகள் மற்றும் அதன் சேவை நிலையங்களில் 292 தன்னியக்க பண மீளெடுப்பு இயந்திரங்களையும் (ATM) 92 பண மீள்சுழற்சி இயந்திரங்களையும் (CRM) கொண்டுள்ளதுடன், அதன் முகவர் வலையமைப்பாக மேலும் 654 அஞ்சல் அலுவலகங்கள், 3,410 உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

### 1.2 ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள்

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள், வங்கியினையும் (தாய்க் கம்பனி) அதற்கு முழுமையான உரித்துடைய துணைநிறுவனமான என்எஸ்பி நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிடெட், இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

வங்கியானது முழுமையாக இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தானதாகும். வங்கியே குழுமத்தின் இறுதி முடிவான தாய் நிறுவனமாகும். வங்கியினதும் அதன் துணைநிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகள் டிசம்பர் 31 அன்று முடிவடைகின்ற பொதுவான நிதியியல் ஆண்டொன்றினைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கென டிசம்பர் 31இல் முடிவடைகின்ற பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கான "வங்கியினதும்" அதன் "தொகுதியினதும்" நிதியியல் கூற்றுக்களை வங்கி தயாரிக்கும்.

### 1.3 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

GRI 102-2

**வங்கி**

இலங்கை மக்கள் மத்தியில் சேமிப்பினை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டிய சேமிப்புகளை இலாபகரமாக முதலிடுவதும் வங்கியின் பிரதான செயற்பாடுகளாக தொடர்ந்தும் இருந்து வந்தது. தேசிய சேமிப்பு வங்கியானது வைப்புகளை ஏற்றுக்கொள்ளல், நிறுவன மற்றும் சில்லறைக் கடன், வரத்தக நிதியளித்தல், அரசாங்க கருத்திட்டங்-களுக்கான கடன்கள், அடகுபிடித்தல், இணைய வங்கிச் சேவை மற்றும் குறுந்தகவல் வங்கிச் சேவை போன்ற பல்வேறு தீர்வுகளை வழங்குகின்றது. 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக அதன் வைப்புகளிலிருந்து குறைந்தபட்சம் 60% இனை அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதற்கு வங்கி வேண்டப்பட்டுள்ளது.

**துணைநிறுவனங்கள் என்எஸ்பி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட்**

என்எஸ்பி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட் நிறுவனமானது முதனிலை வணிகரொருவராக அரசாங்க பிணையங்கள் வணிகத்தில் ஈடுபட்டுகின்றது.

**இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்**

ஆண்டின்போது வங்கியின் பிரதான செயற்பாடுகளாக சேமிப்புகளையும் கால வைப்புகளையும் திரட்டுதல், கடன்கள், குத்தகைகள், தவணைமுறை கொள்வனவு, அடகு மற்றும் வேறு கொடுகடன் வசதிகளை வழங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் கடன் கணக்குகளின் மீள்கட்டமைப்புடன் தவணைதவறிய அவ்வங்கியின் வைப்புப் பொறுப்புகளை தீர்ப்பனவுசெய்தல் என்பன அமைந்திருந்தன.

## 2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே எடுத்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், வேறுவகையில் குறிப்பிட்டாலன்றி, நிதியியல் கூற்றுகளை எடுத்துரைக்கின்ற போது அனைத்து காலப்பகுதியிலும் ஒரேசீர்மையாக பயன்படுத்தப்பட்டுள்ளன. வங்கியின் இக்கொள்கைகள், ஏற்புடைவிடத்து தொகுதியினாலும் ஒரேசீர்மையாக பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஏதேனும் விலகல்கள் அதற்கேற்றவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1 தயாரித்தலுக்கான அடிப்படை

#### 2.1.1 இணக்கக் கூற்று

தொகுதியினது திரட்டிய நிதியியல் கூற்றும் வருமானக் கூற்று, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, பங்குரிமைமூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற வங்கியின் வேறான நிதியியல் கூற்றுங்களும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நியமங்களுக்கமைவாக (இகநி மற்றும் இநிஅநி) தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்படுள்ளதுடன் 1988 இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் மற்றும் அதனைத்தொடர்ந்த அதற்கான திருத்தங்களினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களுடன் இணங்கி காணப்படுகின்றன. காசுப் பாய்ச்சலில் காணப்படும் தகவல்களுக்கானவை தவிர இந்நிதியியல் கூற்றுகள் கணக்கீட்டின் ஒன்றுசேருகின்ற கணக்கீட்டு அடிப்படையினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மாதிரிகளும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களும் உரிமம்பெற்ற வங்கிகளின் ஆண்டுக்கான கணக்காய்வுசெய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளைத் தயாரித்து, சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றிற்காக "உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் ஆண்டுக்கான மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுதல் அத்துடன் வேறு வெளிப்படுத்தல்கள்" மீதான 2019 சனவரி 18 ஆம் திகதியிடப்பட்ட 2019 இன் 2 ஆம் இலக்க சுற்றறிக்கையில் இலங்கை மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட குறிப்பான மாதிரிகளுடன் இணங்கிக் காணப்படுகின்றன.

#### 2.1.2 நிதியியல் கூற்றுகளுக்கான பொறுப்புடைமை

1971இன் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதற்கான திருத்தங்களுக்கும் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் அமைவாக தொகுதியினதும் வங்கியினதும் நிதியியல் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்புடைமையாகும்.

"பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை" பணிப்பாளர்களின் பொறுப்புடமைக் கூற்று" மற்றும் நிதியியல் கூற்று என்பன மீதான சான்றுப்படுத்தல் என்பவற்றில் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் கூற்றுக்களுக்கான அவர்களது பொறுப்புடமையினை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது.

இந்நிதியியல் கூற்றுகள் பின்வரும் கூறுகளை உள்ளடக்குகின்றன:

i. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்கான தொகுதியினதும் வங்கியினதும் நிதியியல் செயலாற்றுகை பற்றிய தகவல்களை வழங்குகின்ற வருமானக் கூற்று மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று (பக்கம் 260 மற்றும் 261)
ii. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தொகுதியினதும் வங்கியினதும் நிதியியல் நிலை பற்றிய தகவல்களை வழங்குகின்ற நிதியியல் நிலைக் கூற்று (பக்கம் 262 மற்றும் 263)
iii. தொகுதியினதும் வங்கியினதும் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது பங்குடமையாளர்களின் நிதியங்களில் உள்ள அனைத்து மாற்றங்களையும் காண்பிக்கின்ற பங்குரிமைமூலத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று (பக்கம் 264 மற்றும் 267)
iv. காசு மற்றும் காசுக்கு சமமானவைகளை ஈட்டுவதற்கான தொகுதியினதும் வங்கியினதும் இயலுமை அத்துடன் அவ்வாறான காசுப்பாய்ச்சல்களின் பயன்பாடு பற்றிய பயனர்களுக்கான தகவல்களை வழங்குகின்ற காசுப் பாய்ச்சல்கள் கூற்று (பக்கம் 268)

v. முக்கிய கணக்கீட்டு கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்குகின்ற நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் (பக்கம் 270 தொடக்கம் 420 வரை)

### 2.1.3 நிதியியல் கூற்றுகளுக்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம்

2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள் 2022 மார்ச் 15 அன்று பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

### 2.1.4 அளவீட்டு அடிப்படை

சீர்மதிப்பு பெறுதியில் அளவிடப்பட்டுள்ள, நிதியியல் நிலைக்கூற்றில் உள்ள பின்வரும் முக்கிய விடயங்களுக்கானவை தவிர, திரட்டிய நிதியியல் கூற்றுகள், வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(i) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் (குறிப்பு 23)

(ii) பெறுதி நிதியியல் சாதனங்கள்(குறிப்பு 19 மற்றும் 33)

(iii) இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் (குறிப்பு 20 மற்றும் 34)

(iv) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் (குறிப்பு 20)

(v) கையேற்கின்ற நேரத்தில் செலவில் அளவிடப்பட்டு அதனைத் தொடர்ந்து மீள்விலைமதிப்பிடப்பட்ட தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டடங்கள், அவை மீள்விலைமதிப்பீட்டுத் திகதியில் உள்ள சீர்மதிப்புப் பெறுமதிகளாகும் (குறிப்பு 26)

(vi) முதலீட்டு ஆதனங்கள், ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதனைத்தொடர்ந்து சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன (குறிப்பு 28)

(vii) ஊழியர்களுக்கான வரையறை-செய்யப்பட்ட நன்மைப் பொறுப்புகளா-னவை திட்ட சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியினைக் கழித்து வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்புகளின் தற்போதயை பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளன (குறிப்பு 38)

### 2.1.5 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயம்

தொகுதி தொழிற்படும் அடிப்படை பொருளாதார சூழலின் நாணயமாகவுள்ள இலங்கை ரூபாவில் ஒருங்கிணைக்-கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் வேறு விதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு முழுமையாக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்படுகின்ற ஆண்டின்போது தொகுதியின் எடுத்துரைத்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

### 2.1.6 நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்

நிதியியல் நிலைமைக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளும் பொறுப்புகளும் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்புபடுகின்ற திரவத்தன்மை மற்றும் முதிர்வு விதங்களை பிரதிபலிப்பதற்கு ஏற்றவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுகளை பாதிக்கின்ற பணவீக்க காரணிகளுக்காக சரிப்படுத்தல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் முதிர்வு விதங்கள் பற்றிய பகுப்பாய்வொன்று 406 மற்றும் 409 ஆம் பங்கங்களில் குறிப்பு இல. 55 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 2.1.7 தொடர்ந்தியங்கம் எண்ணக்கரு

வங்கியானது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனமாக தொடர்ந்தும் இருப்பதற்கான தகைமையினை தொடர்ந்து கொண்டிருப்பதாக பணிப்பாளர்கள் சபை/ முகாமைத்துவம் மதிப்பிட்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்தில் தொழில் அலுவல்களை தொடர்ந்து நடாத்தவதற்கான வளங்களைக் கொண்டிருப்பதாக திருப்தியடைகின்றது. மேலும், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாக தொடர்ந்தும் செயற்படுவதற்கான தொகுதியின் தகைமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகம் எதனையும் ஏற்படுத்தக்கூடிய உணரக்கூடிய நிச்சயமின்மைகள் எவற்றையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

### 2.1.8 உருவகமும் ஒன்றுசேர்தலும்

ஒரேவகையின் ஒவ்வொரு முக்கிய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஒரேவகையற்ற தன்மையினை அல்லது தொழிற்பாடுகளைக் கொண்ட விடயங்கள், 'நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்' மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் - இகநி 1 இனால் அனுமதிக்கப்பட்டவாறு அவை முக்கியமற்றதாக காணப்படவில்லையெனின் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.1.9 ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பு காலத்தின் நிதியியல் கூற்றுகள் பற்றிய புரிதலினை அதிகரிக்கும் பொருட்டும் காலங்களுக்கிடையிலான ஒப்பீட்டினை அதிகரிப்பதற்கும் அளவுசார், விளக்கம்சார், மற்றும் விவரணம்சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலாக ஒப்பீட்டுத் தகவல்கள், நிதியில் கூற்றுகளில் முந்திய ஆண்டு தொடர்பிலும் வெளிப்படுத்தப்-பட்டுள்ளன. சிறப்பாக எடுத்துரைப்பதற்கும் நடைமுறை ஆண்டின் எடுத்துரைத்தலுக்கு இணங்கக்கூடியவாறும் ஒப்பீட்டுத் தகவல்கள் அவசியமான இடங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டுத் தகவல்கள் பற்றிய விபரங்கள், 372 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 53 இல் தரப்பட்டுள்ளன.

### 2.1.10 முழுமையாக்கல்

நிதியியல் கூற்றுகளில் உள்ள தொகைகள், இலங்கை கணக்கீட்டு நியமம் - இகநி 01 "நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தல்" இனால் அனுமதிக்கப்பட்டவாறு வேறுவகையில் குறித்துகாட்டப்பட்டவை தவிர கிட்டிய ஆயிரம் ரூபாய்க்கு முழுமைக்கப்பட்டுள்ளன.

### 2.1.11 எதிரீடுசெய்தல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடுசெய்வதற்கு சட்டரீதியாக அமுலாக்கத்தக்க உரிமையொன்று காணப்படுகின்ற போது அத்துடன் சமகாலத்தில் தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவுசெய்வதற்கு அல்லது சொத்துகளை தேறல்செய்து பொறுப்புகளை தீர்ப்பனவுசெய்வதற்கு உத்தேசமொன்று காணப்படுகின்றபோது மாத்திரம் நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு தேறிய தொகை நிதியியல் நிலைக்கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன. கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்கோடல் ஒன்றினால் (சர்வதேச நிதி அறிக்கையிடல் நியம பொருள்கோடல்கள் குழு மற்றும் நியம பொருள்கோடல் குழு மூலம் வழங்கப்பட்ட) வேண்டப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி அத்துடன் வங்கியின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி வருமானம் மற்றும் செலவுகள் என்பன வருமானக்கூற்றில் எதிரீடுசெய்யப்படவில்லை.

### 2.1.12 முக்கிய கணக்கீட்டு தீர்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்-கமைவாக வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுக்களை தயாரித்தலானது கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிப்-பதில் தாக்கத்தினை ஏற்படுத்தகின்ற அத்துடன் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தீர்வுகளை, மதிப்பீடுகளை, மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. உண்மைப் பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படையான ஊகங்ககளும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் எதிர்கால காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கை பிரயோகித்தலில் மதிப்பிடுதல், முக்கிய தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள் என்பனவற்றின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

### அ. முக்கிய கணக்கீட்டு தீர்வுகள்

இந்நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கிய தாக்கங்களைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கையில் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய தகவல்கள், கீழே குறிப்புகள் 2.1.12.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 2.1.12.1 நிதியியல் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் வகைப்படுத்தல்

இநிஅறி 9 இற்கு அமைவாக, பின்வரும் மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் நிதியியல் சொத்துகளை வேறுபட்ட வகுப்புகளாக வகைப்படுத்தி அதாவது மதிப்புக் குறைக்கப்பட்ட செலவு, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி என்பனவற்றில் அளவிடப்படுவதற்கு, தொகுதியின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் நோக்கெல்லையொன்றினை வழங்குகின்றன்

- 277 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.1.4.1 இல் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் சொத்துகளை முகாமைசெய்வதற்கான நிறுவனத்தின் தொழில் மாதிரி.
- 277 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.1.4.2 இல் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் சொத்துகளின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகள்.

### ஆ. ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மைகள்

முக்கிய சீராக்கங்களை தோற்றுவிக்கின்ற குறிப்பிடத்தக்க இடர்நேர்வொன்றினைக் கொண்டுள்ள ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மைகள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்புகள் 2.1.12.2 தொடக்கம் 2.112.9 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 2.1.12.2 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துகளினதும் நிதிப் பொறுப்-புகளினதும் சீர்மதிப்புப் பெறுமதியானது தொழிற்படும் சந்தைகளிலிருந்து உருவாக்கப்பட முடியாதவிடத்து, கணித மாதிரிகளின் பயன்பாட்டினை உள்ளடக்குகின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு அவை தீர்மானிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் அனேகமாக அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகளிலிருந்து பெறப்படுவதாயினும், அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகள் கிடைக்காத நிலையில் சீர்மதிப்புப் பெறுமதியைத் தாபிப்பதற்கு தீர்ப்புகள் தேவைப்படுகின்றன.

நிதியியல் சாதனங்களின் விலைமதிப்-பீட்டிற்காகவும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை என்பவற்றிற்கும் பயன்படுத்தப்படும் முறையியல்கள் என்பன 410 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு இல. 56 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

#### 2.1.12.3 நிதியியல் சொத்துகள் மீதான சேதஇழப்பு நட்டங்கள்

நிதியியல் சொத்துகளின் அனைத்து வகைகளுக்கும் இநிஅறி 9 மற்றும் இகநி 39 இரண்டின் கீழும் சேதஇழப்பு நட்டங்களின் அளவீடானது குறிப்பாக, சேதஇழப்பு நட்டங்களை நிர்ணயிக்கின்ற போது தொகை மதிப்பீடு, எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் காலநிகழ்வு மற்றும் பிணைஉறுதிப் பெறுமதிகள் போன்றனவற்றில் தீர்புகளை வேண்டுகின்றது.

அதற்கமைய, வருமானக்கூற்றில் சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பாடுசெய்யப்பட வேண்டுமா என்பதனை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதி அதன் தனிப்பட்டரீதியாக முக்கியத்துவமிக்க கடன்களையும் முற்பணங்களையும் மீளாய்வுசெய்கின்றது. குறிப்பாக, சேதஇழப்பு நட்டங்களை நிர்ணயிக்கின்ற போது, தொகை மதிப்பீடு மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் கால நிகழ்வு போன்றனவற்றில் முகாமைத்துவத்தின் தீர்புகள் வேண்டப்படுகின்றன. இம்மதிப்பீடுகள் பல எண்ணிக்கையான காரணிகள் பற்றிய ஊகங்களை அடிப்படையாக கொண்டவை என்பதுடன் இதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சேதஇழப்பு ஒதுக்கீட்டுக்கான எதிர்கால மாற்றங்களின் விளைவாக உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம்.

நிதியியல் சொத்துகளுக்கு ஏற்புடைய தனிப்பட்ட சேதஇழப்பு ஏற்பாடானது சேதஇழப்புக்காக தனிப்பட்ட ரீதியாக மதிப்பீடுசெய்யப்பட்டதுடன் கிடைக்கப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால காசுப் பாய்ச்சல் பற்றிய முகாமைத்துவத்தின் சிறந்த மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டதாகும். இக்காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதில் முகாமைத்தவமானது கடன்பெறுநரொருவரின் நிதியியல் நிலைமை மற்றும் ஏதேனும் துணையளிக்கின்ற பிணைஉறுதியின் நிகர தேறத்தக்க பெறுமதி என்பன பற்றியும் தீர்புகளை மேற்கொள்கின்றது. சேதஇழப்புச் செய்யப்பட்ட ஒவ்வொரு சொத்தும் அதன் மதிப்புகளின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது, அத்துடன் காசுப் பாய்ச்சல்களின் செயலாற்றத்தக்க உபாயமும் மதிப்பீடும் மீளஅறவிடத்தக்கவையாக கருதப்படுகின்றன.

கூட்டான சேதஇழப்பு ஏற்பாடு உருவாக்கப்பட்டவை:

- தனிப்பட்ட ரீதியாக முக்கியமானவையாக கருத்திற்கொள்ளப்படாத ஒரேவிதமான தன்மையிலான கடன் மற்றும் முற்பணங்களைக் கொண்ட தொகுதிகள் அத்துடன்
- தனிப்பட்ட ரீதியாக முக்கியமாயினும், தனிப்பட்ட ரீதியியல் சேதமிழந்தவையாக அறியப்படாத சொத்துகளின் தொகுதிகள்

இநிஅறி 9 இற்கு அமைவாக, தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிப்புகளானவை மாறிலி உள்ளீடுகளினதும் அவற்றின் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் தன்மைமைகளினதும் தெரிவு தொடர்பில் ஏதுவாகின்ற பல எண்ணிக்கையான ஊகங்களுடன் கூடிய சிக்கலான மாதிரிகளின் பெறுபேறுகள் ஆகும். கணக்கீட்டு தீர்வுகளாகவும் மதிப்பீடுகளாகவும் கருத்திற்கொள்கின்ற எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகளின் அடிப்படைக் கூறுகள் உள்ளடக்குவன:

- கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை பண்புரீதியாக மதிப்பிடுவதற்கும் அத்துடன் அவ்வாறு இருக்குமெனில், ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அடிப்படையின் மீது அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளுக்கான ஒதுக்கீடுகளுக்குமான தொகுதியின் மூலப்பிரமாணமானம்
- நிதியியல் சொத்துகளின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது கூட்டான அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற போது அவற்றின் பிரிவுபடுத்தல்
- பல்வேறு புள்ளிவிபரவியல் சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகள் தெரிவு என்பவற்றை உள்ளடக்குகின்ற எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரிகளை உருவாக்குதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் மற்றும் தொழிலின்மை போன்ற பேரண்ட பொருளாதார உள்ளீடுகளுக்கும் தவணைதவறுதல் நிகழுந்தன்மை மீதான தாக்கம், தவணைதவறுதல் இடருக்குள்ளாகும் தன்மை மற்றும் தவணைதவறுதல் மூலம் ஏற்படும் நிதியியல் நட்டம் என்பவற்றுக்கும் இடையிலான இணைப்புகளை நிர்ணயித்தல்
- எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகளினுள் பேரண்டப் பொருளாதார உள்ளீடுகளை செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளையும் அவற்றின் நிகழும்தன்மை நிறையேற்றங்களையும் தெரிவுசெய்தல்.

#### 2.1.12.4 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீள்விலைமதிப்பீடு

வங்கியினதும் தொகுதியினதும் இறையிலி காணி மற்றும் கட்டடங்கள் மீள்விலைமதிப்பிடப்பட்ட தொகைகளில் பிரதிபலிக்கின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅறி-13) "சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு" இன் நியதிகளின் பிரகாரம், இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக தொகுதி சுயாதீன தொழில்சார் விலைதிப்பீட்டாளர்களை ஈடுபடுத்தியது.

இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறைகளும் முக்கிய ஊகங்களும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு இல. 2.3 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளன.

**2.1.12.5 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலம்**

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மிஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் போன்றவற்றை தொகுதி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்கின்றது. இப்பெறுமதிகளினதும் வீதங்களினதும் முறைகளினதும் மதிப்பீட்டில் முகாமைத்துவத் தீர்பு பிரயோகிக்கப்படுகின்றது. ஆதலால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுத்தப்பட்டவையாகும்.

**2.1.12.6 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் சேதஇழப்பு**

பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்று தேசஇழப்புக்கான சாத்தியம் உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதி கணிக்கும். அறிகுறி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு தேசஇழப்பு பரிசோதனை தேவைப்படுமிடத்து, சொத்தில் மீளப்பெறத்தக்க தொகையை தொகுதி மதிப்பிடும். சொதொன்றின் கொண்டுசெல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சுமிடத்து, சொத்தானது சேதமிழந்துள்ளதாக கருதப்படுவதுடன், அதன் மீளஅறவிடத்தக்க தொகையில் பதிவுசெய்யப்படும்.

**2.1.12.7 பிற்போடப்பட்ட வரிச் சொத்து**

பிற்போடப்பட்ட வரி இழப்புகள் பயன்படுத்தக் கூடியதாகவிருக்கின்றமைக்கு எதிராக எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்கின்ற நிகழ்வு காணப்படுகின்றது என்ற ரீதியில், வரி இழப்புகளுடன் தொடர்புபட்டு அத்தகைய வரிச் சொத்துகள் இனங்காணப்பட்டுள்ளன. எதிர்கால வரித் திட்டமிடல் மூலோபாயங்களுடன் சேர்த்து எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்கள் நிகழக்கூடிய காலம் மற்றும் மட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, இனங்காணப்படக்கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்து தொகையினை நிர்ணயிப்பதற்கு தீர்பு தேவைப்படுகின்றது.

**2.1.12.8 வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகள்**

வரையறைசெய்யப்பட்ட நல திட்டங்களின் கிரயமும் அவற்றின் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதிகளும் கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடுகளை பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடானது கழிவு வீதங்கள், சொத்துகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் என்பன பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்தகின்றது.

பொருத்தமான கழிவு வீதத்தினை நிர்ணயிக்-கும்போது முகாமைத்துவமானது ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சியுள்ள நிறையேற்றப்பட்ட சராசரிக் காலத்தை ஒத்த உயர்தர நிறுவன முறியொன்றின் விளைவை கருத்திற்கொள்கின்றது. சந்தையில் பொருந்துகின்ற உயர்தர நிறுவன முறிகள் காணப்படாதவிடத்து, கால இடர்நேர்வு சீர்செய்யப்பட்ட அரசாங்க முறி விளைவு, கழிவு வீதமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இறப்பு வீதமானது பொதுவாக கிடைக்கத்தக்க இறப்பு வீத அட்டவணைகளை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. எதிர்கால சம்பள அதிகரிப்புகளும் ஓய்வூதிய அதிகரிப்புகளும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க வீதங்களையும் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதத்தையும் அடிப்படையாக கொண்டமைந்துள்ளன.

இத்திட்டங்களின் நீண்டகால தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைக்கு உட்பட்டவையாகும்.

**2.1.12.9 ஏற்பாடுகள், கடமைப்பொறுப்புகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள்**

தொகுதியானது சாதாரண தொழில் நடவடிக்கைகளில் அதற்கெதிரான சட்டக் கோரிக்கைகளை பெறுகின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் ஏதேனும் பின்தொடர்கின்ற உரிமைக் கோரிக்கை நேரிடக்கூடியமை தொடர்பில் முகாமைத்துவம் தீர்புகளை மேற்கொள்கின்றது. சட்டக் கோரிக்கைகளை முடிவுறுத்தும் காலம் நிச்சயமற்றதாகவுள்ளமையினைப் போன்றே பொருளாதார நலன்களின் சாத்தியமான வெளிப்பாய்ச்சல் தொகையும் காணப்படுகின்றது. காலம் குறித்தலும் செலவும் தொடர்புடைய சட்டசீதியான நியாயாதிக்கத்தில் காணப்படும் உரிய செயன்முறையிலேயே இறுதியாக தங்கியிருக்கின்றன.

**2.1.12.10 இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅநி 16) - குத்தகைகள்**

இந்நியமமானது குத்தகைகளை இனங்காணுதல், அளவிடுதல், எடுத்துரைத்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றுக்கான கோட்பாடுகளை எடுத்துரைக்கின்றது. இதன் குறிக்கோள், குத்தகைபெறுநரும் குத்தகைவழங்குநரும் அக்கொடுக்கல்வாங்கல்களை நம்பகமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்தில் தொடர்புடைய தகவல்களை வழங்குவதனை உறுதிசெய்வதாகும். நிறுவனமொன்றின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றகை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன மீது குத்தகைகள் கொண்டிருக்கின்ற தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு இந்நிதியியல் கூற்றுகளை பயன்படுத்துவோருக்கு இத்தகவல்கள் அடிப்படையொன்றினை வழங்குகின்றன. இந்நியமமானது பின்வரும் நியமங்களையும் பொருள்கோடல்களையும் மாற்றீடு செய்கின்றது.

கீழே குறித்துரைக்கப்பட்டவை 2019 சனவரி 1 ஆம் திகதியுடைய ஆரம்ப பிரயோக திகதியில் இருந்து பிரயோகிக்கப்பட்டுவருகின்ற இநிஅநி 16 இன் பின்பற்றலின் மீதான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையாகும்.

**2.1.12.10.1 குத்தகை ஒன்றினை இனங்காணுதல்**

விலைஈட்டுக்கான பரிமாற்றத்தில் காலப்பகுதி ஒன்றுக்காக இனங்காணப்பட்ட சொத்தொன்றினை பயன்படுத்துவதனை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒப்பந்தம் வெளிப்படுத்துமாயின் அவ்வொப்பந்தமானது குத்தகையாகும். எனவே, ஒப்பந்தமொன்றின் தொடக்கத்தில் வங்கியானது பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்வதன் மூலம் ஒப்பந்தமானது குத்தகை ஒன்றா அல்லது குத்தகையினை உள்ளடக்குகின்றதா என்பதை மதிப்பிடுகின்றது.

1. இனங்காணப்பட்ட சொத்து கிடைக்கப்பெறும்தன்மை
2. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான வங்கியின் உரிமை
3. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டில் இருந்து அனைத்து பொருளாதார நலன்களையும் கனிசமாக பெற்றுக்கொள்வதற்கான வங்கியின் உரிமை
4. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை பணிப்பதற்கான வங்கியின் உரிமை

அதற்கமைய, வங்கியானது இநிஅநி 16: குத்தகைகள் இன் கீழ் குத்தகையினை உள்ளடக்குகின்ற கிளையொன்றினை தொழிற்படுத்துவதற்காக மற்றும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்காக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வாடகை உடன்படிக்கைகளையும் (குறிய கால உடன்படிக்கைகள், 12 மாதங்களுக்கு குறைவான மற்றும் குறைந்த பெறுமதி உடன்படிக்கைகள் தவிர) இனங்காண்கின்றது.

**2.1.12.10.2 சொத்துகளை பயன்படுத்து-வதற்கான குத்தகைபெறுநரின் உரிமை**

வங்கியானது சொத்துகளை பயன்படுத்து-வதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை குத்தகை திகதியின் தொடக்கத்தில் (அதாவது குத்தகை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதி) இனங்காணுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையானது ஏதேனும் ஒன்றுதிரன்ட பெறுமானத்தேய்வு மற்றும் சேதஇழப்பு நட்டங்களை கழித்து செலவில் அளவிடப்படுவதுடன் குத்தகைப் பொறுப்புகளில் ஏதேனும் மீள்அளவீட்டிற்காக சீர்செய்யப்படுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமைச் செலவானது இனங்காணப்பட்ட குத்தகைப் பொறுப்புகளின் தொகை மற்றும் ஏதேனும் கிடைக்கப்பெற்ற குத்தகை ஊக்குவிப்புக்களை கழித்து தொடக்கத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குத்தகை கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகை தவணைக் காலத்தின் இறுதியில் குத்தகைச் சொத்தின் சொத்தாண்மையை பெற்றுக்கொள்-வதற்கு வங்கி நியாயமானளவில் நிச்சயமில்லாதவிடத்து, இனங்காணப்பட்ட சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை, அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தினையும் குத்தகை தவணையினையும் விட குறைவாக நேர்-கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை, சேதஇழப்புக்கு உட்படுவதில்லை.

**2.1.12.10.3 குத்தகைப் பொறுப்புகள்**

குத்தகை திகதியின் தொடக்கத்தில், வங்கியானது குத்தகை தவணைக் காலத்தின் மீது மேற்கொள்ளப்படவுள்ள

குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்ட குத்தகைப் பொறுப்புகளை இனங்காண்கின்றது. குத்தகை கொடுப்பனவுகளானவை கிடைக்கப்பெறத்தக்க ஏதேனும் ஊக்குவிப்புக்களை கழித்து நிலையான கொடுப்பனவுகள் (கட்டாய நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக), சுட்டி அல்லது வீதமொன்றைச் சார்ந்து மாறுபடத்தக்க குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் எஞ்சியிருக்கின்ற பெறுமதி உத்தவாதங்களின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகை நியதியானது குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தெரிவினை வங்கி பிரயோகிப்பதனை பிரதிபலிக்குமாயின் வங்கியினால் பிரயோகிக்கப்படவுள்ள நியாயமாக நிச்சயமான கொடுப்பனவு தெரிவொன்றின் பிரயோக விலை மற்றும் குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தண்டப்பண கொடுப்பனவுகள் என்பவற்றையும் குத்தகை கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன. சுட்டியொன்றை அல்லது வீதமொன்றைச் சார்ந்திருக்காத மாறுபடத்தக்க குத்தகை கொடுப்பனவுகள், கொடுப்பனவு இடம்பெறுதல்களை தூண்டுகின்ற நிகழ்வு அல்லது நிலமைக் காலத்தில் செலவாக இனங்காணப்படுகின்றது. குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியினைக் கணிக்கின்ற போது, குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதம் உடனடியாக நிர்ணயிக்கப்படமுடியாமலிருப்பின் வங்கியானது குத்தகையின் தொடக்க திகதியில் திறைசேரி முறி வீதத்தினை (திறைசேரி முறியின் காலம் குத்தகைக் காலத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும்) பயன்படுத்துகின்றது. தொடக்கத் திகதியின் பின்னர், குத்தகைப் பொறுப்புகளின் தொகையானது வட்டி திரள்வினை பிரதிபலிப்பதற்கு அதிகரிக்கப்படுவதுடன் செலுத்தப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளுக்காக குறைக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, குத்தகைப் பொறுப்புகள் கொண்டுசெல்லும் தொகையானது குத்தகை தவணைக் காலத்தில் திருத்தமொன்று, மாற்றமொன்று, கட்டாய நிலையான குத்தகை கொடுப்பனவுகளில் அல்லது ஏதுவாகின்ற சொத்தை கொள்வனவுசெய்வதற்கான மதிப்பீட்டில் மாற்றம் போன்றன காணப்படுமாயின் மீள அளவிடப்படுகின்றது.

**2.1.12.10.4 குறுகிய கால குத்தகைகளும் குறைந்த பெறுமதியுடைய சொத்துகளின் குத்தகைகளும்**

தொகுதியானது அதன் குறுகிய கால குத்தகைகளுக்கு (அதாவது தொடக்கத் திகதியில் இருந்து 12 மாத அல்லது அதற்கு குறைவான தவணைக் காலத்தை கொண்டிருக்கின்ற அத்துடன் கொள்வனவு தெரிவுவொன்றினை உள்ளடக்காத குத்தகைகளுக்கு) குறுகிய கால குத்தகை இனங்காணல் விதிவிலக்கினை பிரயோகிக்கின்றது. குறைந்த பெறுமதியுடையதாக கருதப்படுகின்ற குறைந்த பெறுமதி செத்துக்கள் குத்தகை இனங்காணல் விதிவிலக்கினையும் தொகுதி பிரயோகின்றது. குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதி சொத்துகள் மீதான குத்தகை கொடுப்பனவுகள், குத்தகை தவணைக் காலத்தின் மீது நேர் கோட்டு அடிப்படையில் செலவாக இனங்காணப்படுகின்றன. ஏதுவாகின்ற சொத்தின் பெறுமதியானது ரூபா 1 மில்லியனுக்கு குறைவாக அல்லது சமமாக காணப்படுமாயின் வங்கி அதனை குறைந்த பெறுமதியுடைய குத்தகை சொத்துகளாக கருதுகின்றது.

**2.1.12.10.5 மீளப்புதுப்பித்தல் தெரிவுகளுடன் கூடிய குத்தகை தவணைக் காலத்தினை நிர்ணயிப்பதில் முக்கியமான தீர்பு**

நிறைவேற்றப்படுவதற்கு நியாயமளவில் நிச்சயம் காணப்படுமாயின் அல்லது சாத்தியமாக காணப்படுமெனில், குத்தகையினை நீடிப்பதற்கான தெரிவொன்றினால் உள்ளடக்கப்படும் எவையேனும் காலப்பகுதிகளுடன் அல்லது நிறைவேற்றப்படாமைக்கு நியாயமானளவு நிச்சயம் காணப்படுமாயின் குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தெரிவொன்றினால் உள்ளடக்கப்படும் எவையேனும் காலப்பகுதிகளுடன் ஒன்றுசேர்த்து தவணைக் காலத்தினை இரத்துச்செய்ய முடியாத குத்தகைத் தவணைக் காலமாக தொகுதி நிர்ணயிக்கின்றது. மீளபுதுப்பிப்பதற்கான தெரிவினை நிறைவேற்றுவதற்கு நியாயமான நிச்சயம் காணப்படுகின்றதா என்பதை மதிப்பிடுவதில் தொகுதி தீர்ப்பினை பிரயோகிக்கின்றது. அதாவது, மீளபுதுப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அதற்கு பொருளாதார ஊக்குவிப்பு ஒன்றினை தோற்றுவிக்கின்ற அனைத்து தொடர்புடைய காரணிகளையும் அது கருத்திற்கொள்கின்றது. தொடக்கத் திகதியின் பின்னர் மீளபுதுப்பிப்பதற்கான தெரிவினை நிறைவேற்றுவதற்காக (அல்லது நிறைவேற்றாமைக்கு) தொகுதியின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற அத்துடன் அதன் இயலுமையினை பாதிக்கின்ற முக்கிய நிகழ்வு அல்லது சூழ்நிலைகளில் மாற்றம் காணப்படுமாயின், குத்தகை தவணைக் காலத்தினை அது மீளமதிப்பிடுகின்றது. ஒப்பந்தமானது குத்தகையினை நீடிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவுகளை கொண்டிருக்குமிடத்து, குத்தகை தவணைக் காலத்தினை தீர்மானிப்பதில் தொகுதி நடந்த நிகழ்வின் தன்மையினை பயன்படுத்துகின்றது. அதற்கமைய, தொகுதி மற்றும் குத்தகைகொடுனர் மூலம் கைச்சாத்திடப்பட்ட வாடகை ஒப்பந்தங்களினால் உள்ளடக்கப்படும் காலப்பகுதியின் அடிப்படையிலமைந்த வருடங்களின் எண்ணிக்கையாக தொகுதி குத்தகை தவணைக் காலத்தினை இனங்கண்டுள்ளது.

**2.1.12.10.6 அளவீடு**

தொகுதியானது 2019.01.01 கொண்ட ஆரம்ப பிரயோக திகதியுடன் மாற்றம்செய்யப்பட்ட முன்கூட்டியே பொருந்தக்கூடிய பின்பற்றல் முறையினைப் பயன்படுத்தி இநிஅநி 16 ஐப் பின்பற்றியது. இம்முறையின் கீழ், ஆரம்பத் திகதியில் இனங்காணப்பட்ட நியமத்தினை முதன்முறையாக பிரயோகிப்பதன் ஒன்றுதிண்ட விளைவுடன் முன்கூட்டியே பொருந்தக்கூடிய நியமம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மாற்றம்செய்யப்பட்ட முன்கூட்டியே பொருந்தக்கூடிய அணுகுமுறையினைப் பயன்படுத்தி வங்கி, இநிஅநி 16 ஐப் பிரயோகிப்பதனால்,

- முன்னர் அறிக்கையிடப்பட்டவாறான ஒப்பீடுகளை தொகுதி விட்டுவிடுகின்றது.
- மாறுதலடைதயும்போது சொத்திற்கும் பொறுப்பிற்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு, ஆரம்ப பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளில் இனங்காணப்பட்டுள்ளது
- குத்தகையின் தொடக்கத்திலிருந்து இநிஅநி 16 பிரயோகிக்கப்பட்டிருந்தாற்போன்று சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை அளவீடுசெய்கின்றது (ஆனால் மாறுதல் திகதியில் கழிவிடல் வீதத்தினை பயன்படுத்தி)

### சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினதும் குத்தகைப் பொறுப்பினதும் ஆரம்ப அளவீடு

சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையானது ஆரம்பத்தில் 2019.01.01 அன்று உள்ளவாறு நிலுவையாக ஆக்கப்பட்ட ஏதேனும் முற்பணங்களுக்கு சீர்செய்யப்பட்ட அனைத்து குத்தகை வாடகைகளினதும் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. குத்தகைப் பொறுப்பானது தொடக்கத் திகதியில் எஞ்சியுள்ள குத்தகைக் காலப்பகுதியின் மீது எதிர்கால குத்தகை வாடகைகளின் தற்போதைய பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்பட்டுள்ளன.

### சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினதும் குத்தகைப் பொறுப்பினதும் தொடர்ந்துவருகின்ற அளவீடு

தொடக்கத் திகதிக்கு பின்னர் வங்கியானது செலவு மாதிரியொன்றினைப் பிரயோகித்து சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை அளவிடும். இச் சொத்துக்கள், நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி 2019.01.01 அன்று உள்ளவாறு நிலுவை குத்தகை தவணைக்கு கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது. குத்தகை பொறுப்பின் தொடர்ந்து வருகின்ற அளவீடானது குத்தகை வட்டியினை அதிகரிப்பதன் மூலமும் குத்தகை கொடுப்பனவுகளை குறைப்பதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

### கழிவு வீதம்

எதிர்கால வாடகைக் கொடுப்பனவுகளை கழிப்பதற்கு குத்தகைபெறுநர் அதிகரித்துச்-செல்லும் கடன்பெறுதல் வீதத்தினை பிரயோகிக்க வேண்டும். அதாவது “அதனையொத்த தவணைக் காலத்தின் மீது, அதனையொத்த பிணையுடன், அதனையொத்த பொருளாதாரச் சூழலில் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமைக்கு அதனையொத்த பெறுமதியினைக் கொண்ட சொத்தினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நிதியங்களை கடன்பெறுவதற்கு குத்தகைபெறுநர் செலுத்தவேண்டிய வட்டி வீதம்” ஒரேமாதிரியான குத்தகை காலப்பகுதியுடன்கூடிய குத்தகைகளுக்கு தொகுதி தனி கழிவு வீதமொன்றினை பிரயோகிக்கின்றது.

### ஒப்பந்தமொன்றின் கூறுகளை வேறாக்கல்

குத்தகைக் கூறுகளில் இருந்து குத்தகையற்ற கூறுகளை வேறுபடுத்தாத நடைமுறைச் சூழலுக்கேற்றவாறு இசைவான விதத்தில் பிரயோகிப்பதனை தொகுதி தெரிவுசெய்கின்றது

என்பதுடன் அதற்கு பதிலாக ஒவ்வொரு குத்தகைக் கூறையும் அத்துடன் எவையேனும் இணையப்பெற்ற குத்தகையல்லா கூறுகளையும் தனியொரு குத்தகை கூறாக கொள்கிறது.

**ஆரம்ப நேரடிச் செலவுகள்**
தொகுதியானது நடைமுறைச் சூழலுக்கேற்றவாறு ஆரம்ப பிரயோக திகதியன்று சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை அளவீட்டிலிருந்தான ஆரம்ப நேரடிச் செலவுகளை உள்ளடக்குவதில்லை.

## 2.2 கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள்

பின்வருவன தவிர 2021 ஆண்டின் போது கணக்கீட்டுக்கொள்ளைகளில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறவில்லை.

### 2.2.1 வட்டி வீத அடிப்படை அளவு சீரமைப்பு (இநிநெி 9, இகநி 39 மற்றும் இநிஅநி 7 என்பவற்றுக்கான திருத்தங்கள்)

வட்டி வீத அடிப்படை அளவு சீரமைப்பானது தொகுதியின் தாக்கமேற்பட்ட சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலை நிர்ணயிப்பதற்கான அடிப்படைக்கு மாற்றமொன்றினை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. விளைவு வட்டி வீதத்தை இற்றைப்படுத்துவதன் வாயிலாக வட்டி வீத அடிப்படை அளவு சீரமைப்பின் விளைவாக ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை நிர்ணயிப்பதற்கான அடிப்படையில் மாற்றமொன்றினை கணக்கிடுவதற்கான நடைமுறைச் சூழலை இத்திருத்தங்கள் வழங்குகின்றன.

2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு அடிப்படை அளவு சீரமைப்பிற்கு உட்படுகின்ற தொகுதியின் கடன் அளவானது வெளிநாட்டுக் கம்பனிக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்து ஐ. அ. டொலர் 9 மில்லியன் ஆகும்.

### 2.2.2 இநிஅநி 16 - இற்கான திருத்தங்கள் - கொவிட்-19 தொடர்புபட்ட வாடகைச் சலுகைகள்

கொவிட்-19 நோய்த்தொற்றின் நேரடி விளைவாகத் தோன்றுகின்ற வாடகைச் சலுகைகளுக்கான குத்தகை திருத்தியமைத்தல் கணக்கீடு மீதான இநிஅநி-16 வழிகாட்டலை பிரயோகிப்பதிலிருந்து குத்தகைபெறுநர்களுக்கான நிவாரணத்தை இத்திருத்தங்கள் ஏற்பாடுசெய்கின்றன.

இத்திருத்தமானது எதிர்வரும் எதிர்காலத்தில் தொகுதியின்/வங்கியின் நிதியியல் கூற்றுகள் மீது முக்கிய தாக்கத்தினை கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படவில்லை.

## 2.3 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

“சீர்மதிப்புப் பெறுமதி” என்பது பிரதான தரப்பினரின் அளவீட்டுத் திகதியில் அல்லது அது கிடைக்காத பட்சத்தில், அத்திகதியில் தொகுதி அணுகுவழியினை கொண்டுள்ள மிகவும் அனுகூலமிக்க சந்தையில், சந்தை பங்கேற்பாளர்களுக்கிடையில் ஒழுங்குமுறையான கொடுக்கல்-வாங்கல் ஒன்றில் சொத்தொன்றை விற்பனைசெய்வதற்கு கிடைக்கப்பெறக்கூடிய அல்லது பொறுப்பொன்றினை மாற்றல்செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்படக்கூடிய விலையாகும். பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது அதன் செயலாற்றமற்ற இடர்நேர்வினை பிரதிபலிக்கின்றது.

தொகுதியானது செயற்பாடுமிக்க சந்தையொன்றில் சாதனமொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியினை அச்சாதனத்திற்காக குறிக்கப்பட்ட விலையினை பயன்படுத்தி அளவிடுகின்றது. போதிய நிகழுந்தன்மை மற்றும் முன்னெடுக்கப்படும் அடிப்படையொன்றில் விலையிடல் தகவல்களை வழங்குவதற்கான அளவு என்பவற்றுடன் சொத்தொன்றிற்கான அல்லது பொறுப்பொன்றிக்கான கொடுக்கல்வாங்கல் இடம்பெறுமாயின் அச்சந்தை செயற்பாடுமிக்க சந்தையாக கருத்தில் கொள்ளப்படுகின்றது.

செயற்பாடுமிக்க சந்தையொன்றில் குறிக்கப்பட்ட விலை எதுவும் காணப்படவில்லையாயின், அப்போது தொகுதியானது தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துகின்ற அத்துடன் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை குறைக்கின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்துகின்றது. தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டு நுட்பமானது கொடுக்கல்வாங்கல் ஒன்றினை விலைகுறிப்பதில் சந்தை பங்கேற்பாளர்கள் கருத்தில்கொள்கின்ற அனைத்து காரணிகளையும் உள்ளடக்குகின்றது.

சந்தைப் பங்கேற்பாளர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுவார்களாயின், சொத்தை அல்லது பொறுப்பை விலைகுறிக்கின்ற போது சந்தை பங்கேற்பாளர்கள் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையினை பயன்படுத்துவர் என்ற ஊகங்களைப் பயன்படுத்தி சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவிடப்படுகின்றது.

தொகுதியானது மாற்றம் ஏற்பட்டுள்ள காலப்பகுதியான அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையின் மட்டங்களுக்கிடையிலான மாற்றல்களை இனம்காணுகின்றது.

நிதியல்லாத சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்தின் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் அதனை பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தின் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் அதனைப் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்காளருக்கு அதனை விற்பனைசெய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளரின் இயலுமையினை கருத்திற்கொள்கின்றது. காணி மற்றும் கட்டடங்கள் போன்ற முக்கிய சொத்துகளின் விலைமதிப்பீட்டிற்காக வெளிவாரி தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சீர்மதிப்புப் பெறுமதி தொடர்பான பகுப்பாய்வொன்று 410 தொடக்கம் 417 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 56 இல் தரப்பட்டுள்ளது.

## 2.4 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்- பொதுவானவை

### 2.4.1 திரட்டுதலுக்கான அடிப்படை

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள், இநிஅநி 10- “திரட்டிய நிதியியல் கூற்றுகள்” மற்றும் இகநி 27- “திரட்டிய மற்றும் வேறான நிதியியல் கூற்றுகள;” ஆகிய நியதிகளுக்கமைவாக வங்கியினதும் அதன் துணைநிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகளை உள்ளடக்குகின்றன.

#### 2.4.1.1 தொழில் ஒருங்கிணைப்புகள்

“தொழில் ஒருங்கிணைப்புகள்” (இநிஅநி 03) மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தொகுதிக்கு கட்டுப்படுத்தல் கைமாற்றப்படுகின்ற போது கையகப்படுத்தல் முறைமையினை பயன்படுத்தி தொழில் ஒருங்கிணைப்புகள் கணக்கிற்கொள்ளப்படுகின்றது. கையேற்றலில் விலையீடு கைமாற்றப்பட்டு கையகப்படுத்தப்பட்ட இனங்காணத்தக்க தேறிய சொத்துகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. தோன்றுகின்ற ஏதேனும் நல்லெண்ணம் சேதஇழப்பிற்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றது. பேரம்பேசுதல் கொள்வனவு மீதான ஏதேனும் இலாபம், இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றது. கொடுக்கல்வாங்கல் செலவுகள் அவை படுகடன் அல்லது பங்குரிமைமூலதனப் பிணையங்களுடன் தொடர்புள்ளதாயின் தவிர ஏற்பட்ட செலவாக்கப்படுகின்றன.

கைமாற்றப்பட்ட விலையீடானது ஏற்கனவே இருந்த தொடர்புகளை தீர்ப்பனவுசெய்தலுடன் தொடர்புடைய தொகைகளை உள்ளடக்குவதில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

ஏதேனும் எதிர்பாரா விலையீடானது கையகப்படுத்தல் திகதியன்று சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. நிதியியல் சாதனம் பற்றிய வரைவிலக்கணத்தை நிறைவுசெய்கின்ற எதிர்பாரா விலையீட்டினை கொடுப்பனவுசெய்வதற்கான கடப்பாடு பங்குரிமைமூலதனமாக வகைப்படுத்தப்படுத்தப்படுமாயின், அது மீள் அளவீடு செய்யப்படுவதில்லை என்பதுடன் தீர்ப்பனவானது பங்குரிமைமூலதனத்தினுள் கணக்கில்கொள்ளப்படுகின்றது. வேறுவிதத்தில், எதிர்பாரா விலையீட்டின் சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்படும் தொடர்ந்து வருகின்ற மாற்றங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

#### 2.4.1.2 குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள்

குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள் பற்றிய விபரங்கள் 362 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 47 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.4.1.3 துணைநிறுவனங்கள்

வங்கிக்கு கட்டுப்பாடு மாற்றப்பட்ட திகதியிலிருந்தும் துணைநிறுவனத்தின் நிதியியல் கூற்றுகள் முழுமையாக திரட்டப்பட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு

நிறுத்தப்படும் திகதி வரை திரட்டப்படுதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்-படும். ஏதேனும் நிறுவனமொன்றின் செயற்பாடுகளிலிருந்து நலன்களைப் பெறுவதற்காக நிதியியல் மற்றும் தொழிற்படுத்தல் கொள்கைகளை ஆளுவதற்கு வங்கிக்கு அதிகாரம் உள்ளவரை கட்டுப்படுத்தல் தொடர்ந்தும் இருக்கும். திரட்டுதல் நோக்கத்திற்கான வங்கியின் துணைநிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்கள் தேசிய சேமிப்பு வங்கியைப் போன்று அதே அறிக்கையிடும் காலத்திற்காக ஒரேமாதிரியான கணக்கீட்டு கொள்கைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.4.1.4 கட்டுப்படுத்தலை இழத்தல்

துணைநிறுவனம் ஒன்றினை கட்டுப்படுத்து-வதனை தொகுதி இழக்கின்ற போது துணைநிறுவனத்தின் சொத்துகளையும், பொறுப்புகளையும் அது இனங்காணாது என்பதுடன் ஏதேனும் தொடர்புடைய குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள் மற்றும் பங்குரிமையின் வேறு கூறுகள் என்பனவும் இனங்காணப்படாது. விளைகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. முன்னால் துணைநிறுவனத்தின் தக்கவைக்கப்பட்ட ஏதேனும் நலன் கட்டுப்படுத்தல் இழக்கப்படுகின்ற போது சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

#### 2.4.1.5 இணைநிறுவனங்கள்

விபரங்கள் 325 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 25 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.4.1.6 திரட்டுதலின் மீது இல்லா-தொழிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

குழுக்களுகுள்ளான கொடுக்கல்வாங்-கல்களிலிருந்து விளைகின்ற அனைத்து குழுக்களுக்குள்ளான மீதிகள், வருமானம் மற்றும் செலவுகள் அத்துடன் தேறாத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன திரட்டிய நிதியியல் கூற்றுகள் தயாரிக்கின்ற போது முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டன. 366-367 பக்கங்களில் உள்ள முறையே குறிப்பு இல. 49.3 மற்றும் 49.4 - துணைக்கம்பனிகளுடனான கொடுக்கல்வாங்கல் ஐப் பார்க்க.

### 2.4.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும்

வெளிநாட்டு நாணயத்திலான அனைத்து கொடுக்கல்வாங்கலும் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுகின்றன.

அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட நாணய சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் அத்திகதியில் ஆளுகின்ற நடுத்தர நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவில் மீள் நாணயமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாணய விடயங்களில் தீர்ப்பனவில் ஏற்படும் அல்லது ஆரம்பத்தில் அவை பதிவுசெய்யப்பட்டவற்றிலிருந்து வேறுபட்ட வீதத்தில் நாணய விடயங்களை மாற்றும்போது ஏற்படுகின்ற அனைத்து செலாவணி வேறுபாடுகளும் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத விடயங்கள், ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட திகதிகளின் நாணயமாற்று வீதத்தினை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நாணயமல்லாத விடயங்கள், சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணயமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும்.

வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகின் நிதியியல் நிலைமைக் கூற்றானது, அறிக்கையிடும் திகதியிலான நடுத்தர செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்பட்டது. வெளிநாட்டு நாணய வங்கித தொழில் அலகின் கொடுக்கல்வாங்கல்கள், மேற்குறித்த கொள்கைக்கு அமைவாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஏற்பட்ட இலாபங்கள்/நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

## 2.5 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்-சொத்துகளையும் பொறுப்புகளையும் இனங்காணுதல்

### நிதியியல் சாதனங்கள்

2018 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கின்ற ஆண்டறிக்கையிடும் காலப்பகுதிகளுக்காக இநிஅறி 9- “நிதியியல் சாதனங்கள்” இகநி 39 இனை பதிலீடுசெய்தது. இகநி 39 இற்கமைய, காப்பு கணக்கீட்டினை தொடர்ந்து பிரயோகிப்பதற்கு இநிஅறி 9 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொள்கைத் தெரிவொன்றாக வங்கி தெரிவுசெய்தது.

### 2.5.1 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப இனங்காணல், வகைப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்த அளவீடு

#### 2.5.1.1 இனங்காணப்பட்ட திகதி

கடன்கள் மற்றும் முற்பணங்கள், வைப்புகள் மற்றும் பின்நிகழ்வுப் பொறுப்புகள் போன்றவற்றினை தொகுதி அவை உருவாக்கப்பட்ட திகதியில் இனங்காண்கின்றது. வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படுகின்ற போது இனங்காணப்பகின்றன. வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவைகளை வங்கிக்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படுகின்ற போது வங்கி இனங்காணகின்றது. அனைத்து ஏனைய நிதியியல் சாதனங்களும் (கிரமமான வழி மூலமான நிதியியல் சொத்துகளின் கொள்வனவு மற்றும் விற்பனைகள் உள்ளடங்கலாக) வர்த்தக திகதியில் அதாவது சாதனத்தின் ஒப்பந்தம்செய்யும் ஏற்பாடுகளின் ஒரு தரப்பினராக தொகுதி ஆகுகின்ற திகதியன்று இனங்காணப்படுகின்றன.

#### 2.5.1.2 நிதியியல் சாதனங்களை இனங்காணலும் ஆரம்ப அளவீடும்

ஆரம்ப இனங்காணலில் நிதியியல் சாதனங்களை வகைப்படுத்தலானது குறிப்புகள் 2.5.1.4.1 மற்றும் 2.5.1.4.2 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டவாறு அவற்றின் ஒப்பந்த நியதிகள் மற்றும் சாதனங்களை முகாமைசெய்வதற்கான தொழில் மாதிரி என்பனவற்றைச் சார்ந்துள்ளது.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் என்ற விடயங்கள் தவிர, நிதியியல் சாதனங்கள் ஆரம்பத்தில் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் (குறிப்பு 56 இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு) அளவிடப்பட்டு, கொடுக்கல்வாங்கல் செலவுகள் இத்தொகைக்கு சேர்க்கப்பட்டுள்ளன அல்லது இத்தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளன. வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை, கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் போது நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது கொடுக்கல்வாங்கல் விலையிலிருந்து வேறுபடுகின்றபோது, வங்கியும் தொகுதியும் கீழே விவரிக்கப்பட்டவாறு நாள் 1 இலாபம் அல்லது நட்டத்திற்கு கணக்கிடுகின்றன.

#### 2.5.1.3 ‘நாள் 1’ இலாபம் அல்லது நட்டம்

ஒரேமாதிரியான சாதனத்தின் ஏனைய அவதானிக்கத்தக்க நடப்புச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்தான தரவுகளை மட்டுமே உள்ளடக்குகின்ற மாறிலிகளின் மதிப்பீட்டு நுட்பமொன்றின் அடிப்படையில் அமைந்த சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து கொடுக்கல்வாங்கல் விலை வேறுபடும்போது, தொகுதியானது கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி (“நாள் 1” இலாபம் அல்லது நட்டம்) என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை உடனடியாக இனங்காண்கின்றது. அவதானிக்கப்பட முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதி தீர்மானிக்கப்படுமிடத்தான சந்தர்ப்பங்களில் கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் மாதிரிப் பெறுமதி என்வற்றுக்கிடையிலான வேறுபாடானது உள்ளீடுகள் அவதானிக்கத்தக்கதாயிருக்கும் போது மாத்திரம் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படும் அல்லது அச்சாதனம் இனங்காணப்படாதிருக்கும் போது கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி என்வற்றுக்கிடையிலான வேறுபாடானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. ஒரே மாதிரியாகப் பொருந்தக் கூடிய திட்டங்களின் கீழ் சலுகை வீதங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரையில், ஏற்படக் கூடிய ‘நாள் 1 நட்டம்’ ஊழியர்களின் எஞ்சியுள்ள சேவைக் காலப்பகுதி அல்லது கடன் திருப்பிச் செலுத்தவேண்டிய காலப்பகுதி ஆகிய இரண்டில் எது குறுகியதோ அதன் மீது பொருந்தக்கூடிய விளைவு வட்டி வீதங்களை பயன்படுத்தி பிற்போடப்பட்டு கடன்கழிப்புச் செய்யப்படுகின்றது.

### 2.5.1.4 நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

வங்கியானது சொத்துகளையும் சொத்தின் ஒப்பந்த நியதிகளையும் முகாமைசெய்வதற்கான தொழில் மாதிரியின் அடிப்படையிலமைந்த அதன் அனைத்து நிதியியல் சொத்துகளையும் பின்வரும் வகுதிகளில் ஒன்றில் வகைப்படுத்தப்படுகின்றது:

- கடன்தீர் செலவு
- ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி

வங்கியும் தொகுதியும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள அதன் பெறுதி மற்றும் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலினை குறிப்பு இல. 2.5.1.6 இல் விளக்கியவாறு வகைப்படுத்தி அளவிடுகின்றது. வங்கி, நிதியயில் சாதனங்களை இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கலாம், அவ்வாறு செய்வது, அளவீட்டு அல்லது இனங்காணல் ஒத்திசைவின்மைகளை இல்லாதொழிக்கின்றது அல்லது கணிசமாக குறைக்கின்றது.

#### 2.5.1.4.1 தொழில் மாதிரி மதிப்பீடு

வங்கியினதும் தொகுதியினதும் தொழில் குறிக்கோள்களை அடைவதற்கு நிதியியல் சொத்துகளை அவை எவ்வாறு முகாமைசெய்கின்றன என்பதனை சிறப்பாக பிரதிபலிக்கின்ற விதத்தில் அவற்றின் தொழில் மாதிரியினை அவை நிர்ணயிக்கின்றன.

வங்கியின் தொழில் மாதிரியானது சாதனத்திற்கு சாதனம் என்ற அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை, ஆனால் அது ஒன்றுதிரண்ட சொத்துப்பட்டியலின் உயர் மட்டத்தில் மதிப்பிடப்படுவதுடன் பினவருவன போன்ற அவதானிக்கத்தக்க காரணிகளின் அடிப்படையிலமைந்தது:

- தொழில் மாதிரியினதும் அத்தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்ட நிதியில் சொத்துகளினதும் செயலாற்றுகை எவ்வாறு மதிப்பிடப்பட்டு குழுமத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணிக்கு அறிக்கையிடப்படுகின்றது,
- தொழில் மாதிரியின் செயலாற்றுகையினைப் (அத்துடன் அத்தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துகளை) பாதிக்கின்ற இடர்கநேர்வுகள், குறிப்பாக, அவ் இடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- தொழிலின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு ஊதியங்கள் வழங்கப்படுகின்றன (உதாரணமாக, ஊதியமானது முகாமைசெய்யப்படுகின்ற சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையிலா அல்லது சேகரிக்கப்படும் ஒப்பந்த காசுப் பாய்ச்சலின் மீதா என்பது)
- எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் நிகழும்தன்மை, அளவு மற்றும் கால அளவு எனபவும் வங்கியின் மதிப்பீட்டின் முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன.

தொழில் மாதிரி மதிப்பீடானது 'மோசமான நிலை' அல்லது 'அழுத்தமான நிலை' போன்ற சூழ்நிலைகளை கருத்திற்கொள்ளாது நியாயமாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாக கொண்டவை. ஆரம்ப இனங்காணலின் பின்னர் வங்கியின் அடிப்படையான எதிர்பார்ப்பிலிருந்து வேறுபட்ட வழியில் காசுப் பாய்ச்சல் தேறியிருக்குமாயின், அத்தொழில் மாதிரியில் வைக்கப்பட்ட எஞ்சிய நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலை வங்கி மாற்றுவதில்லை ஆனால் முன்னெடுத்துச் செல்கையில் புதிதாக தோற்றம்பெற்ற அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளை மதிப்பிடுகின்ற போது அத்தகைய தகவல்களை கூட்டிணைக்கும்.

#### 2.5.1.4.2 ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளா என்பது பற்றிய மதிப்பீடு (SPPI பரிசோதனை)

வங்கியின் வகைப்படுத்தல் செயன்முறையில் இரண்டாம் படிமுறையாக, வங்கியானது நிதியியல் ஒப்பந்த நியதிகள் தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் பரிசோதனையை நிறைவு செய்கின்றனவா என்பதை இனங்காணுவதற்கு அவற்றை மதிப்பிடுகின்றது.

இப்பரிசோதனை நோக்கத்திற்காக "முதன்மை" என்பது ஆரம்ப இனம்காணலில் நிதியியல் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்தின் ஆயுட்காலம் (உதாரணமாக, முதன்மை மீள்கொடுப்பனவுகள் அல்லது கட்டுப்பண.்.கடன்கழிப்பு காணப்படுமாயின்) மீது மாற்றமடையலாம்.

கடன்வழஙகல் ஏற்பாடொன்றினுள் மிகமுக்கிய வட்டிக் கூறுகளாக காணப்படுவது பொதுவாக பணத்தினதும் கொடுகடன் இடர்நேர்வினதும் காலப்பெறுமதிக்கான கைமாறுகளாகும். தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு, வங்கியானது தீர்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டுள்ள நாணயம் மற்றும் வட்டி வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம் போன்ற தொடர்புடைய காரணிகளை கருத்திற்கொள்கின்றது.

இதற்குமாறாக, அடிப்படை கடன்வழங்கல் ஏற்பாடொன்றிற்கு தொடர்பு இல்லாதவையாக காணப்படுகின்ற ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களின் இடர்நேர்வுகளுக்கான அல்லது தளம்பலுக்கான குறைந்தபட்ச கடன் அளவை விட அதிகமாக அறிமுகப்படுத்துகின்ற ஒப்பந்த நியதிகள், செலுத்தவேண்டிய தொகை மீது தனியே முதன்மை மற்றும் வட்டி கொடுப்பனவுகளான ஒப்பந்த காசுப் பாய்ச்சல் இடம்பெற அனுமதிப்பதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்து அளவிடுவிப்பப் வேண்டியுள்ளது.

நிதியியல் நிலைமை கூற்றில் இனம்காணப்பட்ட வேறுபட்ட நிதியியல் சொத்துகளின் வகைகள் பற்றிய விபரங்களுக்கு கீழே குறிப்பு இலக்கம் 2.5.1.4.3 தொடக்கம் 2.5.1.4.5 வரை பார்க்க.

#### 2.5.1.4.3 கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்தொன்று பின்வரும் இரு நிபந்தனைகளையும் நிறைவுசெய்யமாயின் அது கடன்தீர் செலவில் அளவிடப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ளவையாக நியமிக்கப்படுவதில்லை:

- ஒப்பந்த காசுப்பாய்ச்சலை சேகரிப்பதற்காக சொத்தை வைத்திருப்பதற்கான குறிக்கோளுடைய தொழில் மாதிரியொன்றினுள் சொத்து வைத்திருக்கப்படல்; மற்றும்
- செலுத்தவேண்டிய முதன்மைத் தொகை மீது தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளாக காணப்படுகின்ற காசுப் பாய்ச்சலுக்கு நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறித்துரைத்த திகதியில் இடம்பெறச்செய்தல்.
- கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) காசும் காசுக்கு சமமானவையும்**
"காசும் மற்றும் காசுக்கு சமமானவையும்" பற்றிய விபரங்கள் 304 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 16 இல் தரப்பட்டுள்ளன.

**(ஆ) மத்திய வங்கிகளுடனான மீதிகள்**
"மத்திய வங்கிகளுடனான மீதிகள்" பற்றிய விபரங்கள் 304 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 17 இல் தரப்பட்டுள்ளன.

**(இ) வங்கிகளுடனான இருப்புகள்**
"வங்கிகளுடனான இருப்புகள்" பற்றிய விபரங்கள் 305 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 18 இல் தரப்பட்டுள்ளன.

**(ஈ) கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் - கடன்களும் முற்பணங்களும்**
"கடன்களும் முற்பணங்களும்" பற்றிய விபரங்கள் 310 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 21 இல் தரப்பட்டுள்ளன.

**(உ) கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் - படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்**
"படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்" பற்றிய விபரங்கள் 318 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 22 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.5.1.4.4 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளானவை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் மற்றும் பங்குரிமைமூலதன சாதனங்களை உள்ளடக்குகின்றன.

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியியல் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் கீழே குறிப்புகள் (அ) மற்றும் (ஆ) இல் தரப்பட்டுள்ளன.

**(அ) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்**

தனியே முதன்மைத் தொகையினதும் செலுத்தவேண்டிய முதன்மை தொகை மீதான வட்டியினதும் கொடுப்பனவுகளாக காணப்படுகின்ற சொத்தின் காசுப் பாய்ச்சல்கள் கொடுப்பனவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்கான அத்துடன் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வதற்காகன குறிக்கோளைக் கொண்ட தொழில் மாதிரியொன்றினுள் படுகடன் சாதனங்கள் வைக்கப்பட்டிருப்பின், அப்படுகடன் சாதனங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

"ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள படுகடன் சாதனங்கள்" பற்றிய விபரங்கள் 320-324 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 23 இல் தரப்பட்டள்ளன.

**(ஆ) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குரிமைமூலதன சாதனங்கள்**

ஆரம்ப இனங்காணிலின் மீது, தொகுதியானது உபாய மற்றும் நியதிச்சட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கும் அதன் சில பங்குரிமைமூலதன முதலீடுகளை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் பங்குரிமைமூலதன சாதனங்களாக மாற்ற முடியாதவாறு வகைப்படுத்துவதை தெரிவு செய்கின்றது. "ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமைமூலதனச் சாதனங்கள்" பற்றிய விபரங்கள் 320 - 324 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 23 இல் தரப்பட்டள்ளன.

#### 2.5.1.4.5 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்

இநிஅறி 09 இன் பிரகாரம், கடன்தீர் செலவில் அல்லது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக வகைப்படுத்தப்பட்டவை தவிர்ந்த அனைத்து நிதியியல் சொத்துகளும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளானவை, வர்த்தகப்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது முகாமைசெய்யப்படுகின்ற மற்றும் அவற்றின் செயலாற்றுகையானது அவை ஒன்றில் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அன்றில் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்கோ அத்துடன் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வதற்கோ என இரண்டிற்கும் வைக்கப்படாமையினால், சீர்மதிப்புப் பெறுமதி அடிப்படையொன்றில் மதிப்பிடப்படுகின்ற நிதியியல் சொத்துகளையும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகளையும் உள்ளடக்குகின்றது இவை கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன.

**(அ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்**

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகளானவை நிதி நிலமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்படுகின்றன. சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், "இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான தேறிய இலாபம் அல்லது நட்டம்" இல் பதிவுசெய்யப்படுகின்றன. உழைக்கப்பட்ட வட்டி விளைவு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி "வட்டி வருமானம்" இல் ஒன்றுதிரடப்படும் அதேவேளை பங்கிலாப வருமானமானது கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற போது "ஏனைய தொழிற்பாட்டு வருமானம்" இல் பதிவுசெய்யப்படுகின்றது.

தொகுதியானது அறிக்கையிடும் திகதியின் இறுதியில் உள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவையாக ஆரம்ப இனம்காணலின் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

#### 2.5.1.5 நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

இநிஅறி 9 இன் பிரகாரம், தொகுதியானது நிதியியல் பொறுப்புகள், நிதியியல் உத்தரவாதங்கள் மற்றும் கடன் கடமைப்பொறுப்புகள் என்பவற்றை பின்வரும் வகுதிகளில் ஒன்றினுள் வகைப்படுத்தப்படுகின்றது:

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகளும் மற்றும் பின்வருவனவும் இவ் வகுதியினுள் உள்ளவை.
  - வர்த்தகத்திற்காக பிடித்துவைக்கப்பட்டவை அல்லது
  - இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டவை
- கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் பொறுப்புகள்

நிதியியல் பொறுப்புகளின் தொடர்ந்துவரும் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது. நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலுக்கான இகநி 39 இல் ஏற்கனவே உள்ள தேவைப்படுத்தல்களை இநிஅறி 9 பாரியளவில் தக்கவைத்துள்ளது.

#### 2.5.1.5.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புகள்

தொகுதியானது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவையாக் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

#### 2.5.1.5.2 கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்படாத தொகுதியினால் வினியோகிக்கப்பட்ட நிதியியல் சாதனங்களானவை 'வங்கிக்கு செலுத்தப்படவேண்டியவை', 'ஏனைய வாடிக்கையாளருக்கு செலுத்தப்படவேண்டியவை' மற்றும் 'படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை' 'ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை' அல்லது 'விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்கள்' என பொருத்தமானவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன, இங்கு ஒப்பந்த உடன்படிக்கையின் நோக்கமானது வைத்திருப்பவருக்கு காசுத் தொகையினை அல்லது வேறு நிதியியல் சொத்தினை ஒப்படைப்பதற்கான கடப்பாட்டினை அல்லது நிலையான காசுத் தொகை ஒன்றின் பரிமாற்றம் அல்லது சொந்த பங்குரிமைமூலதன பங்குகளில் நிலையான எண்ணிக்கை ஒன்றிற்கான வேறு நிதியியல் சொத்து மூலமானவை தவிர கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான கடமைப்பாடு ஒன்றினை தொகுதி கொண்டுள்ள பெறுபேறுகளைத் தோற்றுவிக்கும். சாதனத்தின் ஒப்பந்த நியதிகளின் நோக்கத்திற்கு அமைவாக தொகுதியானது மூலதனச் சாதனங்களை நிதியியல் பொறுப்புகளாக அல்லது பங்குரிமைமூலதன சாதனங்களாக வகைப்படுத்துகின்றது.

ஆரம்ப இனங்காணலின் பின்னர், அத்தகைய நிதியியல் பொறுப்புகள் விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அதனைத்தொடர்ந்து அளவிடப்பட்டுள்ளன. கடன்தீர் செலவானது கையேற்றலின் ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக காணப்படுகின்ற ஏதேனும் கட்டணங்கள் அல்லது செலவுகளைக் கருத்திற்கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. விளைவு வட்டி வீத கடன்தீர்த்தலதனது வருமானக் கூற்றில் 'வட்டிச் செலவுகளில்' உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறுப்புகள் அடையாளப்படுத்தப்படாமையின் போதும் அதேபோன்று விளைவு வட்டி வீத கடன்தீர்த்தல் செயன்முறை ஊடாகவும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

**(அ) வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை**

'வங்கிகளுக்கு செலுத்தப்பட-வேண்டியவை' பற்றிய விபரங்கள் 399 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 32 இல் தரப்பட்டுள்ளன.

**(ஆ) வைப்பாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை**
'வைப்பாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை' பற்றிய விபரங்கள் 340 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன

**(இ) படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை**
'படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை' பற்றிய விபரங்கள் 340 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

**(ஈ) ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை**
'ஏனைய கடன் பெறுநர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை' பற்றிய விபரங்கள் 340 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

**(உ) வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்**
'வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்' பற்றிய விபரங்கள் 343 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 37 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.1.6 பெறுதிச் சொத்துகளும் பொறுப்புகளும்

பெறுதிச் சொத்துகளும் பொறுப்புகளும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுதிகளாகவும் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் பெறுதிகளாகவும் பரந்த அளவில் வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.5.1.6.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுதி

பெறுதி என்பது பின்வரும் அனைத்து 03 பண்புகளுடனும் கூடிய நிதியியல் சாதனம் ஒன்றாகும் அல்லது வேறு ஒப்பந்தமாகும்:

- குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதம், நிதியியல் சாதன விலை, பண்ட விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைச் சுட்டிகள் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கொடுகடன் சுட்டி அல்லது ஏனைய மாறிலிகளில் ஒன்றுக்கான மாற்றத்திற்கு பதிலிறுத்துவதில் அதன் பெறுமதி மாற்றமடைகின்றது, ஆயினும், நிதியல்லாத மாறிலியொன்றின் விடயத்தில் ஒப்பந்தத்திற்கான தரப்பினருக்கு இது பிரத்தியேகமானதாக (அதாவது "ஏதுவாகின்கின்ற") காணப்படுவதில்லை.
- இது ஆரம்ப தேறிய முதலீட்டினையோ அல்லது சந்தைக் காரணிகளின் மாற்றங்களுக்கு ஒரே மாதிரியான பதிலிறுத்தலினை கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வேறு வகையான ஒப்பந்தத்திற்கு தேவைப்படுத்தக்கூடியதனை விட சிறிய ஆரம்ப தேறிய முதலீடொன்றினை தேவைப்படுத்தாது.
- இது எதிர்காலத் திகதியொன்றில் தீர்ப்பனவுசெய்யப்படுகின்றது.

வங்கியானது பல்வேறு இணைத்தரப்பினர்களுடன் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றது. இவை, வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள், கொடுகடன் தவணைதவறுதல் பரஸ்பரபரிமாற்றல்கள், குறுக்கு நாணய பரஸ்பரபரிமாற்றல் ஒப்பந்தங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. பெறுதிகள், சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்டு அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி சாதகமாகவுள்ள போது சொத்துகளாகவும் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி எதிர்மறையாக உள்ள போது பொறுப்புகளாவும் கொண்டுசெல்லப்படுகின்றன. அத்தகைய பெறுதிகளின் உத்தேச தொகையும் சீர்மதிப்புப் தொகையும் குறிப்பு 19 இல் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன. காப்பு கணக்கீடு பிரயோகிக்கப்படாதவிடத்து, பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், தேறிய வர்த்தக வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன. காப்பு கணக்கீடு வெளிப்படுத்தல்கள், 305 – 306 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 19 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.1.6.2 இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காகவும் காப்பு கணக்கீட்டுக்காவும் வைத்திருக்கப்படும் பெறுதி

இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கும் பெறுதிகளானவை, வர்த்தகப்படுத்தல் சொத்துகள் மற்றும் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படாத அனைத்து பெறுதி சொத்துகளை மற்றும் பொறுப்புகளை உள்ளடக்குகின்றன. இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைக்கப்பட்ட பெறுதிகள் நிதி நிலைமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகினறன.

### 2.5.1.6.2.1 சீர்மதிப்புப் பெறுமதிக் காப்புகள்

இனங்காணப்பட்ட சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் அல்லது இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிக்கக்கூடியதான நிறுவனத்தின் கடமைபொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றத்தின் காப்பொன்றில் காப்பிடுகின்ற சாதனமாக பெறுதியொன்று நியமிக்கப்படுகின்ற போது, பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், காப்பிடப்பட்ட இடர்நேர்விற்கு சாட்டத்தக்கதாகவுள்ள காப்பிடப்பட்ட விடயமாக அதே நிரல் விடயத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றன.

காப்பிடப்படுகின்ற பெறுதி காலாவதியடையுமெனில் அல்லது விற்பனை செய்யப்படுமாயின், முடிவுறுத்த அல்லது பிரயோகிக்கப்படுமாயின், அல்லது பெறுதியானது சீர்மதிப்புப் பெறுமதி காப்புக் கணக்கீட்டிற்கான மூலப்பிரமாணத்தினை இனிமேலும் நிறைவு செய்யாதிருக்குமாயின், அல்லது காப்பு நியமனம் இரத்துச் செய்யப்படுமாயின், காப்புக் கணக்கீடானது எதிர்பார்ப்புடன் தொடர்ச்சியாக கொண்டுசெல்லப்படாது. எனினும், பெறுதியினை மாற்றீடுசெய்வதற்கு அவசியமானவை தவிர, அதன் நியதிகளில் மாற்றமின்றி சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின் விளைபயனாக இரண்டு தரப்பினர்களாலும் மத்திய இணை தரப்பினர் ஒருவருக்கு மாற்றிடப்படுமாயின், அப்போது பெறுதியானது காலாவதியடைந்ததாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படாது.

விளைவு வட்டி வீத முறை பயன்படுத்தப்படும் காப்பிடப்பட்ட வகையொன்றிற்கான தொடர் செயற்பாடு நிறுத்தப்படும் நிலை வரையிலான ஏதேனும் சரிப்படுத்தலானது அதன் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது வகையின் மீள் கணிக்கப்பட்ட விளைவு வட்டி வீத பாகமொன்றாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு பெறுமதி குறைக்கப்படுகின்றது. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு தொகுதி ஏதேனும் சீர்மதிப்பு பெறுமதி காப்பினைக் கொண்டிருக்கவில்லை.

### 2.5.1.6.2.2 காசுப் பாய்ச்சல் காப்புகள்

இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிக்கக்கூடிய இனங்காணப்பட்ட சொத்துடன் அல்லது பொறுப்புடன் இணையப்பெற்ற குறித்த இடர்நேர்வொன்றிற்கு சாட்டத்தக்க காசுப் பாய்ச்சல்களில் மாறுபடும்தன்மையுடைய காப்பொன்றில் காப்பிடும் சாதனமாக பெறுதியொன்று நியமிக்கப்படுகின்ற போது, பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்களில் விளைவுமிக்க பாகமானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுவதுடன் பங்குரிமைமூலதனத்தினுள் காப்பிடுகின்ற ஒதுக்கில் எடுத்துரைக்கப்படுகின்றது. பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்களின் விளைவற்ற ஏதேனும் பாகமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றது

காப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்கள், இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிப்பதனால் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட தொகையானது அதே காலப்பகுதியின் மீள்வகைப்படுத்தல் சரிப்படுத்தலாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மற்றும் இலாபம் அல்லது நட்டம் அத்துடன் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் அதேமாதிரியான நிரல் வகையிலும் மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

காப்பிடப்படுகின்ற பெறுதி காலாவதியடையுமெனில் அல்லது விற்பனை செய்யப்படுமாயின், முடிவுறுத்த அல்லது பிரயோகிக்கப்படுமாயின், அல்லது பெறுதியானது சீர்மதிப்புப் பெறுமதி காப்புக் கணக்கீட்டிற்கான மூலப்பிரமாணத்தினை இனிமேலும் நிறைவு செய்யாதிருக்குமாயின், அல்லது காப்பு நியமனம் இரத்துச் செய்யப்படுமாயின், காப்புக் கணக்கீடானது எதிர்பார்ப்புடன் தொடர்ச்சியாக கொண்டு செல்லப்படாது. எனினும், பெறுதியினை மாற்றீடுசெய்வதற்கு அவசியமானவை தவிர அதன் நியதிகளில் மாற்றமின்றி சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின்

விளைபயனாக இரண்டு தரப்பினர்களாலும் மத்திய இணை தரப்பினர் ஒருவருக்கு மாற்றிடப்படுமாயின், அப்போது பெறுதியானது காலாவதியடைந்ததாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படாது. தொகுதியானது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு ஏதேனும் காசுப்பாய்ச்சல் காப்பினைக் கொண்டிருக்கவில்லை.

#### 2.5.1.6.3 உட்பொதிந்த பெறுதிகள்

உட்பொதிந்த பெறுதி என்பது தனிப் பிரிவு பெறுதியொன்றுக்கு ஒத்த வகையில் ஒன்றிணைந்த சாதனத்தின் காசுப் பாய்ச்சல்களில் சில மாறுபடுகின்ற தாக்கத்துடன்கூடிய பெறுதியற்ற இணைந்த ஒப்பந்தமொன்றினையும் உள்ளடக்குகின்ற கலப்பு சாதனமொன்றின் கூறொன்றாகும். உட்பொதிந்த பெறுதியானது குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதம், நிதியியல் சாதன விலை, பண்ட விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைகள் சுட்டிகள் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கொடுகடன் சுட்டி அல்லது ஏனைய மாறிலிகள் போன்ற ஒன்றிற்கு அமைவாக திருத்தப்படுவதற்கு ஒப்பந்தத்தினால் வேறு வகையில் வேண்டப்படுகின்ற சில அல்லது அனைத்து காசுப் பாய்ச்சல்களையும் ஏற்படுத்துகின்றது, ஆயினும், நிதியல்லாத மாறிலியொன்றின் விடயத்தில் ஒப்பந்தம் ஒன்றிற்கான தரப்பினர் ஒருவருக்கு பிரத்தியேகமானதாக காணப்படுவதில்லை. நிதியியல் சாதனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆனால் அச் சாதனத்தின் சுயாதீனமாக ஒப்பந்தரீதியாக கைமாற்றத்தக்க அல்லது அச்சாதனத்திலிருந்த வேறுபட்ட இணைத்தரப்பினர் ஒருவரை கொண்டுள்ள பெறுதியானது உட்பொதிந்த பெறுதியொன்றல்ல ஆயினும் அது வேறான நிதியியல் சாதனமொன்றாகும்.

இநிஅறி 09 இற்கு அமைவாக வேறொரு ஒப்பந்த ஒழுங்கில் பெறுதிகள் உட்பொதிந்து இருக்கலாம் (இணைந்த ஒப்பந்தம்). தொகுதியானது நிதியியல் பொறுப்புகளில் மற்றும் நிதியல்லாத இணைந்த ஒப்பந்தங்களில் உட்பொதிந்துள்ள பெறுதிகளை அவை பின்வருமாறு இருப்பின் தனியான பெறுதிகளாக கொள்கின்றது:

- இணைந்த ஒப்பந்தமானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் சுயமாகக் கொண்டுசெல்லப்படவில்லை;
- உட்பொதிந்த பெறுதியின் நியதிகள் தனியான ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்பட்டிருப்பின் அவை பெறுதியொன்று பற்றிய வரைவிலக்கத்தினை நிறைவுசெய்யும்; அத்துடன்
- உட்பொதிந்த பெறுதியின் பொருளாதார பண்புகளும் இடர்நேர்வுகளும் இணைந்த ஒப்பந்தத்தின் பொருளாதார பண்புகளுக்கும் இடர்நேர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பற்றவை

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு தொகுதி உட்பொதிந்த பெறுதிகளைக் கொண்டிருக்கவில்லை.

#### 2.5.1.7 நிதியியல் சொத்துகளையும் பொறுப்புகளையம் மீள்வகைப்படுத்தல்

இநிஅறி 09 இன் பிரகாரம் தொழில் நடவடிக்கையொன்றினை கையேற்றலை, கையுதிர்த்தலை அல்லது முடிவுறுத்தலை உள்ளடக்கக்கூடிய அத்தகைய நிதியியல் சொத்துகளை முகாமைசெய்வதற்கான அதன் தொழில் மாதிரியின் குறிக்கோளை தொகுதி மாற்றுகின்ற போதான அத்தகைய அரிதான சூழ்நிலைகள் மாத்திரம் தவிர, நிதியியல் சொத்துகளை அவற்றின் ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

இநிஅறி 09 இனால் அத்தகைய மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படாமையினால் நிதியியல் பொறுப்புகள் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

#### 2.5.1.7.1 நிதியியல் சொத்துகளின் மீள்வகைப்படுத்தல் அளவீடு

### 2.5.1.7.1.1 நிதியியல் சாதனங்களை 'இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி' மீள்வகைப்படுத்தல்

- **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  மீள்வகைப்படுத்தல் திகதி மீதான சீர்மதிப்புப் பெறுமதி புதிய மொத்த கொண்டுசெல்லும் தொகையாக வருகின்றது. விளைவு வட்டி வீதமானது புதிய கொண்டுசெல்லும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுதியில் தொடர்ந்து வரும் மாற்றங்கள் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.
- **கடன்தீர் செலவிற்கு**
  மீள்வகைப்படுத்தல் திகதி மீதான சீர்மதிப்புப் பெறுமதி புதிய கொண்டுசெல்லும் தொகையாக வருகின்றது. விளைவு வட்டி வீதமானது புதிய மொத்த கொண்டுசெல்லும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

### 2.5.1.7.1.2 நிதியியல் சாதனங்களை 'ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி' இல் மீள்வகைப்படுத்தல்

- **இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள ஒன்றுதிரண்ட மீதி, மீள்வகைப்படுத்தல் திகதியன்று இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றது.
- **கடன்தீர் செலவிற்கு**
  நிதியியல் சொத்து, சீர்மதிப்புப் பெறுமதியில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள ஒன்றுதிரண்ட மீதி அகற்றப்படுவதுடன், மீள்வகைப்படுத்தல் திகதியன்று சீர்மதிப்புப் பெறுமதியினை சீர்செய்யப் பயன்படுகின்றது. சீர்செய்யப்பட்ட தொகை கடன்தீர் செலவாகின்றது.

ஆரம்ப இனங்காணிலில் நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதம் மற்றும் மொத்த கொண்டுசெல்லும் தொகை என்பன மீள்வகைப்படுத்திலின் பயனாக சரிசெய்யப்படுவதில்லை.

### 2.5.1.7.1.3 நிதியியல் சாதனங்களை 'கடன்தீர் செலவு' இல் மீள்வகைப்படுத்தல்

- **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஏதேனும் வேறுபாட்டுடன் சீர்மதிப்புப் பெறுமதிக்கு சொத்து மீளஅளவிடப்படுகின்றது. ஆரம்ப இனங்காணிலில் நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதமானது மீள்வகைப்படுத்திலின் பயனாக சரிசெய்யப்படுவதில்லை.
- **இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  மீள்வகைப்படுத்தல் திகதியன்றுள்ள சீர்மதிப்புப் பெறுமதி புதிய கொண்டுசெல்லும் தொகையாகின்றது. கடன்தீர் செலவு மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி என்பவற்றிக்கிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

அறிக்கையிடும் திகதிக்கு வங்கியும் தொகுதியும் ஏதேனும் நிதியியல் சாதன மீள்வகைப்படுத்தலை கொண்டிருக்கவில்லை.

#### 2.5.1.8 நிதியியல் சொத்துகளையும் நிதியியல் பொறுப்புகளையும் இனங்காணமை

#### 2.5.1.8.1 நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்துகளிலிருந்து காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகின்றபோது அல்லது நிதியியல் சொத்தின் சொத்தான்மையின் அனைத்து இடர்நேர்வுகளும் கைமாறுகளும் கணிசமாக கைமாற்றப்படுகின்ற அல்லது தொகுதியானது நிதியியல் சொத்தின் ஒன்றில் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் கைமாற்றாது அன்றில் கணிசமாக தக்கவைக்காது அத்துடன் கட்டுப்பாட்டினை தக்கவைக்காதுள்ள கொடுக்கல்வாங்கலொன்றில் ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமையினை அது கைமாற்றுகின்ற போது, நிதிச் சொத்தொன்றினை (அல்லது இயைபானவிடத்து நிதிச் சொத்தொன்றின் பாகமொன்றினை) தொகுதி இனங்காணாது.

நிதியியல் சொத்தொன்று இனங்காணப்படாதபோது, சொத்து கொண்டுசெல்கின்ற தொகைக்கும் (அல்லது இனங்காணப்படாத சொத்தின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கொண்டுசெல்லும் தொகை) மற்றும் கிடைக்கப்பெற்ற விலைஈடுத் தொகை (பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் புதிய சொத்தினை கழித்து மற்றும் ஊகிக்கப்பட்ட புதிய பொறுப்பு உள்ளடங்கலாக) மற்றும் எனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டிருந்த ஏதேனும் ஒன்றுதிரட்டிய இலாபம் அல்லது நட்டம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடானது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவாறு நியமிக்கப்பட்ட பங்குமூலதன முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் எனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரண்ட இலாபம்/நட்டம், இநிஅநி 09 இற்கு அமைய அத்தகைய பிணையங்களின் இனங்காணாமையின் மீது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுவதில்லை. தொகுதியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்டதாகவுள்ள இனங்காணாமைக்கு தகுதிபெறுகின்ற கைமாற்றல்செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளில் உள்ள ஏதேனும் நலன் வேறான சொத்தாக அல்லது பொறுப்பாக இனங்காணப்பட்டுள்ளது.

தொகுதி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றது, இதன் ஊடாக இது அதன் நிதியியல் நிலைக்கூற்றின் மீது இனங்காணப்பட்ட சொத்துகளை கைமாற்றல்செய்கின்றது ஆனால் கைமாற்றல்செய்யப்பட்ட சொத்துகளின் அல்லது அவற்றின் பாகமொன்றின் இடர்நேர்வுகள் மற்றும் கைமாறுகள் அனைத்தையுமோ அல்லது கணிசமானவற்றையோ தக்கவைக்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், கைமாற்றல்செய்யப்பட்ட சொத்துகள் இனங்காணப்படாது இருப்பதில்லை.

சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சலினை பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமையினை தொகுதியானது கைமாற்றி அல்லது கடந்து-செல்லல் ஒழுங்கொன்றை மேற்கொண்டு அத்துடன் கணிசமாக சொத்தின் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் கைமாற்றாது அன்றில் தக்கவைக்காது அன்றில் சொத்தின் கட்டுப்பாட்டினை கைமாற்றல்செய்யாதிருக்கும் போது, சொத்தில் தொகுதியின் தொடர்ச்சியான ஈடுபாடு உள்ளதென்ற ரீதியல் சொத்தானது இனங்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் தொகுதி இனங்காணுகின்றது. கைமாற்றல்செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் தொகுதி தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

#### 2.5.1.8.2 நிதியியல் பொறுப்புகள்

தொகுதியின் ஒப்பந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்ற போது, இரத்துச்செய்யப்படுகின்ற போது அல்லது காலாவதியடைகின்ற போது நிதியியல் பொறுப்பொன்றினை அது இனங்காணாது.

### 2.5.1.9 நிதியியல் சொத்துகளினதும் நிதியியல் பொறுப்புகளினதும் திருத்தியமைப்புகள்

#### 2.5.1.9.1 நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்தின் நியதிகள் திருத்தம்செய்யப்படுமாயின், திருத்தம் செய்யப்பட்ட சொத்தின் காசுப் பாய்ச்சல் கணிசமான வேறுபடுகின்றதா என்பதை தொகுதி மதிப்பிடுகின்றது. காசுப் பாய்ச்சல்கள் கணிசமானளவில் வேறுபடுமாயின், அப்போது மூல நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியடைந்துள்ளதாக கருதப்படுகின்றது. இவ்விடயத்தில் மூல நிதியியல் சொத்து இனங்காணப்படுவதில்லை என்பதுடன் புதிய நிதியியல் சொத்தொன்று சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது

இநிஅநி 09 இன் பிரகாரம், கடன்தீர் செலவில் கொண்டுசெல்லப்படும் திருத்தியமைக்கப்பட்ட சொத்தின் காசுப் பாய்ச்சல், கணிசமாக வேறுபடாவிடின், திருத்தியமைத்தலானது நிதியியல் சொத்தின் இனங்காணமையினை விளைவிக்காது. இவ்விடயத்தில், தொகுதியனாது நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகையினை மீளக்கணிப்பீடு செய்வதுடன், மொத்த கொண்டுசெல்லும் தொகையினை சீர்செய்வதிலிருந்து தோன்றுகின்ற தொகையினை இலாபம் அல்லது நட்டத்தில் திருத்தியமைத்தல் இலாபம் அல்லது நட்டம் ஒன்றாக இனங்காண்கின்றது. கடன்பெறுநரின் நிதியியல் கஷ்டநிலை காரணமாக அத்தகைய திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்படுமாயின், அப்போது இலாபம் அல்லது நட்டம் சேதஇழப்பு நட்டத்துடன் சேர்த்து எடுத்துரைக்கப்படுகின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் இது வட்டி வருமானமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

#### 2.5.1.9.2 நிதியியல் பொறுப்புகள்

ஏற்கனவே காணப்படும் நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் அதே கடன் வழங்குனரிடமிருந்து வேறொரு பொறுப்பின் மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றவிடத்து, அல்லது ஏற்கனவே உள்ள நிதியியல் பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக திருத்தியமைக்கப்படுமிடத்து, அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தியமைத்தல் மூலப் பொறுப்பின் இனங்காணமை ஒன்றாக கொள்ளப்படுவதுடன் புதிய பொறுப்பொன்று இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில், திருத்தியமைக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையிலமைந்த புதிய நிதியியல் பொறுப்பானது சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது. முடிவுறுத்தப்பட்ட நிதியியல் பொறுப்பின் கொண்டுசெல்லும் தொகைக்கும் திருத்தியமைக்கப்பட்ட நியதிகளுடனான புதிய நிதியியல் பொறுப்புகும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

### 2.5.1.10 நிதியியல் சாதனங்களை எதிரீடுசெய்தல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடுசெய்வதற்கு அத்துடன் சொத்துகளை தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவுசெய்வதற்கு உத்தேசமொன்று காணப்படுகின்றதாயின், அல்லது சமகாலத்தில் சொத்துக்களை தேறல்செய்து பொறுப்புகளை தீர்ப்பனவுசெய்வதற்கு, நடைமுறையில் சட்டரீதியாக அமுலாக்கத்தக்க உரிமையொன்று காணப்படுகின்றதாயின், அத்துடன் அப்போது மாத்திரம், நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு, தேறிய தொகை நிதியியல் நிலைக்கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன.

### 2.5.1.11 கடன்தீர் செலவும் மொத்த கொண்டுசெல்லும் தொகையும்

நிதியியல் சொத்தொன்றின் அல்லது நிதியியல் பொறுப்பொன்றின் "கடன்தீர் செலவு" என்பது நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு ஆரம்ப இனங்காணலில் அளவிடப்பட்டு, முதன்மை மீள்கொடுப்பனவுகளைக் கழித்து, ஆரம்ப தொகைக்கும் முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாட்டின் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி திரண்ட கடன்தீர் தொகையினை கூட்டி அல்லது கழித்து, அத்துடன் நிதியியல் சொத்துகளுக்காக ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டினை சீர்செய்த தொகையாகும்.

'நிதியியல் சொத்தொன்றின் மொத்த கொண்டுசெல்லும் தொகை' என்பது ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டுக்கான சரிப்படுத்தலுக்கு முன்னர் நிதியியல் சொத்தொன்றின் கடன்தீர் செலவாகும்.

### 2.5.1.12 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை உள்ளடங்கலாக 275 ஆம் மற்றும் 410 ஆம் பக்கங்களில் குறிப்பு இலக்கம் 2.3 மற்றும் 56 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

## 2.5.2 நிதியியல் சொத்துகளின் சேதஇழப்பு

### 2.5.2.1 தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு

முன்னர் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை அளவொன்றிற்கு மேல் நிதியியல் சொத்துகளுக்காக (அதாவது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவம்மிக்க நிதியியல் சொத்துகள்), சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என்ற புறநிலைச் சான்று காணப்படுமாயின், இழப்புத் தொகையானது சொத்து கொண்டுசெல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் (ஏற்பட்டிருக்காத எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு நீங்கலாக) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது.

பிணைஉறுதியாக்கப்பட்ட நிதியியல் சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக் கணிப்பானது மீட்புரிமைத்தடை நிகழத்தக்கதோ இல்லையோ என்பதைப் பொருட்படுத்தாது, பிணைஉறுதியினை பெற்றுக்கொண்டு விற்பனை செய்வதற்கான மீட்புரிமைத்தடை செலவுகளை கழிப்பதிலிருந்து தோன்றக்கூடிய காசுப் பாய்ச்சல்களை பிரதிபலிக்கின்றது. தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு பற்றிய விபரங்கள் 312 ஆம் பக்கத்தில் குறிப்பு இலக்கம் 21 (ஈ) இல் தரப்பட்டுள்ளது.

### 2.5.2.2 தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க மதிப்பீடும் தனிப்பட்ட ரீதியாக சேதம்இழக்காதவையும்

தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க ஆனால் சேதமிழக்காத கடன்களானவை தோற்றம்பெற்றதிலிருந்து முக்கிய கொடுகடன் சீர்குலைவு காணப்படுகின்றதா என்ற மூலப்பிரமாணத்தின் அடிப்படையில் படிமுறை 1 அல்லது படிமுறை 2 இல் ஏதாவது ஒன்றின் கீழ் சேதஇழப்பிற்காக கூட்டாக மதிப்பிடப்படும்.

முக்கிய கொடுகடன் சீர்குலைவினை நிறுவுகின்ற அதேவேளை வங்கி பின்வரும் மூலப்பிரமாணங்களை பரிசீலனையில்கொள்ளும்:

- சாதனம் புதிதாக தோற்றுவிக்கப்படுமாயின், கணிசமாக வேறுபடக்கூடிய ஏற்கனவே உள்ள நிதியியல் சாதனமொன்றின் வீதங்களில் அல்லது நியதிகளில் காணப்படும் ஏனைய மாற்றங்கள்.
- குறித்த நிதியியல் சாதனமொன்றிற்கான அல்லது அதேமாதிரியான நிதியியல் சாதனத்திற்கான கொடுகடன் இடர்நேர்வு தொடர்பான வெளிவாரி சந்தை குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.
- கடன்பெறுநரின் படுகடன்/பங்குரிமைமூலதன சாதனங்களின் விலையில் காணப்படும் மாற்றங்கள் போன்ற கடன்பெறுநருடன் தொடர்புடைய ஏனைய தகவல்கள்.
- கடன்பெறுநருக்கான உண்மையான/ எதிர்பார்க்கப்பட்ட உள்ளக கடன் தரப்படுத்தலில் தரங்குறைப்பு அல்லது கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீட்டிற்கான உள்ளக ரீதியாக பயன்படுத்தப்படும் நடத்தை புள்ளிகளில் குறைவு.
- கடன்பெறுநர் அவரின் கடன்பாட்டினை நிறைவுசெய்வதற்கான இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொழில், நிதியியல் அல்லது பொருளாதார நிலைமையில் தற்போதுள்ள அல்லது எதிர்வுகூறப்படும் பாதகமான மாற்றங்கள்.
- வருவாயில் உண்மையான/எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சி, தொழிற்படுத்தல் இடர்நேர்வில் அதிகரிப்பு, பணியாற்று மூலதனப் பற்றாக்குறை, சொத்து தரத்தில் குறைவு, சொத்து விகிதாசாரத்தில் அதிகரிப்பு, திரவத்தன்மை முகாமைத்துவ பிரச்சினைகள் போன்றவை தொடர்பில் கடன்பெறுநரின் தொழிற்படுத்தல் பெறுபேறுகளின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம்.
- அதே கடன்பெறுநரின் வேறு நிதியியல் சாதனங்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.
- கடன்பெறுநரின் படுகடன் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை விளைவிக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல், பொருளாதார, தொழில்நுட்பவியல் சூழலில் உண்மையாக அல்லது எதிர்பார்க்கப்பட்ட பாதகமான மாற்றம்.

### 2.5.2.3 எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கோட்பாடுகள் பற்றிய பொதுநோக்கு

2018 சனவரி 1 தொடக்கம், “நிதியியல் சாதனங்கள்” ஆக இப் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கடன் பொறுப்புகள் மற்றும் நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்களுடன் சேர்த்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்படாத அனைத்து கடன்களுக்கும் ஏனைய படுகடன் நிதியியல் சொத்துகளுக்கும் வங்கி, எதிரபார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்காக ஒதுக்கீடொன்றினை பதிவுசெய்துவருகின்றது. பங்குரிமைமூலதன சாதனங்கள் இறிஅறி 9 இன் கீழ் சேதமிழப்பிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

ஏதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு ஒதுக்கீடானது தோற்றம்பெற்றதிலிருந்து கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் இல்லாதவிடத்து, சொத்தின் ஆயுட்காலத்தின் மீது தோன்றுமென (ஆயுட்காலம் எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பு) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அடிப்படையக கொண்டிருக்கும், அத்தகைய சந்தர்ப்பங்களில் இழப்பு ஒதுக்கீடு, 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் அடிப்படையிலிருக்கும். கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றுள்ளதா என்பதனை நிர்ணயிப்பதற்கான வங்கியின் கொள்கைகள் 283 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.2.7 இல் எடுத்துரைக்கப்படுகின்றன.

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு என்பது ஆயுட்கால எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாகும் இது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாத காலங்களினுள் சாத்தியமானதாக காணப்படுகின்ற நிதியியல் சாதனமொன்றின் தவணைதவறுதல் நிகழ்வுகளில் இருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை விவரிகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு மற்றும் 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு ஆகிய இரண்டும் ஏதுவாகின்ற நிதியியல் சாதனங்களின் சொத்துப்பட்டியல் தன்மையைச் சார்ந்து ஒன்றில் தனிப்பட்ட அடிப்படையிலோ அன்றில் கூட்டான அடிப்படையிலோ கணிக்கப்படுகின்றன.

நிதியியல் சாதனத்தின் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது நிகழுகின்ற தவணைதவறுதல் இடர்நேர்வில் காணப்படும் மாற்றத்தினை கருத்திற்கொள்வதன் மூலம் நிதியியல் சாதனமொன்றின் கடன் இடர்நேர்வானது ஆரம்ப இனங்காணலில் இருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதா என்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிதியிலும் கணிப்பீடொன்றினை செயலாற்றுவதற்கு தொகுதி கொள்கையொன்றினை நிறுவியுள்ளது.

அத்தகைய செயன்முறையொன்றின் அடிப்படையில் வங்கி அதன் கடன்களை கீழே விவரிக்கப்பட்டவாறு படிமுறை 1, படிமுறை 2, படிமுறை 3 ஆக வகைப்படுத்தியுள்ளது.

#### படிமுறை 1

- கடன்கள் முதலாவது இனங்காணப்படுகின்றபோது, வங்கியானது 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் அடிப்படையில் ஒதுக்கீடொன்றினை இனங்காண்கின்றது. கொடுகடன் இடர்நேர்வு மேம்பட்டுள்ள வசதிகளையும் படிமுறை 2 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் படிமுறை 1 உள்ளடக்குகின்றது.

#### படிமுறை 2

- கடனொன்று தோற்றம்பெற்றது முதல் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைக் காண்பித்துள்ளபோது, ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவுசெய்கின்றது. கொடுகடன் இடர்நேர்வு மேம்பட்டுள்ள வசதிகளையும் படிமுறை 3 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் படிமுறை 2 உள்ளடக்குகின்றது.
- வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த கொடுப்பனவுகளானவை கீழே படிமுறை 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர, 30 நாட்களுக்கு மேற்பட்ட கடந்த கால நிலுவையாக காணப்படுகின்றவிடத்து, கொடுகடன் வசதிகள் இறிஅறி 9 இல் குறிப்பிடப்பட்டவாறு தள்ளுபடிசெய்யத்தக்க அநுமானத்திற்கு உட்படுகின்றது.

#### படிமுறை 3

- இறிஅறி 9 இல் குறிப்பிடப்பட்டவாறு தள்ளுபடிசெய்யத்தக்க ஊகத்திற்கு உட்பட்டு வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேல் கடந்த கால நிலுவையாகின்ற கொடுகடன் வசதிகள்.
- இரு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைக்கப்பட்டவையாக காணப்படுகின்ற அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்களும்
- அனைத்து மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்களும்.
- இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கமைவாக செயலாற்றமற்றதாக வகைப்படுத்தப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகள்/ வாடிக்கையாளர்கள்.
- வாடிக்கையாளரொருவரின் அல்லது சாதனமொன்றின் இடர்நேர்வுத் தரப்படுத்தலானது வெளிவாரி கடன்தரப்படுத்தல் முகவராண்மை ஒன்றினால் B+ ஆக தரங்குறைக்கப்பட்டுள்ளபோது அத்துடன்/அல்லது வங்கிகளின் உள்ளக தரப்படுத்தல் முறைமையில் இரு – படிநிலைகள் தரங்குறைக்கப்பட்டுள்ளபோது.
- கொடுகடன் இடர்நேர்வில் செயலாற்றமற்ற கொடுகடன் வசதிகளின்/ வாடிக்கையாளர்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (குறிப்பு இல. 2.5.2.2.7 ஐப் பார்க்க).

செலுத்தவேண்டிய மொத்த தொகையோ அல்லது அதன் ஒரு பாகத்தை மீளஅறவிடுவதற்கு நியாயமான எதிர்பார்க்கைகளை வங்கி கொண்டிராத நிதியியல் சொத்துகளுக்காக, நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகை குறைக்கப்படுகின்றது. இது நிதியியல் சொத்தின் இனங்காணாமை (பகுதியளவிலான) ஒன்றாக கருதப்படுகின்றது.

#### 2.5.2.4 எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கணிப்பீடு

எதிர்பார்க்கப்பட்ட காசு பற்றாக்குறைகளை அளவிடுவதற்கு, விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டத்தட்ட சமமாக்கலொன்றில் கழிவுசெய்யப்பட்ட எதிரகார்க்கப்படும் கொடுகடன் இழப்பினை தொகுதி கணிக்கின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்திற்கு அமைவாக நிறுவனமொன்றிற்கு செலுத்தவேண்டிதாகவுள்ள காசுப் பாய்ச்சலுக்கும் பெறுவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்ற காசுப் பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடாகும். எதிரகார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டுப் பொறிமுறை, கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் முக்கிய கூறுகள் பினவருமாறு:

- **தவணைதவறுதல் நிகழும்தன்மை:** தவணைதவறுதல் நிகழும்தன்மை என்பது வழங்கப்பட்ட கால வீச்சொன்றில் தவணைதவறுதல் நிகழக்கூடியமை பற்றிய மதிப்பீடொன்றாகும். கடன்வசதியானது முன்னர் இனங்காணப்பட்டிருக்காது அத்துடன் இன்னும் சொத்துப்பட்டியலில் இருக்குமாயின், மதிப்பிடப்பட்ட காலப்பகுதியில் குறித்த நேரமொன்றில் மாத்திரம் தவணைதவறுதல் நிகழலாம்.
- **தவணைதவறுதலில் கடன் அளவு** தவணைதவறுதலில் கடன் அளவு என்பது ஒப்பந்தத்தினாலோ அல்லது வேறுவகையிலோ அட்டவணைப்படுத்தப்பட்ட முதன்மை மற்றும் வட்டி மீள்கொடுப்பனவுகள், இணங்கிய கடன்வசதிகள் மீதான எதிரபார்க்கப்பட்ட கடன் தொகைகள், அத்துடன் தவறிய கொடுப்பனவுகளில் இருந்தான ஒன்றுதிரண்ட வட்டி உள்ளடங்கலாக அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் கடன் அளவில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கருத்திற்கொண்டு எதிர்கால தவணைதவறுதல் திகதியொன்றில் உள்ள கடன் அளவு பற்றிய மதிப்பீடாகும்.
- **கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை** கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை என்பது தரப்பட்ட நேரமொன்றில் தவணைதவறுதலொன்று நிகழுமிடத்து, அதிலிருந்த தோன்றுகின்ற இழப்பு பற்றிய மதிப்பீடொன்றாகும். ஒப்பந்த காசுப் பாய்ச்சல் நிலுவை மற்றும் ஏதேனும் பிணைஉறுதி தேறுகின்றவை உள்ளடங்கலாக கடன்வழங்குநர் பெற்றுக்கொளவதற்கு எதிர்பார்க்கின்றவை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை இது அடிப்படையாக கொண்டது. இது பொதுவாக தவணைதவறுதல் கடன் அளவின் சதவீதமாக கூறப்படும்.
- கொடுகடன் இழப்புகள் நிர்ணயிக்கப்படுவதற்கான உயர்ந்தபட்ச காலமானது வங்கி அதனை முன்கூட்டி அழைப்பதற்கான உரிமையினை கொண்டிருக்காதவிடத்து நிதியியல் சாதனமொன்றின் ஒப்பந்த ஆயுட்காலமாகும். சேதஇழப்பு நட்டங்களும் விடுவிப்புகளும் நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் பெறுமதியின் சீராக்கமாக கணக்கிடப்படுகின்ற திருத்தியமைத்தல் நட்டங்கள் அல்லது இலாபங்களிலிருந்து வேறாக கணக்கிடப்பட்டு காண்பிக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு பொறிமுறை முறை கீழே சுருக்கமாக தரப்பட்டள்ளது:

படிமுறை 1

- 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாதங்களினுள் சாத்தியமானதாகவுள்ள நிதியியல் சாதனமொன்றின் மீதான தவணைதவறுதல் நிகழ்வுகளிலிருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆயுட்கால எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாகு கணிக்கப்படுகின்றது. அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் 12 மாத காலங்களில் நிகழுகின்ற தவணைதவறுதல் எதிர்பார்க்கையின் அடிப்படையில் 12 மாத எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பினை தொகுதி கணிப்பிடுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட இவ் 12 மாத தவணைதவறுதல் நிகழுந்தன்மைகள், தவணைதவறுதல் கடன் அளவினை எதிர்வுகூறுவதற்கு பிரயோகிக்கப்படுவதுடன் எதிர்பார்க்கப்பட்ட கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை மூலம் பெருக்கப்பட்டு மூல விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டியபெறுமதியாக்கல் மூலம் கழிவுசெய்யப்படுக்கின்றது.

படிமுறை 2

- கடனொன்று அதன் உருவாக்கத்திலிருந்து கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை காண்பித்துள்ளபோது, ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவுசெய்கின்றது. பொறிமுறையானது மேலே விளக்கப்பட்டவற்றை ஒத்ததாகும் ஆனால் தவணைதவறுதல் நிகழுந்தன்மைகள் மற்றும் கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை என்பன சாதனத்தின் ஆயுட்காலத்தின் மீது மதிப்பிடுப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் காசுப் பற்றாக்குறையானது மூல விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டடியபெறுமதியாக்கல் மூலம் கழிவுசெய்யப்படுக்கின்றது.

படிமுறை 3

- கொடுகடன் சேதஇழந்துள்ளதாக கருத்திற்கொள்ளப்படுகின்ற கடன்களுக்காக, வங்கியானது இக்கடன்களுக்கென ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை இனங்காணுகின்றது. இம்முறையானது 100% இல் நிர்ணயிக்கப்பட்ட தவணைதவறுதல் நிகழுந்தன்மையுடன் படிமுறை 2 சொத்துகளுக்கானதை ஒத்ததாகும்.

#### 2.5.2.5 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளானவை சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்படுகின்ற, நிதியியல் நிலைக் கூற்றில் உள்ள இந்நிதியியல் சொத்தின் கொண்டுசெல்லும் தொகையை குறைப்பதில்லை. இதற்கு பதிலாக, கடன்தீர் செலவில் சொத்துகள் அளவிடப்பட்டிருப்பின் தோற்றம்பெறக்கூடிய ஒதுக்கீட்டுக்குச் சமமான தொகையொன்று இலாபம் அல்லது நட்டத்திற்கான நேரொத்த விதிப்பனவொன்றுடன் திரட்டிய சேதமிழப்புத் தொகையொன்றாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரட்டிய நட்டமானது சொத்துகளின் இனங்காணமையின் மீது, இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு வங்கியும் தொகுதியும் சேதஇழப்பிற்கு உட்படுகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனம் எதனையும் கொண்டிருக்கவில்லலை.

#### 2.5.2.6 முன்னோக்கி எதிர்பார்க்கும் தகவல்கள்

வங்கியின் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியில், அது பினவருவன போன்ற பொருளாதார உள்ளீடுகள் போன்ற முன்னோக்கி எதிர்பார்க்கின்ற தகவல்களின் பரந்த வீச்சொன்றில் தங்கியுள்ளது:

- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி
- தொழிலின்மை வீதங்கள்
- பணவீக்க வீதங்கள்
- செலாவணி வீதங்கள்
- வட்டி வீதங்கள்

ஏதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை கணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளும் மாதிரிகளும் எப்போதும் நிதியியல் கூற்றுகளின் திகதியன்று சந்தையின் அனைத்து பண்புகளையும் உள்ளடக்காதிருக்கலாம். இதனைப் பிரதிபலிப்பதற்கு அத்தகைய வேறுபாடுகள் குறிப்பிடத்தக்களவு முக்கியமாக காணப்படுகின்றபோது தற்காலிக சீராக்கங்களாக பண்புசார் சீராக்கங்கள் அல்லது முதலீட்டாளர் கணக்குகளை உகப்பாக்குகின்ற முகாமைத்துவ முறைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.5.2.7 கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு

சாதனமொன்று அல்லது சாதனங்களைக் கொண்ட சொத்துப்பட்டியலொன்று 12மாத ஏதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு அல்லது ஆயுட்கால ஏதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்பட்டுள்ளதா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு ஏதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்படுகின்ற அனைத்து சொத்துகளையும்

வங்கி தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது, ஆரம்ப இனங்காணல் தொடக்கம் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை வங்கி கணிப்பிடுகின்றது. வங்கியானது அளவுக்குமீறிய செலவு அல்லது முயற்சி இன்றி தொடர்புடையதாக மற்றும் கிடைக்கத்தக்கதாகவுள்ள நியாயமான மற்றும் துணையளிக்கத்தக்க தகவல்களை பரிசீலனையில் கொள்கின்றது. இது, வங்கியின் வரலாற்று அனுபவம் மற்றும் நிபுணத்துவ கொடுகடன் மதிப்பீடு அத்துடன் எதிர்நோக்குகின்ற தகவல்கள் எனபவற்றின் அடிப்படையிலமைந்த அளவுசார் மற்றும் பண்புசார் தகவல் பகுப்பாய்வுகளை உள்ளடக்குகின்றது. அதற்கமைய, பின்வரும் காரணிகளில்/நிபந்தனைகளில் ஒன்று நிறைவுசெய்யப்படுகின்றபோது கடன் இடர்நேர்வு குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக வங்கி கருதுகின்றது.

- வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கு மேல் கடந்தகால நிலுவையாகின்றபோது (இநிஅறி 9 இல் தள்ளுபடிசெய்யத்தக்க ஊகத்திற்குட்பட்டு).
- வாடிக்கையாளரொருவரின் அல்லது சாதனமொன்றின் இடர்நேர்வுத் தரப்படுத்தலானது வெளிவாரி கடன்தரப்படுத்தல் முகவராண்மை ஒன்றினால் B+ ஆக தரங்குறைக்கப்பட்டுள்ளபோது.
- மீள்கட்டமைக்கப்பட்ட வசதிகள்.
- வாடிக்கையாளரை/வசதியினை கண்காணிப்பு அட்டவணைக்கு நகர்த்ததல் போன்ற சொத்தொன்றுக்கான கொடுகடன் இடர்நேர்வில் முக்கிய அதிகரிப்பொன்றினை தூண்டுகின்ற இரண்டாம் நிலைக் குறிகாட்டிகள்.
- வாடிக்கையாளரொருவரின்/ வாடிக்கையாளர்கள் குழுவின், சொத்துப்பட்டியல்களின் அல்லது சாதனங்களின் செயலாற்றுகையினை நேரடியாக பாதிக்கின்ற எதிரகால பொருளாதார நிலைமைகள் பற்றிய நியாயமான மற்றும் துணையளிக்கத்தக்க எதிர்வுகூறல்களின் போது.
- வாடிக்கையாளரொருவரின்∴ வாடிக்கையாளர்கள் குழுவின், சொத்துப்பட்டியல்களின் அல்லது சாதனங்களின் செயலாற்றுகையில் நேரடியாக தாக்கமேற்படுத்துகின்ற புவியியல் அமைவிடத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அல்லது இயற்கை அனர்த்தம் காணப்படுகின்றபோது.
- பிணைஉறுதியின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு குறைக்கப்படுகின்றபோது அத்துடன்/அல்லது பிணைஉறுதியின் தேறுந்தன்மை சந்தேகத்திற்கிடமானதாக உள்ளபோது.
- கொடுகடன் வசதியின் செயலாற்றுகையினை கணிசமான அளவு பாதிக்கின்ற விதத்தில் வாடிக்கையாளர் ஒருவர் வழக்காடலொன்றுக்குட்படுகின்ற போது.
- நிறுவனசார் வாடிக்கையாளரொருவரின் சிரேஸ்ட முகாமைத்துவத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள்.
- வியாபார தொழிற்பாடுகளின்/ கருத்திட்டங்களின் தொடக்கம் அடிப்படையில் உடன்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேல் தாமதமடைதல்.
- கொடுப்பனவுகளின் விரிவுபடுத்தல்கள், ஒத்திவைத்தல், ஒப்பந்தங்களை தள்ளுபடிசெய்தல் உள்ளடங்கலாக சலுகைகளை ஏற்படுத்துகின்ற நியதிகளின் திருத்தியமைத்தல்கள்.
- வாடிக்கையாளர் மரணித்தலின்/கடனிறுக்க வகையின்மையின் போது.
- வங்கி வாடிக்கையாளரை தொடர்புகொள்ள அல்லது கண்டுபிடிக்க இயலாதிருக்கின்ற போது.
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வாடிக்கையாளரின் புரள்வில் அத்துடன்/ அல்லது வரிக்கு முந்திய இலாபத்தில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட வீழ்ச்சி.
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சொத்து பெறுமதியில் 25% இற்கு மேல் சிதைவடைதல்.

#### 2.5.2.8 தவணைதவறுதல் மற்றும் கொடுகடன் சேதஇழந்த சொத்துகள் பற்றிய வரைவிலக்கணம்

ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களையும் முற்பணங்களையும் தொகுதி பின்வரும் சந்தர்ப்பங்களின்போது தவணைதவறப்பட்டதாக கருதுகின்றது:

பிணையங்கள் தேறுதல் (ஏதேனும் வைக்கப்பட்டிருப்பின்) போன்ற நடவடிக்கைகளுக்கு தொகுதி மூலமான உதவியின்றி அதன் கடப்பாடுகளை தொகுதிக்கு முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடன்பெறுநர் இயலாதிருத்தல் அல்லது

கடன்பெறுநர், அவரின் ஒப்பந்த கொடுப்பனவுகள் மீது 90 நாட்கள் கடந்த கால நிலுவையினைக் கொண்டிருத்தல்.

மேலும், குறித்த முதலீட்டுக்கு வெளிவாரி கடன்தரப்படுத்தல் "தவணை தவறுதல்" இனை குறித்தொதுக்குகின்ற போது நிதியியல் முதலீடுகளை தொகுதி படிமுறை 3 இன் கீழ் வகைப்படுத்துகின்றது.

### 2.5.3 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரங்கள் 325 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 26 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.5.3.1 பெறுமானத்தேய்வு

"பெறுமானத்தேய்வு" பற்றிய விபரங்கள் 325 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 26 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.5.3.2 கடன்பெறுதல் செலவுகள்

"கடன்பெறுதல் செலவுகள்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம்- இகநி 23 இற்கு அமைய சொத்தின் செலவின் பாகமாக தகமைபெறுகின்ற சொத்தின் கையகப்படுத்தல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்திசெய்தல் போன்றவற்றிற்கு நேரடியாக சாட்டத்தக்க கடன்பெறுதல் செலவுகளை தொகுதி மூலதனமாக்குகின்றது. தகமைபெறுகின்ற சொத்து என்பது அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு ஆயத்தமாகுவதற்கு கணிசமான காலப்பகுதியினை எடுத்துக்கொள்கின்ற சொத்தொன்றாகும். ஏனைய கடன்பெறுதல் செலவுகள், அவை நிகழுகின்ற காலப்பகுதியில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. வங்கியும் தொகுதியும் அறிக்கையிடும் காலப்பகுதிக்காக ஏதேனும் கடன்பெறுதல் செலவினை மூலதனமாக்கவில்லை

### 2.5.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துகள் பற்றிய விபரங்கள் 334 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 29 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.5 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் சேதஇழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்று சேதமிழப்புச் செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளதா என்பதை தொகுதி கணிக்கும். சாத்தியமொன்று காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு சேதஇழப்பு பரிசோதனை தேவைப்படுமிடத்து, சொத்தில் மீளப்பெறப்பட வேண்டிய தொகையை தொகுதி மதிப்பிடும். சொத்தொன்றின் கொண்டுசெல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறவேண்டிய தொகையை விஞ்சுமிடத்து சொத்தானது சேதஇழந்துள்ளதாக கருதப்படுவதுடன், அதன் மீளப்பெறப்பட வேண்டிய தொகையில் பதிவு செய்யப்படுகின்றது.

### 2.5.6 ஓய்வு நலக் கடப்பாடு

#### 2.5.6.1 வரையறைசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள்

##### 2.5.6.1.1 ஊழியர் ஓயவூதிய நிதியம் - 1

1995 ஒக்டோபர் 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் இணைந்த நிரந்தர பணியாளர்களுக்கு வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டமொன்றை வங்கி செயற்படுத்துகின்றது. இதில் வேறாக நிர்வகிக்கப்படும் நிதியமொன்றிற்கு பங்களிப்புச்செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டம் I இன் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் செலவானது, எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு கணிப்பீட்டு பெறுமான முறையைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. கணிக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் நட்டங்கள், அவற்றுக்குரிய காலப்பகுதியில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

வரையறைசெய்யப்பட்ட நன்மை சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும், கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட

சொத்துகளின் உண்மைப் பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் பெறப்பட்ட வரையறைசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப்பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2021 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2021.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

| | |
|---|---|
| வட்டி/கழிவு வீதம் | ஆண்டுக்கு 11.50 % |
| வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு | ஆண்டுக்கு 5.50 % |
| சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு | ஆண்டுக்கு 8.00% |

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஓய்வூதியத் நிதியம் ஐ இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினாலும் வங்கியின் பணிப்பாளர் சபையினாலும் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வுசெய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் I பற்றிய விபரங்கள் 347 தொடக்கம் 350 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38. (அ) 1 இல் தரப்பட்டுள்ளன.

நிதியிடப்படாத கடந்தகால சேவைச் செலவானது கணிப்பு மதிப்பீடு முடிவடைந்தவுடன் ஏனைய அனைத்தையும் வருமானத்தின் மீது இனங்காணப்படுகின்றது. 2021 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பு மதிப்பீட்டு ரூ. 4,921.4 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவை செலவுப் பற்றாக்குறையைக் காட்டியது. இது முழுமையாக வழங்கப்பட்டிருந்தது. நிதியிடப்படாத ஓய்வூதியப் பொறுப்பின் விபரங்கள் 347 தொடக்கம் 350 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38(அ).1. இல் தரப்பட்டுள்ளன.

#### 2.5.6.1.2 ஊழிர் ஓய்வூதிய நிதியம் - II

1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வங்கியில் இணைந்த நிரந்தர அலுவலர்களுக்காக வங்கி வரையறைசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒன்றினைத் தாபித்து தொழிற்படுத்துகின்றது. வேறாக நிர்வகிக்கப்படும் நிதியம் ஒன்றிற்கு அங்கத்தவர்களின் மொத்த சம்பளத்தில் 12 சதவீதத்தினை மாதாந்தம் பங்களிப்பதற்கு இது வங்கியினை தேவைப்படுத்துகின்றது. வரையறைசெய்யப்பட்ட நல ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குவதற்கான செலவானது எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு கணிப்பு மதிபபீட்டு முறையினைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. கணிப்பீட்டு பெறுகைகளும் நட்டங்களும் அவை நிகழும் ஆண்டுக் காலத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

வரையறைசெய்யப்பட்ட நன்மைச் சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும் கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் சீர்மதிப்பு பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் வரையறைசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது கணிப்பீட்டு இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

| 3 (1) (ii) | பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமித்து இந்த கட்டளைகளின் கட்டளை இலக்கம் 3 (5) இற்கு அமைவாக தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை வரையறை செய்து அங்கீகரிக்கும் | இணங்கப்பட்டுள்ளது. கட்டளையின் பிரிவு 3(9) (ii) உடன் இணைத்து வாசிக்கவும்<br>1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 11(1) மற்றும் அதன் திருத்தச் சட்டமாகிய 1995 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தலைவர் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுவார். தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 21 குறிப்பிடுவதன் படி பணிப்பாளர் சபை பொருத்தமான, தகுந்த நபர் ஒருவரை வங்கியின் பொது முகாமையாளராக நியமிக்க அவரே வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் தொழிற்படுவார். தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டளையின் பிரிவு 3(5) இற்கு அமைவாக, தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பொறுப்புகள் வேறுபட்டு காணப்படுவதுடன் அவை வரையறுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |
| 3 (1) (iii) | பணிப்பாளர் சபையானது கிரமமான முறையில் ஒன்று கூடுவதுடன் ஏறத்தாழ ஒரு மாத இடைவெளியில் ஒவ்வொரு ஆண்டும் பணிப்பாளர் சபை குறைந்தபட்சம் 12 தடவைகள் ஒன்று கூடி இருத்தல் வேண்டும். அத்தகைய கிரமமான பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு சமூகம் அளிப்பதற்கு தகமை வாய்ந்த இயக்குனர்களில் பெரும்பான்மையானவர்களது நேரடியான ஆரோக்கியமான பங்குபற்றலுடன் கூட்டம் இடம் பெற்றிருக்க வேண்டும். இயலுமான வரையில் எழுத்து மூலமான சுற்றுநிருப தீர்மானங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>ஒவ்வொரு மாதமும் பணிப்பாளர்களுடைய ஆரோக்கியமான பங்குபற்றுதலுடன் கிரமமான சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு சமுகம் அளித்தவர்கள் தொடர்பான விபரங்கள் பக்கம் 195 இல் கூட்டங்களின் எண்ணிக்கையுடன் வழங்கப்பட்டுள்ளது. வங்கியானது எழுத்து மூலமான சுற்றுநிருபம் மூலம் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை இயன்றளவு குறைப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (iv) | வணிகத்தின் மேம்படுத்தல் மற்றும் இடர்களின் முகாமைத்துவம் ஆகியன தொடர்பாக வழக்கமான சபைக் கூட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் தமது வாதங்கள் மற்றும் முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் காணப்படுவதை சபை உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>ஒரு வாரம் முன்பதாகவே அடுத்து வரும் கூட்டத்தில் இடம்பெறவுள்ள உப நிகழ்ச்சிநிரல் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் மற்றும் பணிப்பாளர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வேண்டிய வங்கியின் வியாபார முன்மொழிவுகளை தலைவருக்கு சமர்ப்பிப்பார்கள். |
| 3 (1) (v) | வழக்கமான கூட்டங்களுக்கு அனைத்து இயக்குனர்களும் பங்களிக்கும் வகையில் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்பதாகவே அறிவித்தல் வழங்கப்படுவதனை பணிப்பாளர் சபை செயன்முறைகள் உறுதி செய்தல் வேண்டும்.<br>பணிப்பாளர் சபையின் ஏனைய கூட்டங்களுக்கு நியாயமான அறிவித்தல் வழங்கப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>கூட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கலான தனது கலந்துரையாடல்களில் பங்குபற்ற இருக்கும் மற்றும் அவசரமான முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கும் பணிப்பாளர்களுக்கு வசதி அளிக்கும் வகையில் அவசர சுற்றுநிருபம் தவிர்ந்த ஏனையவை குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்பதாகவே இலத்திரனியல் சுற்றுநிருபம் செய்யப்படும்.<br>ஒரு சிறப்புக் கூட்டத்தை திட்டமிடுவதற்கு முன் நியாயமான அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அனைத்து பணிப்பாளர்களின் அனுமதி பெறப்படும் மற்றும் ஏதேனும் அவசர முன்மொழிவுகளும் சமர்பிக்கப்படும். |
| 3 (1) (vi) | சமீபத்தில் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கூட்டங்களில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு அளவான கூட்டங்களுக்கு சமுகமளிக்காத பணிப்பாளர்கள் அல்லது சமீபத்தில் இடம்பெற்ற மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமூகமளிக்காத இயக்குனர்கள் பதவி விலக்கப்படுவதனை பணிப்பாளர் சபை செயன்முறைகள் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>2007 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வங்கி சட்ட கட்டளைகளுக்கு அமைவாக பணிப்பாளர்களது வருகையானது மதிப்பீடு செய்யப்படும். பணிப்பாளர்களது வருகை தொடர்பான விபரங்கள் பக்கம் 195 இல் தரப்பட்டுள்ளது.<br>எந்த ஒரு பணிப்பாளர்களும் கடந்த 12 மாதங்கள் அல்லது மூன்று தொடர்ச்சியாக கூட்டங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு சமூகமளிக்க தவறவில்லை. |
| 3 (1) (vii) | 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டத்தின் நாற்பத்து மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்தி செய்கின்ற வகையில் கம்பனி செயலாளர் ஒருவரை பணிப்பாளர் சபை நியமித்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை செயலாளர் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தின் 43 ஆம் பிரிவுக்கு இணக்கமான வகையில் ஒரு சட்டத்தரணியாக இருக்கின்றார். பணிப்பாளர் சபையின் செயலாளர் பிரதானமாக பணிப்பாளர் சபை தொடர்பான ஆவண வேலைகளை கையாள்வதுடன் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளுடனும் தொடர்புபடுகின்றார். |
| 3 (1) (viii) | பணிப்பாளர் சபையின் செயன்முறைகள் யாவும் பிரயோகிக்கப்பட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின்படி பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் கம்பனி செயலாளரது சேவைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான அணுகை அனைத்து பணியாளர்களுக்கும் காணப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபை செயன்முறை இடம்பெறுவதை உறுதி செய்யும் பொறுப்பினை கொண்ட செயலாளரிடம் இருந்து தேவையான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான அனுமதி அனைத்து பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. |
| 3 (1) (ix) | கம்பனி செயலாளர் பணிப்பாளர் சபை கூட்டத்தின் அறிக்கைகளை பேணுவதுடன் கூட்ட அறிக்கைகள் எந்த ஒரு பணிப்பாளரும் நியாயமான முன்னறிவித்தலின் பெயரில் பார்வையிடுவதற்கு அனுமதி காணப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கியின் செயலாளர் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகளை சபைக்கு சுற்றுநிருபம் செய்கின்றார் மேலும் முடிவடைந்த கூட்ட சுற்றுநிருபம் தலைரினால் உறுதி செய்யப்பட்ட பின் சபை பணிப்பாளர்களுக்கு தகவல் முறைமை மூலம் விநியோகிகப்படுகிறது.<br>அடுத்து வரும் கூட்டத்தில் அந்த அறிக்கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. |
| 3 (1) (x) | பணிப்பாளர் சபையானது தமது கடமைகளை செயற்படுத்தும் போது போதுமான கவனம் மற்றும் பாதுகாப்புடன் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்கு அவசியமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் போதுமான தகவல்களுடன் கூட்ட அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும்.<br>மேலும் ஒழுங்குவிதி அமைப்புகள் மற்றும் மேற்பார்வை அமைப்புகள் சபையின் கலந்துரையாடல் மற்றும் கூட்டம் தொடர்பான விடயங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு அடிப்படையாக கூட்ட அறிக்கைகள் காணப்படுதல் வேண்டும். ஆகவே பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையானது பின்வரும் விடயங்களை தெளிவாக பதிவு செய்தல் வேண்டும்:<br>(a) பணிப்பாளர் சபை தனது கலந்துரையாட ல்களின் போது பயன்படுத்திய தகவல்கள் மற்றும் தரவு முதலியவற்றின் சுருக்கம் | இணங்கப்பட்டுள்ளது.<br>வழங்கப்பட்டுள்ள மூல பிரமாணங்களுக்கு இணக்கமான முறையில் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன. |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | (b) சமீபத்தில் கருத்தில் எடுக்கப்பட்ட விடயங்கள்<br>(c) பணிப்பாளர் சபை தமது கடமைகளை செயன்முறைப்படுத்தும் போது, போதுமான கவனம் மற்றும் பாதுகாப்புடன் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்யும் வகையில் விடயங்களைக் கண்டுபிடிக்கும் கலந்துரையாடல் தொடர்பான ஏற்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட கருத்துக்கள்<br>(d) சபையின் தந்திரோபாயங்கள் கொள்கைகள் ஆகியன அமைப்புக்குப் பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறை-களுக்கு இணக்கமாகவும் காணப்பட்டமை உறுதி செய்யும் நிர்வாக உறுப்பினர்களது சுருக்கவுரை மற்றும் உறுதிப்படுத்தல்கள்<br>(e) பின்பற்றப்பட்ட இடர்முகாமைத்துவ நடைமுறைகளில் ஒரு மேலோட்டமான பார்வை என்ற வகையில் பணிப்பாளர் சபையின் இடர்கள் தொடர்பான அறிவு மற்றும் புரிந்துணர்வு, மற்றும்<br>(f) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபை முடிவுகள் | |
| 3 (1) (xi) | அவசியமான சந்தர்ப்பங்களில் நியாயமான வேண்டுகோளின் அடிப்படையில் பணிப்பாளர்கள் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் அதற்கான செலவினங்-களை வாங்கி பொறுப்பேற்கவும் அடிப்படையான பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட படிமுறை காணப்படுதல் வேண்டும்.<br>வங்கிக்கான தமது கடமை தொடர்பாக ஒரு பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களுக்கு பொருத்தமான தொழில்சார் சுயாதீன ஆலோசனை மூலம் உதவி அளிப்பதற்கான தனியான தீர்மானத்தினை பணிப்பாளர் சபை மேற்கொள்ள வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 27 கூறுகிறது, சபை தனது கடமைகளை நிறைவேற்ற, தேவைப்படும் போது சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையைப் பெறமுடியும். அவசியமான சூழ்நிலைகளில் வங்கியின் செலவில் இயக்குனர்கள் தமக்கு அவசியமான சுயாதீன தொழில்சார் ஆலோசனைகளை நியாயமான கோரிக்கையின் பேரில் பெற்றுக் கொள்வதற்கான பணிப்பாளர் சபை பட்டயம் நடைமுறையில் உள்ளது. |
| 3 (1) (xii) | பணிப்பாளர்கள் தமது, ஏனைய நிறுவனங்கள் மீதான அல்லது உறவுமுறை தரப்பினருடனான ஈடுபாடுகளில் அக்கறை முரண்பாடுகள் அல்லது அக்கறை முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய தோற்றப்பாடுகள் ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>நியமனத்தின் போது மற்றும் வருடாந்த அடிப்படையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது, தமது அக்கறைகள் தொடர்பாக பணிப்பாளர்கள் பிரகடனங்களை மேற்கொள்கின்றார்கள். அக்கறை முரண்பாட்டு நிலைமை ஒன்று காணப்படும் போது அத்தகைய சூழ்நிலைகளை பணிப்பாளர்கள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல், தமது கருத்துக்களை வழங்குதல், அங்கீகரித்தல் ஆகிய நடவடிக்கைகளிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். அத்துடன், அத்தகையோர் பணிப்பாளர் அத்தகைய சூழ்நிலைகளில் கூட்ட வருகை உரிமையில் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. |
| 3 (1) (xiii) | வங்கியினுடைய திசைமுகப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு ஆகியன நிலைத்த தன்மையில் தமது அதிகாரத்தின் கீழ் தொழிற்படுத்த படுவதனை உறுதி செய்யும் வகையில் பணிப்பாளர் சபை தமது தீர்மானத்துக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக முறைசார்ந்த அட்டவணை ஒன்றினை பெறுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட வலுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பட்டயம் விவரிக்கிறது. வங்கியானது தீர்க்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் ஆண்டுக் காலப்பகுதியில் போது அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை. |
| 3 (1) (xiv) | வங்கியானது தனது கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத போது அல்லது முறிவடையும் நிலையை அடையும் போது அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கான கொடுப்பனவுகளை நிறுத்தும் போது அல்லது அத்தகைய சாத்தியத்தன்மை ஒன்று ஏற்படும் போது பணிப்பாளர் சபை அல்லது அது தொடர்பாக பங்கு ஏதேனும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்பதாகவே இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்கு பொறுப்பாக உள்ள பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கி தீர்ப்பனவு இயலுமையைக் கொண்டுள்ளதுடன், அத்தகை சூழ்நிலைகள் எவையும் ஆண்டுக்காலப்பகுதியில் ஏற்பட்டிருக்கவில்லை. |
| 3 (1) (xv) | மூலதன போதுமை விகிதம் மற்றும் ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடிப்படையில் சபையின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான வகையில் அனைத்து மட்டங்களிலும் வங்கி போதுமான மூலதனமாக்கலை மேற்கொள்வது பணிப்பாளர் சபையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் வரையறுக்கப்பட்ட இடர் ஏற்பு எல்லையினுள் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணக்கமான வகையில் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மூலதன போதுகை தொடர்பான விடயங்களை பணிப்பாளர் சபை கண்காணிக்கிறது.<br>பாசல் III - வங்கிச்சட்டத்தின் நியமம் 2016 இல 01, தூண் 111 இற்கு கீழான வெளிப்படுத்தல்கள் பக்கம் 454 முதல் பக்கம் 466 வரை பார்க்கவும். |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (xvi) | இந்த கட்டளைகளின் மூன்றாவது கட்டளைக்கு அமைவாக வங்கியினுடைய ஆண்டு அறிக்கை மற்றும் வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கை ஆகியவற்றை பணிப்பாளர் சபை பிரசுரித்தல் வேண்டும் | இணங்கப்பட்டுள்ளது<br>இந்த அறிக்கையானது வருடாந்த அறிக்கையில் பக்கம் 179 - 211 இல் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை அறிக்கையின் ஒரு பகுதியாக அமைகிறது. |
| 3 (1) (xvii) | வருடாந்திர அடிப்படையில் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் சுயமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பான பதிவுகள் பேணப்படுவதற்கான முறை ஒன்றினை பணிப்பாளர் சபை பின்பற்றுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியானது வருடாந்த அடிப்படையில் பணிப்பாளர்கள் மேற்கொள்ளப்படும் சுய மீளாய்வுப் படிமுறை ஒன்றினை பின்பற்றுகிறது. இதனை உறுதி செய்யும் மதிப்பீடு ஒன்றினை சபை செயலாளர் கொண்டுள்ளார் |
| 3 (2) | **சபையின் உள்ளடக்கம்** | |
| 3 (2) (i) | பணிப்பாளர் சபையில் உள்ள பணிப்பாளர்கள் எண்ணிக்கையானது 7க்கு குறையாத வகையிலும் 13க்கு அதிகரிக்காத வகையிலும் காணப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 8(1) இன் படி தலைவர் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை ஏழு பணிப்பாளர்களைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர்கள் பற்றிய தகவல்களை இவ்வறிக்கையின் பக்கம் 180 முதல் 183 வரை தரப்பட்டுள்ளது. |
| 3 (2) (ii) | a. பிரதம நிறைவேற்று அதிகாரியாகவுள்ள பணிப்பாளர் ஏனைய இயக்குனர்களது பதவிக்காலம் 9 ஆண்டுகளை விட அதிகரித்தல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>தற்போதுள்ள எந்த ஒரு பணிப்பாளரும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கவில்லை. பதவிக்காலம் இந்த ஆண்டறிக்கையில் பக்கம் 195 முதல் 196 இல் சபையின் பதவிக்காலம் வழங்கப்பட்டுள்ளன. |
| | b. 1 ஜனவரி 2008 அன்று 9 வருடங்களை பூர்த்தி செய்த இயக்குனர் ஒருவர் அல்லது 31 டிசம்பர் 2008 க்கு முன்னர் அத்தகைய காலத்தினைப் பூர்த்தி செய்யும் இயக்குனர் ஒருவர் 1 ஜனவரி 2009 க்குப் பின்னர் ஆகக் கூடுதலாக மூன்று ஆண்டுகள் மாத்திரமே பதவியில் நீடிக்க முடியும் | தற்போதுள்ள எந்த ஒரு பணிப்பாளரும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கவில்லை. |
| 3 (2) (iii) | நிறைவேற்று அதிகாரமுள்ள இயக்குனர்களின் எண்ணிக்கையானது பணிப்பாளர் சபையில் உள்ள மொத்த இயக்குனர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றினை விட அதிகரிக்கவில்லை என்னும் நிபந்தனையை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வங்கி ஊழியர் ஒருவர் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட, தெரிவு செய்யப்பட அல்லது பதவி வழங்கப்பட (இனி வரும் பகுதிகளில் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர் என குறிப்பிடப்படும்) முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள இயக்குனர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தொழிற்படுவார். | பொருத்தமற்றது<br>நிறைவேற்று அதிகாரமுள்ள இயக்குனர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இன் 70 ஆம் இலக்கம் மற்றும் திருத்தங்கள் உள்ளடக்கவில்லை. |
| 3 (2) (iv) | வங்கியானது குறைந்தபட்சம் மூன்று அல்லது மொத்த பணிப்பாளர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று, இதில் அதிகமான எண்ணிக்கையில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். | இணங்கப்பட்டுள்ளது<br>ஆண்டறிக்கையின் பக்கம் 180 முதல் 183 வரை உள்ள பக்கங்களில் பணிப்பாளர் அதிகார விவரங்களை பார்க்கவும். |
| 3 (2) (v) | சுயாதீனமான இயக்குனர் ஒருவருக்கு பதிலாக ஒரு பதில் இயக்குனர் நியமிக்கப்படும் பட்சத்தில் அந்த பதிலாக நியமிக்கப்பட்டவர் சுயாதீன இயக்குனருக்கு இருக்க வேண்டிய மூல பிரமாணங்களை திருப்தி செய்திருத்தல் வேண்டும் | பொருத்தமற்றது<br>எந்தவொரு சுயாதீன பணிப்பாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்த மாற்று பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தில் அதற்கான எந்த இடமும் அளிக்கப்படவில்லை. |
| 3 (2) (vi) | நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் சீரான பெறுபேற்றுப் பதிவுகள் மற்றும் தந்திரோபாயம், பெறுபேறுகள், வளங்கள் ஆகியன தொடர்பாக சுயாதீனமான தீர்மானங்களை எடுக்க கூடிய வகையில் அவசியமான திறன்கள் மற்றும் அனுபவங்களை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர்களின் சுயவிவரங்கள் உட்பட தேவையான தகவல்கள் பக்கம் 180 முதல் 183 வரை குறிப்பிடப்பட்டுள்ளன. |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (2) (vii) | பணிப்பாளர் சபை கூட்டம் ஒன்றுக்கு சமுகம் அளிக்கவேண்டிய ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான பணிப்பாளர்கள் சமூகமளித்து இருந்தாலும் கூட சமூகமளித்து இருக்கும் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற இருக்கும் பட்சத்தில் பணிப்பாளர் சபை கூட்டம் முறையாக கொண்டு நடத்தப்பட முடியாது | இணங்கப்பட்டுள்ளது<br>தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி கூட்டம் ஒன்றுக்கான குறைந்தபட்ச வரவு எண்ணிக்கை 4. இது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் அதிகமாக உள்ளது. வங்கியின் அனைத்து 7 பணிப்பாளர்களுமே நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் ஆவர். |
| 3 (2) (viii) | நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்கள் வங்கியின் பணிப்பாளர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு வணிக தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டப்படும். | இணங்கப்பட்டுள்ளது<br>நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்கள் வங்கியின் பணிப்பாளர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு வணிக தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டப்படும். தலைவர், நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், சுயாதீன மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்களின் பெயர்கள் உட்பட பணிப்பாளர்களின் வகையின் அடிப்படையில் சபையின் அமைப்பு பக்கம் 180 முதல் 183 வரை கொடுக்கப்பட்டுள்ளது. |
| 3 (2) (ix) | பணிப்பாளர் சபைக்கு புதிய பணிப்பாளர் நியமிப்பதற்கான முறை சார்ந்த வெளிப்படையான செயன்முறை காணப்படுதல் வேண்டும். மேலும் பணிப்பாளர் சபைக்கான நியமனத்தின் தொடர்ச்சித் தன்மைக்கான வழிமுறைகளும் காணப்படுதல் வேண்டும். | தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 8 (1) (அ) இன் படி அனைத்து பணிப்பாளர் நியமனங்களும் அமைச்சரினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி ஐந்து பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.ஒரு பணிப்பாளர் திறைசேரியின் செயலாளராக இருப்பார் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்டவர் மற்ற பணிப்பாளர் தபால் மா அதிபர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்டவராக இருக்க வேண்டும். |
| 3 (2) (x) | வழக்கமான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நியமிக்கப்படும் ஒவ்வொரு பணிப்பாளர்களும் அவர்களது நியமனத்தின் பின்னர் வரும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வைத்து பங்குதாரர்களின் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். | தொடர்பற்றது.<br>தொடர்புபட்ட அமைச்சரினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதனால் இப்பகுதி அவசியமற்றது. |
| 3 (2) (xi) | பணிப்பாளர் ஒருவர் பதவி விலகினால் அல்லது பதவி விலக்கப்பட்டால்<br>a. பணிப்பாளர் சபை குறித்த பணிப்பாளர் பதவி விலகி இருக்கிறார் அல்லது அதுவும் பதலி விலக்கப்பட்டு இருக்கிறார் என்பதனை அதற்குரிய காரணங்களுடன் குறிப்பிட்டு பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய விடயங்கள் காணப்படுகின்றனவா இல்லையா என்பது தொடர்பான ஒரு கூற்றினை வழங்குதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>ஒரே ஒரு பங்குதாரராக உள்ள இலங்கை அரசாங்கம் தொடர்புபட்ட, வங்கிக்கான அமைச்சர் ஊடாக பணிப்பாளர்களது நியமனங்கள் மற்றும் பதவி விலக்கல்களை மேற்கொள்கிறது. ஏதேனும் பதவி விலகல்களும் குறித்த அமைச்சரினாலே பரிந்துரைக்கப்படும். இலங்கை மத்திய வங்கிக்கு பதவி விலகல் தொடர்பில் அறிவிக்கப்படும். |
| | b. பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் தொடர்பிலான அறிக்கையினை வெளியிடல் | ஒரே ஒரு பங்குதாரராக இலங்கை அரசாங்கம் உள்ளது மற்றும் அமைச்சரினூடாக நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் தவிர்ந்த ஏனைய ஐந்து அங்கத்தவர் கொண்ட பணிப்பாளர் சபை தொடர்பிலான மாற்றம் இடம்பெறும் |
| 3 (2) (xii) | மற்றொரு வங்கியானது இவ்வங்கியின் சேய் கம்பனியாகவோ அல்லது துணைக் கம்பனியாகவோ இல்லாதவிடத்து இயக்குனர் அல்லது ஊழியர் ஒருவர் மற்றொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தேர்தலில் தெரிவு செய்யப்படவோ அல்லது பதவி வழங்கப்படவோ முடியாது. | 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய சேமிப்பு வங்கி தனது பங்கு உரிமையினை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் வங்கியின் ஊழியராக உள்ள சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமித்துள்ளது தவிர வேறு எந்த பணிப்பாளர் மற்றும் ஊழியர் ஏனைய வங்கிகளில் பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை. |
| 3 (3) | **பணிப்பாளர்களது தகமை மற்றும் பொருத்தமான தன்மையினை மதிப்பீடு செய்வதற்கான மூலம் பிரமாணங்கள்** | |
| 3 (3) (i) (a) and (b) | பணிப்பாளராக பணியாற்றும் எந்த ஒரு நபரது வயதும் 70 வருடங்களுக்கு மேற்படுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>70 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு பணிப்பாளரும் காணப்படவில்லை |
| 3 (3) (ii) | எந்த ஒரு நபரும் துணை கம்பனிகள் மற்றும் சேய் கம்பனிகள் உள்ளடங்களாக 20க்கும் மேற்பட்ட உரிமங்கள் அல்லது நிறுவனங்களுக்கு பணிப்பாளராகப் பணியாற்றலாகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>சேய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள், உரிமங்கள் அல்லது நிறுவனங்களுக்கு எவரொருவரும் பணிப்பாளராக கடமையாற்றவில்லை. |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (4) | **பணிப்பாளர் சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்** | |
| 3 (4) (i) | நடைமுறையிலுள்ள பகிர்ந்தளித்தல் ஒழுங்குமுறைகளை பணிப்பாளர்கள் கவனமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும், | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர் சபை குறித்த கால இடைவெளிகளில் அதிகார பகிர்ந்தளிப்பு தொடர்பான விடயங்களில் ஆய்வுக்கு உட்படுத்தி ஏற்றுக்கொள்வதுடன் பணிப்பாளர்கள் தமது கடமைகளை சரியாக நிறைவேற்றி கொள்வதுடன் அதிகாரப் பரம்பல் தொடர்பான விடயங்களிலும் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்கின்றனர். |
| 3 (4) (ii) | பணிப்பாளர் சபை தமது கடமைகளை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதற்கு குந்தகமாக அல்லது பாதகம் விளைவிக்கக் கூடிய வகையில் எந்த ஒரு விடயத்தையும் சபை உபகுழுக்களுக்கோ, பிரதம நிறைவேற்று அதிகாரிக்கோ, நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களுக்கோ அல்லது பிரதம முகாமைத்துவ நபர்களுக்கோ பகிர்ந்தளிக்க முடியாது. | |
| 3 (4) (iii) | பணிப்பாளர் சபை பகிர்ந்தளித்தல் போன்ற நடைமுறைகளை ஓர் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்வதுடன் அவை வங்கியின் தேவைக்குப் பொருத்தமானவையாக இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும். | |
| 3 (5) | **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி** | |
| 3 (5) (i) | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது வகிபாகம் தனி ஒருவரால் பின்பற்றப்படுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது.<br>தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகிய வகிபாகங்கள் இரு வேறுபட்ட நபர்களால் கையாளப்படுகின்றன. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பொது முகாமையாளரது பொறுப்புகளை வரையறை செய்வதற்கான பணிப்பாளர் சபை பட்டயம் காணப்படுகிறது. |
| 3 (5) (ii) | தலைவர் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளராகவும் அதே வேளை சுயாதீனமானவராக இருத்தல் மிகவும் விரும்பப்படுகிறது. தலைவர் சுயாதீனமான பணிப்பாளராக உள்ள இல்லாத போதும் அவசியமான விடயங்களை ஆவணப்படுத்தி பணிப்பாளர் சபை சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரை சிரேஷ்ட பணிப்பாளராக நியமித்தல் வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் நியமனம் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். | வங்கியின் தலைவர் ஒரு சுயதீனமற்ற நிர்வாகமற்ற பணிப்பாளராக உள்ளார்.<br>சுதந்திர நிர்வாகமற்ற பணிப்பாளர் திரு எரங்க ஜெயவர்தன சிரேஸ்ட பணிப்பாளராக வங்கிச்சட்ட கட்டளைக்கு அமைவாக நியமிக்கப்பட்டார். |
| 3 (5) (iii) | பணிப்பாளர் சபை என்று தமது கூட்டாண்மை அறிக்கையிலே தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்றி அதிகாரி ஆகியோரது அடையாளங்கள் மற்றும் அவர்களுக்கு இடையேயான உறவு முறைகளின் இயல்பு பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோரின் அடையாளத்துடன் இணங்குவது ஆண்டறிக்கையில் பக்கம் 201 இல் வெளியிடப்பட்டுள்ளது.<br>தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கிடையான நிதி வணிக குடும்ப மற்றும் பிற பொருள் தொடர்பான உறவுகள் எதுவும் இல்லை என்பதை சபை அறிந்திருக்கிறது. மேலும் மற்ற சபை உறுப்பினர்களுக்கிடையேயும் எந்த உறவும் இல்லை. |
| 3 (5) (iv) | பணிப்பாளர் சபையின் தலைவர் பணிப்பாளர் சபை தலைமை வழங்கி பணிப்பாளர் சபை தமது பொறுப்புகளை பயனுறுதி வாய்ந்த வகையில் நிவர்த்தி செய்வதையும் பணிப்பாளர் சபை அனைத்து அவசியமான விடயங்களில் உரிய காலப்பகுதியில் பொருத்தமாக கலந்துரையாடப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவர் பணிப்பாளர் சபைக்கு தலைமை வகிப்பதுடன் பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் யாவும் உரிய வகையில் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்கிறார். பணிப்பாளர் சபை அனைத்து முக்கிய விடயங்களை பொருத்தமான காலப்பகுதியில் கலந்துரையாடுகிறது. |
| 3 (5) (v) | தலைவரே பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி அங்கீகரிப்பதற்கான பொறுப்பினை கொண்டிருக்கிறார். | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவரின் வழிகாட்டலின் பெயரில் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கிறார். |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (5) (vi) | அனைத்து பணியாளர்களுக்கும் சபை கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. உரிய காலப்பகுதியில் பணிப்பாளர்கள் அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>சபைக் கூட்டங்களில் எழும் விடயங்கள் குறித்து சபைக்கு போதுமான விளக்கமும் தகவலும் அளிக்கப்படுவதை தலைவர் உறுதி செய்கிறார்.<br>அதை உறுதிப்படுத்த பின்வரும் நடைமுறைகள் உள்ளன.<br>• சபைக் கூட்டங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு கூட்டப்படுவதுடன், அனைத்து பணிப்பாளர்களும் அவசியமான விடயங்களை மீளாய்வு செய்வதற்கு மற்றும் மேலதிக தகவல்களை கோருவதற்கும் கூட்டங்களின் பின்னர் அவசியமான பின்தொடரலை மேற்கொள்வதற்கும் அவசியமாக ஒவ்வொரு கூட்டங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு வாரம் முன்பதாக இலத்திரன் வழி மூலம் கூட்ட ஆவணங்கள் சுற்றுநிருபம் செய்யப்படுகின்றன<br>• தேவைப்படும் போது பிரதம முகாமைத்துவ நபர்களால் விடையங்கள் தெளிவுபடுத்தல். |
| 3 (5) (vii) | அனைத்து பணிப்பாளர்களும் பணிப்பாளர் சபை விடயங்களில் ஆரோக்கியமான பங்களிப்பினை மேற்கொள்வதுடன் வங்கியின் சிறந்த அக்கறையுடன் செயற்படுவதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவரின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பட்டியல் சபை பட்டையத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. |
| 3 (5) (viii) | தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுடைய பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினை உறுதி செய்வதுடன் நிறைவேற்று அதிகாரமுள்ள மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களிடையே இந்த உறவு முறை ஒன்று காணப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>முழுமையான பணிப்பாளர் சபையும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. |
| 3 (5) (ix) | பிரதம முகாமைத்துவ நபர்கள் மற்றும் நிறைவேற்று உறுப்பினர்கள் தொடர்பான நேரடியான மேற்பார்வை விடயங்களில் தலைவர் ஈடுபடுதல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பதவி நிலையில் செயற்படுவதுடன் பிரதம முகாமைத்துவ நபர்களது செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை. |
| 3 (5) (x) | பங்குதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலை மேற்கொள்வதற்கான அவசியமான படிமுறைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பங்குதாரர்கள் கருத்துக்கள் பணிப்பாளர் சபைக்கு தொடர்பாடல் செய்யப்படுவதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கி பங்குதாரருடன் அதாவது இலங்கை அரசு, பயனுள்ள தகவல்தொடர்புகளை வைத்திருக்கிறது.<br>தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக பதவி வழிப்பணிப்பாளர் நியமிக்கப்பட்டு, சபை மற்றும் பங்குதாரர்களுக்கு இடையிலான தகவல்தொடர்பு ஊடகமாக செயல்படுகிறார். |
| 3 (5) (xi) | வங்கி ஊழியர்கள் மற்றும் வணிகம் தொடர்பான விடயங்களில் நிறைவேற்றும் பொறுப்பில் உச்ச அதிகாரத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளார் | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் அன்றாட நடவடிக்கைகள் பொது முகாமையாளர் அல்லது தலைமை நிர்வாக அதிகாரிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. சபையானது பொது முகாமையாளர் அல்லது தலைமை நிர்வாக அதிகாரிக்கு உள்ள அதிகாரங்களை குறிப்பாக விளக்குகிறது. |
| 3 (6) | **பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் குழுக்கள்** | |
| 3 (6) (i) | இந்த கட்டளைகளில் வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் இலக்கம் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) ஆகியவற்றுக்காக ஒவ்வொரு வங்கியும் குறைந்த பட்சம் நான்கு சபை குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கை இடவேண்டும். அனைத்து குழுக்களும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும் | இணங்கப்பட்டுள்ளது.<br>2007 வங்கிச்சட்டத்தின் வழிகாட்டி எண் 12 இன் படி நான்கு கட்டாய சபை குழுக்களை சபை நிறுவியுள்ளது (சபை கணக்காய்வுக் குழு, சபை மனிதவள ஊதியக்குழு, சபை நியமனக்குழு, சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக்குழு) அனைத்து குழுக்களும் குழுவின் தலைவர்கள் மூலம் நேரடியாக சபைக்கு அறிக்கை அளிக்கின்றன.<br>தேசிய சேமிப்பு வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் அனைத்து சபைக்குழுக்களுக்கும் செயலாளராக பணியாற்றுகிறார். அவர் கூட்டங்களை ஏற்பாடு செய்கிறார் மற்றும் குழுத்தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்ட அறிக்கை, பதிவுகள் போன்றவற்றை பராமரிக்கிறார்.<br>சபைக் குழுவின் அறிக்கைகள் பக்கம் 203 முதல் 211 வரை கொடுக்கப்பட்டுள்ளது |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (ii) | கணக்காய்வு குழு தொடர்பாகப் பின்வரும் விதிகள் பிரயோகிக்கத் தக்கதாகும். | |
| | a. குழுவின் தலைவர் கணக்கியல் மற்றும் கணக்காய்வு விடயங்களுடன் போதுமான தராதரங்கள் மற்றும் அனுபவத்தினை கொண்ட ஒரு சுயாதீனமான நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளராக இருத்தல் வேண்டும். | கணக்காய்வு குழுவின் தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர் ஆவார்.<br>சபையின் அனைத்து உறுப்பினர்களும் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாகவே நியமிக்கப்படுகின்றனர். சபை கணக்காய்வுக் குழுவின் தலைவர் தேவையான தகுதிகள் மற்றும் அனுபவத்தினை கொண்டுள்ளனர். குழுவின் தற்போதைய தலைவரின் சுயவிபரம் பக்கம் 181 இல் கொடுக்கப்பட்டுள்ளது. |
| | b. குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருத்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் எனவே குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவர் |
| | c. பின்வரும் விடயங்கள் தொடர்பாக குழு பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்<br>(i) பொருத்தமான சட்டங்களுக்கு அமைவான விதத்தில் கணக்காய்வு சேவையினை வழங்குவதற்கான வெளிவாரி கணக்காய்வாளர் நியமனம்<br>(ii) காலத்துக்கு காலம் மத்திய வங்கியினால் கணக்காய்வாளருக்கு வழங்கப்படும் வழிகாட்டல்களினை நடைமுறைப்படுத்தலைப் பிரயோகித்தல்.<br>(iii) கணக்கீட்டு நியமங்கள் அமுலாக்கல்<br>(iv) சேவைக் காலம், கணக்காய்வு கட்டணம், கணக்காய்வாளரது பதவி விலகல் அல்லது பதவி விலக்குதல் ஆகியன கணக்காய்வாளருடைய நியமனம் ஐந்து வருடத்துக்கும் ஏற்படாத வகையில் காணப்படுவதுடன் முன்னைய காலம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அதே கணக்காய்வு பங்காளர் மீண்டும் பணிக்கு அமர்த்தப் படவில்லை என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>குறிப்பு விதிமுறைகளுக்கு இணங்க சபை கணக்காய்வுக் குழு மற்றவற்றுடன் பின்வரும் பரிந்துரைகளை செய்கிறது.<br>• கணக்காய்வாளர்களுக்கான மத்திய வங்கியின் வழிகாட்டல்களை காலத்துக்கேற்ப அமுல்படுத்தல்<br>• பொருத்தமாக கணக்கீட்டு நியமங்களை அமுல்படுத்தல்<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதியே வங்கியின் வெளியக கணக்காய்வாளராக இருப்பதனால் சபைக்கு வெளியக கணக்காய்வார் தொடர்பில் எந்த பங்கும் இல்லை |
| | d. கணக்காய்வுக் குழுவானது வெளிவாரி கணக்காய்வாளரது சுயாதீனத் தன்மை, பக்கம் சாராத்தன்மை மற்றும் நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவான வகையில் கணக்காய்வு செயன்முறைகளில் பயனுறுதி வாய்ந்த தன்மை ஆகியவற்றில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதியே வெளிவாரி கணக்காய்வாளராக காணப்படுவதனால் சுயாதீனத் தன்மை மற்றும் சாரா தன்மை ஆகியன காணப்படுகின்றது. சபையின் கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வு செயன்முறையின் பயனுறுதி வாய்ந்த தன்மையானது அரசாங்க கணக்காய்வு மேலதிகாரியுடன் கலந்துரையாடப்படுகிறது. |
| | e. கணக்காய்வு தவிர்ந்த பிற சேவைகளை வழங்குவதற்காக வெளிவாரி கணக்காய்வாளர் பயன்படுத்துவதற்கான கொள்கை ஒன்று குழுவினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியே கணக்காய்வாளராக காணப்படுவதனால் இந்த விடயம் தொடர்பற்றதாகும். எனினும் சபையின் கணக்காய்வு குழு சட்டத்துக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றொரு கணக்காய்வாளரை நியமிக்கும் போது அந்த கணக்காய்வு நிறுவனத்தின் சுயாதீனத் தன்மை, பக்கம் சாரா தன்மை அல்லது பயனுறுதி தன்மை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும். 2021 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகம் மெசர்ஸ் ஏன்ஸ்ட் அன்ட் யங் இடமிருந்து ஆலோசனை பெற்றார் |
| | f. கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்பதாக குழுவானது கணக்காய்வின் இயல்பு மற்றும் பரப்பெல்லை ஆகிய விடயங்களை கலந்துரையாடி முடிவு செய்யும். | பொருத்தமற்றது<br>வெளிவாரி கணக்காய்வாளர் என்ற வகையில் கணக்காய்வின் பரப்பெல்லை மற்றும் விஸ்தீரணம் ஆகியன கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படும். |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | g. வங்கியின் நிதிக் கூற்றுக்கள், ஆண்டு அறிக்கைகள், கணக்குகள் வெளிப்படுத்தல்களுக்காக தயாரிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள், முக்கிய நிதி அறிக்கைகள், தீர்ப்புகள் ஆகியவற்றின் ஒழுங்குமுறை தன்மையை கண்காணிப்பதற்காக குழுவானது வங்கியின் நிதி சார்ந்த தகவல்களை மறு ஆய்வுக்கு உட்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது<br><br>கணக்காய்வு குழுவானது வெளிப்படுத்தல் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு நிதிக்கூற்றுக்கள் மட்டும் ஆண்டறிக்கை ஆகியன பிரசுரத்துக்குத் தயாரான நிலையில் மீளாய்வுக்கு உட்படுத்தியது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் உள்ளக கணக்காய்வு பிரிவானது முக்கிய நிதி அறிக்கைகள் தீர்ப்புகள் கணக்கிட்டு கொள்கை மாற்றங்கள் ஆகியன உள்ளடங்கலான வேறுபாடுகளை இனங்கண்டு கணக்காய்வு குழுவுக்கு தனியானதொரு அறிக்கையினை வழங்கும். |
| | h. இடைக்கால கணக்காய்வு மற்றும் இறுதி கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் ஒதுக்கங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக சபையின் கணக்காய்வு குழு கலந்துரையாடும். இத்தகைய குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதிகள் பங்குபெறுகிறார்கள். | இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வு ஆகியவற்றிடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகள் மற்றும் ஒதுக்கீடுகள் ஆகியவை தொடர்பாக கணக்காய்வாளர் கலந்துரையாடலுக்காக உள்ளடக்க விரும்பும் விடயங்கள் தொடர்பாகவும் குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது. |
| | i. குழுவானது கணக்காய்வாளரது முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதில்கள் ஆகியவற்றை மீளாய்வுக்கு உட்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>சபையின் கணக்காய்வு குழுவானது வெளிவாரி கணக்காய்வாளரது அறிக்கையினை நிதியியல் சட்டத்தின் பிரிவுகள் 14 (2) (இ) மற்றும் 13 (7) (அ) ஆகியவற்றுக்கு அமைவாக ஆய்வு செய்த முகாமைத்துவத்தின் பதில்களையும் கவனத்தில் எடுக்கிறது. |
| | j. வங்கியின் உள்ளகக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக பின்வரும் படிமுறைகளை குழு மேற்கொள்ளுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது. |
| | i. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்கள் ஆகியவற்றின் போதுமான தன்மையை மீளாய்வுக்கு உட்படுத்தி, திணைக்களம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை கொண்டுள்ளமையை திருப்தி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது<br><br>2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு திட்டமானது சபை கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. இது உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளத் தேவைப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது |
| | ii. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகள் ஆகியன தொடர்பாக மீளாய்வுகளை மேற்கொள்வதுடன் தேவையான போது, உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை உறுதி செய்தல் | இணங்கப்பட்டுள்ளது<br><br>உள்ளகக் கணக்காய்வின் திட்டம், மற்றும் செயன்முறைகளின் விளைவுகள் ஆகியவற்றை மீளாய்வு செய்துள்ளதுடன், பரிந்துரைகள் தொடர்பான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை உறுதி செய்கிறது |
| | iii. உள்ளக கணக்காய்வு திணைக்களத் தலைவர், சிரேஷ்ட ஊழியர்கள் ஆகியோரது பெறுபேறுகளை மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்கிறது. | இணங்கப்பட்டுள்ளது.<br><br>கணக்காய்வுக் குழுவானது தமைமை உள்ளக கணக்காய்வார் மற்றும் வேலை செயன்முறைகள் மற்றும் உள்ளக கணக்காய்வின் பெறுபேறுகளை ஆய்வு செய்யும். சிரேஸ்ட ஊழியர்களின் செயற்றினானது சபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஆய்வு முறையில் தலைமை கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்டு அது சபை கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். 2021 ஆம் ஆண்டுக்கான ஆய்வு நடைபெற்றது. |
| | iv. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர், சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் வெளிவாரி ஒப்பந்த சேவை வழங்குனர்களது நியமனம் மற்றும் விலகல் ஆகியன தொடர்பாக பரிந்துரைகளை வழங்குதல் | இணங்கப்பட்டுள்ளது.<br><br>ஆண்டுக்காலப்பகுதியில் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | v. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒப்பந்தப் புற சேவை வழங்குனர் ஆகியோர் உள்ளடங்கலாக, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட ஊழிய உறுப்பினர்களது பதவி விலகல் தொடர்பாக குழு மதிப்பாய்வுகளை மேற்கொள்வதுடன், பதவிவிலகும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒப்பந்தப் புற சேவை வழங்குனர் முதலிய சிரேஷ்ட ஊழிய உறுப்பினர்கள் தமது பதவிவிலகலுக்கான காரணத்தை சமர்ப்பிக்கவும் உதவுதல். | இணங்கப்பட்டுள்ளது.<br>ஆண்டுக்காலப்பகுதியில் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை |
| | vi. உள்ளக கணக்காய்வு செயற்பாடு என்பதை உறுதி செய்யவும் தாம் கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளதுடன், அது பாரபட்சமற்ற முறையில், தொழில்சார் திறமை மற்றும் போதுமான கவனம் ஆகியவற்றுக்கு இணக்கமாக செய்யப்படுவதனை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பின் படி, பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு) நேரடியாக சபை கணக்காய்வு ஊடாக சபைக்கு அறிக்கையிடுவதுடன், வங்கியின் நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளார். |
| | k. உள்முக விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மூலமான முக்கிய கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமையின் பதிலளிப்புகள் ஆகியவற்றை குழு பரிசீலிக்க வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>உள்முக விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மூலமான முக்கிய கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமையின் பதிலளிப்புகள் ஆகியவற்றை சபை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்துள்ளது.<br>அத்தகைய விசாரணைகளின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டன என்பதையும் உறுதி செய்கிறது. |
| | l. பிரதம நிதி அதிகாரி, பிரதம உள்ளக் கணக்காய்வாளர் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளரது ஒரு பிரதிநிதி ஆகியோர் பொதுவாக கூட்டங்களுக்கு வருவார்கள். குழுவானது குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது நிறைவேற்று பணிப்பாளர்கள் இன்றி, வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் நடாத்தியுள்ளது. | இணங்கப்பட்டுள்ளது.<br>2021 ஆம் ஆண்டில் 13 கூட்டங்கள் நடைபெற்றன.<br>கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதிநிதி 13 கூட்டங்களுக்கு வருகை தந்திருந்தார். பொது முகாமையாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர், பிரதிப் பொதுமுகாமையாளர் (கணக்காய்வு) பதில் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி, நிருவன திட்டமிடல், மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமை) மற்றும் கணக்காய்வாளர் பிரதிநிதி ஆகியோர் பொதுவாக கூட்டங்களுக்கு வருவார்கள். |
| | m. குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:<br>i. அதன் பரப்பெல்லைக்கு உட்பட்ட எந்தவொரு விடயத்திலும் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம்.<br>ii. அவ்வாறு செய்வதற்கு வேண்டிய வளங்கள்<br>iii. தகவல்களுக்கான முழுமையான அணுகல் மற்றும்<br>iv. வெளிவாரி தொழில்முறை அறிவுரையைப் பெறும் மற்றும் தேவைப்பட்டால், தொடர்புடைய அனுபவமுடைய வெளிவாரி பங்கேற்க அழைக்கும் அதிகாரம். | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் சபையின் கணக்காய்வுப் பட்டயத்தின் படி:<br>• குழுவானது எந்தவொரு விடயத்தையும் விசாரிக்கும் அதிகாரம்<br>• அதன் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கான வளங்கள்<br>• தகவலுக்கான கிடைப்பனவு மற்றும்<br>• தேவைப்படின், தொழில்முறை ஆலோசனை பெறும் அதிகாரம் மற்றும் வெளியிலிருந்து அனுபவமுடையவர்களை அழைக்க அதிகாரம் கொண்டுள்ளது<br>குழு அறிக்கையின் பக்கம் 203 முதல் 205 வரை பார்க்கவும். |
| | ெ. விவாதிக்க வேண்டிய விடயங்கள் மற்றிய போதிய முன்னறிவித்தலுடன், குழு வழக்கமாக, சந்திக்க வேண்டும். அத்துடன், அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்று-வதில் அதன் முடிவுகளைப் பதிவு செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபைக் கணக்காய்வுக் குழு வழக்கமான கூட்டங்களை கொண்டுள்ளது. மேலதிகமாக கூட்டங்கள் தேவைப்படும் போது அட்டவணைப்படுத்தப்படுகிறது.<br>ஆண்டுக்காலப்பகுதியில் குழு 13 முறை சந்தித்துள்ளதுடன் கூட்ட அறிக்கைகள் பராமரிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பில் நியாயமான அறிவித்தல் வழங்கப்பட்டதுடன், அதன் முடிவுகள் சபை செயலாளரினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. |
| | o. குழுவானது தகவலளிக்கும் முறையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்தும்:<br>i. கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்<br>ii. ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை, மற்றும்<br>ஒவ்வொரு கூட்டங்களுக்குமான தனித்தனி பணிப்பாளர்கள் வருகை பற்றிய விடயங்கள் | இணங்கப்பட்டுள்ளது.<br>சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கை பக்கம் 203 முதல் 205 வரை பின்வருவனவற்றைப் பார்வையிடுக.<br>1. கணக்காய்வுக் குழுவின் நோக்கம்.<br>2. 2021 ஆண்டு காலத்தில் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை<br>3. கூட்டங்களுக்கான பணிப்பாளர்களின் வருகை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | p. குழுவின் செயலாளரே கம்பனியின் செயலாளராக அல்லது உள்ளக கணக்காய்வு தலைவராக தொழிற்படுவதுடன் குழுவின் கூட்டங்கள் தொடர்பான விபரமான அறிக்கைகள் பேணப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>சபையின் செயலாளரே குழுவின் செயலாளராக இருப்பதுடன் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன |
| | q. நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு அல்லது பிற விடயங்கள் தொடர்பான இரகசியமான முறையில், ஊழியர்களால் சாத்தியமான முறைகேடுகள் காரணமாக வினா எழுப்புவதற்கான முறைமையினை குழு மீளாய்வு செய்தல வேண்டும். அந்த வகையில் அத்தகைய விடயங்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணை மற்றும் பொருத்தமான பின்தொடரல்கள் ஆகியவற்றுடன் வெளிவாரிக் கணக்காய்வாளர் மற்றும் வங்கியுடனான உறவுமுறைகளை மேற்பார்வை செய்வதற்கான முக்கிய பிரதிநிதியாக தொழிற்படுவதனை உறுதி செய்யும். | இணங்கப்பட்டுள்ளது.<br>முக்கியமான கண்டறிதல்கள் தொடர்பாக கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிட்டு கொள்ளை மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஓர் தகவல் தெரிவிக்கும் கொள்கை நடைமுறையில் உள்ளது.<br>பொருத்தமான பின் தொடர் நடவடிக்கைகளுக்கான குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் கணக்காய்வுக் குழுவுக்கு தெரியப்படுத்தப்படுகின்றன.<br>கணக்காய்வுக் குழுவானது வெளியக கணக்காய்வாளருடனான வங்கியின் உறவுகளை மேற்பார்வையிடுவதற்கான முக்கிய பிரதிநிதி அமைப்பாகும் |
| 3 (6) (iii) | சபையின் மனிதவள மற்றும் சம்பளக் குழுக்கள் தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது. | |
| | a. வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது சம்பளம் தொடர்பான கொள்கை (சம்பளங்கள், படிகள் மற்றும் பிற நிதிசார் கொடுப்பனவுகள்) ஒன்றினைத் தீர்மானிக்கும். | இயக்குனர்களது சம்பளம் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 பிரிவு 10 மற்றும் அதன் திருத்தங்களின் படி அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகிறது. பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய நபர்கள் ஆகியோரது சம்பளம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மனித வள மற்றும் சம்பளக் குழுவினால் தீர்மானிக்கப்படுகிறது |
| | b. பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்கள் ஆகியோருக்கான இலக்குகளை குழு தீர்மானிக்கும். | இணக்கமாக உள்ளது<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 பிரிவு 8 மற்றும் அதன் திருத்தங்களின் படி அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் இது இயக்குனர்களுக்கு பொருத்தமற்றது.<br>பொதுமுகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ நபர்களது இலக்குகள் தந்திரோபாய வணிக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதான பெறுபேற்றுக் குறிகாட்டிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு உருவாக்கப்படுகின்றன. |
| | c. குழுவானது ஒழுங்கான கால அடிப்படையில் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது இலக்குகளுக்கு எதிராக ஆய்வு செய்தல் வேண்டும். அத்துடன் சம்பளங்கள், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவு அடிப்படையிலான ஊக்குவிப்புகள் ஆகியவற்றினை மீளாய்வு செய்வதற்கான அடிப்படையினை உருவாக்குதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ அதிகாரிகளின் செயற்றிறன் ஆய்வுக்கான அளவுகோல்களானது சபைக் குழுவினால் அமைக்கப்பட்ட இலக்குகளுடன் இணங்குகிறது. |
| | d. பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் போது தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி குழுவின் கூட்டங்களுக்கு வருகை தர வேண்டும் | இணங்கப்பட்டுள்ளது.<br>பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான அனைத்து விடயங்களும் விவாதிக்கப்படும் போது தவிர சபையின் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொள்வர் |
| 3 (6) (iv) | சபையின் நியமனக் குழு தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது. | |
| | a. புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்களின் தெரிவு அல்லது நியமனம் தொடர்பான கொள்கை ஒன்றினை குழு நடைமுறைப்படுத்தல் வேண்டும். | பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள், மற்ற இரண்டு பணிப்பாளர்களும் வங்கிச் சட்டத்தின் படி முன்னாள் அலுவலர்கள்<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி பணிப்பாளர்கள் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுகிறார்கள்.<br>பிரிவு 11 – பணிப்பாளர் சபையின் ஒரு பணிப்பாளரை தலைவராக அமைச்சர் நியமிப்பார். |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | | பிரிவு 26 – பணிப்பாளர் சபையானது தகமையான, பொருத்தமான ஒருவரை பொது முகாமையாளராக நியமிக்க அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் தொழிற்படுவார். <br> முக்கிய முகாமை நபர்கள் நியமன விடயங்கள் இணக்கமாக உள்ளது. பணிப்பாளர் சபையானது, சபையின் நியமனக் குழுவின் பரிந்துரையின் பேரில் முக்கிய முகாமை நபர்களை நியமிக்கும். |
| | b. தற்போதைய பணிப்பாளர்களின் மீள் தேர்தலை குழுவானது கருத்திற் கொள்ளும் (அல்லது கருத்திற் கொள்ளாதுவிடும்). | பொருத்தமற்றது. <br> தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி 5 பணிப்பாளர்கள் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுகிறார்கள். ஏனைய இருவரும் தேசிய சேமிப்பு சட்டத்தின் பிரகாரம் பதவி வழிப்பணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். |
| | c. பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்கள் பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்கான தகமை மூலப்பிரமாணங்களை குழு உருவாக்குதல் வேண்டும். | இணக்கமாகவுள்ளது. <br> தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 மற்றும் அதன் திருத்தங்களின் படி , பணிப்பாளர் சபையின் இணங்கப்பட்ட நடைமுறையுடன் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, முக்கிய முகாமை நபர்கள் பதவிக்கு தகமை பெறுவதற்கான மூலப்பிரமாணங்களைக் குறிப்பிடும் பதவியுயர்வுக் கொள்கையானது நடைமுறையில் உள்ளது. |
| | d. இக் கட்டளைகளின் கட்டளை 3(3) மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவான முறையில், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்கள் ஆகியோர் தமது பதவிகளுக்கு தகைமையானவர்களாகவும் பொருத்தமானவர்களாகவும் இருப்பதனை குழு உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். | இணக்கமாகவுள்ளது. <br> பணிப்பாளர்கள் மற்றும் பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது ஒப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசிகள் மற்றும் பிரகடனங்கள் ஆகியன சபை செயலாளரினால் பெறப்பட்டு, அதே ஆவணங்கள் பிரதம முகாமை நபர்களிடமிருந்து மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் சேகரிக்கப்பட்டு தகமை மற்றும் பொருத்தமான தன்மையை மதிப்பிட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும். |
| | e. காலத்துக்குக் காலம் குழுவானது இளைப்பாறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரமத முகாமை நபர்கள் ஆகியோரது தொடர்ச்சித் தன்மை ஏற்பாடுகளுக்கான மேலதிக அல்லது புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளும். | இணக்கமாகவுள்ளது. <br> தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியவர்களது நியமன விடயங்கள் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதம முகாமை நபர்களது நியமனங்கள் சபையின் நியமனக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும். |
| | f. குழுவானது ஒரு சுயாதீன பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும். | குழுவானது சுயாதீனமற்ற நிர்வாகமற்ற பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. |
| 3 (6) (v) | சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு | |
| | a. குழுவானது இடர் வகைகளை மேற்பார்வை செய்யும் குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரமத முகாமை நபர்களைக் கொண்டிருக்கும். | இணங்கப்பட்டுள்ளது. <br> பொது முகாமையாளர் மற்றும் பிரதம இடர் அதிகாரி இடர்களை முகாமை செய்ய பொறுப்புடையவர். அதாவது கடன் இடர் முகாமை, சந்தை மற்றும் திரவத்தன்மை இடர் முகாமை மற்றும் தொழிற்பாட்டு இடர் மற்றும் மூலோபாய இடர். <br> இணக்க உத்தியோகத்தர்கள் அனைத்து கூட்டங்களுக்கும் அழைக்கப்படுவர். ஏனைய பிரமத முகாமை நபர்கள் மற்றும் ஊழியர்கள் தேவைக்கு ஏற்ப அழைக்கப்படுவர். சபையானது பிரமத முகாமை நபர்களுடன் அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புகளிப்படையில் நெருக்கமாக பணிபுரிகிறது. |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | b. குழுவானது வங்கியின் இடர்கள் அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் ஆகியவற்றை மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத் தகவல் முறைமை ஊடாக மதிப்பிடும். சேய்க் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகளுக்கு, இடர் முகாமைத்துவமானது வங்கி மட்டத்திலும் குழு மட்டத்திலும் மேற்கொள்ளப்படும | இணங்கப்பட்டுள்ளது.<br>கடன் இடர் முகாமை, சந்தை மற்றும் திரவத்தன்மை இடர் முகாமை மற்றும் தொழிற்பாட்டு இடர் முகாமை ஆகியன சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் பரிந்துரையின் பேரில் சபையினால் அங்கீகரிக்கப்படும். இடர் முகாமைப் பிரிவு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்பு எல்லையின் அடிப்படையில் வங்கி மற்றும் குழு அடிப்படையில் இடர் குறிகாட்டிகளில் மாதாந்த அறிக்கைகளை சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் ஊடாக சபைக்கு மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடும். |
| | c. குழுவானது பிரத்தியேகமான அளவுசார் மற்றும் பண்புசார் இடர் மட்டங்களை கடன் குழு மற்றும் சொத்துப் பரிப்புக் குழு முதலிய அனைத்து முகாமை மட்டக் குழுக்களுக்கும் மீளாய்வு செய்து இடர் குறிகாட்டிகளை காலரீதியாக அறிக்கையிடுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபையானது கடன் குழு போன்ற முகாமைத்துவ மட்ட குழுக்களின் அறிக்கைகளை ஆய்வு செய்யும். முதலீட்டு குழு மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழு இடர்களை முகாமைசெய்வதற்கான பண்பு மற்றும் வினைத்திறனினை ஆராயும் மற்றும் காலரீதியாக அறிக்கையிடப்படும் இடர்கள் முகாமைசெய்யப்படுதலை உறுதிப்படுத்தும்.<br>சபை ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் அனைத்து முகாமை மட்ட இடர்களை முகாமை செய்வதற்கான பண்பு மற்றும் வினைத்திறன் ஆய்வு செய்யப்படும். |
| | d. குழுவானது பிரத்தியேகமான இடர்களின் விளைவுக்கு பொருத்தமான திருத்த நடிவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபையினால் தீர்மானிக்கப்பட்ட நிலைகளை விட உயர்வான குறித்த இடர் நிலைமைகளை குறைப்பதற்கு பொருத்தமான திருத்த நடவடிக்கைகள் ஒழுங்குமுறை மற்றும் கொள்கைநிலை தேவைப்பாட்டிற்கு ஏற்ப சபையினால் மேற்கொள்ளப்படும். |
| | e. குழுவானது பிரத்தியேக இடர்களைக் குறைக்கும் வகையில் குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறையேனும் கூடுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>முடிந்த ஆண்டின் போது குழு 5 கூட்டங்களைக் கூட்டியிருந்தது. கூட்டங்கள் மற்றும் சமுகமளித்தோர் தொடர்பான விபரங்கள் பக்கம் 210 இல் வழங்கப்பட்டுள்ளன. |
| | f. குழுவினால் அல்லது வங்கி மேற்பார்வைகளுக்குப் பொறுப்பாக பணிப்பாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பிரத்தியேகமான இடர்களுக்குப் பொறுப்பானவர்கள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாத போது குழுவானது பொறுப்பான அதிகாரிகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் | இணங்கப்பட்டுள்ளது.<br>குறித்த விடயங்களை கையாள்வதற்கு வங்கியானது ஒழுங்குமுறை நடைமுறையினை நிறுவியுள்ளது. வருடத்தினுள் அதற்கான எந்த தேவைப்பாடும் ஏற்படவில்லை. |
| | g. குழுவானது பணிப்பாளர் சபைக்கு ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்து ஒரு வாரத்தினுள் பிரத்தியேகமான விடயங்களில் பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளுக்காக இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும். | இணங்கப்பட்டுள்ளது.<br>இடர் முகாமைத்தவ அறிக்கை மற்றும் பரிந்துரைகளுடன் கூட்டம் தொடர்பான விபரமான அறிக்கை அடுத்துவரும் சபைக் கூட்டத்தில் வழங்கப்படும். |
| | h. குழுவானது வங்கியின் தொடர்புபட்ட சட்டம், ஒழுங்குவிதி முறைகள், ஒழுங்குவிதி கட்டளைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்யும் இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றினை உருவாக்குதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தொழிற்பாட்டுப் பகுதிகளில் வங்கியின் தொடர்புபட்ட சட்டம், ஒழுங்குவிதிமுறைகள், ஒழுங்குவிதி கட்டளைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்ட்ட கொள்கைகளுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்யும் இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றினை உருவாக்கியுள்ளது. இத் தொழிற்பாடானது அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அவர் காலரீதியான அடிப்படையில், சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, கணக்காய்வுக் குழு மற்றும் சபைக்கு அறிக்கையிடுவார். |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (7) | **தொடர்புபட்ட தரப்பினர் ஊடுசெயல்கள்** | |
| 3 (7) (i) | எந்தவொரு நபருடனும் தொடர்புபடும் எந்தவொரு ஊடுசெயல் தொடர்பிலும் அக்கறை முரண்பாடுகள் எழாமையை உறுதி செய்யும் படிமுறைகளை சபை உருவாக்குதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உறவுமுறைத் தரப்பினர், அவர்களது ஊடுசெயல்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் அக்கறை முரண்பாடுகளை நீக்கும் வகையில் மிகச் சாதகமான அணுகுமுறைகளை உறவுமுறைத் தரப்பினருக்கு வழங்குவதைத் தவிர்க்கும் வரையறைகள் ஆகியன உள்ளிட்ட உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் கொள்கையானது நடைமுறையில் உள்ளது.<br>பணிப்பாளர்கள் தனித்தனியாக தமது உறவுமுறைத் தரப்பின் ஊடுசெயல்கள் தொடர்பாக வெளிப்படுத்துமாறு கோரப்படுகின்றனர். இத்தகைய உடுசெயல்கள் தன்னியக்கமான முறை ஒன்றின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. |
| 3 (7) (ii) | இக் கட்டளையில் தொடர்புபட்ட தரப்பினர் தொடர்பான ஊடுசெயல்கள் வகைகள் உள்ளடக்கப்படல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபையால் அங்கீகரிக்கப்பட்ட உறவுமுறைத் தரப்பினர் பரிவர்த்தனைக் கொள்கை பினவரும் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது.<br>(அ) நாணயவாரியத்தில் வரையறுத்துள்ளபடி அதிகபட்ச இடவசதிகளை வழங்குதல்<br>(ஆ) வைப்பு, கடன் மற்றும் முதலீடு வடிவத்தில் வங்கியில் எந்தவொரு பொறுப்புகளை உருவாக்குதல்<br>(இ) நிதி அல்லது நிதி சாராத எந்தவொரு சேவையையும் வங்கிக்கு வழங்குதல் அல்லது பெறுதல்.<br>(ஈ) வங்கி மற்றும் எந்தவொரு தொடர்புடைய தரப்பினருக்கும் இடையில் அறிக்கையிடல் மற்றும் தகவல் தொடர்புகளை உருவாக்குதல் அல்லது பராமரித்தல். இது அத்தகைய தொடர்புடைய கட்சிகளுக்கு நன்மை தரக்கூடிய ரகசிய அல்லது உணர்திறன் வாய்ந்த தகவல்களைப் பகிர வழிவகுக்கும்.<br>இது தொடர்பான தகவல் குறிப்பு 49.5 “உறவுமுறைத் தரப்பினர்” இல் பக்கம் 367 இல் வழங்கப்பட்டுள்ளது. |
| 3 (7) (iii) | மேலே கட்டளை 3 (7) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வங்கியானது ஊடுசெயல்களில் ஈடுபடும் பிற தரப்பினரை விட உறவுமுறைத் தரப்பினருக்கு “மிக சாதகமான கையாள்கை” வழங்கப்படவில்லை என்பதை இணங்கும் வகையில் உறவுமுறைத் தரப்பினருடன் ஊடுசெயல்களில் ஈடுபடவில்லை என உறுதி செய்ய வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் தொடர்புள்ள தரப்பினரின் கொடுக்கல்வாங்கல் கொள்கையானது ஏனைய வாடிக்கையாளரை விட தொடர்புபட்ட தரப்பினருக்க மிக சாதகமான சலுகைகள் கிடைப்பதை தடுக்கிறது. இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:<br>(அ) வங்கியின் ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதனத்தில் பரிந்துரைக்கப்பட்ட சதவீதத்திற்கு மேற்பட்ட “மொத்த தேறிய தங்குமிடத்தினை” தொடர்புபட்ட தரப்பினருக்கு வழங்கல்<br>(ஆ) வங்கியின் சிறந்த வட்டி வீத்தினை விட குறைவான வட்டியினை அறிவிடுதல் அல்லது தொடர்பற்ற தரப்பினரை விட அதிக வைப்புக்கான வட்டியினை தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கலுக்கு செலுத்துதல்<br>(இ) தொடர்பற்ற தரப்பினருடனான சாதாரண வணிகத்திற்கு மேலான வகையில், சாதகமான விதிமுறைகள், வியாபார நட்டத்தினை/மூடுதல்/விலக்குதல்/சலுகைகள் போன்ற முன்னுரிமைகளை வழங்கல்<br>(ஈ) மதிப்பீட்டு செயன்முறை இல்லாமல் சேவைகள் வழங்குதல் அல்லது பெறுதல் |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | | (உ) இரகசியதன்மையுடைய விபரங்களை தொடர்புபட்ட தரப்பினருடன் பங்கிட அறிக்கையிடல் மற்றும் தகவல் பரிமாற்ற முறையினை கொண்டிருத்தல்<br>அத்தகைய ஊடுசெயல்களை அடையாளம் காட்டும் வகையில் பணிப்பாளர்களிடமிருந்து வருடாந்த வெளிப்படுத்தல்கள் பெறப்படுகின்றன. வங்கியானது ஊடுசெயல்களில் ஈடுபடும் பிற தரப்பினரை விட உறவுமுறைத் தரப்பினருக்கு “மிக சாதகமான கையாள்கை” வழங்கப்படவில்லை என்பதை காலரீதியாக அடையாளம் காண்பதற்கான முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன. வழக்கமான முறையில் உறவுமுறைத் தரப்பினருடன் இடம்பெற்ற ஊடுசெயல்கள் நிதிக் கூற்றுக்களின் “உறவுமுறைத் தரப்பினர்” குறிப்பு 49.5 பக்கம் 367 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| 3 (7) (iv) | ஒரு வங்கி எந்தவொரு பணிப்பாளர்களுக்கோ அல்லது அத்தகைய பணிப்பாளர்களின் நெருக்கமான உறவினருக்கோ ஒரு வசதியளித்தல் பணிப்பாளர் சபையினால் கருத்தில் கொள்ளப்படும் பணிப்பாளர் தவிர்ந்த, மூன்றில் இரண்டு பங்கான பணிப்பாளர்கள் சாதகமாக வாக்களித்து அங்கீகரிக்கப்படாதவிடத்து, அத்தகைய வசதியளித்தல் ஒன்றை வழங்குதல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>அத்தகைய நிகழ்வுகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்படவில்லை. |
| 3 (7) (v) | a. ஒரு நபருக்கு அல்லது அவரது நெருக்கமான உறவினருக்கு அல்லது அத்தகைய நபர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ள ஏதேனும் கருதுபொருள்களுக்கு ஏதேனும் வசதிகள் வழங்கப்பட்டு, அத்தகைய நபர் பிற்பட்ட காலங்களில் வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டால், அவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதியினுள் நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசியமான பிணையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் வங்கியினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>சபையின் செயலாளர் பணிப்பாளர்களை ஆட்சேர்க்கமுன் அவர்களிடமிருந்து வெளிப்படுத்தலினை பெறுவதோடு அவர்கள் ஏதேனும் மேலதிக கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படுத்த வேண்டும்.<br>நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசியமான பிணையினை பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகள் பற்றி வங்கி ஊழியர்கள் அறிந்துள்ளனர். |
| | b. கட்டளை 3(7)(எ) மேற்குறிப்பிட்டவாறு பாதுகாப்பு வழங்கப்படாதவிடத்து, வங்கியானது குறித்த தங்கியிருத்தலுக்கான பணம் மற்றும் அதற்கான வட்டி ஏதேனுமிருப்பின் அவற்றை வழங்கும் போது குறிப்பிட்ட நேரத்தில் அல்லது பணிப்பாளர் பதவி ஏற்றதிலிருந்து 18 மாதம் என்பவற்றுள் முன்னரான திகதியில் மீளப்பெற தேவையான நடவடிக்கைள் எடுக்க வேண்டும். | இணங்குதல் பிரிவானது செய்முறையினை இந்த ஒழுங்குமுறையுடன் மேற்பார்வை செய்கிறது மற்றும் காலாண்டு அறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்கிறது. |
| | c. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்காத பணிப்பாளர்கள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நீக்கப்படுவதுடன் அது தொடர்பில் வங்கி பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். | |
| | d. இந்த உப கட்டளையானது, தங்கியிருத்தல் வசதி வழங்கப்படும் போது வங்கியின் ஊழியராக இருந்து மற்றும் வங்கியினால் ஊழியருக்கு வழங்கப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்பாளர்களுக்கு பொருந்தாது. | |
| 3 (7) (vi) | வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்படத்தக்கதான அடிப்படையில் அமைந்த திட்டம் ஒன்று தவிர்ந்த ஏனைய வசதிகளை அல்லது “மிக சாதகமான கையாள்கையை” வங்கி வழங்குதல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்படத்தக்கதான அடிப்படையில் அமைந்த திட்டம் ஒன்று தவிர்ந்த ஏனைய வசதிகள் ஊழியருக்கு வழங்கப்படவில்லை. வங்கி ஊழியர்கள் சுற்றுநிருபம் மூலம் வங்கியின் ஏனைய ஊழியருக்கு அல்லது நெருக்கமான உறவுகளுக்கு மிக சாதகமான கையாள்கையை மேற்கொள்வதை தவிர்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (7) (vii) | கட்டளை 3(7)(v) மற்றும் 3(7)(vi) ஆகியவற்றின் படி வங்கியினால் எந்தவாரு வசதியளித்தல்களும் அல்லது அது தொடர்பான வட்டிகளும் நாணய சபையின் முன் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது. அத்துடன், அத்தகைய அனுமதியின்றிய மாற்றல்கள் பெறுமதியற்றவையாகவும் செல்லுபடியற்றவையாகவும் இருக்கும். | இணங்கப்பட்டுள்ளது<br>அத்தகைய நிகழ்வுகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்படவில்லை. |
| 3 (8) | **வெளிப்படுத்துகை** | |
| 3 (8) (i) | சபை பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும். | |
| | a. வருடாந்த கணக்காய்வு செய்யப்பட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் யாவும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதி அமைப்புக்களினால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான வடிவில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கப்பட்டுள்ளது |
| | b. அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3 (8) (ii) | சபையானது பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்தல்களை ஆண்டறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும். | |
| | a. வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்ட நியமங்கள் மற்றும் விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலான ஒழுங்குவிதி தேவைப்பாடுகளுக்கு இணங்கமாக தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கூற்று | இணங்கப்பட்டுள்ளது<br>வருடாந்த கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் யாவும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதி அமைப்புக்களினால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான வடிவில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான வெளிப்படுத்தல் பக்கம் 249 மற்றும் 250 இல் "நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் பொறுப்பு" மற்றும் "பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர்(நிதி மற்றும் திட்டமிடல்) பொறுப்பு பற்றிய கூற்று" பக்கம் 254 முதல் 255 இல் தரப்பட்டுள்ளது |
| | b. வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரித் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிமுறை தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பன தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்கும் வகையில் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது உறுதி செய்கிறது என்பது தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரித் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிமுறை தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை ஆண்டிறிக்கையின் பின்வரும் அறிக்கைகள் உள்ளடக்குகின்றன:<br>பணிப்பாளர்களது ஆண்டறிக்கை பக்கம் 243 முதல் 248.<br>நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று பக்கம் 249 முதல் 250 நிதி அறிக்கையிடல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு பற்றிய கூற்று பக்கம் 251 முதல் 252. |
| | c. 31 டிசம்பர் 2008 இன் பின்னர் தயாரித்துப் பிரசுரிக்கப்பட் எந்தவொரு கூற்றுக்கள் தொடர்பான மேலே 3(8)(ii)(b) இல் குறிப்பிட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதி தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்துகை | இணங்கப்பட்டுள்ளது.<br>பக்கம் 253 இலுள்ள வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீனமான உறுதிப்படுத்தல் அறிக்கையினைப் பார்வையிடுக. |

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | d. பணிப்பாளர்களது விபரங்கள்:<br>1. பெயர்கள், தகைமை மற்றும் பொருத்தமான தன்மை உள்ளடங்கலாக<br>2. வங்கியுடனான ஊடுசெயல்கள் மற்றும்<br>3. வங்கியால் செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்கள் அல்லது சம்பளங்கள | இணங்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்களது விபரங்கள் பக்கம் 180 முதல் 183 இல் வழங்கப்பட்டுள்ளன.<br>பக்கம் 367 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.<br>பக்கம் 367 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன |
| | e. மொத்த நிகர தங்கியிருத்தல் என்பது ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் உரிய வகையில் 3(7)(iii) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் மொத்த நிகர தங்கியிருத்தலானது என்பது உரிய வகையில் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன வீதாசாரத்தின் படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டுள்ளது.<br>மொத்த நிகர தங்கியிருத்தலானது என்பது உரிய வகையில் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன வீதாசாரத்தின் படி பக்கம் 368 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5.3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| | f. பிரதம முகாமை நபர்களுக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த சம்பளப் பெறுமதி மற்றும் பிரதம முகாமை நபர்களுக்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஊடுசெயல்களின் மொத்தப் பெறுமதி, சம்பளங்கள் என்னும் பரந்த வகையினுள் உள்ளடக்கப்படல் | இணங்கப்பட்டுள்ளது.<br>பக்கம் 368 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| | g. வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கைகளில் உள்ள கட்டளைகள் தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்தல் | இணங்கப்பட்டுள்ளது.<br>வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்தலானது நிறுவன கூட்டாண்மை கட்டளை இல 12 2007 ஆண்டின் படி பெறப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் அனைத்து கண்டுபிடிப்புகளும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| | h. பாதுகாப்புத் தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விபரத்தை வழங்கும் ஓர் அறிக்கை | இணங்கப்பட்டுள்ளது.<br>நிதி அறிக்கையிடல் தொடர்பிலான பணிப்பாளர் பொறுப்பு பக்கம் 249 முதல் 250 வரையில் பாதுகாப்புத் தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விபரத்தை வழங்குகிறது. |
| | i. வங்கியின் இடர் முகாமைத்துவம் தொடர்பான குறைபாடுகள், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்கான பணிப்பாளரினால் குறித்துக் காட்டப்பட்டு, அத்தகைய விடயங்கள் நாணய சபையினால் பொது மக்களுக்கு வெளிப்படுத்தமாறு பணிக்கப்பட்டு இருப்பின், அத்தகைய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் உள்ளடங்கலான ஒழுங்குவிதி மற்றும் மேற்பார்வை கூற்று ஒன்று | பொருத்தமற்றது<br>மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் குறித்து காட்டப்பட்ட நியமங்கள் தொடர்பில் எதுவித வங்கி இடர் முகாமைத்துவ மேற்பார்வை தொடர்பிலான குறைபாடுகளோ அல்லது இணக்கப்பாடற்ற தன்மையோ இல்லை. எனவே நாணய சபையானது பொது மக்களுக்கு எதுவித வெளிப்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு வருடத்தினுள் குறிப்பிடவில்லை |
| 3 (9) | **நிலைமாறுகை மற்றும் ஏனைய பொதுவான ஏற்பாடுகள்** | |
| 3 (9) (i) | இந்த நியமத்துடனான இணக்கப்பாடானது ஜனவரி 1, 2008 முதல் ஆரம்பமாகும் மற்றும் அனைத்து உரிமம் பெற்ற வணிக வங்கிகளும் ஜனவரி 1, 2009 அல்லது அதற்கு முன்னராக, குறிப்பாக நீடிக்கப்பட்ட இணக்கப்பாட்டு திகதிகள் குறிப்பிப்பட்ட பகுதிகள் தவிர, இந்த நியமத்தின் பரிந்துரைகளுடன் முழுமையாக இணங்க வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கி பொருத்தமான நிலைமாறுகை ஏற்பாடுகளுடன் இணங்கியுள்ளது. |

பிறசேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு
எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
முன்னுரை
தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2021 →

| பிரிவு | கோட்பாடு | 2021 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (9) (ii) | இலங்கையில் குறித்த சட்டங்களுக்கு அமைவாக தோற்றுவிக்கப்பட்ட வங்கிகள் தொடர்பில் சபையானது குறித்த சட்டத்திற்கு அமைவாக தொழிற்படலாம் மற்றும் குறித்த சட்டத்தின் அனைத்து பரிந்துரைகளுக்கும் ஏற்புடையவாறு செய்படவேண்டும் | இணங்கப்பட்டுள்ளது.<br>1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் அனைத்து பரிந்துரைகளுக்கும் ஏற்றவாறு தொழிற்பட, அனைத்து ஏற்புடைய நடைமுறைகளையும் தேசிய சேமிப்பு வங்கி எடுத்துள்ளது. ஏதேனும் இணக்கப்பாடற்ற நிலைமைகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி குறித்த பரிந்துரைகளுக்கு ஏற்ப தொழிற்பட்டமை தொடர்பில் குறித்த பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளது. |
| 3 (9) (iii) | நியமமானது இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கும், குறித்த வங்கி தோற்றுவிக்கப்பட்ட நாட்டின் சட்ட வரைமுறைகளுக்கு முரண்படாத வகையில், ஏற்புடையதாகும்.<br>வெளிநாட்டு வங்கியின் இலங்கை கிளையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அதன் தாய் நிறுவன வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கையுடன் வெளியிடப்படும். | பொருத்தமற்றது |
| 3 (9) (iv) | இந்த நியமத்தின் ஏதேனும் பரிந்துரைகளுக்கும், வங்கியின் உள்ளக விபரணம் (அல்லது உள்ளக நியதிகள்) தொடர்பில் முரண்பாடுகள் இருப்பின் எப்பொழுதும் இந்த நியமமே நடைமுறைபடுத்தப்படும். எனினும் வங்கியின் தனிப்பட்ட உள்ளக விபரணத்தில் உள்ள விடயம் நியமத்தினை விட கடுமையான தரத்தினைக் கொண்டிருப்பின் அது நடைமுறைப்படுத்தப்படும். | பொருத்தமற்றது |

## 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை கட்டளைகளின் இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கட்டளைகள் தொடர்பான கூட்டாண்மை ஆளுகை விதிகளுடன் இணக்கப்பாடாகும் வகையில், இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை தொடர்புபட்ட சேவைகளுக்கான நியமம் 4400 – நிதித் தகவல்கள் தொடர்பான உடன்பாடான சேவைகளின் நிறைவேற்றம் நியமத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடுகளுக்கு இணங்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி செயன்முறைகளை மேற்கொண்டு இருக்கின்றார். அவரால் 09 மே 2022 திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கையில் கண்டறிதல்கள் மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களிலிருந்து பொருண்மையான வகையில் வேறுபட்டு இருக்காததுடன், மேலே பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அறிக்கையில் இருந்து முக்கியமான அளவில் விலகலடைந்து இருக்கவில்லை.

Keasila Jayawardana

**எம். ஏ. பி முகாந்திரம்**
சபை செயலாளர்

**திருமதி கேசிலா ஜயவர்தன**
தலைவர்

09 மே 2022
கொழும்பு

# இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்



| விதிக் குறிப்புகள் | கோட்பாடுகள் |
|---|---|
| A | **பணிப்பாளர்கள்** |
| A.1 | **சபை** |
| | தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது 1971 ஆம் ஆண்டில் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் பிற்காலத் திருத்தங்கள் ஆகியவற்றினால் விதந்துரைக்கப்பட்டபடி தலைவர் உள்ளடங்கலான 7 நிறைவேற்று அதிகாரமற்ற பணியாளர்களை கொண்டு இருக்கின்றது. வங்கியின் ஐந்து பணிப்பாளர்கள் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி அமைச்சரால் நியமிக்கப்பட இரண்டு பதவிவழிப் பணிப்பாளர்கள் திறைசேரியின் செயலாளர் அல்லது அவரது நியமன அலுவலர் மற்றவர் தபால் மா அதிபர் அல்லது அவரது நியமன அதிகாரியாக இருப்பர்.<br><br>பணிப்பாளர் சபையானது தலைவரினால் தலைமைத்துவம் வழங்கப்படுவதுடன் வங்கியின் உச்சமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் பிரிவாகவும் காணப்படும். குறித்த வருடத்தில் வங்கியினை வினைத்திறனான கட்டுப்பாடுகள் மூலம் வழிநடத்த மற்றும் சபையானது ஏழு (7) புகழ்பெற்ற தொழில்வல்லுனர்களை கொண்டிருந்தது. 2021 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் விபரங்கள் பக்கம் 180 முதல் 183 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது. |
| A.1.1 | **கிரமமான கூட்டங்கள்** |
| | பணிப்பாளர் சபையானது சட்டத்திற்கு இணக்கமான வகையில் ஆண்டு காலத்தின் போது கிரமமாக ஒன்று கூடியது. ஆண்டின் போது பணிப்பாளர் சபை 29 கூட்டங்களை நடாத்தி இருந்ததுடன், பட்டயங்களுக்கு இணக்கமான முறையில் ஆண்டு காலத்தில் உபகுழுக்களும் கூட்டங்களை நடத்தி இருந்தன. சபைக் கூட்டங்களின் ஒழுங்குமுறையான தன்மை மற்றும் தகவல்களை சமர்ப்பிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் செயன்முறை ஆகியன பணிப்பாளர் சபையினால் இணங்கப்பட்டதுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் பக்கம் 195 முதல் 196 வரை வழங்கப்பட்டுள்ளன. |
| A.1.2 | **பணிப்பாளர் சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்** |
| | பணிப்பாளர் சபையின் பட்டயத்தினால் விபரிக்கப்பட்ட சபைக்கான பொறுப்புக்கள் பக்கம் 193 இல் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை செயலாளரினால் உதவி அளிக்கப்பட்டது |
| A.1.3 | **நாட்டின் சட்டங்களுக்கு இணக்கமான பணிப்பாளர் சபை நடவடிக்கைகள்** |
| | நாட்டின் சட்டங்கள், இலங்கை மத்திய வங்கியின் கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான சர்வதேச சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுக்கு இணக்கமாக வங்கி செயற்படுவதனை உறுதி செய்வதற்காக பணிப்பாளர் சபையானது வழிமுறைகளை அங்கீகரித்திருக்கிறது. இது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வங்கி சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெறுதல் அது தொடர்பான செலவினங்களை வங்கி தாங்கிக் கொள்ளுதல் உள்ளடங்கலான வழிமுறைகளை உள்ளடக்கும். |
| A.1.4 | **செயலாளரது ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான அணுகை மற்றும் பணிப்பாளர் சபை செயலாளர் நியமனம் மற்றும் பதவி நீக்கம்** |
| | பிரயோகிக்க தக்கதான அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒழுக்க விதிகளுக்கு இணக்கமான முறையில் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பினை கொண்ட பணிப்பாளர் சபையின் செயலாளரது சேவைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமையை அனைத்து பணிப்பாளர்களும் கொண்டு இருக்கின்றார்கள்.<br><br>பணிப்பாளர் சபை செயலாளர் நியமனம் மற்றும் பதவி நீக்கம் ஆகியன பணிப்பாளர் சபை நியமனக் குழுவின் ஆலோசனையின் பெயரில் ஒரு பிரதான முகாமைத்துவ நபர் என்ற அடிப்படையில் முழுமையாக பணிப்பாளர் சபையையே சாரும்.<br><br>பக்கம் 202 இல் "சபை செயலாளரின் பங்கு" பகுதியில் சபை செயலாளரின் பங்கு பற்றிய மேலதிக விபரங்களுக்கு பார்வையிடவும் |
| A.1.5 | **சுயாதீனமான தீர்ப்பு** |
| | பணிப்பாளர் சபையுடன் தொடர்புபட்ட தந்திரோபாயம், பெறுபேறு, வள ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் நடத்தை நியமங்கள் ஆகியன உள்ளடங்கலான விடயங்களில் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான உரிமை வங்கியின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படவில்லை. |
| A.1.6 | **வங்கியின் பணிப்பாளர் சபைக்கு போதுமான நேரம் மற்றும் முயற்சிகளை அர்ப்பணித்தல்** |
| | பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்கள் முன்கூட்டியே திட்டமிடப் படுவதுடன் இயக்குனர்கள் கூட்டத்துக்கான ஆவணங்களை போதுமான காலம் மீளாய்வு செய்வதனையும், தேவை ஏற்படும்போது மேலதிக தகவல்களை கோருவதற்கும் கூட்டம் முடிவடைந்த பின்னர் அவசியமான விடயங்களை பின்தொடர்வதற்கும் வசதி அளிக்கும் முகமாக கூட்டம் தொடர்பான ஆவணங்கள் ஒருவாரத்துக்கு முன்னரே இலத்திரனியல் வழிமுறை மூலமாக இயக்குனர்களுக்கு அனுப்பப்படுகின்றன. வழக்கம் இதுவாக இருந்தபோதிலும் வழக்கத்துக்கு மாறான சூழ்நிலைகளில் கூட்டத்துக்கு மிகவும் அண்மித்த காலப்பகுதியில் ஆவணங்களை தொடர்பாடல் செய்வதற்கான ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. இது வணிக தொழிற்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் போதுமான அளவு பரிச்சயம் அடைவதற்கான நேரத்தினை வழங்குவதன் மூலம் ஈடு செய்யப்படுகின்றது |

**விதிக் குறிப்புகள்** | **கோட்பாடுகள்**

A.1.7 **தீர்மானங்களுக்கான அழைப்பு**

தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி, எவரேனும் இரண்டு இயக்குனர்களது எழுத்து மூலமான வேண்டுகோளுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் தலைவர் அது வங்கியின் சிறந்த அக்கறைகளுக்கு அவசியமானது என கருதுமிடத்து பணிப்பாளர் சபையின் விசேட கூட்டம் ஒன்றினை கூட்ட முடியும். அத்தகைய விசேட கூட்டம் ஒன்றுக்கான கூட்ட அழைப்பானது கூட்டத்துக்கு நான்கு நாட்கள் முன்னதாக அனைத்து இயக்குனர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

A.1.8 **இயக்குனர்களுக்கான பயிற்சி அளித்தல்**

வங்கியின் பணிப்பாளர் சபையானது நியமனத்தின் போது அவசியமான பயிற்சியளித்தலைப் பெறுகின்றது. விபரங்களுக்கு பக்கம் 198 இனைப் பார்வையிடுக.

A.2 **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பொறுப்புக்களின் பிரிப்பு**

பணிப்பாளர் சபையின் பட்டயத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்ட வகையில் அதிகாரத்தின் மற்றும் சமத்துவத்தை பேணும் வகையில் சிறந்த நடைமுறைகளை தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பதவிகள் தெளிவாக பிரிக்கப்பட்டுள்ளன. வங்கியின் தலைவர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற இயக்குனராக இருக்கும் அதேவேளை பிரதம நிறைவேற்று அதிகாரி பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவராக இருப்பதில்லை.

A.3 **தலைவரது வகிபாகம்**

தலைவர் கூட்டாண்மை ஆளுகையினை சிறப்பாக பேணுவதற்கும் பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டிற்கும் வசதி அளிப்பதற்குமான ஓர் தலைமைத்துவ பங்கினைக் கொண்டிருக்கிறார். தலைவர் பிரதம முகாமை நபர்களுடன் சிறந்த தொடர்பாடல் வரிசைகளை பேணுவதற்கும் தந்திரோபாய மற்றும் தொழிற்பாட்டு விடயங்களில் பங்களிப்பினை வழங்குவதற்கும் பொறுப்பினை கொண்டுள்ளார். கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலானது பொதுமுகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி, பணிப்பாளர்கள் மற்றும் சபையின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு, தந்திரோபாயம், பெறுபேறு, வள ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு ஆகியன தொடர்பான விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு உருவாக்கப்படும். போதிய விவரமான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலானது பணிப்பாளர்களுக்கு பொருத்தமான காலப்பகுதியில் வழங்கப்படும். அனைத்து பணிப்பாளர்களும் அவர்களுடைய கடமைகள் பொறுப்புக்கள் மற்றும் உப குழுக்களின் கட்டமைப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தப்படுவர். பணிப்பாளர்கள் பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினை வழங்கவும் நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பான போதுமான தகவல்களை பெற்றுக்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டு முறைசார்ந்த தீர்மானத்தை அடையுமாறும் ஊக்குவிக்கப்படுவர். கருத்தில் எடுக்கப்படும் விடயங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட விபரங்கள் தொடர்பான பணிப்பாளர்களது கருத்துக்கள் கூட்ட அறிக்கைகளாக பதிவு செய்யப்படும்.

A.4 **நிதிசார் நிபுணத்துவம்**

பணிப்பாளர் சபையின் சில இயக்குனர்கள் நிதியியல், கணக்கீடு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் இயக்குனர் அங்கத்துவம் ஆகிய தொழில்சார் தகமைகளை கொண்டிருப்பதனால் பணிப்பாளர் சபை நிதி சார்ந்த விடயங்களில் போதுமான நிபுணத்துவம் மற்றும் அறிவினை கொண்டிருக்கின்றது.

A.5 **சபையின் சமத்துவம்**

பணிப்பாளர் சபையானது தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி அரச வங்கிகளுக்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏழு நிறைவேற்று அதிகாரம் இல்லாத இயக்குனர்களைக் கொண்டுள்ளது. இயக்குனர்கள் வருடாந்த அடிப்படையில் தமது சுயாதீனம் அல்லது சுயாதீனமின்மை தொடர்பான ஒப்பமிட்டு திகதியிடப்பட்ட பிரகடனத்தை சமர்ப்பிக்கிறார்கள்.

A.6 **தகவல் வழங்கல்**

முகாமைத்துவமானது பணிப்பாளர் சபைக்கு அவசியமான தகவல்களை உரிய காலத்தில், பொதுவாக பணிப்பாளர் சபை கூட்டம் அல்லது உப குழுக்களின் கூட்டத்திற்கு ஏழு நாட்கள் முன்பதாக அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளை உரிய வகையில் நிறைவேற்றும் வகையில் சமர்ப்பிக்கிறார்கள். பணிப்பாளர் சபையானது கலந்துரையாடப்படும் விடயம் தொடர்பாக அவசியமான அளவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதனையும் செய்யலாம் தலைவர் உறுதி செய்வதுடன் அவசியமான சூழ்நிலைகளில் கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு பிரதம முகாமைத்துவ நபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூட்டங்களில் பங்கு பெற்ற முடியாத இயக்குனர்கள் முறைசார்ந்த ரீதியாக ஆவணப்படுத்தப்பட்ட கூட்ட அறிக்கைகள் மூலம் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பாக அறிவிக்கப்படுவதுடன் அடுத்த கூட்டத்திற்கு முன்பதாக இந்த விடயம் கலந்துரையாடப்படும். கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் அவசியமான ஆவணங்கள் ஏழு நாட்கள் முன்னதாகவே அனுப்பி வைக்கப்படுவதுடன் முடிவடைந்த கூட்டத்தின் அறிக்கையானது குறைந்தபட்சம் கூட்டத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அனுப்பிவைக்கப்படும்.

A.7 **பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள்**

ஒரு அரசுடமை வங்கி என்னும் வகையில் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக அனைத்து பணிப்பாளர்களும் அரச வங்கிகளுக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரினால் நியமிக்கப்படுவர். மேலதிக விபரங்களுக்கு பக்கம் 198 இல் உள்ள கூட்டாண்மை ஆளுகை பகுதியை பார்வையிடவும்.

A.8 **மீள்-தேர்தல்**

தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக இயக்குனர் ஒருவர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படல் ஆகிய காரணங்களுக்காக பதவியிலிருந்து விலகி இருந்தால் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் ஒருவரது பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும். பணிப்பாளர்கள் நியமனம் மற்றும் மீள் நியமனத் தேர்தல்கள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 198 இல் உள்ள கூட்டாண்மை ஆளுகை பகுதியை பார்வையிடவும்.

## இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்

| விதிக் குறிப்புகள் | கோட்பாடுகள் |
|---|---|
| A.9 | **பணிப்பாளர் சபையின் பெறுபேற்று மதிப்பீடு**<br>பணிப்பாளர் சபை தமது பொறுப்புகளை திருப்திகரமான முறையில் நிறைவு செய்வதை உறுதி செய்வதற்காக வருடாந்த அடிப்படையில் ஒரு சுயமதிப்பீட்டை மேற்கொள்ளும். இந்த மதிப்பீட்டு செயன்முறையானது ஒவ்வொரு பணிப்பாளரும் பணிப்பாளர் சபை மற்றும் மதிப்பீட்டு படிவம் ஒன்றினை பூர்த்தி செய்வதாக அமையும்.<br>பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் சேகரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபை நியமனம் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நியமனக் குழுவின் மீளாய்வின் பின்னர் அது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.<br>ஆண்டறிக்கையின் பக்கம் 202 இலுள்ள பணிப்பாளர் சபை மற்றும் சபை உபகுழு பெறுபேற்று மதிப்பீடு இனைப் பார்வையிடவும். |
| A.10 | **பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் வெளிப்படுத்தல்**<br>கூட்டாண்மை விதியில் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் ஆண்டறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன:<br>பெயர், தகமை, நிபுணத்துவம், முக்கிய வணிக அக்கறைகள் மற்றும் அவர்களது சுருக்கமான சுயவிவரங்கள் ஆகியன பக்கம் 180 முதல் 183 வழங்கப்பட்டுள்ளன.<br>பணிப்பாளர்கள் நிறைவேற்று அதிகாரம் உள்ளவர்களா அல்லது நிறைவேற்று அதிகாரமற்றவர்களா மற்றும் சுயாதீனமான அல்லது சுவாதீனமற்றவர்கள் என்கின்ற விடயங்கள் பக்கம் 195 முதல் 196 வரை வழங்கப்பட்டுள்ளன.<br>உறவுமுறைத் தரப்பினரது ஊடுசெயல்கள் தொடர்பான விடயங்கள் பக்கம் 367 இல் தரப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் குறிப்பு இலக்கம் 49.5 இல் வழங்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் அங்கத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்கள் அது கூட்டத்துக்கான வருகை தொடர்பான விபரங்கள் பக்கம் 195 முதல் 196 வரைபடங்கள் உள்ளன. |
| A.11 | **பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பொது முகாமையாளரது மதிப்பீடு**<br>வருடத்தின் ஆரம்பத்தில் பொது முகாமையாளர்-பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் நிதி மற்றும் நிதியல்லா இலக்குகளின் படி அளவுகோள்களின் அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் செயற்திறனை பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்கின்றது. |
| B | **பணிப்பாளர்களின் சம்பளங்கள்** |
| B.1 | இயக்குனர்களுக்கான சம்பளமானது தொடர்புபட்ட அமைச்சரினால், தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு இணக்கமான வகையில் தீர்மானிக்கப்படும்.<br>எந்த ஒரு இயக்குனரும் தன்னுடைய சம்பளத்தை தீர்மானிப்பது தொடர்பான விடயங்களில் தொடர்புபடுவதில்லை.<br>பணிப்பாளர் சபையின் சம்பளம் மற்றும் சம்பள மட்டங்கள் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 202 மற்றும் BHRRC அறிக்கை பக்கம் 206 மற்றும் 207 இனைப் பார்வையிடுக. |
| B.2 | **சம்பளம் மட்டும் மற்றும் சம்பளத்தின் உள்ளடக்கங்கள்**<br>ஓர் அரசுடமை வங்கி என்ற வகையில் தேசிய சேமிப்பு வங்கியின் சட்டத்திற்கு அமைவாக சம்பளம் மட்டங்கள் மற்றும் சம்பளத்தில் உள்ளடக்கங்கள் ஆகியன தொடர்புபட்ட அமைச்சரினாலேயே தீர்மானிக்கப்படும்.<br>பணிப்பாளர் சபையின் சம்பளம் மற்றும் சம்பள மட்டங்கள் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 202 இனைப் பார்வையிடுக. |
| B.3 | **சம்பளங்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள்**<br>பணிப்பாளர் சபையின் சம்பளம் மற்றும் சம்பள மட்டங்கள் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 202 இனைப் பார்வையிடுக பணிப்பாளர்களுடைய மொத்த சம்பளங்கள் தொடர்பான விவரங்கள் பக்கம் 367 உள்ள நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 49.5 இல் காட்டப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் சம்பள குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது அறிக்கை - பக்கம் 206 முதல் 207 வரை பார்வையிடுக. |
| C | **பங்குதாரர்களுடனான உறவு முறை** |
| C.1 | **ஆண்டு பொதுக் கூட்டத்தின் முறைசார்ந்த பயன்படுத்தல் மற்றும் பொதுக் கூட்டங்களை நடாத்துதல்**<br>ஓர் அரசுடமை வங்கி என்ற வகையில் தேசிய சேமிப்பு வங்கியானது தொடர்புபட்ட அமைச்சுடன் கிராமமான கூட்டங்களை நடத்துகிறது. ஆரச பிரதிநிதி ஒருவர் (நிதி அமைச்சிலிருந்து ஒரு அதிகாரி) சபையில் பங்காளரினை பிரதிநிதித்துவப்படுத்துவார். ஆண்டறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதோடு கேள்விகளுக்கு இடமளிக்கப்படும். |
| C.2 | **பங்குதாரர்களுடனான தொடர்பாடல்**<br>இலங்கை அரசாங்கமே வங்கியினுடைய ஒரே ஒரு பங்குதாரர் ஆகும். ஆகவே இந்த ஆண்டறிக்கையானது இந்த வங்கியினை தனது நோக்கெல்லைக்குள் கொண்டிருக்கும் நிதி அமைச்சின் ஊடாக பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்படுகிறது. |
| C.3 | **பிரதான மற்றும் பொருண்மைத்தன்மை வாய்ந்த ஊடுசெயல்களின் வெளிப்படுத்தல்**<br>பின்வரும் பகுதிகளில் வெளிப்படுத்தப்பட்டவை தவிர வேறு எந்த வகையிலும் வங்கியின் நிகர சொத்துக்கள் மீது ஒரு பொருண்மையான தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கக்கூடிய பிரதான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது உறவுமுறை தரப்பினருடனான ஊடுசெயல்கள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை.<br>பக்கம் 243 முதல் 248 வரையான பகுதிகளில் உள்ள பணிப்பாளர் சபையின் ஆண்டு அறிக்கை மற்றும் பக்கம் 367 இல் உள்ள நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் இலக்கம் 49.5. |

| விதிக் குறிப்புகள் | கோட்பாடுகள் |
|---|---|
| D | **கணக்களிதகமை மற்றும் கணக்காய்வு** |
| D.1 | **நிதிசார் மற்றும் வணிக அறிக்கையிடல் (ஆண்டறிக்கை)**<br><br>நிதிக்கூற்றுக்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் கணக்காய்வு குழுவினால் பிரசுரிப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்யப்பட்ட இடைக்கால நிதிக்கூற்றுக்கள் ஆகியன உள்ளடங்கலான ஆண்டறிக்கையானது ஓர் உண்மையும் நியாயமுமான தன்மையினை வழங்குவதுடன் தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணக்கமான முறையில் தயாரிக்கப்பட்டு உள்ளது என்பதனை உறுதி செய்வதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் வங்கி மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டறிக்கையானது விதிகளினால் தேவைப்படும் வகையில் பின்வரும் வெளிப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது.<br>• முகாமைத்துவத்தின் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு - பக்கம் 95 முதல் 176இனைப் பார்வையிடுக.<br>• பணிப்பாளர் சபை ஆண்டு அறிக்கை - பக்கம் 243 முதல் 248 இனைப் பார்வையிடுக.<br>• நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்புக் கூற்று - பக்கம் 249 முதல் 250 இனைப் பார்வையிடுக.<br>• உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளர்களது பொறுப்புக் கூற்று - பக்கம் 251 முதல் 252 இனைப் பார்வையிடுக.<br>• பொதுமுகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்) ஆகியோரது பொறுப்பு தொடர்பான கூற்று - பக்கம் 254 முதல் 255 இனைப் பார்வையிடுக.<br>• உறவுமுறை தரப்பினருடனான ஊடுசெயல்கள் - குறிப்பு 49 பக்கம் 364 முதல் 370 இனைப் பார்வையிடுக.<br><br>வங்கியின் நிகர சொத்து மதிப்பு பக்கம் 371 நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 50 இல் வழங்கப்பட்டுள்ளது. |
| D.2 | **இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள்**<br><br>பணிப்பாளர் சபையானது தந்திரோபாய நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய இடரின் அளவினை தீர்மானித்தல், பொருத்தமான இடர் முகாமைத்துவ செயற்பாட்டினை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல் மற்றும் பங்குதாரர்களது முதலீடு மற்றும் வங்கியின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு அவசியமான பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்கான பொறுப்பினை கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு இடர் முகாமைத்துவம் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு உதவி வழங்குவதுடன் இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ள கட்டுப்பாட்டு செயன்முறைகளின் பயனுறுதித்தன்மை தொடர்பான பணிப்பாளர் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர் சபையின் கணக்காய்வு குழுவானது உதவி வழங்கும். இக்குழுக்கள் 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கூட்டாண்மை ஆளுகை, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள கூட்டாண்மை ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறை விதிகள் மற்றும் வங்கியின் கொள்கைகள் ஆகியவற்றுக்கு உட்பட்ட வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர்முகாமைத்துவ குழுவானது இடர்முகாமைத்துவ பிரிவினால் உதவி வழங்கப்படுவதுடன் வங்கியின் இடர் முகாமைத்துவம் செய்யப்படும் முறைமை தொடர்பான ஒரு முழுமையான அறிக்கை பக்கம் 212 முதல் 239 மற்றும் சபை ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக்குழு அறிக்கை பக்கம் 210 முதல் 211 வரை வழங்கப்பட்டுள்ளது. |
| D.3 | **கணக்காய்வு குழு**<br><br>பணிப்பாளர் சபையின் கணக்காய்வு குழுவானது 3 நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருக்கின்றது. வங்கியினுடைய சிரேஷ்ட இயக்குனர் பணிப்பாளர் சபை கணக்காய்வு குழுவின் உறுப்பினராக இருக்கின்றார். செயற்பாட்டுப் பரப்பெல்லைக்கு அமைவாக பணிப்பாளர் சபை கணக்காய்வு குழுவின் நோக்கெல்லையானது பணிப்பாளர் சபை கணக்காய்வு குழுவின் அறிக்கையில் வழங்கப்பட்டு இந்த ஆண்டு அறிக்கையின் பக்கம் 203 முதல் 205 வரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. வேலைப் பரப்பெல்லை இந்த விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான முழுமையான ஆய்வானது உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபையின் கணக்காய்வு குழுவிற்கு அறிக்கையிடப்படும். உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான வெளிவாரி உறுதிப்படுத்தலானது வங்கியின் கணக்காய்வாளராக இருக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் இருந்து பெறப்பட்டு, இந்த ஆண்டறிக்கையில் பக்கம் 253 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. |
| D.4 | **உறவுமுறை தரப்பினர் ஊடுசெயல்கள் மீளாய்வுக் குழு**<br><br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உறவுமுறைத் தரப்பினர், அவர்களது ஊடுசெயல்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் அக்கறை முரண்பாடுகளை நீக்கும் வகையில் மிகச் சாதகமான அணுகுமுறைகளை உறவுமுறைத் தரப்பினருக்கு வழங்குவதைத் தவிர்க்கும் வரையறைகள் ஆகியன உள்ளிட்ட உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் கொள்கையானது நடைமுறையில் உள்ளது. பிரதான முகாமைத்துவ நபர்களின் தொடர்புபட்ட நபர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல் பக்கம் 368 ஆண்டறிக்கை குறிப்பு 49.5 இல் வழங்கப்பட்டுள்ளது. |
| D.5 | **வணிக நடைமுறை மற்றும் நெறிமுறைசார் விதிகள்**<br><br>பிரதம முகாமைத்துவ நபர்கள் உள்ளடங்கலான அனைத்து ஊழியர்களுக்கும் பிரயோகிக்கத்தக்க, உள்ளார்ந்தமாக உருவாக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வணிக நடத்தை மற்றும் நெறிமுறைசார் விதியினை வங்கி உருவாக்கியுள்ளது. வங்கியின் அனைத்து அலுவலர்களும் வருடாந்த சொத்து மற்றும் பரிப்பு பிரகடனத்தை மனிதவள அபிவிருத்தி பிரிவுக:கு மேற்கொள்ளுதல் வேண்டும். அனைத்து பணிப்பாளர்களும் தமது சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான பிரகடனத்தினை தொடர்புபட்ட அமைச்சுக்கு வழங்குதல் வேண்டும்.<br><br>சாத்தியமான கொள்கை மீறல்களை அடையாளம் கண்டு அவற்றை கையாள்வதற்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வங்கி உருவாக்கியுள்ளது.<br><br>வெளிப்படைத் தன்மை வாய்ந்த கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதி செய்வதற்காக வங்கியானது கொள்வனவு வழிகாட்டல்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்றது. |

| விதிக் குறிப்புகள் | கோட்பாடுகள் |
|---|---|
| D.6 | **கூட்டாண்மை ஆளுகை வெளிப்படுத்தல்கள்**<br>வங்கியானது கூட்டாண்மை ஆளுகையினால் உருவாக்கப்பட்ட நடைமுறைகளை எவ்வளவு தூரம் இணங்கி செல்கின்றது என்பதனை வெளிப்படுத்துமாறு பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர். பின்வரும் அறிக்கைகள் கூட்டாண்மை ஆளுகைக் கோட்பாடு மற்றும் நடைமுறைகளுக்கான வங்கியின் இணக்கப்பாடு தொடர்பான விடயங்களை உள்ளடக்கும்.<br>பக்கம் 188 முதல் 202 வரையான கூட்டாண்மை ஆளுகை அறிக்கை<br>பக்கம் 317 முதல் 321 வரையான இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறைகள் விதிகள் மீதான இணக்கப்பாட்டு அறிக்கை. |
| E and F | **பங்குதாரர் மற்றும் ஏனைய முதலீட்டாளர்கள்**<br>வங்கியானது பாராளுமன்றச்சட்டம் மற்றும் தே.சே.வங்கிச் சட்டத்தினால் உருவாக்கப்பட்டதுடன் இலங்கை அரசாங்கமே தனியான பங்குதாரராகவும் விளங்குகின்றது. வங்கியானது ஒழுங்கான மற்றும் கட்டமைக்கப்பட்ட தொடர்பாடலை தேவைப்படும் போது தொடர்புடைய அமைச்சினூடாக இலக்குகளைப் பற்றிய பரஸ்பர புரிதலுடன் மேற்கொள்ளும். |
| G | **விடயங்களின் இணையம் மற்றும் இணையவழிப் பாதுகாப்பு**<br>வங்கியானது இரகசியத்தன்மை, நேர்மை மற்றும் தரவு அல்லது தகவல் கிடைப்பனவு தொடர்பில்,சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட PCI DSS இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட அடிப்படை பாதுகாப்பு நியமத்தின் படி வங்கியின் இணையவழி இடரிலிருந்து தகவல் முறைமையினை பாதுகாக்க வங்கியின் ISMS தகவல் பாதுகாப்பு தொடர்பில் கடுமையான முகாமைத்துவம், பௌதீக மற்றும் தொழில்நுட்ப கட்டுப்பாடுகளை நிறுவியுள்ளது<br>வங்கியானது சுயாதீனமான முறையில் இணையவழிப் பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை பணிப்பாளர் சபை இடர்முகாமைத்துவ குழுமத்தின் ஊடாக அறிவிக்கவும் நடைமுறைப்படுத்தவும் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதம தகவல் பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமித்திருக்கிறது. மேலும் பணிப்பாளர் சபையின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு குழுவானது பணிப்பாளர் சபை வங்கியில் பிரயோகிக்கப்படும் இணையவழி இடர்முகாமைத்துவ நடைமுறைகளுக்காக பரந்துபட்ட அளவில் மதிப்பாய்வு செய்யும். வங்கியானது ISMS முறைமைக்கு அமைவாக விரிவான சபை அங்கிகரித்த தகவல் பாதுகாப்பு கொள்ளையினை கொண்டுள்ளது இது தொழிலாளர், பங்காளர், மற்றும் ஏனைய வெளியக பங்காளர் நிறைவேற்ற வேண்டிய பாதுகாப்பு தேவைப்பாடுகளை விளக்குகிறது. ISP ஆனது பிரதானமாக ISO/IEC 27001:2013 நியமத்தின் படி நிறுவன தகவல் பாதுகாப்பு, பௌதீக மற்றும் தர்க்கரீதிய கட்டுப்பாடு, சொத்து முகாமைத்துவம் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பாடல் பாதுகாப்பு, மனிதவள பாதுகாப்பு, விநியோகத்தர் தொடர்பு, தகவல் பாதுகாப்பு விடய முகாமைத்துவம், வணிக தொடர்ச்சி முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கும். ISP ஆனது வங்கி வலையமைப்பு தகவல் செயன்முறையிற்கு உதவியளிக்கவும் மற்றும் நிறுவனத்தினால் பரிமாற்றப்படும் உள்வாரி மற்றும் வெளி தரப்பினருடனான தகவல்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், வலையமைப்பு பாதுகாப்பு முகாமைத்துவ கட்டுப்பாடு மற்றும் தகவல் பரிமாற்ற கொள்கை பற்றி விளக்கியுள்ளது.<br>வங்கியின் கொள்கை மற்றும் இணக்கப்பாட்டு தேவைப்பாடுகளுக்கு (PCI DSS, CBSL), ஏற்ப இணைய இடரினை குறைக்க அவ்வப்போது (மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்தம் அபாய மதிப்பீடு, ஊடுருவல் மதிப்பீடு, பாதுகாப்பு மதிப்பீடு, கட்டமைப்பு மதிப்பீடு போன்ற தொழில்நுட்ப பாதுகாப்பு மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. வங்கியானது சுயாதீனமான முறையில் இணையவழிப் பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை பணிப்பாளர் சபை இடர்முகாமைத்துவ குழுமத்தின் ஊடாக அறிவிக்கவும் நடைமுறைப்படுத்தவும் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் பணிப்பாளர் சபையின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு குழுவானது பணிப்பாளர் சபை வங்கியில் பிரயோகிக்கப்படும் இணையவழி இடர்முகாமைத்துவ நடைமுறைகளுக்காக பரந்துபட்ட அளவில் மதிப்பாய்வு செய்யும். |
| H | **சுற்றுச் சூழல் சமூகம் மற்றும் ஆளுகை (ESG)** |
| H.1 | **சுற்றுச் சூழல் சமூகம் மற்றும் ஆளுகை அறிக்கையிடல்**<br>நிலைத்து நிற்கக் கூடிய வணிக அணுகுமுறையானது வாய்ப்புகளை பயன்படுத்தி இடர்களை முகாமை செய்தல் பெறுமதியை உருவாக்குவதற்கான ஒரு பரிபூரண அணுகுமுறையாக காணப்படுகிறது. வணிகமானது தனது நிலைத்து நிற்கக் கூடிய வணிக அணுகுமுறையில் பொருளாதார சமூக மற்றும் சுற்றுச்சூழல் பெறுமதிகள் அதன் குறுங்கால இடைநிலை மற்றும் நீண்டகால தந்திரோபாயங்கள் ஊடாக உருவாக்கப்படுவதனை கருத்தில் கொள்கிறது. நிலைத்த தன்மை அறிக்கையிடலானது வங்கி உள்ளக மற்றும் வெளிவாரி அக்கறையுள்ள தரப்பினருக்கு பொறுப்புக்கூறலை ஏற்பிசைவு செய்தல் அளவிடுதல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை வேண்டி நிற்கின்றது. இந்த விதிமுறையால் தேவைப்படுத்தப்படும் தகவலானது ஆண்டு அறிக்கையின் பின்வரும் பகுதிகளில் வழங்கப்பட்டிருக்கின்றன:<br>• முகாமைத்துவத்தின் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு - பக்கம் 96 முதல் 176 வரை பார்வையிடுக<br>• கூட்டாண்மை ஆளுகை - பக்கம் 188 முதல் 202 வரை பார்வையிடுக<br>• அக்கறை உள்ள தரப்பினர் - பக்கம் 67 முதல் 75 வரை பார்வையிடுக<br>• பொருண்மைத் தன்மை - பக்கம் 36 முதல் 94 வரை பார்வையிடுக<br>இந்த ஆண்டறிக்கை ஆனது IIRC சட்டகம் மற்றும் GRI வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்கு இணக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளது |

# இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்பட்ட ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் வருடாந்த நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வடிவத்தின் கீழான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்

| | வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் | விபரம் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | **நிதியியல் நிலைமை மற்றும் செயலாற்றுகைக்கான நிதியியல் சாதனங்களின் முக்கியத்துவம் பற்றிய தகவல்** | | |
| 1.1 | **நிதியியல் நிலைமைக் கூற்று** | | |
| 1.1.1 | நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் வகைகள் பற்றிய வெளிப்படுத்தல் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 15 - அளவீட்டு அடிப்படை மூலம் நிதியியல் சாதனங்கள் பற்றிய பகுப்பாய்வு | 301 |
| 1.1.2 | **ஏனைய வெளிப்படுத்தல்கள்** | | |
| | (i) கடன் இடர்நேர்வு மற்றும் சந்தை இடர்நேர்வு, இவ்விடர்நேர்வு-களுக்கு சாட்டத்தக்க சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றங்கள் மற்றும் அளவீட்டு முறைகள் உள்ளடங்கலாக இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கு நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் பற்றிய விசேட வெளிப்படுத்தல்கள் | முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்:<br>குறிப்பு: 2.5.1.4.5 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள்<br>குறிப்பு: 2.5.1.5.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் நிதியியல் பொறுப்புகள் | 278<br>278 |
| | (ii) நிதியியல் சாதனங்களை ஒரு வகுப்பிலிருந்து மற்றொன்றுக்கு மீள் வகைப்படுத்தல். | முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்:<br>குறிப்பு: 2.5.1.7 நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மீள் வகைப்படுத்தல். | 280 |
| | (iii) பிணைய உறுதியாக வாக்குறுதியளிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் பற்றிய மற்றும் பிணைய உறுதிகளாக வைக்கப்பட்ட நிதியியல் அல்லது நிதியியல் அல்லாத சொத்துகள் பற்றிய தகவல் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 22 - பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் - படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் | 318 |
| | (iv) நிதியியல் சொத்துகளின் வகுப்பு வாரியான கடன் இழப்புகளுக்கான ஒதுக்கீட்டு கணக்கின் இணக்கம் | குறிப்பு 16 - காசும் காசுக்கு சமமானவையும்.<br>குறிப்பு 18 - வங்கிகளுடனான இருப்பு<br>குறிப்பு 21 (ஈ) ஆண்டின் போது சேதஇழப்பில் அசைவுகள் (கடன்களும் முற்பணங்களும்)<br>குறிப்பு 22 (ஆ) ஆண்டின் போது சேதஇழப்பில் அசைவுகள் (படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள்) | 304<br>305<br>312<br>320 |
| | (v) பல்கூட்டு உட்பொதிந்த பெறுதிகளுடன் கூடிய ஒன்று சேர்ந்த நிதியியல் சாதனங்கள் பற்றிய தகவல் | பல்கூட்டு உட்பொதிந்த பெறுதிகளுடன் கூடிய நிதியியல் சாதனங்களை வங்கி கொண்டிருக்கவில்லை | |
| | (vi) கடன் ஒப்பந்தங்களின் நியதிகளின் மீறுதல்கள் | எதுவும் இல்லை | |
| 1.2 | **அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று** | | |
| 1.2.1 | வருமானம், செலவு, இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வகைகளின் பற்றிய வெளிப்படுத்தல் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 3-13 நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு | 289-299 |
| 1.2.2 | **ஏனைய வெளிப்படுத்தல்கள்** | | |
| | (i) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத நிதியியல் சாதனங்களுக்கான மொத்த வட்டி வருமானம், மொத்த வட்டிச் செலவு | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு:<br>குறிப்பு 4 - தேறிய வட்டி வருமானம் | 289 |
| | (ii) கட்டண வருமானம் மற்றும் செலவு | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு:<br>குறிப்பு 5 - தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் | 292 |
| | (iii) நிதியியல் சொத்துகளின் வகுப்பு வாரியாக சேதஇழப்பு நட்டங்களின் தொகை | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு:<br>குறிப்பு 10 - சேதஇழப்பு விதிப்பனவுகள் | 295 |
| | (iv) சேதம்இழந்த நிதியியல் சொத்துகள் மீதான வட்டி வருமானம் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 4 (அ) - வட்டி வருமானம் | 290 |

| | வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் | விபரம் | பக்கம் |
|---|---|---|---|
| 1.3 | **ஏனைய வெளிப்படுத்தல்கள்** | | |
| 1.3.1 | நிதியியல் சாதனங்களுக்கான கணக்கீட்டு கொள்கைகள் | குறிப்பு 2.5.1 - நிதியியல் சாதனங்கள்- சொத்துகளையும் பொறுப்புகளையும் இனங்காணுதல் | 276 |
| 1.3.2 | இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் பற்றிய தகவல்கள் | வங்கி/தொகுதி இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நிதியியல் பொறுப்புகளை நியமித்திருக்கவில்லை:<br>நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு: 2.5.1.5.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | 278 |
| 1.3.3 | **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குமூலதனச் சாதனங்களில் முதலீடு** | | |
| | i. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குமூலதனச் சாதனங்களில் முதலீடு பற்றிய தகவல்களும் நியமித்தலுக்கான காரணமும் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு: 23 - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குமூலதனச் சாதனங்கள் | 320 |
| | ii. அறிக்கையிடும் திகதியியல் ஒவ்வொரு முதலீட்டினதும் சீர்மதிப்புப் பெறுமதி | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு:23- (உ)- விலை கோரப்பட்ட முதலீடுகள்- பங்குமூலதன பிணையங்கள்.<br>குறிப்பு:23- (ஊ)- விலை கோரப்படாத முதலீடுகள்- பங்குமூலதன பிணையங்கள | 323<br>323 |
| | iii. காலப்பகுதியின் போது இனங்காணப்பட்ட, அறிக்கையிடும் காலப்பகுதியின் போது இனங்காணப்படாத முதலீடுகளுக்கு வேறாக, அறிக்கையிடும் திகதியில் வைக்கப்பட்டவைக்கான பங்கிலாபம். | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 9: தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 294 |
| | iv. காலப்பகுதியின் போது பங்குமூலதனத்தினுள் திரண்ட இலாபம் அல்லது நட்டம் மாற்றல் மற்றும் அம் மாற்றல்களுக்கான காரணங்கள் | வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று மற்றும் பங்குமூலதனக் கூற்று | 260-261<br>264-267 |
| | v. அறிக்கையிடும் காலப்பகுதியின் போது அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட பங்குமூலதனச் சாதனங்கள் முதலீடுகள் இனங்காணப்படவில்லையாயின்:<br>– முதலீடுகளின் கையுதிர்ப்பிற்கான காரணம்<br>– இனங்காணாத திகதியன்று முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி<br>– கையுதிர்த்தலின் மீதான திரண்ட இலாபம் அல்லது நட்டம். | வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று மற்றும் பங்குமூலதனக் கூற்று | 260-261<br>264-267 |
| 1.3.4 | **நிதியியல் சொத்துகளின் மீள்வகைப்படுத்தல்** | | |
| | i. நடப்பு அல்லது முந்திய அறிக்கையிடும் காலப்பகுதியில் நிதியியல் சொத்துகளின் அனைத்து மீள்வகைப்படுத்தலுக்கும்:<br>– மீள்வகைப்படுத்தல் திகதி<br>– தொழில் மாதிரியில் மாற்றம் பற்றிய விரிவான விளக்கம் மற்றும் நிதியியல் கூற்றுகள் மீது அதன் தாக்கம் பற்றிய பண்புசார் விவரணம்<br>– ஒவ்வொரு வகையினுள்ளும் வெளியிலும் மீளவகைப்படுத்தப்பட்ட தொகை | குறிப்பு: 2.5.1.7 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீள்வகைப்படுத்தல்<br>காலப்பகுதியின் போது வங்கி நிதியியல் சொத்துக்களை மீள் வகைப்படுத்தவில்லை | 280 |
| | ii. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் இருந்து ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கான மீள்வகைப்படுத்தல்களுக்காக:<br>– மீள்வகைப்படதலின் திகதியன்று நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதம்.<br>– இனங்காணப்பட்ட வட்டி வருமானம் | காலப்பகுதியின் போது, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் இருந்து மதிப்புக் குறைக்கப்பட்ட செலவிற்கு நிதியியல் சாதனங்களை வங்கி வகைப்படுத்தியிருக்கவில்லை. | |

| | வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் | விபரம் | பக்கம் |
|---|---|---|---|
| | iii. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து மதிப்பு குறைக்கப்பட்ட செலவிற்கு, அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் இருந்து மதிப்பு குறைக்கப்பட்ட செலவிற்கு, அல்லது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு மீள்வகைப்படுத்தல்-களுக்காக:<br>– அறிக்கையிடும் திகதியில் நிதியியல் சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதி<br>– நிதியியல் சொத்துகள் மீள்வகைப்படுத்தப்பட்டிருக்காவிடின், அறிக்கையிடும் காலப்பகுதியின் போது இலாபம் அல்லது நட்டத்தில் அல்லது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டிருக்கக்கூடிய சீர்திப்புப் பெறுமதி இலாபம் அல்லது நட்டம் | குறிப்பு: 2.5.1.7 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீள்வகைப்படுத்தல்<br>காலப்பகுதியின் போது, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் இருந்து மதிப்புக் குறைக்கப்பட்ட செலவிற்கு அல்லது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு வங்கி நிதியியல் சாதனங்களை வகைப்படுத்தியிருக்க வில்லை. | 280 |
| 1.3.5 | காப்பு கணக்கீடு பற்றிய தகவல் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 2.5.1.6.2 - இடர் முகாமைத்துவ நோக்கம் மற்றும் காப்பு கணக்கீட்டிற்காக பெறுதிகள் வைத்துக்கொள்ளப்பட்டன.<br>குறிப்பு 19 - பெறுதி நிதியியல் சாதனங்கள் | 279<br>305 |
| 1.3.6 | பின்வருவனவுடன் சேர்த்து நிதியியல் சொத்து மற்றும் பொறுப்பின் ஒவ்வொரு வகுப்பினதும் சீர்மதிப்புப் பெறுமதி பற்றிய தகவல்:<br>i. ஒப்பிடத்தக்க கொண்டுள்ள தொகைகள் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 56.5 - நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி | 415 |
| | ii. சீர்மதிப்புப் பெறுமதி எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்பது பற்றிய விவரணம் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 2.1.12.2 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி<br>குறிப்பு 2.3 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு<br>குறிப்பு 56.2 - சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை நிர்ணயித்தல் | 272<br>275<br>410 |
| | iii. சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிப்பத்தில் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளின் மட்டம் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 56.2 - சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை நிர்ணயித்தல் | 410 |
| | iv. அ. சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் அளவீட்டு படிநிலை மட்டங்களுக்கு இடையிலான அசைவுகளின் இணக்கங்கள்.<br>ஆ. மட்டம் 3 உள்ளீடுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட நிதியியல் சாதனங்களுக்கான மேலதிக வெளிப்படுத்தல்கள் | இவ்வாண்டின் போது சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை மட்டங்களுக்கிடையில் அசைவுகள் எதுவும் காணப்படவில்லை.<br>குறிப்பு 56.3 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டு படிநிலை அளவீட்டு மட்டங்களுக்கிடையிலான அசைவுகளின் இணக்கம் | 414 |
| | எ. சீர்மதிப்புப் பெறுமதி நம்பத் தகுந்தவாறு அளவிடப்பட முடியாமலிருப்பின், தகவல்கள் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 23 (உ) - விலை கோரப்படாத முதலீடுகள் - பங்கு மூலதன பிணையங்கள்<br>குறிப்பு 56.2 சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை நிர்ணயித்தல் | 323<br>410 |
| 2 | **நிதியியல் சாதனங்களிலிருந்து தோன்றுகின்ற இடர்களின் தன்மைகள் மற்றும் பரப்பு பற்றிய தகவல்கள்** | | |
| 2.1 | **பண்புசார் வெளிப்படுத்தல்கள்** | | |
| 2.1.1 | நிதியியல் சாதனத்தின் ஒவ்வொரு வகைக்குமான இடருக்குள்ளாகும் தன்மை | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 54 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம்.<br>இடர்நேர்வு மீளாய்வு அறிக்கை | 374<br>212-239 |

| | வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் | விபரம் | பக்கம் |
|---|---|---|---|
| 2.1.2 | அவ் இடர்களை முகாமை செய்வதற்கான முகாமைத்துவக் குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 54 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம்<br>இடர்நேர்வு மீளாய்வு அறிக்கை | <br>374<br>212-239 |
| 2.1.3 | முந்திய காலப்பகுதியிலிருந்து மாற்றங்கள் | மீளாய்வுக்குட்பட்ட காலத்தின் போது முக்கிய கொள்கை மாற்றம் எதுவும் இல்லை | |
| 2.2 | **அளவுசார் வெளிப்படுத்தல்கள்** | | |
| 2.2.1 | அறிக்கையிடும் திகதியில் ஒவ்வொரு இடருக்குமான இடருக்குள்ளாகும் தன்மை பற்றி அளவுசார் தரவுகள் பற்றிய தொகுப்பு | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்:<br>குறிப்பு 54 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம்<br>இடர்நேர்வு மீளாய்வு அறிக்கை | <br>374<br>212-239 |
